# குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை

## தொகுதி - 6

## இலக்கியம்

SRI SAI ADS

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை

15 தொகுதிகள்
6000 பக்கங்கள்

தொகுதி - 6

## இலக்கியம்

முதன்மைப் பதிப்பாசிரியர்
தவத்திரு பொன்னம்பல அடிகளார்

விற்பனை உரிமை :

மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

முதல் பதிப்பு : டிசம்பர், 2001
திருவள்ளுவர் ஆண்டு : 2032
உரிமை : திருவண்ணாமலை ஆதீனம்
மணிவாசகர் வெளியீட்டு எண் : 867

**விலை : ரூ. 100-00**

பதிப்பாசிரியர் குழு :

தமிழாகரர் தெ. முருகசாமி
நா. சுப்பிரமணியம்
குன்றக்குடி பெரியபெருமாள்
க. கதிரேசன்
மரு. பரமகுரு

செயலர் :

பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பன்

கிடைக்குமிடம் :
**மணிவாசகர் நூலகம்**
12-B, மேல சன்னதி, சிதம்பரம் - 608 001.
31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108.
9, சிவப்பிரகாசம் தெரு, தி.நகர், சென்னை - 600 017.
110, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625 001.
15, ராஜ வீதி, கோயமுத்தூர் - 641 001.
28, நந்தி கோயில் தெரு, திருச்சி - 620 002.

தொலைபேசி :

| | |
|---|---|
| சிதம்பரம் | : 30069 |
| சென்னை | : 5361039 |
| தி. நகர் | : 4357832 |
| மதுரை | : 622853 |
| கோயமுத்தூர் | : 397155 |
| திருச்சி | : 706450 |

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை - 600 021,
தொலைபேசி : 5954528



தமிழ் மாமுனிவர்
தவத்திரு குன்றக்குடி அடிகளார்
1925 - 1995

தமிழ்மாமுனிவர் அருள்நெறித் தந்தை

# தவத்திரு குன்றக்குடி அடிகளார்

## வாழ்க்கைக் குறிப்புகள்

| ஆண்டு | நிகழ்வுகள் |
|---|---|
| 1925 | • தோற்றம் |
| | • பூர்வாசிரமம் : தந்தையார் : திரு. சீனிவாசம் பிள்ளை<br>தாயார் : திருமதி. சொர்ணத்தாச்சி |
| | • பிள்ளைத் திருநாமம் : அரங்கநாதன் |
| | • தோற்றம் பெற்ற ஊர் : தஞ்சை மாவட்டம் திருவாளப்புத்தூர் அருகேயுள்ள நடுத்திட்டுக் கிராமம். |
| 1931 - 1936 | • சிதம்பரம் அண்ணாமலை நகரில் வாசம்.<br>• 'சொல்லின் செல்வர்' ரா.பி. சேதுப்பிள்ளை, நாவலர் நாட்டார், சுவாமி விபுலானந்தர் ஆகியோர் தொடர்பு. |
| 1937- 1942 | • தமையனார் திரு. கோபாலகிருஷ்ண பிள்ளை வீட்டில் கடியாபட்டியில் வாழ்தல். |
| | • பள்ளியிறுதித் தேர்வு எழுதுதல். |
| | • 1942 விடுதலைப் போராட்டத்தில் ஈடுபாடு. |
| | • 'வினோபா பாவே படிப்பகம்' தொடங்கி நடத்துதல். |
| 1945 | • தருமபுரம் ஆதீனம் 25ஆவது குருமகாசந்நிதானம் கயிலைக் குருமணி அவர்களிடம் கந்தசாமித் தம்பிரான் என தீட்சாநாமத்துடன் தம்பிரானாதல். |
| | • தருமபுரம் தமிழ்க் கல்லூரியில் பயிலுதல். |
| 1947 - 1948 | • சீர்காழிக் கட்டளைத் தம்பிரான் - திருஞான சம்பந்தர் திருமடம் தூய்மைப் பணி; திருமுறை வகுப்பு, விழா நடத்துதல். |
| 1949 | • குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தின் இளவரசு பட்டம் ஏற்பு. திருநாமம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள். |
| 1951 | • காரைக்குடிக் கம்பன் விழாவில் 'புதரிடைமலர்' என்ற தலைப்பில், அறிஞர்களின் நெஞ்சம் கவர்ந்த சொற்பொழிவு. |
| 1952 | • குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தின் 45ஆவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளல். |
| | • அருள்நெறித் திருக்கூட்டம் தோற்றம். |

- 'மணிமொழி' என்னும் பெயரில் இயக்கப் பத்திரிகை வெளியிடல்.

1953
- ஆதீனத்தின் அருளாட்சியிலுள்ள பிரான்மலைத் திருக்கோயில் சித்திரைத் திருவிழாவின்போது (சங்க கால வள்ளல் பாரி வாழ்ந்திருந்த மலையில்) வள்ளல் பாரி விழாத் தொடங்குதல்.
- பல்லக்கில் பட்டணப் பிரவேசம் வருதலைத் தவிர்த்தல்.
- இலங்கைப் பயணம் - இரண்டு வாரம் சுற்றுப் பயணம்.

1954
- இராசாசி தலைமையில் தேவகோட்டையில் அருள்நெறித் திருக்கூட்ட மாநாடு.
- திராவிடர் கழகத் தலைவர் பெரியார் சந்திப்பு.
- தாய்லாந்து, இந்தோசீனா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் (3 திங்கள்)

1955
- அருள்நெறித் திருப்பணி மன்றம் தொடங்குதல்.
- 'தமிழ்நாடு' நாளிதழ் தவத்திரு குன்றக்குடி அடிகளார் என்ற பெயரை அறிமுகப்படுத்துதல்.

1956
- அறிஞர் அண்ணா குன்றக்குடி திருமடத்திற்கு வருகை.
- ஆச்சார்ய வினோபா பாவே திருமடத்திற்கு வருகை.

1958
- குன்றக்குடியில் உயர்நிலைப்பள்ளி தொடங்குதல்.

1959
- ஆ. தெக்கூரில் பள்ளிச் சீரமைப்பு மாநாடு நடத்துதல்; பாரதப் பிரதமர் நேரு மாநாட்டிற்கு வருகை.

1960
- மத்திய அரசு சேமநலக் குழு உறுப்பினராதல்.

1962
- சீனப்போரின்போது தங்க உருத்திராட்ச மாலையைத் திருவொற்றியூர்க் கூட்டத்தில் ஏலம் விட்டு ரூ. 4000 தருதல்.
- மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயிலில் திருமுறைத் தமிழ் அருச்சனை தொடங்குதல்.

1965
- இந்தி எதிர்ப்புப் போராட்டம்; அரசு வழக்கு தொடர்தல்.

1966
- தமிழ்நாடு தெய்வீகப் பேரவைத் தோற்றம்.

1967
- திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம் தோற்றம்.
- திருக்கோயில் கருவறைக்குள் சீலமுடைய அனைவரும் சாதி வேறுபாடின்றி திருமுறை நெறிப்படி - போதொடு நீர் சுமந்தேத்தி வழிபாடு செய்வதெனத் திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம் தீர்மானம் நிறைவேற்றுதல்.

1968
- இரண்டாம் உலகத் தமிழ்மாநாடு - 'திருக்குறள் உரைக்கோவை' நிகழ்ச்சி தொடக்கவுரை நிகழ்த்தல் - திருக்குறள் இந்திய நாட்டின் தேசிய நூலாக வேண்டுமென்று இம்மாநாட்டில் வலியுறுத்தல்.

- இலங்கைப் பயணம். இரண்டு வாரங்கள், இலங்கை யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் திருக்கோயில் நுழைவுக்காக உண்ணா நோன்பிருத்தல்.
- கீழவெண்மணித் தீவைப்பு நடந்த இடத்தைப் பார்வையிட்டுப் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறுதல்; புத்தாடை வழங்குதல்.

1969
- பாபநாசம் பொதிகையடி திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி ஏற்பு;
- கலைஞர் மு. கருணாநிதி பாரி விழாவிற்கு வருகை
- கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் விருப்பத்தின் வழி தமிழ்நாடு சட்டமன்ற மேலவை பொறுப்பேற்றல்
- தமிழ்நாடு தெய்விகப் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெறல்.

1970
- சட்டமன்ற மேலவையில் இந்து அறநிலையத் திருத்த மசோதா - சாதி வேறுபாடின்றி அனைவரையும் அர்ச்சகராக நியமனம் செய்தல் பற்றிப் பேசுதல்.

1971
- தமிழ்நாடு சமாதானக் குழுத் தலைவராதல்.
- சோவியத் பயணம்; 22 நாள் சுற்றுப் பயணம்.

1972
- பாபநாசம் பொதிகையடி திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி, திருவள்ளுவர் கலைக் கல்லூரியாக உருவாதல்.
- சென்னை, மயிலாப்பூர் திருவள்ளுவர் திருக்கோயில் திருப்பணிக்குழுத் தலைவராக நியமனம்; வள்ளுவர் கோட்டம் திருப்பணித் தலைவராக நியமனம்.
- குன்றக்குடித் தருமைக் கயிலைக் குருமணி உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய இடத்தில் கட்டடம் கட்டித் திறத்தல்.

1973
- திருக்குறள் பேரவைத் தோற்றம்.
- திருச்சியில் தமிழ்நாடு தெய்விகப் பேரவை இரண்டாவது மாநில மாநாடு நடத்துதல்.
- "கோயிலைத் தழுவிய குடிகளும் குடிகளைத் தழுவிய கோயிலும்" என்ற முழக்கம் நாட்டளவில் வைக்கப்பெற்றது.
- குன்றக்குடி கிராமத்தைத் தன்னிறைவுக் கிராமமாக ஆக்கும் திட்டம் உருவானது.

1975
- நாகர்கோவிலில் தமிழ்நாடு தெய்விகப் பேரவை மூன்றாவது மாநில மாநாடு நடைபெறல்.
- சென்னைப் பல்கலைக் கழகத்தில் சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவு.

- மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஏ.பி.சி. வீரபாகு சைவசித்தாந்த அறக்கட்டளைச் சொற்பொழிவு.
- அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சொர்ணம்மாள் அறக்கட்டளைச் சொற்பொழிவு.
- இராமநாதபுரம் இனக் கலவரம் - அமைதிப்பணி.

1982
- குமரி மாவட்டம் மண்டைக்காடு கலவரம் - அமைதிப் பணியாற்றல்.
- மண்டைக்காடு அமைதிப்பணி பற்றிச் சட்ட மன்றத்தில் முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். பாராட்டுதல்.
- திருவருட்பேரவை தொடங்குதல்.
- மலேசியா, கொரியா, ஹாங்காங், ஜப்பான், செஞ்சீனா முதலிய நாடுகளில் சுற்றுப்பயணம்.
- புளியங்குடி இனக்கலவரம் - அமைதிப்பணி.

1984
- பாரதத் தலைமை அமைச்சர் திருமதி. இந்திராகாந்தி அவர்கள் குன்றக்குடிக் கிராமத் திட்டக்குழுவின் பணிகளைப் பாராட்டல்.

1985
- நடுவணரசு திட்ட ஆணைக்குழுப் பிரதிநிதிகள் குன்றக்குடி வருகை; கிராம வளர்ச்சிப் பணிகளைப் பார்வையிட்டுப் பாராட்டுதல்.
- பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் வளர்ச்சிப் பணிக்குத் திட்டக்குழு அமைத்தல்.
- மணிவிழா


1986
- தமிழ்நாடு அரசின் முதல் திருவள்ளுவர் விருது பெறுதல்
- இந்திய அரசு திட்டக்குழு குன்றக்குடித் திட்டப்பணியைப் பாராட்டி "Kundrakudi Pattern" என்று அறிவித்தது.

1989
- இவர் எழுதிய ‘ஆலயங்கள் சமுதாய மையங்கள்’ என்னும் நூல் தமிழ்நாடு அரசின் முதற்பரிசு பெற்றது.
- அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் (D.Litt) பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

1991
- இந்திய அரசின் அறிவியல் செய்தி பரப்பும் தேசியக்குழு, தேசிய விருது வழங்கிச் சிறப்பித்தது.
- இலண்டன், அமெரிக்கா சுற்றுப்பயணம்.
- அரபு நாடுகள் பயணம்.

1993
- மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ‘தமிழ்ப் பேரவைச் செம்மல்’ விருது வழங்கிச் சிறப்பித்தது.

1995
- இறைநிலை யடைதல்.



# அடிகளாரின் இலக்கியப் பணிகள்

பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பன்
நிறுவனர் : மெய்யப்பன் தமிழாய்வகம்

தமிழ்மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழ்கூறு நல்லுலகில் சமய மறுமலர்ச்சிக்கு வழிகண்டவர். அடிகளார் பூர்வாசிரமத்தில் செட்டிநாட்டில் எங்கள் ஊராகிய இராமச்சந்திரபுரத்தில் உயர்நிலைக் கல்வி பயின்றார்கள். எங்கள் தந்தையார் குங்கிலியம் பழ. சண்முகனார் அவர்களும், அடிகளாரின் அண்ணன் அவர்களும் விநோபா பாவே வாசகசாலையைத் தொடங்கினர். அடிநாள் தொட்டு அடிகளாரை நான் நன்கறிவேன். அடிகளார் திருவண்ணாமலை ஆதீனத்தில் பொறுப்பேற்ற பின்னர் சிறந்த சொற்பொழிவாளராக விளங்கினார்கள். முதன்முதலில் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் அடிகளார் அவர்களும் நாங்கள் நடத்திய தமிழர் திருநாள் திருக்குறள் விழாவில் ஒரே மேடையில் பேசினர். அப்பொழுது ஆத்திகமும் நாத்திகமும் ஒரே மேடையில்

சந்திக்கின்றன என்ற செய்தியை வியப்புடன் நாளிதழ்கள் வெளியிட்டன.

50, 60களில் அடிகளார் தமிழ்மேடைக்குத் தம் பேச்சால் புதிய வலிமை சேர்த்தார்கள். தமிழகம் முழுவதும் அடிக்கடி பயணம் செய்யும் நான் அடிகளாரின் நூற்றுக்கு மேற்பட்ட பொழிவுகளைச் செவிமடுக்கும் நல்வாய்ப்பைப் பெற்றேன். அடிகளார் நூல் பலவற்றைப் படிக்கும் பேறும் பெற்றேன். அப்பொழுதெல்லாம் அடிகளார் சிந்தனைகள் அனைத்தையும் ஒருசேரத் தொகுத்துப் பார்க்க வேண்டும் என்ற வேணவா என்னுள்ளத்தில் முகிழ்த்தது. அது இன்று கைகூடுகிறது.

தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழ்நாடு செய்த தவப்பயனால் 1925இல் தோன்றி 70 ஆண்டு காலம் தமிழகத்திற்குப் பல்வேறு பணிகள் வாயிலாகக் கடமை ஆற்றிய நாட்டுத் துறவியாவார்.

தவத்திரு அடிகளாரைப் புரட்சித்துறவி என்றும், மிகச் சிறந்த சொற்பொழிவாளர் என்றும் நாடு கருதும்.

அடிகளார் எழுத்துக்கள் அனைத்தையும் நூல்வரிசையாகத் தொகுக்கும் போது ஒவ்வொரு தொகுதியிலும் 400 பக்கங்களுக்குக் குறையாமல் 15 தொகுதிகளாக மொத்தம் சற்றொப்ப 6000 பக்கங்கள் அளவில் விரிந்தன. தம் 50 ஆண்டுப் பொது வாழ்வில் அடிகளார் எழுதிய 60 நூல்களையும் பதிப்பாசிரியர் குழு 5 தலைப்புக்களில் வகைப்படுத்தியது. நூற்றொகுதி அனைத்தையும் ஒருசேர வைத்து நோக்கும்போது அடிகளார் மிகச் சிறந்த நூலாசிரியராகச் சிறப்பதை நாம் உணர்கிறோம்.

1999 டிசம்பர் திங்களில் முதல் தொகுதி முகிழ்த்தது. 2001 நவம்பரில் தொகுதிகளின் அச்சுப் பணி முடிந்தது. திருக்குறள்

பற்றி மட்டும் அடிகளார் கட்டுரைகள் 4 தொகுதிளாகச் சற்றொப்ப 1600 பக்க அளவில் விரிந்துள்ளது.

தருமபுரம் ஆதீனம், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க அடிகள் ஆகியோர் அளித்துள்ள அணிந்துரைகளில் அடிகளாரின் இறையுணர்வையும், பக்திவழி நாட்டுக்கு ஆற்றிய பங்களிப்பையும், சைவத்திற்கும், தமிழுக்கும் அடிகள் ஆற்றிய அளவிடற்கரிய பணிகளையும் போற்றியுள்ளனர்.

தமிழ்நாட்டின் மிகச் சிறந்த திறனாய்வாளர்களான சிலம்பொலி செல்லப்பர், வா.செ. குழந்தைசாமி, தமிழண்ணல், வை. இரத்தினசபாபதி, ஔவை நடராஜன், சிற்பி பாலசுப்பிரமணியன், ச.வே. சுப்பிரமணியன், கு. சுந்தரமூர்த்தி முதலியோர் அடிகளார் நூல்வரிசையை ஆராய்ந்து, தேர்ந்து, தெளிந்து அடிகளாரின் சிந்தனை வளத்தையும், சமூக உணர்வினையும், பல்துறை அறிவினையும், மனித நேயத்தையும், தமிழாற்றலையும், அழுத்தமாக எடுத்துக் கூறும் பெற்றியினையும் தங்கள் அணிந்துரைகளில் சான்றுகளுடன் விளக்கி உள்ளனர்.

பொதுவாக 15 தொகுதிகளிலும் அடிகளாரின் ஆளுமை வெளிப்பட்டாலும், மூல இழையாகச் செல்வது தமிழ்ச் சமூகத்திற்குரிய விழுமங்கள், உன்னதங்கள், உயர்வுகள், சிறப்புக்களே. பழந்தமிழ் இலக்கியமாகிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகையில் தொடங்கி பாரதி பாடல்வரை தமிழரின் தனி அடையாளங்களின் வேர்களை அவை இனங்காட்டுவன. அயல் வழக்கினைத் தமிழ் வழக்கு வென்ற திறத்தினை அடிகளார் அழுத்தம் திருத்தமாக ஆவணமாக்கி விடுவார்.

சமயக் கட்டுரைகள் பொதிந்துள்ள இத்தொகுதிகள் வாழ்முதலாகிய இறைவனைப் பற்றிய அடிகளாரின் சிந்தனைப் பதிவுகளைக் கொண்டது. இந்தப்புலம் அடிகளாரின் ஆன்மா விரும்பும் விருப்பமான நிலம். அவர்கள் நாளும் பயணம்

செய்யும் ஞானபூமி. ஆதலால் சமயம்பற்றி அடிகள் கொண்ட அனைத்துக் கருத்துக்களின் கருவூலமாக இத்தொகுதிகள் திகழ்கின்றன. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல, கோயிலைத் தழுவிய குடிகளும், குடிகளைத் தழுவிய கோயிலும் என்னும் கொள்கை உருவாக்கம் அடிகளாரின் தனிக்கொடை.

தமிழ் இலக்கியம் சமயம் சார்ந்த இலக்கியம், சமணமும் தமிழும், பௌத்தமும் தமிழும் எனப் பகுத்தாலும் இலக்கிய நிலப்பரப்பில், பங்களிப்பில் சைவமும் தமிழும்தான் தனிச்சிறப்பு பெறுகிறது.

அடிகளார் சிவநெறியினைச் சிரத்திலும் சிந்தையிலும் வைத்துப் போற்றிக் கூறிய, எழுதிய கருத்துக்கள் சைவ சமயத்திற்குப் புத்துணர்வையும், புத்தொளியையும் நல்குவன. புரட்சித் துறவியாகிய அடிகளாரின் புதிய பார்வை திருமுறைகளை மறுமைக்கு மட்டுமின்றி இம்மைக்கும் வழிகாட்டும் என நிறுவுவன. மனிதனை மேம்படுத்தும் எண்ணங்களை, சீரிய செவ்வறங்களைக் கூறுவன திருமுறைகள்.

அடிகளார் அப்பரடிகளிடம் கொண்ட அன்பு அளவிடற்கரியது. நாவுக்கரசர் காட்டிய நல்லறங்களை நாளும் சொல்லி மகிழ்பவர். எட்டாந் திருமுறை ஆகிய திருவாசகத்தை எண்ணி எண்ணி எப்போதும் இறும்பூது எய்துபவர். சேக்கிழார் இயற்றிய 12ஆம் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணத்தை நிகழ்கால சமூக வாழ்க்கையோடு இயைத்துக்காட்டி, சைவ சமயம் என்பது தமிழர் வாழ்க்கை நெறி என்பதை ஒல்லும் வகையெலாம் உணர்த்தியவர்.

கோயிற் பண்பாடு என்னும் கோட்பாட்டை விளக்குவதில் அடிகளார் முதல் வரிசையர், சைவ சமய, தோத்திர, சாத்திர சரித்திரக் கருத்துக்களில் ஆழங்கால் பட்டவர். பரந்துபட்ட

தமிழ்நூற் பயிற்சியும் வாழ்வியல் அனுபவங்களும் இத்தொகுதிகளில் ஒளி வீசுகின்றன.

இறைவன், பிறவித்துன்பம், வினைக் கொள்கை, ஊழ் உண்மை, ஓதி உணர்தல், புலனடக்கம், மெய்ப்பொருளை உணர்தல், விண்ணும் மண்ணும், வீட்டுலகம் முதலியன பற்றி அடிகளார் கூறிச் செல்லும் கருத்துக்கள் ஆழ்ந்த சிந்தனைகளின் வெளிப்பாடு.

அடிகளார் தெளிவுற அறிந்திடுதல், தெளிவுற மொழிந்திடுதல் என்ற இரு நிலையிலும் சிறப்பாக விளங்கியவர் என்பதனை இத்தொகுதிகள் பறைசாற்றுகின்றன. இலக்கியக் கட்டுரைகளாயினும் சரி, சமயக் கட்டுரைகளாயினும் சரி அடிகள் மனித குல மேம்பாடு ஒன்றிற்கே உயர்வளிப்பவர் என்பது விளங்கும்.

இந்நூல் வரிசையால் அடிகளாரிடம் தமிழ் முனிவர் திரு.வி.க.வின் சமுதாயப் பார்வையும், சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்களின் சமுதாய அரசியற் பார்வையும் இலங்கியதை அறியலாம். தமிழ் தேசியம் வேர்கொள்ள அடிகளார் ஆற்றிய பணி தமிழர் வரலாற்றில் பதிவு செய்யப் பெற்று விட்டது.

அருள் நெறித் திருக்கூட்டம், தெய்வீகப் பேரவை, திருக்குறட் பேரவை, திருவருட் பேரவை முதலிய அமைப்புக்களைத் தோற்றுவித்து, தமிழ் இனம், நாடு முன்னேறப் பல்லாற்றானும் பணிசெய்தவர்.

உலகின் பெரும் பகுதியைப் பலமுறை வலம் வந்தவராதலால் இவர் தம் எழுத்தும் பேச்சும் சமூக உணர்வுடன் சிறந்து விளங்கின. பயணத்திற்குப் பயணம் இவரது அனுபவ அறிவு செழுமை பெற்றதை இந்நூல்வரிசை பரிணாம முறைப்படி உணர்த்துகிறது. சமுதாய உய்வுக்கு அடிகள் உரைத்த பொன்மொழிகளின் படிமுறை வளர்ச்சியை; வாழ்வியல் அறங்கள்

பற்றிய அடிகளாரின் நோக்கும் போக்கும் மாற்றம் பெற்ற திறத்தினை இவ்வரிசை நூல்கள் உயிரோவியமாக்குகின்றன. தமிழகத் துறவிகள் வரலாற்றில் அடிகளாரைப் போல அனைத்துலகையும் வலம் வந்தவர் வேறு எவரும் இலர்.

பரிபாடலின் பக்திநெறி பற்றிப் பேசினாலும், பாரதியின் பக்திமை பற்றிப் பேசினாலும் பக்திநெறியில் அடிகளின் பார்வை புதியது. 'பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம். பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்' என்கிற கோட்பாட்டை, 'நாமார்க்கும் குடி அல்லோம்' என்னும் நாவுக்கரசரின் குரலை சுரந்திரக் குரலாக எடுத்துரைப்பார். விடுதலை வேள்விக்கு வித்திட்டவர் என வீறார்ந்த மரபை விளக்கிக் கூறுவார்.

கடவுட் பற்றும், கவிதைப் பற்றும், கட்சிசாரா நாட்டுப் பற்றும் அடிகளார் எழுத்துக்களில் எங்கும் பரக்கக் காணலாம்.

பாரதியாரை ப. ஜீவானந்தம் ஆரவாரமாக, உணர்ச்சி பொங்கச் சொல்லிக் கூத்தாடுவார். அடிகளாரோ ஆரவாரமின்றி ஆழ்ந்த அமைதியோடு அழகு தமிழில் ஆற்றொழுக்காக எடுத்துரைப்பார். இவர் எழுத்து நடை திரு.வி.கவைப் போல பேச்சு நடை தழுவியது. சிறிய தொடர்கள் சிந்தனையைத் தூண்டுபவை.

ஒட்டுமொத்தமாக எழுத்துக்கள் அனைத்தையும் ஒருசேரத் தொகுத்துப் பார்க்கிறபோது அடிகளாரின் அறிவாற்றலும், எழுத்தாற்றலும், தமிழாற்றலும் நம்மை வியப்படைச் செய்கின்றன. ஒரு நொடியும் வீணாக்காது தமிழினம் உய்ய அடிகள் ஆற்றிய அரும் பணிகளின் ஆழத்தையும், அகலத்தையும் விரிவையும் இந்நூல் வரிசைகள் விளக்குகின்றன. உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.

# அணிந்துரை

## சிற்பி பாலசுப்பிரமணியம்

அடிகளார் என்ற திருப்பெயரால் அனைவர் நெஞ்சிலும் உலா வந்த ஞானமணித் தென்றல் தவத்திரு தெய்வசிகாமணி பரமாசாரிய சுவாமிகள். குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத் திருமடத்தைத் தமிழ் அன்னையின் திருமடி ஆக்கிய பெருமை அடிகளாருக்கு உண்டு.

ஆன்மிக உலகில் அருளின் தேரோட்டமாகவும் சமுதாயக்களத்தில் சமநீதிக்கான போராட்டமாகவும் அடிகள் திகழ்ந்தார்கள்.

சடங்கு சம்பிரதாயங்களில் மக்களைக் கட்டிப்போடும் தளை அல்ல சமயம் என்று அடிகள் கருதினார்கள். மனிதனை மாண்புறு மனிதன் ஆக்குவதே சமயப் பணி எனத் தேர்ந்து அப்பரடிகளைப் போல் தமிழகத்தின் முதல் தொண்டராகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்கள்.

'குன்றக்குடிப் பெரியீர்
குமரனுக்கும் தமிழ் தருவீர்'

என்று கவியரசு கண்ணதாசன் நயந்தும் வியந்தும் உரைத்த நன்மொழிக் கேற்ப வானார்ந்த தமிழின் வளர்ப்புப் பண்ணையாக விளங்கினார்கள். எண்ணினார்கள், எழுதினார்கள், எண்ணற்ற மேடைகளில் வாழும் இலக்கியத் தைத் தம் வாய்மொழியால் வைர வைடூரியங்களாய் மெருகிழைத்துக் கொடுத்தார்கள்.

செயலுக்குக் குறியீடு தான் சொல் என்று கருதினார்கள். செயலாகாத சொல்லும், வடிவம் ஆகாத சிந்தனையும் வீண்ஆடம்பரம் என்று விலக்கித் தள்ளினார்கள்.

தண்டமிழுக்கு வாய்த்த தமிழ் மாமுனிவராய், அறிஞரையும், புலவரையும், கவிஞரையும் அரவணைத்துப்

பாராட்டி விருதளித்துச் சிறப்பித்தார்கள். இதய விசாலத்தால் இந்நாள் பாரியாக குன்றக்குடியை ஓர் இலட்சியக் குடியரசாக அன்புச் செங்கோல் செலுத்தி அரசாண்டிருந்தார்கள்.

மனித நேயத்தின் மாணிக்கக் கனியாக விளங்கிய அடிகளார் அருட்கொலு வீற்றிருந்த காலத்தில் மேடைத் தமிழ் வித்தகராகவும், இதழாசிரியராகவும், பன்னூற் படைப்பாள ராகவும் தம் சிந்தனைகளைப் பகிர்ந்தளித்திருக்கிறார்கள். வருங்காலத் தலைமுறைகளுக்கு அக் கருவூலத்தைச் சேமித்துத் தரவேண்டும் என்று இன்று குன்றக்குடித் திருமடத்தில் அருள் தலைமை ஏற்றிருக்கும் தவத்திரு பொன்னம்பல அடிகளார் எண்ணினார்கள். அவ்வெண்ணத் தைத் திறம்பட வடிவமைத்து அடிகளாரின் நூல் தொகுதிகளைச் செந்தமிழ்க் காவலர் ச.மெய்யப்பன் ஏற்கெனவே ஐந்து தொகுதிகளாக வெளியிட்டிருக்கிறார்.

அந்த வரிசையில் ஆறாவது தொகுதியாக வெளிவரும் இந்நூல் அடிகளாரின் இலக்கியப் பார்வைகளைச் செழுமை யாகத் தொகுத்துத் தருகின்றது.

மகாகவி பாரதியார், பாவேந்தர், பட்டுக்கோட்டையார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் படைப்புகளைத் தமக்கே உரிய புதிய கோணத்தில் இருபது கட்டுரைகளில் வழங்கியுள்ளார் அடிகளார். இவற்றுள் பதினைந்து கட்டுரைகள் பாரதியாரைக் குறித்து எழுதப்பட்டிருப்பதால் அம்மகா கவிக்கே சமர்ப்பணம் ஆகத்தக்க நூல் இது என்று குறிப்பிடலாம்.

பாரதியார் ஒரு வைரச் சுரங்கம். அவருக்குள் ஆழச் செல்லச் செல்ல எடையிலும் ஒளியிலும் விலை மதிப்பிட முடியாத வைரங்கள் எப்போதும் கிடைக்கும். அப்படி மணிக்கற்களை அள்ளி வந்த அறிஞர் பெருமக்களில் அடிகளார் தனித்துவம் மிக்கவர்.

காலத்துக்கும் களத்துக்கும் இசைந்தவாறு கவிஞர் பெருமான் தந்த கருத்துக்களை வகுத்தும் தொகுத்தும் எடுத்தும்

தொடுத்தும் தந்திருக்கின்றார் அடிகளார். கவிதைச் சுவடிக்குள் அடையாளம் காணப்படாமல் இருந்த பல செய்திகளை நுட்பமாகத் தேடி அடிகளார் அளித்திருக்கின்றார்கள்.

தலைவர்களுக்குப் பாரதியார் காட்டும் வழி என்ற முதற் கட்டுரையே இதற்குச் சான்று. சிறந்த தலைவர்களைக் குறித்துப் பாரதியார் பாடியுள்ள கவிதைகளிலிருந்து சீரிய தலைமைப் பண்புகளை இனம் கண்டு அடிகளார் எடுத்துக் காட்டியிருக்கும் திறம் வியப்புக்குரியது. தாதாபாய் நவுரோஜி 'கல்வியும் அக்கல்வியைப் போல் அறிவும், அறிவினைப் போல் கருணையும், அக்கருணைபோல் பல்வித ஊக்கங்கள் செயும் திறனும்' படைத்தவர் என்பார் பாரதியார். ஒருவகையில் சிறந்த தலைவருக்குரிய பண்புகள் இவை என்று கூர்ந்து காண்கிறார் அடிகளார். மாஜினியின் உயர்வும் தளர்ச்சியுமற்ற மக்கள் பணி, மகாத்மாவின் மன்னுயிர் எல்லாம் கடவுள் என்ற கோட்பாடு என பாரதியார் தலைவர்களிடம் காணும் உயர் குணங்கள் யாவையும் இன்றையத் தலைவர்களுக்கு இன்றியமையாத பண்புகள் என எடுத்துக் காட்டுகின்றார் அடிகளார்.

பாரதியாரை யுகசந்தியாகக் காணும் அடிகளார் 'நல்ல பழைமை, புதுமையை ஈன்றெடுத்துத் தரும்' என்ற கோட்பாட்டைப் பாரதியாரில் பொருத்திக் காண்கிறார். கலியுகம் என்ற கருத்தாக்கத்திலிருந்து கிருதயுகத்துக்குப் பாயும் பாரதியாரை, சமயங்களிடையே ஒருமை காணும் பாரதியாரை, உழவுக்கும் தொழிலுக்கும் பாலமிடும் பாரதியாரைப் பல நிலைகளில் கண்டு அவன் யுக சந்தி என்பதை நிறுவுகின்றார்.

> "எந்தக் கவிஞன் தான் வாழுகின்ற காலத்தைப்
> புரிந்து கொண்டிருக்கிறானோ அந்தக் கவிஞன்
> ஒரு காலத்தை உருவாக்குவான்"

என்று மொழியும் அடிகளார் பாரதியார் கண்ட கனவுகளை –சாதி ஒழிந்த சமுதாயம், மனிதர் உணவை மனிதர் பறிக்காத சமுதாயம் – குறித்த கனவுகளை விரிவாக விளக்குகின்றார்.

பாரதி வளர்த்த கவிதை பற்றி எழுதுகையில் வள்ளுவரின் சினத்தையும் பாரதியாரின் வஞ்சினத்தையும் ('தனி ஒருவனுக்கு உணவிலையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்') ஒப்பிடும் மாட்சிமை துலங்குகின்றது. பாவேந்தர் காலத்துக் கேற்றவாறு 'உலகம் உண்ண உண்; உடுத்த உடுப்பாய்' என்று இக்கருத்தை மாற்றியமைப்பதை எடுத்துக் காட்டிக் கருத்து நயம் காண்கின்றார்.

பாரதியின் தேசியப் பாடல்கள் கால வெள்ளத்தில் மதிப்பிழந்து அடித்துப் போகப்படுமா என்ற திறனாய்வாளர் களின் வினாவை முறியடித்து அடிகளார் கூறும் கருத்து புதிய ரத்தம் பாய்ச்சுகின்றது.

பாரதியின் விதி வாதம், பாரதியின் கடவுட் கோட்பாடு, பாரதியின் பொருளியல் கொள்கை, பாரதி வளர்க்க விரும்பிய மக்கட் பண்புகள் என மகாகவியின் சிந்தனைப் பிரபஞ் சத்துக்குள் அடிகளார் சிறகடித்துப் பறக்கின்றார்.

"கடவுளே, எனதருமை நாட்டை விழித்தெழச்
செய்யமாட்டாயா? பாரதியின் தடத்தில் உய்த்துச்
செலுத்த மாட்டாயா?"

என்று அடிகளார் எழுதும்போது, பாரதிக்குள் எத்துணை ஆழமாகப் பயணித்துள்ளார் என்பதைக் கண்டு சிலிர்த்துப் போகிறோம்.

பாரதியின் சக்தி வழிபாட்டுக்குக்கூட ஒரு புது விளக்கத்தை அடிகளார் அருளிச் செய்திருக்கின்றார். மகா சக்திக்கு விண்ணப்பமாகப் பாரதி இயற்றியுள்ள 'நல்லதோர் வீணை கவிதை அவருக்குக் கைகொடுக்கின்றது.

"பயனுற வாழ்வதற்காகச் செய்யும் வழிபாடே
ஆற்றல் வழிபாடு-சக்தி வழிபாடு"

என்று காட்டும் நேர்த்தி அடிகளாருக்கே கைவந்த அருங்கலை!

மகாகவியின் சிந்தனைகளை ஓர்அன்னப் பறவை போல் தனித்துப் பிரித்தெடுத்து, சமத்துவ சமுதாயம் காண விரும்பிய

கவிஞன் பாரதி என்பதை ஐயமும் திரிபுமின்றி நிலை நாட்டுகின்றார்.

பாவேந்தர், கண்ணதாசன், பட்டுக்கோட்டைக் கவிதைகளை எடுத்துக் காட்டிப் பாரதிக்குப் பின் தமிழ்க் கவிதை தழைத்து வளர்ந்திருப்பதை உறுதிப்படுத்துகின்றார். பாரதியின் நாடித்துடிப்பைக் கண்டறிந்த மேதையாக அடிகளார் காட்சிதருகின்றார். ஜீவா, எஸ். இராமகிருஷ்ணன், ஆர்.கே. கண்ணன் போல் பாரதிக்குப் புதிய புதிய விளக்கங்கள் காணும் வித்தகர் வரிசையில் பாரதிச் சித்தராக அடிகளார் திகழ்கின்றார். அழகியலை விட அறவியலும், அறவியலை விட அறிவியலும் அடிகளார் திருவுள்ளத்தை ஆட்கொண்டிருப்பதை பாரதியைக் குறித்த கட்டுரைகள் புலப்படுத்துகின்றன.

தொடர்ந்து பாரதிதாசனின் கவிதை உலகத்தை மிக நீண்ட ஒரு கட்டுரையால் அளந்து காட்டுகின்றார். சாதி எதிர்ப்பும், கடவுள் மறுப்பும், பெண் விடுதலையும், தேசியமும், உழைப்பின் மகத்துவமும், உலகளாவிய பார்வையும், கொழிக்கும் தமிழ் உணர்வும் பாரதிதாசனின் உணர்வுக் கோலங்களாக அடிகளார் வரைந்து காட்டுகின்றார்.

அண்ணாவின் படைப்புக்களையும், பட்டுக்கோட்டையின் பாடல்களையும், சமுதாய மறுமலர்ச்சிக் கவிதைகளையும் சமுதாயக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து எழுதியுள்ள கட்டுரைகளில் மீண்டும் அடிகளாரின் பொதுமை உள்ளம் பொன்னாய் மின்னுகின்றது.

இலக்கியம் சமுதாயத்தை விளக்குவதோடு சமுதாயத்தை மாற்றியமைக்கும் ஆயுதமாகவும் திகழவேண்டும் என்பது அடிகளாரின் இலக்கியக் கோட்பாடு. புதிய மாற்றங்களின் காற்றாக இலக்கியம் துலங்க வேண்டும் என்ற மாண்புறு சிந்தனை, பக்கத்துக்குப் பக்கம் இந்நூலில் முத்திரை பதித்துள்ளது.

தே.வி.VI.உ.

எந்த அடிகள் பெருமானின் அடிச்சுவட்டில் நடக்க நான் ஆசைப்பட்டேனோ, அந்த மாமேதையின் நூலுக்கு முன்னுரை எழுதும் வாய்ப்பைப் பெறற்கரிய பேறாக எண்ணுகின்றேன். இந்த நல்வாய்ப்பை நல்கிய என் கெழுதகை நண்பர் பதிப்புச்செம்மல் ச.மெய்யப்பன் அவர்களுக்குப் பெருநன்றி உரைக்கின்றேன்.

அடிகளாரின் மேதக்க சிந்தனைகளைத் தொகுத்துத் தரும் பயனார்ந்த பணிக்குத் திட்டமிட்டு ஆணை பிறப்பித்த தவத்திரு பொன்னம்பல அடிகளாருக்கு பணிந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடிகளார் நினைவுக்குக் குன்றக்குடியில் மணிமண்டபம் உண்டு. இந்த நூல்வரிசை அடிகளார் நினைவுக்கு அழகுற எடுத்த இலக்கிய மண்டபம்.

**சிற்பி பாலசுப்பிரமணியம்**



தவத்திரு

குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

# முன்னுரை

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

குருமகா சந்நிதானம் அருள்நெறித் தந்தை தவத்திரு அடிகளார் பெருமானின் அற்புதப் படைப்பாக சங்க இலக்கியம் முதல் பாரதி - பட்டுக்கோட்டை வரை தொகுப்புநூல் மலர்கின்றது. தமிழர்கள் வாழ்க்கை வாழ்வதற்கே! "வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்!" என்பது அப்பர் பெருமான் வாக்கு! சங்க இலக்கியத்தின் வாழ்வியல் சிந்தனையை நம் குருமகா சந்நிதானம் தமக்கே உரிய பொதுமைப் பார்வையில், புதுமைப் பார்வையில் முற்போக்குச் சிந்தனையில் சமூகத்தினைச் சிந்திக்கச் செய்கின்றார்கள்.

உலகத்தில் இருவித வாழ்க்கை! இருவேறு உலகங்கள்! ஒருபுறத்தில் மகிழ்ச்சி! மறுபுறத்தில் துக்கம்! ஒருபுறத்தில் ஆனந்தம்! மறுபுறத்தில் அவலம்! இப்படி இருவேறு உலகங்களை ஒரு படைப்பாளி படைத்திருப்பானா? அப்படிப் படைத்திருந்தால் அவன் பண்பில்லாதவன் என்று ஆண்டவனை எதிர்த்து, சமூக நன்மைக்குக் குரல் கொடுத்ததுதான் தமிழனின் குரல். "எல்லாம் விதிவசம்! அனைத்தும் ஆண்டவன் படைப்பு! செல்வம், வறுமை, நோய், துன்பம் அனைத்தும் இறைவன் படைப்பே!" என்ற சிந்தனை மனித முயற்சியை முடமாக்கும். இந்த புறநானூற்றுப் பாடலுக்கு அடிகள் பெருமான் புதிய விளக்கம் தருகின்றார்கள். உலகம் இன்னாததாக இருக்கலாம். ஆனால், இன்னாமையை அப்படியே தாங்கிக் கொள்ள வேண்டும் அல்லது தாங்கும் சக்தியற்ற

கோழைகளாக இருப்பின் எல்லாவற்றையும் துறந்து எங்கேயாவது ஓடிவிட வேண்டும் என்ற கொள்கை தமிழ்வழக்கன்று! ஏன்? வாழும் நெறியும் அன்று. துன்பம் இயற்கையாக இருக்கலாம். ஆனால், அவற்றை மாற்றுவதற்குரிய சக்தி நமக்கு உண்டு என்று நம்பாத மனித உலகம், வாழ்ந்தும் வாழாத உலகமே என்று கூறி, மனித முயற்சியை மேலும் முதன்மைப் படுத்துகின்றார்கள். "படைப்புக் கடவுள் மண்ணைப் படைத்தால் மனிதன் மாளிகைகள் படைக்க வேண்டும். கனிதரு சோலைகள் படைக்க வேண்டும். நான்முகன் படைத்த மண்ணில் உவரும் களரும் இருக்கலாம். ஆனால் மனிதன் படைத்த கனிதரு சோலைகளில் இனிய கனிகளே உண்டு! நான்முகன் கடலைப் படைத்தால் மனிதன் கலம் படைப்பான். தீமையை எதிர்த்து, துன்பத்தை எதிர்த்து, வறுமையை எதிர்த்து, அறியாமையை எதிர்த்துப் போராடப் பிறந்தவன். ஆனால் ஐயோ! அவன் இன்று பக்கத்தில் உள்ள மனிதனோடு போராடிக் கொண்டிருக்கின்றான். அவன், தேவையில்லாத சாதிகளை - வேலிகளைக் கற்பித்துக் கொண்டு உடன்பிறந்த சகோதரர்களோடு போராடிக் கொண்டிருக்கின்றான்" என்று மனித சமுதாயம் தவறான திசையில் செல்லுவதைச் சுட்டிக் காட்டித் திருத்த முயற்சி செய்கின்றார்கள். உலகத்தின் போக்கினைக் கூறி, நிறைவில் வணிக உலக வாழ்க்கையை அறிவுறுத்தித் திருந்தி வாழ முயற்சி செய்யுமாறு கூறுகின்றார் கள்.

"வறுமையை எதிர்த்துக் கழனியில் போராட வருபவர் எத்தனை பேர்? ஊர் எல்லாம் உண்ணக் கொடுத்தவன்தான் உண்ண உணவின்றிப் போராடுகின்றான்! இது என்ன

கொடுமை!" என்ற கூற்று சமூகத்திற்குச் சரியான சவுக்கடி! இதற்குத் தீர்வும் அருமையாகக் குறிப்பிடுகின்றார்கள். மனித உலகம் துன்பத்திலிருந்து விடுதலை பெற வேண்டுமானால், மரணத்திலிருந்து விடுதலை பெற வேண்டுமானால், அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறவேண்டுமானால் மனிதர்கள் துன்பம் இயற்கையன்று என்ற அறிவின் தெளிவைப் பெற வேண்டும்!" என்ற கூற்று நிதரிசனமானது.

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்" - இந்தச் சிந்தனை இந்நாட்டிற்குத் தேவையான ஒன்று. ஊரின் முன்னேற்றத்திற்காகச் சுண்டுவிரலை அசைக்காதவர்கள் கூட எங்கள் ஊர் என்று வீறாப்புப் பேசுகிறார்கள். "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற சிந்தனை உலகமுழுவதற்கும் தேவையான ஒன்றாகும். கம்பனின் இராமகாதையின் அரசியலைப் புதிய கண்ணோட்டத்தோடு கூறுவது பெருமைக்குரியது, கம்பனின் இராமகாதையின் அரசுகள் நிலைபற்றிய விவாதம் அவசியமான ஒன்று. இராமனுக்கு முடிசூட்டுவிழா என்று கூறிய பொழுது அயோத்தி மக்கள் ஆனந்தக் கூத்தாடுகின்றார்கள். இராமனுக்கு வனவாசம் என்ற பொழுது மக்கள் அழுகின்றார்கள்; துன்பப் படுகின்றார்கள். சித்திரத்தில் அலர்ந்த செந்தாமரையை ஒத்திருந்தது இராமனின் திருமுகம் என்று கூறுகின்றார். இலங்கை அரசில்

'களிக்கின்றார் அலால் கவல்கின்றார் இலர்'

என்ற வரிகளில் மக்களின் நிலைமையைச் சுட்டுகின்றார். இலங்கை மக்கள் துன்பம், இன்பம் என்று உணரவும் அறியாதவராய் மதிமயங்கிக் கிடக்கின்றனர் என்ற வரிகள் மிகவும் போற்றத்தக்கன.

'சிலம்பு நெறி'யில் பெண்களின் நிலைபற்றி அற்புதமாகக் கூறுவார்கள். கோவலனைத் தொலைத்த கண்ணகி கூறும் முதல் கேள்வி "பெண்டிரும் உண்டுகொல்" என்பது, இந்த ஊரில் பெண்கள் இருக்கின்றார்களா என்று கேட்கின்றாள்! என்ன கேள்வி இது? ஒரு ஊர், நகரம் என்றால் பெண்கள் இருக்க மாட்டார்களா? பிறகு ஏன் கண்ணகி அப்படிக் கேட்டாள்? நல்ல பெண்மணிகள் உள்ள நாட்டில் குற்றங்கள் குறையும்; கொலைகள் நிகழா; கள்வர் குறைவர்; சிறைச்சாலைகள் மூடப்படும்! அன்று சோழநாட்டுப் பெண்கள் அணிகலன் தாங்கிகளாக இருந்தனர். சோழநாட்டு வீதியில் 1000 கழஞ்சு பொன்னிற்கு மாதவி, கூவி ஏலம்போட்டு விற்கப்படுகின்றாள். இக் கொடுமை அஞ்சாது தட்டிக் கேட்கப்படவில்லை! எனவே, நல்ல பெண்கள் இருக்கும் நாட்டில் குற்றங்கள் குறையும். இந்தப் புதிய பார்வை போற்றுதற்குரியது.

மகாகவி பாரதிமுதல் பட்டுக்கோட்டை வரை அரிய திறனாய்வு, அற்புதமாக அமைந்துள்ளது. எனவே புதிய நோக்கில் சமூகச் சிந்தனையின் அடிப்படையில் சிறப்பாக விளங்க இக்கால இலக்கியங்களில் விரிவாகக் கூறுவது சிறப்புடையது. வாழும் மனித சமூகத்திற்கு ஒப்பற்ற வழிகாட்டியாக விளங்க, சமூகச் சிந்தனை மிக்க இலக்கியங் களைக் கூறுவது மிகுந்த பாராட்டைப் பெறுகின்றது; ஆசிரியர் திறனாய்வால் வியக்க வைக்கின்றது. எனவே, ஒப்பற்ற சமுதாய நோக்குடைய இலக்கியங்களை அருள்நெறித் தந்தையவர்கள் சிறந்த நடையில் விளக்கியிருப்பது தமிழ்ச் சமூகத்திற்குக் கிடைத்த பெரும் பேறாகும்.

இந்நூலுக்கு அரியதொரு அணிந்துரை வழங்கியுள்ள முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி!

இந்நூல் ஆக்கத்திற்குப் பயன்படும் மணிவாசகர் பதிப்பக ச. மெய்யப்பன் அவர்களுக்கு நெஞ்சு நிறைந்த நன்றி. இந்த நூல் ஆக்கத்திற்குப் பாடுபட்ட ஆதீனக் கவிஞர். மரு. பரமகுரு, தமிழாகரர் தெ. முருகசாமி ஆகியோருக்கு நன்றிப் பெருக்கோடு கூடிய நல்வாழ்த்துக்கள்! தமிழ்ச் சமுதாயத்திற்கு ஒப்பற்ற வழிகாட்டியாக இந்நூல் விளங்கும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கின்றது. தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு இவ் ஆக்கம் மேலும் மெருகு ஊட்டும். சங்க கால இலக்கியம் முதல் இக்கால இலக்கியங்கள் வரை புதிய பார்வை, சமுதாயத்திற்கு மிகுந்த பயனைத் தருவதாகும். இந்நூல் வெளிவருவதற்கு உழைத்த அனைவருக்கும் பாராட்டுக்கள்; நல்வாழ்த்துக்கள்!.

# உள்ளுறை


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | தலைவர்களுக்கு பாரதி காட்டும் வழி | 17 |
| 2. | பாரதி ஒரு யுகசந்தி | 26 |
| 3. | பாரதியின் கனவுகள் | 131 |
| 4. | பாரதி தடத்தில் பாரதம் | 218 |
| 5. | தீ வைக்கட்டுமே | 247 |
| 6. | பாரதியின் சக்திவழிபாடு | 251 |
| 7. | மகாகவி பாரதியாரின் சிந்தனைகள் - I | 256 |
| 8. | மகாகவி பாரதியாரின் சிந்தனைகள் - II | 259 |
| 9. | மகாகவி பாரதியாரின் சிந்தனைகள் - III | 262 |
| 10. | பாரதிக்குப்பின் கவிதை வளர்ந்திருக்கிறதா? | 265 |
| 11. | பாரதியின் இலட்சியம் | 271 |
| 12. | பாரதியின் தேசியப் பாடல்கள் | 280 |
| 13. | பாரதி வலியுறுத்துவது எது? | 292 |
| 14. | பாரதி அமைத்த பாலம் | 296 |
| 15. | பாரதி காட்டும் வழி | 300 |
| 16. | பாரதிதாசனின் உலகம் | 309 |
| 17. | அண்ணாவும் இலக்கியப் படைப்பும் | 406 |
| 18. | பட்டுக்கோட்டையின் பாடல்கள் | 424 |
| 19. | பொழுதை விடியச் செய்வோம் | 433 |
| 20. | சமுதாய மறுமலர்ச்சி இலக்கியங்கள் | 439 |

# 1

# தலைவர்களுக்குப் பாரதி காட்டும் வழி

பாரதியார் ஒரு மகாகவி. தமது உணர்ச்சியை வெளிப்படுத்துவதில் பேராற்றல் படைத்தவர். அவர் உள்ளத்து உள்ள உண்மை ஒளியே கவிதைகளாக மலர் கின்றன. அவர் பாடல்கள் தமிழர்களுக்குப் புத்துணர்ச் சியைக் கொடுத்தன, கொடுத்துக் கொண்டிருக்கின்றன. தேசப்பற்றையும், தெய்வப்பற்றையும், கவிதை இன்பத்தையும் ஊட்டுகின்ற கவிஞர் அவர். பாரதியார் சிறந்த கவிதைத் தச்சர். ஒப்பற்ற சீர்திருத்தச் சிற்பி. அழுத்தமான தெய்வ பக்தர். வாய்மையும் நேர்மையும் பொருந்திய சமுதாயத்தின் வழிகாட்டி. சமுதாயத்தை வளம்படுத்த வந்த மாபெரும் தலைவராகிய பாரதியார், தலைவர்களாக உள்ளவர்களுக்கும் நல்ல வழி காட்டுகிறார்.

பாரதத் தாயின் அடிமை நிலையினை அகற்ற முயன்ற முன்னையோரில் முதல்வர் தாதாபாய் நவுரோஜி, அறிவும், திறனும், அன்பும், உறுதியும் படைத்த வீரத்தலைவர். அவர். விற்போரில் வெற்றிகொள்ள நினைப்பது பயனற்றது எனக் கருதிச் சொற்போரால் தொண்டாற்றியவர், எல்லாவற் றிற்கும் மேலாக சீர்மை பொருந்திய ஒரு பண்பை அணிகலனாகக் கொண்டவர். அது என்னவென்றால்,

தன்னலமின்றி என்றும் பிறர் நன்மைக்கென்றே அரும் பாடுபட்ட பற்றற்ற துறவியாய் வாழ்ந்தமையே. அவற்றை யெல்லாம் கண்ட பாரதியார் மனமார வாய் நிறைய வாழ்த்துகிறார். அந்தக் கவியைப் பார்ப்போம்:

"கல்வியைப்போல் அறிவும். அறிவினைப்போலக்
கருணையும் அக்கருணை போலப்
பல்விதஊக் கங்கள் செயுந் திறனும்
ஒரு நிகரின்றிப் படைத்த வீரன்
வில்விறலாற் போர் செய்தல் பயனிலதாம்
என அதனை வெறுத்தே உண்மைச்
சொல்விறலாற் போர் செய்வோன்;
பிறர்க்கன்றி தனக்குழையாத் துறவி யாவோன்"

இதன் மூலம் தலைவர்களுக்குக் கல்வியும், அறிவும், கருணையும், ஊக்கமும், தீர்க்காலோசனையும், தன்னலத் துறவும் எவ்வளவு அவசியம் என்பதைப் பாரதியார் உணர்த்துகிறார். தமிழ் இலக்கியங்களிலெல்லாம் மிகச் சிறந்த பண்பாடாகப் பேசப்படுகின்ற தன்னலத்துறவு அறிந்தின்புறத் தக்கது.

"தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முழலுந ருண்மையானே"

இவ்வுலகம் உண்டென்று கூறுகிறது புறநானூறு. "தனக் கென்று ஒன்றானும் உள்ளான், பிறர்க்கே உறுதிக்கு உழந்தான்" என்பது குண்டலகேசி. "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்" என்பது அகநானூறு. "பிறர்க்கற முயலும் பெரியோய்" என்பது மணிமேகலை. பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வழிகாட்டும் தலைவனுக்கு இந்தத் தன்னல மறுக்கும் பண்பு அமையாதிருக்குமானால் அவன் தலைமை நல்ல பயனை விளைவிக்காது. அவனது தலைமையும் மக்கள் சக்தியால் மாற்றப்பட்டுவிடும். எத்தனையோ பேரரசுகள்

மறைந்தொழிந்தமையே இந்த உண்மையை நன்கு எடுத்துக் காட்டும். மகாகவி பாரதியின் இந்தத் தன்னல மறுப்பு உபதேசம் அரசியல் தலைவர்களுக்குமட்டுமல்ல. அதனால் சமுதாயம், சமயம், அறநிலையங்கள், மடாலயங்கள், முதலியவற்றின் தலைவர்களுக்கும் சிறந்த வழிகாட்டியாக அமைகின்றது. துறவியினுடைய இலட்சணம் இவ்வுலகப் பொருள்களிடத்துப் பற்றின்றி வாழ்தலேயாம். ஆனால் தன்னைச் சார்ந்துள்ள தன் நாட்டினுள்ள மக்களை மறத்தல் அல்ல. அறிவும், ஒழுக்கமும், அன்பும், நம்பிக்கையும் கொண்டு மக்கள் நலம்பெற வாழ வழிகாட்டிப் பணி செய் வதையே கடமையெனக் கொண்டவர் துறவிகள் என்பது கதே என்ற தத்துவ ஞானியின் அறிவுரை. "ஞானிகள் முயல வேண்டுவது உலகத்தை வெறுக்கவன்று; உலகத்தை அறியவேயாகும்" என்பது அவர் மொழி, ஈண்டு உலகம் என்பது மக்களையே குறிக்கின்றது. உலக மக்களின் நிலையறிந்து, தேவையறிந்து அவர்கள் வளர வேண்டுவன செய்யக் கடமைப்பட்டிருக்கிறான் ஒரு உண்மையான துறவி. அதையே பாரதி "பிறர்க்கன்றித் தனக்குழையாத் துறவியா வோன்" என்று சொல்லி விளக்குகின்றார். இத்தகைய துறவிகள் இந்த நாட்டில் பெருகுவார்களானால் இம் மண்ணுலகமே விண்ணுலகமாய் மாறிவிடும்.

சில இடங்களில் பாரதியார் ஆண்டவனை நோக்கிச் செய்யும் தமது பிரார்த்தனையின் மூலம் தலைவர்களுக்கு சிறந்த வழியைப் புகட்டுகிறார். பாரதியார் தமது சுயசரிதையைப் பாடி முடித்த பின்பு இறுதியாகப் பரம் பொருளிடம் ஒருசில வேண்டுகிறார். அவற்றைப் பார்ப்போம்.

*"அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி, அகத்திலே*
*அன்பினோர் வெள்ளம்,*
*பொறிகளின்மீது தனியரசாணை, பொழுதெலாம்*
*நினது பேரருளின்*

*நெறியிலே நாட்டம், கருமயோகத்தில் நிலைத்திடல்,*
*என்றிவை அருளாய்;*
*குறிகுணம் ஏதும் இல்லதாய் அனைத்தாய்க் குலவிடு*
*தனிப்பரம் பொருளே"*

கலக்கமற்ற அறிவு, சபலமற்ற நெஞ்சு. அன்பு நிறைந்த உள்ளம், பொறிகளை அடக்கியாளும் ஆற்றல், இறைவன் திருவருள் நெறியினை மறவாத நோக்கம், இடையறாப் பணியில் ஈடுபாடு இவற்றையெல்லாம் ஆண்டவனே எனக்கு அருள்வாய் என்று வேண்டுகிறார் பாரதி. அதாவது, இவை யெல்லாம் ஒரு தலைவனுக்கு இன்றியமையாது வேண்டப் படுபவை என்று அறிவுறுத்துகிறார் நவயுகத் தலைவர் பாரதி. இன்னும் ஒரு தலைவனுக்குவேண்டிய ஒரு குணத்தையும் வெளிப்படுத்துகிறார். அது பகைமை உணர்ச்சியாகும். ஒரு தலைவன் எதைப் பகைக்கவேண்டும் என்பதை மாஜினியின் மூலமாக உணர்த்துகிறார்.

*"தீயனபுரிதல், முறைதவிர் உடைமை,*
*செம்மைதீர் அரசியல், அநீதி*
*ஆயவற்று என்னெஞ்சு இயற்கையின்*
*எய்தும் அரும்பகை"*

தீமையையும், அநியாய உடைமையையும், கொடுங் கோலையும், அநீதியையும் கண்டால் ஒரு உண்மைத் தலைவன் இயல்பாகவே அதன்மீன் கோபங்கொண்டு அதை அழிக்கக் கொதித்து எழுவான் என்ற உண்மையையும் நன்கு வெளிப்படுத்துகிறார் பாரதி. மேலும் மனித உள்ளத்திலே பெரும்பாலாகத் தோய்ந்துகிடக்கும் சில தீமைகள் ஒழியவேண்டும் என்றும் வேண்டுகிறார்.

*"மதிமூடும் பொய்மை யிருளெல்லாம்—எனை*
*முற்றும் விட்டகல வேண்டும்;*

ஐயம்தீர்ந்து விடல் வேண்டும்–புலை
அச்சம் போயொழிதல் வேண்டும்"

என்று சொல்லி, "உன்னைக் கோடி முறை தொழுதேன். இனி வையத்தலைமை எனக்கருள்வாய்" என்று வேண்டுகிறார். "அச்சம் கீழ்களது ஆசாரம்" என்று வள்ளுவர் பேசுகிறார். அச்சமும் சந்தேகமும், அதாவது நம்பிக்கையின்மையும் தலைவனைத் தலைமைப் பதவிக்குத் தகுதியற்றவனாக ஆக்கி விடுகின்றன என்பதை வையத் தலைமையை வேண்டும் பாரதி நன்றாக விளக்குகிறார்.

எந்த ஒரு விஷயத்தையும் பரபரப்பின்றி, வரவரக் கண்டு, ஆய்ந்துபார்த்து முடிவு செய்ய வேண்டியது தலைவர் களுக்கு இன்றியமையாது வேண்டப்படுகின்ற பண்பு. இந்தப் பண்பாட்டைப் பாரதி பாஞ்சாலி சபதத்தில் அர்ஜுனன் மூலமாக உணர்த்துகிறார். சூதாட்டத்திலே தருமன் பாஞ்சாலியை வைத்துத் தோற்றுவிட்டான். பீமன் கொதித்தெழுகின்றான். மூத்தவன் என்ற மரபையும் மறந்து கடுஞ்சொற்களைக் கொட்டுகிறான். அச்சமயத்திலே அர்ஜுனன் பீமனைத் தடுத்து நிறுத்திச் சினமான தீயறி வினால் அடாத வார்த்தைகளைச் சொல்லாதே என்று அமைதிப்படுத்திப் பின்னர் அறம் பேசுகிறான். அறம் சொல்லுவதோடு அர்ஜுனன் நிற்கவில்லை. நியதி தத்துவத்தையும் உணர்த்துகிறான். "தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்; தருமம் மறுபடி வெல்லும்" என்ற அழியாத உண்மையை அறிவுறுத்துகிறான். தருமத்திற்கு மாறானவை அப்போதைக்குத் தலைதூக்கி நின்றாலும் அது வெற்றியாக மாட்டாது என்பதைத் தலைவர்கள் நன்கு உணர்ந்து செயலாற்ற வேண்டும். சகிப்புத்தன்மையே சாசுவத வெற்றிக்கு அடிப்படை என்ற எண்ணம் அர்ஜுன ஆயினும் அவன் வீரவுணர்வும் தன்னம்பிக்கையும் ட விடவில்லை. பாடலைப் பார்ப்போம்.

"தருமத்தின் வாழ்வதனைச் சூதுகவ்வும்; தருமம்
மறுபடி வெல்லும்" எனுமியற்கை
மருமத்தை நம்மாலே உலகம்கற்கும் வழிதேடி விதி
இந்தச்செய்கை செய்தான்
கருமத்தை மேன்மேலுங் காண்போம். இன்று
கட்டுண்டோம் பொறுத்திருப்போம், காலம்மாறும்
தருமத்தை அப்போது வெல்லக்காண்போம்,
தனுவுண்டு காண்டீபம் அதன் பெயர்"

என்கின்றான். தரும நம்பிக்கையும் அத்தோடு தன்னம்பிக்கையும் தலைவர்களுக்கு எவ்வளவு அவசியம் என்பதை வையத்தலைவன் பாரதி நன்றாக எடுத்துக் காட்டுகிறான். இல்லையா?

காந்திய உணர்விலே ஊறிய பாரதி தலைவர்களுக்குச் சொல்லும், செயலும் ஒன்றாக இருக்கவேண்டும்; கொள்கை வேறு; வாழ்க்கை வேறு என்று இருக்கப்படாது; அப்படி மாறுபட்டிருப்பவர்கள் சமுதாயத் துரோகிகள் என்று வசனத்தில் எழுதுகிறார். நிலையான வெற்றி வேண்டில், அறமான செயல் வேண்டும் என்பது பாரதி காட்டும் வழி. "ஜெயம் நிலையாகச் செய்தற்கு அறமே சிறந்ததோர் மார்க்கம்" என்று மாஜினியின் மூலம் நமக்கு எடுத்து விளக்கு கிறார். மேலும் மாஜினியின் மூலமே பூரணத் தியாகத்திற்குத் தயாராக இருப்பவனே தலைவனாவான் என்பதை

"என்னுடன்ஒத்த தருமத்தை யேற்றார்
இயைந்த இவ்வாலிபர் சபைக்கே
தன்னுடன் பொருளும், ஆவியுமெல்லாம்
தத்தமாய் வழங்கினேன்"

என்று நமக்கெல்லாம் அறிவுறுத்துகிறார். ஒரு தலைவன் சர்வாதிகார மனப்பான்மையின்றி தன்னுடன் உழைப்போர் மனமறிந்து ஒற்றுமைப்பட்டு தான் என்றும் ஊழியனே என்ற

பணியுணர்ச்சியோடு பணிசெய்ய வேண்டும். அயர்ச்சியும் தளர்ச்சியுமற்றவனாய் அப்பணியின்றி, வேறெந்தத் தொழிலிலும் ஈடுபடா ஏகாக்கிர சித்தமுடையவனாய் நிற்கவேண்டும். அதில், எவ்வாற்றாலும் தவறமாட்டேன் என்ற சங்கல்பத்தைத்; திரிகரண சுத்தியுடன் ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்த இலட்சிய வெறியைப் பின் வரும் இரண்டு பாடல்கள் மூலம் பாரதி காட்டுகின்றார்.

*"இவருடன் யானுமிணங்கியே யென்றும்*
*இதுஅலாற் பிறதொழில் இலனாய்த்*
*தவறறு முயற்சி செய்திடக் கடவேன்*
*சந்ததமும் சொல்லினால் எழுத்தால்,*
*அவமற செய்கை யதனினால்*
*இயலும் அளவெலாம், எம்மவரிந்த*
*நலமுறு சபையினொரு பெருங்கருத்தை*
*நன்கிதின் அறிந்திடப் புரிவேன்"*

*"இன்றும் எந்நாளும் இவைசெயத்*
*தவறேன் மெய்யிது, மெய்யிது, இவற்றை*
*என்றுமே தவறிழைப்பனேல் என்னை*
*ஈசனார் நாசமே புரிக,*
*அன்றியும் மக்கள் வெறுத்தெனை யிகழ்க*
*அசத்தியப் பாதகஞ் சூழ்க*
*நின்ற தீயெழுவாய் நரகத்தின் வீழ்ந்து*
*நித்தம் யான் உழலுக மன்னோ"*

இவை ஏதோ மாஜினி எடுத்துக்கொண்ட பிரதிக்ஞையை அறிவிக்கும் சாதாரண ஒரு செய்தியல்ல. பாரதியும் வெறும் பத்திரிகை நிருபர் அல்ல. ஆனால் மக்களைத் தலைமை தாங்கி இட்டுச் செல்லும் தலைவர்களுக்கு இருக்கவேண்டிய குணங்களையும் அவர்கள் கொள்ளவேண்டிய பிரதிக்ஞை யையுமே இதன்மூலம் செம்மையாக அறிவுறுத்துகிறார்.

கடமை தவறிய தலைவர்கள் ஆண்டவனுடைய கோபத்திற்கும் பொதுமக்களின் இகழ்ச்சிக்கும் தவிர்க்க முடியாத பல தண்டனைகளுக்கும் ஆளாவார் என்பதைச் சுட்டிக் காட்டி கடமையாற்றும் நெறியிலே தலைவர்களுக்கு நல்ல வழி காட்டுகிறார் பாரதி.

மக்களை மக்களாகக் கருதவேண்டும்; அவர்களின் உணர்ச்சியையும், உரிமையையும் மதிக்க வேண்டும்.

*"நாட்டு மாந்தர் எல்லாம்–தம்போல்*
*நரர்களென்று கருதார்*
*ஆட்டு மந்தையாம் என்று–உலகை*
*அரசர் எண்ணி விட்டார்"*

என்று சர்வசுதந்திரப் போக்கைக் கண்டிக்கின்றார் பாரதி. அத்துடன் அமையமுடியவில்லை பாரதிக்கு. ஆம். பார்க்குமிடமெங்கணும் நீக்கமற அப்பரமனையே தரிசிக்கும் பண்பாளன் பாரதி. அதனால் உயிர்கள் அனைத்தும் கடவுளின் உருவம்; கடவுளின் பிள்ளைகள் என்று மதித்துப் பரிவுடன் ஏன் பக்தியுடனே பணிபுரிய வேண்டும் என்று கூறுகிறார். வெறும் அறிவுரையாகக் கூறுவதைவிட அங்ஙனம் வாழ்ந்து சிறந்த தலைவர் ஒருவரை உதாரணமாகக் காட்டுவதே நலமெனத் தெளிந்து காந்தியடிகளை நம் மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார். பாட்டைப் பார்ப்போம்:

*"மன்னுயிர் எல்லாம் கடவுளின் வடிவம்*
*கடவுளின் மக்கள்என் றுணர்தல்*
*இன்னமெய்ஞ் ஞானத் துணிவினை, மற்றாங்கு*
*இழிபடு போர், கொலை, தண்டம்*
*பின்னியே கிடக்கும் அரசியல் அதனில்*
*பிணைத்திடத் துணிந்தனை பெருமான்"*

காந்தியடிகளின் பண்பாட்டையும் சீலத்தையும் பாடிப் பரவுதன் மூலம் தலைவர்களுக்கு வேண்டிய குணங்களையும் ஒழுக்கத்தையும் நன்கு புலப்படுத்திவிட்டார் இல்லையா?

இறுதியாகத் தலைவர்கட்கு இருக்கவேண்டிய மேலான ஒரு குணத்தைக் காட்டுகிறார் பாரதி. அதாவது தானே தலைவன் என்றெண்ணி இறுமாந்து தலைதடுமாறிப் போகப் படாது. தலைவர் தலைவனாக ஆண்டவன் ஒருவன் என்று முள்ளான் என்பதை மறக்காமல் நடக்கவேண்டும் என்றெல்லாம் எச்சரிக்கிறார் - வழிகாட்டுகிறார் பாரதி.

ஒரு தலைவன் என்றும் எப்பொழுதும் கடவுளை மறவா உள்ளத்தவனா யிருக்கவேண்டும் என்பதை எத்தனையோ இடங்களில் சுட்டிக்கொண்டே போகிறார் பாரதி. மாஜினியின் உறுதிமொழியை "பேரருள் கடவுட் திருவடி ஆணை" என்றே பாரதி தொடங்குகிறார். "ஈசன் இங்கு எனக்கும் என்னுடன் பிறந்தோர் யாவர்க்கும் இயற்கையின் அளித்த தேசம்" என்று நினைவூட்டுகிறார். உறுதி தவறினால் "ஈசனார் என்னை நாசமே புரிக" என்று முடிவு கட்டுகிறார்.

பரிபூரண சுதந்திரப் பிரியரான பாரதி அடிமை நிலையை எவ்வளவு வெறுத்தார் என்பதை நாம் நன்கறிவோம். அதனால்தான் "பூமிதனில் எவர்க்கும் அடிமை செய்யோம்" என்று வீறு கொண்டெழுகிறார். ஆனால் அப்படிச்சொன்ன வாயை மூடாமலே தொடர்ந்து "பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்" என்று பூரிப்புடன் முடிக்கிறார். அன்னியர்க்கடிமை செய்வது தாழ்வை யளிக்கும் என்றால் ஆண்டவனுக்கு அடிமை செய்வது வாழ்வை அருளும் என்று எவ்வளவு அருமையாகக் குறிப்பிடுகிறார் பார்த்தீர்களா? இங்ஙனம் தலைவனுக்கு வேண்டிய பிற குணங்களுக்கெல்லாம் மணிமுடியாகக் கடவுட்பற்றைக் கூறி நமக்கெல்லாம் நல்லவழி காட்டுகிறார் வையத் தலைவர் பாரதி.

# 2

# பாரதி ஒரு யுகசந்தி

தமிழ், ஒரு வளர்ந்த மொழி. தமிழ், கவிதை மொழி. தமிழ் இலக்கியச் செல்வம், கவிதையிலேயே செழித்து வளர்ந்ததாகும். காலத்துக்குக் காலம் நாட்டு மக்களின் தேவையறிந்து இலக்கியங்கள் செய்து தந்த பெருமை தமிழ்க் கவிஞர்களுக்கு உண்டு.

தமிழகத்துக் கவிஞர்களில் பலர், மக்களைச் சார்ந்தே நின்றவர்கள்; அதாவது மக்களுக்காகப் பாடியவர்கள். மக்களுக்காகப் பாடிய கவிஞர்கள் வரிசையில் பாரதி, தலை சிறந்து விளங்குகின்றான். பாரதி பிறவிக் கவிஞன். பாரதிக்குக் கவிதைதான் தொழில். பாரதியின் படைக்கலம் கவிதையே தான். பாரதி, அடிமை நாட்டில் பிறந்து, அடிமையாக வாழ்ந்து, அடிமையாகவே செத்தவன். ஆனால், பாரதியின் ஆன்மா சுதந்திரம் பெற்று விட்டது. அவன் ஆசைப் பட்டதைப் போல அவன் சுதந்திரமான சிட்டுக்குருவி போலத்தான் வாழ்ந்தான்; பாடினான்.

நாடு அரசியல் சுதந்திரத்தைப் பெறுவதற்கு முன்பே பாரதி, இந்த நாட்டுத் திருக்கோயில்களுக்குள் இருக்கும் உமையம்மை திருமேனிகளுக்கெல்லாம் "சுதந்திர தேவி" யென்று பெயர் சூட்டினான். பாரதி, சுதந்திர தேவியின்

உபாசகன். பாரதி, பழைமையைப் பாராட்டியவன்; புதுமையைப் போற்றியவன். சிந்தித்து வாழும் சமுதாயத்தில் பழைமைக்கும் புதுமைக்கும் சண்டை இருக்காது; வளர வேண்டிய சமுதாயத்தில் பழைமை-புதுமைக்கிடையே மோதல் இருக்கக் கூடாது. இருந்தால் வளர்கின்ற சமுதாயம் பாதிக்கப்படும். பாரதி, பழைமையை வெறுத்தவனல்ல. பழைமையைப் பாராட்டினான். ஆனால் பாரதி புதுமையைக் காணக் கூசியவனுமல்ல. நல்ல பழைமை, ஒரு புதுமையை ஈன்றெடுத்துத் தரும். அது போலவே புதுமை, பழைமையை முழுதாகப் பயன்படுத்திக் கொண்டு வளரும். பாரதி, பழைமையில் காலூன்றி நின்று பாடினான். பாரதி, விநாயகர் நான்மணி மாலை பாடும் பொழுது பக்தனாகவே திகழ்கின்றான். சோவியத் புரட்சியை வரவேற்றுப் பாடும் பொழுது புரட்சி செய்பவனாகி விடுகின்றான். பாரதி, "ஆலைகள் வைப்போம்" என்று பாடும் பொழுது தொழில் முனைவனாகத் திகழ்கின்றான்.

பாரதி, வளர்ந்த முழுமையான ஒரு கவிஞன். பாரதி, பாரத சமுதாயத்தை முழு விடுதலைப் பெற்ற சமுதாயமாகக் காண விரும்பினான். பாரதியின் கவிதை ஆவேசித்து நின்றதெல்லாம் "விடுதலை, விடுதலை" என்ற மையத்தில் தான்! பாரதி, ஒரு விடுதலைக் கவிஞன்; முழு விடுதலைக் கவிஞன்.

பாரதி, பாரத சமுதாயத்தின் வரலாற்றை உந்திச் செலுத்திய கவிஞன். பாரத சமுதாயத்தின் வரலாற்றைப் பொருளுடையதாக்கிய பெருமை, பாரதிக்கு உண்டு. பாரதி, சில்லறைச் சிந்துகள் பாடியவனல்ல. பாரதி, ஆவேசித்து நின்றது, பொழுதுபோக்கும் சீர்திருத்தமல்ல. ஓய்வு நாற்காலியின் உபதேசமுமல்ல. பாரதி, யுகாந்தரமாக வளர்ந்து வந்த அறியாமைக்கு-அடிமைத்தனத்திற்கு அதிர்வேட்டு என வந்தான். பாரதி, ஒரு யுகத்தையே அழிக்க நினைக்கின்றான். அதாவது, ஒரு யுகம் என்று சொல்லப்படுகின்ற - பல

நூற்றாண்டுகள் வளர்ந்த அடிமைத்தனத்தை-நிர்வாணமான சுயநலத்தைச் சுட்டுப் பொசுக்குகின்றான். பாரதியின் கவிதைத் தீ, கல்வியில்லாத ஊரை மட்டும் கொளுத்த வில்லை. மடமையைக் கொளுத்துகிறது. "எனக்கே உடைமை, உடைமைக்காக உடன் பிறந்த சகோதரனையும் கொல்வேன், பழகிய நட்பையும் பகையாக்குவேன்" என்று பிறக்கிறது கலியுகம். கலியுகப் பிறப்பை இங்ஙனம்தான் மகாபாரதம் கூறுகிறது. உடைமை வர்க்கம் தோன்றி, உழைப்பைச் சுரண்டும் பொய்ம்மைத்தனமான வாழ்க்கைக்கு வித்திட்டதே கலியுகம்தான். உடைமைப்பற்று, கள்ளைவிடக் கொடியது; உடைமைப் பற்று, உடன் பிறந்த சகோதரனையும் வஞ்சிக்கக் கற்றுக் கொடுக்கும்; ஊக்கத்தையெல்லாம் உறிஞ்சும். உடைமைக் குணம் நச்சுத் தன்மையுடையது. உடைமைக் குணம் தோன்றி வளர்ந்துவிட்டால், உடைமை அனுபவத்திற் குரியது; வாழ்க்கைக்குரியது; ஒப்புரவு வாழ்க்கைக்குரியது என்ற தத்துவம் போய்விடும். உடைமைகளை ஒன்று பலவாக இவறிக் கூட்டவே செய்யும். உடைமை வர்க்கம் தோன்றிய பிறகு, சமுதாய வரலாறு தடம் புரண்டுவிடும். பிறர் பங்கைத் திருடும் களவு வரும். கடவுள் முதல் கவிஞன் வரையில் உள்ள அனைவரையும் உடைமை வர்க்கம் தனது ஒலிபெருக்கி களாகவே இயங்கச் செய்யும். விநோதமாக வளமும் வளரும்; வறுமையும் வளரும்.

இத்தகைய கலியுகத்தில் பிறந்து, கலியுகத்தைக் களத்தில் சந்தித்து, கலியுகத்தோடு போராடி, கலியுகத்தைக் கொன்று கிருதயுகத்தைக் கொண்டுவரப் பிறந்தவன் கவிஞன் பாரதி. எனவே, பாரதி, ஒரு யுகப் பிரளயக் கவிஞன், பாரதி, ஒருயுக சந்திப்பாக விளங்கியவன். பாரதி, தானே தனது இலட்சியத்தை ஐயத்திற்கு இடமின்றி வைக்கின்றான். இதோ அவன் பாடல்:

"பொய்க்குங் கலியை நான்கொன்று
பூலோ கத்தார் கண்முன்னே

*மெய்க்குங் கிருத யுகத்தினையே*
*கொணர்வேன், தெய்வ விதிஇஃதே!*

(விநாயகர் நான்மணிமாலை—39)

என்று பாடுகின்றான்!

மானிட சாதியின் வரலாறு உயிர்ப்புள்ளது. உயிர்ப்புள்ள அனைத்தும் மாற்றங்களைப் பெறும். மாற்றங்களே உயிரின் இயற்கை, மாற்றங்களே மனித உலகத்தின் வரலாறு. மாற்றங்களை விரும்பாதவர்கள் பகலை விரும்பாது இருளை விரும்பி நச்சி வாழும் கூகையைப் போன்றவர்கள். கூகையைப் போன்றவர்கள் இருளை ஆவாகித்துக் கொண்டு குரல் கொடுக்கலாம்; கூச்சல் போடலாம்; ஆரவாரம் செய்யலாம். ஆனாலும் கூகை, கூகைதான்! மானுடம் வெற்றி பெறும். இதுவே பாரதியின் நம்பிக்கை.

"பழைய பயித்தியம் படீரென்று தெளியுது" என்பான் பாரதி. அறிவின் தெளிவும், ஆற்றலின் உறுதியும், ஆள்வினைத் திறனும், வளமும் ஒளியும் இல்லாத கலியுகத்தைப் "போ; போ" என்று விரட்டுகின்றான். புதிய ஒளிபடைத்த பாரதத்தைக் கிருதயுகத்தின் பொலிவு பெறும் பாரதத்தை வரவேற்கின்றான்! பாரதி. பழைமையை வேரொடும், வேரடி மண்ணொடும் கல்லி வெந்நீர் விட்டவனல்ல. இத்தகு மருத்துவச் செயல்முறை பாரதிக்கு உடன்பாடன்று. பாரதி, இன்றைய புதிய மருத்துவ இயலைப் போன்றவன். அதாவது நச்சுத் தன்மையடைந்த உடலின் குருதியை அறவே வெளியே எடுத்துவிட்டுப் புதிய குருதியைப் பாய்ச்சி மனிதனை நடமாட வைக்கும் வியத்தகு சாதனை, மருத்துவ உலகத்தில் வந்திருக்கிறது. பாரதி, இத்தகைய மருத்துவன். பாரதி, பாரத தேசத்தின் உருவத்தைச் சிதைக்கவில்லை. ஆனால், மட்கிப்போன பழைய உணர்வுகளை மாற்றிப் புதிய உணர்வுகளைப் பாய்ச்சுகின்றான். பாரதி, திருக்கோயில்களை இடிக்கவில்லை மாறாக, ஆங்குள்ள தேவி சிலைகளைச்

சுதந்திரதேவியாக மாற்றுகின்றான். சாமியார்களைப் பாரதி எதிர்க்கவில்லை உழைக்க வைத்து அவர்களின் தொப்பையைச் சுருக்குகின்றான். பாரதி, யுக சந்திப்புக் கவிஞனாக இருந்து விளைவித்த அற்புதங்கள் எண்ணற்றவை.

பாரதி, தருமமெல்லாம் தாழ்ந்து, பாவச் செயல்கள் மிகுந்து, பாதகமே மேலோங்கி நின்ற பாழ்த்த கலியுகத்தில் வாழ்ந்தான். ஆயினும் அவனைக் கலியுகக் கொடுமைகள் தொட்டு அழித்து விடவில்லை. ஏன்? அவன் வீரன்! மாவீரன்! "சுடுதலும் குளிரும் உயிர்க்கில்லை" என்ற தத்துவத்தின் உருவமாக வாழ்ந்தவன், அவன் கலியுகத்தில் நின்று, கலியுகத்தை அதன் எல்லைக்கு விரைந்து செலுத்தினான்; கிருதயுகத்தையும் விரைந்து கொணர முயன்றான்.

*"வீழ்த்தல்பெறத் தருமமெலாம், மறம் அனைத்தும்*
*கிளைத்துவர, மேலோர் தம்மைத்*
*தாழ்த்த, தமர் முன்னோங்க, நிலைபுரண்டு*
*பாதகமே ததும்பி நிற்கும்*
*பாழ்த்தகலி யுகம்சென்று மற்றோர் உகம்*
*அருகில்வரும் பான்மை தோன்றக்*
*காழ்த்தமன வீரமுடன் யுகாந்தரத்தின்*
*நிலையினிது காட்டி நின்றான்"* (பூபேந்திரர் விஜயம்)

என்று பூபேந்திரரைப் பாடிய அவனது பாடல் பாரதிக்கும் பொருந்துவதாகும்.

பாரதி, கவலைப்படுகிற பிறவியல்ல. கவலை, மானுடத்தை அழிக்கும். நூறாயிரம் கோடி படைகளாலும் அழிக்க முடியாத மானுடத்தைக் கவலை அழித்துவிடும். கவலை, ஆக்கப் புனைவுடன் வரும். ஆனால், புனைவுதான் ஆக்கம்; விளைவு அழிவு. வாழ விரும்புகிறவர்கள் இதனை அறிந்து கொள்ள வேண்டும். நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்காமல் புத்துணர்வுடன் வைத்துக் கொள்ள

வேண்டும். ஒரு சிறு துளியாகக் கவலை வந்தாலும் அதனை வரவேற்கக் கூடாது. கவலை, சென்ற கால நிகழ்வுகளை வாயிலாகக் கொண்டு வரும்; சென்ற கால நிகழ்வுகளை எண்ணி வருந்தும்படி கற்றுக் கொடுக்கும். வீழ்ந்து விடுதல் பெரிய துன்பமன்று. இழப்பையும் கூட அவ்வளவு பெரிதாகத் தந்துவிடாது. ஆனால், வீழ்ந்ததைப் பற்றி எண்ணிக் கவலைப் படுதல் வீழ்ச்சியைப் பலவாக்கும்; ஆக்கத்தின் வாயில்களைத் தூர்த்து விடும்; சோர்வே மிஞ்சும்; பிழைப்பறியா நிலையில் கணியனை நாடச் சொல்லும். அவன், தன் வாயில் வந்தபடியெல்லாம் சொல்லி வைப்பான். இந்த வாழ்க்கை விரும்பத்தக்கதன்று. இகழ்ச்சி நிறைந்த வாழ்க்கையினை, அறிவும் ஆண்மையும் உழைப்பும் இல்லாத வாழ்க்கையினை நச்சுதல் கலியுகத்து இயற்கை. ஆனால், இது வாழும் வழியன்று. இதனை பாரதி,

> "புல்லடி மைத்தொழில் பேணிப்—பண்டு
> போயின நாட்களுக்கு இனிமனம் நாணித்
> தொல்லை இகழ்ச்சிகள் தீர, —இந்தத்
> தொண்டு நிலைமையைத் தூரென்று தள்ளி"

என்று குறிப்பிடுகின்றான்.

இத்தகு கலியுகத்தைத் தூரத் தள்ளி வைத்துவிட்டு, கிருதயுகத்துக்கு நம்மை அழைத்துச் செல்கின்றான் பாரதி. கலியுகம், நம்மைச் சமுதாயத்திலிருந்து விலக்கியது; தன்னயப்பையே வளர்த்தது; "எனக்குத்தான் எல்லாம்" என்ற உணர்வையே வளர்த்தது. இதனால் எண்ணத் தொலையாத ஏற்றத் தாழ்வுகள்! எளிதில் தீர்வுகாண முடியாத மனிதச் சிக்கல்கள்! கலியுகத்தின் ஆட்சி நடப்பதற்குரிய களம் எது? "நான்", "எனது" என்ற சொற்களும், அவ்வழி தோன்றி வளரும் தனியுடைமைச் சமுதாயமும், தன்னிச்சைப் போக்கும், சமுதாயச் சார்பில்லாத வாழ்க்கையுமேயாம். இவற்றை அறிந்து மாற்றினால் கிருதயுகம் பிறந்துவிடும்.

அதனால் பாரதி, இந்தியாவைக் கிருதயுகத்தின் சின்னமாக ஒரு குடும்பமாக்கினான். கலியுகத்தில் "வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்கள் என்றால் சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்" என்று சொன்னானே பாரதி தாசன் அந்தப் பேதங்களின் பெயர்கூட இல்லாமல் சாகடிக் கின்றான்.

"எப்பதம் வாய்த்திடு மேனும்–நம்மில்
யாவர்க்கும் அந்நிலை பொதுவாகும்;
முப்பது கோடியும் வாழ்வோம், –வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்!

(வந்தே மாதரம்–5)

என்பது பாரதியின் முழக்கம்.

பாரதி, சமுதாயத்தை நச்சுத் தன்மைக்கு ஆளாக்கிய கலியுகத்தின் படைப்பாகிய தனி உடைமைக் குணத்தை மாற்றுகின்றான். முதன் முதலில் தமிழ் மக்களுக்கு - இந்திய நாட்டு மக்களுக்குப் பொதுவுடைமைத் தத்துவத்தை அறிமுகப்படுத்துகின்றான். இந்திய சமுதாயத்தை ஒரே பொது வுடைமைச் சங்கமாக அமைக்கின்றான். பாரத சமுதாயம், பொதுவுடைமைச் சமுதாயமாக உருமாற்றம் பெறுதலை,

"முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொதுவுடைமை;
ஒப்பிலாத சமுதாயம்
உலகத்துக்கொரு புதுமை"

என்றும் பாராட்டுகின்றான்.

பாரதி, பொதுவுடைமைச் சமுதாயம் அமைவதைத் தான் கிருதயுகம் என்று கூறுகின்றான். பாரதி, சோவியத் புரட்சியை வரவேற்கின்றான்; பாராட்டுகின்றான்; சோவியத் புரட்சி, மாகாளி பராசக்தியின் கடைக்கண் அருளால் நிகழ்ந்ததென்கின்றான், கலிவீழ்ந்தால் கிருதயுகம் பிறப்பது

தானே அடுத்து நிகழும்! ஆதலால், "கிருதயுகம் எழுக மாதோ!" என்கின்றான்.

கலியுகம், தனி உடைமையைப் பிரதிநிதித்துவப்படுத்து கிறது. கிருதயுகம், பொது உடைமையைப் பிரதி நிதித்துவப் படுத்துகிறது. பொதுவுடைமைச் சமுதாயம் என்பது உரிமைகள் நிறைய உடைய சமுதாய அமைப்பு. பொது வுடைமைச் சமுதாயத்தில் "எல்லாம் எல்லாருக்கும்" என்ற நியதி கால் கொள்ளும். பொதுவுடைமைச் சமுதாயத்தில், ஒருவர் எல்லாருக்காகவும் வாழ்வார்; எல்லாரும் ஒருவருக் காகவும் வாழ்வர். இத்தகு பொதுவுடைமைச் சமுதாயத்தில் ஒரு மனிதர் மற்றொரு மனிதர் நோக வாழ மாட்டார்; ஒரு மனிதர் மற்றவர் உணவை அடித்துப் பறித்துத் தின்ன மாட்டார். உரிமைகள் போற்றப்பெறும். எப்பொழுது? ஒருவர் உரிமை மற்றவர் உரிமையைப் பாதிக்காத பொழுதுதான்! இதனை பாரதி,

*"மனிதர் உணவை மனிதர் பறிக்கும்*
*வழக்கம் இனியுண்டோ?*
*மனிதர்நோக மனிதர் பார்க்கும்*
*வாழ்க்கை இனியுண்டோ?–புலனில்*
*வாழ்க்கை இனியுண்டோ?–நம்மிலந்த*
*வாழ்க்கை இனியுண்டோ?* (பாரத சமுதாயம்–1)

என்று கேட்கின்றான்.

குடிமக்கள் நலனுக்காகக் குடிமக்கள் சொன்னபடி ஆளும் ஆட்சியாக அமைய வேண்டும். குடிமக்கள் சொன்னபடி என்றால் கவனத்திற்குரியது. குடிமக்களும் குடிகள் மேன்மையுறத் தக்கன சொல்ல வேண்டும். வல்லாண்மையுடையோர் அறியாமையில் ஆழ்த்தியும், கையூட்டு வழங்கியும் அச்சமுறுத்தியும் பெரும்பான்மையைத் திரட்டி வைத்துக் கொண்டு 'குடிமக்கள் குரல்' என்று சொல்வது பொதுவுடைமையாகாது; மக்களாட்சியும் ஆகாது.

தலைகளின் எண்ணிக்கை மிகுதி மட்டும் மக்களாட்சி முறையின் அளவுகோலன்று. ஒரு சராசரிக் குடிமகனின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதே பொதுவுடைமையாகும்: குடிமை நீதியுமாகும். இதனை பாரதி,

*"குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு*
*மேன்மையுறக் குடிமை நீதி*
*கடியொன்றில் எழுந்ததுபார்; குடியரசென்(று)*
*உலகறியக் கூறி விட்டார்;*
*அடிமைக்குத் தளையில்லை; யாருமிப்போ(து)*
*அடிமையில்லை அறிக என்றார்;*
*இடிபட்ட சுவர்போலே கலிவிழுந்தான்*
*கிருதயுகம் எழுக மாதோ!* (புதிய ருஷியா–6)

என்று பாடுகின்றான்.

பாரதி, பொதுவுடைமைச் சித்தாந்தத்தை எளிதில் விளக்குகின்றான். பொதுவுடைமைச் சித்தாந்தத்தின் அடிப் படை, உழைப்பை மதிப்பது; உழைப்பாளியை மதிப்பது. பாரதி, இத்துறையில் மிக மிக வளர்ந்து விளங்குகின்றான்.

"கைவருந்தி உழைப்பவர் தெய்வம்" என்று உழைப்பாளியைப் பாராட்டுகின்றான் பாரதி. உழைக்கும் உலகம் மெருகேற, வாழ்க்கை சிறக்கும். வாழ்க்கை சிறக்க, உழைக்கும் உலகம் சிறக்க வேண்டும். கலியுகம், எல்லா வற்றையும் பொய் என்னும்; மாயை என்னும். வயிற்றைச் சுருக்குதலும், பரதேசிகள் ஆவதும் தான் வாழ்க்கையின் இலக்கணம் என்பது கலியுகத் தத்துவம். பாரதி, இந்தப் பொய்ம்மையான மாயா தத்துவத்தைச் சாடுகின்றான். புலன்கள் ஆரத் துய்க்கும் வாழ்க்கை பெருகி வளராது போனால், தொழில் வளராது. தொழில் வளராது போனால், மகிழ்ச்சி இல்லை! துன்பம்தான்! எனவே பாரதி, பொதுவுடைமைச் சமுதாயத் தோற்றத்திற்கு இன்றியமையாத தொழிற் புரட்சியைத் தமிழ் இலக்கிய உலகில் முதன் முதலாக

வரவேற்கின்றான். தொழில் திட்டங்களை வகுத்துத் தருகின்றான்.

மானுட சாதியின் நுகர்வுப் பொருள்கள் இரு அணியினரால் படைக்கப்படுகின்றன. ஓர் அணி, உழவர் அணி. பிறிதோர் அணி, தொழிலாளர் அணி. இந்த இரு அணியினரும் தனித்தனியாகவும் கூட்டாகவும் படைக்கும் பொருள்களினால்தான் உலக இயக்கம் நடைபெறுகின்றது. உழைக்கும் சக்தியால் படைப்புப் பலபடைத்துப் பாரினை உயர்த்தும் உழவுத் தொழிலையும், தொழில் திறனையும் பாரதி போற்றுகின்றான்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை - செய்வோம்" என்று பாரதி முழங்குகின்றான்; அதே போழ்து உழைக்காமல் மற்றவர் உழைப்பை உறிஞ்சிக் கொழுத்து வாழும் எத்தரை நிந்தனையும் செய்யக் கற்றுக் கொடுக்கின்றான். "வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்!" இந்த மனப்போக்குத்தான் கிருதயுகத்தின் வாயில்.

மானுட சாதியில் பிறந்த ஒவ்வொருவனும் உழைத்து, அவனவனுடைய உழைப்பிற்குரிய பங்கை அவனவன் எடுத்திக் கொண்டு வாழ அனுமதித்தால் எங்கேயும் சொத்து சேராது; குவியாது. ஆனால், வல்லாண்மையுடையோர் மற்றவர் உழைப்பிற்குரிய பங்கைத் தராமல் திருடிச் சேர்த்துக் கொள்கின்றனர். கலியுகத்தில் திருடு என்றால், ஒருவருக்குச் சொந்தமான பொருளைத் திருடுதல் என்றுதான் பொருள். ஒருவருக்குப் பொருள் சொந்தமாவது எப்படி? என்று ஆராய்ந்தறியுமாறு கலியுகம் சொல்வதில்லை. கிருதயுகம், ஒருவர் உரிமையுடையவராய் இருத்தலினாலேயே உடைமை அவர்க்குச் சொந்தம் என்று கூறாது. உரிமைக்குத் தகுதி, அரசின் சட்டங்களும், சார்புநிலை மதப் புரோகிதர்கள் வகுத்துக் கொடுத்த ஊழ்வினையும் என்பதைப் பொது

வுடைமை ஏற்காது. உழைப்பவனுக்குரிய பங்கைக் கொடுக்காமல் திருடுவதை பாரதி கண்டிக்கின்றான்.

"பிறர் பங்கைத் திருடுதல் வேண்டாம்" என்கின்றான் பாரதி. இன்னமும் மானுட சாதியில் உழைப்புக்குரிய கூலியை, உழைப்பை வாங்குவோனே நிர்ணயிக்கின்றான்; உழைப்பாளி நிர்ணயிப்பதில்லை. கூலிநிர்ணயிப்பு, உழைக்கும் சந்தையின் மலிவு அல்லது கிராக்கி அடிப்படையிலும், உழைக்கும் நேர அளவிலுமே கணக்கிடப்படுகிறது. உழைப்புக்கேற்ற கூலி கிடைக்காமல் தடை செய்வதில் வேலையில்லாத் திண்டாட்டமும் கணிசமான பங்கை வகிக்கிறது. உழைத்து உற்பத்தி செய்த பொருளின் மதிப்பீட்டு அடிப்படையில் கூலி நிர்ணயம் செய்யும் நியாயப் புத்தி இன்னமும் வந்தபாடில்லை. ஆயிரக் கணக்கான உழைப்பாளர்கள் கடுமையாக உழைத்துப் பொருள்களை உற்பத்தி செய்து குவிக்கின்றனர். ஆனால் அவர்களின் வாழ்க்கை செழிக்கவில்லை. ஏன் இந்த முரண்பாடு? உழைப்பவன் ஏழையாக இருப்பது கலியுகத்தின் அடையாளம்; இலக்கணம்; உழைப்பவன் உரிய பங்கை அடைந்து செழித்து வாழ்வது கிருதயுகத்தின் அடையாளம். இதனை பாரதி தெளிவாக்குகின்றான்.

பாரதி, கலியுகத்திலும் கிருதயுகத்திலும் ஒருசேரக் காலூன்றி நிற்கின்றான். "கலியுகத்தில் எல்லாவற்றையும் மந்திரம் செய்யும்" என்று கற்றுக் கொடுத்த மந்திரத்தை மறந்தானில்லை. ஆனாலும் மந்திரத்தை மட்டும் நம்பி மதிமோசம் போகவுமில்லை. இஃது ஓர் யுக சந்திப்பு.

*"மந்திரம் கற்போம்; வினைத் தந்திரம் கற்போம்;*
*வானையளப் போம்; கடல் மீனையளப்போம்;*
*சந்திரமண்டலத்தியல் கண்டு தெளிவோம்;*
*சந்தி தெருப் பெருக்கும் சாத்திரம் கற்போம்."*

(பாரத தேசம்– 11)

என்று பாடுகின்றான்.

கடவுளை, சாத்திரங்களை அறிந்து வாழாது போனாலும் இவைகளைப் பற்றி ஆர்ப்பரவம் செய்யும் சாத்திரங்களை, அவைகளின் உண்மைகளை அறிந்து கலியுகத்தார் ஆராயமாட்டார்கள். சமுதாயத்தை மோசம் செய்யும் ஒருவன், பொய்ச் சாத்திரங்களைக் கட்டுக்கதையாகச் சொன்னாலும் கேட்பார்கள்–கலியுகத்தில் பிரிவினைகள் தோன்றும். கோத்திரம் ஒன்றாக இருந்தாலும் பிரிந்தே விடுவார்கள். பிரிதல் மட்டுமன்று. ஒருவரோடொருவர் பகையும் கொண்டு இகழ்ந்தும் கொள்வார்கள். சூது செய்யும் நீசர்கள் போற்றப்படுவார்கள். ஒன்று பரம் பொருள் என்று துணியாது, சிவன் என்றும், விட்டுணு என்றும் சண்டை போட்டுக் கொள்வார்கள். இத்தகைய கலியுகத்தின் நடை முறையால் மக்கள் பஞ்சத்தில் வாடுகின்றனர்; குடிக்கக் கஞ்சியுமில்லை! கஞ்சிதான் இல்லை! ஏன், கஞ்சியில்லை என்று கேட்டால் சொல்லத் தெரியுமா? என்றெல்லாம் கலியுகத்தின் துன்பத்தைச் சித்திரமாக்கி பாரதி காட்டு கின்றான். ஆதலால், பாரதி இந்தக் கலியுகத்தைக் கடிந்து கிருதயுகத்தைக் கொணர முயற்சி செய்கின்றான்.

பாரதிக்குச் சாத்திரங்களில் நம்பிக்கையில்லாமற் போய் விட்டது என்று சொல்ல முடியாது.

> "...... மிகு சாத்திரங் கண்டு
> தருவதிலே உயர்நாடு!"

என்று பாடுகின்றான். ஆனாலும் இந்த நாட்டில் கலியுக தேவதையின் கொடிய படைப்புக்களாகிய சாதிகளைப் பார்க்கின்றான். அந்தச் சாதி வேற்றுமைகள் சழக்குகளாக உருவெடுத்துச் சமுதாயச் சீரழிவைத் தருவதைப் பார்க் கின்றான். இந்தப் பொல்லாத சாதிகளைச் சில பொய்ம்மைச் சாத்திரங்கள் அரண் செய்கின்றன. கடவுளை இந்தச் சாதியார்தான் பூசனை செய்யலாம்; மடத்தின் தலைவராக இந்தச் சாதியார்தான் வரலாம் என்று இப்படி எண்ணத்

தொலையாத சாதிகள்! அதுவும் கடவுள் பெயரால் கற்பித்துக் காட்டும் பொய்ம்மைச் சாத்திரங்களை பாரதி சாடுகின்றான்.

"சாத்திரமின்றேல் சாதியில்லை" என்கின்றான். பொய்ம்மையான சாத்திரம் நாட்டில் புக அனுமதித்தால் மக்கள் புழுவென மடிவர் என்று எச்சரிக்கை செய்கின்றான். சாதிப்பாகுபாட்டில் உயர் இடத்தைப் பெற்றவர்கள் சாத்திரத்தை வகுக்கும் உரிமை பெற்றனர். ஆனால், ஐயகோ! அவர்கள் நெறிபிறழ்ந்துத் தாழ்வான சாத்திரங்களை – பொய்ம்மையைச் செய்து தந்தனர். அதனால், பாழ்த்த கலியுகம் மூண்டது என்பான் பாரதி.

கலியுகத்தின் மிகப் பெரிய கொடுமை பெண்ணை அடிமைப்படுத்துதல். கலியுகத்தில் சிலர் ஈசனின் திரு வுள்ளத்திற்கு எதிராகவே செயல்பட்டனர் என்கின்றான் பாரதி. ஆம்! புவி பேணி வளர்த்திடும் ஈசன், பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான். ஆனால் இந்த மூடர்கள் மாதரறிவைக் கெடுத்தார்கள். எனவே பாரதி, கிருத யுகத்தைப் படைக்கும் வழியில் பெண்களுக்கு விடுதலை கேட்கின்றான். பெண்களறிவை வளர்க்கச் சொல்கின்றான்.

**"கண்கள் இரண்டில் ஒன்றைக்–குத்தி**
**காட்சி கெடுத்திட லாமோ?**
**பெண்க ளறிவை வளர்த்தால்–வையம்**
**பேதைமை யற்றிடுங் காணீர்"** (முரசு–10)

என்று பாடுகின்றான்.

அது மட்டுமா? கலியுகம் சொத்தில் மட்டும் தற்சார் புடையதல்ல. எல்லாவற்றிலும் ஆடவர் கொலை பாதகமான ஆதிக்கம் புரிந்தனர். நிலத்திற்கு வேலி போட்டனர்; பெண்ணுக்குக் கற்பென்று கூறி வீட்டில் பூட்டிப் போட்டனர். ஆம்! கலியுகப் பெண், கணவன் பரத்தை வீட்டுக்குப் போகத் துணை போவாள். ஏன்? தூக்கிச் சுமந்து கொண்டு போய்க்

கூட விடுவாள்! இது கலியுகப் பெண்ணின் பத்தினித் தன்மை. ஒருபால் கோடிய அநியாயம் இதினினும் வேறுண்டோ? ஆனால், கிருதயுகத்துப் பெண், கற்புக்குப் புது இலக்கணம் வகுக்கின்றாள். இல்லை; அவள் ஆடவனுக்கும் கற்பு கூறுகின்றாள். இதோ, கிருதயுகப் பெண் என்ன கூறுகிறாள்? கேளுங்கள்!

> "கற்புநிலை யென்று சொல்ல வந்தார்–இரு
> கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்!

(பெண்கள் விடுதலைக் கும்மி–5)

இது மட்டுமா, பெண்ணின் விடுதலை? இல்லை, இல்லை! மாட்டைப் பூட்டிக் கொடுத்தல்போலப் பெண்ணைக் கட்டிக் கொடுத்தல் என்பது கலியுக வழக்கு. இந்த மூடப் பழக்கத்தை பாரதியின் கிருதயுகப் பெண் மறுக்கின்றாள். பெண், தான் விரும்பியவனை மணக்க உரிமையுடையவள். காதல் ஒருவனைக் கைப்பிடிக்க அவளுக்கு உரிமை உண்டு.

> "வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
> வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்"

என்று பாரதியின் கிருதயுகப் பெண் முழக்கம் செய்கின்றாள். கிருத யுகத்துப் பெண் அடங்கிக் கிடந்த ஆற்றலென வெளிக் கிளம்புகின்றாள். இன்று பட்டங்கள் ஆள்கின்றாள்; சட்டங்கள் செய்கின்றாள். ஆணுக்குப் பெண் இளைப் பில்லை என்று, பாரதியின் கிருதயுகப் பெண் ஆர்ப்பரிக் கின்றாள்.

பாரதி, கலியுகத்தை–கலியைக் கொல்ல நினைக் கின்றான்; கிருதயுகத்தைப் படைக்கவும் நினைக்கின்றான். ஆயினும், பொதுவுடைமைச் சமுதாயத் தத்துவத்தைக் கண்ட மார்க்சினிடமிருந்து பாரதி மாறுபடுகின்றான். கலியுக கொடுமைகளுக்குக் கடவுள் காரணமல்ல என்று கருது

கின்றான். கடவுள் ஒரு தத்துவம்; மூலப் பொருள்; உண்மை. ஆதலால் பாரதி, கலியுகத்தைக் கொன்று கிருதயுகத்தைப் படைக்கும் பணி முன்னோன் அருளைத் துணையாகக் கொண்டே நிகழும் என்று கூறுகின்றான்.

*"மொய்க்கும் கவலைப் பகைபோக்கி*
*முன்னோன் அருளைத் துணையாக்கி*
*எய்க்கும் நெஞ்சை வலியுறுத்தி*
*உடலை இரும்புக் கிணையாக்கி*
*பொய்க்குங் கலியை நான்கொன்று*
*பூலோ கத்தார் கண்முன்னே*
*மெய்க்குங் கிருத யுகத்தினையே*
*கொணர்வேன் தெய்வ விதி இஃதே!"*

(விநாயகர் நான்மணிமாலை—39)

என்று பாடுகின்றான். இதனையே, வேறோரிடத்தில்

*"ஒன்று பரம் பொருள்; நாம் அதன் மக்கள்*
*உலகின்பக் கேணி"*

என்றும் பாடுவான். ஆதலால் யுகத்தின் விளைவுகள் மனிதர்களின் ஆசாபாசங்களால் விளைவதே தவிர, அதற்கும் கடவுளுக்கும் சம்பந்தமில்லை. முன்னவன் துணை கொண்டு கிருதயுகம் அமைப்போம் என்னும் பாரதியின் நெறி வெல்க!

பாரதி, இந்தச் சமுதாயத்தை ஆழ நினைந்து பாடியவன். பாரதி தீமைகளின் வேர் ஓடியுள்ள மட்டும் கண்டுபிடித்து வேரொடும் மண்ணொடும் கல்லி எறிய முயற்சி செய்தவன். சமுதாய மாற்றங்கள் எளிதில் நிகழா சமுதாய மாற்றங்களுக்கு அடிப்படையில் நிகழ வேண்டியது அறிவுப் புரட்சி. அறிவு, சமுதாயத்திற்கு வழங்கப்பெறாத வரையில் சமுதாயம் இருட்டறையில்தான் கிடக்கும். எடுத்துத் தூக்கினாலும் எளிதில் தேறாது. ஆதலால் பாரதி, அறிவுப் புரட்சிக்கு வித்தான கல்வியை வழங்குவதில் கவலை

கொண்டான். இந்திய நாட்டுக்குக் கல்வியில் பஞ்சமா? இந்திய நாட்டு மக்கள் ஆண்டுதோறும் மறக்காமல் கலை மகளுக்குப் பூசை போடுவார்கள். அப்பம், அவல், பொரி- இவற்றுக்குப் பஞ்சமில்லை. இவற்றைக் கலைமகள் முன்னால் படைத்து வயிறு புடைக்கத் தின்பார்கள். பிறிதொன்றையும் மறந்து விடாதீர்கள்! ஏடுகளை வரிசையாக அடுக்கி மந்திரங் களை முணுமுணுத்து வணங்குவர். ஆனால், ஏடுகளைப் பிரித்துப் பார்ப்பதுமில்லை; படிப்பதுமில்லை. இவை கலைமகள் பூசைக்குரிய நெறியல்ல என்று பாரதி எடுத்துக் கூறுகின்றான். ஏன், பாரதி நல்லறங்கள் பலவற்றைப் பட்டியல் போடுகின்றான். நிழல் தரும் கனிச் சோலைகள் அமைத்தல், சுவைமிக்க தண்ணீர் தரும் ஊற்றுக்கள் அமைத்தல், பசித்தவர்க்குச் சோறிடும் அன்ன சத்திரங்கள் அமைத்தல், ஆலயங்கள் கட்டுதல்-இவையெல்லாம் அறங்கள்! ஆனால், இந்த அறங்களைவிடச் சிறந்த அறம் ஒன்று உண்டு. அஃது ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தலாகும். அது பேரறம் என்று சொல்கின்றான்.

"இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்;
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்;
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்;
ஆலயம்பதி னாயிரம் நாட்டல்;
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்;
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறி வித்தல்.

(வெள்ளைத் தாமரை—9)

என்று பாடுகின்றான்.

கல்வியை மக்கள் தேடிச் சென்று பயிலும் நிலையில் விடாமல் அவர்களுக்கு எளிதில் கல்வி கிடைக்க வேண்டும். அதுவும் அச்சடித்ததைப் போல ஒரே பள்ளியாக- ஒன்றையே

கற்கும் பள்ளியாக இருத்தல் கூடாது. பல மொழிகளை, பல தொழில்களை, பல கலைகளை எளிதில் கற்கத் தக்கவாறு பலப்பல பள்ளிகள் அமையவேண்டும் என்று பாரதி ஆசைப் படுகின்றான். கல்வி மட்டும் வாழ்க்கையை வளர்த்து விடாது. வாழ்க்கை பொருளுடையதாக, சுவையுடையதாக, மகிழ்வு நிறைந்ததாக அமைந்து விளங்கவேண்டும். வாழ்க்கையில் வறட்சித் தன்மையை விரட்டியடிக்க வேண்டும். இத்தகு புத்துணர்வுடைய வாழ்க்கையை அமைத்துத் தருதல் கலைக்கே உண்டு.

வீடுகள் துக்கத்தின் களமாக இருக்கக் கூடாது. இன்று பல வீடுகள் மகிழ்ச்சி தருவனவாய் இன்மையின் காரணமாக உணர்வையும், ஒழுக்கத்தையும் கெடுக்கும் வெளிப்புறச் சூழல்களுக்கு வீட்டிலுள்ளோர் மனம் தாவுகிறது. அங்ஙன மின்றி வீடுகள் கலையின் விளக்கத்துடன் அமையுமாயின் அவை சிறப்புறும். வீட்டிலுள்ளோர் வாழ்க்கையும் சிறப்புறும். இதனை நன்குணர்ந்த பாரதி, “வீடுதோறும் கலையின் விளக்கம்” வேண்டுமென்று பாடுகின்றான்.

பாரதிக்கு, வாழ்க்கையைச் சுவைத்து மகிழ்ந்து வாழத் தெரியும். அங்ஙனம் எல்லாரும் வாழ வேண்டுமென்று விரும்புகின்றான். பாரதி, குடும்பத் தலைவனாக எப்படி வாழ வேண்டும் என்றும் கற்பனை செய்கின்றான். காணி நிலம் வேண்டும். அந்தக் காணி நிலத்தின் நடுவே அழகுற அமைந்த மாளிகை வேண்டும். வீட்டுக்கும் நிலத்துக்கும் தண்ணீர் தரும் கிணறு வேண்டும். அக் கிணற்றோரத்தில் பத்துப் பன்னிரண்டு தென்னை மரங்கள் வேண்டும். அத் தென்னை மரங்கள் இளநீர்க் குலைகளோடு விளங்குதல் வேண்டும். உடலுக்குக் குளிர்ச்சி தந்து, உயிருக்கும் இதம் தரும் தென்றற்காற்று வீச வேண்டும். மாளிகை முற்றத்தில் முழு நிலாப் பொழிவு வந்து சேர வேண்டும். குயில் மெல்லிசை இசைக்க வேண்டும். பாட்டுக் கலந்திட ஒரு பத்தினிப் பெண் வேண்டும். கூடிக் கலந்து மகிழ்ந்திடும் பொழுது கவிதை

கொழிக்க வேண்டும். இந்த மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையில் இடையீடின்றித் திளைத்திருக்கக் காவலும் வேண்டும். இது பாரதி விரும்பிய வாழ்க்கை. "வீடு தோறும் கலையின் விளக்கம்" என்று பாடியதற்கு இது விரிவுரை. மீண்டும் பாரதியின் பாடலைக் கேளுங்கள்!

"வீடு தோறும் கலையின் விளக்கம்;
வீதிதோறும் இரண்டொரு பள்ளி;
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி
தேடு கல்வியி லாததொ ரூரைத்
தீயினுக் கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்!"

(வெள்ளைத் தாமரை–6)

பாரதி, இங்ஙனம் வாழ்தலே வாழ்க்கையென்று எண்ணுகின்றான். இத்தகு மகிழ்ச்சி நிறைந்த சிந்தனையிலும் பாரதிக்குக் கோபம் வராமல் இல்லை. சிறந்த கல்வியைத் தராத ஊர் இருக்குமானால் அந்த ஊரைத் தீக்கொளுத்தி விட வேண்டும் என்று பாடுகின்றான். கல்வி இல்லாத மக்களை வைத்திருக்கும் ஊர் கேடு தரும். அதனால் அந்த ஊரைத் தீக்கொளுத்தி விடுதலே கேடு தவிர்க்கும் என்கின்றான். பாரதி, கல்வியின் கலையின் இன்றியமை யாமையை வலியுறுத்தும் பாங்கை அறிந்து, இத்தகைய சமுதாயம் அமைய நாம் அனைவரும் முயலவேண்டும்.

பாரதி, எல்லாருக்கும் கல்வி கிடைக்காத கலியுகத்தில் பிறந்தான். அதுவும் பாரதி வாழ்ந்த கலியுகத்தில் ஏழைக்குக் கல்வி கிடைக்கவில்லை என்பதை "ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்பதன் மூலம் விளக்கினான். எல்லாருக்கும் கல்வி கிடைக்கும் யுகமே கிருதயுகம் என்கின்றான். நம் நாடு விடுதலை பெற்ற பிறகு பாரதியின் ஆணையை மேற்

கொண்டு எல்லாருக்கும் கல்வி கொடுப்பதை நாட்டுக் குடியரசு, கடமையாகக் கொண்டது. எழுதப் படிக்கத் தெரியாதவர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்து கொண்டு வருகிறது. ஏன்? கலியுகத்தில் பிறந்து கற்கும் வாய்ப்பை இழந்தவர்களுக்குக் கூட முதியோர் கல்வி வகுப்புக்களைத் தொடங்கி இன்று கல்வியை வழங்கி வருகிறது மக்களாட்சி. இன்று பாரதியே இந்த மண்ணுக்கு வந்தாலும் அவன் கல்வியில்லாத ஊரைத் தேடிப் பார்த்தாலும் காண முடியாது. இந்த வகையில் பாரதியின் ஆணை நிறைவேற்றப் பெற்றிருப்பது ஒரு வரலாற்றுச் சாதனை. ஆனால், பாரதி நினைத்ததைப் போலப் பல வகைக் கல்வி தரும் பல வகைப் பள்ளிகள் தோன்றவில்லை. நாள் முழுதும் ஒரே வகுப்பறையில் வளரும் தலைமுறை அடைக்கப்பட வேண்டுமா? காலையில் எண் எழுத்தோடு கூடிய படிப்பு, மாலையில் தொழிற் படிப்பு, பின்மாலையில் கலைப் படிப்பு என்றெல்லாம் படிக்கும் வாய்ப்புகள் இந்த நாட்டு இளைஞர்களுக்குக் கிடைக்க வேண்டும். இத்துறையில் நம் அரசுகளின் கவனம் செல்வது நல்லது. எனவே, பாரதி ஒரு யுகச் சந்திப்புக் கவிஞனாகிறான்.

பாரதி, கல்வியில் ஆர்வம் காட்டினாலும், பலப்பல கற்க வேண்டுமென்று எடுத்துக் கூறினாலும் வீட்டு மொழியும் நாட்டு மொழியும் கற்காமல் வேறு வேறு மொழிகளைக் கற்பதை பாரதி விரும்பவில்லை. விரும்பாதது மட்டுமன்று; வெறுக்கிறான். வீட்டு மொழியாகிய தமிழ் வளர வேண்டும் என்று ஆசைப்படுகின்றான். அவனறிந்த மொழிகளிலே தமிழ்தான் இனிமையானது என்று போற்றி மகிழ்கின்றான். அவன் அறிந்த உலகக் கவிஞர்களிலே கம்பனையும் வள்ளுவனையும் இளங்கோவையும் போல் பூமியில் எங்கேயும் பிறக்கவில்லையென்று கூறிப் பெருமைப் படுகின்றான். ஏன், மேற்கே வளர்கின்ற புத்தம் புதிய கலைகளெல்லாம் தமிழில் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் என்று விரும்புகின்றான்.

இவை தமிழில் வராது என்று யாரோ ஒருவன் சொல்லுகிறான். இச்சொல் அவச்சொல் என்று பாரதி நினைக்கின்றான்; ஆற்றொணாத் துயருறுகின்றான்; அந்த அவச்சொல் நீங்க,

*"சென்றிடுவீர் எட்டுத் திக்கும்–கலைச்*
*செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்!"*

என்று தமிழ் மக்களுக்கு அழைப்பு விடுகின்றான்.

பாரதி, தமிழில் ஒன்றுமில்லை; ஆங்கிலத்தில்தான் எல்லாம் இருக்கிறது என்று சொல்கிற அடிமைப் புத்தி நிறைந்த கலியுகத்தில் பிறந்தான்; வாழ்ந்தான்; வளர்ந்தான். அவன் கலியுகத்தில் தமிழ்த் தாய்க்கு இழைத்த கொடுமையை மாற்ற நினைக்கின்றான். தமிழ்த்தாய் அனைத்துத் துறையிலும் வளர்ந்து பொலிவுற அமையுமாறு தமிழ் மக்களைத் தூண்டு கின்றான். இத்துறையில் தமிழக மக்கள் முழுமையாகக் கலியுகத்தை மாய்த்துவிடவில்லை. இன்னமும் தமிழ், அறிவியல், தொழிலியல் மொழியாக வளர்ச்சியடைய வில்லை. தமிழக இளைஞர்கள் இவ்வகையில் போதிய முயற்சி களை மேற்கொள்ள வேண்டும். பாரதி, எண்ணிக்கையில் பல நூல்களைக் கற்க வேண்டும் என்று விரும்பவில்லை. நூல்கள் காடுகள்போல் மண்டலாம். பயனற்ற நூல்களைப் படிப்பதில் என்ன பயன்? மெய்ம்மை விரித்துரைக்கும் நல்ல நூல் ஒன்றைத் தேடிக் கற்க வேண்டும். அந்நூலுக்கு இசைந்தாற் போல் வாழவேண்டும். எந்தக் கருத்தோடும் யாரும் மாறுபட முடியும். மாறுபாடு கொள்ளுதலுக்கு எளிதில் இடம் கிடைக்கும். மாறுபாட்டினைக் கொண்டு வாதங்களை நீட்டிப்பது வாழ்க்கை நெறிக்கு உகந்ததன்று. கலியுகத்தில், படித்தவர்கள் அதிகம். ஏதோ ஒரு வகையில் பெரியவர்கள் என்று நம்மால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களும்கூட அற்பச் செய்திகளின் காரணமாகக் கூட மாறுபட்டுப் போட்டிகளை வளர்த்திருக்கின்றனர். வாதப் பிரதிவாதங்களை வளர்த்திருக்

கின்றனர். ஏன் பகையைக்கூட வளர்த்து அழிவு செய்திருக் கின்றனர். பாரதி, இந்தக் கலியுகத்தை விரும்பவில்லை. ஒத்துப்போகக் கூடிய செய்திகளிலெல்லாம் ஒத்துப்போக வேண்டும் என்று கருதுகின்றான். ஒத்துப் போதல் என்பது முதற்கொள்கை. அக்கொள்கை வந்த பிறகுதான் பல செய்திகளில் ஒத்துப் போக இயலும். எப்படியும் ஒத்துப் போதல் என்பது கிருத யுகத்தின் குணம். இதனை பாரதி,

"வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ
வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ போ
நூறு நூல்கள் போற்றுவாய்; மெய் கூறும்
நூலில் ஒத்தியல்கிலாய் போ போ போ
மாறுபட்ட வாதமே ஐந்நூறு
வாயில் நீள ஓதுவாய் போ போ போ!"

(போகின்ற பாரதமும்—வருகின்ற பாரதமும்—3)

என்று பாடுகின்றான்.

மேலும் கலியுகத்தில் வேதம் எது? என்று துணிய முடியாத குழப்பம். பலர் தாம் விரும்பிய நூல்களை யெல்லாம் வேதம் என்று சொல்லத் தொடங்கினர். வேதம் என்பதிலும், இந்தச் சமுதாய அளவில் வேதம் எது என்ற கொள்கையிலும், வேதம் சொல்லும் கொள்கையிலும் நிறைய மாறுபாடுகள் தோன்றின. பொதுவாகப் பழைமை எனப் போற்றப் பெற்ற வேதங்கள் மனிதகுலத்தின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் மேம்பாட்டுக்கும் இசைந்ததாக இல்லையென்று பாரதி நினைக்கின்றான் போல் தெரிகிறது. அதனால் "வேதம் புதுமை செய்" என்று கூறுகின்றான். பாரதி, எது வேதம்? என்ற சர்ச்சையில் இறங்கத் தயாராக இல்லை. பாரதி உண்மையை ஆராதிப்பவன். பாரதிக்குப் பொய்ம்மை கட்டோடு பிடிக்காது. பொய்ம்மையை விரித்துரைக்கும் நூல்களை எற்றி எறியச் சொல்கின்றான். பாரதி, வளர்ந்த-தகுதி மிகுதியும் பெற்ற, தெளிவும்

துணிவுமுடைய நெஞ்சினரை விரும்புகின்றான். ஆனால், கலியுகம் அப்படியில்லை. மெய்ம்மைக் குணம் இல்லாத வராய், பேதங்கள் பல கற்பித்து எளிதிற் பகை வளர்த்து நாட்டைப் பாழடித்துக் கொண்டிருந்தனர். உள்ளத்திலும் சமூகத்திலும் பரவிக்கிடந்த நோய்களுக்கேற்ப உடலிலும் நோய், உடல் நோயின் காரணமாகத் துன்புற்றனர். கல்லைத் தின்று செரிக்க வேண்டிய காலத்தில்கூட எதைச் சாப்பிடலாம்? இதைச் சாப்பிடலாமா? வேண்டாமா? என்றெல்லாம் ஆய்வு செய்யக்கூடிய பரிதாப நிலைக்கு ஆளாயினர், காற்றோடு கலந்து விண்ணேறிச் சாடும் திறன்வேண்டியவர்கள் காற்றைக் கண்டாலே காத தூரத்தில் ஓடி ஒதுங்கி வாழும் நிலையினராயினர். இது பாரதிக்கு கட்டோடு பிடிக்கவில்லை. கலியுகத்தின் பழைய பாரதத்தைப் 'போ, போ" என்று வெறுத்து ஒதுக்கித் தள்ளு கின்றான். அதே போல், கிருதயுகத்தின் புதிய பாரதத்தைக் கட்டியம் கூறி வரவேற்கின்றான். பாரதி, புதிய பாரதத்தை வரவேற்கும் பாடல் இதோ!

*"மெய்ம்மை கொண்ட நூலையே அன்போடு*
*வேத மென்று போற்றுவாய் வாவாவா*
*பொய்ம்மை கூற லஞ்சுவாய் வாவாவா*
*பொய்ம்மை நூல்க ளெற்றுவாய் வாவாவா*
*நோய்ம்மை யற்ற சிந்தையாய் வாவாவா*
*நோய்க ளற்ற உடலினாய் வாவாவா*
*தெய்வ சாபம் நீங்கவே நங்கள் சீர்த்*
*தேசமீது தோன்றுவாய் வாவாவா!*

(போகின்ற பாரதமும்—வருகின்ற பாரதமும்—6)

கலியுகத்தில் மிகமிக மோசமான அழுகும் மலத்தில் கிடந்து நெளியும் புழுக்களைப்போல மக்கள் வாழ்கின்றனர். அவர்களை நாள்தோறும் தின்று அழிக்கும் துன்பம் ஒன்றல்ல, இரண்டல்ல. வஞ்சகரும் சூதரும் வாழ்க்கையைச் சூறை

யாடுகின்றனர். இவ்வளவுக்கும் ஆளான பிறரும் கூட அவர் களுக்குக் கோபம் வருவதில்லை. "எல்லாம் கொடுத்து வைத்தது"; "காலம் வந்தால் சரியாய்ப் போய் விடும்" என் றெல்லாம் சமாதானம் சொல்லிக் கொண்டே அழிந்தார்கள். நாட்டில் நல்ல சுகாதார வசதிகள் இன்மையால் பெருநோய் வந்தாலும் நாட்டின் அரசைத் தட்டிக் கேட்க மக்களுக்குத் துணிவு வரவில்லை. அரசைக் கண்டு பயந்தனர். அரசைக் கண்டு பயப்படுவதை பாரதி நையாண்டி செய்கின்றான்; கேலி செய்கின்றான். குடிமக்கள் கொடுக்கும் வரியை வைத்து நாட்டைக் காக்கும் வேலையைச் செய்யும் அரசைக் கண்டு பயப்படுவானேன்? என்று கேட்கிறான். அது மட்டுமா? கலியுகத்து மக்கள் அச்சமே கொள்கையாக வாழ்வதைக் கண்டு பொருமுகின்றான். எதைக் கண்டு அஞ்சுவது என்று ஒரு வரையறை இல்லை என்ற கருத்தில் இவர் கண்டு அஞ்சாத பொருள் எதுவுமில்லை என்று எடுத்துக் காட்டு கின்றான். கொடுமையைக் கண்டு கோபம் கொள்ளாது போனால் வாழ்க்கையில் உயிர்ப்பில்லை என்பது பொருள். சின்னத்தனங்களைக் கண்டு சீறாது போனால் வாழ்க்கையில் கொடுமையே மிஞ்சும். அதனால் பாரதி, இந்த நாட்டுக் குழந்தைகளை கிருதயுகத்திற்குத் தயார் செய்ய எண்ணி 'புதிய ஆத்திசூடி' செய்கின்றான். பழைய ஆத்திசூடி கலியுகத்தில் பிறந்தது. ஔவையார் அருளிச் செய்தது என்பர். நமது நாட்டில் ஔவையார் என்ற பெயரில் வாழ்ந்தவர் பலர். அவர்களுள் எந்த ஔவையார் 'ஆத்திசூடி' செய்தார் என்பது துணிய முடியாத கருத்து. அந்த ஆத்திசூடி கல்லும் மண்ணும் கலந்த அரிசி போன்றது. அதாவது சில நல்லவைகளும் உண்டு. ஆனாலும் ஏற்கெனவே எய்த்துக் களைத்துப் போய், ஊர்வதை ஓட்டம் என்று கருதிக் கொண்டிருந்த சமுதாயம் அது. ஔவையாரின் ஆத்திசூடி ஊர்வதைக் கூடத் தடுத்துப் படுக்க வைத்துவிடும் தன்மையதாக இருந்தது. அதனால் கிருதயுகத்தைப் படைக்க நினைத்த பாரதி, கிருதயுகத்தைப்

படைக்கும் சக்திகளாகத் தாம் வளர்க்கும் பாரதக் குழந்தைகளைப் பயிற்றுவிக்க புதிய ஆத்திசூடி செய்கின்றான். இந்தக் கலியுக சமுதாயத்தில் மரத்துப்போன குழந்தைகளைப் பார்த்து "ரௌத்திரம் பழகு" என்று கோபத்தைக் கற்றுக் கொள்ளும்படி சொல்கின்றான். சமூகத்தின் தீயசக்திகளாக விளங்கும் தீயமனிதர்களைப் பார்த்துச் "சீறுக" என்கின்றான். "சீறுவோர்ச் சீறு" என்பது பாரதியின் வாக்கு. இதையே விரித்து பாப்பாப் பாட்டிலும் பாடுகின்றான். கலியுகத்தின் ஔவைப் பாட்டி தீயோரைக் கண்டால் விலகு என்றாள். தீயோரைக் கண்டு விலகினால் தீமை போய் விடுமா? தீயோர்க்கு உரிய தண்டனை தராமல் தப்பிக்கச் செய்துவிட்டால் தீயோர் எண்ணிக்கை ஒன்று, இரண்டு என்று கூடிப்போனால் என்ன செய்வது? தீயவர் எண்ணிக்கை கூடிப்போன பிறகு, எங்கு ஒதுங்குவது? அது மட்டுமா? தீயவர்கள் ஒதுங்கிப் போவதை நாகரிகம் என்று கருத மாட்டார்களே! அதனால் பாரதி தீமையை எதிர்த்து நிற்கத் தூண்டிப் பழக்குகின்றான். "பாதகம் செய்பவரைப் பார்த்தால் விட்டு விடாதே பாப்பா! தாவிப் பிடி! பிடித்து மோது! மோதி மிதி! மிதித்ததோடு மட்டுமின்றி அவர் முகத்தில் காறி உமிழ்ந்துவிடு" என்று பாப்பாவுக்குப் பயிற்சி தருகின்றான் பாரதி.

"பாதகம் செய்பவரைக் கண்டால்—நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா!—அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா! (பாப்பாப் பாட்டு—8)

கலியுகம் என்பது உழைக்காமல் உண்ணும் வாழ்க்கையைச் சிறப்புடையது என்று கருதுவது. கலியுக ஆவணங்களில் உழைக்காமல் உண்ணும் வசதி வாய்ப்புப் பெற்றவர்களின் தொழிலைக் குறிக்கும் பொழுது "சுக ஜீவனம்" என்று எழுதுவது மரபாக இருந்தது. அது

மட்டுமன்று. கூடி வாழ்தல், கூடித் தொழில் செய்தல் ஆகியன அடியோடு வெறுக்கப்பட்ட காலம். கூடித்தொழில் செய்தால் தனது தொழில்நுட்பம் பலருக்குத் தெரிந்து விடுமே என்ற பயம். பலர், தொழில் தெரிந்தவராக வந்துவிட்டால் தனக்குரிய பெருமை போய்விடுமே என்ற அச்சம். அதைப் போலவே செய்யத் தெரியாதவராக இருந்தால் தன் தெரியாமை வெளியில் தெரிந்து விடுமே என்ற அச்சம். இன்னபிற எண்ணங்களால் கூடித் தொழில் செய்யாமல் ஒவ்வொருவராக வாழ்ந்ததால் ஒவ்வொருவரும் ஒரே வேலையைத் திரும்பத் திரும்பச் செய்து பயனற்றுப் போயினர். இதனைக் கண்ட பாரதி, கிருதயுகத்தில் இங்ஙனம் வாழக்கூடாது என்று முடிவெடுக்கிறான். வாய்ப்புகளுக்கு ஏற்றவாறு வேலைப் பங்கீடுகள் தேவை. கூடித் தொழில் செய்யவேண்டும். கூடித் தொழில் செய்தால்தான் கோடி சேர்க்கலாம்; மனிதனின் அறிவும் ஆற்றலும் விரிவடையும்; வீணே செலவழிக்காமலும் எஞ்சும். ஆதலால் கிருதயுகத்தின் இயல்பு கூடித் தொழில் செய்தலே. இத்துறையில் பாரதம் பாரதி வழியில் வளர்ந்து வருவது பாராட்டுதலுக்குரியது.

பாரத நாட்டில் நாட்டு மக்கள் கூடித் தொழில் செய்யும் பொதுத்துறையும் கூட்டுறவுத் துறையும் வளர்ந்து வருகின்றன. ஆனால், பல ஜென்மங்களாகத் தனித்துத் தனித்துத் தனிவுடைமை பேணி வாழ்ந்த சமுதாயத்தில் பொதுமைக் குணம் போதிய அளவு வளரவில்லை. தனியார் துறையில் நடைபெறும் தொழிலில் இருக்கிற நிர்வாகக் கட்டுக்கோப்பும், ஈட்டும் இலாபமும் பொதுத் துறைக்கு-கூட்டுறவுத் துறையில் போதிய அளவு இல்லை. இதற்குக் காரணம் பொதுமையுணர்வு செழிப்பாக வளராதுதான். ஆயினும் பொதுமைத் திசையில் நாடு திரும்பி விட்டது. மெல்ல வளரும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

பாரதி, ஆசிரியனாக இருந்தும் குழந்தைகளைப் பயிற்றுவிக்கிறான். அதேபொழுது வேடிக்கை, விளையாட்டுப்

போக்கிலும் கூட குழந்தைகளின் சிந்தனைகளை வளர்க்க புதிய கோணங்கியாக நின்று பாடுகின்றான். கலியுகத்தின் கொடுமைகளைப் பார்த்து, திகைத்து நிற்கும் குழந்தைகளைப் பார்த்து பலன் சொல்பவன் போல கிருதயுகத்துக் குணங்களைச் சொல்லுகிறான்; கிருதயுகத்துச் செயல்களைச் சொல்லுகிறான். பாரதி, கலியுகத்தில் தோன்றி வளர்ந்த ஜாதிகள் எல்லாம் ஒரு குலமாகச் சேருது; சாதிச் சண்டைகள் போகுது என்று சொல்லுகிறான். கலியுகத்தின் பரிசாக இருந்த தரித்திரம் போகுது; கிருதயுகத்தின் கொடையாகச் செல்வம் பெருகுது என்கிறான். செய்யத் தக்கனவும் தகாதனவும் அறிந்து, பாவங்களைச் செய்யாது தவிர்க்க உதவும் படிப்பு வளருது என்கிறான். இதனைக் கேட்டவர்கள் படித்தவர்கள் சூது பண்ணுகிறானே என்று கேட்கின்றனர். படித்தவன் தானே சாமர்த்தியமாகச் சூது செய்கின்றான். ஆம்! இந்த நாடு இவ்வளவு இழி நிலைக்கு வந்ததற்குக் காரணம் படித்தவர்கள் என்ற பெயரில் அரைகுறைகள் செய்த சூதுகள் தான் காரணம். இல்லையானால் உழைப்பவருக்கு ஒரு நீதி. தண்டச் சோறுண்பவருக்கு ஒரு நீதி என்றெல்லாம் இருக்குமா? இங்ஙனம் சொல்லும் நீதி சாத்திரங்களைச் சாத்திரமன்று என்று மறுத்து சதியென்று கூறுகின்றான். ஆதலால் படித்தவனாக நடித்துக் காட்டி நம்பிக்கையை உண்டாக்கிக் கொண்டு சூது பண்ணினால் ஐயோ என்று போவான் என்று பாரதி கடுமையாகவே சொல்கிறான்.

"படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால் ஐயோ என்று போவான். போவான்!"

என்று ஆத்திரமடங்கக் கூறுகிறான்.

ஆக, கிருதயுகத்தில் படித்தவர்கள் நல்லவர்களாக இருப்பார்கள். சமூகத்திற்குத் தீமை செய்ய மாட்டார்கள்; எந்தக் காரணத்தை முன்னிட்டும் சமூகத்தில் பிரிவினை களை, பேதங்களை உண்டாக்க மாட்டார்கள். சமூகத்தின்

வாழ்க்கையை மூடத்தனத்தால் கெடுக்காமல் வளர்ப்பர்; வாழ்க்கை வாழ்வதற்கே என்ற நம்பிக்கையைக் கொடுப்பர்; ஒவ்வொருவரும் அவர்கள் வாழ்க்கையை எப்படிப் பெரிதென நினைக்கிறார்களோ அதைவிட ஒரு மடங்கு கூடவே மற்றவர் நலனைப் பெரிதாகப் போற்றுவர். இதுவே பாரதியின் கிருதயுக இலட்சியம்.

*"சாதிகள் சேருது; சண்டைகள் தொலையுது*

*..................................................................*

*தரித்திரம் போகுது; செல்வம் வருது;*
*படிப்பு வளருது; பாவம் தொலையுது;*
*படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால்*
*போவான், போவான் ஐயோவென்று போவான்"*

பாரதி வேதம், சாத்திரம், சூத்திரம், மந்திரம் என்ற சொற்களிலே வெறுப்புக் கொண்டவனல்லன். கலியுகத்தில் இவை பயன்பட்ட வகையிலே தான் பாரதிக்குக் கோபம். வேதத்தின் பெயரால் வேற்றுமைகள் வளர்ந்தன. சாத்திரத்தின் பெயரால் சதிகள் நடந்தன. மந்திரங்கள் என்ற பெயரால் மாய்மாலங்கள் நடந்தன. இவைகளை பாரதி அடியோடு வெறுத்தான். இவை கலியுகத்தின் புன்மைகள் என்று போக்க நினைத்தான். அதே பொழுது வேதங்களும் சாத்திரங்களும் மந்திரங்களும் இல்லாமல் கிருதயுகத்தை ஆக்கவும் விரும்ப வில்லை. இவைகளை நாட்டு மக்களுக்குரியவாறு, பயன் படுத்த நினைத்துத் திட்டமிடுகிறான். மந்திரங்களால் மட்டும் சமுதாயம் வளர்ந்து விடாது. தந்திரமும் வேண்டும். தந்திரம் என்பது இன்றைய உலக வழக்கில் வழங்குவது போல் கொச்சைத்தனமானதன்று. இன்று பெரும்பாலும் தந்திரம் என்பது ஏமாற்றுவது என்ற கொள்கையிலேயே வழங்கப்படு கிறது. ஆனால் தந்திரத்தின் நோக்கம் அதுவன்று. மிகப் பெரிய அரசியலோடு தந்திரம் என்ற சொல் பிணைக்கப் பெற்று "இராஜ தந்திரம்" என்று வழங்கப் பெறுகிறது. மிகப்

பெரிய இராஜ தந்திரங்கள் போர்களைத் தவிர்க்கவும், குடிமக்களின் தீய பழக்கங்களைத் தவிர்க்கவும் பயன்பட்ட யுக்திகளேயாகும். தந்திரம் பெருகினாலும் எந்திரங்களும் பெருகி வளரவேண்டும். வியாபாரம் என்பது ஒரு தொழில் மட்டுமல்ல. அதைச் செய்யும் முறைப்படி செய்தால் அஃது ஒரு தொண்டு. பாரதி புதிய கோணங்கியில்

*"வேதபுரத்திலே வியாபாரம் பெருகுது;*
*தொழில் பெருகுது; தொழிலாளி வாழ்வான்.*
*சாத்திரம் வளருது; சூத்திரம் தெரியுது;*
*யந்திரம் பெருகுது; தந்திரம் வளருது;*
*மந்திர மெல்லாம் வளருது, வளருது."*

என்று பாடுகின்றான்.

இப்பாடலில் "தொழில் பெருகுது; தொழிலாளி வாழ்வான்" என்ற சொற்றொடர் கவனத்திற்குரியது. மானிட சாதி தொழில் செய்யத் தொடங்கிப் பல ஆயிரம் ஆண்டுகள் ஓடிவிட்டன. வரலாற்றில் தொழில் செய்யும் கருவிகளைக் கற்களால், உலோகத்தால் செய்து பயன்படுத்திய காலத்தை கற்காலம், உலோக காலம் என்பர். ஆனால், யாரோ சிலர் பிழைப்புக்காகத் தொழில் செய்து கொண்டிருந்தனர். அதனால் தொழில் பல்கிப் பெருகி வளரவில்லை. தொழிற் கல்வி பெருகி வளராததால் தொழில் துறையிலும் வளர்ச்சியும் மாற்றங்களும் இல்லாமல் போயிற்று. அதுமட்டுமல்ல, தொழிலாளியும் உரிமைகளற்றவனாக, தன் தொழிலை, உழைக்கும் சக்தியை அன்றாடப் பிழைப்புக்கு விற்பவனாக இருந்தான். இது கலியுகத்தின் அவலம், பாரதி, கிருதயுகத்தில் தொழில் வளரும் என்று அறைகூவல் விடுக்கின்றான். தொழிலாளி வாழ்வான் என்று உறுதி கூறுகிறான். ஆம்! உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று பாடியவனல்லவா? தொழிலாளியை வாழ்விக்காத யுகத்தை

அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எனவே தொழிலாளி வாழ்வான் என்று சொல்லுகிறான்.

பாரதி, கடவுள் நம்பிக்கையுடையவன். அழுத்தமான கடவுள் நம்பிக்கையுடையவன். ஆயினும் அவனுடைய கடவுள் நம்பிக்கை கலியுகச் சார்புடையதல்ல. மானிட சமுதாயத்தில் மதத்தை வளர்ப்பதற்காகச் சிந்திய வேர்வையை விட, மதச் சண்டைகளில் சிந்திய செங்குருதி மிகுதியென்பதை வரலாற்று ஏடுகள் நமக்கு எடுத்துக் கூறுகின்றன. கடவுள் உண்டா? இல்லையா? இவர்தான் கடவுள். அவர்தான் கடவுள். என் மதமே மதம் என்றெல்லாம் சண்டை போடுவது சிறுபிள்ளைத்தனம். கடவுள் உண்டு என்று ஒருவர் கூறுவதாலேயே அவர் கடவுளை மற்றவர் களுக்குக் காட்டிவிடப் போவதில்லை. ஒருவர் கடவுள் இல்லையென்று கூறுவதாலேயே உள்ள கடவுளை இல்லாமற் செய்துவிடப் போவதில்லை! ஆம். அது போலவே எல்லாப் பொருள்களிலும் எங்கணும் நீக்கமற நிறைந்திருக்கும் பொருளே தெய்வம். அஃதொன்றே தெய்வம். பலர் வணங்கும் தெய்வம். அத்தெய்வத்தை எப்பெயர் கொண்டு எவர் வாழ்த்தினால் என்ன? தீ வேள்வியை செய்து வணங்கும் பார்ப்பனர், நாள்தோறும் திசை நோக்கி தொழும் துருக்கர், சிலுவையின் முன்னே நின்று வணங்கும் கிறித்தவர்-இவர்கள் எல்லாரும் வணங்குவது ஒன்றைத்தானே! ஏன் சண்டைகள்? என்று கேட்கின்றான். கலியுகம் மதச் சண்டைகள் நிறைந்த யுகம். இந்த மதச் சண்டைகளை புரோகிதர்கள் வளர்த்தனர். "இவர் தேவர், அவர் தேவர்" என்று கடவுள் போட்டிகளை உண்டாக்கினர். இந்தப் பொல்லாத கலியுகத்தை மாற்றிச் சமயங்களைக் கடந்த பொது நெறியைக் கிருதயுக நெறியாக்குகின்றான் பாரதி.

சமயங்களைக் கடந்த சன்மார்க்க நெறிகாண வேண்டு மென்று வள்ளற் பெருமானும் வற்புறுத்தினார். பாரதி, கிருத யுகத்தில் சமயங்களைக் கடந்த பொதுமைப் பண்பிருக்கும்

என்று வலியுறுத்தினான். இந்திய நாட்டைப் பொறுத்த வரையில் இந்த அரிய பண்பு வளராமல் போய்விடவில்லை. ஆனாலும் இந்த சன்மார்க்க நெறி அணி வலிமை பெறவில்லை. இன்றும் மத மாற்றங்கள் மதச் சண்டைகள் முதலிய வீணான வேலைகளில் சிலர் ஈடுபடுவது பாரதிக்கு உடன்பாடன்று. நாட்டின் நன்மைக்கும் ஏற்றதன்று. நாட்டின் மதச் சார்பற்ற தன்மை குடிமக்களின் ஒழுக்கமாக இடம் பெறவேண்டும். நான் கடவுளைத் தொழுகிறேன். நான் பலனை அடைகிறேன். கடவுளைத் தொழாமல் கடவுளே இல்லையென்பவனோடு எனக்கேன் சண்டை? நான் என்ன கடவுளைக் காப்பாற்றப் பிறந்தேனா? இல்லை கடவுள்தான் என்னைப் போன்றவர்களால் காப்பாற்றப்படுகிற அளவுக்கு பலமற்றவனா? அதுபோலவே கடவுள் உண்டு என்கிற நான் தொழுகிறேன். கடவுளே இல்லையென்று சொல்லி என் நம்பிக்கையைச் சிதற அடிப்பானேன்? கடவுள் நம்பிக்கையை மறுப்பது என்பது வேறு. கடவுள் நம்பிக்கையால் நடக்கும் சமூகப் படுகொலைகளை மறுப்பது என்பது வேறு? என்ற நியாயங்கள் தெரிந்ததாக வேண்டும். அது போலவே யார்; எப்பெயரில் எந்த உருவத்தில் தொழுதாலும் கடவுள் ஒன்றே என்ற அசைக்க முடியாத நம்பிக்கை உருவாகும் வரை மதத்தால் மக்களுக்குப் பயன் ஏற்படாது. இதனை பாரதி,

"தீயினைக் கும்பிடும் பார்ப்பார்–நித்தம்
திக்கை வணங்கும் துருக்கர்
கோயிற் சிலுவையின் முன்னே–நின்று
கும்பிடும் ஏசு மதத்தார்
யாரும் பணிந்திடும் தெய்வம்–பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று–இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்."

என்று கூறுகின்றான்.

மேலும் புதிய ஆத்திசூடியை பரம்பொருளை வாழ்த்தித் தொடங்குகின்றான். இந்தப் பரம் பொருள் வாழ்த்து மறை மொழியென ஏற்றுப் போற்றத் தக்கது. இப்பரம்பொருள் வாழ்த்தை நாள்தோறும் படித்தல், ஓதுதல் எல்லாச் சமய நிறுவனங்களிலும் நிகழ்தல் வேண்டும். எல்லாக் கல்விக் கூடங்களிலும் இதனையே கடவுள் வாழ்த்தாக்கலாம். இப்பாடலை நாள்தோறும் ஓதுவதனால் இறைமை உணர்வு வளரும். பொதுமையுணர்வும் வளரும். அமர வாழ்வையும் அடையலாம்.

பாரதி கிருதயுகத்தின் பரம்பொருள் வாழ்த்தெனப் பாடித்தந்த பாடல் இதோ!

ஆத்திசூடி, இளம்பிறை யணிந்து
மோனத்திருக்கும் முழுவெண் மேனியான்;
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்;
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை; எனப் பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துணராது
பலவகை யாகப் பரவிடும் பரம் பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறும் அறிவாம்;
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்
அதனருள் வாழ்த்தி அமர வாழ்வு எய்துவோம்.

பாரதி கலியுகத்தில் பிறந்தவன்; வாழ்ந்தவன். கலியுகத்தில் தவம், புண்ணியம், யோகம், யாகம், ஞானம் என்ற சொற்கள் தாராளமாகப் புழங்கின. இவையனைத்தும் இந்த நாட்டு மக்களை இம்மியும் உயர்த்தவில்லை. புல்லிய அடிமைச் சகதியில் புரண்டு பொய்ம்மையிலே மூழ்கித் துன்பத்திலே துவண்டு வாழ்ந்தனர். ஏன் இன்றும்கூட நம்மில் சில பெரியார்கள் இந்தப் பொருந்தாப் பொய்ம்மை நெறியையே நெறியெனக் காட்டி விளம்பரம் செய்வதைக் காணத்தான் செய்கிறோம். கேட்கத்தான் செய்கிறோம்.

இவர்கள் திருந்தும் நாள் எந்நாளோ? அல்லது வையகம் சீறியெழுந்து திருத்தும் நாள் எந்நாளோ? தவம் என்றால் உண்ணாதிருத்தல், உறங்காதிருத்தல், வாழ்க்கை இன்பங் களை நுகராதிருத்தல், ஒதுங்கியிருத்தல், கண்மூடி மௌனி யாயிருத்தல் என்றெல்லாம் சொன்ன தவநெறியினை பாரதி மறுக்கிறான். பாரதி, எந்த வகையிலும் வறட்சித் தன்மையுடைய துறவை, சமுதாயத்தை விட்டு விலகியோடும் துறவை விரும்பினானில்லை. பெண்மையை இழிவென்று துறக்கும் துறவுக் கொள்கையை விவாதம் செய்து மறுக்கிறான். கடவுளர்கள்-சிவன், திருமால் போன்றவர்கள் மணம் செய்து கொண்டது தவறா? என்று கேட்கிறான். இங்ஙனம் தவம் செய்தவர்கள்கூட உயிர்த் துன்பம் நீக்கவில்லையே என்று நினைந்து சாம்புகிறான். எனவே, பாரதி இத்துறையிலும் புதுமை காணும் யுக சந்திப்புக் கவிஞனாக விளங்குகிறான். இன்று நாட்டில் எத்தனையோ பேர் எது நல்லது? எது கெட்டது? எது இனியது? எது துன்பம்? எது வாழும் வழி? என்றெல்லாம் அறியாமல், அறிந்து கொள்ள முடியாமல் திகைத்துத் தேம்பி நிற்கின்றனர். நாள்தோறும் இவர்கள் சிலரைச் சந்தித்து இனிய சொற்களால் நல்லன எடுத்துக்கூறி, அவர்களுக்கு உரிய இன்பம் பயப்பனவாகிய நன்மைகளைச் செய்தல் தவம் என்கிறான். இல்லை, பெருந்தவம் என்கிறான். கிருதயுகத்தின் தவம் இதுவேயாம்.

புண்ணியம் எது? புண்ணிய மூர்த்தி யார்? இந்தக் கேள்வியை கலியுக மனிதனிடத்தில் கேட்டால் விடை விநோதமாக இருக்கும். யார் எத்துன்பத்தை அனுபவித் தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாது ஆண்டவன் திருக்கோயில் முன்றிலிலேயே பிச்சைக்காரரை வாழவிட்டு பிச்சையெடுத்தும் வாழவும் முடியாமல் ஒரு முழக்கயிற்றைத் தேடி நான்று கொள்ளும் அளவுக்கு வையகத்தின் துன்பம் வளர்ந்தாலும், பக்கத்திலிருக்கும் மனிதன் புழுவாய்த்

துடித்தாலும் இவற்றையெல்லாம் பற்றிக் கவலைப்படாமல் பூசை மட்டும் செய்து என்ன பயன்? பாரதி, கிருதயுகக் கவிஞன். அவன் புண்ணிய மூர்த்திக்குப் புது இலக்கணம் தருகின்றான்.

"பக்கத் திருந்தவர் துன்பம்—தன்னைப்
பார்க்கப் பொறாதவன் புண்ணிய மூர்த்தி"

யோகம் என்பது மூச்சை அடக்கி வாழ்தல், மோனத்திருத்தல் என்றெல்லாம் கலியுகம் கூறியது. ஆனால், நாகரிகக் கலியுகத்தின் யோகம் பெரிய நிறுவனங்களாக வளர்ந்து விட்டன. தனி விமான தளம் அமைத்துக் கொள்ளும் அளவுக்கு யோகம் வெற்றி பெற்று விட்டது. அடேயப்பா! இந்திய நாட்டின் ஏழ்மைக்கும் வறுமைக்கும் துணை செய்ய முடியாத யோகத்திற்கு மேற்கு நாடுகளில் எவ்வளவு யோகம் என்கிறீர்கள்! ஒருபுறம் உலகத்தை வணிகச் சந்தையின் மூலம் சுரண்டியும் புதுப் புதுக் கொலைக் கருவிகளைக் கொண்டு கொலை வெறி கொண்டாடும் நாடுகளுக்கு நம்முடைய யோகிகள் மீதும் பற்று உண்டு. பற்றுக்குப் பொருள்தான் புரியவில்லை. கலியுகம் குழப்படி செய்வதிலும் விஞ்சியதுதான். பாரதி கிருதயுகத்தின் யோகம் இதுவெனக் காட்டுகின்றான். 'ஊருக்கு உழைத்திடல் யோகம்.' யாகம் என்பது என்ன? தீயை மூட்டி அதில் நெய்யை ஊற்றுவதா, என்ன? இது கலியுகத்தின் யாகம்! பாரதி, ஊரவரும் உலகத்தவரும் நலமுற்று வாழ்ந்திட உடல் வருந்த உழைத்திடுதல் யாகம் என்கிறான். ஞானம் எது? கலியுகக்காரரைக் கேளுங்கள்! படித்தவைகளையெல்லாம் 'சளசள' என்று ஒப்பிப்பவர்களைப் பார்த்து 'ஞானி' என்பர். குறுக்கே ஒரு கேள்வி கேட்டு விட்டால் அல்லது ஐய விளக்கம் கேட்டு விட்டால் இந்த 'ஞானவான்'களுக்குக் கோபம் வரும்; பொங்கி எழுவர். பிடி சாபம் என்பர்.

பாரதி கிருதயுகத்துக் கவிஞன். அவன் ஞானம் என்பதற்கு ஓர் புது விளக்கம் தருகிறான். போருக்கே நின்றாலும் உளம் பொங்கக் கூடாது என்கிறான். உளம் பொங்காது அமைதியாக இருத்தல் ஞானம் என்கிறான். பானையில் இருக்கிற தண்ணீர் கொதிக்கலாம். பானையும் கொதிப்பதா? எனவே ஞானம் என்பது என்ன? எந்த அநீதியைச் சந்தித்துப் போராடினாலும் உள்ளத்தில் அன்பும் அருளும் தழுவிய அமைதி வேண்டும். இந்தச் சூழ்நிலையில் போரிடும் போரே நியாயமான போர். ஆத்திரத்தில்-பகையில் போரிடும் போர் நியாயமாகாது. நீதியுமாகாது. ஆதலால், ஞானம் என்பது,

*"போருக்கு நின்றிடும் போதும்-உளம்*
*பொங்கல் இல்லாத அமைதி மெய்ஞ்ஞானம்."*

பாரதி கிருதயுகத்தில் வளர்ந்த இந்த முடிவைச் சித்திரித்து இப்பாட்டில் காட்டுகிறான். இப்பாட்டு தமிழர் உயிர் பெற்ற பாட்டில் இருக்கிறது. கிருதயுகம் வந்தால்தான் தமிழர் உயிர் பெறுவர். நூற்றாண்டு விழாக் கொண்டாடும் தமிழகம் பாரதியின் கிருதயுகத்தைக் காண்பதாக!

*ஊருக் குழைத்திடல் யோகம்-நலம்*
*ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்*
*போருக்கு நின்றிடும் போதும்-உளம்*
*பொங்கல் இல்லாத அமைதி மெய்ஞ்ஞானம்.*

(திருச்சி, அகில இந்திய வானொலியில்
12.1.82-இல் ஆற்றிய இலக்கியப் பேருரை)

*(நன்றி, திருச்சி அகில இந்திய வானொலி நிலையம்.)*

## எந்நிலையும் பொதுவே!

பாரதி, தமிழ்க் கவிஞர்கள் உலகத்தின் ஒரு புதிய தொடக்கமானவன்; பாரதி, பாரத நாட்டின் வரலாற்றில் ஒரு

திருப்பு மையமானவன். பாரதி, அவன் வாழ்ந்த காலத்திற்குக் கருத்துக்களைத் தந்தான்; எழுச்சியைத் தந்தான். பாரதி, அவன் காலத்திய மானிட சாதியை ஆவேசப்படுத்தினான். பாரதி, வரலாற்றுக் கவிஞனானான்.

பாரதி, அடிமை நாட்டில் பிறந்தான்! அரசியல் போக்கில் அடிமையாகவே வாழ்ந்தான்! ஆனால், பாரதியின் ஆன்மா விடுதலை பெற்றுப் பல ஆண்டுகள் ஆகித்தான் நாடு விடுதலை பெற்றது. தன்னளவில் விடுதலை பெறாத கவிஞன், எழுத்தாளன், பேச்சாளன், அரசியல் தலைவன் ஆகியோரால் நாடு விடுதலையும் பெறாது; வளரவும் வளராது.

ஒரு நாடு திடீரென்று எதிர்பாராமல் அடிமையாகி விடுவதில்லை. அடிமைப்படுவதற்குரிய தீய இயல்புகள் தோன்றி, பல தலைமுறைகள் வளர்ந்த பிறகுதான் நாடு அடிமையாகிறது. பாரதம் அடிமைத்தனத்தை, அடிமைப் புத்தியைப் பல தலைமுறைகளாகப் படிப்படியாகப் பெற்று வளர்ந்து வந்தது, நெறிமுறை பிறழ்ந்த நிலையில்! இங்கு வளர்ச்சி, ஆக்க வழியில் அன்று; அழிவு வழியில்!

பாரத சமுதாயத்தின் வாழ்க்கையைக் கெடுத்தவை சாதி, மத உணர்ச்சிகளேயாம். பாரத சமுதாயத்தில் எண்ணத் தொலையாத சாதிகள்! இதற்குச் சாத்திரங்களின் ஆதாரம்! இந்தச் சாதிமுறைகளுக்குக் கடவுள், பாதுகாப்பாளர் என்று கூறும் அளவுக்குப் பைத்தியம் முற்றிவிட்டது. அடிமையாகப் பிறந்த பாரதி, நாட்டின் அடிமைத்தளத்திற்குக் காரணமான மூல நோயைக் கண்டு பிடிக்கிறான். நோய் முற்றிய நிலையில் தமது கவிதை வழி மருத்துவம் செய்கிறான்.

சாதிகளைப் பார்த்துப் பழகுதல் கூடாது; அன்பு காட்டுதல் கூடாது. அதுபோலவே சாதி காரணமாகப் பகை பாராட்டுதல் கூடாது. இது பாரதியின் முதற்பாடம். சாதிக் கொடுமைகளைவிட மதவேற்றுமை பாராட்டுதல் பெரும் தீது. சாதி வேற்றுமைகள்கூட எளிதில் நீங்கும். மத வேற்றுமைகள் எளிதில் நீங்கா. ஏன்? கடவுள்கள் சண்டை

போட்டுக் கொண்டதாகப் புராணங்கள் செய்து பிழைப்பு நடத்தியவர்கள், நடத்துகிறவர்கள் வாழும் நாடு இது. கடவுள்கள் பலவென்று ஆகி இந்தக் கடவுள் அந்தக் கடவுள் என்று கடவுள்களின் சக்தி பற்றிய சர்ச்சை; இந்த சர்ச்சைச் சந்தடியில் கடவுளேகூடத் தன்னை மறைத்துக் கொண்டு விட்டார். மதவேற்றுமைகளைப் பேணிவளர்த்து மனித குலத்தை அழிக்க மத நிறுவனங்கள் தோன்றிவிட்டன. புரோகிதர்கள் பெருகிவிட்டனர். இவர்களுக்குக் கடவுளைப் பற்றியும் கவலையில்லை! மனிதகுலத்தைப் பற்றியும் கவலை யில்லை! ஆதலால், வேற்றுமைகள் பல்கிப் பெருகித் தெருவுக்குத் தெரு கோயில்-கடவுள்விழா என்கிற பெயரில் மனிதன் நிர்வாண விளம்பரப் பண்டமாகிக் கெட்டொழி கின்றான். இந்த மூல நோய்க்குப் பாரதி முதல் மருத்துவம் செய்கிறான். சாதியைப் பார்க்காதே! கேட்காதே! சாதி முறைகளுக்கு உடன்படாதே! இந்த நாட்டில் பிறந்தவர்கள் அனைவரும் ஒரு குலம்! ஓரினம்! புகழும் பெருமையும் அனைவருக்கும் உண்டு. சாதி, மத வேற்றுமைகள் என்கிற தீமை பெற்றெடுத்த தீமை அழுக்காறு. ஒருவர் உயர்ந்தால் மற்றவர் பொறார். பொறாமையால் சாதியைக் காட்டி, ஊரைக் கூட்டிப் பழிப்பர்! இத்தகு சூழ்நிலையில் தகுதி பெற்றவரும் அத்தகுதி தமக்கே உரியது என்றும் சமுதாயத்திற்கு அதில் என்ன பங்கு இருக்கிறது என்றும் பாதுகாப்பு உணர்வால் தருக்கி நடக்கத் தலைப்படுவர். இதன் விளைவாகத் 'தகுதி' 'பதவி' என்பனவற்றிற்கு யாரும் உரியரல்லாமல் இழப்பர்; அடிமைகளாவர்; அல்லற்படுவர். அதனால் பதவியும் தகுதியும் தனிமனிதருக்குரியனவல்ல. சமுதாயத்திற்குரியன. வாழ்வும் வீழ்ச்சியும் தனி மனிதர் களைச் சார்ந்தவையல்ல. சமுதாயத்தைச் சார்ந்தவை. இந்தப் புத்திசாலித்தனம் வந்துவிட்டால், பொதுமை உணர்வு தோன்றி விட்டால் பாரத சமுதாயம் விடுதலை பெற்றுவிடும். இது பாரதியின் நம்பிக்கை.

*"எப்பதம் வாய்த்திடு மேனும்-நம்மில்*
*யாவர்க்கும் அந்த நிலை பொதுவாகும்!"*

பாரதியார்

## பாரதியின் திட்டங்கள்

பாரதி ஒரு கவிஞன். கவிதைகள் மட்டும் பொழியத் தெரிந்த கவிஞனல்லன். பாரதி, திட்டமிடும் ஒரு சமுதாயப் பொருளியல் விஞ்ஞானி! பாரதி இந்த நாட்டின் முன்னேற்றத்திற்குப் பல செயல் திட்டங்களை எண்ணிச் செய்ய வேண்டும்-இல்லை, செய்வோம் என்று உறுதி பூணுகின்றான். பாரத நாட்டின் வடஎல்லை, இமயப் பனிமலை! இமயம், இந்த நாட்டு வளத்தின் ஊற்று. அதன் வளம் முழுவதையும் அனுபவத்திற்குக் கொண்டு வர வேண்டும். வெள்ளிப் பனிமலை மீது ஏறுதல் வீரம் செறிந்த முயற்சி. பாரத மக்கள் வீரம் செறிந்தவர்களாக விளங்க வேண்டும். இமயப் பனிமலை நமது எல்லைக்கோடு. அந்நியர் ஆக்கிரமிப்பு ஏற்படா வண்ணம் பாதுகாத்திடப் பனிமலை மீது சுற்றுதல் அவசியம். ஆதலால், "வெள்ளிப் பனிமலையின் மீதுலாவுவோம்" என்கிறான். பாரதியின் கனவு இன்று உண்மையாகி வருகிறது. இன்று, ஆண்களும் பெண்களும் அணி அணியாகப் பனிமலை ஏறும் சாதனையைச் செய்து வருகின்றனர்.

மலைக்கு எதிர் கடல்! மலை உயரமானது; கடல் ஆழமானது; அகலமானது. பாரத நாடு மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப் பெற்ற நாடு. இக்கடலில் உள்ள செல்வம் அளப்பிலாதது. கிழக்குக் கடலில் முத்து! மேற்குக் கடலில் எண்ணெய் வளம்! இவைகளையெல்லாம் கண்டு அனுபவத்திற்குக் கொண்டு வரவேண்டும். அது மட்டுமா? கடல் சூழ்ந்த நாடாதலால், கடல் வழிப் படையெடுப்பு வராமல் பாதுகாக்கக் கடல்களில் காவல் தேவை. இது பாரதியின் திட்டம். இன்று விசாகப் பட்டினத்தில் கப்பல்

கட்டும் தளம் இருக்கிறது. பாரதம் சொந்தக் கப்பல்களைக் கட்டுகிறது.

வீதிகள் தோறும் பள்ளிகள் தேவை. ஆனால், பள்ளிகள் புத்தகப் புழுக்களை, ஒப்புவிக்கும் எந்திரங்களை, குமாஸ்தாக் களை, தேடித் திரியும் தன்னம்பிக்கையில்லாதவர்களை உற்பத்தி செய்து அனுப்பி என்ன பயன்? கல்வி கற்றவர்கள் உயிருணர்ச்சி உடையவர்களாக, எழுச்சியுடையவர்களாக விளங்க வேண்டும். இத்தகைய ஆற்றலை சமய வாழ்க்கையால், கடவுள் வழிபாட்டால் தான் பெறமுடியும் என்பதை, பாரதி உணர்ந்து, "பள்ளித்தலமனைத்தும் கோயில் செய்குவோம்" என்று பாடுகின்றான்.

சிங்களத் தீவாகிய இலங்கை, நமது நாட்டுடன் நெருங்கிய தொடர்புடையது. இந்த உறவை மேலும் வளர்ப்பது பாரதியின் நோக்கம், ஆதலால் எளிதில் பயணம் செய்ய பாலம் அமைக்க ஆசைப்படுகின்றான். இஃது இதுவரை நடைபெறவில்லை. இனி எதிர் வரும் காலத்தில் நடக்காமற் போகாது. அடுத்து 'சேது' என்பது தென் கடற்கரையிலிருந்த ஓர் ஊர்ப்பகுதி. இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி என்ற ஊரருகில் இருந்த ஊர், இந்த ஊரைக் கடல் கொண்டுவிட்டது. இராமன் இலங்கைக்கு அணைகட்டிச் சென்ற இடம் இது. பழைமை போற்றும் நெறியிலும் புதுமை படைக்கும் முனைப்பிலும் "சேதுவை மேடுறுத்தி வீதி சமைக்க"த் திட்டம் தந்தான். நடுவண் அரசு இத்திட்டத்தை ஆராய்ந்தது; எடுத்துக் கொண்டிருந்தது; பின் கைவிட்டு விட்டது. ஏன்? என்பது புரியவில்லை. சேதுத் திட்டத்தைப் பாரதியின் நினைவாக வற்புறுத்த வேண்டும்.

பாரதியின் அடுத்த திட்டம் மிக மிக முக்கியமானது. இத்திட்டத்தைத் தந்ததின் மூலம் பாரதி எவ்வளவு பெரிய அறிஞன் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. காதலையும், வீரத்தையும், கடவுளையும், அரசனையும் மட்டும் பாடிக்

களித்துக் கொண்டிருந்த கவிஞர்களின் உலகத்தில் ஓர் அறிஞன்-விஞ்ஞானி தோன்றியது அதிசயம். வடபுலத்தில் கங்கை ஓடுகிறது! கங்கை வற்றாத ஆறு. ஏன்? பல சமயங்களில் வெள்ளப் பெருக்காக ஓடக் கூடிய ஆறு! வெள்ளம் பெருகி வரும் பொழுது நிறைய இழப்பு ஏற்படுகிறது. கங்கையின் வெள்ளம் கடலிற் சென்று கலந்து வீணாகிறது. கங்கையைக் குமரிக் கடலில் கொண்டு வந்து சேர்க்கத் தக்கவாறு கால்வாய் அமைத்தால் தண்ணீர் வசதியில்லாத பிற பகுதிகளைச் செழிக்கச் செய்யலாம். குமரிக் கடலிலிருந்து கங்கை வரை பயணம் நீர்வழி மேற்கொள்ளலாம். இஃதோர் அருமையான திட்டம். இத்திட்டத்தைப் பாரதி தந்துள்ளான். இதன் அவசியத்தைத் தேவையை நாடு உணர்ந்து வருகிறது; அறிஞர்கள் வற்புறுத்தி வருகின்றனர். ஆனால், நடுவண் அரசுக்கு இன்னும் இந்த எண்ணம் வரவில்லை. எப்பொழுது வரும் என்பதும் தெரியவில்லை. குமரி-கங்கை இணைப்பு, இல்லை-காவிரி-கங்கை இணைப்பு உடனடியாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டிய திட்டம். பாரதி நூற்றாண்டில் பாரத அரசுக்கு இந்த உணர்வை உண்டாக்க அனைவரும் முயற்சி செய்ய வேண்டும்.

அடுத்து, மண்ணின் மடியில்-சுரங்கத்தில் குவிந்திருக்கும் செல்வங்களைத் தோண்டி வெளியே கொணர்தல்! மண், வளமுள்ளது! பலவகை வளமுள்ளது. மண்ணின் செல்வத்தை அனுபவத்திற்குக் கொண்டுவர மண்ணைக் குடைந்து வேலை செய்யத் தூண்டுகிறான் பாரதி. நெய்வேலி நிலக்கரியும், சேலத்து இரும்பும், கோலார் தங்கவயல் தங்கமும் பாரதியின் சிந்தனை வழி மலர்ந்த செயல்கள்! மண்ணில் தோண்டி எடுக்கப்படும் பொருள்களை விற்கச் சந்தை வேண்டும். நாடு செழிக்க அயல் நாடுகளில் செய்யும் வர்த்தகம் வளர வேண்டும். உலகின் கண் உள்ள அனைத்து நாடுகளுக்கும் நம் நாட்டுப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இன்று உலக நாடுகளில் இந்தியப்

பொருள்கள் 'கிராக்கி'யுடன் விற்கப்படுகின்றன. இது பாரதியின் ஆசைகளுள் நிறைவேறிய ஒன்று.

அடுத்து, தென்கடலில்-தூத்துக்குடியில் முத்துக் குளிக்க வேண்டும் என்பது. தென்கடல், வணிகர்கள் வந்து மொய்க்கும் துறைமுகமாகச் சிறந்து விளங்க வேண்டும். இது பாரதியின் எண்ணம். இன்று, தூத்துக்குடியில் புதிய துறைமுகம் அமைக்கப்பெற்று, ஏற்றுமதியும் இறக்குமதியும் செய்யப்பெற்று வருகின்றன. பாரதியின் நினைவாகிய இது நிலையான செயலாக உருப்பெற்றுள்ளதில் தலையாயது.

அடுத்து, பாரதியின் தொழில் திட்டங்கள்! மேலும் வளர்ந்து ஆலைகள் அமைக்கவும், தொழிற்சாலைகள் அமைக்கவும் தூண்டுகின்றான். பாரத நாடு விடுதலைப் பெற்ற பிறகு பல தொழிற்சாலைகள் நிறுவப்பெற்றுள்ளன. தொழிற்புரட்சி நடைபெற்று வருகிறது. இது போதுமா? நாடு வளர வளர, வல்லரசுகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள ஆயுதங்கள் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகின்றான். பெங்களூர் விமானத் தொழிற்சாலையும், திருச்சி கனரகத் தொழிற்சாலையும், ஆவடி டாங்கு தொழிற்சாலையும் பாரதியின் நினைவுச் சின்னங்களாக விளங்குகின்றன. பாகிஸ்தான் சண்டையில் அமெரிக்க வல்லரசின் டாங்கு களையெல்லாம் சந்தித்து நின்று பெற்ற வெற்றி பாரதிக்குரிய காணிக்கையாகும்.

ஒரு நாடு வலிமையும் பொருளும் பெற்று, வளர்ந்து வாழ, அந்நாட்டு மக்கள் ஆவேச உணர்ச்சியுடன் உழைக்க வேண்டும். அப்பொழுதுதான் வற்றாத செல்வம் பெருகும். ஓய்வு என்பது வேலை மாற்றமே தவிர, உறங்குதல், ஊர் சுற்றுதல், வம்பளத்தல் அல்ல. ஓயாது உழைக்கும் உணர்ச்சி நம் நாட்டு மக்களிடத்தில் சுதந்திரம் பெற்ற சில ஆண்டுகள் வரையிருந்தது; நாடும் வளர்ந்தது. இப்பொழுது ஓயாது உழைக்கும் ஆவேசம் இல்லை; எங்களும் இல்லை. இன்று

எங்குப் பார்த்தாலும் வேலையிலிருந்து தப்பித்துக் கொள்ளும் முயற்சி! விடுப்பு வியாதி! உழைக்காமல் வாழும் ஆசை வளர்ந்து நாட்டில் வறுமை வளர்ந்து கொண்டிருக்கிறது. இது; பாரதிக்குச் சற்றும் பிடிக்காத ஒன்று. பாரதி நூற்றாண்டில் புதிய எழுச்சியினைப் பெறுவோமாக! உடலுக்கு நோய் வந்தாலும் தாங்கிப் பிடித்துக் கொண்டு உழைக்க வேண்டுமே தவிர, தலைசாய்த்துப் படுக்கக்கூடாது. இது பாரதியின் ஆணை! பாரதியின் ஆணையை இந்த நூற்றாண்டிலிருந்து செயலாக்குவோமாக!

நாடு வளர கருத்து வளர்ச்சி தேவை. மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குரிய கருத்துக்கள் எல்லாப் பகுதிகளிலும் எல்லா மொழிகளிலும் தோன்றலாம்; தோன்றும். கருத்துக்களைத் தேர்ந்தெடுப்பதில் எல்லைக் கோடுகள் வைத்துக் கொண்டால் சமுதாயம் தேக்கமடையும். வளர்ச்சிக்குரிய வாய்ப்புகள் அருகும்; உயிர் சுருங்கும். இது கூடவே கூடாது. மனித உலகம் சொல்லியும் கேட்டும் வாழ்ந்தால்தான் வளர முடியும். அறிந்ததைச் சொல்லுதலும் அறியாததைக் கேட்டறிந்து கொள்ளுதலும் வாழ்க்கையின்-பொறிகளின் அமைப்பு. அறிவை வளர்க்கவும், அறியாமையை அறிவாக மாற்றி வளர்க்கவும் வாயும் செவிகளும் பயன்படவேண்டும். இன்று நூற்றுக்கு எழுபத்தைந்து பேருக்கு இந்த வகையில் பொறிகள் பயன்படுவதில்லை. ஊமையும் செவிடும் சேர்ந்தால் என்ன ஆகும்? பயங்கரமான தீமை! அதுபோலத்தான் இன்றைய மக்கள் சேருகின்றனர்; கூடுகின்றனர். இது தவறு. காசியில் சொல்லப்படும் ஒன்றைக் காஞ்சியிலிருப்பவர்கள் கேட்க விரும்ப வேண்டும். அங்ஙனம் கேட்டறிந்து கொள்ள மொழியோ, இனமோ தடையாய் அமைதல் கூடாது. காசியும் காஞ்சியும் பல்கலைக் கழகங்கள் அமைந்து விளங்கிய பெருநகரங்கள். காசி, வடபுல நகரத்தின் தலைநகரம், காஞ்சி, தென்புல நகரத்தின் தலைநகரம், கங்கையும் காவிரியும் இணைந்தால் போதாது. இவ்விரு

ஆற்றங்கரை நாகரிகங்களும் கலக்க வேண்டும். இவ்விரு நாகரிக மக்களும் ஒன்றாக, ஒருமையுடையராகிக் கலந்து வாழவேண்டும். இதுவே பாரதியின் இலட்சியம், பாரதியின் சொற்கள் வெற்றி பெற்று இவ்விரு நகரங்களையும் தொலைபேசி வழி இணைத்துவிட்டது. பாரதி சொல்லும் பொருள் வழி, உணர்வு வழி இணைப்பு வரவேண்டும்? அவ்வகையில் உருவாகும் சாதனை, பாரதிக்கு நிலையான நினைவாகும்.

வேறுபட்ட சூழ்நிலைகளைக் கடந்து ஒருமையுணர்வு, உண்டாக்க இயற்கையான காதலும், கனிவு தரும் இசையும் துணை செய்யும்! பாரத மக்கள் தம் இனத்திலேயே காதலித்துத் திருமணம் செய்யாமல் அயல் மாநிலப் பெண்களைக் காதலிக்கவும் வழிகாட்டுகிறார். அவ்வழி உறவுகள் வளரும்! ஒருமைப்பாடு வளரும்! பாரத சமுதாயமும் செழித்து வளர்ந்து வாழும்!

## பாரதியின் தொழிற் புரட்சி

பாரத நாடு வேளாண்மைத் தொழிலிற் சிறந்த நாடு. ஒரு நாடு முன்னேற, பொருள் வளத்தில் செழிக்க தொழில் வளர்ச்சியும் தேவை. தொழிற் புரட்சி நடந்தால்தான் சமுதாயம் செழித்து வளரும். என்பது மார்க்சியக் கொள்கை. இந்தத் தத்துவத்தை பாரதி, நன்கு உணர்ந்திருந்தான். உழவர்களும் தொழிலாளர்களும் இணைந்தால்தான் சமுதாய மாற்றங்கள் நிகழும்; செழிப்புறும் என்ற சமுதாய அறிவியல் கொள்கைக்கு, பாரத நாட்டில் பாரதிதான் முதன் முதலில் முழக்கம் செய்தான்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று பாடினான்.

தொழிற் புரட்சியில் வேலை வாய்ப்பு பெருகும்; வளம் கொழிக்கும்; அறிவியல் பெருகி வளரும். இந்தியா இங்கிலாந்

திற்குத் தேவையாக இருந்தது. வளத்தைச் சுரண்டுவதற்காக மட்டுமல்ல, இங்கிலாந்தின் பொருள்களுக்கு ஒரு விற்பனைச் சந்தை தேவை என்பதும் ஆகும். ஆதலால், இங்கிலாந்து என்ற ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடி இந்த நாடு தொழிலில் சிறந்து விளங்கவேண்டும்; அன்னியப் பொருள் களின்றி இந்தியா வாழக்கூடிய பலத்தினைப் பெற வேண்டும். இது பாரதியின் கனவு. பெரிய பெரிய ஆலைகளை அமைக்க வேண்டும்; தொழிற்சாலைகளைத் தொடங்க வேண்டும். பஞ்சினில், பட்டினில் ஆடைகள் உற்பத்தி செய்ய வேண்டும். ஆயுதங்கள் செய்ய வேண்டும். ஆம்! உற்பத்திக்குப் பயன்படும் கருவிகள் செய்ய வேண்டும். மீண்டும் கூறுவான், "உழு படைகள் செய்வோம்" என்று! போருக்குப் பயன்படும் ஆயுதமும் செய்ய வேண்டும். ஏகாதிபத்திய வல்லரசுகளின் கொட்டம் இன்னமும் அடங்கிய பாடில்லை. இந்து மா கடலில் அமைதியில்லை. நமது நாடே படை வலிமை யுடையதாக இருப்பது வலியச் சென்று போர் செய்ய அல்ல. தற்காப்புக்குத் தான்! விசாகையில் கட்டுமானம் ஆகும் கப்பல்களும், ஆவடியில் உற்பத்தியாகும் விமானங்களும், திருச்சி–திருவெறும்பூரில் உற்பத்தியாகும் துப்பாக்கிகளும் பாரதி நினைத்த தொழிற் புரட்சியின் மையங்கள்! பாரதத்தை வலிவும், பொலிவும் உடையதாக்கும் சக்திகள்!

பாரதி, அடிமையாக–ஏழையாகப் பிறந்தான். அடிமை யாக–ஏழையாகச் செத்தான். ஆயினும், பாரதி குடிசைத் தொழில்களோடு நின்றுவிட விரும்பவில்லை. இன்று சிலர், பாரத நாடு–குடிசைத் தொழில்களினாலேயே வாழ்ந்துவிடும் என்று நம்புகின்றனர். இது தவறான கருத்து. குடிசைத் தொழில்கள் வளர வேண்டும். குடிசைத் தொழில்கள் மூலம்தான் குறைந்த மூலதனத்தில் பலருக்கு வேலை வாய்ப்பு தர முடியும். ஆனால், நாட்டின் மொத்தப் பொருளாதார மேம்பாட்டிற்காக–கனரகத் தொழில்கள் தேவை. பாது காப்புக்குப் படைக் கருவிகள் செய்யும் தொழில் தேவை. அணுகுண்டுகள் செய்யும் வரை நாம் வளர்ந்தாக வேண்டும்.

விடுதலை பெற்ற இந்தியாவின் முன்னேற்றத்திற்குத், தொழிற் புரட்சியே உதவி செய்ய இயலும் என்பது. பாரதியின் திடமான நம்பிக்கை. அத் தொழிற் புரட்சிக்குத் திட்டங்களை வகுத்துப் பாடிய பெருமை பாரதிக்கு உண்டு. உலகத்தில் தொழிற் புரட்சிக்குரிய திட்டங்களை வகுத்துத் தந்த முதல் கவிஞன் பாரதி. அவனுக்குப் பின்னும் பாரதியின் ஆவேசவுணர்ச்சியுடன் யாரும் பாடவில்லை.

*வாழ்க பாரதியின் புகழ்!*
*வளர்க தொழிற் புரட்சி!*

## பாரதியின் சமுதாயம்

*எல்லாரும் ஓர்குலம்; எல்லாரும் ஓரினம்;*
*எல்லாரும் இந்தியா மக்கள்;*
*எல்லாரும் ஓர் நிறை; எல்லாரும் ஓர்விலை;*
*எல்லாரும் இந்நாட்டு மன்னர்*

என்பது பாரதியின் பாடல். பாரதி இந்த நிரல் நிறை முறைவைப்பை உயர் குறிக்கோளோடு அமைத்திருக்கிறான். பாரதி, சமுதாய மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் கவிதை செய்தவன்; நாட்டுக்கு உழைத்தவன். பாரதி, அவன் காலத்திலிருந்த சமுதாய அமைப்பை நகர்த்தி, தனது குறிக்கோளின் எல்லைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கிறான். இஃதொரு கவிதைப் பயணம்; கருத்து வளர்ச்சிப் பயணம்; நாட்டு வரலாற்றில் நடக்க வேண்டிய பயணம்.

இந்திய சமூகத்தில் எண்ணத் தொலையாத சாதிப் பிரிவினைகள்; கோத்திரங்கள்! குலங்கள்! இந்தப் பிரிவினை களாலேயே இந்திய சமூகம் உள்ளீடழிந்தது; உருக்குலைந்தது; அந்நியர்க்கு அடிமைப்பட்டது. அடிமைத் தனத்திற்குரிய காரணத்தை நீக்கினாலொழிய விடுதலை வராது; வந்தாலும் நிலை பெற்றிருக்காது என்பது பாரதியின் முடிவு. எனவே, இந்திய சமூகத்திலிருந்தே சாதிகளை அறவே நீக்கப் போராடு

கின்றான்; 'சாதிகள் இல்லை' என்றே சாதிக்கின்றான்; குலத்தில் உயர்வு, தாழ்வு கற்பித்துப் பேசுதல் பாபம் என்கின்றான்; பறையருக்கும் புலையருக்கும் விடுதலையை வழங்குகின்றான். நந்தனைப் பார்ப்பானாக்குகின்றான். சாதிகளின் பெயரால் விளங்கும் அநீதிகளைத் தகர்த்து நீதியை நிலைநாட்டுகின்றான்; தண்டச் சோறுண்ணும் பார்ப்பைச் சாடுகின்றான்; சாதி, குலம், கோத்திரம் இவற்றைக் கற்பிக்கும் சாத்திரத்தைச் சூது என்கின்றான். இது பாரதி வாழ்ந்த காலம். பாரதி குலம், கோத்திரங்களைக் கடந்த ஒரு குலம் அமைக்கின்றான். இது அவன் படைத்த சமுதாயத்தின் தொடக்கப்பணி.

இந்தியா ஒரு பெரிய நாடு. இமயம் முதல் குமரிவரை அகன்ற பெரிய நாடு, பல நூறு மொழிகள் பேசும் மக்களையுடைய நாடு. மொழி வழியிலிருந்து இனங்கள் பலப்பல உண்டு; எண்ணற்ற சமயங்கள் விளங்கும் நாடு. பாரதி, இந்தியாவில் வாழும் மக்களை இந்தியராகவே ஆக்க விரும்புகின்றான். மொழிவழி இனப்பிரிவு பாரதிக்கு உடன்பாடில்லை; சமய வழிப்பிரிவு பாரதிக்கு உடன் பாடில்லை. இதனால் பாரதிக்கு மொழிகள்மீது பற்றில்லை என்பது பொருளன்று; சமயப் பற்றில்லை என்பதும் பொருளன்று. மொழியானாலும், சமயமானாலும் இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டுக்குத் துணையாக இருக்க வேண்டும். இந்திய நாட்டு மக்களை இந்தியர் என்று எண்ணும்படி செய்யத் தூண்ட வேண்டும்; இந்திய மக்களிடத்தில் இனவழிப் பற்றுகளைக் கடந்த இந்தியர் என்ற மனப்பான்மை தோன்றுதல்தான் விடுதலையார்வத்திற்கு எழுச்சியூட்டும், நாட்டின் ஆக்கத்திற்குத் துணை செய்யும். அதனால் மொழிகளை, இனங்களை, சமயங்களைக் கடந்து 'எல்லாரும் இந்தியர்' என்று கூறி ஓரணியில் திரட்டுகின்றான். இது கவிஞனின் அபார சாதனை.

பாரதி, இந்திய நாட்டின் கடந்தகால வரலாற்றைக் கூர்ந்து படித்திருக்கிறான். இந்திய வரலாற்றில் சாதிகள், இனங்கள், பதவிகள் இவைகள் காரணமாகச் சமூகத்தில் ஏற்பட்ட மதிப்புகளையும் அவமதிப்புகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு எல்லாரையும் சமநிலையில் மதிக்கும் உணர்ச்சியின்மையை நினைந்து வருந்தியுள்ளான். சொல்லப்படும் செய்திக்கு மரியாதையன்று. சொல்லுபவரை நோக்கியே மரியாதை இருந்தது. சாதாரணச் சமூகத்தில் பிறந்த ஒருவர் எவ்வளவு அருமையான செய்திகளைச் சொன்னாலும் அதற்கு வரவேற்பில்லை. ஆனால் சாதியிலோ பணத்திலோ பதவியிலோ உயர்ந்த மேட்டுக் குடியிலிருப் போர் 'தத்துப்பித்து' என்று உளறினாலும் அபாரஞானம் என்று பாராட்டப் பெற்றது. சராசரி ஒரு மனிதரை அவர் ஒரு மனிதர் என்ற அளவில் மதிக்காமல் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மரியாதை-மதிப்பு என்ற அவலநிலை பாரதி காலத்தது. நந்தனாரின் திருக்கோயில் வழிபாட்டார்வம் கூட எளிதில் ஏற்றுக் கொள்ளப் பெறவில்லை. நிலப்பிரபுத்துவத்தின் நச்சுச்சேயான தீண்டாமைக் கொடுமையில் நந்தனாரின் சமய ஆர்வம் கூடக் கருகிப் போயிற்று. ஆதலால் மதிப்பு ஆள் நோக்கியன்று; அறம் நோக்கியே. இது பாரதியின் கோட்பாடு. எல்லாரும் சமநிலையில் வைத்து மதிக்கப் பட்டால்தான் மனிதரிடத்தில் தாழ்வுணர்ச்சி தலை காட்டாது. ஒரு சிலரிடத்தில் உயர்வுணர்ச்சியென்ற அகத்தையும் தலை காட்டாது. ஆள்வோராயிருந்தால் என்ன? ஆளப்படுவோராயிருந்தால்தான் என்ன? தரத்திற்கும் தகுதிக்கும்தான் மரியாதையே தவிர நாற்காலிகளுக்கல்லவே! இந்த மனப்பான்மை சமுதாயத்தில் வளர்ந்தால்தான் சிந்தனை வளரும்; அச்சமின்றிச் சிந்தனை வெளிப்படுத்தப் பெறும். கருத்துக்கள் வளரும்; பயமின்றிக் கருத்துக்கள் சொல்லப்பெறும். ஆதலால் பாரதி இந்திய மக்கள் எல்லோரையும் ஒரு நிறையாக்குகின்றான்.

பாரதி குலம், மொழி, சமயம், இன வேற்றுமைகளி லிருந்து மீட்டுக்கொள்ள வந்த பாரத சமுதாயத்தை 'விலை'யுடையதாக்க முயலுகின்றான். இங்கு விலை என்பது பொருளாதார சமத்துவத்தைக் குறிப்பது, பாரதி வாழ்ந்த காலத்தில் இந்திய நாட்டில் நிலப்பிரபுத்துவம் கொழுத்து வளர்ந்திருந்தது. வளர்ச்சியடையாத முதலாளித்துவமும் இருந்தது. இந்திய நாட்டு மக்களில் பெரும்பாலோர் உழைப்பாளிகள், சிலரே வளமான வாழ்க்கையுடையவர்கள். இந்திய செல்வம் உழைப்பாளிகளால் உருவாக்கப்பட்டாலும் அவர்களுக்கு சொந்தமாக இல்லை. இந்திய உழைப்பாளி களால் படைக்கப்பட்ட செல்வம், அவர்களைத் தெரு வோரத்தில் நிறுத்திவிட்டு மாடமாளிகை, கூட கோபுரத்துக்குள் சிறைப்பட்டுவிட்டது. இந்தக் கொள்கைக்கு ஒருபுறம் மதப் புரோகிதர்கள் காவல், இன்னொருபுறம் பேயரசு காவல், இந்தியர்களுக்கோ "கோடீசுவரர்", "இலட்சாதிபதி" என்றெல்லாம் விலை வந்து விட்டது. ஒருபுறம் உழைப்பை விலைக்கு விற்கும்-ரூபாய் இரண்டுக்கும் மூன்றுக்குமாக விலைக்கு விற்கும் ஏழைத் தொழிலாளிகள்- விவசாயிகள். இன்னொருபுறம் மலிவான முறையில் உழைப்பை விலைக்கு வாங்கி அடுக்கிய செல்வத்தைச் சேர்ந்தவர்களுக்குரிய விலைப்புள்ளி இலட்சம்; கோடி. இந்த வித்தியாசத்தைப் பாரதி மறுக்கின்றான். சோஷலிசப் புரட்சிக்கு வித்திடுகின்றான். எல்லாருக்கும் ஒரே விலை என்ற கொள்கையை முன் வைக்கின்றான். மொழியால், இனத்தால், குலத்தால் உயர்வு தாழ்வு இல்லையானாலும் பணத்தால் உள்ள ஏற்றத் தாழ்வு எளிதில் போகாது. கொழுத்த பணம் இருப்பதனாலேயே பள்ளிக்கூடத்தின் நிழலில் ஒதுங்காதவன் படித்தவனாகி விடுவான். ஏமாந்து போன சமுதாயம், தான் ஏமாந்த நேரத்தில் ஏற்றம் பெற்றோரின் வார்த்தைகளையே கேட்டு வாழ நேரிடும்.

அதனால் மனித நாகரிகம் நச்சுத் தன்மை அடைந்து விடும். பொருளாதார சமத்துவம் இல்லாத நாட்டில் அறம் வளராது; அன்பு வளராது. அதனால் பாரதி, இந்தியர் அனைவரையும் ஒரே விலை மதிப்புடையவராக ஆக்க முயல்கின்றான். இது கவிஞனின் எதிர்பார்ப்பு. ஆனால், நடக்கத்தான் இல்லை.

இந்தியர்களில் சரி பாதிப் பேர்களுக்கு மேல் வறுமைக் கோட்டுக்குள் வீழ்ந்து கிடக்கின்றனர். இரண்டு கைவிரல்களின் எண்ணிக்கையுடையோரிடத்தில் இந்தியச் செல்வம் குவிந்து கிடக்கிறது. இன்று கடவுள், கல்வி, வாக்கு, நீதி அனைத்தையும் விலைக்கு வாங்கும் அளவுக்குச் செல்வம் ஒரு புறத்தில் குவிகிறது. இன்னொரு புறத்தில் விலையற்ற மனிதர்கள் உடல் உழைப்பையும் அதுவும் விலை போகாத நேரத்தில் உயிரையும் விலை பேசி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பாரதியின் 'எல்லாரும் ஓர் விலை' என்ற இலட்சியம் நிறைவேறினால்தான் இந்திய விடுதலை முழுமை பெறும்.

கடைசியாக பாரதி 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்று முடிக்கின்றான். பாரதிக்கு 'மன்னர்' என்ற சொல் மீதோ, மன்னராட்சி மீதோ காதல் இல்லை. 'குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு' என்று விரும்பிய பாரதி, எப்படி மன்னரை விரும்புவான்; அது மக்களுக்குத் தீராத் துன்பங்கள்! 'எல்லாரும் மன்னராகிவிட்டால் என்ன ஆவது? பாரதியின் இந்நாட்டு மன்னர்' என்ற வரிக்குச் சரித்திர கால மன்னர்களை நினைத்துக் கொண்டு அர்த்தம் செய்துவிடக் கூடாது. பாரதி வாழ்ந்த காலம் எல்லா அதிகாரங்களும் மன்னரிடத்தில் இருந்த காலம். சாதாரண மக்களுக்கு மன்னர்தான் அறிமுகம்! சாதாரண மக்களுக்குத் தெரிந்தது மன்னரின் அதிகாரம்தான். ஆதலால் மக்களுக்கே எல்லா அதிகாரமும் என்ற கொள்கையை வேறுவார்த்தையில் பாரதி சொல்கின்றான். ஆனால், பாரதியின் மன்னர்கள் நாட்டின்

மக்கள். இந்த மன்னர்கள் அதிகாரம் செலுத்துபவர்கள் அல்லர்; ஆட்சி செலுத்துபவர்கள். இவர்களின் ஆட்சி, வாக்குகளால் அமையும் ஆட்சி! வாக்குகளால் ஆட்சியை அமைக்கும் பொறுப்புள்ள மக்களாகிய மன்னர்கள் வாக்குகளைத் தேர்ந்து தெளிந்து பயன்படுத்த வேண்டும். வாண வேடிக்கைகள், அழகொழுகும் பேச்சுகள், பகட்டான பேரணிகள், அணி அணியாக ஊர்ந்துவரும் கார்கள்- இவைகள் மக்களாகிய மன்னர்களின் அதிகாரத்தைக் கெடுக்கும் முதலாளித்துவத்தின் நச்சுப் பூச்சிகள்; இந்த மயக்கத்தில் வாக்காளர்களாகிய மன்னர்கள் மதுரையை ஆண்ட பாண்டியன் நெடுஞ்செழியனைப் போல முறை பிறழ்ந்து விடாது குடியாட்சி என்ற செங்கோலைத் தாங்கி, வாக்காகிய நீதியை சமுதாய நீதியின் பக்கமே வழங்க வேண்டும். இங்ஙனம் இவர்களை பாரதி இந்நாட்டு மன்னர் என்று போற்றுகின்றான்.

பாரதியின் படிமுறை வளர்ச்சியில் இன்றைய இந்திய நாடு எந்தப் படியிலும் வெற்றி பெறவில்லை. எங்கு பார்த்தாலும் சாதிச் சண்டைகள், மொழிக் கலகங்கள், மதக் கலவரங்கள். வறுமைக்கும் வளத்துக்குமிடையே அகன்ற இடைவெளி! வாக்குரிமைகள் பறிக்கப்படுகின்றன! இதுதான் இன்றைய இந்தியா.

நம் பாரதியின் வழியில் சாதி வேற்றுமைகளை நீக்கி, எல்லாரையும் ஓரினமாக்கி, இந்தியராக்கி ஒருநிறையில் கொண்டுவந்து நிறுத்தி, ஒரு விலையுடையவராகச் செய்து சமுதாய நீதி காக்கும் மன்னர்களாக்குவோமாக!

## அஞ்சோம்! துஞ்சோம்!

வாழ்க்கை என்பது மலர்களின் மீது நடப்பதன்று. வாழ்க்கை என்பது இன்னல்களும் நிறைந்தது; இன்பங்களும் நிறைந்தது. உண்டு, உடுத்துக் கூடிவாழ்வது மட்டும் வாழ்க்கை

இல்லை. இவற்றிற்கு மேலும் வாழ்க்கைக்குக் குறிக்கோள்கள் உள்ளன. குறிக்கோளுடைய வாழ்க்கை சிறப்புடையது. ஆனால், இன்னல்கள் நிறைந்ததாகத்தான் இருக்கும். உயர் குறிக்கோளும் ஆர்வமும் ஆளுமையும் உடைய வாழ்க்கையை விரும்பி மேற்கொள்பவர்கள் இன்பத்தை விரும்பமாட்டார்கள். இடும்பை-துன்பம் இயல்பென்பர் சிலர். இத்தகை யோரைத் துன்பங்கள் தாக்கினாலும் அவர்கள் துன்புறுவதில்லை. உலைக்களத்தில் அடிபடும் இரும்பு, எஃகாதல் போல, உயர் குறிக்கோளுடையார், துன்பம் சுடச்சுட உரம் பெறுவர். அவர்கள் நலிவதில்லை. அரைக்கீரை கிள்ளக் கிள்ள வளரும். அதுபோல் குறிக்கோளும் அதனை அடையும் ஆர்வமும் திறனும் உடையவர்களைத் துன்பம் துவளச் செய்யாது. மாறாக வளர்க்கும்.

இடர்களுக்கு அஞ்சாது நாட்டுப் பணியில் ஈடுபட வேண்டும். எந்தக் காலத்திலும் உண்மைக்கு உழைக்கும் பணி, பொதுப்பணி இன்பமாய் இருந்ததாக வரலாறு இல்லை. சமுதாயத்தில் களைகளே கழனியின் பயிர்களைச் சாப்பிட்ட வரலாறு தான் மிகுதி. ‘அறிவால் சிந்தனை செய்! அறிவாளியாக இரு’ என்ற கிரேக்கச் சிந்தனையாளனை அன்றைய முட்டாள் உலகம் நஞ்சு கொடுத்துக் கொன்றது. உலகம் உருண்டை என்று உண்மை சொன்ன கலிலியோ பெற்ற பரிசு என்ன? ஏசுவிற்குத்தான் இந்த உலகம் எதைப் பரிசாகத் தந்தது? அப்பரடிகள் வாழ்க்கையிலும் சோதனைகள் தானே மிகுதி. இதுதான் வரலாறு. ஆதலால் இடுக்கண்களுக்கு அஞ்சாமல் பணி செய்யவேண்டும்.

இந்தியாவின் விடுதலைப்போர் இடுக்கண் நிறைந்தது என்று பாரதி உணர்கிறான்; உணர்த்துகிறான். அடுத்து பாரதி நயம்பட ஓர் உண்மையைச் சொல்கிறான்; “ஏழையராகி இனி மண்ணில் துஞ்சோம்” என்று. என்ன பொருள்? ஏழையர் இயற்கையில் ஏழையரல்லர். மற்றவர்கள் யாரும் ஏழைய

ராக்கவுமில்லை. பாரதநாடு ஏழை நாடா? இல்லை-இல்லவே இல்லை. ஆனால், ஏழையர் நாடாக இருக்கிறது. "கணக்கின்றித் தரும் நாடு" என்று கூறுகிறான். "கதலியும் செந்நெலும் நல்கும் எக்காலும்" என்றும் பாடுகின்றான். அப்படியானால் ஏன் ஏழையராகின்றனர். பாரதியே விடையும் கூறுகின்றான். கையை விரித்து இல்லை என்று கூறும் வாழ்க்கை கேவலமானது. பரிதாபத்திற்குரியது. இல்லை என்று அயர்ந்து உறங்குவானை நிலமகள் கேலி செய்கிறாள். ஏன்? நிலமகள் தன் மடியில் ஆயிரமாயிரம் பொருள்களை வைத்திருக்கிறாள்; இனிய சுவை நல்கும் கரும்பு வைத்திருக்கிறாள்; வாழ்விக்கும் வாழை வைத்திருக் கிறாள். இவற்றை எடுத்து அனுபவிக்கும் ஆள்வினை வேண்டும். இரந்து கேட்கும் விரித்த கையை மடக்கி உழைத் திடும் கரங்களாக்கினால் என்ன கிடைக்காது? எல்லாம் கிடைக்கும். இதற்கு மனம் இல்லாமல் ஏழையராகி-ஏங்கித் தவிக்கும் மனப்போக்கை மறுக்கிறார். தூங்காதே! உழைக்கும் நேரத்தில் உறங்காதே! உழைக்கும் நேரத்தில் உறங்கினால் 'ஏழையராதல்' இயற்கை-தவிர்க்க முடியாத இயற்கை நியதி! ஆதலால் உழைத்து வாழவேண்டும்.

உழைத்தால் மட்டும் போதுமா? போதாது. படைப்புப் பல படைத்தாலும் பலரோடு உண்ணும் அறிவு தேவை உணர்வு தேவை; தொழில் செய்தல் இயற்கை; மனிதனின் கடமை. ஒருவர் செய்யும் தொழிலே கூட தொண்டாகவும் விளங்கும் தன்மை உடையதாக அமையும். தொண்டாக மற்றவர் நலனுக்கு உதவியாக இருப்பது தொழிலாயினும், அத் தொழில்வழி வருவாய் பெற்றாலும் கூட தொழில் உயர்வான தொழிலே! பாராட்டுதலுக்குரிய தொழிலே; ஆயினும், தொழிலில் சில இழி தொழிலாகக் கருதப்பெறுகின்றன. தொழிலில் ஏது இழிவு? உயர்வு? ஆம்! தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை. இது உறுதி. பாரதியே விஞ்ஞானியாகத் தொழில் புரிதலையும் சந்தி பெருக்கும் தொழில் புரிதலையும் சமநிலையினதாகப் பாடியுள்ளான்.

செய்கின்ற தொழிலில் இழிவே இல்லை என்று கூறுதல் முடியாது. வட்டிக் கடை ஒரு தொழில் தானே? ஆம்! தொழில் தான். ஆனால் அஃது இழி தொழில்தான்! அது போலவே ஒரே தொழில் கூட உயர்வாகவும், இழிவாகவும் விளங்குதல் உண்டு. எழுத்தும் பேச்சும் சிறந்த தொழில்கள். மற்றவர்க்கும் பயன்படும் தொழில்கள். ஆனால், எழுத்தும் பேச்சும் மக்களின் உணர்ச்சிகளைப் பொறுத்ததாக அமையின் இழி தொழில்களாகும். மக்களின் தேவைகளை அறிந்து அமையின் உயர் தொழில்களாகும். தன்னலம் தீது. தன்னலத்தின் காரணமாக மற்றவர்களுக்கு வாழ்க்கை வழங்காத, வழங்கும் இயல்பில்லாத தொழில்களை மேற்கொள்வது இழி தொழில்களாகும். தன்னலம் என்பது நஞ்சு; தன்னலம் வாழ்விப்பது போல் காட்டி அழித்துவிடும். தன்னலம் பொது உரிமையில் பொது நலத்தில் பாதுகாப்பாக இருக்கும். பொதுமை சிறப்பாக இல்லாத போழ்து தனித் தன்மையும் கூட இல்லாது அழிந்து போகிறது. அப்பப்பா! தன்னலம் என்ற பேய் பெரிய நாடுகளைக் கூட அடிமைப் படுத்தி வருகின்றது. கோளும் பொய்யும் புறங்கூறலும், காட்டிக்கொடுத்தலும் தன்னலத்தின் நச்சுறுப்புகள். இவை களை அறவே புறக்கணிக்க வேண்டும்.

ஒவ்வொருவரும் நாட்டுப் பற்று உடையவராக வாழ்ந்திடுதல் வேண்டும். வாழ்க்கை குறிக்கோளுடையதாக அமைதல் வேண்டும். இன்பத்தைத் தேடி அலையக்கூடாது. இடர்ப்பாடுகளைக் கண்டு அஞ்சுதல் கூடாது. ஆள்வினை யற்று உறங்கி வாழ்தல் கூடாது. செல்வங்கள் பல வழங்கிடும் நாட்டில் ஏழையராக வாழ்தல் கூடாது. தன்னலத்தைத் துறக்க வேண்டும். பொது நலத்திற்குத் துணை நிற்க வேண்டும். தன்னலச் சார்பான தொழில் எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும் இழி தொழிலேயாம்.

இந்நெறி முறைகளில் நின்று நாட்டினைப் போற்றுக! பணி செய்க!

*'இன்னல் வந் துற்றிடும் போததற் கஞ்சோம்! ஏழையராகி இனி மண்ணில் துஞ்சோம்!'*

பாரதியார்

## உலகம் இன்பக் கேணி!

இன்று கடவுள் நம்பிக்கையும் வழிபாடும் கேலிக் கூத்தாகிக் கொண்டு வருகிறது. பல பெயர்களில் விளங்கிடும் கடவுள் வழிபாடு, வேற்றுமைகளுக்கு உள்ளாக்கப் பெற்று மதச் சண்டைகளும் கடவுட் சண்டைகளும் நடைபெறு கின்றன. தத்தம் மதமே உயர்ந்தது என்னும் மத வெறியும், தத்தம் கடவுளே உயர்ந்தது என்ற கொள்கையும் மக்கட் சமுதாயத்தில் எதிர் விளைவுகளை உண்டாக்கியிருக் கின்றனவே தவிர, சமய நம்பிக்கைகள் வளரவில்லை. மதமாற்றங்கள் தொடர்ந்து செய்யப் பெறுகின்றன. மத மாற்றங்களுக்குரிய காரணங்கள் அற்பமானவை. கடவுள்-மத நம்பிக்கையுடையவர்கள் வேற்றுமைகளை மறந்து தத்தம் நெறியில் நிற்றல் சமயத்திற்கு ஆக்கம் தரும். அது போலவே ஒரே மதத்தில் உள்ள பல்வேறு மக்களும் தத்தம் கடவுளே பெரிது என்று சண்டை போடக் கூடாது. கடவுள் ஒருவர் தான்! ஒருவரே தான்! இந்துக் கடவுள், கிறிஸ்துவக் கடவுள் முஸ்லீம் கடவுள் என்றெல்லாம் கடவுள்கள் பல அல்ல. அனுபவ மெய்யுணர்வு வேறுபாட்டால் சமயங்கள் பலவாயின.

நிலம், நீர், தீ, வளி, வெளி இவை உலகனைத்திற்கும் பொது. இந்த ஐம்பெரும் இயற்கையிலமைந்த உள் பொருள்கள் உலகம் முழுவதும் பரவிக் கிடக்கின்றன. இவைகளின் பெயர்கள் நாடுதோறும் மாறுபடலாம். ஆனாலும், பொருளில், பொருளின் தன்மையில் மாற்றம் இல்லை என்பது உண்மை. இப்பொருள்கள் உயிர்க் குலத்திற்குப் பயன்படும் வகையிலும் மாறுபாடுகள் இல்லை. அது போலத்தான் 'கடவுள்' என்பதும் உலகிற்கு ஒன்றேதான்!

கடவுள் பலவாகியது, மதங்கள்தோறும் வேறு வேறாகியது கடவுளை வைத்துப் பிழைப்பு நடத்துபவர்கள் செய்த சிறுபிள்ளைத்தனம். அதனால், கடவுள் ஒன்றே என்னும் நம்பிக்கை வேண்டும். கட்டுக்கதைகளுக்கு அப்பாற் பட்டதாக, பேராற்றலுடையதாக, பேரின்பம் உடையதாக, எங்கணும் நீக்கமற நிறைந்திருப்பதே கடவுள். நாம் எல்லாரும் கடவுளின் மக்கள். ஆம்! ஒரே கடவுளின் மக்கள்தான்!

பாரதியாரின் தத்துவம் விரிந்தது; பரந்தது. சாதிகளைக் கடந்தது; மதங்களைக் கடந்தது; கடவுளின் மக்கள் நாம் அனைவரும். இந்த அரிய கொள்கை இந்தியாவில் வெற்றி பெறவில்லையே! இந்திய சமூகம் இன்று பாரதியின் அடிச்சுவட்டில் நடை போடவில்லையே! சாதிகளைக் காப்பாற்ற சங்கங்கள், மாநாடுகள் அமைத்து ஆர்ப்பாட்டங்கள் செய்கிறார்களே! சாதிகள், மதங்கள் தம்முள் முரணி மோதிக் கொள்கின்றனவே! இந்து, கிறிஸ்துவர், முஸ்லீம் என்கிற பிரச்சினைகளை வைத்தே எத்தனை இயக்கங்கள்! போராட்டங்கள்! கலகங்கள்! அடக்கு முறைகள்! ஏன் இந்த அறியாமை? பாரதி, இந்த நாட்டு மக்களுக்குத்தானே சொன்னார். சாதிகள் மட்டுமா? சாதிகள் வாரியாக 'கடவுள் படைப்பு' விளையாட்டுக்கள்! இன்று இந்தியாவில் சராசரி ஒரு நபருக்கு 10 கடவுள்களுக்குக் குறைவில்லை. ஆனால், நடப்பது என்ன? உயிர்க்குலப் பகை வளர்கிறது! வறுமை வளர்கிறது. கடவுளை வழிபடும் நாட்டு மக்களுக்கு இது என்ன தண்டனையா?

இந்த உலகு இன்பக்கேணி என்று பாராட்டுகின்றான் பாரதி. இந்த உலகை இன்பக்கேணியாக அமைக்கவேண்டும். துன்பத்தின் சாயலையும் துடைத்தெறிய வேண்டும். கடவுள் ஒன்று என்று நம்பு! கடவுளை வழிபடு! கடவுள் வழியில் நட! கடவுளை நினைப்பற நினைப்பதன் மூலம் கடவு ளுடைய பேரறிவு, பேராற்றல், பேரின்பம் ஆகியவற்றை மானிட சாதி உரிமைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அப்போது மானிட சாதி படைப்பாற்றல் உடையதாக விளங்கும். உலகின் துன்பத்திற்குக் காரணமாக இருப்பவைகளை மானுடம் வென்று விளங்கும். அப்போது உலகு இன்பக்கேணியாக மாறும்.

பாரதியின் நூற்றாண்டு நினைவு பெறவிருக்கிறது. அவனுக்கு இந்த நாடு என்ன செய்திருக்கிறது! ஒன்றும் செய்யவில்லை. பாரதியின் தத்துவங்களுக்குச் செயலுருவம் கொடுக்க வேண்டாமா? ஆம்! கொடுத்தேயாக வேண்டும். ஒரே கடவுள் நம்பிக்கை கொள்ளுவோம்! மதவேற்றுமைகள் பாராட்டாது ஒழுகுவோம்! சாதி வேற்றுமைகளை அடியோடு நீக்கி ஒரு குல உணர்வை வளர்க்க வேண்டும். இந்த உலகைத் துன்பமானது என்று பாடிய கவிஞர் வரிசையில் வந்தவனல்லன் பாரதி. புதுமைத் திறம் பாடியவன்; இந்த உலகை இன்பக்கேணியாக எண்ணிப் பாடியவன். நாம் இன்பக்கேணியாக அமைக்க வேண்டாமா?

> **"ஒன்று பரம் பொருள் நாம் அதன் மக்கள்**
> **உலகின்பக் கேணி"**

## சிந்தனையில் தெளிவு தேவை!

உலகு இயங்குகிறது. மனிதகுல வரலாறு நடக்கிறது. நடந்து கொண்டேயிருக்கிறது. மனிதகுல வரலாறு பொருளுடையதாக, பயனுடையதாக அமைவது மானிட சாதியின் சித்தத்தைப் பொறுத்தது. வாழ்க்கையை உந்திச் செலுத்தும் மனிதனின் மனம் எதையும் பற்றும். புற உலகிற்கும் அக உலகிற்கும் இடையில் உள்ள வாயில் மனமே. மனம் அடைபட்டிருந்தால் செய்திகளின் வாயில்கள் அடை பட்டுப் போகும். அதனால், மனம் தன்னலம் மிக்க மிருகத் தனமான குணங்களுடன் விளங்கும் அல்லது பொதுமையற்ற, அருள் நோக்கமில்லாத ஆயினும் பயனற்ற தூய்மையும் தவமும் உடையதாக விளங்கும். இவ்வேறுபாடுகள் உயிரியற்

கையைப் பொறுத்தது. மனம் பற்றியதை புத்தி ஆராயும்; கழிப்பன கழிக்கும். ஏற்பன ஏற்றுச் சித்தத்திற்குத் தரும். சித்தம் மீண்டும் காரண காரியங்களுடன் ஆராய்ந்து தெளிந்து துணிந்து ஏற்கக்கூடியதை நிச்சயித்து ஏற்றுக் கொண்டு செயற்களனுக்கு, தான் ஏற்றுக் கொண்டுள்ள முடிவுகளை அனுப்பும். இது மனிதனின் அகநிலை வாழ்க்கை வளர்ச்சி முறை.

"மனம் போன போக்கில் போகாதே!" என்ற பழமொழி ஏன் பிறந்தது? மனம் எளிதில் பற்றும். ஆனால், ஆராய்ந்தறியும் தகுதியும் செயற்பாடும் அதற்கு இல்லை. ஆராயும் தகுதி புத்திக்கே உண்டு. அதனால்தான் ஏதாவது தவறுகள் நிகழின் "புத்தி இருக்கிறதா?" என்று கேட்கின்றனர். புத்தி இருந்தால் மட்டும் போதாது. சிந்திக்கும் இயல்பும் வேண்டும். சிந்தனையில் தோன்றும் முடிவுகளே நல்லவையாக, ஆக்க வழியிலானவையாக, இன்பந்தருவனவாக அமையும். துணிவும் சிந்தனையின் வரம்பில்தான் தோன்றுகிறது. முறையாகச் சிந்திப்பவர்களிடம் "இதுவா? அதுவா?" என்ற ஊசலாட்டம் இருக்காது. தெளிவும் துணிவும் இருக்கும். அங்ஙனம் சிந்தனையில் பிறந்த முடிவுகளால் இந்த உலகம் இயங்குகிறது.

இந்த உலகமே சித்தமயம் என்கிறான் பாரதி. சிந்தனையில் உறுதி தேவை. தன்னயப்புடையவர்களிடம் முடிவுகள் அடிக்கடி மாறும். மனம், புத்தி இவைகளுடன் உடன்பட்டும் வேறுபட்டும் சிந்தித்தல் அவசியம். பலர், மனம் புத்தி இவைகள் வழியிலேயே தமது சிந்தனையையும் செலுத்துவர். இத்தகையோரிடத்தில் பொறிகளுக்கு மனம் "ஆமாம் சாமி!" யாகும். புத்திக்குச் சித்தமும் 'ஆமாம் சாமி!' போடும். எல்லாம் ஒரே மாதிரியான ஆமாம் சாமிகளானால் ஆய்வு நிகழாது; தெளிவும் இருக்காது; துணிவும் இருக்காது; உறுதியும் இருக்காது. தத்தம் நிலையில் முடிவு எடுக்காது

பொறிகள் வழியிலேயே செல்லும் மனம், புத்தி, சித்தம் பயன்படாதன; துன்பம் தருவன.

இத்தகு பொறி, புலன்களையுடையோர் உறுதி இல்லாதவர்களாயிருப்பர். பயந்தவர்களாயிருப்பர்; கோழை களாகவும் இருப்பர். ஆனால், வாய் மிடுக்கும் இருக்கும். இவர்கள் குரைக்கும் நாய்கள் போன்றவர்களே! தெளிவும் உறுதியும், சிந்தனையுடையாருக்கே உண்டு. இச்சிந்தனையில் நாம் வாழப் பிறந்தவர்கள். வேடிக்கை மனிதர்களாய்ச் சாகக் கூடாது; ஏமாற்றிப் பிழைக்கக் கூடாது; கலகப் பூச்சிகளாய் வாழக் கூடாது. அறிவறிந்த ஆள்வினை மேற்கொள்ள வேண்டும். பொருள்களைச் செய்து குவிக்க வேண்டும். எல்லாரும் ஒரு குலமாய் ஒத்து வாழ்தல் வேண்டும் என்று உறுதி தோன்றி விட்டால் இந்தியாவிற்கு ஏன் இடர்ப்பாடு? இந்தியர்களுக்கு ஏது துன்பம்? கொள்கையில் கோட்பாட்டில் தெளிவும் உறுதியும் இருக்குமாயின் எத்துன்பத்தையும் வெற்றி காணலாம். தொகுதி தொகுதியாக வரும் சோதனைகளையும் வெற்றி காணலாம். வாழ்க்கையில் தோல்வி, துன்பம் என்றால் அதற்குக் காரணம் வேறு யாரும் அல்ல. தோல்வியைத் தழுவித் துன்புறுபவர்கள். பழியை யார் மீதாவது போடுவார்கள். ஆனால், அது உண்மையன்று, சித்தம் இருக்கிறது. ஆனால், சிந்திப்பதே இல்லை. ஏன்? அவர்கள் சித்தமே அவர்களை இடித்துக் காட்டலாம். அதனை அறிய விரும்பாதவர்கள் சிந்திக்கப் பயப்படு வார்கள்; சிந்திக்க மாட்டார்கள். வேறு சிலர் எல்லாம் தெரிந்தது தானே என்று சிந்திக்க மறுப்பார்கள். தெரிந்தவையானாலும் மீண்டும் மீண்டும் சிந்திப்பதில் பயன் மிகுதியும் உண்டு. அரைக்க அரைக்க சந்தனம் மணமுடையதாதல் போல் சிந்திக்கச் சிந்திக்க தெளிவு மிகும். சற்றும் குழப்பமும் ஊசலாட்டமும் இல்லாத நிலை தோன்றுவதோடன்றி, புது நெறிகளும் தோன்றும். ஆதலால், சிந்தனையில் உறுதி தேவை.

இன்று, இந்தியா அடிமையாவதற்கு முன் இருந்த நிலையை அவாவி நிற்கிறது. அடிமை நிலையை எய்துதற்குரிய குணக்கேடுகளை முயன்று அடையத் துடிக்கிறது. சுதந்திரம் என்பது கேலிக்கூத்தாகி வருகிறது. மனம் போன போக்கில் அவரவர் விருப்பப்படி நடப்பது சுதந்திரம் என்று கற்பித்துக் கொண்டுள்ளனர். சக்தி படைத்தவர்கள் கிடைத்ததைச் சுருட்டுகிறார்கள். சாதிமதச் சண்டைகள் தலைகாட்டுகின்றன. இந்தப் போக்கு நாட்டுக்கு நல்லதல்ல. நமக்கும் நல்லதல்ல என்ற சிந்தனைத் தெளிவு நமக்குத் தேவை.

*"முப்பது கோடியும் வாழ்வோம்–வீழில்*
*முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்"*

என்ற தெளிவான முடிவில் நாம் உறுதியாக நிற்க வேண்டும். அங்ஙனம் நின்றால் எத்துன்பத்தையும் எதிர்த்து வெற்றி பெறலாம். இது பாரதியின் ஆணை!

## அச்சம் தவிர்!

மனித குலத்தில் அரசு–ஆட்சி முறை தொடங்கிய காலத்திலிருந்தே அரசுக்குப் பயப்படுகிற உணர்வும் ஒருசேர வளர்ந்து வந்துள்ளது. ஏன்? ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர்கள் ஏதோ ஒரு பெயரில் மக்களை அடக்கியே ஆண்டனர்; தம் வழி வராதாரைத் துன்புறுத்தினர். அதிகாரத்தில் உள்ளவர்கள் நேரிடையாகச் செய்யாது போனாலும், ஆட்சியாளர்களைச் சார்ந்தவர்கள்கூடத் தொல்லை கொடுப்பர்.

இப்போது நடப்பது மக்கள் ஆட்சி. ஆளுங் கட்சியினைச் சார்ந்தவர்கள், "ஆட்சி, மக்களாட்சி" என்று உணர்வதில்லை. தங்கள் கட்சியே ஆள்கிறது–தாங்கள் நினைத்தவெல்லாம் நடக்க வேண்டும் என்று எண்ணுகின்றனர்.

அவர்கள், மக்களையோ அரசு அலுவலர்களையோ அணுகும் போதெல்லாம் தனித் தோரணைகள்! ஏன், இந்த நிலை? அரசுகளுக்கு ஏது பணம்? அவர்கள் என்ன நிலையான அதிகாரம் பெற்றவர்களா? ஒன்றும் இல்லை. ஆனாலும், மக்கள் பயப்படுகின்றனர். சாதாரண மக்கள் மட்டுமா பயப்படுகின்றனர்? அறிஞர்கள்கூட அஞ்சுகின்றனர்! இங்ஙனம் பலர் அஞ்சுவதை ஆட்சியாளர்கள் வரவேற்பது அவர்களுக்கும் நல்லதல்ல. மக்கள் அஞ்சி வாழ்தலும் நல்லதல்ல.

"அச்சமே கீழ்களது ஆசாரம்" என்று திருக்குறள் கூறும். ஆட்சிக்கு அஞ்சுவதால் தவறுகள் சுட்டிக் காட்டப் பெறுவதில்லை. அதனால், தவறுகளே நியாயங்களாகி விடுகின்றன. அஞ்சி வாழ்வதால் தெளிவும், ஆண்மையும் நாளடைவில் மங்கிப்போய்ப் பிண வாழ்க்கை வந்தடைகிறது. ஆதலால், அச்சம் தீது! யார் மாட்டும் அச்சம் தீதே! ஆதலால்தான் "அச்சம் தவிர்" என்று பாரதி கூறினான்.

அச்ச உணர்வு தோன்றுதற்குரிய களங்கள் என்னென்ன? ஆசையிலிருந்துதான் அச்சம் தோன்றுகிறது. தவறுகளுக்கெல்லாம் ஆசைதான் மூலகாரணம். அப்படியானால் ஆசையில்லாமல் துறவிகளாக வாழ்ந்தால்தான் அச்சமின்றி வாழ முடியுமா? அப்படி இல்லை. தனக்குத் தகுதியுடையதல்லாத ஒன்றைக் குறுக்கு வழிகளில் - முறைகேடான வழிகளில் அடைய முயல்வதற்கு ஆசை என்று பெயர். நன்றாக உழைத்து, உழைப்பால் உறுபொருள் ஈட்டினால் அப்பொருள் அச்சத்தைத் தராது; இன்பத்தைத் தரும். குறுக்கு வழிகளில் பொருள் ஈட்டினால் அப்பொருளைத் துய்க்கவும் முடியாது; அச்சமே ஆட்கொள்ளும்.

ஒரு பெண்ணைக் காதலித்து, அவளுக்கு இன்பமூட்டித் தான் இன்புறுதல் ஆசையன்று. இரவலனாகவும் பாவியாகவும் கடவுள் முன்னால் நின்று அழுது தொழுதல் அச்சத்தின் வழிப்பட்டது. ஆதலால், அச்சமில்லாத

வாழ்க்கை மேற்கொள்ள வேண்டுமானால் ஆசைகளைத் தவிர்க்க வேண்டும். இவை மட்டுமே அச்சத்திலிருந்து தப்பிக்கப் போதா. உலகியல் ஆட்சியமைப்பில் நியாய வாதிகள்கூட ஆணைக்குக் கட்டுப்படவில்லை என்று நினைத்து அழிக்கப்படுவர். கிரேக்க நாட்டு அறிஞன் சாக்ரட்டீசு சிறந்த சிந்தனையாளர். ஆனால் அவர் காலத்தில் அவரை ஏற்க உலகம் தயாராக இல்லை! ஆட்சியாளரால் நஞ்சு கொடுக்கப்பட்டுச் சாகடிக்கப் பெற்றார். ஏசு, நல்லறிஞர்; சான்றாண்மையாளர். அவரையும் உலகு காட்டிக் கொடுக்க - அநியாயமே ஆட்சியின் இலக்கண மெனக் கொண்ட அரசு, சிலுவையில் அடித்துச் சித்திரவதை செய்து கொன்றது. அப்பரடிகளை நீற்றறையில் இட்டுச் சித்திரவதை செய்தது பல்லவப் பேரரசு. இப்படிப் பல நூற்றுக்கணக்கான சான்றுகள் காட்டலாம்.

இத்தகு கொடுமைகளை-ஆட்சியின் அநியாயங்களைத் தட்டிக் கேட்க வேண்டுமானால் மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். மக்களிடத்தில் பிரிவினைகள் வேற்றுமைகள் இருப்பது இத்தகைய ஆட்சியாளர்களுக்கு நல்லது. ஆதலால், பிரிவினைகள் இல்லாதுபோனாலும் பிரிவினைகளைத் தோற்றுவிப்பர். நமது மக்களிடத்தில் பிரிவினைக்குப் பஞ்சமே இல்லை. ஒன்றுக்கும் உதவாத அற்பக் காரியங்களுக்குக்கூடத் தந்தையும் மகனும் நெஞ்சு பிரிந்து வாழ்வர் என்று கவிஞன் பாரதி கூறுகின்றான். அப்பன் ஐந்து தலைப்பாம்பு என்றான்; மகன் ஆறுதலை அதற்கென்றான். போதாதா? தகப்பனுடைய கௌரவம் போய்விட்டது. இருவரும் நெஞ்சு பிரிந்துவிட்டனர். பிரிந்து இருப்பதோடு நிற்பார்களா, என்ன? தகப்பனும் மகனும் பகைவர்களாகி விடுவர். இங்ஙனம் மக்களுக்குள் பிரிவினையும் பகையும் இருக்குமானால் ஒருவருக்கொருவர் தீமை செய்து கொள்வர். அதனால் அஞ்சி வாழவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுத் தீரும். ஆதலால், பிரிவினைகளைத் தவிர்த்து, பகையைத்

தவிர்த்து மக்கள் ஒற்றுமையாக வாழ்தல் ஆட்சியாளர்களைக் கண்டு அஞ்சாதிருக்கத் துணை செய்யும்.

அடுத்து, வறுமையும் அச்சத்தைத் தரும். வறுமை என்பது ஒரு கொடிய நோய். வறுமையைத் "தொல்விடம்" என்று திருவாசகம் கூறும். மனிதனின், மனித குலத்தின் பல்வேறு திறன்களை வறுமை அழித்துவிடும். வறுமை கொடிது. வறுமையிலும் கொடியது வேறொன்றில்லை.

வறுமை இயற்கையா? செயற்கையா? வறுமையை அவரவர்களே படைத்துக் கொள்கிறார்களா? அல்லது வேறு யாராவது திணிக்கிறார்களா? உழைக்காத சோம்பேறிகள் தமக்குத் தாமே வறுமையை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். இத்தகையவர்கள் மோசமானவர்கள். உண்ண, உடுக்க ஆசைப்படுவார்கள். ஆனால், உழைப்பதற்கு மட்டும் அவர்களுக்கு மனம் வராது. உடலைக்கூட "ஊர்க்காளை" போல வளர்த்துக் கொள்வர். ஆனால், அவர்கள் மனம் உழைப்பில் நாட்டம் கொள்வதில்லை. இத்தகையோரே வறுமையின் படைப்பாளர்கள். இவர்கள் சமுதாயத்தின் நச்சுப் பூச்சிகள். விழிப்பாக இருந்து ஒடுக்கப்பட வேண்டியவர்கள். உழைப்பிருந்தும் பலர் வறுமைக்குட்பட்டுள்ளனர். இவர்களிடம் உள்ள வறுமை மற்றவர்களால் திணிக்கப்பெற்றது.

உழைப்பாளிகளின் வறுமைக்குக் காரணம் உழைக்காத உலுத்தர்கள், மற்றவர்களின் உழைப்பை அட்டை போல உறிஞ்சுவதுதான். இத்தகையோரை எதிர்த்து, தமது நியாயமான பங்கைப் பெறப் போராடும் குணம் வேண்டும். உழைக்கும் வர்க்கத்தினரிடையில் ஒற்றுமை வேண்டும்.

வறுமையில் கிடப்பவர்கள் சிந்தனை செய்கிறார்கள். ஆனால் அவர்களுடைய சிந்தனை - கவலையெல்லாம் "கஞ்சியில்லையே!" என்பதுதான். கஞ்சி இல்லையே என்ற கவலை கஞ்சியைத் தராது. கஞ்சியில்லாததன் காரணத்தை அறிந்து அக்காரணத்தையே தாக்கினால்தான் கஞ்சி கிடைக்கும்.

*"கஞ்சி குடிப்பதற் கில்லார்–அதன்*
*காரணங்கள் இவையென்னும் அறிவுமில்லார்"*

என்று பேசுவான் பாரதி.

அச்சம், வறுமை ஆகியன தனித்து நிற்பன அல்ல, இவைகளுக்கு நெருக்கமானதாக அமைந்து திரும்ப எழுந்திருக்க விடாமல் படுக்க வைத்து வெற்றி காண்பது நோய். நோய் வந்துற்றால் ஐயோ பாவம்; பார்க்காத சோதிடம் இல்லை; கும்பிடாத கடவுள் இல்லை; நேர்த்திக் கடன் செலுத்தாத தெய்வங்கள் பாக்கியில்லை. சுயமாகச் சிந்திக்க மாட்டார்கள். யார் யார் எதைச் சொன்னாலும் அதைச் செய்து திரும்பத் திரும்பத் துன்பப் படுகுழியில் வீழ்வர். ஏன் இந்த அவலம்? அஞ்சி வாழ்வதற்குப் பதில் ஆண்டுகள் சிலவே வாழ்ந்தாலும் அச்சமின்றி உழைத்து உண்டு புகழுடன் வாழ்வதே பாரதி காட்டும் வாழ்க்கை.

## இனி ஒரு விதி செய்வோம்!

ஒரு நாடு என்றால் அந்நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துணர்ந்து சமநிலையில் வாழ்வதேயாம். பாரதி வாழ்ந்த காலத்தில் இந்திய நாட்டின் மக்கள் தொகை முப்பது கோடி தான். இன்றோ அறுபத்து நான்கு கோடியைத் தாண்டி விட்டது. பாரதி இந்திய சமுதாயத்தை ஒரே சமுதாயமாக காண்கிறான். நாட்டின் உடைமைகள் அனைத்தும்–அனைத்து மக்களுக்கும் பொதுவுடைமை என்று பாடுகின்றான். பாரதிக்கு முன் தமிழில் "பொதுவுடைமை" என்கிற சொல் இல்லை. தமிழுக்கு இந்தச் சொல்லை வழங்கியவனே பாரதிதான்.

"வல்லமை உடையது வாழும்; வலிமையற்றது அழியும்." இதுவே உயிரியல் வாழ்க்கை நியதி. வல்லமை யுடையவர்கள் வல்லமையற்றவர்களை அடக்கியும், அழித்தும் தங்கள் வாழ்க்கை மாளிகையைக் கட்டி வருகின்றனர். ஒரு

மனிதனின் உணவைப் பறித்துத் தின்று கொழுத்து வளராத செல்வந்தன் இருத்தல் அரிது. பாரதி சமூக விஞ்ஞானக் கவிஞன். ஏன் ஒரு மனிதனின் உணவைப் பிறிதொரு மனிதன் பறித்து உண்ணவேண்டும்? இது அநீதி என்று கண்டிக்கின்றான். ஒரு மனிதன் நோவதை இன்னொரு மனிதன் பார்த்தும், அந்த நோவை மாற்றாது மகிழ்ந்து வாழ்கிற கேவலமான வாழ்க்கை இனியும் வேண்டுமா? அந்நிய ஆட்சியில்தான் நடந்தது; விவேகமில்லாத காலத்தில் நடந்தது. இனிமேலும் இந்தக் கேவலம் தொடர வேண்டுமா? என்று கேட்கிறான். அறிவு இல்லாத-அறிவின் பயன் இல்லாத-காட்டுமிராண்டித்தனமான வாழ்க்கை இனியும் வேண்டுமா? கூடவே கூடாது. உடனே தவிர்த்திடுக. இது பாரதியின் ஆணை.

இந்திய நாடு வளம் குன்றிய நாடு அல்ல. வளம் பல கொழிக்கும் நாடு. நான்கு நில அமைப்பும் பெற்று விளங்கும் திருநாடு. குறிஞ்சி நிலவளம்-வானுயர் தோற்றமுள்ள மலைகள்; மலைவீழ் அருவிகள்; மலைகளை மூடி மறைக்கும் காடுகள்! முல்லை நிலவளம்-இனி பொழில்கள் செழித்த மருத நிலவளம் - பாரதத்தைப் பசுமைத்தோல் போர்த்த போர்வை எனத்தகும் நெடிய வயல்வளங்கள். நெய்தல் நிலவளம்-அலை கடல்கள்; கடல்படுமுத்துக்கள். இயற்கையில் கனிகளும், கிழங்குகளும் கணக்கின்றித் தரும் நாடு. இவ்வளவு வளமிக்க நாட்டில் வறுமை ஏது? எப்படி வந்தது? மனிதனின் வஞ்சனையினாலேயே வந்தது. வஞ்சனை உலகம் வறுமையை வறியவன் தலையில் "தலைவிதி" என்று எழுதியது. பாரதிக்குத் தாங்கொணாத கோபம். அந்தத் தலை விதியை அழித்து எழுதத் துடிக்கின்றான். புதுவிதி இயற்று கின்றான். பாரதிக்குக் கோபம் உணவில்லாது வறுமையில் வாழ்கின்றவன் மீதல்ல. வறுமையாளனைப் படைத்த சமுதாயத்தின் மீதுதான். அந்தச் சமுதாய அமைப்பைத்தான் சாடுகின்றான். ஆம், ஒரு சராசரி தனி மனிதனுக்கும்

வாழ்க்கை உத்தரவாதம் அளிக்கும் சமுதாயமே சமுதாயம். அங்ஙனம் இல்லாத சமுதாயம் குறையுடையது. அந்தச் சமுதாயத்தை அழித்து விடலாம் என்கிறான். அதற்கென ஒரு புதுவிதி இயற்றித் தருகின்றான்.

> "இனி யொரு விதி செய்வோம்–அதை
> எந்தநாளும் காப்போம்;
> தனியொரு வனுக் குணவிலை யெனில்
> ஜகத்தினை அழித்திடுவோம்."

என்பது பாரதியின் பாட்டு.

பாரதி உருவாக்க விரும்பிய புது விதி நாடு விடுதலை பெற்று முப்பது நான்கு ஆண்டுகள் ஆகியும் உருவாகவில்லை. இது இரங்கத்தக்கது. பாரதியின் நூற்றாண்டு நினைவாக இந்த விதி ஏற்கப் பெற்று வாழ்க்கை உத்தரவாதம் வழங்கினால் நாட்டுக்கு நல்லது. மனித சமுதாயத்தில் ஏது தனி மனிதன்! எல்லா உயிர்களிலும்-உயிர்க்குயிராக உறைபவன் ஒரே கடவுள். ஆதலால் வேற்றுமை இல்லை. எல்லாரும் அமர நிலை எய்த முடியும். எல்லாரும் அமரநிலை எய்தக் கூடிய மெய்ஞ்ஞானக் கலையை இந்தியா உலகிற்கு அளிக்கும். இந்திய மக்கள் அனைவரும் ஒரு குலத்தினர்; ஓரினத்தவர்; இந்திய மக்கள் அனைவரும் ஒரே நிலையினர்; உரிமைகள் பொது; கடமைகள் பொது. இந்திய சமுதாயத்தில் ஏழை இல்லை; பணக்காரன் இல்லை. எல்லாரும் ஒரே விலையினர்; இந்த நாட்டு மக்கள் அனைவரும் மன்னவர்கள். இது பாரதியின் முழக்கம்.

பாரதியின் உயர்ந்த எண்ணங்கள் செயல்களாக மலரவில்லை. இந்தியாவில் வறுமையின் கொடுமை வளர்ந்து வருகிறது. உழைக்கும் சக்தி விலைப் பொருளாக்கப்பெற்று இலாப வேட்டைக்காரர்களால் சுரண்டப்படுகிறது. எங்கும் சாதிச் சண்டைகள்; "மண்ணின் மைந்தர்கள்" என்ற கொள்கை. இன்று பாரதம் பாரதியின் அடிச்சுவட்டில்

செல்லவில்லை. இன்றைய இளைய சமுதாயம் பாரதியின் கனவை நினைவாக்க முன்வரவேண்டும்! பாரதியின் புதுவிதியைப் பாரதத்தின் விதியாக சட்டம் இயற்றவேண்டும். நாடு பொதுவுடைமை நெறியில் நடைபோடவேண்டும். பொதுவுடைமை நெறி இந்த நாட்டின் ஆன்மீக வளத்தை அடித்துக்கொண்டு போகாமல் பாதுகாக்க வேண்டும். இதுவே பாரதிக்கு நாம் செய்யும் தொண்டு.

## இந்திய சமயம்

இந்தியா, உலக நாடுகளைவிடச் சிறந்தது என்று உலகத் தத்துவ ஞானிகள் பாராட்டியுள்ளார்கள். உலகத்தின் எல்லா நாடுகளிலும் ஆறுகள் உண்டு. இந்தியாவிலும் உண்டு. உலகத்தின் எல்லா நாடுகளிலும் மலைகள் உண்டு. இந்தியாவிலும் உண்டு. உலகத்தின் எல்லா நாடுகளிலும் இயற்கைவளம் உண்டு. இந்தியாவிலும் உண்டு. உலகத்தின் எல்லா நாடுகளிலும் பொருள் செழிப்பும் வறுமையும் உண்டு. இந்தியாவிலும் இவ்விரண்டும் உண்டு. உலகத்தின் எல்லா நாடுகளிலும் மனிதர்கள் உண்டு. இந்தியாவிலும் உண்டு. அப்படியானால் என்னதான் வேறுபாடு? உலகத்தின் வேறு எந்த நாட்டிற்குமில்லாத பெருமை இந்தியாவிற்கு உண்டு. அது என்ன?

உயிரைப் பற்றி அறியவும், ஆராய்ந்து தெளியவும் உயிர்க்கு உறுதி சேர்க்கவும், உயிர்க்கு உய்தி சேர்க்கவும், முயன்ற ஒரே நாடு இந்தியாதான். உடல் வாழ்க்கை வேறு- உயிர் வாழ்க்கை வேறு என்று பகுத்தறிய முடியாத நாட்டு மக்கள் இன்னும் உள்ளனர். உடல் வாழ்க்கையினும் உயிர் வாழ்க்கை சிறந்தது. உயிர் வாழ்க்கைத் துணையே உடல் வாழ்க்கை. "உயிர் நிறை நலம் எய்துதலே வாழ்க்கையின் குறிக்கோள்" என்று வாழ்ந்த மக்கள் நிறைந்த நாடு இந்திய

நாடு. இன்றும் இந்தக் குறிக்கோளைத் தொடர்ந்து வற்புறுத்தி வரும் நாடு இதுவே.

உயிர்கள் ஒன்றல்ல. பலப்பல. உயிர்களிடையில் வேறு பாடுகள் இல்லை. எல்லா உயிர்களும் பிறப்பில் ஒத்தவை. பிறந்த எல்லா உயிர்களும் வாழமுடியும்; வாழ்வாங்கு வாழமுடியும். எல்லா உயிர்களும் இன்ப அன்பு நிலையை எய்த முடியும். இங்ஙனம் உலகத்திற்குச் சொல்லுகின்ற ஒரே சமயம் இந்திய நாட்டுச் சமயம்தான். உலகிற் பிறந்த எந்த மனிதரையும் "அஞ்ஞானி" என்றும் யாரை நோக்கியும் "உனக்கு நரகம்"தான் என்றும் இந்திய சமயம் கூறாது. அப்படிக் கூறுவதை ஓர் உயர்ந்த சமயம் என்றும் ஏற்றுக் கொள்ள இயலாது. இந்திய சமயம், கட்டுக்கோப்பான வலிமை பொருந்திய சமய அமைப்பை அமைக்காததற்கும், நெகிழ்ந்து கொடுக்கக் கூடிய வாழ்க்கை முறைகளைக் கொண்டதற்கும், சமயத்தை, பிரச்சாரத்திற்குரியதல்லாமல் வாழ்க்கை முறையாக ஏற்றுக் கொண்டதற்கும், மதமாற்றம் முதலியவற்றிற்கு முயற்சிக்காமல் இருந்ததற்கும் இந்திய சமயத்தின் பரந்த கொள்கையே காரணம்.

இந்திய சமயம் பிணக்குகளைக் கடந்தது; வேற்றுமை களைக் கடந்தது. எந்தச் சூழ்நிலையிலும் உயிர் உய்திப் பெற முடியும் என்ற நம்பிக்கையுடையது. இந்திய சமயம் மக்களை இரும்புப் பிடியாகப் பிடித்து அலைக்கழிப்பதில்லை. இந்திய சமய வழிப்பட்ட புரோகிதர்கள், மதத் தலைவர்கள் ஆகியோருக்கும் சமுதாயத்தின்மீது இரும்புப் பிடியான ஆதிக்கப் பிடிப்பில்லை. அவரவர் விருப்பத்தைப் பொறுத்ததே அவரவர் மேற்கொள்ளும் சமயம்; ஒழுகலாறு. இஃது இந்திய சமயத்தின் சிறந்த கொள்கை; கோட்பாடு. உலகியலில் எந்தப் பெயர் சொல்லி எப்படிக் கடவுளைத் தொழுதாலும் அது ஏற்றுக்கொள்ளக்கூடியவொன்றே. இத்தகைய பரந்த, நெகிழ்ந்து கொடுக்கக் கூடிய சமயத்தைத் தான் இந்திய சமயம் என்கிறோம். இது காலப்போக்கில்

"இந்து சமய"மாயிற்று. இந்திய சமயம் இந்து சமயமான போது வேண்டாத சில பழக்கங்களை உரிமையாகக் கொண்டது. பரந்த மனப்பான்மைக்கு இழுக்குத் தரக்கூடிய சில குறுகிய பழக்கங்களையும் வழக்கங்களையும்கூட அணைத்துக் கொண்டது. உயர்ந்த இந்திய சமயத்தில் ஆழ்ந்து திளைத்த கவிஞன் பாரதி.

உயிர்கள் வேறுபாடுடையன அல்ல. எவ்வுயிரும் இறைவன் சந்நிதியே என்பது இந்து சமயத்தின் அடிப்படைக் கொள்கை. உயிர்க்கு உயிராக இறைவன் இருந்து இயக்கி எல்லா உயிர்களையும் வழி நடத்துகின்றான். நோயுற்ற உயிராயின் மருத்துவ முறையில் வழி நடத்தி, நோய் நீக்கி, நல்லுயிராக்கி, நன்னெறியில் நிறுத்தி இன்புறும் நிலையில் அமைத்திடுவான். நல்லுயிராக இருப்பின் மேலும் நன்னெறியில் உய்த்துச் செலுத்திச் சென்று இன்ப அன்பினில் அமைத்திடுவான்.

எல்லா உயிர்களிடத்தும் இறைவன் தங்கியிருக்கிறான். உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல், இறைவனுக்கு அன்பு காட்டுதல் போலாகும். எல்லாவுயிர்களும் இறைவனின் அருளுக்குப் பாத்திரமானவை என்ற கொள்கை உறுதிப் பட்டுவிடுமாயின் போரற்ற உலகத்தைக் காணலாம். எல்லா உயிர்களும் இன்புற்று வாழும் இனிய சமுதாயத்தைக் காணமுடியும். இன்றுள்ள நிலை என்ன? உள் நாட்டில் சாதி, வகுப்பு கலவரச் சண்டைகள்! மதமாற்றத்திற்குரிய முயற்சிகள்! உயர்ந்த மனித சமுதாயத்தைப் படைக்க வேண்டிய மதங்கள் இத்தகைய இழிநிலையான போட்டிகளில் ஈடுபடுகின்றன. ஏன் இந்த அவலம்? வேறு ஒரு சமயத்திலிருந்தால் இறைவன் அருள் கிடைக்காது என்று சொன்னால் கடவுள் எப்படிப் பூரணமானவன் எனப்படுவான். நிறைவு இல்லாத ஒன்று எப்படி நிறைவைத் தர முடியும்? மதமாற்றம் என்பது மதத்துக்காகச் செய்யப் படுவதுமில்லை கடவுளுக்காகச் செய்யப்படுவதுமில்லை.

உலகத்தில் முறைகேடான வழிகளில் செல்வத்தைப் பெருக்கிக் கொள்ளவும் அதிகாரத்தைப் பிடித்து வைத்துக் கொள்ளவும் செய்யும் சூழ்ச்சியேயாகும். இந்தியா உலகத்திற்கே ஞானத்தைத் தரக்கூடிய ஆன்ம வலிமை யுடையது. இந்திய மக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்கு வேறு சமயநெறி தேவையில்லை. காலச் சூழ்நிலையின் காரணமாக இந்திய சமயத்தைச் சார்ந்த மக்கள் தங்களுடைய முறைகேடான பழக்க வழக்கங்களின் மூலம் இந்திய சமயத்தைக் கறைப்படுத்தியிருக்கலாம் அல்லது குறைப் படுத்தியிருக்கலாம். ஆனாலும் இந்திய சமயம் பொதுமை யுடையது. இந்திய சமயத்திற்குச் சாதிகள் இல்லை. தீண்டாமை இல்லை. எல்லையே இல்லை. இந்திய சமயத்தின் கொள்கை உயிர்க்குல ஒருமைப்பாடேயாகும். இந்திய சமயத்தைக் குறைப்படுத்துகிறவர்களை எதிர்த்து நிற்க முடியாமல், திருத்திய நிலைகளுக்கு முயற்சி செய்யாமல், மதம் மாறுவது தன்னம்பிக்கைக்கு மாறான செயல். இந்திய சமயத்தின் உயர்வை அறியாதவர் செய்கை, உலகத்திற்கே உயிரின் மேன்மையை, உயிர்க்குல ஒருமைப்பாட்டை எடுத்துக்கூறி வழி நடத்தும் இந்திய சமயத்தில் இல்லாத மேம்பாடா வேறொரு சமயத்தினால் வரப்போகிறது?

ஆதலால், இந்திய சமயத்தின் அடித்தளத்தில் நின்று கொண்டு மனித குலத்தைப் பிரிக்கும் வேற்றுமைகளை எதிர்ப்போம்! வெற்றி காண்போம்! பாரதியின் அடிச் சுவட்டைப் பின்பற்றி இந்திய ஆன்ம ஞானத்தை உலகத்திற்கு அளிப்போமாக!

*"எல்லா உயிர்களிலும் நானே யிருக்கிறேன்*
*என்றுரைத் தான் கண்ண பெருமான்;*
*எல்லாரும் அமரநிலை எய்தும் நன் முறையை*
*இந்தியா உலகிற் களிக்கும்–ஆம்*

*இந்தியா உலகிற் களிக்கும்—ஆம்! ஆம்!*
*இந்தியா உலகிற் களிக்கும்—வாழ்க.* பாரதி

## ஓர் குலம்! ஓர் இனம்!
## ஓர் நிறை! ஓர் விலை!

இந்தியா ஒரு பழம் பெரும் நாடு. பரப்பளவில் பெரிய நாடு. இவ்விரண்டின் இயல்புக்கு ஏற்றவாறு வேற்றுமைகளும் பல்கிப் பெருகி வளர்ந்த நாடு. இந்தியா அடிமைப்பட்டதற்கே காரணம் வேற்றுமைகளின் வழி உள்ளீடழிந்ததேயாகும். இந்தியா ஒரு சுதந்திரமான வலிமையான நாடாக இருக்க வேண்டுமானால் இந்திய மக்கள் வேற்றுமைகளை வென்று ஒருமையுணர்வு பெற்றாக வேண்டும். பாரதி, இந்த ஒருமையுணர்வின் அவசியத்தை உணர்கிறான். ஆதலால், இந்திய மக்கள் அனைவரும் ஒரு குலம் என்கிறான்.

குலவேற்றுமைகளை நியாயப் படுத்தி ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று பாரதி உபதேசிக்க விரும்பவில்லை. காரணம் அவன் ஒரு மதத் தலைவன் அல்லன். அவன் ஒரு சுதந்திர சமுதாயச் சிற்பி. மதத் தலைவர்களாக இருந்தால் வேற்றுமைகளை நியாயப்படுத்துவர். ஒரு மதத்தலைவர் வேற்றுமைகளை நியாயப் படுத்தும் பாங்கினைப் பாருங்கள்; "இந்து சமயத்தில் பன்னெடுங் காலமாகவே வேற்றுமைகள் இருந்து வந்துள்ளன. ஐந்து விரல்களுக்குள் வேற்றுமை இல்லையா?" என்று அவர் கூறுகிறார். என்னே அற்புதம்! இந்து சமூகத்தில் தாழ்த்தப்பட்டோர், பார்ப்பனர் என்ற இரு வகுப்பாருக்கிடையில் வேற்றுமையும் ஐந்து விரல்களுக் கிடையேயுள்ள வேற்றுமையும் ஒன்றா? ஐந்து விரல்கள் உருவத்தில் வேற்றுமையுடையனவே தவிர, உடலிலிருந்து பிரிக்க முடியாத ஒட்டுறவுடையன அல்லவா? அது போலவா, தாழ்த்தப்பட்டோர் பார்ப்பனர் உறவு இருக்கிறது? அவர்களுக்கும் மேட்டுக் குடியினருக்கும் ஒட்டுறவு

இல்லாமையால்தானே தீண்டத்தகாதவர் என்ற சொல் பிறந்தது. தமிழர்களில் தாமும் ஒருவர் என்று கூட அவர்கள் சிந்திப்பதில்லையே! ஆதலால் இந்திய சமூகத்தில் உள்ள வேற்றுமைகள் ஒற்றுமை காணும் அடிப்படைக் குரியன அல்ல.

ஆதலால், இந்திய சமூக வேற்றுமைகளைப் புறக்கணித்து ஒரு குலம் காண ஆசைப்படுகிறான் பாரதி. ஒரு குலம் மட்டும் அமைந்தால் போதுமா? குலம் என்பது ஒரு மொழி, ஒரு சமயம் இவற்றுக்குள் காணப்படும் உட்பிரிவுகள். இந்தியா பெரிய நாடாயிற்றே! இந்தியா பல்வேறு மொழிகள் பேசும் மக்கள் வாழும் நாடு; பல்வேறு சமய நெறிகளை மேற்கொண்டொழுகும் மக்கள் வாழும் நாடு. இந்த இன வேற்றுமைகளை நீக்கி ஓரினமாக-இந்தியராக ஆக்க வேண்டும் என்று பாரதி விரும்புகின்றான். பாரதி, அம்மையை வழிபடும் உளப்பாங்கினன்; சக்தி உபாசகன். ஆயினும் இந்தியாவில் வாழும் மக்கள் வழிபடும் அனைத்துக் கடவுள்களையும் ஏற்றுப் போற்றுகின்றான்.

"ஆத்திசூடி இளம்பிறை அணிந்து
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்;
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந் துணராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறும் அறிவாம்;
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்;
அதனருள் வாழ்த்தி அமர வாழ்வு எய்துவோம்.

(புதிய ஆத்திசூடி—பரம்பொருள் வாழ்த்து)

என்றும்,

*"விநாயக தேவனாய் வேலுடைக் குமரனாய்*
*நாராயணனாய் நதிச்சடை முடியனாய்*
*பிறநாட் டிருப்போர் பெயர்பல கூறி*
*அல்லா! யெஹோவா! எனத்தொழு தன்புறும்*
*தேவருந் தானாய், திருமகள் பாரதி*
*உமையெனும் தேவியர் உகந்தவான் பொருளாய்*
*உலகெலாம் காக்கும் ஒருவனைப் போற்றுதல்*
*... பூமியில் எவர்க்கும் கடமை யெனப்படும்....*

(விநாயகர் நான்மணி மாலை–8 வரி–11)

என்றும் பாரதி பாடுகிறான்.

இந்தியாவை மதச் சார்பற்ற நாடாக அரசியற் சட்டம் அறிவிப்பதற்கு முன்பே, தேசீயக் கவிஞன் கொள்கைப் பிரகடனம் செய்கிறான். ஆம்! பழுத்த கவிஞன்! மக்களுக்காகப் பிறந்து பாடிய கவிஞன்! அவன் எப்படி வேற்றுமையைத் தாங்கிக் கொள்வான்? பாரதி நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இந்த ஆண்டில் இந்தியா எந்தத் திசையில் சென்று கொண்டிருக்கிறது? அன்று ஆங்கிலேயன் அடிமைகளாக வாழும் இந்தியர்களைப் பார்த்துக் கேட்டானே, "உங்கள் சாதிச் சண்டை போச்சோ?" என்று! ஆம்! இன்னமும் இந்தியாவில் சாதிச் சண்டை போகவில்லை! இல்லை! சாதிச் சண்டை போக, அனுமதிக்க மறுக்கிறார்கள் இந்து மதத் தலைவர்கள்! சாதி வெறியர்கள்! சாதி மனப்பான்மையைக் கட்சிகள் வளர்க்கப் பயன் படுத்தும் புன்மை அரசியல்வாதிகள்! மதங்கள் தான் என்ன செய்து கொண்டிருக்கின்றன? இன்று மக்களுக்காக மதம் இல்லை! மதத்திற்காக மக்கள் இருக்கிறார்கள்! இல்லை, சில பல குழுக்களாகப் பிரிந்து, மதத்தைப் பிழைப்பாக்கிக் கொண்டு "ஜீவிப்பவர்கள்" கையில் மதம் சிக்குண்டு விட்டது. எனவே இந்தியாவில் அநாகரிகமான மதச் சண்டைகள், மதத் தலைவர்களின் சண்டைகள், மத மாற்றங்கள் அனைத்தும்

வழக்கம் போல நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. இன்றைய மதம், செய்ய வேண்டிய பணிகளைச் செய்ய வில்லை. அது மனிதகுல ஒருமைப்பாட்டுக்கும் உலக அமைதிக்கும் போராட மறுக்கிறது. ஆதலால் இன வேற்றுமைகளும் களையப்பட வேண்டுமென்பதே பாரதியின் நோக்கம். எனவே "எல்லாரும் ஓரினம்" என்கிறான். ஆம்! இந்தியர், எல்லாரும் ஓரினம்! - இதுவே பாரதியின் இலட்சியம்.

எல்லாரும் இந்தியர் என்று சொன்னால் மட்டும் போதுமா? எல்லாரும் எல்லாம் பெற்று ஓர் நிறையாக வாழ வேண்டாமா? அப்படி வாழ்ந்தால்தான் இந்தியா ஒரு நாடாகும். "ஓர் குலம்!", "ஓர் இனம்" என்ற கொள்கை உறுதிப்படும். அடுத்து "எல்லாரும் ஓர் நிறை" என்று பாடுகிறான். ஓர் நிறை என்ற சொல்லில் சோஷலிசப் புரட்சியின் கருத்தை உள்ளடக்கம் செய்துள்ளான். பாரதியின் நூற்றாண்டு விழா வருகிறது. நாடு நிச்சயமாக விழாக் கோலம் கொள்ளும். விழா, முழக்கொலிகளுக் கிடையில் பாரதியின் சுதந்திரமும் அழுகையும் நிறைந்த குரல் கேட்கும்! உய்த்துணர்வார்க்குக் கேட்கும். இந்தியர்கள் அனைவரும் இன்று ஓர் நிறையிலா வாழ்கிறார்கள்? 67 விழுக்காட்டுக்கு மேற்பட்ட மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கின்றனர். ஏகபோகங்களும் உண்டு. நாளைக்கு என்ன? என்ற உத்தரவாதமின்றி வாழ்வோர் எண்ணிக்கை ஒன்றா? இரண்டா? எல்லாரும் ஓர் நிறை என்ற சமுதாயத்தை அமைக்காதவரை பாரதியின் ஆன்மா சாந்தி பெறாது. ஓர் நிறை மட்டுமின்றி "ஓர் விலை" என்றும் பேசுகிறான் பாரதி. நிறை என்பதை கல்வி, அறிவு, தறுகண்மை முதலியவற்றை எண்ணிச் சொல்லியிருப்பான் போலும்! விலை என்பதைப் பொருளாதார சமத்துவத்தை எண்ணிப் பேசியிருப்பான் போலும். நிறை, விலையைச் சார்ந்தது. விலை, நிறையைச் சார்ந்தது. இன்று இந்தியர்கள்

எல்லாரும் ஓர் நிறையும் பெறவில்லை! ஓர் விலையும் பெறவில்லை!

அடுத்து, பாரதிக்கு உரிமை-அதிகார உணர்வுகள் வருகின்றன. இந்திய மக்கள் அனைவரும் மன்னர்கள் என்று பாடுகின்றான்! மன்னர்கள் என்றால் இங்கு முடிசூடிய வர்கள் என்று பொருள் கொள்ளக் கூடாது. இன்றையக் குடியாட்சியில் கூட சிலர் முடிசூட்டிச் செங்கோலேந்தி விழாக் கோலம் காட்டுகின்றனர். இல்லை! வேடிக்கை காட்டுகின்றனர். பாரதி, இந்த உணர்வோடு இதைக் கூறவில்லை. ஆளும் வாய்ப்பினைப் பெற்றவர் மற்றவரை மதித்தல் வேண்டும். மக்களாட்சியில் மக்களே ஆட்சிக்கு மூலம் என்ற உணர்வினைப் பெறுவதற்காக இங்ஙனம் பாடுகிறான். இன்றோ, ஆளுங்கட்சியின் அடிமட்டத்தி லிருக்கும் சராசரி மனிதர்கூட அதிகார போதை பிடித்து அலைகிறார். அதனால் கட்சிச் சார்பு இயல்பாக இல்லாதவர்களுக்குக்கூட ஏதாவதொரு கட்சியைப் பிடித்துக் கொள்ளும் ஆவல் தோன்றியுள்ளது. இது இந்திய நாட்டின் சுதந்திரத்திற்கும் வலிமைக்கும் நல்லதல்ல. ஆதலால், பாரதியின் நூற்றாண்டு விழாவில் நாம் அனைவரும் பாரதி கண்ட சமுதாய அமைப்பை அமைப்போம் என்று உறுதி கொண்டு முயல்வோமாக!

**"எல்லாரும் ஓர் குலம்; எல்லாரும் ஓர்இனம்**
**எல்லாரும் இந்திய மக்கள்**
**எல்லாரும் ஓர்நிறை; எல்லாரும் ஓர்விலை**
**எல்லாரும் இந்நாட்டு மன்னர்!—நாம்**
**எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்**
**எல்லாரும் இந்நாட்டு மன்னர்"**

பாரதி

## தமிழ்மொழி வளர்ச்சி

ஒரு மொழி காலத்தின் தேவைகளை அறிந்து வளர்க்கப்பட வேண்டும். மொழி வளர்ச்சி, மொழியைப் பேசும் இனத்தின் அறிவு வளர்ச்சியாகவும் அறிவு வளர்ச்சி அவ்வினத்தின் தொழில் மேம்பாட்டு வளர்ச்சியாகவும், தொழில் மேம்பாட்டு வளர்ச்சி அவ்வினத்தின் பொருளாதார வளர்ச்சியாகவும், பொருளாதார வளர்ச்சி அவ்வினத்தின் நாகரிக மேம்பாட்டு வளர்ச்சியாகவும் படிமுறையில் துணை செய்வன. மொழி வளர்ச்சியைச் சாதாரணமாகக் கருதினால் அம்மொழி வளர்ச்சியொடு தொடர்புடைய அனைத்து வளர்ச்சிகளும் கெடும். அதோடு உலகத்து நாடுகள் தத்தம் மொழியை வளர்த்து அறிவை வளர்த்து மேம்பாடுற்று வளரும்போது நாம் உரியவாறு தமிழை வளர்க்கத் தவறினால் நாம் முன்னேறாதது மட்டுமின்றி, காலப்போக்கில் அடிமைகளாகவும் ஆக வேண்டிய சூழ்நிலை ஏற்படும். இதனை பாரதி, தெளிவாக அறிந்து தமிழ் நாட்டை, தமிழ் மக்களை மொழி வளர்ச்சியில் ஆற்றுப்படுத்துகின்றான்.

மேற்கு நாடுகளின் மொழி வளர்ச்சி, அறிவியல் வளர்ச்சி பாரதிக்கு ஓர் ஆதங்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மேற்கு நாடுகளிலே கலைகள் வளர்வதைப் பாரதி கணக்கில் எடுத்துக் கொள்கிறான். அதுபோலத் தமிழ் வளர வேண்டும் என்று ஆசைப்படுகின்றான். ஆனால் தமிழரில் சிலர், தமிழில் அந்தக் கலைகள் வாரா என சொல்லுகின்றனர்; இன்னும் சொல்லி வருகின்றனர். அதனாலன்றோ தமிழ் பயிற்று மொழி இயக்கம் நிறைவான வெற்றி பெறவில்லை. தமிழில் அறிவியல் உண்மைகளைத் தாங்கி வெளிவரும் தாள்கள் குறைவு இல்லை! "கலைக்கதிர்" தவிர மற்றொன்று இல்லை. வழக்கமான அரை நிர்வாண படங்கள், காமவெறியூட்டும் கதைகள், தன்னம்பிக்கையை இழக்கத்தூண்டும் கிரகப்

பலன்கள் ஆகியவைகளைக் கொண்ட மலிவான சரக்குகளை யுடைய இதழ்களே மிகுதி. மக்களை மேலும், மேலும் அறியாமையில் ஆழ்த்துவதற்கே இந்த இதழ்கள் முயற்சி செய்கின்றன.

ஆதலால், தமிழில் புதிய கலைகளைக் காணும் ஆர்வமில்லை. வளர்ச்சியில்லை. படித்தவர்களானாலும் சரி, படிக்காதவர்களானாலும் சரி அறிவியற் செய்திகளைப் படிப்பதில் கேட்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. இந்த நாட்டில் எப்படி மொழி வளரும்? சிந்தித்து விவாதிக்கப் பெறும் பட்டிமன்றங்களை எதிர்க்கிறார்கள்; தரங்குறைந்து போவதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், சிந்தனைக்குப் பயனில்லாத, சிந்தனையைத் தூண்டாத, மலிவான தரம் குறைந்த நகைச்சுவைகள் நிறைந்த கதாகாலட்சேபங்களை யாரும் எதிர்ப்பதாகத் தெரியவில்லை. இதிலிருந்து என்ன தெரிகிறது? சிந்திக்கும் அறிவு வளர்ச்சியை எப்படியோ முடக்கப் பார்க்கிறார்கள். எடுத்ததற்கெல்லாம் சமயத் துறையில் பிற்போக்கானவர்கள், "விஞ்ஞானம் வளர்த்ததன் பயன் என்ன? அணுகுண்டு கண்டதுதான்? அழிவுதான்!" என்று வளர்ந்துவரும் அறிவியலைக் கிண்டலும் கேலியும் செய்கின்றனர். இறைவனை நோக்கித் தவம் செய்தவர்கள் கூட அழிவாற்றலை வரமாகப் பெற்று அமரர்களுக்கும், மானுட சாதிக்கும் தீராத தொல்லைகள் தந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. அப்படியானால் தவம் செய்யும் முயற்சியும் கெட்டதுதான், என்று ஒத்துக் கொள்வார்களா? இந்த மாதிரியான பிற்போக்கு எண்ணங்களின் காரணமாகத் தமிழ் மக்களிடத்தில் அறிவு வளரவில்லை. எந்த ஒன்றையும் அறிவியல் பார்வையில் அணுகும் அறிவும் வளரவில்லை. புறத்தே வளர்ந்துவரும் விஞ்ஞான சாதனங்கள் தமிழ் நாட்டைக் கவ்விப் பற்றிக் கொண்டிருந்தாலும் தமிழ் மக்களின் வாழ்க்கைப் போக்கில் அறிவியல் பாங்கில்லை. ஏன்? சிலர் அறிவியல் தமிழில் வராது என்றும் அறிவியலுக்கு

உரியது ஆங்கிலம்தான் என்றும் ஒருபுறம் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். உலகத்தின் எல்லா மொழிகளிலும் அறிவியற் கருத்துக்கள் கால் கொள்ளும் முன்பே தமிழ் மொழியில் அறிவியற் கருத்துக்கள் கால் கொண்டன. "வலவன் ஏவா வானவூர்தி" 'சீவகனின் மயிற்பொறி' ஆகியவை வானூர்தி விஞ்ஞான வளர்ச்சிக்கு எடுத்துக் காட்டுக்கள்! பூம்புகாரிலிருந்த சதுக்கங்கள் இன்றைய "கம்ப்யூட்ட"ருக்கு முன்னோடிகள். இராசராசன் எழுப்பிய தஞ்சைப் பெருவுடையார் கோவிலும், கரிகாலன் கட்டிய கல்லணையும் பொறியியலுக்குச் சரியான எடுத்துக்காட்டுக்கள்! இங்ஙனம் வளர்ந்த தமிழ் மொழி, காலப்போக்கில் அயல் மொழிகளின் ஊடுருவல்களாலும், வையத்துள் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை நெறிக்கு மாறான மாயாவாதக் கருத்துகளாலும் வளர்ச்சியில் தேக்க முற்றது. அதனால், தமிழின் வளர்ச்சியும் தடைப்பட்டது. அதன் காரணமாகத் தமிழின் திறனை உள்ளவாறறியாத ஆங்கிலம் படித்த சிலர், தமிழில் அறிவியல் வராது என்றும் அதற்குரிய நூல்கள் தமிழில் இல்லை என்றும் கூறித் தங்கள் அறியாமையை-அயல்மொழிக் காதலை வெளிப்படுத்துகின்றனர்.

பாரதிக்கு இந்த மனப்போக்கு பிடித்தமில்லை. தமிழில் அறிவியல் வராது என்று சொல்பவர்களைப் பேதைகள் என்று திட்டுகிறான். கடலில் கலம் ஓட்டி அயல் நாடுகளைக் கண்ட தமிழினம் காலப் போக்கில் நாட்டு எல்லைக்குள் முடம்பட்டுப் போயிற்று. கடல் கடத்தல் நன்றன்று என்ற சித்தாந்தம் வேறு மூடத்தனத்தை வளர்த்தது. அதனால், பாரதி எல்லைகளை-வரையறைகளை உடைக்கச் சொல் கிறான்; எட்டுத்திக்கும் செல்லச் சொல்கிறான். உலகத்தின் பல்வேறு நாடுகளில் வளர்ந்து வரும் சிந்தனைகளைத் தமிழுக்கு உரிமைப் பொருளாகக் கொண்டுவந்து சேர்க்கச் சொல்கிறான். பாரதி, தாய்மொழி என்ற எல்லைக்குள் நின்றானே தவிர சிந்தனையில் அறிவியலில் எல்லைகளுக்கு

உட்பட்டவனல்லன். அவன், உலகத்தின் எத்திசையில் தோன்றும் சிந்தனையும் அது சிறந்ததாக இருப்பின் தனது சொந்தக் கருத்தாக ஏற்றுக்கொள்ளத் தயங்கியதில்லை. மொழி எல்லையில் பாரதி நின்றதுகூட மொழிப் பற்றினால் மட்டுமன்று. மனித குலத்தின் சிந்தனை வளர்ச்சி, அறிவு வளர்ச்சி தாய்மொழியில் ஏற்படுவதைப் போல், பிற மொழிகள் வாயிலாக ஏற்படுவதில்லை. இஃதோர் இயற்கை நியதி. இந்த நியதியை எளிதில் மாற்ற இயலாது. அங்ஙனம் மாற்ற முயன்றால் அஃது இயற்கையாகவும் இருக்காது. காலமும் பொருளும் அதிகம் பிடிக்கும். ஆக, மனித சமுதாயத்தின் நலம் கருதித்தான் மொழி எல்லையில்கூட நின்றான் பாரதி.

ஐந்து உலகத் தமிழ் மாநாடுகளை நடத்தும் அளவுக்கு நாம் வளர்ந்திருந்தாலும் உலகத்தில் நாள்தோறும் வளர்ந்து வரும் அறிவியல், தொழிலியல் நுட்பங்களை விளக்கும் நூல்கள் தமிழில் போதுமானவை வெளிவரவில்லை. சில நாடுகளில் உலகத்தில் எந்த ஒரு மொழியிலாவது ஒரு சிறந்த நூல் வெளிவருமானால் இருபத்துநான்கு மணி நேரத்துக்குள் மொழிபெயர்க்கப்படுவதாகக் கூறுகின்றனர். அத்தகைய விரைந்த முயற்சிகள் தமிழில் இல்லை. ஒரு கருத்துத் தோன்றிப் பல ஆண்டுகள் ஆனபிறகுதான் அந்தக் கருத்தைத் தாங்கித் தமிழில் நூல் வெளிவருகிறது. இந்த நூல் தோன்றி வெளியில் உலாவரும்போது அந்தக் கருத்து வளர்ந்து மாற்றம் அடைந்துவிடுகிறது. இது வாழ்க்கைக்கு உதவாத பழைமையாகி விடுகிறது. இந்த நிலைமைகளை மாற்ற, சிறந்த முறையில் இயங்கும் ஒரு தமிழ் வளர்ச்சிக் கழகம் தோற்றுவிக்க வேண்டும். இக் கழகம் தமிழை அறிவியல் முறையில் சிந்தித்து வளர்த்தலும், பிற மொழிகளில் தோன்றும் நூல்களை விரைந்து தமிழில் கொண்டுவந்து சேர்த்தலும் ஆகிய பணிகளை செய்யத் தக்கவாறு அமைய வேண்டும். அப்போதுதான் தமிழ் வளரும்; தமிழகத்தின்

எதிர்காலம் சிறப்புறும்; அப்போதுதான் மேற்றிசை மொழி களின் செல்வாக்கைக் கட்டுப்படுத்தலாம்; தமிழ் மொழியின் இளமையையும் என்றும் காப்பாற்ற முடியும்.

தமிழ்நாடு அரசு, இந்த வகையில் சிந்திப்பது, சிந்தித்து செயல்படுவது நல்ல பயனைத் தரும். அப்படி தமிழ்நாடு அரசு முன்வராது போனால் தமிழறிஞர்கள், தமிழார் வலர்கள் முன்வந்து ஒரு மக்கள் நிறுவனத்தைத் தோற்று வித்துச் செயற்படுவது அவசர அவசியக் கடமை. காலத்தின் கடமை என்பது நமது கருத்து.

*"புத்தம் புதிய கலைகள்–பஞ்ச*
*பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்*
*மெத்த வளருது மேற்கே–அந்த*
*மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.*

*சொல்லவும் கூடுவதில்லை–அவை*
*சொல்லுந் திறமை தமிழ்மொழிக்கில்லை.*
*மெல்லத் தமிழினிச் சாகும்–அந்த*
*மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்*
*என்றந்தப் பேதை உரைத்தான்–ஆ!*
*இந்தவசை யெனக் கெய்திட லாமோ?*
*சென்றிடு வீர்எட்டுத் திக்கும்–கலைச்*
*செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்."* பாரதி

## தேமதுரத் தமிழோசை...

பாரதி, பன்மொழி பயின்றவன். ஆங்கிலம், பிரெஞ்சு, சமஸ்கிருதம் முதலிய மொழிகளில் அவனுக்குப் பயிற்சி உண்டு. ஆனாலும் பாரதியைக் கவர்ந்த மொழி தமிழ் ஒன்றேதான். தமிழ் இனிமை நிறைந்த மொழி.

*"கனியிடை ஏறிய சுளையும்–முற்றல்*
*கழையிடை ஏறிய சாறும்*

*பனிமலர் ஏறிய தேனும்–காய்ச்சுப்*
*பாகிடை ஏறியசுவையும்*
*நனிபசு பொழியும் பாலும்–தென்னை*
*நல்கிய குளிர்இள நீரும்*
*இனியன என்பேன் எனினும்–தமிழை*
*இன்னுயிர் என்பேன் கண்டீர்!"*

என்கிற பாவேந்தன் பாரதிதாசன் பாட்டு அனுபவத்தில் முகிழ்த்த பாட்டு.

தமிழுக்கு இனிமை எப்படி வந்தமைந்தது? தமிழ், காலத்தால் மூத்த மொழி. வையகத்தில் உள்ளோர் கையசைத்து அடையாளங்காட்டி வாழ்ந்த காலத்தில் தமிழ்த் தாய் தமிழ் மக்களின் நாவை அசைத்தாள். தமிழில் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்தித் தோன்றியது இலக்கண நூல். இலக்கியம் கண்டு வளர்ந்த பின்னர்தான் இலக்கணம் தோன்றும் என்பது மொழி நூலறிஞர் கருத்து. இன்று கிடைத்திருக்கும் பழந்தமிழ் இலக்கணநூல் தொல்காப்பியம். தொல்காப்பியத்திற்கும் முந்தியது அகத்தியம். அந்த அகத்திய நூற்பாக்கள் சில கிடைத்துள்ளன. பல்லாயிரம் ஆண்டுகள் மக்கள் நாவில் பழகிப் பழகி இனிய தமிழாக விளங்குகிறது.

தமிழ் இனிமையானது என்றால் செவிப்புலனுக்கு மட்டுமன்றி வாழ்க்கைக்கும் இன்பமளிக்கும் இனிமை யுடையது. உலக மொழிகளிலெல்லாம் எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமே இலக்கணம் உண்டு. ஆனால் தமிழில் உள்ள தொல்காப்பியத்தில் வாழும் மனிதருக்கும், வாழ்க்கைக்கும் கூட இலக்கணம் செய்யப் பெற்றுள்ளது. காதல் மனை வாழ்க்கைக்கு 'அகத்திணை' என்றும், சமுதாயக் களத்தில் நிகழ்த்தும் வாழ்க்கைக்குப் 'புறத்திணை' என்றும் இலக்கணம் செய்யப் பெற்றுள்ளது. அன்று மனையற வாழ்க்கையும் சமுதாய வாழ்க்கையும் சிறந்திருந்ததனாலேயே புகழ் பூத்த வாழ்க்கையாகத் தமிழினத்தின் வாழ்க்கை

விளங்கியது; பொருள் வாழ்க்கையில் வளம் இருந்தது. ஒப்புரவுப் பெருநெறியும் வளர்ந்து இருந்தது. கொற்றம் சிறந்திருந்ததால் நீதி இருந்தது. வீரத்தில் சிறந்து விளங்கியதால் பனிமலை தொடங்கி, குமரிக்கடல் விழுங்கிய நிலப்பரப்பு உள்ளிட்ட பெருமைக்குரிய பேரரசு நிலவியது. உரோமானிய எழுத்தாளர்கள், உரோம் நாட்டு செல்வத்தைத் தமிழ்நாடு கொள்ளை கொள்வதாக அழுது புலம்பினார்கள். இங்ஙனம் புகழ்பூத்து வாழ்ந்த தமிழினத்தில் கடவுள் நம்பிக்கை நிலவியது. விண்ணளந்து காட்டி வினைமறைக்கும் திருக்கோயில்களைத் தமிழர்கள் கண்டனர். நகரமனைய பெரிய திருக்கோயில்கள் அமைத்தனர். வாழ்க்கையின் அனைத்துத் துறைகளையும் தழுவி முத்தமிழ் கண்டு வளர்ந்து முழுமையாக வாழ்ந்தனர்.

இங்ஙனம் புகழ் பூத்த தமிழினத்தின் வாழ்க்கையில் அயல்வழி ஊடுருவல்கள் தோன்றிப் பாழடித்து விட்டன. பாரதி, இந்த இழி நிலையை நினைந்து வருந்துகின்றான். உலகனைத்தும் புகழ வாழ்ந்த இனத்தின் இந்தத் தலைமுறை யினர் அறியாமையில் பிணைப்புண்டு பாமரர்களாய், மனித நாகரிகத்துடன் வாழாமையால் விலங்குகளாய் வாழும் இழிநிலையை இடித்துக் காட்டுகிறான். தமிழ்நாட்டில் பிறந்து விட்டால் தமிழரா? தமிழில் பேசிவிட்டால் தமிழரா? இல்லை என்பது பாரதியின் கருத்து. இங்ஙனம் வாழ்பவர்கள் பெயரளவில்தான் தமிழர்கள். உயிரில், உணர்வில், வாழ்க்கையில் பழந்தமிழ் வாழ்க்கையைப் பேணுபவர்களே உண்மைத் தமிழர்கள். தேமதுரத் "தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்று பாரதி கனவு காண்கிறான். இக்கனவு ஓரளவு நினைவானாலும் நிறைவாக நடைபெறவில்லை. தமிழ் நாடு அரசு உலகத் தமிழ்ச் சங்கம் பற்றி, உலகத் தமிழ் மாநாட்டின்போது அறிவித்தது. இது குறித்து விரைந்தினிது முடிக்கும் செயற்பாடு தேவை. உலகம்

முழுவதும் பரவி வாழும் தமிழரல்லாதவர்களும் தமிழ் கற்கும்படியும் தமிழிலக்கியங்களைச் சுவைத்திடும்படியும் செய்ய உலகத் தமிழ்ச் சங்கம் தேவை. இது பாரதியின் வேணவா.

## பாரதியின் எச்சரிக்கை

உயிரினம், வளர்ச்சித் தன்மையுடையது. ஓயாது வளர்ந்து வரும் இனம்தான் வரலாற்றில் இடம் பெறும்; சிறப்புடன் வாழும் ஓர் இனத்தின் வளர்ச்சிக்கு உந்து சக்திகளாக அந்த இனத்து வாழ்க்கையின் படிப்பினைகள் மட்டுமின்றி, உலகின் பல்வேறு இனங்களின் வளர்ச்சியும் காரணமாக அமையும். ஒன்றோடொன்றை ஒப்பு நோக்கும் போதுதான் வளர்ச்சி அறிந்துணரப் பெறும்.

ஒப்பு நோக்கிற்கு எப்பொழுதும் சான்றோர், உயர்வு நலஞ்சார்ந்ததையே எடுப்பர். ஆதலால் எந்த ஓர் இனத்தின் வளர்ச்சியிலும் சார்பு இருக்கும்; இருக்க வேண்டும். அதாவது உலகின் மற்ற இனங்கள் வளரும் போதெல்லாம் உலகின் ஒவ்வோரினமும் தம்மையும் வளர்த்து உயர்த்திக் கொள்ள வேண்டும். அப்படி இல்லாது ஓரினம் பின்தங்கிப் போனால் பின்தங்கிய இனம் வரலாற்றில் நிற்க முடியாது. காலப் போக்கில் அழியும் அல்லது அடிமைப்படும்.

சான்றாக, நமது இந்து சமயம் என்று கூறப்பெறும் சைவ வைணவ சமயங்கள் காலத்தால் மூத்தவை; கருத்தாலும் மூத்தவை. ஆயினும் உலகின் மற்ற சமய நெறிகளாகிய கிறித்துவ-இசுலாமிய சமய நெறிகளின் பணி நிலை, சமய நிலை, சமூக நிலைகளை அறிந்து ஆராய்ந்து, தனது நிலைகளை மாற்றிக்கொள்ள முன் வராததால் ஒரு தேக்கம் ஏற்பட்டிருப்பதை உணர முடிகிறதல்லவா? அது ஒருபுறம் இருக்கட்டும்.

எந்த ஒரு சமுதாயமும் உயிர்ப்புடன் வாழ்ந்தால் கொள்வனவும் கழிப்பனவும் நிச்சயமாக இருக்கும். அதுவே உயிர்ப்பின் அடையாளம்! மாறுதல் உலகியற்கை. மாறாது அழியும் என்பது இயற்கையின் விதி. அதனாலன்றோ மாணிக்கவாசகர்,

"முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே!"

என்று அருளிச் செய்தார். அதாவது பழைமையே புதுமையாகிறது. பழைமை புதுமையானால் புதுமை பழைமையிலேயே ஊடுருவி உயிர்ப்புடன் விளங்குமானால் பழைமை புதுமைச் சண்டைகள் வாரா!

ஆனால், நமது நாட்டில் பழைமைக்கும் புதுமைக்கும் இடையில் உள்ள இடைவெளி அதிகம். பழைமை வளர்ந்து வரும் காலத்தின் தேவையான புதுமையை ஏற்பதில்லை. புதுமை பழைமையை அலட்சியப்படுத்துகிறது. அதனால், நிலையான வளர்ச்சியில்லாமல் பழைமையாளர்களுக்கும், புதுமை வேட்கையுடையவர்களுக்கும் இடையில் ஓயாத சண்டை! பழைய சமய அமைப்புகள் புதிய சிந்தனையாளர்களாகிய அப்பரடிகள், விவேகானந்தர், வள்ளலார் ஆகியவர்களின் சிந்தனைகளை-கொள்கைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. புறத்தேயே ஒதுக்கிவிட்டன. இதனால் உலகப் பொதுச் சமயம் ஆவதற்குரிய தகுதியுடைய ஒரு சமயம்-நமது சமயம் வளரவில்லை. இந்தச் சிந்தனைகள் பாரதியை வருத்தியிருக்க வேண்டும்.

தமிழ்ச் சாதி காலத்தால் முந்தி தோன்றியது. கருத்தாலும் மூத்து வளர்ந்தது. ஆயினும் தமிழ்ச் சாதி காலத்தின் தேவைகளுக்கும் ஏற்றவாறு வளர வேண்டும் என்று பாரதி ஆசைப்படுகின்றான். அதே நேரத்தில் மாற்றங்கள், தனித் தன்மையை தனது அடிப்படை அறங்களை இழந்து விடுவனவாகவும் அமையக் கூடாது

என்றும் எச்சரிக்கை செய்கின்றான். பாரதியின் எச்சரிக்கை நியாயமானது. ஆனாலும் பாரதியின் எச்சரிக்கை வழக்கம் போல நமது தமிழ்ச் சாதியின் காதில் விழவில்லை. அல்லது விழுந்தும் விழாததைப் போல் வாழ்கிறது. ஆக்கமான புதுமைகளைச் சேர்த்துக் கொள்ளவில்லை. ஆனால், சமுதாயத் துறையில் பயனற்ற, நெறிப் பிறழ்வுகளைத் தரக்கூடிய கலப்படங்கள் உண்டாகி செழுந்தமிழ் வழக்கு சீரழிந்து கிடக்கிறது. தமிழரின் பொருளியல் திறம் இன்று இல்லை. தமிழர் போற்றிய மனையறம் இன்று இல்லை. போலித் துறவுகள் அத்தாணி மண்டபம் ஏறுகின்றன. பெண்ணின் பெருமை பேணப்படவில்லை. கடவுள் வாழ்வுப் பொருளாக இல்லை. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்னும் பெருநெறி இல்லை. ஒப்புரவு நெறியில் நடைபெறும் வாழ்க்கையும் இல்லை. இந்தச் சீரழிவுகள் தமிழ்ச் சாதி தனது தனித்தன்மையை மறந்ததால் வந்த கேடு. இதனை நினைத்து பாரதி "மாறுக! சார்புகளுக்குத் தக்கவாறு மாறுக! மாற்றம் வளர்ச்சியின் பாற்பட்டதாக இருக்கவேண்டும். மாற்றம் தமிழ்ச் சாதியின் தனித் தன்மைக்கு ஊறு செய்யக் கூடாது; தனித் தன்மையை இழக்கக்கூடாது" என்று எச்சரித்த எச்சரிக்கையை இனிமேலாவது தமிழர்கள் கேட்பார்களா? பின்பற்றுவார்களா?

"சார்வினுக் கெல்லாம் தகத்தக மாறித்
தன்மையும் தனது தருமமும் மாயாது
என்றுமோர் நிலையா இருந்து நின் னருளால்
வாழ்ந்திடும் பொருளொடு வகுத்திடு வாயோ?"

(தமிழ்ச் சாதி—வரி 7—10)

## சிதைவுற்று அழியும் பொருள்களில் சேர்ப்பையோ?

பாரதி ஒரு தத்துவஞானி. பழைமையை அறிந்தவன்; பழைமைகளைப் பாராட்டுபவன். ஆயினும், மாற்றங்களை—

புதுமைகளை வரவேற்பவன். காலம் புதுமைகளைப் படைத்துத் தரவே செய்கிறது. ஆயினும் தேக்கத்தை விரும்புவோர் இல்லாமல் இல்லை. ஆனால், மாற்றங்கள், புதுமைகள் தோற்றத்தில் காணப்படுதல் பயன் இல்லை. தொழில் முறைகளில் மாறுதல் மட்டும் பயன்தரா.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் புதுமை வேட்டல் என்பது புறத்தோற்றங்களிலேதான். அடுத்து ஆவேசமான பேச்சில்தான்! சீர்திருத்தம் என்பது பழிதூற்றல் அல்ல. "சிறுமை குற்றமே தூற்றிவிடும்" என்பார் திருவள்ளுவர். காலத்தினாலாய மாறுதல்களைப் பெறாத எந்த இனத்திலும், அமைப்பிலும் ஒழுக்கக் கேடுகள் தோன்றுவதைத் தவிர்க்க முடியாது. இன்னும் உண்மையைச் சொன்னால் ஒழுக்க நெறிகள் ஒழுக்கக் கேடுகளாகவும் தோன்றும். ஏன்? ஒழுக்கம் என்பதற்கு உலகம் கொண்டுள்ள பொருள் வேறு. எப்போதோ பாட்டன் காலத்தில் அவன் வாழ்ந்த சமுதாய அமைப்பில் அவனுக்கும் அவனுடன் வாழ்ந்தவர்களுக்கும் இசைந்ததாக இருந்த ஒரு ஒழுகலாறு ஒழுக்கம் ஆயிற்று. அது பேரன் காலத்துக்கும் பொருந்தி வந்தால் நல்லதுதான். ஆனால் பெரும்பாலும் பொருந்தி வராது. ஒரே வழி பொருந்தி வந்தாலும் மனச் செழுமையுடன் எடுத்துக் கொள்ளும் இயல்பு இருக்காது.

நமது நாட்டின் குடும்ப, சமூக, சமுதாய, சமய அமைப்புக்களில் இந்த முரண்பாடுகளை நிறையக் காண்கிறோம். நமது குடும்பங்கள் தோற்றத்தில் குடும்பங்கள் தாம். ஆயினும் வரதட்சணைக் கொடுமையும் பெண்ணடிமைத்தனமும் பல இடங்களில் ஒத்த உணர்வுகளைக் குடும்பத்தின் உள்ளீட்டை, காதற் செழுமையைச் சீரழித்து வருகின்றன. உடல்கள் கூடுகின்றன; உயிர்கள் கலப்பதில்லை. அதனால் தரமில்லாத மக்கட் பெருக்கத்தை நாட்டில் காண்கிறோம். 'சமூகம்' இருப்பது போல ஒரு தோற்றம். கூட்டங்களில் கூட்டமாகக்

கூடுவதெல்லாம் சமூகமாகிவிட முடியுமா? சமூகப் பொறுப்புக்களில் கடமைகளில் வளரவில்லை. சமுதாயம் இல்லவே இல்லை. சமயத் துறையிலும் அவை கூறும் தத்துவங்களுக்கும் வாழ்க்கை முறைகளுக்கும் இன்று ஒட்டும் உறவும் இல்லை. வழிபாட்டில் அமைந்துள்ள அம்மை அப்பன் கடவுள் தத்துவம் வழிபாட்டிற்கும்தான்; நாட்டு நிலையிலும் அப்படியேதான்.

இந்தியா ஒரு நாடு. இந்தியர்கள் ஒருநாட்டு மக்கள். ஒரு குடியாக வாழ வேண்டியவர்கள். ஆனாலும் எண்ணத் தொலையாத வேற்றுமைகள்! பகைமை உணர்ச்சிகள்! சமுதாய மாற்றங்கள் புறத்தே நிகழ்கின்றன. பல்கலைக் கழகங்கள் தோற்றமளிக்கின்றன. ஆனால், அறிவு பெருக்கத்தைக் காணோம். தொழிற்சாலைகள் தோன்றுகின்றன. வாழ்வித்து வாழும் பெருந்தன்மை தோன்றவில்லை. வறுமைக் கோட்டிற்குக் கீழ் 67% மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். ஊராட்சி மன்றங்கள் காட்சியளிக்கின்றன. ஆள்வோரைக் காணோம். ஆள்வோருக்குப் பதிலாக அச்சுறுத்துவோரே காணப்படுகின்றனர். "ஆளுதல்" உயர்ந்த பண்பின் வழிவரும் தொழில் உரிமை. ஆளுதற் பணி அறிவித்து, தெளிவித்து, உணர்த்தி, நெறிப்படுத்தி, வழிநடத்தி, வாழ்வித்தல் என்பதே. இப்பணிக்கு நிறைந்த அன்பு தேவை, அருள் உள்ளம் தேவை. இங்ஙனம் ஆளப்படுதல் பெரிய பேறு.

ஆனால், இன்று "ஆளுதல்" அதிகாரச் சார்புடையதாகி உயர்வுடையதாகக் கற்பிக்கப் பெற்று அச்சுறுத்தல்களுக்குரிய தாக மாற்றம் அடைந்திருக்கும் அவலத்தை யார்தான் மறுக்க இயலும்? கோட்டைகள் உயர்ந்து தோற்றமளிக்கின்றன. குடிமக்கள் இளைத்து இழக்கின்றனர். உரிமைகள் பரிமாற்றம் செய்தல், குற்றங்களைக் கண்டு பிடித்தல், தண்டனை வழங்கல் ஆகியன ஆளுமையின் புறத்தோற்றங்கள்! தகுதி யிழந்த நிலைகள்! இத்தகு முறைப்பிறழ்வால் மக்கள் காலப் போக்கில் அடிமைகளாகி விடுவர்.

சோறு கிடைப்பது மட்டுமே வாழ்க்கையன்று. அதற்கும் அப்பால் ஆன்மா இருக்கிறது; உள்ளம் இருக்கிறது. உள்ளத்திற்குரிய அறம் இருக்கிறது. அந்த அறம் அழியக் கூடாது. உதியமரம் பெருத்து வளர்ந்து என்ன? உள்ளீடும் உள்ளீட்டில் உறுதியும் இல்லாத மரம் அது. அதாவது வயிரம் பாயாத மரம்! அதுபோலத் தமிழ்ச்சாதி தமிழ்க் கூட்டமாகிப் பயனில்லை. புறத்தோற்றத்தில் கவர்ச்சியிருந்து பயன் இல்லை. தமிழ்ச்சாதி உள்ளத்தால் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். உள்ளத்தால் ஓரினமாக உரம்பெறுதல் வேண்டும். பழந்தமிழ் நெறிகளைப் புதுமைப்படுத்தி, பொலிவுறுத்தி வாழ்ந்தால் தமிழினம் வாழும்! இல்லையெனில் விளக்கொளியில் விழுந்து மாளும் விட்டில்களைப் போலக் கவர்ச்சிகளில் சிக்கிச் சீரழியும். தமிழ், தமிழினம் என்றிருக்க வேண்டிய உள்ளார்ந்த உணர்வில் 'புகழ்' என்ற புல்லுருவி தோன்றி உள்ளீட்டை அழிக்கும். அப்புறம் நம்மவர் அயலவராகி விடுவர். அயலினத்தார் உறவினராகி விடுவர். விளைவு என்ன? தமிழினம் சிதையும்; சீரழிவு தோன்றும். இது பாரதியின் எச்சரிக்கை. ஒருநூறு ஆண்டுகள் கழித்தும் கவிஞன் பாரதி தேவைப்படுகிறான்.

"தோற்றமும் புறத்துத் தொழிலுமே காத்து மற்று
உள்ளுறு தருமமும் உண்மையும் மாறிச்
சிதைவுற் றழியும் பொருள்களில் சேர்ப்பையோ?
அழியாக் கடலோ? அணிமலர்த் தடமோ?
வானுறு மீனோ? மாளிகை விளக்கோ?
கற்பகத் தருவோ? காட்டிடை மரமோ?
விதியே தமிழ்ச் சாதியை எவ்வகை
விதித்தாய் என்பதன் மெய்யெனக் குணர்த்துவாய்"

(தமிழ்ச்சாதி–11–19)

## பாரதி கண்ட விடுதலை

பாரதி ஒரு நாட்டுக் கவிஞன். சமுதாயத்தின் தேவைகள் அனைத்தையும் அறிந்து பாடியவன். அவன் ஒரு விடுதலைக் கவிஞன். ஏன்? விடுதலை, சுதந்திரம் என்கிற சொற்களை தமிழ் இலக்கியத்தில் பாரதி தலைமுறையிலேயே பாரதியே முதன்முதலில் கொண்டு வருகின்றான். நாட்டு மக்களுக்குச் சுதந்திர உணர்வை ஊட்டி வளர்த்தவன் பாரதி. பாரதி அடிமையாகவே பிறந்தான்; அடிமையாகவே வாழ்ந்தான்; அடிமையாகவே மாண்டான். ஆனாலும் பாரதியின் ஆன்மா கவிதா உலகத்தில் சுதந்திரத்தைப் பெற்று விட்டது. பாரதி தன்னம்பிக்கையுடைய ஒரு கவிஞன். இலட்சியத்தை அடைய முடியும் என்ற நம்பிக்கையோடு பாடியவன். அதனால், இந்த நாடு விடுதலை பெறுவதற்கு முன்பே, “ஆடுவோமே; பள்ளுப் பாடுவோமே; ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று ஆடுவோமே” என்று சுதந்திரப் பள்ளு பாடுகிறான். வெறும் ஆவேசமான சுதந்திரப் பள்ளுவா? இல்லை; சுதந்திரத்தின் இலக்கணத்தை விரித்துப் பாடியுள்ளான். ஒரு சில நாடுகளில் சுதந்திரம் வரும். அந்தச் சுதந்திரம் ஒரு சிலருக்கு அதாவது வாழும் பேறு பெற்றவர்களுக்கே வரும். ஆனால், பாரதியின் சுதந்திரம், அத்தகையதன்று. முற்றாகச் சமுதாயச் சுதந்திரம், பொருளாதாரச் சுதந்திரம் ஆகியனவற்றையும் சேர்த்தே பாரதி சுதந்திரம் என்கிறான். ஆனால், பாரதி பிறந்த நாட்டில் பாரதி கண்ட சுதந்திரம் இன்னும் வந்தபாடில்லை.

> “பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே—வெள்ளை
> பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே”

என்று பாரதி சமுதாயச் சுதந்திரத்தைப் பாடுகிறான். இந்த வரிகளில் உள்ள மாற்றங்கள் எதுவும் இன்னும் நடந்துவிட வில்லை. ஓர் அரங்கில் ஆறேழு சந்நியாசிகள் அமர்ந்திருக் கின்றார்கள். அவர்கள் அனைவரும் பீடாதிபதிகள் மடாதி

பதிகள். ஆயினும், அந்த அவையில் கூட அதாவது சந்நியாசிகள் கூட்டத்தில் கூட "பார்ப்பனர்–தமிழர்" என்ற பேச்சு அடிபடுகிறது. சந்நியாசிகளுக்குச் சாதி இல்லை என்பர். ஆனால் இந்தச் சாதிச் சனியன் இன்று பிடித்தாட்டுவது சந்நியாசிகளைத்தான்! அதுவும் பீடாதிபதிகளைத்தான்!

இன்று, பார்ப்பனரை ஐயர் என்று வழங்கும் வழக்கு பெரு வழக்கு. வெள்ளைப் பரங்கியர் இல்லை. ஓடி விட்டனர். ஆனாலும் நமது நாட்டின் பெரிய அதிகாரி களைக் குறிப்பாக காவல்துறை அலுவலர்களை "துரை" என்றுதான் இன்னும் அழைக்கின்றனர். பாவமன்னிப்பு என்று கூறியும், காரிய சாதனைகள் என்று கூறியும் கையேந்திப் பணம் வாங்குகின்றனர். ஆனால், கொடுப்பவன் பணிகின்றான். வாங்குபவன் நிமிர்ந்து நடக்கின்றான். இது பாரதி காலத்திலிருந்த கொடுமை. இன்றும் அதே நிலைதான்.

அடுத்து, ஏய்ப்போருக்கு ஏவல் செய்ய வேண்டும் என்பது. இன்று எங்கும் எத்திசையிலும் ஏய்ப்போர் கூட்டத்தின் கொட்டம் தானே! நமது செல்வத்தைக் கொள்ளை கொண்டு திரும்ப அதை நமக்குக் கிள்ளி வழங்கி, வள்ளல்கள் ஆகிறவர்களுக்கு ஏவல் செய்து தானே இந்த நாட்டு ஏழைகள் பிழைக்கின்றனர். இந்த நிலையிலும் மாற்றமில்லை.

"எல்லாரும் சமம் என்பது உறுதியாச்சு" என்று பாரதி பாடுகிறான். ஆனால், இன்று சமநிலை எங்கும் இல்லை. பாரதி வெறுத்துத் தொலைக்க வேண்டும் என்று எண்ணிய பொய்யும் ஏமாற்றும் இன்று எங்கும் தலைவிரித்தாடுகின்றன. நல்லோர் நாடறியாமல் ஒதுங்கி வாழ்கின்றனர். ஆனால், பேதங்களை வளர்த்து, பொய்ம்மையைப் பெருக்கி வாழ்பவர்கள் பெரியோர் என்று விளம்பரப்படுத்துகின்றனர். பாரதியின் சித்தாந்தப்படி இன்னும் நல்லோர் பெரியோ ரில்லை. சுதந்திர நாட்டில் உழைப்புக்கு மரியாதை, உழைத்து

வாழ்பவருக்குத் தகுதி இருக்கவேண்டும் என்பது பாரதியின் எண்ணம். கழனிகளில் உழுது உலகத்திற்கு உணவளிக்கும் தொழிலை வாழ்த்துகின்றான். பாரதி, ஆலைகளில் செய்யப் பெறும் தொழிலை வாழ்த்துகின்றான். நாட்டில் உழவரும், தொழிலாளரும் ஒருங்கிணைந்து செயற்படும் போதுதான் சமூக மாறுதல்கள் நிகழும்; புரட்சி தோன்றும்; சமுதாயம் வளரும். இது மனிதவியல் விஞ்ஞானத்தின் முடிவு. இதனை பாரதி "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று பாடுகின்றான். ஆனால், நாடு விடுதலை பெற்று 34 ஆண்டுகளாகியும் உழவுத் தொழில் உயர்ந்தபாடில்லை. எந்த ஒரு மனிதனும் 'உழவன்' என்று கடிதத் தலைப்பு வைத்துக் கொள்ள முன்வரவில்லை. இன்னமும் உழவனும் தொழி லாளியும் கூலி உயர்வு கேட்டுக் கொண்டுதான் கொடி தூக்கிக் கொண்டிருக்கிறான். உழவனும் தொழிலாளியும் உற்பத்தி செய்யும் பொருள்களுக்குரிய விலையை நிர்ணயிக்கும் உரிமை கூட அவர்களுக்குக் கிடைக்கவில்லை. பாரதி நிந்தனை செய்து ஒதுக்கிய கூட்டம் வளர்ந்து வருகிறது. அதாவது வீணில் உண்டு களித்திருப்போர் வளர்ந்து வருகின்றனர். பாரதி போற்றிய உழவனும் தொழிலாளியும் இன்னமும் உயர்வினைப் பெறவில்லை.

'நாம் இருக்கும் நாடு நமது' என்னும் அறிவு வந்து விட்டதாக பாரதி பாடுகிறான். பாரதிக்கு அந்த அறிவு வந்திருக்கலாம். அவன் காலத்திய சில தலைவர்களுக்கு வந்திருக்கலாம். இன்றைய நிலை என்ன? நம் ஒவ்வொரு வருக்கும் நமது வீடு மட்டும் தானே நமது நாடு போலத் தெரிகிறது. நாடு என்னும் ஒன்று நம் நினைவில் இருக்கிறதா? அப்படியே நினைவிலிருந்தாலும் நாடு நமக்குத்தான்; நாட்டுக்காக நாம் இல்லை என்னும் நினைப்பே ஆட்சி செய்கிறது.

எங்கும் சட்ட ரீதியான அடிமை இல்லையென்றாலும் அடிமைப் புத்தி அகன்றபாடில்லை. ஏன்? நாட்டில்

பரவலான கொத்தடிமைத்தனத்தை நெருக்கடி காலத்தில் தான் அகற்ற முடிந்தது. அதுவும் இன்னும் முற்றாக நீங்கிய பாடில்லை. இது நெற்றியில் கொத்தடிமை என்று எழுதிக் கொண்டு வாழ்வோரின் இலக்கணம். சுதந்திரமாகத் திரிபவர் போலத் திரிந்து கொண்டிருப்பவர்களிடத்திலேயே அடிமை உணர்வு நீங்கியபாடில்லை. நீங்க வேண்டும் என்ற ஆசையும் ஆட்சியாளர்களிடத்தில் அரும்பவில்லை. இங்ஙனம் மனிதர்கள் – மனிதர்களிடத்தில் அடிமை உணர்வுடன் பழகுவதி லிருந்தே நாடு இன்னும் விடுதலை பெற்று விடவில்லை என்பதாகிறது. ஆனால், அதற்குள் சிலர், இறைவனுக்கு அடிமை பூணவாவேண்டும் என்று கேட்கத் தொடங்கி யுள்ளனர். ஆனால், பாரதி தெளிவாகவும் உறுதியாகவும் சொல்கிறான். "பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம் பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்" என்று பாடுகிறான். இறைவன் பரிபூரணனாக இருப்பதாலேயே நாம் அடிமை செய்கிறோம். அந்த அடிமை விரும்பி அன்பினால் ஏற்றுக் கொள்ளப்படும் அடிமை என்ற சமயத் தத்துவம் பாரதியின் கவிதையில் அடங்கிக் கிடக்கிறது.

## ஒருமைப்பாடு வேண்டும்

1965ஆம் ஆண்டில் அடியிற் கண்ட வரிகள் நாடு முழுவதும் பாடப்பெற்றன.

*"பாரத நாடு பார்க்கெல்லாம் திலகம்*
*நீரதன் புதல்வர் இந்நினை வகற்றாதீர்"*

என்னும் வரிகள் தாம் அவை. பாரதியின் இந்த வரிகள் இந்திய மக்களின் ஆவேச உணர்வாக மாறி பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையே நடந்த போரில் வெற்றியைப் பெற்றுத் தந்தன. ஆனால், போரின் வெற்றிக்குப் பிறகு இந்த நினைவு நாம் இந்த நாட்டின் மக்கள் என்னும் நினைவு தொடர்ந்து இல்லை. ஏன்? ஒரு நாட்டின்

வளத்திற்கும் வலிமைக்கும் அந்நாட்டின் இயற்கை வளங்கள் மட்டும் காரணமாக அமையா. நாட்டில் வாழும் மக்களின் நினைப்புகளும் செயல்களுமே அயல்நாட்டிற்கு வளம் சேர்ப்பன; வலிமை சேர்ப்பன. நாட்டில் பிறந்து வளர்ந்து நாட்டிடைக் கிடைக்கும் வளங்களை நுகர்ந்து வாழும் மக்கள், தாம் வாழும் நாட்டிற்குத் தம்மை வாழ்விக்கும் நாட்டிற்கு வளம் சேர்க்க வேண்டாமா?

ஒரு நாட்டின் வளம் என்பது எடுத்தலும் வைத்தலும் என்கிற சுழற்சி முறையில் அமைய வேண்டும். நாம் எந்த அளவிற்கு வளங்களை எடுத்துப் பயன்படுத்துகிறோமோ அந்த அளவுக்கு நம் நாட்டின் மண்ணுக்கும் மரத்திற்கும் மக்களுக்கும் கூட வளத்தைத் திருப்பித் தர வேண்டும். கொண்டும் கொடுத்தும் வாழ்தல் சமயநெறி மட்டுமன்று; அதுவே சமுதாய நெறி; நாட்டை வளர்த்துப் பாதுகாக்கும் பெரு நெறியும்கூட.

வாழ்க்கை என்றால் வேற்றுமைகள் இருக்கத்தான் செய்யும். ஆனால், நாட்டின் ஒருமைப்பாட்டை உருக் குலைக்கச் செய்யும் வகையில் வேற்றுமைகளைப் பாராட்டுதல் நாட்டிற்கு நல்லதல்ல. மனித வாழ்க்கையில் எத்தனையோ தேவைகள்! ஆனால், எல்லாத் தேவைகளிலும் ஒத்துப்போதல், ஒன்று படுதல், ஒருமைப்பாடு பேணல் ஆகியவை முதன்மையானவையாகும். மொழி, சமயம், இனம் இவைகள் நாட்டின் ஒருமைப்பாட்டிற்குத் தடைகளாக அமையக்கூடாது. வாழ்க்கை வாழ்வதற்குத்தான். ஆனால், வாழ்வித்து வாழ்வதுதான் நாகரிக வாழ்க்கை. மற்றவர்க்குப் பயன்படாமல், மற்றவர்களை வாழ்விக்காமல் தாம் வாழ்வது கொச்சைத்தனமானது; கீழ்மையானது. உயர்ந்த வாழ்வியல் ஒருமையுணர்வு பரந்த நாட்டு அடிப்படையில்தான் தோன்ற முடியும். இன்று பரந்த நாட்டுணர்வு அழிந்துவிட வில்லையானாலும் மெல்லச் சிதைக்கப்படுகிறது என்பதை

யாரும் மறுக்க முடியாது. அஸ்ஸாமில் மண்ணின் மைந்தர் கொள்கை, பாஞ்சாலத்தில் காலிஸ்தான்-கொள்கை, தமிழகத்தில் திராவிட நாடு எண்ணம் இவைகள் இமயம் முதல் குமரி வரையில் ஒரு நாடு என்னும் உணர்விற்கு மாறானவை. இது மட்டுமா? அரசியல் கட்சிகளுக்கிடையிலும் சமயநெறியாளர்களுக்கிடையிலும் வளர்ந்து வரும் சண்டைகளால் ஒரு நாட்டில் ஒருவருக்கொருவர் நட்பாக உறவு கொண்டு உடன்பிறப்பாளர்களாக வாழ்வதற்குப் பதில் பகைவர்களாக வாழும் பண்பின்மையைப் பார்க்கிறோம். இன்று இந்திய மக்களின் பெரும்பான்மையான ஆற்றல் வெறுப்பிலும் பகையிலும் செலவழிக்கப் பெறுகிறது. இவை மட்டுமா? சாலை ஓரத்தில் உள்ள குளிர்தரு மரங்களை-நிழல்தரு மரங்களை நாட்டுடைமையாகக் கருதிப் பாதுகாக்கும் உணர்வில்லையே! கருத்து வேற்றுமைகள் அல்லது கட்சிச் சண்டைகள் ஏற்படும்பொழுது நாட்டுடைமைகளாகிய பேருந்துகளையும் பொதுச் சொத்துக்களையும் எளிதாக அழிக்கும் உணர்வினைப் பார்க்கிறோம். ஏன்? நாட்டிற்கு, நாட்டின் நலனுக்கு, நாடு நமது வாழ்வுக்குச் செய்யும் பணிகளுக்கு நாம் செலுத்தக்கூடிய வரிகளை ஒழுங்காகச் செலுத்தும் மனப் போக்கில்லையே. இந்தச் சீரழிவுகளுக்கு எல்லாம் காரணம் நாம் இந்த நாட்டின் மக்கள் என்னும் உணர்வைப் பெறாமைதான் என்றால் மிகையாகாது.

பாரதியின் நூற்றாண்டு விழாக் கொண்டாடும்போது இதைப் பற்றி நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். பாரதியின் நூற்றாண்டு விழாவின் நினைவாக இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டை மேலும் வலிமைப்படுத்தவேண்டும். ஒருமைப்பாட்டிற்கு விரோதமாக நிலவும் எந்த வேற்றுமைகளையும் கடுமையாகக் கணித்து ஒதுக்க வேண்டும். நாட்டில் சாதி, இன அமைப்புக்களின் பெயரால் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ கட்சிகளை, நிறுவனங்களை, இயக்கங்

களை நடத்த அனுமதிக்கக் கூடாது. நாட்டு மக்களைத் தனி நலம் சார்ந்த வாழ்க்கையிலிருந்து. கூட்டுப் பொது நலம் சார்ந்த வாழ்க்கைக்கு வளர்த்தாக வேண்டும்.

இந்திய மாநிலங்களுக்கிடையில் உள்ள உறவுகளை, எல்லைகளை நிர்ணயிக்க மாநிலங்களின் பேராளர்கள் அடங்கிய ஓர் உயர்மட்டக் குழு அமைய வேண்டும். நாடு ஒன்று என்னும் நினைவு தோன்றிய பிறகும் ஆட்சி முறைகள் அமைந்த பிறகும் காவிரிச் சிக்கல் தீரவில்லையென்றால் ஒரு நாடு என்ற உணர்வு ஏற்படவில்லை என்பதே உண்மை. இதற்கு ஆயிரம் சமாதானம் சொன்னாலும் ஏற்பதற்கில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களைத் தழுவி நிற்பவை அனைத்தும் நாட்டுடைமைகளாக வேண்டும். கங்கை காவிரி போன்ற, ஆறுகள் நாட்டு ஆறுகளாக எண்ணப் பெறுதல் வேண்டும். மாநிலங்களை இணைக்கும் சாலைகளைத் தேசிய நெடுஞ்சாலைகளாக ஆக்கிய நமக்கு இவைகளை நாட்டு ஆறுகளாக ஆக்குவதில் என்ன தயக்கம்? அது போலவே இந்திய மொழிச் சிக்கலுக்கும் தீர்வு கண்டாக வேண்டும். நாட்டு மொழிக் கொள்கையில் ஒதுங்குதல்-ஒதுக்குதல் போன்ற கொள்கைகள் ஆதிக்கம் பெறக்கூடா.

இங்ஙனம் பல்வேறு செயல் முறைகளால் நாட்டை வலிமைப்படுத்தும் இயக்கம் தேவை. மீண்டும் இந்தியாவுக்கு வெளியில் இருந்து ஆபத்து ஏற்படும் சூழ்நிலை இருக்கிறது. உலக வல்லரசுகளின் போட்டி இந்தியாவை, பாதிக்கத்தக்க வகையில் மையம் கொண்டிருக்கிறது. பாகிஸ்தானிட மிருந்தும் சீனாவிடமிருந்தும் நமக்கு ஆபத்து நீங்கிய பாடில்லை. மனிதகுலத்தின் மேம்பாட்டிற்காகத் தோன்றிய அறிவியல் இன்று அழிவின் எல்லையில் போய் நிற்கிறது. உயிர்களை எல்லாம் அழித்து விட்டு உடைமைகளைப் பாதுகாக்கும் நீர்வாயுக் குண்டு தோன்றியிருக்கிறது. உடைமைகள் மனிதர்களுக்கு என்பதற்குப் பதிலாக மனிதன்

வேண்டாம்; உடைமைகள் போதும் என்கிற இழிவான மனப்போக்கு உலகில் தோன்றிவிட்டது. இந்தச் சூழ்நிலையில் பாரத நாட்டு மக்களுக்கு மகத்தான பொறுப்பு இருக்கிறது. அவர்கள் பாரத நாட்டின் மக்கள் என்னும் நினைவில் நிலைத்து நின்று இந்திய ஒருமைப்பாட்டைக் கட்டிக் காப்பாற்ற வேண்டும். அதுவே பாரதிக்குச் செய்யும் நன்றி; வழிபாடு; கடப்பாடு.

*"பாரதநாடு பார்க் கெல்லாம் திலகம்*
*நீரதன் புதல்வர் இந்நினை வகற்றாதீர்"* பாரதி

## என்ன செய்யப் போகிறோம்?

பாரதி, விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டுக் கிடந்த பாரத தேசத்தில் பிறந்தவன்; வளர்ந்தவன்; வாழ்ந்தவன். பாரதி, இந்த நாட்டு மக்கள் வறுமையில் வாடியதைக் கண்டவன்; வறுமைக்கு எதிராகப் பாடியவன்; வறுமையை எதிர்த்துப் போராடும்படி மக்களைத் தூண்டியவன். ஏன்? வறுமை, கவிஞன் பாரதியைச் சுவை பார்த்ததைப் போல வேறு யாரையும் சுவை பார்த்திருக்கமுடியாது. ஆயினும் பாரதி, தன் வறுமைக்கு வருந்தியதில்லை. "மூட்டைப் பூச்சி", "கொசு" முதலியன போன்ற வள்ளல்களைத் தழுவி நின்றவனுமில்லை; புகழ்ந்து பாடியவனுமில்லை.

பாரதிக்கு, அவன் பசியைவிட நாட்டு மக்களின் பசியே துன்பத்தைத் தந்தது.

*"நாட்டுளார் பசியினால் நலிந்திடத் தன்வயிறு*
*ஊட்டுதல் பெரிதென உன்னுவோன் செல்க!"*

என்று பாடுகின்றான். இங்ஙனம் உண்பவர்கள்–நாட்டுளோர் பசி நீக்க முயற்சி செய்யாமல் உண்பவர்கள், ஊனை வளர்க்கிறார்கள். அத்தகையோர் வெறும் பிண்டம் என்பது பாரதியின் கருத்து.

பாரதி சுதந்திரப் போராட்டத்தின் ஆவேசத்தை வளர்த்தவன். அவன் எண்ணற்ற தேசிய இயக்க-விடுதலை இயக்கப் பாடல்களைப் பாடியிருக்கிறான். ஊரவர் பசி தீர்க்க உடலை வளைத்து உழைக்காமல் உருப்படியான காரியங்களைச் செய்யாமல் "வந்தே மாதரம்" என்று முழக்கம் செய்து வயிறு வளர்ப்போர் அவன் காலத்திலும் இருந் திருப்பர் போலும்! இந்த மனப் போக்கைப் பாரதி மறுக் கிறான்! கண்டிக்கிறான்.

நாடு விடுதலை பெற்று 34 ஆண்டுகள் கடந்த பின்னும் நடப்பதென்ன? இன்று எங்கும் அரசியல்! எதிலும் அரசியல்! தன் வாழ்க்கைக்கும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் யாதொரு தொழிலும் மேற்கொள்ளாமல் அரசியலையே பிழைப்பாகக் கொண்டவர் எண்ணிக்கை வரவர வளர்ந்து வருகிறது. இந்தக் காரணத்தால்தான் இந்திய நாட்டின் அரசியல் பொது வாழ்க்கையிலிருந்து ஊழலை ஒழித்துக் கட்ட முடியாமல் அந்த வட்டம் சுழன்று சுழன்று வருகிறது. நாட்டு மக்கள் மத்தியில் "யார் நல்லவர்?" என்கிற கேள்வி கூட இப்பொழுது எழுப்பப்படுவதில்லை. "எவர் நல்லவர்?" என்று கேட்கின்றனர்! எவருமே நல்லவர் இல்லை என்பதே மக்கள் மன்றத்தின் பேச்சு! கிராமப்புறங்களில்கூட யாதொரு தொழிலிலும் முனைப்புக் காட்டாத இளைஞர்கள் அரசியற் கட்சிப் பணிகளில் மட்டும் ஆர்வம் காட்டுகின்றார்கள். சாதாரண மக்களைப் பற்றிக் கவலைப்படாதவர்கள் கவலைப்பட விரும்பாதவர்கள் தேர்தல் நேரத்தில் தெருத் தெருவாகச் சுற்றித் திரியும் வேடிக்கையைப் பார்க்கிறோம். மக்கள் நலத்துக்குரிய கொள்கை, செயல் ஆகியனவற்றைத் துணை யாகக் கொண்டு மக்களின் ஆதரவைப் பெற யாரும் முயற்சி செய்வதில்லை. வண்ணச் சுவரொட்டிகள்! எடுப்பான ஊர்வலங்கள்! மிடுக்கானப் பேச்சுகள்! வளைந்து வளைந்து வரும் ஊர்திகள்! எதிரியைக் காரசாரமாகத் திட்டும் திட்டுக்கள்! செவிடனும் நொண்டியும் கூட்டுச்சேர்ந்ததைப்

போல், கொள்கையில்லாத-தேர்தல் வெற்றியையே குறிக்கோளாகக் கொண்ட கூட்டணிகள்! இந்தத் திருவிளையாடல்களைப் பார்க்கிறோம்.

தேர்தல்கள், அரசியலைப் படிப்பிக்கும் கருவிகளாக மாறவேண்டும். நாட்டு மக்களின் நலிவு தீர்க்கும் கொள்கை, மக்கள் முன் வைக்கப்பெறுதல் வேண்டும். தேர்தல் என்பது ஒரு கொள்கைக்குத் தரும் வாக்கு. தேர்தல் என்பது ஒரு கொள்கை பெற்ற வெற்றிக்கு அளிக்கும் வாக்கு. இப்பொழுது நடைபெறும் தேர்தலில் கொள்கையாவது? செயலாவது? யாதொன்றும் இல்லை!

இத்தகு முறைகேடான அரசியல் வாழ்க்கை நடைபெறுவதால்தான் செல்வந்தர்கள் அரசியலை விலைக்கு வாங்குகின்றார்கள். திரும்ப அந்த அரசியலைக் கொண்டே செல்வத்தைக் குவிக்கின்றார்கள். இந்தத் தீயவட்டம் சுழன்று கொண்டேயிருக்கிறது. ஏழைகளோ அன்றாடம் காய்ச்சிகள்! அவர்களுக்கு அன்றாடம் பொழுது போனால் போதும் என்றாகிவிட்டது.

நாட்டில் கட்சிகளுக்கு என்ன குறைவா? அரசியல் பேச்சாளர்களுக்குக் குறைவா? யாதொரு குறைவுமில்லை. ஆனால், நாட்டு மக்களில் 67 விழுக்காட்டு மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஏன் இந்த நிலை? நாட்டுப் பணி செய்ய ஆளைக் காணோம். கூட்டுறவு இயக்கங்களில் ஈடுபட்டு சமுதாயப் பொருளியற் புரட்சிக்குத் தொண்டு செய்யும் ஆட்களைக் காணோம். சுதந்திர தினவிழாக் கொண்டாட யாரையும் காணோம். குடியரசு தினவிழாக் கொண்டாட யாரையும் காணோம்! ஆனால், தேர்தல் காலச் சுற்றுலாக்களுக்குப் பலர் முனைந்துள்ளனர். அரசியல் மேடையில் பேச அப்பப்ப, எவ்வளவு போட்டி, அதுவும் நம் நாட்டு மக்கள் அரசியல் பேச்சாளர்களை மட்டமாக வளர்த்திருக்கிறார்கள். எதிர்க் கட்சியைக்

கிண்டலாக, கேலியாகப் பேசினால் சுவையாகக் கேட்கிறார்கள். நமது நாட்டு மக்களின் செவிநுகர் சுவையின் தரம் குறைந்துவிட்டது.

இந்தச் சூழ்நிலையில் இந்த நாடு வறுமைப்பட்டுக் கிடக்கிறது. நாட்டு மக்களில் பாதிப் பேருக்கு மேல் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கிறார்கள். அன்னை பாரத தேவி 5,000 கோடி கடன் வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறாள். ஏன் இந்த அவலம்? நாட்டில் வெற்று அரசியல் வளர்ந்து வருகிறது. விவேகம் வளரவில்லை. பொருளாதாரப் புரட்சிக்கு முன்நின்று உழைக்கும் உத்தமர்களைக் காணோம். இந்த நிலை பாரதி காலத்தில் இருந்தபடியே இன்றும் இருக்கிறது. ஒரு தலைமுறை மடியப் போகிறது. அடுத்த தலைமுறை அதாவது இன்று வளரும் தலைமுறை நம்பிக்கை அளிப்பதாக இல்லை. யுகப் புரட்சி செய்த பாரதிக்கு என்ன செய்யப் போகிறோம்?

"தாயைக் கொல்லும் பஞ்சத்தைத்
தடுக்க முயற்சி யுறார்
வாயைத் திறந்து சும்மா—கிளியே
வந்தே மாதரம் என்பார்"

- பாரதி

## அறமே பெரிதென அறிக!

இன்று நம்முடைய நாடு சென்று கொண்டிருக்கும் நிலை இரங்கத் தக்கது. இந்தச் சூழ்நிலைக்குப் பாரதியைவிட சிறந்த மருத்துவனில்லை. இன்று இந்திய நாட்டு மக்களிடையில் "இந்தியர்" என்ற உணர்வு இல்லை. 'இந்தியர்' என்ற உணர்வைச் சாதி, குலம், கோத்திரம், மொழி, சமயம் முதலிய உணர்வுகள் தோன்றாமல் அழியச் செய்கின்றன. எங்கு பார்த்தாலும் சிறு சிறு குழுக்கள்! அக்குழுக்களிடை யிலும் கூட கூட்டமைப்பு உணர்வில்லை. ஏதோ ஒரு தன்னல நயப்பின் காரணமாகக் குழுக்களாய்க் கூடுகின்றனர்.

கடைசியில் கிடைத்த கொள்ளையில் பங்கு போட்டுக் கொள்வதில் தகராறு ஏற்பட்டு அக்குழுக்களும் கூட கலகத்தின் களங்களாக மாறிவிடுகின்றன. இது போதா தென்று குழுக்களிடையிலும் சண்டை! எந்த ஆட்சி அமைப்பிலும் விருப்பு, வெறுப்புகள் தலைவிரித்தாடுகின்றன. கட்சி வேற்றுமைகள் தடித்துத் தம் கட்சியைத் தவிர மற்ற கட்சியினருக்கு ஆள உரிமையில்லை; கருத உரிமையில்லை; வாழ உரிமையில்லை என்ற அளவுக்குக் கட்சி வெறி உணர்வுகள் உச்ச கட்டத்தை அடைந்துவிட்டன. தேர்தல் திருவிழாக்கள் நடந்தாலும் மக்களாட்சிப் பண்பு வளர வில்லை. வளர்ந்துள்ள தீமைகள் இவைதாமா? இல்லை! மேலும் வளர்ந்துள்ளன.

நாடு என்பது பொது. ஆட்சியென்பது பொது. இந்த மனப்போக்குடன் நாட்டின் செயல்கள் நடைபெறுவதில்லை. உற்றார், உறவினர் என்றெல்லாம் கருதி வரம்பு, எல்லை களைக் கடந்தும்கூட நலன்கள் வழங்கப்படுகின்றன. தம்மைச் சாராதவர்களுக்கு வாழும் உரிமை இல்லையென்றே மறுக்கப்படுகிறது. இந்த நிலைமை நீடித்தால் நாடு சிலருக்குச் சொந்தமாகிவிடும். பலர், வாழ்க்கையை இழப்பர்.

இதனைப் பாரதி, பாரதத்தின் குருச்சேத்திரப் போரை மையமாக வைத்து விளக்குகிறான். போர்க்களத்தில் விசயன் அரசியல் நீதியைப் பார்க்காது உற்றார் உறவினரைப் பார்த்துச் சோர்கிறான். உறவின் பாற்பட்டுச் சோர்ந்திருக்கும் விசயனைக் கண்ணன் தேற்றுகிறான். அறம், நீதி இவைகளைப் பாதுகாக்கும் பணியில் உற்றாரைப் பார்த்தல் கூடாது; உறவினரைப் பார்த்தல் கூடாது; அறநெறியே முதன்மையானது என்று கண்ணன் விசயனுக்குக் கூறுவது பாரதிக்கு மிகவும் பிடித்திருக்கிறது. ஆனால் இந்தப் பண்பு நாட்டில் வளரவில்லை. பொல்லாத சிறு நெறிகளில் இந்த நாடு சீரழிந்து கொண்டிருக்கிறது. அதிகாரத்தில் அமர்ந் திருப்பவர்கள் அவர்கள் கருத்தை, செயலை மற்றவர்கள்

விமரிசிப்பதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் ஆத்திரப்படு கின்றனர். தம்மை-தம்முடைய கட்சியைச் சாராதவர்களைப் பகைவர்கள் போல எண்ணுகின்றனர். அவர்களுக்கு ஏது உரிமை என்றுகூடக் கருதுகின்றனர். எல்லா அமைப்புகளிலும் எல்லா இடங்களிலும் தமது அணியைச் சார்ந்தவர்களே அமர்ந்து ஆட்சி செய்ய வேண்டும் என்று எண்ணுகின்றனர். இந்த மனப்போக்கு முற்றி, கட்சிச் சார்பில்லாத ஒன்றியத் தேர்தல்கள் கட்சிச் சார்புடைய தாக்கப் பெற்றுவிட்டது. இனி, குடிக்கும் தண்ணீருக்கு ஏற்பாடு செய்வதிலும்கூட கட்சி புகுந்து வேலை செய்யும். இந்த மனப்போக்கு நாட்டின் பொதுமைக்கு நன்றன்று. வளரும் நாட்டுக்கு இயல்பன்று. பாரதி,

*"வஞ்சகர், தீயர், மனிதரை வருத்துவோர்,*
*நெஞ்சகத் தருக்குடை நீசர்கள்-இன்னோர்*
*தம்மொடு பிறந்த சகோதர ராயினும்*
*வெம்மையோ டொறுத்தல் வீரர்தம் செயலாம்"*

(சத்ரபதி சிவாஜி)

என்று பாடுகின்றான்.

இன்று இந்தக் காட்சி எங்கே கிடைக்கிறது? ஒரு சாதாரண மனிதன் நாட்டின் ஆட்சியமைப்புக்கு உடன் படாத நிலையில் இயங்குகின்றான். ஏன்? காவல் துறையின ரையே மிரட்டுகின்றான். பகல் வெளிச்சம் போல முறைகேடு களை அவன் செய்ய வேண்டும். காவலர்கள் பார்க்காதிருக்க வேண்டும் என்று எண்ணும் அளவுக்கு எப்படி அந்தச் சராசரி மனிதனுக்கு எண்ணம் வந்தது? அவன் ஆளுங் கட்சியைச் சார்ந்தவன் என்ற ஒரே காரணம் தான்! இத்தகைய மனப்போக்கு நாடு முழுவதும் பரவிக் கிடக்கிறது. இதனை மூத்த தலைவர்கள் பார்த்தும் பாராதிருக்கிறார்கள். அதனால் முறைகேடுகள் என்பது பழக்கங்களாகி விடும் போல் தோன்றுகிறது.

பாரதி தொடர்ந்து பேசுகின்றான். "அறமே பெரிதென அறிந்திடு மனத்தனாய்" வாழ்ந்திடுதல் வேண்டும் என்று வலியுறுத்துகின்றான். இன்று பொருளாதார நெருக்கடிகளுக் காளாகிச் சட்ட ஒழுங்குகள் சீர்குலைந்திருக்கும் நிலையில் பாரதியின் இந்தக் கருத்து மாமருந்தாகும். சென்ற காலத் தவறுகள் நடந்தவையாகப் போகட்டும். கவலை வேண்டாம். ஆயினும் பாரதி நூற்றாண்டு விழாக் காலத்தில் பாரதியின் ஆணைப்படி புதுவிதி செய்வோமாக! எல்லோரும் இந்நாட்டு மக்கள் என்று நம்புவோமாக! நடத்துவோமாக!

## பாரதி விரும்பிய பாரத சமுதாயம்

பாரதி, விடுதலைக் கவிஞன். பாரதி விரும்பிய விடுதலை அரசியல் விடுதலை மட்டுமன்று. பாரதியின் விடுதலை முழக்கம் ஒரு முழு விடுதலைப் புரட்சியேயாகும். ஆம்! அரசியல் விடுதலை மட்டுமே அரை வயிற்றுக் காரனுக்குச் சோறு தந்து விடுமா? தொழிற் புரட்சி ஏற்பட வேண்டும்; பொருளாதாரப் புரட்சி நடக்க வேண்டும். எல்லாருக்கும் எல்லாம் என்ற இலட்சியம் நிறைவேறினால் தான் விடுதலை அர்த்தமுள்ளதாகும். இத்தகைய விடுதலையே பாரதியின் இலட்சியம்.

இருள், துன்பத்தின் சின்னம்; அடிமைத்தனத்தின் அடையாளம்; அறியாமையின் கூறு. இருளின் விளைவால் அடிமைத்தனம், வறுமை, புன்மையான ஆதிக்கங்கள், கலகங்கள், போர்கள் ஆகியன கூத்தாடும். ஆதலால், மனித குலத்தை வாழ்விக்க விரும்பும் கவிஞர்களெல்லாம் இருள் நீங்கி ஒளி வரவே பாடுவர். பொழுது விடிவது எப்போது? என்ற வினா புரட்சிக்குக் கட்டியம் கூறும் வினா! பொழுது விடிவது என்பது இரவு போய், பகல் வருவது என்பது மட்டுமல்ல. இன்னல்கள் நீங்கி இன்பம் வருவது என்பதுமாகும்.

பாரதிக்கும் பொழுது புலர வேண்டும் என்பதே ஆசை; ஆர்வம்! பொழுது புலர்ந்த காலைப்பொழுதைக் கவிஞன் சித்திரிக்கின்றான். காலைப்பொழுதில் காக்கை கரையும். காக்கை கரைதல் பொழுது புலர்ந்ததன் அடையாளம்! சேவலும் கூவும். ஆனால், பாரதி காக்கையையே தேர்ந்தெடுத்தான். ஏன்? பறவையினத்தில் காக்கைக் குலமே உறவு கலந்து கூடி உண்டு வாழும் இயல்பினது. 'காக்கைக் கரவா கரைந் துண்ணும்' என்பது தமிழ்மறை. திருட்டுத் தனமுடைய காக்கைகளும் உண்டு. அவை அளவுகோல்களல்ல. யாரோ சிலருக்குப் பொழுது விடிந்து என்ன பயன்? மானிடரில் சிலருக்குக் கையும் மூளையும் வலிமையாக அமைந்து விடும். இந்த வலிமை மனிதகுல மேம்பாட்டுக்கு அல்லவா பயன்பட வேண்டும்! அதுதான் இல்லை. பிறர் பங்கைத் திருடிக் கொழுப்பவர்களுக்கு எந்த யுகத்திலும் விடியும்! மக்கள் கவிஞன் பாரதி, இங்ஙனம் சிலருக்குப் பொழுது விடிவதை ஏற்பானா? எல்லாருக்கும் பொழுது விடிய வேண்டும். அப்படியானால் என்ன பொருள்?

'சோற்றுக்குப் பஞ்சமில்லை
போரில்லை; துன்ப மில்லை' (காலைப் பொழுது–20)

என்ற சமுதாய அமைப்பே பொழுது புலர்ந்ததன் உண்மையான அடையாளம்.

இன்றைய நிலை என்ன? முதலாளித்துவ நாடுகள் உணவுப் பொருள்களை நிறைய உற்பத்தி செய்து வளரா நாடுகளுக்கு வழங்கும் எண்ணத்தைப் பெறவில்லையே! போருக்குப் பயன்படும் ஆயுதங்களை உற்பத்தி செய்து, சின்னஞ்சிறு நாடுகளுக்கெல்லாம் கூட ஆயுதங்களை விற்பனை செய்து போர்ப் பதற்ற நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கும் இழிநிலையை என்னென்பது? முதலாளித்துவ உலகம் கொண்டுள்ள இந்தப் போர் வெறிக்கு ஓர் எல்லையில்லையா? நீர்வாயுக் குண்டைக் கண்டு

பிடித்திருக்கிறார்களாம்! அந்தக் குண்டு வீசப்பெறும் நாடுகளில் பூதபௌதிகப் பொருள்களையெல்லாம் அழிக்காது. ஆனால், உயிர்க் குலத்தை அழிக்கும்! வையகமும் வானகமும் உயிர் குலத்திற்குத்தானே! உயிர்க் குலத்தை அழித்து உடைமைகளைக் கொள்ளை கொள்ளும் அளவுக்கு முதலாளித்துவ உலகம் நச்சுத் தன்மையடைந்திருக்கிறது. இது கலியுகத்தின் திருவிளையாடல் போலும்! அதனால்தான் பாரதி,

*"பொய்க்கும் கலியை நான் கொன்று*
*பூலோ கத்தார் கண்முன்னே*
*மெய்க்குங் கிருத யுகத்தினையே*
*கொணர்வேன்! தெய்வ விதியிஃதே!"*

(விநாயகர் நான்மணிமாலை – 39)

என்று வீரசபதம் கொள்கின்றான்!

இங்ஙனம் வீரசபதம் கொண்டு விளங்கிய பாரதிக்கு உருசிய நாட்டில் நடந்த புரட்சிச் செய்தி கிடைத்திருக்கிறது. அந்தப் புரட்சியை எழுச்சியுடன் வரவேற்கின்றான். தன்னுடைய நினைப்பு, உருசியாவில் நிகழ்ந்து விட்டதை அறிந்து ஆரவாரக் கூத்தாடுகின்றான்.

*"இடிபட்ட சுவர்போல கலி விழுந்தான்*
*கிருதயுகம் எழுக மாதோ!"* (புதிய ருசியா–6)

என்று உருசியப் புரட்சியை வரவேற்கின்றான்; வாழ்த்துகின்றான்! சோவியத் புரட்சியை முதன் முதலாக வரவேற்றவன் கவிஞன் பாரதியே!

சோவியத் புரட்சியை வரவேற்ற பாரதி, அதற்கு விளக்கங்களும் தருகின்றான். ஏன் புரட்சி? எதற்காகப் புரட்சி? என்று தெரியாமல் அர்த்தமில்லாதவைகளைச் செய்து புரட்சியென்று சொல்லிக் கொண்டிருக்கலாமா? தமிழ் இலக்கிய உலகிற்குப் 'புரட்சி'யென்ற சொல்லையே முதற்

கொடையாகத் தந்தவன் பாரதிதான்! எந்தச் சூழ்நிலையில் புரட்சி தோன்றும்? எதற்காகப் புரட்சி வெடிக்கும்? புரட்சியின் பயன் என்ன? என்று கவிஞன் பாரதி ஐயத்திற் கிடமின்றி விளக்குகின்றான். நாட்டாட்சி, புரட்சிக்கு முன்பு புரட்சி தோன்றுவதற்குரிய களம். அங்கே உழுது விதைத்து அறுப்பாருக்கு உணவில்லை; பிணிகள் பல உண்டு; பொய்யைத் தொழுது அடிமை செய்வார்க்குச் செல்வச் செழிப்பு உண்டு; உண்மை சொல்வோர் ஒதுக்கப்படுவர்; சிறையில் தள்ளப்படுவர். ஏன்? தூக்கும் உண்டு! நல்லோர் சான்றோர் நாட்டில் ஒதுக்கப்பட்டவர்கள். இத்தனை அநியாயங்களும் ஆட்சியின் பெயரால்! அது மட்டுமா? மதப் புரோகிதர்களின் வாழ்த்துக்களுடனும் நடந்தன! மனித உலகத்தை அன்பு நெறியில் வளர்த்து, அருள் நெறியில் வாழ் விக்க வேண்டிய சமயங்கள், புரோகிதர்களின் ஆதிக்கத்திற்கு ஆளானவுடன் கறைபட்டு விட்டது! களங்கப் பட்டு விட்டது! சமயம், தன் நிலையில் இல்லாமல் பொருள், அதிகாரம் ஆகிய போதை மயக்கத்திலிருந்ததன் காரண மாகவே மாமேதை மார்க்சு, மதத்தை அபின் என்று சொன்னார் போலும்! இந்தக் கொடிய சூழ்நிலையில் சோவியத்தில் புரட்சி-இரத்தம் சிந்தாப் புரட்சி பிறந்தது. புரட்சியை நேரில் கண்டு வரவேற்பவனைப் போல் பாரதி, கங்கு கரையற்ற களிப்புடன் வரவேற்கின்றான்!

> 'ஆகா! என்று எழுந்தது பார்,
> யுகப் புரட்சி'

என்று வரவேற்கின்றான்!

இந்திய நாட்டு மக்களுக்குச் சோவியத் புரட்சியை அறிமுகப் படுத்த ஆவல் கொள்கின்றான். பாரதி, சமய நெறியில் நின்றொழுகியவன்; கடவுள் நம்பிக்கையுடையவன். பாரதி, கடவுள் நம்பிக்கை மூலமே சமுதாயத்தில் புரட்சி செய்ய முடியும் என்ற நம்பிக்கையுடையவன். இந்திய நாட்டு

மக்களுக்கும் கடவுள் நம்பிக்கை மிகுதி. அதனால் கடவுள் பெயரால் யார் எதைச் சொன்னாலும் நம்பி விடுவர்; கேட்பர். எனவே, சோவியத் புரட்சியைக் கடவுள் சம்பந்தப் பட்ட புரட்சியென்று சொன்னால் இந்த நாட்டு மக்கள் கடவுளின் பெயரால் புரட்சி செய்வர். சோவியத்தைப் போல் இங்கேயும் ஒரு சோஷலிசப் புரட்சி தோன்றும் என்று நம்பினான். அதனால், சோவியத் புரட்சியை மாகாளி, பராசக்தி கடைக்கண் வைத்ததால் எழுந்த புரட்சி - நடந்த புரட்சி, அருளியல் வழியில் நடந்த புரட்சி என்று கூறிப் புரட்சிக்கு நம்மை ஆயத்தப்படுத்துகின்றான்.

பாரதி, புரட்சி தோன்றுதற்குரிய அடிப்படைத் தன்மைகளை நினைந்தே பாடுகின்றான். எந்த நாட்டிலும் தொழிற் புரட்சி ஏற்பட்டு நாடு வளரும் பொழுதுதான் பொருளியல் புரட்சி மலரும் என்பது வரலாறு. வேளாண்மைத் தொழில் செய்யும் உழவனும் தொழிலாளியும் ஒன்று சேரும் பொழுதுதான் புரட்சி தோன்றும். இவர்கள் உழைக்கும் அணியினர்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்பது பாரதியின் வாக்கு. வேளாண்மைத் தொழிலோடு தொழில் துறையும் சேர்ந்து சமுதாயப் புரட்சிக்கு அடித்தளம் அமைப்பதை நினைந்து பாடுகின்றான். பாரதி, "பிறர் பங்கைத் திருடுதல் வேண்டாம்" என்று பாடியதன் மூலம் மனித உலகத்தின் நச்சுத் தன்மையுடைய முதலாளித் துவத்தை வளர்க்கும் வேலை, கூலி, உபரி உழைப்பு என்ற தத்துவத்தை எளிதில் விளக்குகின்றான். உழைப்பாளிகள் உழைத்து உற்பத்தி செய்யும் பொருள்களில் உரிய கூலி தராது வரும் பகுதியே சுரண்டலாகி மூலதனமாகிறது. உழைப்பிற்குப் பயன்படாது உடம்பில் சேரும் கொழுப்பு நாளடைவில் நீரழிவு நோயாகி உடலை வருத்துதல் போல், உழைப்பாளருக்கு உரியவாறு பயன்படாது சுரண்டலால் சேமிக்கப் பெறும் மூலதனம் காலப் போக்கில் மனித

குலத்தை அடிமைத்தளத்திற்கு ஆளாக்குகிறது. நீரழிவு நோயினும் இது கொடுமையானது. அதனால் பாரதி, தான் விரும்பிய பாரத சமுதாயத்திற்கு,

> "முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
> முழுமைக்கும் பொதுவுடைமை"

என்றே இலக்கணம் வகுக்கின்றான். அவனது முழக்கம் "எல்லோரும் ஓர்குலம்' என்பதேயாம்.

ஒரு நூற்றாண்டு ஓடிவிட்டது. பாரதி வழியில் பாரதம் நடை போடாமல் இல்லை. பாரதி வழியில் பசுமைப் புரட்சியும் தொழிற் புரட்சியும் நடைபெற்றுள்ளது. ஆயினும் பொதுமைப்புரட்சி நடைபெறவில்லை. நூற்றாண்டுவிழா நினைவாகவாவது பாரத நாடு புதுமை படைக்குமா? பொது உடைமை படைக்குமா?

(நன்றி—தாமரை டிசம்பர் 1981)

# 3

# பாரதியின் கனவுகள்

பாரதி ஒரு நல்ல கவிஞன். நல்ல கவிஞன் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு, தான் வாழுகின்ற காலத்தை நன்றாகக் கணித்து அதனுடைய நிலைகளைக் கூர்ந்து, அறிந்து நாட்டை எந்தத் திசையில் அழைத்துச் சென்றால் வெற்றி பெறும் என்ற ஆய்வையும் செய்து, சிறந்த முறையில் வழிகாட்டுகிறவன் தான்! அவன், காலத்திற்கு இசைந்த கவிஞன்.

சிலர் கருதுவதைப் போலக் காலத்திற்கு இசைந்த கவிஞன் என்று சொன்னால் அந்தக் காலம் விரும்புகிற கொச்சைச் செய்திகளை மட்டும் பாடிவிட்டுப் போவதல்ல. அஃதொரு மலிவான சரக்குமாக இருக்கக் கூடாது; இடித்துச் சொல்கிற திறனும் இருக்கவேண்டும்; எடுத்துச் சொல்கிற ஆற்றலும் இருக்கவேண்டும். தானே, அதற்காகக் கடமை களைச் செய்கிற அர்ப்பணிப்பு மனப்போக்கும் இருக்க வேண்டும். இவை அனைத்தும் எந்தக் கவிஞனிடத்தில் இருக்கிறதோ அவன் காலத்திற் சிறந்த கவிஞன். காலத்திற்கிசைந்த கவிஞன்.

பாரதி அத்தகைய கவிஞன் என்பதில் இரண்டு விதமான கருத்து இருக்க முடியாது. எந்தக் கவிஞன் தான் வாழுகின்ற காலத்தைப் புரிந்து கொண்டிருக்கின்றானோ

அந்தக் கவிஞன் ஒரு காலத்தை உருவாக்குவான் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

காலத் தேரில் உலாவருகின்ற கருத்தை ஏற்றுக் கொண்டு மையொற்றுத்தாளைப் போலப் பேசி எழுதி விட்டுப் போகிறவர்களும் உண்டு. அவர்கள் காலத்தின் கருத்தைப் பிரதி பலிப்பவர்களே தவிர, காலத்திற்கு ஒரு கருத்தைக் கொடுக்க மாட்டார்கள்.

பாரதி தான் வாழ்ந்த காலத்திற்கு ஒரு கருத்தைக் கொடுத்தான். அதைவிட அவன் வாழ்ந்த காலத்திற்கு ஓர் உருவமும் கொடுத்தான் என்பது மிகையன்று.

இந்திய நாட்டினுடைய விடுதலைப் போராட்டத்தில் அரசியல் இயக்கங்களைச் சேர்ந்தவர்களுடைய பெயர்கள் பொலிவோடும் வலிவோடும் புகழப்பட்டாலும் அதற்குரிய அடிப்படையான கருத்துப் புரட்சியைச் செய்து முடித்த பெருமை கவிஞன் பாரதிக்கே உண்டு.

விடுதலையைப் பற்றி அவன் கனவு கண்டான் என்று கூடச் சொல்லலாம். கனவு என்பதிலே இரண்டு, மூன்று வகை இருப்பதனால் நமக்கு ஒரு குழப்பம் ஏற்படும். சிலர் உறக்கம் வராமையின் காரணமாகக் கூட கனவு காண்கிறார்கள். அவர்கள் தின்று முடித்த கதைகளைப் பற்றியும் கனவு காண்பார்கள். அவை கனவாகா.

அறிவார்ந்த உணர்வில் நீண்ட நெடிய சமுதாய வரலாற்றை நினைவில் கொண்டு உறக்கத்திற்குப் போக முடியாமல் தத்தளிக்கின்ற மனம் காண்கின்ற ஒன்றுதான் சிறந்த கனவு. அந்தக் கனவுக்கு அறிவின் துடிப்பும், ஆள்வினையின் ஆற்றலும் இருக்க வேண்டும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அத்தகைய கனவுகளைக் கண்டவன் தான் பாரதி.

## சுதந்தரமான கவிஞன்

பாரதி அடிமையாகத்தான் பிறந்தான்; அடிமையாகத் தான் வாழ்ந்தான்; அடிமையாகவே தன்னுடைய வாழ்க்கையை முடித்துக்கொண்டான் என்பதில் இரண்டு விதமான கருத்து இல்லை. அவனுடைய பொன்னுடல் மீது இந்த நாட்டின் சுதந்தர மணிக்கொடி போர்த்த முடியாமல் தான் அவன் செத்துப்போனான். ஆனால், அவனுடைய திண்மையான நம்பிக்கையின் காரணமாக இந்த நாடு விடுதலை பெற்று விட்டது என்றே பாடுகின்றான். ஆக, கவிஞன் பின்னே வருகிற சுதந்தரத்தை ஆன்ம அளவில் - உணர்வு அளவில் பெற்று, முதலில் தான், சுதந்தர மனிதனாகிறான்.

எந்த மனிதன் தனிப்பட்ட வாழ்க்கையில் சுதந்தரத்தை அனுபவிக்க முடியாமல் இருக்கிறானோ அந்த மனிதனால் ஒரு சமுதாயத்திற்கோ, ஒரு நாட்டிற்கோ விடுதலையை வாங்கித்தரமுடியாது. பின்னிப் பிணைந்த ஆசைகளாலும் தன்னலத்தாலும் பல்வேறு சூழல்களாலும் தன்னை அடிமைப்படுத்திக்கொண்டு வாழ்கிறவர்கள் ஒரு நாட்டிற்கோ, ஓர் இனத்திற்கோ விடுதலையை வாங்கித் தர முடியாது. பாரதி அத்தகைய சூழல்களிலிருந்தெல்லாம் விடுதலை பெற்று விட்டான். அவனைப் பசிவருத்தினாலும் காக்கை குருவியினுடைய பசிதான் அவனைத் துன்புறுத்தியது. இருக்கின்ற அரிசியைக்கூட காக்கை குருவிகளுக்கு அள்ளி இறைத்து அவை சிறகடித்துப் பறப்பதைப் பார்த்து மகிழ்வான். ஆக, பசியிலிருந்தும் துன்பத்திலிருந்தும் சாதிகளிலிருந்தும் மதங்களிலிருந்தும் அவன் தன்னை முதலிலே விடுதலை செய்து கொண்டான். எனவே, தான் விடுதலை பெற முடிந்தது எவ்வளவு உண்மையோ அது போல இந்த நாடு விடுதலை பெற முடியும் என்று நம்பினான். எனவே அடிமையாகக் கிடக்கிற காலத்திலேயே "ஆடுவோமே

பள்ளுப் பாடுவோமே! ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று!" சுதந்தரம் அடைந்து விட்டதாகவே பாடுகின்றான். அது கவிஞனின் திண்மையான கருத்தின் விளைவு என்பதை மறந்துவிடக்கூடாது.

*ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே*
*ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று –*
*ஆடுவோமே*
*எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு–நாம்*
*எல்லோரும் சமமென்பது உறுதியாச்சு*
*சங்குகொண்டே வெற்றி ஊதுவோமே–இதைத்*
*தரணிக்கு எல்லாம் எடுத்து ஓதுவோமே! –*
*ஆடுவோமே*

## நாம் இருக்கும் நாடு நமது என்பது அறிவோம்!

நம் நாடு அடிமைப்பட்டுக் கிடந்த காலத்திலே அவன் சுதந்திரத்தைக் கண்டு விட்டான். அந்தப் பாடலிலேயே மீண்டும் சொல்கிறேன். இந்த நாடு நிச்சயம் விடுதலை பெறத்தான் போகிறது என்பது அவனுடைய நம்பிக்கை. ஆனால், இந்த நாட்டு மக்கள் விடுதலை பெற்ற பிறகாவது நாட்டுப் பற்றோடு இந்த நாட்டைக் காப்பாற்றுவார்களா? என்ற ஐயப்பாடு அவனுக்குத் தோன்றியிருக்கிறது. சிறந்த கவிஞர்களுக்கும் சான்றோர்களுக்கும் ஐயப்பாடு தோன்றுதல் நல்லதல்ல என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**"நாமிருக்கும் நாடு நமதென்ப தறிந்தோம்"** என்று சொல்கிறான். இந்த நாடு அடிமைப் பட்டதற்குக் காரணம் அந்நியர்களுடைய படைவலிமை அல்ல என்பதை நாம் உணரவேண்டும். நமக்கு இருந்த பலவீனங்கள் – நோய்கள் தாம் அந்நியருக்கு இடங்கொடுத்தனவே தவிர, அவர் களுடைய படைவலிமை என்று யாரும் சொல்ல முடியாது.

"நாமிருக்கும் நாடு நமது" என்ற உணர்ச்சி இல்லாததே காரணம். அன்பு கூர்ந்துப் பொறுத்துக் கொள்ளுங்கள்!"

இன்றைக்கும் கூட "நாமிருக்கும் நாடு நமது" என்ற உணர்வு எத்தனை விழுக்காட்டு மக்களுக்குத் தோன்றி யிருக்கிறது என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிய வில்லை. நாடு விடுதலை பெற்று 35 ஆண்டுகளுக்கு மேலான பிறகும் கூட இந்த நாட்டின் சுதந்திரத் திருநாளை அரசாங்க எந்திரங்கள் மட்டும்தான் கொண்டாடுகின்றன. அதனுடைய உறுப்புக்களாக இருக்கின்றவர்கள் மட்டுமே கொண்டாடு கின்றனர். இந்த நாட்டில் மக்கள் எழுச்சியோடு கொண்டாடுகிற விழாவாக இன்னும் விடுதலை பெற்ற திருநாள் வராத ஒரு குறையை நாம் இன்றும் பார்க்கின்றோம். ஆக, நாட்டுப்பற்று இன்னும் நமக்குச் செழித்து வளரவில்லை. இன்னும் நாட்டில் ஆத்திரங்கள், ஆசைகள் அலை மோதுகிறபோது நாட்டின் பொதுச் சொத்துக்களைத்தான் நாம் பாழாக்குகின்றோம் என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

நமக்குத் தவிர்க்க முடியாத கோபங்கள் வரலாம். அல்லது நம்முடைய ஆசைகள் நிறைவேறாது போகலாம். அதற்காக நம் நாட்டினுடைய புகைவண்டிகளையும் பேருந்துகளையும் பாழாக்குகின்ற மனப் போக்கைப் பார்த்தால் வேதனை ஏற்படுகிறது. இவை வேறு யாருடைய சொத்துக்களோ என்று கருதுகிறார்கள் போலத் தெரிகிறது. இது என்னுடைய சொத்து, இதில் ஒரு சிறிய ஆணி பழுதுபட்டாலும் அது எனக்கு இழப்பு: எனது நாட்டுக்கு இழப்பு என்கிற மனப்போக்குதான் நாட்டுப் பற்று.

பாரதி சொன்னவாறு, "நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம்' என்ற உணர்வுகள் வளரவில்லை. அதிலும் பாரதி தென் தமிழ் நாட்டிலிருந்து பாடுகிறான். தமிழ் நாட்டின் எல்லையிலே இருக்கிறவன் பொதிகை மலையோடு

நின்று விடுவானோ என்று அஞ்சி இது உனக்குப் பரம்பரையாக உள்ள சொத்து இதனோடு எல்லையை நிறுத்தி விடாதே என்று கருதி "மன்னும் இமயமலை எங்கள் மலையே!" என்று பாடுகின்றான். ஆக, இமயமலையின் மீது இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் உரிமையை உண்டாக்குகிற குரலாக இருந்தது.

*நாமிருக்கும் நாடு நமது என்பது அறிந்தோம் – இது*
*நமக்கே உரிமையாம் என்பது அறிந்தோம் – இந்தப்*
*பூமியில் எவர்க்கும் இனி அடிமைசெய்யோம் – பரி*
*பூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்.*
*(ஆடுவோமே)*

## நாட்டுப்பற்று வேண்டும்

நாடு விடுதலை பெற்று விட்டது. இந்தவகையில் பாரதியின் கனவு நனவாகி விட்டது. ஆனால், எந்த மக்களுக்காக விடுதலையைக் கேட்டானோ விரும்பினானோ அந்த மக்கள் இன்னும் விடுதலை பெற்றபாடில்லை. அவர்கள் தன்னல நயப்பிலும் தற்சார்பான வாழ்க்கையிலும் மீண்டும் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய வீட்டைவிட்டு வெளியே வீதி என்று ஒன்று இருக்கிறது, வீதியைத் தழுவிய ஊரும் நாடும் இருக்கின்றன என்கிற விரிந்த பரந்த மனப்போக்கு இன்னும் உருவாக்கப்பட வில்லை.

இந்தத் துறையில் அவனுடைய கனவுகள், நனவா வதற்கு உரியவாறு படித்தவர்கள், சான்றோர்கள் பொது மக்கள் அனைவரும் முயற்சி செய்ய வேண்டும். பாரதநாடு விடுதலை பெற்ற திருநாள் இந்த நாட்டின் தேசியத் திருநாளாக வேறு எந்தத் திருநாளையும் விட ஒப்பற்ற திருநாளாக வீடுகளிலும் வீதிகளிலும் கோயில்களிலும் கூட விளங்க வேண்டும்.

மனிதன் எதை உபாசிக்கிறானோ அவ்வண்ணமாக அவன் ஆகிறான். மனிதன் எதை நினைந்து நினைந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து பிராத்திக்கிறானோ அவ்வண்ணமாக ஆகிறான். எனவே சுதந்தரமாக இருக்கிற கடவுளை இந்த நாட்டு மக்கள் தொழுதால்தான் அவர்களுக்கும் சுதந்தரம் வரும் என்று அவன் நினைத்தான் போலத் தோன்றுகிறது.

ஆதலால், திருக்கோயில்களுக்குள்ளே இருக்கிற மூர்த்திகளுக்கெல்லாம் "சுதந்தரதேவி" என்று பெயர் மாற்றம் செய்கிறான். ஆனால், விடுதலைசெய்யப்பட்டு பாரததேவி போன்றிருந்த அந்தத் திருவுருவங்கள் மீண்டும் பூட்டு களுக்குள் சிக்கிக் கொண்டிருக்கிற கொடுமையைப் பார்க் கிறோம். அதனால் தான் கடவுள் திருடு போகாமல் சிலைகள் திருடு போகின்ற நிலையைப் பார்க்கிறோம். ஞானம் குறைகிறது, ஆன்மீகம் தளர்கிறது என்பதை இதனால் புரிந்துகொள்ள முடிகிறது. எனவே நாட்டுப்பற்று மிகுதியாகச் செழித்து வளரவேண்டும். அப்போதுதான் **பாரதியின் கனவுகள் நனவாகும்** என்பதை மறந்து விடக்கூடாது.

*தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற – எங்கள்*
*தாய் என்று கும்பிடடி பாப்பா!*
*அமிழ்தில் இனியதடி பாப்பா! – நம்*
*ஆன்றோர்கள் தேசமடி பாப்பா!*

*சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே; – அதைத்*
*தொழுது படித்திடடி பாப்பா!*
*செல்வம் நிறைந்த ஹிந்துஸ்தானம் – அதைத்*
*தினமும் புகழ்ந்திடடி பாப்பா!*

*வடக்கில் இமயமலை பாப்பா! – தெற்கில்*
*வாழும் குமரிமுனை பாப்பா!*
*கிடக்கும் பெரியகடல் கண்டாய் – இதன்*
*கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா!*

*வேதம் உடையதிந்த நாடு – நல்ல*
*வீரம் பிறந்ததிந்த நாடு;*
*சேதமில்லாத ஹிந்துஸ்தானம் – இதைத்*
*தெய்வமென்று கும்பிடடி பாப்பா!*

## திட்டவரைவு தந்தவன்!

மகாகவி பாரதியின் செய்திகளில் மிக முக்கியமான செய்தி, ஒரு நாட்டுக்கு விடுதலை வந்தால் மட்டும் போதாது; அந்த நாடு முன்னேற்றத்திசையில் செல்ல வேண்டும் என்பது. கவிஞர்களைப் பற்றி மரபான பழமொழி ஒன்று உண்டு. அவர்கள் சட்ட மன்றத்துக்குச் செல்லாத சட்டமன்றப் பேராளர்கள் என்று மக்களைப் புரிந்து கொண்டு மக்களுக்காகச் சட்டமன்றங்கள் செய்ய வேண்டியவைகளை இவர்கள் எடுத்துச் சொல்வார்கள். இதுதான் அதன்பொருள்.

நாடு விடுதலை பெறும் என்ற நம்பிக்கை வந்தவுடன் இந்த நாட்டுக்கு **ஐந்தாண்டுத் திட்டங்களை வரைந்து கொடுத்த பெருமை பாரதிக்கு உண்டு** என்பதை மறந்து விடக்கூடாது. ஆக நாடு விடுதலை பெற்று விட்டால் மட்டும் போதாது. இந்த நாட்டில் பெரிதும் தொழிற்புரட்சிகள் ஏற்பட வேண்டும்.

> ***"ஆயுதம் செய்வோம்; நல்ல காகிதம் செய்வோம்;***
> ***ஆலைகள் வைப்போம்"***

என்று ஓர் ஐந்தாண்டுத்திட்டமே வரைந்து கொடுக்கிறான்.

"சந்திரன் இயல்கண்டு தெளிய வேண்டும்" "சந்தி தெரு பெருக்கும் சாத்திரம் கற்கவேண்டும்" என்கிறான். இப்படித் திட்டங்களையும் வரைந்து கொடுத்தபெருமை பாரதிக்கு உண்டு. இத்துறையைப் பொறுத்தவரையில் பாரதியின் கனவுகள் நனவாகவில்லை என்று யாரும் சொல்லிவிட முடியாது. இந்தியா இந்தத் துறையில் மகத்தான

சாதனையைச் செய்திருக்கிறது - வெற்றி பெற்றிருக்கிறது என்று கூடச் சொல்லமுடியும்.

கீழ்த்திசை நாடுகளுக்கு அண்மையில் நாம் பயணம் மேற்கொண்டபோது ஜப்பான் நாட்டிலே சில தொழில் களைப் பற்றி ஆராய்ந்தோம். அதுபோது "எங்கள் நாட்டிலா நீங்கள் தொழிலைப் பற்றி அறிந்து கொள்ள வருகிறீர்கள்! உலக நாடுகளிலே எலக்ட்ரானிக் தொழிலில் உங்கள் நாடு மிகப் பெரிய இடத்தை வகிக்கிறதே" என்று சொன்னார்கள்.

எனவே, இந்தியா விடுதலை பெற்ற பிறகு தொழில் துறையில் வளர்ந்திருக்கிறது. நம் தொழில் நுட்பம் வளர்ந்திருக்கிறது; நம்முடைய நாட்டில் அறிஞர்கள் வளர்ந்திருக்கிறார்கள்; அறிவியல் வளர்ந்திருக்கிறது. இந்தத் துறையில் எந்தவிதமான தொய்வும் இல்லை என்றுகூட நம்மால் உறுதியாகச் சொல்லமுடியும்.

ஆனால், அறிவியல் ஆய்வுக் கூடத்தில் அறிவியல் வளர்ந்து விடலாம். தொழிற்சாலைகளில் உற்பத்தி பெருகலாம்; புதிய தொழில்கள் நாட்டிலே உருவாகி யிருக்கலாம். ஆனால், அவற்றின் பயன்கள் எதிர் விளைவுகள் மக்களிடத்தில் எப்படிச் சென்றிருக்கின்றன என்று ஆய்வு செய்யவேண்டும். பாவேந்தன் பாரதிதாசன் சொல்வான்,

"ஒருத்தர் தயை இல்லாமல் ஊரறியும் தமிழில் சலசலவென எவ்விடத்தும் அறிவியலைப் பாய்ச்சிவிட வேண்டும்" என்று. மக்கள்கூடும் இடங்களில் எல்லாம் அறிவியலைப் பற்றி தொழிலியலைப்பற்றிப் பேசி ஆய்வு செய்கின்ற காலத்தில்தான் இந்தநாடு வளரும் என்று சொன்னான் பாவேந்தன்.

**எல்லாத் துறையிலும் இந்தியா எந்த நாட்டுக்கும் இளைத்ததல்ல என்ற பெருமையை இன்றைக்குப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறது. பாரதி கண்ட அந்தக் கனவுகள் அரசின் வாயிலாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.** அதற்கு உறுப்புக்

களாகச் சில மக்களும் இருந்திருப்பார்கள் என்பதிலே கருத்து வேறுபாடு இல்லை.

ஆனால், அரசே இயக்கி இயங்குகிற இயக்கம் வேறு, தாங்களாகவே மக்கள் ஆவேசம் கொண்டு இயங்குகிற இயக்கம் வேறு. அரசு ஒரு விரிவான ஆய்வுக் கூடத்தை அமைத்து விஞ்ஞானிகளை அமைத்து ஊதியம் கொடுத்து ஆய்வு செய்வது என்பதை விடப் பல்கலைக் கழகங்கள் அமைந்திருக்கிற, வட்டத்தில் அறிஞர்கள் தனியே ஓர் ஆய்வுக்கழகத்தை அமைத்து அவர்களுடைய ஓய்வு நேரங்களிலே சமுதாய அமைப்புக்களைப்பற்றி ஆய்வு செய்து நாட்டுக்குப் பரிந்துரையும் எடுத்துரையும் செய்கின்ற போது நாட்டுக்குத் தியாகம் செய்கின்ற அறிவியலறிஞர்கள் - மேதைகள் உருவாவார்கள். அந்தப் போக்கு வளரவேண்டும். அந்தத் துறையில் பாரதியின் கனவுகள் நனவாகவில்லை என்றே சொல்லத் தோன்றுகிறது.

அதனால்தான் தமிழைப்பற்றி பாரதி நினைத்த போது "பிற நாட்டு நல்லறிஞர்கள் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்" என்று சொன்னான். அவன் சாளரங்களை நன்றாகத் திறந்து வைக்கச் சொன்னான். எந்தச் சாளரத்தையும் அவன் சாத்தச் சொல்லவில்லை. அதே சமயத்தில் சாளரங்களின் வாயிலாக வரும் வாடைகளால் இந்த நாட்டின் தமிழ் கெட்டுப் போகக்கூடாது என்றும் நினைத்தான்.

அவன், உலகளாவி நிற்கின்ற மற்ற மொழிகளோடு தன்னுடைய தாய்மொழியாகிய தமிழ் ஈடும் இணையுமற்று இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான், அது நிறைவேறவில்லை. "மெத்த வளருது மேற்கே புத்தம் புதிய கலைகள்" என்று நினைவுபடுத்தினான்.

அந்தக் கலைகள் தமிழில் வராது என்று எவனோ சொன்னான். பாரதிக்குக் கோபம் வருகிறது. அந்தக்

கோபத்தை எந்தத் தமிழறிந்த சான்றோரும் பெறாததால் தமிழ் இன்னும் பட்டிமண்டப மொழியாகத்தான் இருக்கிறதே தவிர அது அறிவியல் மொழியாக தொழிலியல் மொழியாக பொருளியல் மொழியாக வளரவில்லை. "வானம் அளந்ததனைத்தும் அறிந்து வளர்மொழி வாழியவே" என்று பாடுகிறான். ஆக அனைத்தும் தமிழில் முடியும் என்பதே பாரதியின் நம்பிக்கை.

*கல்வி சிறந்த தமிழ்நாடு–புகழ்க்*
*கம்பன் பிறந்த தமிழ்நாடு–நல்ல*
*பல்விதமான சாத்திரத்தின் மணம்*
*பாரெங்கும் வீசும் தமிழ்நாடு.*

*சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்*
*சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்*
*வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்*
*மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்.*

## மொழிச் சிக்கலுக்குத் தீர்வு காண வேண்டும்

இன்றைக்கு இந்தியா ஒரு நாடு என்ற உணர்வைப் பெற முடியாமல் – மொழிச் சிக்கலுக்குத் தீர்வே காணாமல் இருக்கிறோம். எந்த வகையிலாவது மொழிச் சிக்கலுக்குத் தீர்வு காணாமல் ஒத்திப் போடுவது ஒரு தலைமுறையின் அறிவுப் பயிற்சியைத் தடைசெய்வது போலாகும் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

ஒரு தலைமுறை அறிவுத்துறையில் எந்தத் துறையிலாவது பின் தங்கிப் போனால் அது பல தலைமுறைகள் பின் தங்கிப் போகின்ற குறையை உடையதாக அமையும். அந்தத் துறையில் நம்முடைய அறிஞர்கள் சீக்கிரமாகத் தீர்வு காண வேண்டும். அவர்கள் எப்படித் தீர்வு காணவேண்டும் என்று என்னுடைய கருத்தை வலியுறுத்தத்

தயாராக இல்லை. எந்த நாடு எந்த முடிவு எடுத்தாலும் இந்தியா ஒருநாடு என்பதற்கு எதிராக முடிவெடுக்க முடியாது. அப்படி எடுத்தால் இந்த உலகத்திற்கு அது நல்லதல்ல. அதே நேரத்தில், நான் இந்தியனாக இருப்பதனால் தமிழனாக இருப்பதற்குரிய தகுதியை இழந்து விடுவேன் என்ற அச்சத்தையும் உண்டாக்கக் கூடாது.

நான் தமிழனாக இருப்பதால் இந்தியனாக இருக்க முடியாது என்று சொல்வது இருக்கிறதே அது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு கருத்து. நான் தமிழனாகவும் இருக்க முடியும், இந்தியனாகவும் இருக்க முடியும். ஏன்? நம் சிந்தனையில், செயலில் வாழ்க்கைப் போக்கில் வளர்ந்தால் உலகத்தின் உயர் குடிமகனாகவும் கூட இருக்க முடியும்.

முரண்பாடுகள் என்பது பிளவுகளுக்கும், பிரிவினை களுக்கும் உரியன அல்ல. தெளிவாகச் சொன்னால் இந்தியாவில் இப்போது முரண்பாடுகளே கிடையாது. வேறுபாடுகள் கொஞ்சம் கொஞ்சம் இருக்கின்றன. இவைகளை நாம் தீர்க்க முயன்றால் எளிதில் தீர்வு காண முடியும்.

எனவே, பிற நாட்டுச் சாத்திரங்களைத் தமிழில் கொண்டுவந்து சேர்த்துத் தமிழை வளமான மொழியாக வளர்க்க வேண்டுமென்று பாரதி ஆசைப்பட்டான். அந்தக் கனவு நினைவாகவில்லை.

> எல்லோரும் ஒன்றுஎன்னும் காலம்வந்ததே பொய்யும்
> ஏமாற்றும் தொலைகின்ற காலம்வந்ததே—இனி
> நல்லோர் பெரியரென்னும் காலம் வந்ததே - கெட்ட
> நயவஞ்சகக் காரருக்கு நாசம் வந்ததே.

## பொதுவுடைமைச் சமுதாயம்

அமரர், பாரதி வாழ்ந்த போது நம் நாட்டு மக்கள் தொகை என்ன என்பது உங்களுக்குத் தெரியும். இப்போது

இருக்கிற எண்ணிக்கையும் தெரியும். இதில் நாம் குறிப் பிடத்தக்க வெற்றிபெற்று வந்திருக்கிறோம்.

பாரதி பாடிய போது முப்பதுகோடி மக்கள் இருந்தனர். அது இன்றைக்கு ஒன்றுக்கு இரண்டாகி அதற்கு மேலேயும் போய்க் கொண்டிருக்கிறது. பாரதி, அந்த முப்பது கோடி மக்களையும் ஒரு சங்கமாகக் கண்டான். ஒரே குடும்பமாகக் கண்டான்; அந்தக் குடும்பத்தைப் பொது வுடைமைச் சமுதாயமாகவும் கண்டான்.

"பொதுவுடைமைச் சமுதாயம்" என்றாலே பலர் முகம் சுளிக்கிறார்கள். பொதுவுடைமைச் சமுதாயம் என்பது ஒரு பயங்கரமான சமுதாய அமைப்பல்ல. அதைப்பற்றித் தவறான தகவல்கள் நிறைய பரப்பப் பெற்றுள்ளன. அங்கே மக்களாட்சி உரிமைகள் - அடிப்படை உரிமைகள் எல்லாம் பறிபோகும் என்று சொல்கிறார்கள். ஒரு வீட்டில் மகிழ்ச்சி ஒரு வீட்டில் துன்பம் ஏன்?

சங்க காலத்துக் கவிஞன் பாடுகிறான். "ஒரு வீட்டிலே மகிழ்ச்சி ஏன்? இன்னொரு வீட்டிலே துன்பம் ஏன்? என்று! இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் இந்த நாட்டுத் தமிழ் மண்ணிலே பிறந்த தமிழ்க் கவிஞனுடைய குரல் அது! தெளிவாகச் சொன்னால் இயற்கை நியதி மாற்ற முடியாதது - என்கிற மரணத்தைப் பற்றிய செய்தியைக் கூட அவன் கேள்வி கேட்கிறான். "இப்படித்தான் உலகம் இருக்கும்" என்று சொன்னால் அவன் அதை மறுக்கிறான்.

கடவுள் இப்படித்தான் படைத்து விட்டான் என்று சொன்னால் அந்தக் கவிஞனுக்குக் கடவுள் மீதே கோபம் வருகிறது. "அவன் பண்பில்லாதவன்" என்று ஏசுகிறான். கடைசியில் இந்நாட்டு மக்களுக்கு அவன் ஒரு செய்தி கொடுத்தான். துன்பமாகத்தான் இருக்கும்! ஆனால் இப்படிச் சொல்லி ஏமாற்றாதே! ஒந்த உலகத்தை இனியதாக்குக என்று சொன்னான்.

*"இன்னா தம்மஇவ் வுலகம் இனியகாண்க*
*இதன் இயல்புணர்ந் தோரே!"*

என்று சொன்னான்.

இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகள் கழித்தும் இந்தப் பாட்டுக்குப் பதவுரை கிடைத்தது; பொழிப்புரை கிடைத்தது; இலக்கணவுரை கிடைத்தது; விரிவுரை கிடைத்தது; செயலுருவம் மட்டுமே கிடைக்கவில்லை. அதற்குப் பிறகு பல நூற்றாண்டுகள் கழித்துப் பத்தாம் நூற்றாண்டில் சுந்தரர் அவிநாசியில் கேட்கிறார். ஒரு வீட்டிலே மகிழ்ச்சி; ஒரு வீட்டிலே துன்பம் ஏன்? என்று கேட்கிறார்.

பத்தாம் நூற்றாண்டிலே கேட்கப்பட்ட கேள்விக்கும் இதுவரையில் விடை காணவில்லை. ஆக, ஒரு வீட்டில் மகிழ்ச்சி ஒரு வீட்டில் துன்பம் என்ற சமுதாயப் பொருத்தப் பாடில்லாத நியதிகளைத் தமிழ் நெஞ்சங்கள் உடன்படாமல் எதிர்த்திருக்கின்றன. ஆனால் இந்த நாட்டில் புரட்சி தோன்றவில்லை!

***உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்–வீணில்***
***உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்***
***விழலுக்கு நீர்பாய்ச்சி மாய மாட்டோம்–வெறும்***
***வீணருக்கு உழைத்துடலம் ஓயமாட்டோம்.***

## பணத்தில் வேர்வை நாற்றம் இருக்கிறதா?

என்னுடைய தகுதிக்கு என்னுடைய ஆற்றலுக்கு ஏற்ப உழைத்துச் சம்பாதித்து வாழ்வதில் யாதொரு தடையும் இல்லை. நுகர்வுக்கு எல்லைகிடையாது. நம்முடைய இலக்கியம் "அருளோடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்" என்கிறது.

அருளோடும், அன்போடும் பொருள் வரவேண்டும். வருகிற பணத்தைப் பெட்டியில் எண்ணி வைத்தால் மட்டும்

போதாது. அந்தப் பணம் வருகிறபோது "வேர்வை நாற்றம்" வீசுகிறதா? என்று பார்க்க வேண்டும். உழைப்பால் வந்த பணம் என்றால் அந்தப் பணத்தில் வேர்வை நாற்றம் இருக்கும். அது இல்லையென்றால் சலவை சலவையாகக் கத்தை கத்தையாக இருக்கும். இதுதான் இந்த நாட்டுச் சமுதாய அமைப்பு. இதைத்தான் திருவள்ளுவர், "அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்" என்று சொன்னார். அந்தக் கனவு நினைவாகவில்லை!

பாரதி இதை மிக்க நயமாகச் சொல்கிறான். பொதுவுடைமைச் சித்தாந்தத்தின் கர்த்தா என்று பேசப் படுகின்ற காரல் மார்க்சை, மாமுனிவர் என்பார் தமிழ்த் தந்தை திரு. வி. க. காரல்மார்க்சு "மூலதனம்" என்ற தத்துவ நூலில் நிறைய எழுதியிருக்கிறார். ஆனால் மார்க்சு பல பக்கங்களில் எழுதியதை சிலசில வரிகளில் இலகுவாகப் பேசிவிட்டுப் போகிறார் பாரதி.

இந்தப் பொதுவுடைமைச் சித்தாந்தத்தின் அடிப் படைத் தத்துவம் உழைப்பு, கூலி, உபரி விகிதங்கள் என்பதுதான். ஒருவன் உழைக்கின்ற அளவுக்குக் கூலி பெறாது போனால் உழைக்கின்றவன் இளைக்கின்றான். உழைப்பை விலைக்கு வாங்குகிறவன் உயர்ந்து போகிறான். இது அவர் தத்துவத்தின் அச்சாணி. பாரதி எவ்வளவு இலகுவாகப் பேசுகிறான்!

> ***"மனிதர் உணவை மனிதர் பறிக்கும்***
> ***வழக்கம் இனியுண்டோ?"***

என்கிறான். ஒருவன் உழைக்கின்றான். அவனுடைய உழைப்புக்குத் தகுந்த ஊதியம் கிடைக்க வேண்டும். ஓர் உழைப்பாளி காலை நேரத்தில் விறகு வெட்ட வருகிறான். வேலை வாங்குகிறவன் கேட்கிறான் "என்ன கேட்கிறாய்?" என்று. "ஐயா, ஐந்து ரூபாய் கொடுங்கள்" என்கிறான் உழைப்பாளி! அவருக்குக் கொடுக்க மனமில்லை. நாம் நவீன

நாகரீக உலகத்தில் விலை பேச மாட்டோம். கடை வீதிக்குப் போனால் என்ன விலை போட்டிருந்தாலும் கொடுத்து வாங்கி வந்து விடுவோம்.

வீட்டு வாசற் படிக்குக் கீரைக்காரி கீரைக்கட்டு கொண்டு வந்தால் மட்டும் எவ்வளவு பெரிய மனிதராக இருந்தாலும் ஒரு பத்து நிமிடம் விலைபேசி விலையைக் குறைத்து ஒரு கீரைக் கட்டாவது அதிகமாக வாங்கினால் தான் அவருக்கு ஆத்மதிருப்தி. இது கிராமப்புறத்து ஏழை மக்களுடைய தலையிலே எழுதிய எழுத்துப் போலும்!

எனவே உழைப்பாளி விறகு வெட்டியிடம் "என்னப்பா அவன் மூன்று ரூபாய் கேட்பான்; நீ ஐந்து ரூபாய் கேட்கிறாயே!" என்பான் வேலை வாங்குகிறவன்.

விறகு வெட்டிக்கோ அன்று வேலை செய்யாது போனால் அடுப்பில் உலை வைக்க முடியாது. எங்கே இந்த வேலை கையை விட்டு நழுவிப் போய் விடுமோ என்ற எண்ணத்தில் "ஐயா கொடுப்பதைக் கொடுங்கள்" என்று குனிந்து வெட்ட ஆரம்பித்து விடுவான். "சரி, போனால் போகிறது. அவன் மூன்று ரூபாய் கேட்பான்; நீ இரண்டரை ரூபாய் வைத்துக் கொள்" என்று தாராள மனப் பான்மையுடன் வள்ளல் கொடுப்பார்!

ஒரு பெரிய மரம் தோன்றினால் அதன் கீழே புல்கூட முளைக்க விடாது. அதே போல் சமுதாய அமைப்பு அவ்வளவு மோசமாக இருப்பதைப் பாரதி புரிந்து கொண்டுதான் "ஆகா! என்று எழுந்தது பார் யுகப் புரட்சி!' என்று சோவியத் புரட்சியை வரவேற்கின்றான்!' பாராட்டுகின்றான். அதனுடைய வீச்சு அவனுடைய உரைநடை, கதை, கவிதை அனைத்திலும் இருந்ததைப் பார்க்கின்றோம்.

கடையத்தில் ஒரு சபை கூட்ட வேண்டும் என்கிறான். கிராமத்தின் சபைக்கு கிராமத்தின் சொத்தைப் பொதுவாக்க

வேண்டும் என்கிறான். அவன் ஏராளமான எண்ண அலைகளைப் பெற்றிருந்தான் என்பதிலே கருத்து வேறுபாடு இருக்க முடியாது. எனவே முப்பது கோடி ஜனங்களுக்கும் ஒரு சங்கம் அமைத்துப் பொதுவுடைமைச் சமுதாயம் காண விரும்பினான். ஒருவர் உணவை ஒருவர் பறித்து வாழக்கூடாது என்று விரும்பினான். நம்முடைய நாட்டில் இன்னும் அந்தக் கனவு நனவாகவில்லை.

## சமுதாய மாற்றம்

நான் முன்னர்க் குறிப்பிட்டதைப் போல இந்தியா வளர்ந்து வருகிறது. தொழிலியலில் வளர்ந்து வருகிறது. இந்திய நாட்டின் வருவாய் உயர்ந்து கொண்டேயிருக்கிறது. ஆனால் சராசரி தனிமனிதனுடைய வருவாய்மட்டும் உயர மாட்டேன் என்று மறுக்கிறது. என்ன புதிர் என்று நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை.

இந்தியா ஏழை நாடு அல்ல. இன்றைக்கும்! ஆனால், இந்தியர்கள் ஏழைகளாக இருக்கிறார்கள். நூற்றுக்கு அறுபத் தெட்டு விழுக்காடு மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறார்கள். இது நமக்கு மட்டும் தென்படுகிற குறையல்ல. நம்முடைய நாட்டை ஆண்ட சுதந்தர பாரதத்தின் சிற்பியாக விளங்கிய அமரர் நேருஜி அவர்கள் பாராளுமன்றத்திலேயே சொன்னார்கள், "நாட்டின் வருமானம் உயர்ந்திருக்கிறது! சராசரி மனிதனின் வருமானம் உயரவில்லை. எங்கு போயிற்று என்று கண்டுபிடிக்க முடியவில்லை" என்று! இதையேதான் இரண்டாயிரம் ஆண்டுக்ளுக்கு முன்பு திருவள்ளுவரும் சொன்னார்.

> *"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்*
> *கேடும் நினைக்கப் படும்"*

என்பது திருக்குறள். "நினைக்கப்படும்" என்றால் நினைத்தால் கெட்டுப் போய்விடும் என்பதல்ல. இந்த நினைக்கப்படும்

என்பது மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஆணை. "ஆய்வு செய்யப்பா! என்ன, சந்தேகமாக இருக்கிறதே! இந்த இடத்திலே இந்த வீடு இவ்வளவு பெரியதாய் வளர்கிறதே! இதைக் கொஞ்சம் ஆய்வு செய்ய வேண்டும்!" என்று புலனாய்வு செய்கிற முயற்சி இருக்கிறதே-அதைத்தான் திருவள்ளுவர் "நினைக்கப்படும்" என்று கோபத்தோடு சொல்கிறார்.

"நினைக்கப்படும்" என்பதற்குக் கவனத்தில் கொண்டு ஆராயப்படும்; குறைகள்-நிறைகள் ஆய்வு செய்யப்படும் என்றுதான் பொருள். ஆக, இந்த நாட்டின் சராசரி மனிதனுடைய வருமானம் உயர்ந்தால்தான் சமநிலைச் சமுதாயம் உருவாக முடியும். தயவு செய்து ஒன்றை மறந்துவிடாதீர்கள்! எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கிற ஒரு சமுதாய அமைப்புத் தோன்றாவிடில் நம்முடைய காவல் சக்தி பெருகி; பூட்டுக் கடைகள் பெருகும், பெருகிவிடும்.

ஒரு நாட்டில் காவல் துறையினர் எண்ணிக்கை குறைந்துகொண்டே வரவேண்டும். குற்றவியல் நீதிமன்றங்கள் குறைந்துகொண்டே வரவேண்டும். ஆனால், நம்முடைய நாட்டில் இவைகள் எதிர்நீச்சுப் போட்டு வளர்ந்து கொண்டேயிருக்கின்றன. எனவே, பொதுவுடைமைச் சமுதாயம் மலர வேண்டும். எல்லாரும் எல்லாவற்றையும் அடைந்திட வேண்டும் என்று கருதினான் பாரதி. இந்தக் கனவு நனவாகவில்லை.

அடுத்து, இந்த நாட்டின் வலிமைக்கு மிகத் தடையாக இருப்பவை இந்த நாட்டிலிருக்கிற சாதி, குலகோத்திரச் சண்டைகள். கிட்டத்தட்ட இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளாக இந்த மனப்போக்கை நாம் எதிர்த்துக் கொண்டே வந்திருக்கிறோம். ஆனால் கொஞ்சம் கூட இந்தச் சமுதாயம் நகர்ந்து கொடுக்கமாட்டேன் என்கிறது. "யாதும் ஊரே! யாவரும் கேளிர்!" என்று தொடங்கிய கவிஞன் காலம்

முதல் "சாதிகள் உண்டென்று சொல்வானும் இருக்கிறானடா இருட்டறையில்" என்று சொன்ன பாரதிதாசன் காலத்திற்குப் பின்னும் இருக்கிறது. இந்தச் சாதி, குல கோத்திரச் சண்டைகளை வேறுபாடின்றி ஆழ்வார்கள் நாயன்மார்கள் கூட எதிர்த்து வந்திருக்கிறார்கள். ஆனால் என்ன காரணம் பற்றியோ அசைந்து கொடுக்கவில்லை. இங்கும் அங்குமாக - தற்காலிகமாக-வாழ்க்கைத் தேவைகளுக்காக நகர்ந்து கொடுப்பது போலத் தெரிகிறது. ஆனாலும் உண்மையான மாற்றங்கள் என்று ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இந்திய நாட்டினுடைய சமுதாய அமைப்பில், சாதிகள் ஆழமாக வேர்விட்டுப் போன ஒரு கொடுமை போலத் தெரிகிறது. இடைக் காலத்தில் தெரிந்தோ தெரியாமலோ நோய்க்கு மருந்து என நினைத்துச் செய்த சில மருத்துவ முயற்சிகள் அந்த நோயை வளர்த்திருப்பது போலத் தெரிகிறதே தவிர அவை மருத்துவமாக இருந்து நோயை மாற்றியதாகவும் தெரியவில்லை. நாம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஒரு சமுதாயத்தைத் தாழ்த்தப்பட்டவர் களாக்கி வைத்திருந்தோம். அந்தச் சமுதாயத்திற்கு மாற்றம் வேண்டும் என்கிறான் பாரதி.

நீ முதலில் உனக்குப் பக்கத்தில் இருக்கிற மனிதனுக்கு விடுதலைகொடுக்க மறுக்கிறாய். உன்னுடைய தெருக் கோடியில் வாழ்கிற மனிதனுக்கு விடுதலை கொடுக்க மறுக்கிறாய். நீ எப்படி அந்நியரிடத்திலே விடுதலை கேட்கமுடியும் என்பது போல அவனுடைய பேச்சு அமைந்துள்ளது. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை உயர்த்த வேண்டும் என்று சொன்னான். 'நந்தனைப் போலொரு பார்ப்பான் இந்த நாட்டினில் இல்லை" என்று சொன்னான். காண முடியாது. நேற்றும் கண்டதில்லை; இன்றும் காண முடியாது.

## கவலை தோன்றுகிறது

நாம் நந்தனார் தோன்றிய சமுதாயத்தில் இருந்து இன்னொரு நந்தனாரைத் தோற்றிவித்தோமில்லை. கண்ணப்பர் தோன்றிய சமுதாயத்திலிருந்து இன்னொரு கண்ணப்பரைத் தோற்றுவித்தோமில்லை ஏன் இந்த அவல நிலை? சமுதாய அளவில் அங்கும் இங்குமாகச் சில அசைவுகள் தோன்றினாலும், சத்தியமாக இந்த நாட்டின் சமயங்கள் முயற்சி செய்யவில்லை-துணியவில்லை என்று தெரிகிறது.

அரசாங்கம் என்ற இயந்திரம் மட்டுமே எப்படிச் சமத்துவத்தை உண்டாக்க முடியும்? அரசாங்கம் என்ற இயந்திரம் மட்டுமே எப்படித் தீண்டாமையை ஒழிக்க முடியும்? அரசாங்கம் என்ற இயந்திரம் மட்டுமே எப்படிச் சாதிகளை நீக்க முடியும்? அது தற்காலிக வைத்தியங்களைச் செய்கிறது. அந்த வைத்தியங்களோ மீண்டும் வேறு நோய்களாக மாறி விடுகின்றன.

ஆனால் நம்முடைய நல்லூழின்மையின் காரணமாக இந்த ஒதுக்கீடுகளை நிரந்தரமாகக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற உணர்வோடு தமிழ்ச் சங்கங்கள் தோன்றி வளர்ந்த நாட்டில் சாதிச் சங்கங்கள் தோன்றி வளர்கின்ற கொடுமையினைப் பார்க்கின்றோம். ஆக, இந்தத் தலை முறையினை இந்த நாட்டில் சாதிகளுக்கு எதிராகச் சிந்திக்க வைக்க முடியாதோ என்ற கவலை தோன்றியிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் நாடாளுகின்ற அரசுகளுக்கு ஒரு வேண்டுகோள்! இதற்கொரு புதிய உத்தியை நாம் உடனடியாகக் கண்டாக வேண்டும். சாதி வேறுபாடுகளை அகற்றினாலொழிய இந்திய ஒருமைப்பாடு வலிமையாக முடியாது. நாம் எத்தனை கோடி மக்கள் இருக்கின்றோமோ அத்தனை கோடி பேதமும் இந்த நாட்டில் இருக்கிறது.

உண்மையாகச் சொல்கிறேன்! எனக்குப் பேசக் கூடச் சில நாட்களாக மனமில்லை!

இந்த நாட்டில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நாயன்மார்கள், ஆழ்வார்கள், வள்ளுவர் போன்றவர்கள் தோன்றி மனிதகுலத்தை ஈடேற்ற வேண்டும்! வாழவைக்க வேண்டும் என்று முயற்சி செய்திருக்கிறார்கள்! உழைத்திருக்கிறார்கள்! இந்தக் காலத்திலும் சாதிச் சண்டைகள், மத வெறுப்புக்களைப் பார்க்கும் போது எல்லாம் விழலுக்கு இறைத்த நீர்போல் ஆகிறதோ என்ற கவலை தோன்றுகிறது.

*பறையருக்கும் இங்கு தீயர்*
*புலையருக்கும் விடுதலை!*
*பரவரோடு குறவருக்கும்*
*மறவருக்கும் விடுதலை!*
*திறமை கொண்ட தீமையற்ற*
*தொழில் புரிந்து யாவரும்*
*தேர்ந்த கல்வி ஞானமெய்தி*
*வாழ்வோம் இந்த நாட்டிலே.*

## புரியாத புதிர்

இதற்குப் படித்த சான்றோர்கள் தயவு செய்து விரைந்து முடிவு செய்யுங்கள்! எந்த மனிதனிடத்திலும் ஒரு மனிதன் தன்னை அந்நியனாகக் கருதிக் கொள்ள கூடாது. அவன் நம்மோடு பிறந்தவன்; அவன் நம்மோடு வாழ உரிமைப் பெற்றவன் என்று அவனை வாழ விடுங்கள்! அல்லது எங்கேனும் போயாவது வாழவிடுங்கள்! அவர்கள் இந்த நாட்டிலே பிறந்தவர்கள். நம்முடைய சமயத்திலே இருக்கிறார்கள்! அவர்களை இந்துக்கள் என்று சொல்வதிலே என்ன தடை? அவன் நம்மோடு வாழப் பிறந்த சகோதரன்

என்ற ஒரு வார்த்தை சொல்வதற்குப் பதிலாக எத்தனை பெயரை மாற்றுவது?

நாம் சமுதாய போக்குகளையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். படித்த அறிஞர்கள், சான்றோர்கள் இந்தத் தலைமுறையின் சாதி என்கிற படைநோய்க்கு முற்றுப்புள்ளி வைக்காது போனால் நம்முடைய தலைமுறை மிகுந்த சங்கடத்திற்கு ஆளாகும் என்பதை பாரதி உணர்ந்தான்.

*சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்*
*தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!*

என்கிறான் பாரதி. அவனைப் போல சாதிக்கு எதிராகப் பேசிய கவிஞனைப் பார்க்க முடியாது. "எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஓர் இனம்" என்று பாடியதோடு மட்டும் இல்லை, "எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் ஓர் விலை" என்று மெருகேற்றுகிறான்! சந்தனம் அறைக்க அறைக்க மணம் தருவது போன்றது அவனுடைய கவிதை.

முதலில் குலத்தில் ஒன்றாக்குகிறான்! அடுத்து இனத்தில் ஒன்றாக்குகிறான்! பின் "எல்லோரும் ஓர் நிறை" என்று சொல்லுகிறான். அடுத்து "எல்லோரும் ஓர் விலை" என்று சொல்லுகிறான். "ஓர் விலை" என்று சொன்னால் அவனுக்குப் பத்து இலட்சம் இருக்கிறது. அவனுக்குப் பத்துக் காசு கூட இல்லை என்று சொல்லும் நிலை கூடாது என்பதுதான்.

எனவே எல்லாரும் இந்த நாட்டு மக்கள் என்கிற மிகச்சிறந்த சமுதாயக் கருத்து கனவாகத்தான் இருக்கிறது. இன்னும் நினைவாகவில்லை. நனவாகக் கூடிய முயற்சிகளில் கூட தடையிருப்பதாகத் தெரிகிறது. எதனால் தடை என்றால் வல்லாண்மை மிக்கவன் வாழ்கிற சமுதாயம் தடைக் கல்லாக இருக்கிறது! இந்தத் தடையை எப்படி அகற்றுவது என்பதுதான் புரியாத புதிராக இருக்கிறது!

*ஏழை என்றும் அடிமை என்றும்*
*எவனும் இல்லை, ஜாதியில்*
*இழிவு கொண்ட மனிதரென்பர்*
*இந்தியாவில் இல்லையே*
*வாழி கல்வி செல்வம் எய்தி*
*மனம் மகிழ்ந்து கூடியே*
*மனிதர் யாரும் ஒரு நிகர்*
*சமானமாக வாழ்வமே.*

## தேசிய ஆறுகளாக வேண்டும்

இந்தியா ஒரு நாடு என்பதை வற்புறுத்தினேன். நாடு என்பதை செயற்பாட்டிலும் காட்ட வேண்டும். உண்மையில், கிடைத்த செய்திகளின்படி பார்த்தால் வடபுலத்தில் வெள்ளத்தால் மாநிலங்கள் பாழாகின்றன. தமிழ்நாட்டில் வறட்சியால் பயிர்கள் வாடுகின்றன.

நாம் விடுதலை பெற்று முப்பத்தைந்தாண்டுகளாயின. நம்முடைய சாலைகள் எல்லாம் தேசிய நெடுஞ்சாலைகளாக ஆக்கப்பட்டு இருக்கின்றன. நம்முடைய புகைவண்டித் தடங்களெல்லாம் தேசியமயமாக்கப் பட்டிருக்கின்றன. பல மாநிலங்களை இணைக்கின்ற ஆறுகளையெல்லாம் தேசிய ஆறுகளாக்கக் கூடாதா? இதைப் பற்றியெல்லாம் நம்முடைய அரசியலறிஞர்கள், ஆட்சியாளர்கள் சிந்தனையாளர்கள் எண்ணிப் பார்த்து முடிவு சொல்ல வேண்டும் என்பதற்காக பாரதி சொன்னான்,

*"வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்*
*மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்!"*

என்று எவ்வளவு பெரிய திட்டம் போடுகிறான்!

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்!

அடுத்து, ஒரு நாடு யாரை மதிக்கிறதோ அதற்கேற்றவாறு அதனுடைய வளர்ச்சி இருக்கும். அறிஞனை மதித்தால் அந்த நாடு அறிவுத்திசையில் செல்லும். அதனாலே பாரதி நினைக்கிறான் "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று முதன் முதலில் தொழிலைப் பற்றிப் பாடி இலக்கிய உலகத்தில் கொண்டு வந்து சேர்த்தவன் பாரதிதான்! காரணம் அவன் காலத்தில் தான் இந்தியாவில் தொழிற்புரட்சி தொடங்குகிறது.

பழைய காலத்தில் கைத்தறி போன்ற தொழில்கள் நம்மிடம் இருந்தாலும் அவை ஆலைகளாக தொழிற்சாலைகளாக உருமாற்றம் பெற்று மகத்தான சக்தியாக வளர்கிற காலத்தைப் பார்க்கிறான்! உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று சொன்னான். ஆக, உழவர்களின், தொழிலாளர்களின் மதிப்பு உயர வேண்டும்.

இன்றைக்கும் கூட நான் வேடிக்கையாக நினைப்பதுண்டு. யாராவது தன்னுடைய கடிதத் தலைப்பில் "உழவன்" என்று போட்டிருப்பாரா, பாருங்கள்! "நிலக்கிழார்" என்று போட்டிருப்பார்கள்! அதுவும் கூட ஆட்சிக்குப் பயந்து கொஞ்ச நாள்களாகப் போடுவதில்லை. உழவன் என்று சொன்னால் அவன் தகுதியில் உயர்ந்தவன். "உழுவார் உலகத்தார்க்கு ஆணி" என்று சொன்னான் வள்ளுவன். எனவே அவர்களுடைய தகுதி - மதிப்பு உயர வேண்டும் என்ற ஆசையில்,

*"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில்*
*உண்டு களித்திருப் போரை நிந்தனை செய்வோம்!"*

என்று சொன்னான். உழைக்கின்ற உலகமும், தொழில் செய்கின்ற உலகமும் உயர வேண்டும் என்று சொன்னான்.

## நனவாகியிருக்கிறது!

*பாரதி "படிப்பு வளருது" என்று சொன்னான்! "பாவம் தொலையுது" என்று சொன்னான்! பாரதிக்கு படிப்பின் மீது எவ்வளவு ஆர்வம்! "வீதிதோறும் இரண்டோரு!" பள்ளி என்று சொன்னான்!"* **"வயிற்றுக்குச் சோறிட வேண்டும், பயிற்றிப் பல கல்வி தந்திட வேண்டும்"** *என்று சொன்னான்.* **"தேடு கல்வி இல்லாததோர் ஊரைத் தீக்கொளுத்தி விடவேண்டும்"** *என்று சொன்னான்! நாம் தைரியமாகச் சொல்லலாம் –* **பாரதியின் இந்தக் கனவு நிறைவேறியிருக்கிறது! இதனைச் செய்த அரசுக்குக் கடமைப் பட்டிருக்கிறோம்.**

## பாவம் தொலைந்ததா?

*ஆனால் இந்தப் படிப்பு வளர்ந்ததனாலே பாவம் தொலைந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும். படிப்பு வளர்கிற பொழுதே அதற்கு நிழலாக ஒன்று வரும் என்று பாரதி நினைத்திருக்கிறான் போலத் தெரிகிறது.*

**"படித்தவன் சூது பண்ணினால் ஐயோ என்று போவான்"** *என்று சொன்னான். படித்தவர்கள் என்று சொன்னால் அவர்கள் சமுதாயத்திற்கு எதிராக இருப்பார்களோ என்ற கருத்து தெரிந்தோ தெரியாமலோ வளர்ந்து வருகிறது. அதை நாம் உண்மையென்று ஒத்துக்கொள்ளாது போனாலும் அப்படியொரு கருத்து இருக்கிறது என்பதை மறந்து விடாதீர்கள்!*

*நீங்கள் நாட்டு நலனை மனதில் கொண்டு போராடி உங்கள் வாழ்க்கை ஊதியத்தை உயர்த்திக் கொள்வதிலே மறுப்பு இல்லை. ஆனால் நம்முடைய உணர்ச்சிகள் நாட்டின் நடப்பையே தடுத்து நிறுத்தி விடுகின்றன. நாம் உலகிற்கு முன் மாதிரியாக இருக்கவேண்டும.*

பல நாடுகளில் போராட்டம் செய்கிறார்கள். ஒன்பது மணிக்கு அலுவலகமென்றால் 8.50 மணிக்கு வருவார்கள். அந்த 10 மணித்துளிகள் அலுவலகத்தின் முன்னே இருந்து முழக்கொலிகள் செய்வார்கள். ஒன்பது மணி அடித்தவுடன் தொழிற்சாலைக்கு உள்ளே சென்று விடுவார்கள். உற்பத்திக்குத் தடையில்லை. உற்பத்தி வேலைகள் - நாட்டின் பணிகள் தடையின்றி நடக்கும். அவர்களுடைய போராட்டங்கள் நாட்டின் நடப்பை நிறுத்தி விடா.

நாட்டில் அன்றாட நடப்புப் பணிகள் - உற்பத்திகள் தடைப்படாதவாறு நம்முடைய போராட்டங்கள் நடைபெறுகிற முயற்சிகள் தோன்ற வேண்டும். பாரதி, 'ஓயுதல் செய்யோம் - தலை சாயுதல் செய்யோம்' என்று சொல்கிறான். கடமைகளைச் செய்வதில் - நாட்டினுடைய பணிகளைச் செய்வதில் ஒருபோதுகூட ஓயமாட்டோம் என்று சொல்கிறான். ஆனால் நம்முடைய நாட்டில் விடுமுறை - நாள்களுக்கு மிகுந்த வரவேற்பு! நல்ல இளைஞர்களுக்குக் கூட, பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் நிகழ்ச்சி முடிந்து "விடுமுறை" என்று முதல்வர் சொல்லிவிட்டால் என்ன மகிழ்ச்சி! என்ன ஆரவாரம்!

வேலை நாட்களை விருப்பத்தோடு வரவேற்பதற்குப் பதிலாக விடுப்பு நாள்களை விருப்பத்தோடு வரவேற்பது என்பது இந்த நாட்டிற்கு நல்லதல்ல என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

**நம் நாட்டினுடைய சூழ்நிலையில் நம்முடைய ஒரு சொட்டு இரத்தத்தைக் கூட, ஒரு வினாடியைக் கூட இந்த நாட்டை உருவாக்குவதில்தான் செலவழிக்க வேண்டும்.** இந்த நாடு எல்லா வளங்களும் பெற்ற பிறகுதான் ஓய்வு, உல்லாசம் எல்லாம் என்கிற மனப்போக்கைக் கொள்ள வேண்டும். இந்த வகையில் படித்தவர்கள் முன் மாதிரியாக இருக்க வேண்டும்.

*ஆதரவுற்று இங்கு வாழ்வோம்-தொழில்*
*ஆயிரம் மாண்புறச் செய்வோம்!*

## கலையின் விளக்கம்

"வீடுதோறும் கலையின் விளக்கம்" என்று பாடுகிறான். இது எவ்வளவு முக்கியமான பாட்டு! இத்துறை வளர்ந்தால் வேறு பிரச்சாரத்தைக் கடுமையாக நிறுத்தலாம். நம்முடைய அரசு மிகுந்த முயற்சியோடு சில பிரச்சாரங்களைச் செய்கிறது. பணம் கூட கொடுத்துப் பார்க்கிறது. ஆனால், மக்கள் தொகை அந்த இயக்கங்களை முறியடித்து வளர்ந்து கொண்டிருக்கிறது. மனித வாழ்க்கைக்குக் களிப்பும் மகிழ்ச்சியும் தேவை. உணவாலும் தண்ணீராலும் காற்றாலும் மட்டும் மனிதன் வாழ்ந்துவிட வில்லை. அவனுடைய ஆன்மாவுக்கு, உயிருக்குக் களிப்பும் மகிழ்ச்சியும் தேவை.

இந்தக் களிப்பும் மகிழ்ச்சியும் சராசரி மனிதனுக்கு இன்றைக்குக் கிடைக்கவில்லை. அந்தக் களிப்பும் மகிழ்ச்சியும் ஏழைக்குக் கிடைக்காமையினால் அவனுடைய வீடுகளில் அவனுக்கிருக்கிற ஒரே இன்பம் அதுதான் என்று கருதி நாட்டு மக்கள் எண்ணிக்கையைப் பெருக்கி வளர்த்துக் கொண்டிருக்கிறான்.

வீடுகள் தோறும் கலையின் விளக்கம் தோன்றி அவனுக்குக் கலையில், இலக்கியத்தில், ஓவியத்தில், சிற்பத்தில், இசையில் மகிழ்கின்ற வாய்ப்புக் கிடைத்தால் அவன் அரசாங்கத்தினுடைய முயற்சியில் மிகுந்த துணையாக இருப்பான். பழங்காலத்தில் நம்முடைய கோயில்கள் இந்தப் பணியைச் செய்தன. மாணிக்கவாசகர் அருமையாக ஒரு கோயிலைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

> "இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
> இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்"

என்று சொல்கிறார்.

பழங்காலக் கோயில்களில் இசை இருந்தது. தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் நாடகமன்றம் இருந்தது. மக்கள்

மகிழ்ந்து கலையிலும் இலக்கியத்திலும் ஈடுபட்டார்கள். ஒரு யாம வழிபாடு என்று சொல்கிற அர்த்த சாமத்தை நிகழ்த்திய பிறகு நல்ல நாதசுரக்காரர்கள் அருமையாக இசை முழக்கம் செய்வார்கள். மக்கள் ஆங்காங்கு இருந்து மகிழ்ச்சியாகக் கேட்பார்கள். அந்த மகிழ்ச்சியில் திளைத்துத் திளைத்து மகிழ்ந்த பிறகு வீட்டிற்குப் போனால் நிம்மதியாகத் தூங்கினார்கள். அப்பொழுது மக்கட் தொகை குறைவாக இருந்தது. இன்றைக்கு அந்த வாய்ப்பு அவனுக்கில்லை. இசையும் கலையும் கூட வசதி படைத்தவர்களுடைய வாய்ப்பாக இன்றைக்கு மாறிப் புதிய புதிய "சபாக்கள்" தோன்றிக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகிற அளவுக்குப் போய் விட்டன.

திருக்கோயில்களைப் பொறுத்தவரையில் அந்த வாய்ப்புகள் மிகக்குறைவாகப் போய்விட்டன. எனவே இந்த நாட்டுத் திருக்கோயில்கள் மீண்டும் பழைய காலத்தைப் போல, கலையும், இசையும், இலக்கியமும் களிநடம் புரிகின்ற கோயில்களாக மாறிக் குடிமக்களைத் தழுவினால் இந்த நாட்டின் முன்னேற்ற வாழ்க்கையில் சராசரி ஏழை மனிதனும் துணையாக நிற்பான் என்பதிலே கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

இதைத்தான் பாரதி, **'வீடுதோறும் கலையின் விளக்கம்'** என்று சொன்னான். "வீட்டுக்கு வந்தால் மகிழ்ச்சியாக இருக்கிறது" என்று குடும்பத் தலைவன் சொல்வதை இன்றைக்குப் பார்க்க முடிவதில்லை. வீட்டுக்கு வந்ததும் இருவரும் பேசிக் கொள்கிறார்கள்: "என்னமோ போலிருக் கிறது வேறு எங்காவது போய்விட்டு வரலாமா?" என்று சொல்லி திரைப்படக் கொட்டகைக்குப் போகிறார்கள்; வேறு எங்காவது போகிறார்கள். ஆனால், மேலை நாடுகளில் வீட்டுக்கு வருவதையே மகிழ்ச்சியாக நினைக்கிறார்கள். "Happy Home" என்று சொல்கிறார்கள். சேக்கிழாரின் பெரிய புராணத்தில் இப்படியிருந்த வீடுகளைப் பார்க்கிறோம்.

அதனால்தான் இறைவன்கூட மண்ணுக்கு வந்தபோது, திருக் கோயில்களுக்கு, திருமடங்களுக்குச் சென்ற தடவைகளைவிட, வீடுகளுக்குச் சென்ற தடவைகள் மிகுதி. காரணம் அவ்வளவு சிறப்பாக அந்த வீடுகள் இருந்தன. மீண்டும் கலை பயில் வீடுகளை உருவாக்க வேண்டும். அத்தகைய வீடுகள் உண்டானால் நாடு ஓர் அமைதியான சமூக மாற்றத்தை உண்டாக்கும். இந்தத் துறையிலும்கூட பாரதியின் கனவு நனவாகவில்லை.

## பெண் விடுதலை

அடுத்து மகளிர் சிலரே இலக்கியக் கூட்டத்திற்கும் பொதுக் கூட்டத்திற்கும் வருகிறார்கள். நாடு அந்த வகையில் எவ்வளவு விழிப்படைந்திருக்கிறது என்பதற்கு இதுவே ஓர் அளவு கோல். இது பாரதியின் விழா. ஆனால், எண்ணிக்கையில் மிகச் சிலரே வந்திருக்கிறார்கள், மகளிர். நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் பெண்களின் விடுதலை, பாரதியின் வழியில் கனவாகத்தான் இருக்கிறதே தவிர நனவாகவில்லை.

நாம் பார்க்கிறோம். திங்களுக்கு ஒரு செய்தியாவது தவறாமல் வந்து கொண்டிருக்கிறது. பெண்கள், கொடுமைப் படுத்தப்படுகிறார்கள்; தீயிலிட்டுக் கொளுத்தப்படுகிறார்கள்; அடித்துச் சித்திரவதைச் செய்யப்படுகிறார்கள் என்றெல்லாம் செய்திகளைப் பார்க்கிறோம். ஏதோ விலைவாசிகள் கட்டுப் படியாகவில்லை என்பதனால் அவர்களும் சம்பாதிக் கட்டுமே என்று வேலைக்கு அனுப்புகிறோமே தவிர, அந்த வேலைக்கு வந்ததினாலேயே அவர்களுடைய உரிமைகள் வந்ததாகச் சொல்ல முடியாது.

இன்னும் சொல்லப் போனால் அவர்கள் இரட்டிப்பு உழைப்பை அவர்கள் செலுத்த வேண்டியதிருக்கிறது. வெளியிலும் சென்று எட்டு மணி நேரம் வேலை பார்த்துச் சம்பாதிக்க வேண்டியதிருக்கிறது. வீட்டிற்கு வந்த பிறகும்

வீட்டு வேலைகள் அனைத்தையும் பார்க்க வேண்டிய திருக்கிறது. எந்தக் குடும்பத் தலைவனும் அந்த வீட்டு வேலையில் பங்கெடுத்துக் கொள்வதாக எனக்குத் தெரிந்து தகவல் இல்லை.

நான் சோவியத் நாட்டிற்குச் சென்றிருந்தபோது ஒரு சுவையான நிகழ்ச்சி. தாஷ்கண்ட் பல்கலைக்கழகத்தினுடைய துணைவேந்தர்; அவர் மனைவி மருத்துவத்துறை இயக்குநர். இரண்டு பேரும் ஒப்பற்ற பெரிய பதவிகளில் இருந்தார்கள். நான், "இரண்டுபேரும் இவ்வளவு பெரிய பதவிகளில் இருக்கின்றீர்களே உங்களுடைய வீடு எப்படி?" என்று கேட்டேன். "எங்களில் யார் முன்னால் வீட்டுக்குச் செல் கிறோமோ அவர்கள் சமைக்க ஆரம்பித்து விடுவோம். நான் முதலில் சென்றால் அடுப்பைப் பற்ற வைத்துச் சமைத்துக் கொண்டிருப்பேன். என் மனைவி வந்து என்னுடன் சேர்ந்து கொள்வாள். சேர முடியாது போனால் சமைத்து முடித்துக் காத்துக் கொண்டிருப்பேன். நான் சமைத்ததை அன்று மனைவி பிரியமாகச் சாப்பிடுவாள்" என்று துணைவேந்தர் சொன்னார்.

ஆனால், நம்முடைய நாட்டிலே என்ன நிகழ்கிறது? என்று சொன்னால் இவர் அலுவலகத்திலிருந்து வந்தவுடன் ஓய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டு, தினத்தாளைப் புரட்டிக்கொண்டு, காப்பி தயாராகிவிட்டதா என்று கேட்டுக் கொண்டேயிருப்பாரே தவிர கூடப் போய் கொஞ்சம் வேலை செய்வது என்பதில்லை.

அதைவிட மிகக்கொடுமை, ஆணின் மகிழ்ச்சிக்காக - களிப்புக்காக - வாழ்க்கைத் துணைக்காக அமைகின்ற வாழ்க்கைத் துணையைத் தேடுகின்ற துறையில் கூட, பெண்ணிடத்தில் பணம் கேட்கின்ற அளவுக்குச் சமுதாயம் சீர்கெட்டுக் கிடக்கிறது என்பதைப் பார்க்கிறோம். திருமணத் தினால் அவளுக்குக் கிடைக்கிற பயனைவிட அவனுக்குத்

தான் பயன் அதிகம். அவன்தான் மகிழ்கிறான்; அவன்தான் களிப்புறுகிறான்; அவனுடைய தலைமுறைதான் வளர்கிறது. இந்த அருமையான திருமண வாழ்க்கைக்குக் கூட பெண் இன்றைக்குப் பணயமாக்கப்படுகிறாள். வரதட்சணை* - பணம் - காசு என்ற பெயரால் இந்தக் கொடுமையை இன்றைக்கும் பார்க்கிறோம். எனவே பெண்களை இழிவு செய்கிற உணர்ச்சி; இன்னும் பெண்களைக் காம இச்சைப் பொருளாகவே கருதுகிற மனப்போக்கு; அந்த மனப் போக்கிலேயே சுவரொட்டி; விளம்பரங்கள். பத்திரிக்கை விளம்பரங்களைப் பார்த்தால் நம்முடைய நாட்டில் பாரதியின் கனவு நனவாகவில்லை என்று தோன்றுகிறது.

எந்தக் காரணத்தை முன்னிட்டும் பெண்ணை ஒரு விளம்பரப் பொருளாகப் பயன்படுத்துகிற, கவர்ச்சிப் பொருளாகப் பயன்படுத்துகிற அனைத்தும் தடை செய்யப் பட்டால் ஒழிய இந்த நாட்டினுடைய பெண்களுக்குத் தரமான தகுதிவராது என்பதை மறந்துவிடக் கூடாது. இந்தத் துறையிலும் நம்முடைய நாடு பாரதியின் கனவை நனவாக்கவில்லை. அதனால் தான் பெரியார் போன்றவர்கள் கூட "பெண்ணுக்கும் ஆணுக்கும் உடையிலே கூட வித்தியாசம் தெரியக் கூடாது" என்றெல்லாம் சொன்னார். கொஞ்சம் அளவுக்கு மீறிப் போனால் என்று நான் சொல்வதுண்டு. காரணம் வேறுபாடுகளும் வேறுபட்ட உடைகளும் வேறுபட்ட அமைப்புக்களும் இருந்தால்தான் வாழ்க்கைச் சுவையாக இருக்கமுடியும். ஆகையினால் அச்சடித்த மாதிரியாக ஆணும் பெண்ணும் இருப்பது என்பது நியாயமாக இருக்கமுடியாது; உணர்வுகளுக்கு ஒத்து வராது.

எனவே பெண்மை, பெண்மையைக் காப்பாற்றிக் கொள்ளத்தான் வேண்டும். அது நெறி காக்கும் கற்பாக மாறவேண்டும். அவர்களுடைய வாழ்க்கை அச்சமில்லாத துணிவுடைய வாழ்க்கையாக இருக்க வேண்டும். ஆணும்கூட

நாம் ஆணுக்குப் பெண் சரி நிகர் சமானம் என்பது வாழ்க்கையில் உரிமைகளின் பாற்பட்டதாகவும், கருத்துக் களின் பாற்பட்டதாகவும் இருக்க வேண்டுமே தவிர பெண்ணை அடிமைப் படுத்துகிற மனப்போக்கு கூடாது.

இந்தப் பெண் அடிமையை ஒழிக்கின்றதில் நம்முடைய நாடு முடியாத நிலையிலே ஏதோ தத்தளித்து அசைந்து கொடுத்திருக்கிறதே தவிர பாரதியின் கனவு நனவாகவில்லை. ஏதோ அங்கும் இங்குமாகச் சில ஒதுக்கீடுகள் தருவதினாலேயே பெண்கள் வெற்றி பெற்றுவிட மாட்டார்கள். அவர்களைத் தூரத்தில் பார்த்தால்கூட தாய், சகோதரி என்று மதிக்கிற உணர்ச்சி, தகுதி, மரியாதைகள் கொடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் சமுதாய மனப்போக்கு மாறும். இந்தத் துறையிலும் பாரதியின் கனவு நனவாகவில்லை.

> "மாதர் தம்மை இழிவு செய்யும்
> மடமையைக் கொளுத்துவோம்."

## ஒன்று பரம்பொருள்; நாம் அதன் மக்கள்

கடைசியாகப் பாரதியினுடைய முக்கியமான கருத்து ஒன்று. "ஒன்று பரம் பொருள்; நாம் அதன் மக்கள் உலகு இன்பக் கேணி" என்று சொன்னான். கடவுள் ஒருவர்தான். நிச்சயமாகப் பல கடவுள் இல்லை, சத்தியமாக இல்லை; நாம் நம்ப வேண்டும். அதனால், மாணிக்கவாசகர், "தென்னா டுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று சொன்னார். தென்னாட்டிலே சிவன் என்கிற பெயராலே சிலமக்கள் கும்பிடுகிறார்கள்; அதனைத் தான் வேற்று நாட்டு மக்கள் வேறு வேறு பெயரில் கும்பிடுகிறார்கள். இந்தத் தத்துவத்தை இந்த நாடு ஏற்றுக்கொண்டது. அதனால் குறிப்பிட்ட சமயத்தைச் சேர்ந்த அரசு இல்லை. எல்லாச் சமயங்களுக்கும் கடவுள்

பொதுவாக இருப்பதைப் போல எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான அரசு என்ற அடிப்படையில் "சமயச் சார்பற்ற அரசு" என்று தன்னை இந்த நாடு எடுத்துக்கொண்டது. அது எவ்வளவு நுட்பமானது; எவ்வளவு வரலாற்றுப் போக்குச் சிறப்புடையது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆனால், மீண்டும் இந்த நாட்டில் மதச் சண்டைகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. இசுலாமியர்கள் கிறித்துவர்கள், இந்துக்கள் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொள்கிற மனப்போக்கு வளர்ந்து வருகிறது. இந்த மனப்போக்கு பாரதிக்கு எதிரான கருத்து; காந்தியடிகளுக்கு எதிரான கருத்து. பல நூற்றாண்டுகளாக நாம் வளர்த்து வந்திருக்கிற கருத்துக்கு மாறான கருத்து என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

ஒன்று பரம்பொருள் என்ற நம்பிக்கை வேரூன்ற வேண்டும். நாம் அதனுடைய மக்கள் என்ற நம்பிக்கை வளரவேண்டும். இந்த உலகத்தை இன்பக் கேணியாக மாற்ற வேண்டும். சமய உணர்வு நன்றாக வளர்ந்திருக்குமானால் இன்றைக்கு அதற்கு அறைகூவலாக இருக்கிறது கிறித்துவமும் அல்ல; இசுலாமும் அல்ல. இன்றைக்கு நீர் வாயு குண்டு தோன்றி உலகத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது! சாலைகளை அமைத்து ஊர்கள் இணைக்கப்பட்டுவிட்டன. விஞ்ஞானத் துறையின் காரணமாக, விஞ்ஞானம் இன்று நாடுகளையும், கண்டங்களையும், அண்டங்களையும் இணைத்து வெற்றி பெற்றிருக்கிறது.

ஆனால், ஆன்மீக வாழ்க்கைக்குரிய மெய்ஞ்ஞானம் இந்த உலக வாழ்க்கையை, மானிட சாதியை இணைப் பதற்குப் பதிலாக, அது பிரிவினைகளை உருவாக்கி கொண்டு தன்னையே அழித்துக்கொள்கிற நிலையில் போய்க் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அதனால் இன்றைக்கு மனித உலகத்தை அழிக்கிற குண்டுகள் வரையில் தோன்றி மனித உலகத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. எனவே

பாரதி, "ஒன்று பரம்பொருள் நாம் அதன் மக்கள் உலகு இன்பக் கேணி" என்று கண்ட கனவு நனவாகும் சூழ்நிலை தோன்றியது. ஆனால் எங்கேயோ இடையிலே தளர்ச்சி தோன்றி மதச் சண்டைகளும் கலவரங்களும் தோன்றிக் கொண்டிருக்கின்றன. இந்த நாட்டின் வரலாற்றில் இனிமேலும் இத்தகைய நிகழ்வுகள் தோன்றினால் பாரதியின் ஆன்மா சாந்தி அடையாது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

## படித்தவர்கள்

பாரதி தெருத் தோறும் இரண்டொரு பள்ளிகள் வேண்டுமென்று கனவு கண்டான். அந்தக் கனவு நனவாகி விட்டது. எங்கும் பள்ளிகள்; எங்கும் பிள்ளைகள் படிக்கிறார்கள். அது நாட்டின் வரலாற்றில் பெரிய சாதனை என்றுகூடச் சொல்லலாம். **கல்வித்துறையில் பாரதியின் கனவு நனவாகியிருக்கிறது.** ஆனால், படிப்பினால் பாவம் தொலைந்து, படித்தவர்கள் சூது பண்ணாமல் பிறரை வாழ வைப்பதற்குரிய நல்லவர்களாக ஆகவேண்டும் என்று ஆசைப்பட்டான்; கனவு கண்டான். அந்தக் கனவு முற்றாகக் கெட்டுப் போய்விட்டது என்று நான் சொல்லவில்லை. ஆனாலும் படித்தவர்கள் இந்த நாட்டுக்கு இன்னும் அதிகமாகச் செய்ய முடியும் என்று நம்புகிறேன். அவர்கள் நாக்கு உழவர்கள்-சொல்லேர் உழவர்கள், வில்லேர் உழவர் களைவிட வலிமையானவர்கள். இந்த நாட்டின் படித்தவர்களை, பேராசிரியர்களை அன்போடு பாராட்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஓய்வு நேரத்தில் சமுதாயத்தைப் படிப்பிக்க கற்றுக் கொள்ளுங்கள், பழகுங்கள். இந்தச் சமுதாயத்தை விழித் தெழச் செய்யுங்கள். தெளிவாகச் சொன்னால் சுதந்தரம் பெற்றபிறகு ஏதோ ஒரு தொய்வு ஏற்பட்டிருப்பது போலத் தெரிகிறது. மீண்டும் ஓர் எழுச்சியை உண்டாக்க வேண்டும்.

## இனியொரு விதி செய்வோம்

பாரதி கனவு நனவாவதற்காகப் பாடினான்; பாரதப் பொருளாதார மறுமலர்ச்சிக்காகப் பாடினான்; சமத்துவத் திற்காகப் பாடினான். எல்லோருக்கும் உணவு வேண்டு மென்று சொன்னான். "இனியொரு விதி செய்வோம். அதை எந்தநாளும் காப்போம் தனியொருவனுக்கு உணவில்லை யெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்று பாடினான்.

காரணம், ஒருவன் ஏழையாக இருப்பதும் செல்வனாக இருப்பதும் தனிப்பட்ட வாழ்க்கையின் பொறுப்பு மட்டு மல்ல. அவன் காலத்தின் சமுதாயத்தினுடைய அமைப்பு என்று கருதினான். எனவே ஏழ்மைப்படுத்தப்பட்ட சமுதாயத்தை உருவாக்கிய ஒரு சமுதாயத்தின் மீது அவனுக்குக் கோபம் வருகிறது. எனவே ஜகத்தினை அழித் திடுவோம் என்று சொன்னான். அந்த வறுமை எதிர்ப்பை - அந்த வறுமை எதிர்ப்புப் போராட்டத்தைக் கூர்மைப்படுத்தி எல்லாரும் எல்லாமும் பெறுகிற புதிய சமுதாயத்தை அமைக்க வேண்டும்.

மகிழ்ச்சி நிறைந்த சமுதாயம் பொதுவுடைமைச் சமுதாயம் என்று அவன் பாடுகிறான். அனைத்து, பாரத சமுதாயமும் பொதுவுடைமையாக இருக்க வேண்டும் என்று சொன்னான். ஒருவர் உணவை ஒருவர் பறித்து உண்கின்ற கொடுமை கூடாது என்று சொன்னான். அந்தப் புது நியதியை - பொது நியதியை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அதற்கு முன்னாக இந்த நாட்டில் தொழிற்புரட்சி ஏற்பட வேண்டும் என்று சொன்னான். உழவனையும் தொழி லாளியையும் வாழ்த்தினான்; பாராட்டினான். அவனுக்கு அரியணை கொடுக்க ஆசைப்பட்டான். "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று பாடினான்.

உழவும் தொழிலும் வளர்ந்தால் இந்த நாடு பல்கிப்பெருகி செல்வம் கொழிக்கும் என்று நம்பி, நாடு விடுதலை பெற்றவுடனேயே நிறைவேற்ற வேண்டிய ஐந்தாண்டுத் திட்டங்களை வரைந்து கொடுத்தான். அந்தத் திட்டங்களிலே, ஆயுதங்கள் செய்யச் சொன்னான்; சாலைகள் அமைக்கச் சொன்னான். கங்கையின் மிகை நீரை மையத்து நாடுகளுக்குப் பாய்ச்சச் சொன்னான்.

அவனுடைய கனவுகள் பலவற்றை அரசுகள் நிறைவேற்றிக் கொண்டு வருகின்றன. நாடு மகத்தான தொழிற்புரட்சி செய்து வெற்றி பெற்றிருக்கிறது. ஆனால், பொதுவுடைமைச் சமுதாயம் அமையாமையின் காரணமாக சிலர் செல்வந்தர்களாகின்றார்கள். பலர் ஏழைகளாகிறார்கள்.

இலர் பலராகிய காரணம் என்ன என்று அன்றைக்குத் திருவள்ளுவர் கேட்ட குரல் இன்றைக்கும் பாரதியின் வாயிலாகக் கேட்கிறது. இலர் பலராகியது ஏன் என்ற வினாவை, “அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான் கேடும் நினைக்கப்படும்” என்று ஆய்வு செய்து இந்த நாட்டு அரசு சம நீதி வழங்க முயற்சி செய்ய வேண்டும். அரசின் பொருளுற்பத்தி சாதனைகள் வியந்து பாராட்டக் கூடியவை; ஒப்பற்றவை. விநியோகத்திலிருக்கிற கோளாறுகள் நீக்கப்பட வேண்டும்.

## விடுதலை நாள்

இந்த நாடு பல்வேறு கனவுகளை நனவாக்கியிருக்கிறது. அவற்றில் மணிமுடியாக நாடு விடுதலை பெற்றிருக்கிறது; பாரதி கண்ட கனவு நனவாகியிருக்கிறது. கனவிலே தான் அவன் விடுதலை பெற்றான். ஆனால், நனவிலே நாம் விடுதலை பெற்றோம். நம் நாடு விடுதலை பெற்ற பிறகு “நாமிருக்கும் நாடு நமது” என்ற உணர்ச்சி இன்னும் தோன்றவில்லை. நாட்டு விடுதலை நாளை “மக்கள்

விழா"வாக இன்னும் கொண்டாட நாம் முன் வரவில்லை. நாட்டுக் குடியரசுநாளை எல்லோரும் சேர்ந்து கொண் டாடுகிற மனப்போக்கு இன்னும் உருவாகவில்லை. நாட்டின் பொதுச் சொத்துக்கள் நம்முடைய சொத்துக்கள் என்கிற குணம் நமக்கு வரவில்லை.

நம் நாடு அந்நிய நாட்டிடம் கடன் வாங்குகிறது என்று சொன்னால் நான் கடன் வாங்குகிறேன் என்ற உணர்ச்சி தோன்றவில்லை. இந்த மனப்போக்குகளை மாற்றி இந்த நாடு என்னுடையது; மன்னும் இமயமலை என்னுடைய மலை; தென்குமரிக் கடல் என்னுடைய கடல் என்கிற மனப்போக்கில் இந்திய மக்கள் இந்தியர் என்ற உணர்விலே தம்மை ஆக்கிக்கொண்டு – உருவாக்கிக் கொண்டு இந்திய நாட்டை வளப்படுத்த வேண்டும் என்று பாரதி கனவு கண்டான்.

பாரதி ஏதோ பாடவேண்டும் என்பதற்காகப் படவில்லை. அவனை நாடு பாடவைத்தது. அவன் இந்த நாட்டை எப்படி உருவாக்க நினைத்தானோ அதற்காகப் பாடினான். அவன் வீடுதோறும் கலையின் விளக்கம் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான். இந்த நாட்டின் சரிபாதியாக இருக்கிற பெண் மக்கள் எல்லா உரிமைகளும் பெற்று சட்டங்களும் பட்டங்களும் ஆண்டு அனுபவிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான். அடுத்து பாரதி,

"எல்லாரும் ஓர் குலம்; எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர் நிறை; எல்லாரும் ஓர் விலை"

என்று பாடினான். அந்த ஓர் குல உணர்வுக்குச் சமுதாயம் இன்னும் நெகிழ்ந்து கொடுக்கவில்லை. குல கோத்திரச் சண்டைகள் மலிந்து கொண்டு வருகின்றன. அந்த வகையில் பாரதியின் கனவு நனவாகவில்லை. அரசு தரப்பில் பல கனவுகள் நனவாகியுள்ளன. ஆனால், சமுதாயமும் சமய

நெறிகளும் அவனுடைய கனவுகளை நனவாக்க முடியாமல் தடையாக நிற்கின்றன. இந்தச் சமுதாய அமைப்பையும் சமய அமைப்பையும் மாற்றிச் சீரமைத்து அவற்றைச் சமுதாய மாற்றத்திற்குரியவாறு தகுதிப்படுத்த வேண்டும். அல்லது ஒதுக்கி விட்டாவது இந்தச் சமுதாயத்தை முன்னேற்றத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும். அப்பொழுதுதான் பாரதியின் கனவுகள் முழுமையாக நனவுகளாக மாறும். அந்த நாளை, அது தானே வரும் என்று எதிர்பார்க்காமல், உருவாக்க முயற்சி செய்வோமாக!

## பாரதி வளர்த்த கவிதை

இந்த நாட்டின் வரலாற்றில் பாரதியார் ஒரு மையைப் புள்ளிபோல. அவர் அடிமையாகப் பிறந்தார்; அடிமை யாகவே வாழ்ந்தார்; அடிமையாகவே இறந்தும் போனார். எனினும் தனது கவிதையால் இந்த நாட்டு மக்களிடையே சுதந்திர உணர்வைத் தட்டி எழுப்பினார்.

திருவள்ளுவரையும், கம்பனையும்விட பாரதி வளர்ந்திருந்தார் என்று கூறலாம். கருத்தோட்டமும் நடை முறையில் இருக்கும் பாரதியின் கவிதைகளும் பாரதியின் வளர்ச்சியைக் காட்டுகின்றன.

*'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து*
*கெடுக உலகியற்றி யான்'*

என்றார் வள்ளுவப் பெருந்தகை. வள்ளுவர் வாழ்ந்த காலம் முடியாட்சிக்காலம்; அவர் முடியாட்சி மரபு முதலியவற்றை ஏற்றுக்கொண்டே பாடினார். எனவே தான் **'இயற்றியான்'** என்றார். பாரதியார் மக்களாட்சி யுணர்வு மிக்கோங்கியிருந்த காலத்தில் வாழ்ந்தவர். எனவே,

***'தனியொருவனுக்கு உணவில்லை எனில்***
***சகத்தினை அழித்தடுவோம்'***

என்றார். தனியொருவனுக்கு என்று பாரதியார் கூறுகிறாரே, அந்தத் தனியொருவன் யார்? அமைச்சரா? அதிகாரியா? பெரிய மனிதரா? அத்தகையவர்களுக்கு உணவு இல்லை என்ற நிலை வராது; சமுதாயத்தில் வாயும் கையும் உள்ளவர்கள் என்றும் எப்படியும் வாழ்ந்துவிடுவார்கள். வாயும், கையும் இல்லாமல் சக்தியற்று மூலையிலே ஒதுங்கிக் கிடக்கின்ற ஒருவனைத்தான் பாரதி தனியொருவன் என்றார். உதைத்துக் கேட்பவனுக்கும்-தட்டிக் கேட்பவனுக்கும் கொடுக்காதவர்களும் கொடுத்து விடுவார்கள். இதைத்தான் திருவள்ளுவர்,

> 'ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்
> கூன்கை யரல்லா தவர்க்கு'

என்றார்.

உள்ளத்தில் எழும் உணர்ச்சியை ஒழுங்குபடுத்தி - கேட்பவர் மனத்தில் நன்றாகப் பதியும்படி - அதைத் கேட்பவர்களும் அந்த உணர்வில் தோயும்படி இருந்தால் அது கவிதைதான் - இலக்கியம்தான். இசைத் தமிழ் வேறு. இலக்கியம் வேறு என்றால், தேம்பாவணி, இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரம், நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தரின் திருப்பதிகங்கள் ஆகியவற்றை எதிலே சேர்ப்பது?

பாரதிக்குப்பின் கவிதை வளர்ந்திருக்கிறதா என்றால், பாரதியின் மரபு வளர்ந்திருக்கிறதா? பாரதி சொன்னதை விமரிசனம் செய்து சொல்லும் திறமை வளர்ந்திருக்கிறதா? என்றுதான் பார்க்க வேண்டும். பாரதியிடத்திலே நற்சான்று பெற்ற கவிஞர், புரட்சிக்கவி பாரதிதாசன். 'யாமறிந்த புலவரிலே'-என்ற பாரதியின் கருத்தை வைத்து - அதன் விளக்கமாக - பாராட்டாகப் பாரதிதாசன் பாடியிருக்கிறார். நாவின் சுவையும், வயிற்றுச் சுவையும் மிகுதியும் உடைய மக்கள் வாழ்கின்றார்கள் என்பதையுணர்ந்த பாரதிதாசன்,

'தமிழ் எங்கள் இளமைக்குப் பால்'

என்றும்,

'உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே'

என்றும் பாடுகிறார்.

'தனியொருவனுக்கு உணவில்லையெனில்
சகத்தினை அழித்திடுவோம்'

என்ற பாரதியைவிட,

'உலகம் உண்ண நீ உண்;
உடுத்த உடுப்பாய்'

என்ற பாரதிதாசன் வளர்ந்துதான் இருக்கிறார், கவிதை வளர்ந்துதான் இருக்கிறது. 'சகத்தினை அழித்திடுவோம்' என்று உணர்ச்சி வேகத்தில் பாரதி பாடி விடுகிறார்: ஆத்திரத்தின் உச்சியில் நின்று பாடுகிறார், பாரதிதாசனுக்குத் தன்னம்பிக்கை இருக்கிறது. எனவே,

'நடத்து உலகத்தை; நான்கு புறமும்
உள்ள சுவரை இடித்துவிடு'

என்று பாடுகிறார். வேற்றுமைகளையெல்லாம் விட்டு நாட்டோடு நாடு இணைத்து மேலேறு என்று பாடுகிறார். 'உடைமை' அனைத்தும் மக்கட்குப்பொதுமை என்று பாடுகிறார்.

குளத்தில் விழுந்தவனை எட்டிப் பிடித்துக் காப்பாற்றத் தான் கை என்பதுபோல சமுதாயத்தில் வீழ்ச்சியுற்றவர்களை எழுச்சியுறச் செய்து வாழ்விக்கத்தான் கவிதை.

பாரதிக்குப்பின் கவிதை இலக்கியம் வளரவில்லை என்று கூற முடியுமா? மனித சமுதாயம் வளர்ந்திருக்கிறது - வளர்ந்து கொண்டிருக்கிறது - வளரவேண்டும். அது வளர வில்லை என்பது பிற்போக்குத்தனமானது. உணர்ச்சி

படைத்த கவிஞனை-சிந்தனை உணர்வுடைய கவிஞனை வளரவில்லை என்று எப்படிக் கூறமுடியும்? 'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்' என்று பாடிய திருவள்ளுவருக்குப் பிறகு, 'தனியொருவனுக்கு உணவில்லையெனில்' என்று பாடிய பாரதிக்குப் பிறகு, 'உலகம் உண்ண நீ உண், உடுத்த உடுப்பாய்' என்று பாடிய பாரதிதாசன் பாரம்பரியத்திற்கு மேலாகத் தமிழ்த் தந்தை திரு. வி. க. பாடியிருக்கிறார்.

*'அண்டையன் பசியால்வாட*
*அணங்கொடு மாடிவாழ்தல்*
*மண்டையன் குற்றமன்று*
*மன்னிடும் ஆட்சிக்குற்றம்'*

என்று பாடுகிறார் தமிழ்த்தந்தை திரு. வி. க.

துரியோதனாதியரின் கொடுமைகளைப் பாஞ்சாலி சபதத்தில் பாரதியார் மிக அழகாகப் பேசுகிறார். மன்னனின் கொடுமையைப் பாரதிதாசன் பேசுகையில்

*'சிரமறுத்தல் வேந்தனுக்குப்*
*பொழுதுபோக்கும் சிறியகதை;*
*நமக்கெல்லாம் உயிரின் வாதை'*

என்கிறார். இரண்டே வரிகளில், ஆதிக்கத்தின் பாற்பட்ட மன்னனை-ஆட்சிக்கேட்டை வன்மையாகச் சாடுகிறார்.

*'சென்றிடுவீர் எட்டுத்திக்கும்-கலைச்*
*செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்'*

என்றார் பாரதியார். இதன் பொருள் பல்கலைச் செல்வங் களையும் பிற மொழிகளில் படியுங்கள் என்பதல்ல. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை நமது தமிழ் மொழியிலே ஆக்கித் தருதல் வேண்டும் என்றுதான் பாரதி கூறினார்.

...துறைதோறும் நூல்கள் ஒருத்தர் தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்' சலசலவென நீரோடை போல வெளி

வரவேண்டும் என்கிறார் பாரதிதாசன். அதாவது பாரதியின் கருத்தை மேலும் தெளிவாகக் கூறுவதுபோல, படித்தவர் - வெள்ளை வேட்டிக்காரர்-மேல் மட்டத்தில் வாழ்பவர்கள் ஆகியோர் எவருடைய தயவும் இல்லாமல் சாதாரணமான தமிழில்-பல்துறை நூல்களும் வெளிவர வேண்டும் என்கிறார்.

பிறிதோரிடத்தில் 'தமிழ் மொழியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்' என்றார். பாரதிதாசன் சாடுவ தெல்லாம் பிற்போக்கான மதத்தையும், மதச் சடங்கு களையுமேயாகும். மதத்தின் அடித்தளமான கோட்பாடுகளை அவர் சாடவில்லை. உலகத்தில் வாழ்கின்ற எல்லா உயிர்களும் இறைவனின் திருமேனி என்பதே மதத்தின் அடித்தளக் கொள்கை; பிறருக்குத் தீங்கிழைத்து விட்டுத் தனக்கு நலன் தேடுவதான பேராசைக் கொள்கையை அன்று தொட்டே மதம் எதிர்த்து வந்திருக்கிறது.

மடமையுற்ற வாழ்க்கையை
மடங்கள் தந்த தாதலால்
கடவுளில்லை கடவுளில்லை
கடவுளென்ப தில்லையே

என்றார் நண்பர் ஜீவானந்தம். 'ஜீவா' மதத்தை எதிர்க்கிறார் என்றால், குப்பை கூளம் நிறைந்த பிற்காலச் சமயக் கருத்துக் களைத்தான் எதிர்க்கிறார். மனித உலகத்தை அச்சத்திலிருந்து விடுதலைசெய்து, அன்புணர்ச்சியிலேயே வளர்க்க வேண்டிய மதம் தனது கடமையிலிருந்து தவறிவிட்டது. எனவேதான் பிற்காலத்தில் மதம் பல தாக்குதல்களுக்கு இலக்காக வேண்டியதாயிற்று.

பொதுவாக பக்தியிலே மனம் வளர்ந்திருக்கிற தென்றால் சிந்தையில் செம்மை வளர்ந்திருக்க வேண்டும். செழுமை மலர்ந்திருக்க வேண்டும். இன்று சோஷலிசம் பற்றிப் பெரும்பாலும் எல்லோரும் பேச ஆரம்பித்து

விட்டார்கள். இதனை மார்க்ஸிஸ்டுகள் ஒத்துக்கொள் வதில்லை.

'இரைபோடும் மனிதருக்கே
இரையாகும் வெள்ளாடே—வீண்
அனுதாபம் கண்டு
மதிமோசம் போகாதே'

என்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மிக அழகாகப் பாடுகிறார். சுரண்டும் வர்க்கத்தைச் சார்ந்தவன் பாட்டாளிக்கு என்றாவது ஒருநாள் வடை பாயசத்தோடு சோறு போடுவான். வேட்டி எடுத்துக் கொடுப்பான். இதைப் பார்த்து அந்த ஆளையும் நம்பக்கூடாது. அவனுடைய செயல் சுயநலத்தின் பாற்பட்டது.

"உள்ளம் என்பது ஆமை—அதில்
உண்மை என்பது ஊமை
சொல்லில் வருவது பாதி—நெஞ்சில்
தூங்கிக் கிடப்பது மீதி"

என்பது போன்ற அருமையான பல தத்துவப் பாடல்களைக் கவிஞர் கண்ணதாசன் பாடியிருக்கிறார். இத்தகைய கவிஞர்கள் எண்ணற்றோர் இருக்கின்றனர். அத்தகைய கவிஞர்கள் நம்மோடு வாழ்வதாலேயே அவர்களையெல்லாம் குறைத்து மதிப்பிடக் கூடாது. பாரதிக்குப்பின் கவிதை இலக்கியம் வளர்ந்திருக்கிறது - வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது - வளர வேண்டும். பாரதிக்குப் பிறகு, இந்த நாட்டின் வளர்ச்சித் திட்டங்களையும், பிற முன்னேற்றங் களையும் பாடும் சுதந்திரக் கவிஞர்களும், சோஷலிஸக் கவிஞர்களும் தோன்றித்தான் இருக்கின்றனர்.

"தம்மின் தம்மக்கள் அறிவுடைமை ஞாலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

என்றார் திருவள்ளுவர். அப்பாவைவிட மகன் அறிவு வளர்ந்தவனாகத் தானிருப்பான்; அவன் தனது தந்தை என்பதற்காக எழுந்து மரியாதை கொடுப்பான். அது போல பாரதி, கவிதையுலகத்தின் தந்தையாக விளங்குகிறார். அதற்குரிய மரியாதையை நாம் கொடுத்துத்தானாக வேண்டும். எனினும் மரியாதை கொடுப்பதை வைத்துக் கொண்டு பாரதிக்குப் பிறகு கவிதை இலக்கியம் வளரவில்லை என்று முடிவு செய்யக் கூடாது; முடிவு செய்யாதீர்கள். பாரதிக்குப்பின் கவிதை வளர்ந்திருக்கிறது - வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இனிமேலும் வளரும்.

## பாரதியின் இலட்சியம்

பாரதி தமிழன் - தமிழனாகப் பிறந்து - வாழ்ந்து வளர்ந்து புகழ்க்கொடி நாட்டியவன். அவனுக்குத் தமிழ் மொழியிடத்தில் அன்பு உண்டு-ஏன் பாரதி ஒரு தமிழ்ப் பித்தன் என்று கூடக் கூறலாம்.

*"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்*
*இனிதாவ தெங்கும் காணோம்"*

என்று பாடுமளவுக்கு

*"தெள்ளுற்ற தமிழ் அமுதின் சுவை கண்டார்*
*இங்கு அமரர் சிறப்புக் கண்டார்"*

என்று செம்மாந்து பேசுமளவுக்கு அவன் தமிழ்மொழியில் ஊறித்திளைத்தவன். "புத்தம் புதிய கலைகள் மேற்கே மெத்த வளர்வதால் இன்று அக்கலைகளைப் பெறாத தமிழ்ச் சாதியைப் பார்த்து, "தமிழ் சாதியே காலவெள்ளத்தில் கரைந்து அழிந்து போகஎண்ணமா? இல்லை இணையற்ற வாழ்வில் செம்மாந்திருக்க எண்ணமா?" என்று சீற்றத்துடன் மான உணர்வைத்தூண்டும் முறையில் கேட்கிறான். இந்த இடங்களையெல்லாம் நோக்கும்போது பாரதி தமிழ்

மொழியினிடம் பற்றும் பக்தியும் பைத்தியமும் பிடித்தவனாக வாழ்ந்திருக்கிறான் எனலாம். ஆயினும் இவற்றை வைத்துக் கொண்டு மட்டும் பாரதியை எடை போட்டுவிட முடியாது.

வாழ்க்கையின் இயல்பும், அதில் தோன்றும் வெவ்வேறு ஆசைகளும் வளர்ச்சி நோக்குடையன. ஒரு குடும்பத்தில் தலைவனும் தலைவியுமாக இருவர் இருப்பினும் இருவரும் இருவேறு பண்புகளைப் பெற்றிருப்பினும், குடும்பம் என்றாகும்போது ஒருவர் மற்றவருடன் இணைந்து வாழ் கின்றனர். பின் அவர்களே அண்டை அயல் வீட்டாருடன் – அந்த ஊரிலுள்ள எல்லா குடும்பங்களுடன் ஒத்து இணைந்து வாழ்கின்றனர் – அதுதான் தலைசிறந்தது என்றும் எண்ணுகின்றனர். ஊரிலுள்ள குடும்பங்கள் அனைத்தும் நாட்டுக் குடும்பத்தில் இணைந்து ஒத்துக் கரைந்து போகின்றன. அதுபோல பாரதி தமிழ்க் கவிஞனாக வாழ்ந்தான். ஆனால் நாட்டைவிட்டு விலகி வேறாகி வாழவில்லை. நாட்டுடன் ஒட்டி வாழக் கற்றக்கொண்டான். நான் தமிழனாகவும் வாழமுடியும். அந்த நிலையில் இந்த பாரத நாட்டுடன் ஒட்டி ஒரு பாரதக் குடிமகனாகவும் வாழமுடியும் என்பதை அவன் நடைமுறையில் காட்டினான்.

தனிமனிதன் தனித்துத் தன்னூருடன் மட்டும் வாழாது நாட்டுடன் உலகுடன் ஒட்டிவாழ எண்ணும்போதுதான் பரிபூரண மனிதனாக-முழுவளர்ச்சியடைந்த மனிதனாகத் திகழ்கிறான். அவன் ஊருடன் நாட்டுடன் உலகுடன் ஒத்துவராதபோது அதனால் பயனில்லை-வளர்ச்சியும் இல்லை. ஆகவே பாரதி தமிழனாகப் பிறந்து தமிழனாக வாழ்ந்தான். ஆனாலும் தேசியம், நாடு என்றபோது இந்த நாட்டின் ஒரு குடிமகன் என்று வாழ்ந்திருக்கிறான். தனிமனித வரலாறு நாட்டு வரலாற்றைத் திருப்பியதாக வரலாறு இல்லை. தேசத்தின் பொதுத்தன்மைகளே தேசத்தின் வரலாற்றை மாற்றும்; செம்மைப்படுத்தும். ஆகவே தமிழனாக வாழ்ந்து பாரத நாட்டுடன் இணைந்து கலந்தவன் பாரதி.

*"வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்*
*வாழிய பாரத மணித்திரு நாடு"*

என்ற பாடலில் செந்தமிழையும் தமிழரையும் வாழ்த்தி பிறகுதான் பாரத நாட்டை வாழ்த்துகிறான். எனவே பாரதியார் மிகுதியும் வற்புறுத்தியது தமிழ்த் தேசியமே என்றனர்.

பாரதி செந்தமிழை ஏற்றுக் கொண்டான், நற்றமிழை ஏற்றுக்கொண்டான். பாரத மணித்திரு நாட்டை ஏற்றுக் கொண்டான்-வாழ்த்துகிறான் என்றால் அங்கே அவனது உட்கருத்து புதைந்து கிடப்பதைக் காணலாம்.

மொழியென்று வரும்போது தாய்மொழியையும் இனத்தைப் பேசும்போது தமிழினத்தையும், நாடு என்று பேசும்போது பாரத நாட்டையும் வாழ்த்துகிறான். அவன் தமிழ் பேசுபவனாக-தமிழ் இனத்தவனாக இருப்பதுடன் பாரத நாட்டுக் குடிமகனாக இருப்பதிலும் பெருமை கொள்கிறான்-நாடு என்று வரும்போது பாரத நாட்டைக் காண்கிறான்.

அறையின்றி வீடு இல்லை. வீடு இன்றி வீதியில்லை; வீதியின்றி ஊரில்லை. அனைத்தும் ஒன்றையொன்று பிரிக்க முடியாது சாய்ந்து தழுவி நிற்கின்றன: பாரதம் என்ற நாட்டில் இருக்கின்ற வீதி தமிழகம், வீடு தமிழினம். வீட்டிலுள்ள சிறு அறை நாம். அறையின்றி வீடோ, வீடின்றி வீதியோ, வீதியின்றி ஊரோ இல்லை. அதுபோலத் தனித்தமிழன் இன்றித் தமிழினமோ, தமிழினமற்ற பாரதமோ இல்லை. எனவேதான் மொழி, மொழிவழிப்பட்ட இனம், நாடு என்று சொல்லும்போது தமிழ், தமிழர், பாரதநாடு என்று பேசுகின்றான்.

பாரதி தமிழினத்தைத் தமிழ்ச்சாதி என்று பேசுவதில் பெருமை கொள்கிறான். எனவே பாரதி வற்புறுத்தியது தமிழ்ச்சாதியின் சிறப்பையே என்றனர்.

உண்மைதான். பாரதி தமிழ்ச்சாதியைப் போற்றுகிறான் - புகழ்கின்றான் - செம்மாந்து பாடுகிறான். ஆனால் பாரத சமுதாயத்தை மறக்கவில்லை.

சாதி வேறு, சமுதாயம் வேறு. மாம்பழம் என்று சொல்லும்போது கிளிமூக்கு, மல்கோவா, ருமேனியா முதலிய பல சாதிகள் நினைவுக்கு வருகின்றன. மாம்பழச் சமுதாயத்தில் அமைந்த கிளிமூக்கு, மல்கோவா போன்றன வெல்லாம் பல்வேறு இனங்கள்–சாதிகள். அது போலப் பாரத சமுதாயத்தில் தமிழினம் ஒருபிரிவு; சாதி. அது போலவே ஆந்திர இனம், கன்னட இனம், மலையாள இனம், வங்காள இனம் முதலிய பல உட்பிரிவுகளும் உள்ளன. இதனை நன்கு உணர்ந்துதான் பாரதி தமிழ் மக்களைக் குறிக்கும்போது தமிழ்ச்சாதி என்றும், தமிழர் உள்ளிட்ட பாரத மக்களைக் குறிக்கும்போது பாரத சமுதாயம் என்றும் பாடுகிறான்.

"விதியே தமிழ்ச்சாதியை எவ்வகை விதித்தாய்"–

என்று விதியை நோக்கி வினவும்போது விதித்தாய் என்று தமிழ்ச்சாதியைக் குறித்தவன், பாரத மக்களை வாழ்த்தும் போது "வாழ்க வாழ்க பாரத சமுதாயம் வாழ்கவே" என்று வாழ்த்திக் களிப்படைகின்றான். ஆகவே தமிழினத்தைத் தமிழ்ச்சாதி என்றும், பல்வகை இனங்களையும் உள்ளடக்கிய பாரத மக்களைப் பாரத சமுதாயம் என்றும் வேறுவேறு பிரித்துக் காட்டுவதன் மூலம் சிறப்பாகப் பாரத தேசியத்தைச் சார்ந்து நிற்கின்றான்.

அடுத்து பாரத நாட்டைப் பாடும்போது பெற்ற உணர்ச்சி உணர்வைக் காட்டிலும் தமிழகத்தைப் பாடும் போது வெளியிடும் கவிதை உணர்ச்சி மிகச் சிறந்ததாக உள்ளது என்று குறித்து, அதன் மூலம் தமிழ்த் தேசியம் என்ற குறுகிய இடத்துள் பாரதியை அடைத்தார்கள்.

தன்மொழி, தன்னாடு இவற்றைப் பாடும்போதும், பேசும்போதும், எண்ணும்போதும் உணர்ச்சி மிகப் பாடு

வதும், பேசுவதும் இயற்கையாயினும் பாரத நாட்டிற்குத் தந்துள்ள அளவுக்கு, சிறப்பைத் தமிழ்நாடு என்று பிரித்து எண்ணும்போது தமிழகத்திற்குப் பாரதி தரவில்லை.

பெயர், நாடு, நகர், ஆறு, மலை, ஊர்தி, படை, முரசு, தார், கொடி என்ற பத்தினையும் வைத்துச் சிறப்பித்துப் பாடுவது தன்னேரில்லாத் தலைவனுக்கே ஆகும். இப்பத்தும் சேர்ந்தது தசாங்கம் என்பதும், அது தன்னேரில்லாத் தலைவனுக்கே உரியதாக வேண்டும் என்பதும் தசாங்கத்தின் இலக்கணம் ஆகும். அந்தத் தசாங்கத்தின் இலக்கணத்தை மனத்தில் இருத்திப் பார்க்கும்போது பாரதி பாரதநாட்டுக்குத் தான் தசாங்கம் பாடியுள்ளானே தவிர தமிழ் நாட்டிற்குப் பாடவில்லை. வீட்டிலே சிற்றன்னைகள் பலர் இருப்பினும் பெரிய அன்னைக்கு உரிய மதிப்பை, அப்பெரிய அன்னைக்கும் ஏனைய சிற்றன்னைக்குரிய மதிப்பிற்குறைவு படாது சிற்றன்னையருக்கும் கொடுப்பதுபோல, பாரதக் குடும்பத்தில் பெரிய அன்னையாகிய பாரதத் தாய்க்குத் தரும் மதிப்பை, மற்ற தமிழ், தெலுங்கு, குஜராத்தி, வங்காள அன்னையருக்குத் தருவதனைக் காட்டிலும் சற்று அதிகமாகத்தர எண்ணியே தமிழ்த்தாய்க்குப் பாடாத தசாங்கத்தைப் பாரதத் தாய்க்குப் பாடியுள்ளான். அதில் அவன் நாடாக,

"பேரிமய வெற்புமுதல்
பெண்குமரி ஈறாகும்
ஆரியநா டென்றேஅறி"

என்று தன்னாட்டின் எல்லைகளாக இமயத்தையும், குமரி முனையையும் காட்டுகின்றான்.

பாப்பாவுக்குக் கூறும்போது பாரதி தமிழ் நாட்டை மிகவும் வற்புறுத்துகிறான்.

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா என்று கூறுகிறான். அப்பாட்டின்

இறுதியில் ஆன்றோர்கள் "தேசமடி" பாப்பா என்று முடிக்கின்றான். பாரதியைப் பொறுத்த வரையில் தேசம் என்ற சொல்லைப் பாரத நாட்டைக் குறிப்பதாகவே பல இடங்களில் பயன்படுத்தியுள்ளான். மேலும் அப்பகுதியிற் பாடும் பாரதி பாரத நாட்டிற்கு ஒன்றும்; தமிழ் நாட்டிற்கு ஒன்றும்; பின் பாரத நாட்டிற்கு இரண்டுமாக நான்கு கண்ணிகளை எழுதியுள்ளான். ஒற்றுமைப்பட்டு இணைந்து நிற்கும் பாரதத்தைப் பாப்பாவுக்கு வற்புறுத்தவே பாரதத்திற்கு மூன்று பாடல்களைப் பாடியுள்ளான். அப்படியானால்,

> *"தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற—எங்கள்*
> *தாயென்று கும்பிடடி பாப்பா"*

என்ற பகுதிக்குப் பொருள் கொள்வது எப்படி? "பாரதத் தாயைத் தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற எங்கள் தாய் என்று கும்பிடு" என்று பொருள் கொள்ளவேண்டும். தமிழ்த்திரு நாடு ஒரு மகள்; அவளை ஈன்றெடுத்தவள் பாரதத்தாய் என்று பொருள் கொள்ள வேண்டும். ஏனென்றால் தமிழகம் உள்ளிட்ட பாரத நாட்டை—அன்று முப்பத்து முக்கோடி மக்கள் வாழ்ந்த பாரத நாட்டை ஒரு கூட்டமைப்பாகக் காண்கிறான்.

"முப்பத்து முக்கோடி மக்களுக்கும் ஒரு சங்கம் – அது பொதுவுடைமை" என்று பாடுகின்றான். அவன் தமிழனாகப் பிறந்து – தமிழனாகச் செத்தபோதிலும், பாரதநாடு என்று நோக்கும்போது தன்னைப் பாரத நாட்டுக் குடிமகனாக ஆக்கிக்கொள்ளும் வழியில் வளர்த்து வைத்திருந்தான். ஏன்? அதனிலும் மேலாக உலகக் குடிமகனாக வளர்கின்ற வரையில் தன்னை வளர்த்துக் கொண்டிருந்தான். அதனால் தான் பெல்ஜியப் புரட்சியை – சோவியத் புரட்சியை அவன் வாழ்த்த முடிந்தது – வாழ்த்தினான். இத்தாலியைக் கண்டு மாஜினியின் வீரமொழிகளை மொழி பெயர்த்துத் தந்தான். ஆகவே அவன் தமிழனாகவும், பாரதக் குடிமகனாகவும், ஏன்

உலக மகனாகவும் கை கொடுத்து நின்றான். எனவே சிறு எல்லைகட்கு உட்பட்ட மொழிவழித் தனித்து வாழும் தேசியங்களை ஏற்றுக் கொண்டவனல்லன் பாரதி.

மொழிவழித் தனித்தும் பிரிந்து வாழும் தேசியத்தை ஏற்றுக் கொண்டவனல்லன் என்றால் தன் மொழியையும், தன் இனத்தையும் பேணாதவன் என்று பொருளல்ல. எடுத்துக் காட்டாகப் பல்வேறு சிற்றாறுகள் இன்றிப் பேராறு இல்லை; பேராற்றுடன் கலவாத சிற்றாறுகளால் பெரும் பயன் இல்லை. பேராறுதான் சிறப்புடையது; சிற்றாறுகள் சிறப்புடையனவல்ல என்று ஒதுக்கித்தள்ளவும் முடியாது. பேராற்றின் மூலம் வாழ்வுக்குத் தேவையான சிறப்பு, சக்தி, மின்சாரம் போன்ற பெருஞ் சக்திகளைப் பெற முடியும். ஆகவே பேராறுபோல பாரத தேசியம்; சிற்றாறுகள் போல பிறமொழி வழித் தேசியங்கள். பாரதி தமிழ்நாட்டையும் பார்த்தான். பாரத நாட்டையும் பார்த்தான். ஆனால் பாரத நாட்டினின்று பிரிந்த தமிழ்நாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏன், அகில உலக தேசியத்தை விட்டுப் பிரிந்து நிற்கும் பாரத தேசியத்தையும் ஏற்றுக்கொள்ளாத அளவுக்கு அவன் உயர்ந்திருந்தான் - தன்னை வளர்த்துக் கொண்டிருந்தான்.

இங்ஙனம் பாரத தேசியத்தைக் காணும் அளவுக்கு அவன் வளர்ந்திருந்ததாலேயே காவிரியாறு போல் பிறி தில்லை. வேங்கடம்போல் பிறிதில்லை என்று பாடாது,

> "இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே"...
> "மன்னும் இமயமலை எங்கள் மலையே"

என்று பாடுகின்றான். இங்ஙனம் பரந்துபட்ட பாரத தேசியத்தைக் கண்டதால்தான் தமிழ்நாட்டு மணமகனுக்குச் சேரநாட்டுப் பெண் வேண்டும் என்கிறான். தமிழர் தமிழ் பெண்ணை மாத்திரம் மணந்துகொண்டு தமிழ்நாட்டுக் குள்ளேயே "குண்டுசட்டிக்குள் குதிரை ஓட்டக் கூடாது" என்கிறான். மணமகளும் மணமகனும் நீர்விளையாடச்

சிந்துநாட்டுக் கரைக்குச் செல்ல வேண்டும் என்கிறான். இசைக்கும் பாடல், தெலுங்காக மிளிரவேண்டும் என்கிறான். எனவே தமிழ் மணமகன் தமிழ் தேசியத்தைத் தாண்டிக் கேரளத்தில் பெண்ணெடுத்து, இசையில் தெலுங்கை ஏற்று, பொருளாதாரத்திலே சிந்து நதித் தேசியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்; கேரள, ஆந்திர, பஞ்சாப் தேசியத்தைத் தமிழன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறுவதன் மூலம் அனைத்துப் பிரிவுகளும் இணைந்த பாரத தேசியத்தை வற்புறுத்துகிறான்.

பழங்காலத்தில் இந்தப் பாரத நாட்டில் 400-க்கும் அதிகமான பேரரசர்கள், 4000-க்கும் அதிகமான அரசர்கள், அவர்களுக்குக் கீழே கணக்கில் அடங்காத ஜமீன்தார்கள் இருந்தனர். நாடு, சிறுசிறு பகுதிகளாகப் பிரிந்து நின்று ஒருவருக்கொருவர் சண்டை சச்சரவுகள் வைத்துக் கொண்டதால்தான் அந்நியரிடம் அடிமைப்பட நேர்ந்தது. மொழி, உணர்வு என்பதெல்லாம் தேசியத்தை ஒட்டியன அல்ல. மொழி ஒற்றுமை, சிந்தனை ஒற்றுமை, பொருளாதார ஒற்றுமை, இயற்கை பாதுகாப்பு அரண், என்று இந்த நாட்டை வெவ்வேறாகக் கூறுபோட்டுவிட்டால் நாட்டின் நிலை என்ன ஆகும்? எனவேதான்,

> "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே-நம்மில்
> ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வே"

ஒன்றுபட்ட பாரதத்தின்-அதன் மேம்பாட்டினைக் கூறினான் பாரதி.

இத்தனையும் எண்ணும்போது தமிழ்த் தேசியம் வேண்டும் - தமிழ் நாகரிகம் வேண்டும். ஆனால் அதே காலத்தில் குடிமக்கள், 'நான் ஒரு பாரத நாட்டுக் குடிமகன்' என்பதையும் உணரவேண்டும். ஆகவே பாரத தேசியத்தை ஒட்டிய - தழுவிய தமிழ்த் தேசியத்தை வற்புறுத்தினான் பாரதி எனலாம். இரண்டையும் ஒன்றுக்கொன்று முரண்

படுத்துவதாகப் பாரதி காணவில்லை. இரண்டும் வேண்டும், இரண்டும் இன்றியமையாதது. இரண்டும் இரண்டு கண்போல எனலாம். ஒரு கண்ணை இழந்துவிட்டு, ஒரு கண்ணுடன் விளங்குவதால் பலனில்லை. ஒன்றை ஒன்று விழுங்காது ஒற்றுமைப்பட்ட பாரததேசியமும் தமிழ்த் தேசியமும் தேவை. அவை இரண்டும் உயிரும் உடலும், கிணறும் நீரும்போல, எது உயர்ந்தது எது தாழ்ந்தது என்று மிகுதி குறைவு கூற முடியாத அளவுக்கு இரண்டும் ஒத்த நிலையில் இருக்கவேண்டும். பாரத தேசியத்தில் உள்ளிட்ட தமிழ்த் தேசியம் வேண்டும் என்கிறான் பாரதி.

இராமேசுவரத்தில் இருப்பவர்கள் காசிக்கும், காசியில் இருப்பவர்கள் இராமேசுவரத்திற்கும் போவது பழக்கமாகி விட்டது. ஆகவே தமிழ்த் தேசியத்தைக் கடந்த பாரத தேசியம் தன்னியல்பாக மொழி, கலை, சமயம் முதலிய நாகரிகங்களில் வளர்ந்துகொண்டிருக்கிறது. நம்முடைய குழந்தைகள் நல்ல தமிழர்களாகத் தமிழ் நெஞ்சத்தோடு வாழவேண்டும். அதே நேரத்தில் பாரத நாடு நம்நாடு. நாம் அனைவரும் பாரத நாட்டு மக்கள். 40 கோடி பேரும் குடும்பத்து மக்கள் - ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் - ஒரு சமுதாயம் என்ற தேசிய எழுச்சி மிக்க உணர்ச்சியோடு வாழவேண்டும். இந்த நாட்டு இளந் தலைமுறையினருக்கு இந்த இரு எண்ணங்களும் வரவேண்டும் - அவர்கள் உள்ளத்தில் வளர வேண்டும் என்ற எண்ணத்தில்தான்.

"பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள் பாரத நாடு"

என்று பாடினான் பாரதி.

பாரத தேசியத்தைத் தழுவிய தமிழ்த் தேசியம் தமிழ் தேசியத்தை அணைத்த பாரத தேசியம் இவைகள்தான் பாரதி கண்டார். அவர் கண்ட பாரத தேசியம் தமிழ்த் தேசியங்களுள் முரண்பாடு இல்லை. அவற்றுள் முரண் பாட்டை அவர் பார்க்கவும் இல்லை - முரண்பாடு இருக்கவும் முடியாது.

## பாரதியின் தேசீயப் பாடல்கள்

எட்டையபுர மண்ணில் பிறந்து வளர்ந்து பாரத நாட்டிற்காக இந்த உலகச் சமுதாயத்துக்காக வாழ்ந்தவன் பாரதி. தாழ்வுற்று வறுமைமிஞ்சிப் பாழ்பட்டுக் கிடந்ததாம் ஓர் பாரத தேசந்தனைத் தன் பாட்டுத் திறத்தாலே பாவித்தவன் பாரதி. சுதந்திரப் போராட்ட இயக்கம் வளர - சமுதாயத்தின் விடுதலை உணர்ச்சி பீறிட்டு எழ – சமுதாயம் விடுதலை வேட்கை கொள்ள அவன் பாடிய பாடல்கள் - தேசியப் பாடல்கள் இன்றைய நிலையில் காலங்கடந் தவையா? என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எனது இம் முன்னுரையை வெறும் செய்திகளை மட்டும் தரும் செய்திப் பத்திரிகை அளவில் அமைத்துச் சொல்கிறேன். அதுதான் தலைமைக்கு ஏற்றது. இரு கட்சிகளின் சார்பிலும் ஒத்த தகுதியுடையவர்கள் – திறமுடன் வாதிடக் கூடியவர்கள் அமைந்துள்ளனர்.

கட்சியாளர்களது கருத்துக்களை ஏற்றும் விளக்கியும், விடையிறுக்கப் பெறாத வினாக்களுக்கு ஏற்ற விடை தந்தும் பாரதியின் தேசியப் பாடல்கள் காலங்கடந்தவை என சிலர் விவாதிக்கிறார்கள்.

*"சிந்துநதியின் மிசை நிலவினிலே*
*சேரநன் னாட்டிளம் பெண்களுடனே*
*சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துத்*
*தோணிகள் ஓட்டிவிளை யாடிவருவோம்"*

என்ற பாடலில் குறிப்பிட்ட சிந்துநதி பாகிஸ்தானுக்குப் போய்விட்ட பிறகு இந்தப் பாடலுக்கு வேலை ஏது? இது காலங்கடந்த பாடல் அல்லவா என்கின்றனர்.

"இப்பாடல் நடைமுறைக்கு ஒவ்வாதது" என்ற அவர்கள் கருத்து, சரியானதுதானா? அன்றைய நிலையில் ஒன்றுபட்டு நில்லாது பிரிந்து போன பாகிஸ்தான் இப்போது

சீனாவுடன் உறவாடுவதால் தனக்குத் தீங்குநேர்வதை - நேர இருப்பதை நினைத்து ஏன் இந்தியாவுடன் இணைந்து நிற்க நினைக்கக் கூடாது? நாடுகள் ஒன்றுடன் ஒன்று முரண்பட்டு விலகுவதும் பின் ஒன்றுபட்ட கொள்கையால் - பிறர் நெருக்கடியால் இணைவதும் இயற்கைதானே? அம்முறையில் நேற்றுப் பிரிந்த பாகிஸ்தான் நாளை - எதிர்காலத்தில் இந்தியாவுடன் சேராது - சேரக்கூடாது என்று எப்படிக் கூற முடியும்? அன்று சிந்துவையும் கங்கையையும் இணைக்க முடியாதா? இருநாடுகளும் ஒன்று சேர்ந்து கைகோர்த்து நிற்கும் நிலை ஏற்பட்டால் அத்தகைய சிறப்பு வேறு எந்த நாட்டுக்கு வரும். சிந்து நதியில் படகோட்டும் இந்த நோக்கம் அன்று நிறைவேறத்தானே செய்யும்? சிந்து நதிக் காலத்தின் கோளாறால் - ஆட்சியால் பிரிந்தது. காலம் மாறும்போது - இந்தியா பாகிஸ்தான் இணையும்போது நனவாகும். இன்றைய எண்ணமல்லவா அது? இரு நாடுகளும் இணையும் அத்தகைய நிலை எதிர்காலத்தில் வரும் - வரத்தான் போகிறது.

> "என்று தணியும் எங்கள் சுதந்திரதாகம்
> என்று மடியும் இந்த அடிமையின் மோகம்"

என்ற பாடலைக் காட்டி சுதந்திர தாகம் தீர்ந்த பிறகு அடிமைத்தளை நீங்கிய பிறகு இந்தப் பாட்டுக்குச் சிறப்புண்டா? இது காலங்கடந்த பாடல்தானே என்கின்றனர்.

அடிமையின் மோகம் தணிவது மட்டும் சுதந்திர மாகுமா? அந்நியர் ஆட்சியிலிருந்து விடுபடுவது மட்டும் சுதந்திரமாகுமா? பொருளியல் விடுதலை - இறப்பினின்று விடுதலை - பிறப்பிலிருந்து விடுதலை பெற வேண்டாமா? சுதந்திரம் என்பது அடிமைத்தளை நீக்கம் மட்டுமன்று, பொருளாதார விடுதலை இறப்பும் பிறப்பும் விடுதலை ஆகிய இவை அனைத்தையும் குறிப்பது; உள்ளடக்கியது. சுதந்திரம்

ஒரு பெரிய வட்டம். அந்த வட்டத்திலுள்ள ஒரு புள்ளிதான் அடிமைத்தளை நீக்கம். அந்த ஒரு புள்ளி மட்டும் வட்ட மாகுமா? ஏனைய புள்ளிகள் வேண்டாமா? செல்வமற்ற ஏழைக்கு - உழைத்தும் பயன்பெற முடியாது தவிக்கின்ற உழைப்பாளிகளுக்குப் பொருளாதார விடுதலை வேண் டாமா? இத்தகைய எல்லாவித சிக்கல்களிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் விடுதலை பெறுவதுதான் சுதந்திரம் என்ற கருத்தைப் புலப்படுத்துவதற்காகத்தான் - எல்லாவகை விடுதலையும் பெறுவதுதான் 'நான் வேண்டும் சுதந்திரம்' என்பதைக் குறிக்கத்தான் பாரதி அழகுற "ஆனந்த சுதந்திரம்" என்று பிறிதோரிடத்தில் குறிப்பிடுகின்றான்.

ஆகவே இந்த நாட்டில் தூய அறிவும் ஆண்மையும் வளரும் வரையில் வலிமையுடையோர் வலிமையற்றோரைச் சுரண்டுவதை விடும் வரையில் சுரண்டப்படுபவர் இல்லையென்று முழங்கும் வரையில் பாரதி குறிப்பிடும் ஆனந்த சுதந்திரம் - முழுச் சுதந்திரம் பெற்றதாகக் கூற முடியுமா? அன்று நாம் பெற்றது சுதந்திரத்தில் வீசம் பங்கே ஆகும். எஞ்சிய முக்காலே மூன்று வீசம் பங்குச் சுதந்திரமும் பெறும் வரையில் இந்தப் பாடல் உயிர்ப்புடன் ஒலித்துக் கொண்டிருக்கும்.

இன்றைய உலகம் விரிந்து பரந்து உள்ளது. நிலத்திலும் வானத்திலும் புதிய புதிய கண்டங்கள் கண்டுபிடிக்கப் படுகின்றன. இந்தியாவில் இல்லாவிட்டாலும் - அமெரிக் காவில் இல்லாவிட்டாலும் - தென்னாப்பிரிக்காவில் இத்தகைய சுதந்திரம் கிட்டாதபோது, இந்தப் பாடல் அவர்களது உள்ளத்தில் எழுச்சியைத் தூண்ட வேண்டாமா? பாரதியார் எட்டயபுர மண்ணில் பிறந்தவரானாலும் அவர் தமிழகத்திற்கு - பாரதத்திற்கு மட்டுமின்றி உலகச் சமுதாயத்துக்கும் சிறந்த கருத்துக்களைத் தரும் அளவுக்குத் தன்னை வளர்த்துக் கொண்டவன். அவன் இந்த நாட்டுக்கு மட்டுமன்றி உலக முழுமைக்கும் சொந்தமானவன். உலகச்

சமுதாயத்தில் எங்கு எங்கு சண்டை சச்சரவுகள் உள்ளனவோ அங்கெல்லாம் அவன் பாடல் பயன்படும். இனவெறி நிறவெறி பிடித்த நாடுகள் சுதந்திரம் பெறாத நாடுகள் இந்த உலகில் இன்னும் எத்தனையோ உள்ளன.

தென்னாப்பிரிக்காவில் நிறவெறி பிடித்தாட்டக் காண்கிறோம். அடிமைத்தளையில் சிக்குண்டு தவிக்கும் நாடுகள் பலவற்றைப் பார்க்கிறோம் இன்றைய உலகத்தில். ஆகவே அங்கெல்லாம் பாரதி போகவேண்டும். அவன் பாடல் ஒலிக்க வேண்டும். உலகப் பிரச்சனைகள் தீரும் வரை - அவை வளர்ந்து கொண்டிருக்கும்வரை இந்தப் பாடல் வேண்டியதுதானே? காலங் கடந்ததாகக் கூற முடியுமா?

*ஆதிசிவன் பெற்று விட்டான் என்னை*
*ஆரிய்மைந்தன் அகத்தியன் என்றோர்*
*வேதியன் கண்டு மகிழ்ந்தே நிறை*
*மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்*

என்ற பாடலைச் சுட்டிக் காட்டி இது காலங்கடந்த பாடல். சிவபெருமான் தமிழ் மொழியைத் தோற்றுவித்திருக்க முடியுமா? மொழியைத் தனி ஒருவன் தோற்றுவிக்க முடியுமா? இது கருத்துப் பிழையல்லவா? எனவே காலங் கடந்ததல்லவா என்கின்றனர்.

ஆதிசிவன் என்பதை அப்படியே வைத்துக் கொண்டு பார்த்தால் வந்த பிழை அதன் உண்மைப் பொருள் என்ன? சீவன் என்ற சொல் சிவன் என்று திரிந்து வந்துள்ளது. பாடலில் சொற்களை ஏற்ற இடங்களில் - இன்றியமையாத இடங்களில் நீட்டியும் குறைத்தும், திரித்தும் வழங்குவது என்பது இலக்கணமும் ஏற்றுக்கொண்ட நெறி - மரபு ஆகும். வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல் விரித்தல் தொகுத்தலும் வரும் செய்யுளுள் வேண்டும் என்பது இலக்கணம். எனவே சீவன் என்பது பாடலின் சந்த ஓட்டம் தடைப்படாதிருப்பதற்காகச் சிவன் என்று வந்துள்ளது. சீவன்

- மனிதன் பெற்றெடுத்ததுதானே மொழி? இந்தக் கருத்தில் எங்ஙனம் வேறுபாடு கொள்ள முடியும்?

"தோன்றக் கூடியனவெல்லாம் மாறக்கூடியன" என்பது மார்க்ஸ்சின் சித்தாந்தம். காரல்மார்க்ஸ்சின் கொள்கைப்படி தோன்றியது மாறுமானால் - அழியுமானால் சுதந்திர வேட்கையின் காரணமாக - சுதந்திரம் பெறுவதற்காக எழுதப்பெற்ற தேசியப் பாடல்கள் அழியக் கூடியன - காலங்கடந்தனதானே என்று விவாதிக்கின்றனர். உலகில் தோன்றிய எந்தப் பொருளும் நிலைப்பதில்லை என்பது உண்மை.

நிலைத்தல் வேறு, மாறுதல் வேறு. தோன்றிய பொருள்களிடையே மாறுதல் - வளர்ச்சி உண்டு. பிறந்தது போன்று நிலைத்து நிற்றல்தான் இல்லை. பிறந்தது அப்படியே இல்லாது வளரும், மாறும். மாற்றம் அழிவல்ல, வளர்ச்சியே ஆகும்.

உலகில் தோன்றிய எல்லாம் அழிவன என்ற கொள்கை இடைக்காலச் சமயத்தில் சில சுயநலவாதிகளால் புகுத்தப் பெற்றக் கொள்கை. அது தவறு. மாற்றம் உண்டே தவிர அழிவில்லை.

பாரதியின் கவிதை காலத்திற்கேற்ற புதுப்புதுக் கருத்துக்களை மாறி மாறித் தந்துகொண்டிருக்குமே தவிர அழியாது. அன்று சிந்து நதியின்மிசை படகு விடுமாறு பாடிய பாரதி வாழ்வானானால் பாரத நாடனைத்தையும் ஒன்றாக அன்று கண்டதுபோல் உலக நாடுகள் அனைத்தையும் ஒன்றாகக் கண்டு "அமேசான் நதியின் மிசை நிலவினிலே படகு விடுவோம்" என்று பாடுவான். அன்று தன்னாட்டின் எல்லைப்போக்கில் அவனுக்குச் சிந்துதான் கிடைத்தது. இன்று சிந்துவில் இல்லாவிட்டாலும் கங்கையிலாவது படகோட்ட எந்தத் தமிழனாவது முன்வந்துள்ளானா? இவையெல்லாம் செய்ய முன்வராத தமிழன், பாரதி

கூறியபடி ஒன்றே ஒன்றினை மட்டும் முயல்கிறான் - முன்வருகிறான். சேரநாட்டுப் பெண்களை மணக்க மட்டும் முன் வருவான். தன் ஊர்விட்டு - தன் மாமனார் ஊர்விட்டு வேற்று ஊர்களுக்குச் சென்று வேலை செய்யப் பயப்படும் தமிழன் படகோட்டுவது எங்கே?

ஆகவே காரல்மார்க்ஸ், 'தோன்றியன அப்படியே நிலைத்திருக்க மாட்டா வளர்ச்சிக்குரியன வளரும்' என்பதைத்தான் குறிப்பிடுகின்றார்.

தேசீயம் என்பது நாட்டை நேசிப்பது மட்டும்தான் என்று சொல்கிறார்கள்.

தன்னாட்டை நேசிப்பது மட்டும் அன்று. மனித னுடைய உணர்வு - சிந்தனை - செயல் வாழ்க்கை - வீடு - அரசு - ஆட்சி அனைத்துமே தேசியம் என்று சிலர் விளக்கம் தருகின்றனர்.

அழகான விளக்கம் அது. ஆங்கிலேயனை - அந்நியனை எதிப்பது - தன்னாட்டை நேசிப்பது மட்டும் தேசியமல்ல, நாட்டினுள் அமைந்த வீடும் வாழ்க்கையும், மனிதனும் அவன் கருத்தும், சிந்தனையும் அவனையாளும் அரசும் ஆட்சியும் செம்மையுடன் சிறக்க வேண்டும் என்று உழைப்பதுதான். தேசப்பற்று. - தேசிய உணர்ச்சி, இந்த நாட்டு மக்கள் மற்றவருடன் கலந்து உரையாடும் உரையாடல் உறவு இவை எல்லாமே தேசீயம் ஆகும்.

குழந்தை தாயிடம் அன்பு செலுத்துவது இயற்கை. அது வளர்ந்த ஒருத்தியை மணந்து கொண்டபின் தாயன்புக்கு இடமில்லை. தாரத்திடமே அன்பு செலுத்துகிறான்; அது போலத் தேசபக்தியை ஊட்டுவதற்காக - சுதந்திரம் பெறுவதற்காகப் பாடப் பெற்ற பாடல்கள் அது பெற்ற பிறகு பயனற்றுப் போவது இயற்கைதானே?' என்கின்றனர்.

தாயன்பு அவன் வளர்ந்த பிறகு தாரத்திடம் செல்கிறது. தாயன்பு மறக்கப்படுகிறது என்கின்றனர்.

அது பொருந்தாது. உலகம் தாயன்பால் இன்று நேற்று வளரவில்லை. உழைப்பின் பயனை அனுபவிக்கும்போது பயன் நல்கிய, முன்னோர் உழைப்பை மறக்கக் கூடாது. பின் பரம்பரை முன்னோடியாக இருந்து பயன்தந்த முன்னோரை மறக்கக் கூடாது என்பதற்காகவே - நன்றியறிதல். மாம்பழத்தைத் தின்றவன் அதைத் தரும் வகையில் உழைத்த தன் முன்னோரை மறக்காது போற்ற வேண்டும் என்பதற்காக, நீ உன் பின் பரம்பரைக்காக அதன் கொட்டையை நடவேண்டும் என்று கூறப் பெற்ற கருத்து சிறப்புடையது.

பாராட்டும் பண்பு – முன்னோரைப் போற்றும் பண்பு – நன்றியறிதல் சமுதாயத்திற்கு மிகமிக இன்றியமையாத தாகும். எனவேதான் எத்தகைய தீய செயல் செய்த போதிலும் இழிசெயலில் ஈடுபட்டபோதும் நன்றியறிதல் வேண்டும். **"ஆன்முலையறுத்த அறனிலோர்க்கும் பார்ப்பார் தப்பிய கொடுமையோர்க்கும் கழுவாய் உண்டு"** என்ற புறநானூறு,

> "ஒருவன் செய்தி கொன்றோர்க்கு
> உய்தி இல்லென அறம்பாடிற்று"

என்று கூறுகிறது. எனவே சுதந்திரத்தை அனுபவிக்கும் நாம் அதைத் தருவதில் முக்கிய பங்கு வகித்த தேசியப் பாடல்களை மறக்காது போற்ற வேண்டும்.

கோகலே, வ. உ. சி., காந்தி, குருகோவிந்தர் போன்ற தேசிய இயக்கத் தலைவர்களைப் பற்றிய பாடல்கள் காலங்கடந்தவை அல்லவா? அவர்களது வரலாற்றை அறிய இன்று தெளிவான வரலாறு இல்லையா? பள்ளிக்கூட வரலாற்று ஆசிரியர் போதுமே. எனவே அவர்களைப் பற்றிய அப்பாடல்கள் காலங் கடந்தவைதான் என்கின்றனர்.

சிறை சென்று அடி உதை பட்டு இன்று நாம் அனுபவிக்கும் சுதந்திரம் தந்த தலைவர்களைப் போற்றுவது - வணங்குவது - நினைப்பது நன்றியுணர்வின் பாற்பட்ட

தாகும். அவர்களை நினைக்க சமூக அறிவு நூல் போதும் என்கின்றனர். அது தவறு. பள்ளியில் சமூக அறிவு நூல் பாடத்தில் அவர்களது வரலாற்றைத்தான் படிக்கலாம், வினாவுக்கு விடை எழுதலாம்; மதிப்பெண்கள் பெறலாம். உள்ளத்தில் எழுச்சியை - உணர்வைப் பெற முடியுமா? நவீன ஆசிரியனும் சிறு கதை ஆசிரியனும்கூட அத்தகைய எழுச்சியைத் தரமுடியாது. ஒரு நல்ல கவிஞன் - மக்கள் கவிஞன் தான் அந்த எழுச்சியை ஊட்டமுடியும். எத்தனையோ பேர் சுதந்திரப் போராட்டக் காலத்தில் பக்கம் பக்கமாகச் சுதந்திரம் பற்றியும் தேசபக்தி பற்றியும் எழுதினர். இருந்தாலும் வங்கக் கவிஞனும் தமிழகம் தந்த சிங்கக் கவிஞனும் தந்த எழுச்சியை - ஊட்டிய உணர்வை ஊட்ட முடியவில்லை. இன்று படித்தாலும் உடல் புல்லரிக்கிறது - உள்ளம் துள்ளி எழுகிறது. இத்தகைய உணர்வை வெறும் வரலாற்று நூலோ - வரலாற்று ஆசிரியனோ ஊட்ட முடியாது. அத்தகைய சிறந்த உணர்வைப் பெற அப் பாடல்கள் தான் வேண்டும்.

*"ஆயிரம் உண்டிங்கு சாதி எனில்*
*அந்நியர் வந்து புகல் என்ன நீதி-"*

என்று கேட்டான் பாரதி. அவன் ஆங்கிலேயரை மட்டும் பார்த்துக் கேட்கவில்லை. இன்று நம் எல்லைப்புறத்தில் ஓயாது தொல்லைக் கொடுத்துக்கொண்டு இருக்கும் பகைவரைப் பார்த்தும் அவன் இதே வினாவை எழுப்புவான், உயிரோடு இருந்தால். அவன் அன்று எழுப்பிய வினா இன்று தென்னகத் தலைவர்கள் உள்ளத்தில் பீறிட்டு எழுந்து நின்றதைக் கண்டோம். நாட்டுப் பிரிவு பற்றிய எண்ணம் தூக்கி எறியப்பெற்றது அந்த நேரத்தில். அனைவர் பார்வையும் இந்தப் பாரதத்தைக் காக்கத் திரும்பியது. இங்ஙனம் பல கட்சித் தலைவர்களையும் மக்களையும்

ஒன்றுபடுமாறு ஊக்குவித்த அந்தப் பாரதியின் பாடல் காலங்கடந்ததா, அது நமக்கு வேண்டாமா?

"செப்புமொழி பதினெட்டுடையாள்–எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்"

என்று பாடினான் பாரதி.

இன்று பல்வேறு மொழிகளைப் பெற்றிருக்கும் பாரத நாடு சிந்தனையால் ஒன்றாய் விட்டதா? இல்லை. ஒன்றாக்க – சிந்தையால் ஒன்றாக்க முயற்சித்து வருகிறோம். ஆற்றில் பிள்ளையார் கட்ட முயற்சிப்பது போல முயல்கிறோம். காலம் சற்று நீடித்தாலும் இறுதியில் வெற்றியடைவோம். ஒத்து ஊதுபவனுடைய ஒத்து ஒலி, நாதசுரத்திலிருந்து வேறாக வேறுபட்டு ஒலித்தாலும் அவன் ஊதும் சுதி நாதசுரத்துடன் ஒத்திருப்பது போல, மொழிகள் பலவாக – பதினெட்டாக வேறுபட்டிருப்பினும் அம்மொழிகள் பேசும் மக்களது சிந்தனை ஒத்திருக்க வேண்டும். ஒன்றாய் இருக்க வேண்டும் என்கிறான். சாதியைத் தொலைப்பதில் – பொருளாதார ஏற்றத் தாழ்வைப் போக்குவதில் – அனைவரும் இந்தப் பாரத நாட்டின் குடிமக்கள் – நாம் அனைவரும் ஒரே குடும்பம் என்பதில் சிந்தனை ஒன்றாய் இருக்கவேண்டும் என்கிறான். ஆகவே மொழி வேறுபட்டாலும் சிந்தனை ஒன்று படாத இந்தக் காலத்தில் அச்சிந்தனையை ஊட்டும் – வற்புறுத்தும் பாரதியின் பாடல் வேண்டாமா?

புவிமிசை தருமமே அரசியலதனிலும்
பிற இய லதனிலும் வெற்றிதரும் என
வேதம் சொன்னதை முற்றும்பேண
முற்பட்டு நின்றார் பாரத மக்கள்

என்று பாடுகின்றான்.

சுதந்திர காலத்தில் மக்களுடைய நோக்கத்தை எல்லாம் சுதந்திரம் பெறுவதில் செலுத்தச் செய்த நாம் –

சுதந்திரமே குறிக்கோளாக - இலட்சியமாக வைத்த நாம் சுதந்திரம் பெற்ற பிறகு அத்தகையதொரு சிறந்த இலட்சியத்தை மக்கள் மன்றத்தின் முன் வைக்கவில்லை - மறந்து விட்டோம். இன்று நாட்டு `நலத் திட்டங்கள் பல தீட்டிச் செயல்படுத்தும் நோக்குடன் முன்னேறும் நாம் அவற்றைவிடச் சிறந்த - சாதி வேறுபாடு இல்லை - எல்லாரும் ஓர் குலம் - எல்லாரும் ஓர் நிறை - எல்லாரும் இந்தியப் பெருநாட்டின் குடிமக்கள் என்ற பெரியதொரு இலட்சியத்தை மக்கள் மன்றத்தில் நிறுத்தி மக்களை எழுச்சியுறச் செய்ய மறந்து விட்டோம். சமதர்ம சமுதாய அமைப்பை வலியுறுத்தி இலட்சியமாக்க மறந்தோம். மக்களது இலட்சியமாக ஆக்கவில்லை.

அரசியல் ஆட்சி, போகும் வரும். ஆனால் நீதி - அறம் என்றும் நிலையாக நிற்பது - மாறாதது - அழியாதது. ஆயினும் இன்று மக்களிடம் அரசியலுக்கு இருக்கும் மோகம் எல்லா மனிதருக்கும் சோறு போட வேண்டும் என்பதில் இல்லை. எல்லார் வயிற்றையும் நிரப்ப வேண்டும் என்பது போன்ற நீதியை - அறத்தை வற்புறுத்தும் பாரதியின் பாடல் வேண்டாமா?

> "கோத்திரம் ஒன்றாய் இருந்தாலும்-ஒரு
> கொள்கையிற் பிரிந்தவனைக் குலைத்திகழ்வார்"

பிறந்த பிறப்பால் - பாரத நாட்டுக் குடிமகன் என்ற ஒத்த நிலையால் ஒன்றாய் இருக்கும் நம்முன் பொதுவாகக் கருத்து வேறுபாடிருக்கக் கூடாதாயினும் ஆங்காங்கு கருத்து வேறுபாடு 'உண்டாவது இயற்கை. அப்படிக் கருத்து வேறுபாடு கொண்டவனை நோக்கித் தாழ்த்தி - இழித்துப் பழித்துப் பேசுவது தவறு. தாம் கொண்ட வேறுபட்ட கொள்கைகளுள்ளும் ஒற்றுமை காண்பதுதான் அறிவுடைமை. வேறுபட்ட புளிப்பும் கார்ப்பும் உவர்ப்பும் துவர்ப்பும் கசப்பும் சேர்ந்து அறுசுவை உணவு அமைதல் போல

வேறுபட்ட கொள்கைகளின் அடிப்படையிலும் ஒற்றுமை காணாது - காண முயற்சிக்காது, அக்கொள்கை உடையவனைக் குறைத்துப் பேசுவது தவறு என்று கண்டிக்கும் பாரதியின் தேசியப் பாடல் வேண்டாமா?

*"இனி ஒரு விதி செய்வோம்–அதை*
*எந்தநாளும் காப்போம்*
*தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்*
*சகத்தினை அழித்திடுவோம்"*

பசிப் பிரச்சனை இன்றைய நிலையில் ஒரு நாட்டு பிரச்சனையாக மட்டுமல்லாது உலகப் பிரச்சனையாகவும் ஆகிவிட்டது. "ஒரு நாளைக்குப் பத்தாயிரம் பேர் சோறின்றி உலகில் இறந்து போகிறார்கள்" என்று அமெரிக்காவில் கூடிய அகில உலக உணவு மாநாட்டு அறிக்கை கூறுகிறது. ஒன்று அனைவர்க்கும் சோறு போடவேண்டும்; இன்றேல் பாரதிக் கருத்துப்படி உலகத்தை அழிக்க வேண்டும்–செய்தோமா? உள்ளத்துணர்வைத் தூண்டி, உண்பதை மறைக்காதே, உதவி வாழ் என்பதைக் கற்றுத்தரும் அப்பாடல் வேண்டாமா? அவனவன் உண்டு வாழ்வது அவனவன் விதி என்பதை மாற்றிப் புது விதி வகுக்கச் சொன்ன அப்பாடல் வேண்டாமா? வீர மன்னன் சிவாஜியின் மொழியில் வைத்துப் பாரதி கூறும் சொற்சொற்கள், எல்லையில் சீனர் தரும் தொல்லைகளை ஓட்டப் பாடுபட்டுக்கொண்டு வரும் நமக்கு, நல்லுணர்வு ஊட்டுவனவாய் உள்ளன. சிவாஜியின் சொற்களை அப்படியே இன்று பயன்படுத்தின் சீனர்களது படையெடுப்புக்காகப் பாரதியே வந்து பாடியதைப் போல மிளிர்கின்றன அவை.

*"வானகம் அடக்க வந்திடும் அரக்கர்போல்*
*இந்நாள் படைகொணர்ந்து இன்னல் செய்கின்றார்"*

*"தாய்த்திரு நாட்டைத் தகர்த்திடும் மிலேச்சரை*
*மாய்த்திட விரும்பான் வாழ்வும் ஓர் வாழ்வு கொல்?"*

*"தாய் பிறன் கைபடச் சகிப்பவனாகி*
*நாயென வாழ்பவன் நமரில் இங்குளனோ?"*

– என்பனவும்,

*"ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர்*
*வாராது போலவந்த மாமணியைத் தோற்போமோ?"*

*"கண்ணினும் இனிய சுதந்திரம் போனபின்*
*கைகட்டிப் பிழைப்பாரோ?"*

*"இன்பச் சுதந்திரம் நின் இன்னருளால் பெற்றதன்றோ*
*அன்பற்ற மாக்கள் அதைப் பறித்தால் காவாயோ?"*

என்பன போன்ற பாடல்கள் சீனர்களுக்காக பாடப்பெற்றன போலப் புத்துருவம் பெற்று மிளிர்ந்து பாரத மக்களிடையே விழிப்பூட்டி எழுச்சியுறச் செய்வனவாகும். சீனர் படையெடுத்துள்ள இந்நேரத்தில் மக்களிடையே ஏற்றமிக்க எழுச்சியூட்டும் பாரதியின் பாடல் வேண்டாமா? வேண்டும் வேண்டும் வேண்டும். முக்காலும் (மூன்று முறை) வேண்டும் என்றுதான் உள்ளம் முரசறைகின்றது.

எனவே நாட்டு ஒற்றுமையைப் பேணுகின்ற – அறத்தின் சிறப்பை வற்புறுத்துகின்ற – கொள்கையிற் பிரிந்தவனை இகழாதே என்று ஆணை இடுகின்ற – உணவு கொடுத்துக் காத்துப் புதுவிதி படைக்கக் குரல் எழுப்புகின்ற – கண்ணீர் விட்டுக் காத்த சுதந்திரத்தைச் சீனரிடம் பறி கொடுக்காது காத்து நிற்குமாறு ஆணையிடுகின்ற பாரதியின் தேசியப் பாடல்கள் காலங்கடந்தவை அல்ல – அல்ல – அல்ல.

## பாரதி வலியுறுத்துவது?

ஒரு நாட்டு மக்கள் எத்தகைய நூல்களைப் போற்று கிறார்களோ அதைக் கொண்டே அந்த நாட்டின் எதிர் காலம் அமையும். ஒரு நாட்டின் நிலை மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் கருத்துப் புரட்சி இன்றியமையாதது. கருத்துப் புரட்சி மட்டும் இல்லையானால், அந்த நாட்டில் ஓடுகின்ற ஆற்றாலும், உயர்ந்தெழுந்து நிற்கின்ற மலைகளாலும், அங்குள்ள இயற்கை வளங்களாலும், அணைக்கட்டுகளாலும், பிறவற்றாலும் உரிய பயன் கிடைக்காது.

நமது தமிழ்மொழி இலக்கிய வளமும், நாகரிகமும் செறிந்து விளங்கும் மொழி. கருத்தாலும் காலத்தாலும் மிகமிக மூத்த மொழி. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே திருவள்ளுவர் பெரும் புரட்சி செய்ய நினைத்தார். அதற்காகவே திருக்குறளை எழுதினார்.

இந்த நாடு அந்நியர்க்கு அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில் பாரதி தோன்றினார். பாரதி அடிமையாகப் பிறந்தார். அடிமையாக வாழ்ந்தார். அடிமையாகத்தான் இறந்தார். ஆனால் அவர் விடுதலையைச் சிந்தித்தார் - விடுதலைக்காகப் பாடினார் - விடுதலையைப் பாடினார்.

உணவுக்காக நாம் உணவு சமைப்பதில்லை. உண்பதற்காக - உண்டு உயிர் வாழ்வதற்காகவே உணவு சமைக்கிறோம். அதுபோல பாரதியார் கவிதைக்காக - வெறும் கவிதையுணர்வுக்காகக் கவிதை பாடவில்லை. இந்த நாட்டு மக்கள் விடுதலை பெற வேண்டும் என்று விரும்பினார். அதற்காகவே - அந்த இலட்சியத்துடனேயே கவிதை செய்தார்.

கேள்வி கேட்டால் பாவம் - கேள்வி கேட்பது குற்றம் என்ற குறுகிய எல்லைக்குள் நாம் வாழ்ந்துவிட்டோம் - வளர்ந்து விட்டோம். எனவே இந்த நாடு கருத்து வழி

பாழ்பட்டது. இதைத்தான் பாரதி, 'பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசம் தன்னை' என்று பேசுகின்றார்.

பாரதி ஒரு முழு நிறைவான கவிஞர். அவர் சமுதாயத்தினை பல்வேறு கோணங்களிலும் பார்த்தார். சமுதாயத்தினை முழுமையாகப் பார்த்தார். பார்த்து விமரிசனம் செய்தார். அவரிடத்து எஞ்சியதோ மிஞ்சியதோ இல்லை. அவர் சமுதாயத்தைப் பற்றி எப்படிப் பேசினார் என்று பாராமல், அவர் சொன்னது நாட்டுக்கு ஏற்றதா என்பதைப்பற்றி எண்ணிப்பார்க்க வேண்டும்; கவனம் செலுத்தவேண்டும்.

வீடு என்கிறோம். வெறும் சுவரோ, ஜன்னலோ, அடித்தளமோ மட்டும் வீடாகி விடாதே. அடித்தளம், சுவர், ஜன்னல் அத்தனையும் சேர்ந்துதானே வீடு. அதுபோல், மனித சமுதாயத்தின் கோடானுகோடி உணர்ச்சி வடிவங் களைக் கவிஞன் கவிதையாக்க வேண்டும். அப்படிப் பாடுபவன்தான் உண்மையான கவிஞன்.

பாரதியார் கைகளை – கால்களை இயந்திர சாதனங்களை நம்பினார். எனினும் இவற்றிற்கெல்லாம் மேலாக விளங்கும் ஓர் ஈடிணையற்ற சக்தியும் உண்டு என்கிறார். இறைமைதான் மனிதனின் பரிபூரணத்துவ அமைப்பு. 'நேராக மானிடர் பிறரைக் கொல்ல நினையாமல் வாழவேண்டும்' என்று பேசுகிறார். இங்கு சற்று நுட்பமாகக் கவனிக்க வேண்டும். பிறரைக் கொல்லாமல்கூட அல்ல; கொல்ல நினையாமல் என்று கூறுகின்றார். 'உள்ளத்தால் உள்ளலும் தீது' என்ற வள்ளுவர் வாக்கைப் பாரதியார் இங்கு நமக்கு நினைவுறுத்தி உள்ளத்தாலும் ஒழுக்கமுடையனவாக வாழு என்று வலியுறுத்துகிறார். இதுதான் இறைமை.

இன்றைய சமுதாயம் நைந்து மடிந்தாலும் இனிவரும் தலைமுறையாவது நைந்து மடியாமல் இன்பவாழ்வு பெறுதல்

வேண்டும்; மலர்ச்சி பெற வேண்டும் என்று பாரதி விரும்பினார். இதுதான் மறுமலர்ச்சி.

'தேசீயம்' என்ற சொல்லே ஆழமான - அகலமான பொருள் பொதிந்த ஒரு வார்த்தை. ஓரூர் - ஒரு நாடு என்ற நிலையின்றி தானுண்டு, தன் வீடுண்டு என்றிருந்த நிலையை மாற்றி, நீ பெரிதல்ல - உமது வீடும் பெரிதல்ல; இந்த ஊரும் நாடுந்தான் உயர்ந்தன - பெரியன என்று உணர்த்தினார். அதுதான் தேசீயம்.

பாரதியாருக்கு முன்னே நமக்கு ஜில்லா உணர்ச்சி, ஜாதி உணர்ச்சி இப்படித்தானிருந்தது. பாரதி இந்நிலையை மாற்றி, இந்தியத் தேசியம்கூட அல்ல உலக தேசியத்தையே பாடியிருக்கிறார். மனிதன் வாழும் உரிமை பெற்றவன்; ஒருவரைச் சுரண்டாமல் அட்டைபோல உறிஞ்சாமல் அவன் மனிதனாகவே வாழ வேண்டும் என்றார் அவர். தேசியம் என்பதிலே, மறுமலர்ச்சியும், இறைமைத் தன்மையும் விரவிக் கலந்து கிடக்கின்றன.

நமது நாட்டில் இன்று இறைமைத் தன்மையின் பேரால் ஆடுகின்ற பேயாட்டம் மிகமிகக் கொடியதாக இருக்கின்றது. இங்கு இறைமைத் தோற்றமும் காட்சியும் இருக்கிறதே யொழிய இறையின் செயல் வாழ்வில் ஊடாடி வளர வில்லை.

இங்கு பழனி மலையிலே இறைவனைக் கோவணாண்டியாகத் துறவு கோலத்தில் காண்கின்றோம். இங்கு வருகிறோம். வாழ்த்துகிறோமே, வணங்குகிறோமே, அந்தத் துறவுக் கோலத்திலிருந்து நாம்பெற வேண்டிய எளிய வாழ்க்கையையும், தன்னல மின்மையையும் நமது வாழ்க்கையில் கலந்திருக்கின்றனவா? இறையின் செயல், தோற்றம் நமது வாழ்வில் கலந்திருக்கிறது என்றால், அந்த எளிய தோற்றமும், தன்னலமில்லாப் பண்பும் அல்லவா நமது வாழ்வில் கலந்திருக்க வேண்டும்.

இறைவன் கூலியாளாக வந்து பிட்டுக்கு மண் சுமந்தான் என்றால் அதைப் பிட்டுத் திருநாளாக்கி நெய்ப் பிட்டாக்கி அல்லவா மகிழ்ச்சியடைகின்றோம். மண் சுமந்ததை மறந்து விடுகிறோமே. இறைவனின் செயல் தோற்றம் நம் வாழ்க்கையில் கலந்திருக்கிறதென்றால், இறைவனே வந்து மண் சுமக்கிறான் கொஞ்சம் பிட்டைக் கூலியாகப் பெற்றுக் கொண்டு என்ற வரலாற்றை வைத்துக்கொண்டு, உழைப்பில் இழிவில்லை; எல்லோரும் உழைக்க வேண்டும். பதிலாகத் தேவையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற பண்பியல்பல்லவா வளர்ந்திருக்க வேண்டும். வளர்ந்திருக்கிறதா?

பாரதியார் தேசிய கீதம் பாடினார். மறுமலர்ச்சி பாடினார் - இறைமையைப் பாடினார். நம்மைப் பொறுத்த வரை இம்மூன்றுக்கும் அப்படியொன்றும் அதிகப்படியான வேறுபாடு இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. தேசியம் - நிலம் - மறுமலர்ச்சி - செயற்பாடு - பயன் - இறைமைத் தன்மை எனவே எல்லாம் ஒரே வட்டம்தான். இதை முறையாகச் சொன்னவர் பாரதியார்.

## பாரதி அமைத்த பாலம்

பழமையிலுள்ள உயிர்ச் சத்தான கருத்துக்களை வாழ்க்கைக்கு உறுதி பயக்கும் கருத்துக்களை - நலன் விளைவிக்கும் கருத்துக்களைப் பாரதி மறுக்கவில்லை - ஏற்றுக்கொள்ளத் தயங்கவில்லை. தந்தை தோண்டிய கிணறு நல்ல கிணறாக இருந்தால் புதிய கிணறு தேவையில்லை என்பது பாரதியாரின் கருத்து.

மனிதன் நாளுக்குநாள் பண்பாட்டால் - நாகரிகத்தால் வளர்கிறான் - வளரவேண்டும். அதுதான் நியதி முறை. வளர வேண்டிய மனிதன் உழைக்கவில்லையானால், சிந்திக்க வில்லையானால், அவனுடைய உடலும் வளராது -

உள்ளமும் வளராது. நீண்ட நெடுநாட்களுக்குப் புகழோடு வாழவும் முடியாது. மனிதன் வளர்கிறான் என்றால் அவன் சிந்திக்கிறான் என்று பொருள்.

தாயைவிடப் பிள்ளை சிறந்ததாக இருப்பது தாய்க்குப் பெருமை - தந்தையின் சிந்தனையைவிட மகனின் சிந்தனை சிறந்ததாக இருப்பது தந்தைக்குப் பெருமை. இந்த வளர்ச்சியில் தவறேதுமில்லை இதைத்தான்,

> *"தம்மின் தம் மக்கள் அறிவுடைமை-மாநிலத்து*
> *மன்னுயிர்க் கெல்லாம் இனிது"*

என்றார் வள்ளுவப் பெருந்தகை. வள்ளுவரும், கம்பரும் இளங்கோவும் இலக்கிய உலகில் பாரதிக்குத் தந்தையராக விளங்குகின்றனர். எனினும் அவர்களைக் காட்டிலும் சில இடங்களில் பாரதி மேலோங்கி நின்றார் என்பதை நாம் ஏற்கத் தயங்கக் கூடாது. ஆங்கில இலக்கிய மேதை ஜார்ஜ் பெர்னாட்ஷா உலக நாடகப் பேராசிரியரான ஷேக்ஸ் பியரையும்விட, தான் வளர்ந்திருப்பதாக ஒரு சமயம் தன்னைப் புகழ்ந்து எழுதியிருந்தார். இதையொட்டி அவருக்கு எதிர்ப்புத்தோன்றியது. அதற்குப் பெர்னாட்ஷா, 'ஷேக்ஸ்பியர் தரை மட்டத்தில் நின்று கொண்டார் - நான் அவர் தோள்மீது ஏறி நின்று கொண்டு தொடுகிறேன்' என்று அழகாக - சுருக்கமாக ஆனால் தெளிவாகப் பதில் கூறினார். முதல் சால் உழும்போது ஏற்படுகின்ற புழுதியைவிட இரண்டாவது சால் உழும்போதுதானே அதிகப் புழுதி ஏற்படுகிறது.

பாரதி, பண்டை கருத்துவழி நின்றே புதுமையைக் கண்டார். பழமை, காலத்திற்கேற்ப - கருத்து வளர்ச்சிக்கேற்ப மாறி வளர்ந்துதான் புதுமையாகிறது. ஒன்று பண்டைக் காலத்தில் தோன்றியது என்பதாலேயே அது பழமையாகி விடாது. இன்று முளைத்தது என்பதாலேயே ஒன்று புதுமையாகி விடாது. பழமைக்கும் புதுமைக்கும் காலம்

அளவுகோல் அல்ல. ஒரு கருத்து காலத்தால் மிக மூத்ததாக, பழமையானதாக இருந்தாலும் இன்றைய வாழ்க்கைக்கு உதவுவதாக - ஏற்புடையதாக இருக்குமானால் அதைப் புதுமையானதாகவே எண்ணிப் போற்ற வேண்டும்; ஒரு கருத்து நேற்று முளைத்ததாக இருந்தாலும், இன்றே தோன்றியதாக இருந்தாலும் வாழ்வியலுக்கு ஒத்ததாக – உறுதி பயப்பதாக – நலன் விளைவிப்பதாக இல்லையானால் அதைப் பழையது என்று கருதி ஒதுக்கித் தள்ளத்தான் வேண்டும்.

மேலை நாட்டினர் நம்மைக் காட்டிலும் பலதுறையிலும் முன்னேறியிருக்கிறார்கள் - வளர்ந்திருக்கிறார்கள் - போற்றும் புதுமை பல கண்டிருக்கிறார்கள். ஆம். அவர்கள் புதுமையைப் போற்றுகிறார்கள். எனினும் பழமையைத் தூற்றிக் கொண்டே காலங் கழிக்கவில்லை. புதுமை கண்டு பிடிக்க முயல்கிறார்கள் - புதுமை வளர ஆக்கங் கொடுக்கிறார்கள் – புதுமை புதுமையெனப் புதுமை வேட்கை கொண்டு முன்னேறுகிறார்கள். இங்கோ, புதுமையை ஏற்பவர்கள், புதுமை வேட்கைக் கொண்டவர்கள். புதுமையைப் படைப்பதில் ஆர்வமும் அக்கறையும் காட்டு வதில்லை. பழமையை இழித்தும் பழித்தும் பேசிக் கொண்டே காலங் கடத்துகிறார்கள். பாரதியார் பழமையைப் போற்றினார். பழமையில் நின்று கொண்டு புதுமையைப் படைத்தார். இன்னும் சொல்லப்போனால், பாரதி பழமைக்கும் புதுமைக்கும் ஓர் இணைப்புப் பாலத்தை உருவாக்கினார் என்றே கூறலாம். சாளரத்தின் வழியாகப் புதிய காற்று வந்தால் அதனால் தீமை விளைவதில்லை. சமுதாயத்தில் சுயநலத்தின் காரணமாக – தங்கள் சுகபோக வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படும் என்ற அச்சத்தால் சிலருக்கு இந்தப் புதிய காற்று பிடிப்பதில்லை. அது அவர்கள் குற்றமேயொழிய காற்றின் குற்றமல்ல. தேவையற்ற பழையன

கழிதலும், பயன் விளைவிக்கும் புதியன புகுதலும் இயல்புதான். இதனையே,

*'பழையன கழிதலும் புதியன புகுதலும்*
*வழுவல கால வகையி னானே'*

என்று நன்னூல் பாடல் ஒன்று பேசுகிறது.

பொதுவாகப் பழைமையை விட்டுவிட்ட புதுமையும் வாழாது. புதுமையைத் தன்னுள் ஏற்றுக்கொள்ளாத பழமையும் வாழாது. அன்ன சத்திரம் ஆயிரம் கட்டல்; ஆலயம் பதினாயிரம் நாட்டல்; முதலியனவற்றைவிட 'ஏழை ஒருவனுக்கு எழுத்தறிவித்தல் சிறந்தது' என்றார் பாரதி; இதனால் பாரதி கோயில் வேண்டாம் என்று சொல்லி விட்டார் என்று கூறிவிட முடியுமா? கோயில் இருந்து, காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் பக்தர்கள் இல்லை யானால் கோயிலால் என்ன பயன்? கோயில் வேண்டும். தொழுது தூமலர் தூவி அழுது ஆற்றும் அடியவர்களும் வேண்டும்.

இங்கு உழைக்காமல் - பரம்பரைச் சொத்தைக் கொண்டு உல்லாசமாக வாழ்பவனுக்குத்தான் சமுதாயத்தில் பாராட்டும் மதிப்பும் இருந்தது. இந்த இழி நிலையை ஒழிக்க வேண்டும் என்று பாரதி விரும்பினார். எனவே,

*'உழவுக்கும் தொழிலுக்கும்*
*வந்தனை செய்வோம்–வீணில்*
*உண்டுகளித் திருப்போரை*
*நிந்தனை செய்வோம்'*

என்று பாடினார். உழைத்துச் சொத்து சேர்ப்பவனையே பாரதி பாராட்டுகிறார். உழைக்காமல் உண்டு, உறங்கி உல்லாச வாழ்வு வாழ்கிறவர்களை நிந்தனை செய்வோம் என்று பேசினார்.

ரு.VI.14.

கங்கையையும் காவிரியையும் இணைத்துப் பாடினார். பாரதியார். இதன் மூலம் வணிகத் தொடர்புபற்றிப் பேசுகிறார். காசி நகர்ப் புலவர் பேசும் உரையைக் காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவி செய்வோம் என்பதன் மூலம் வளர்ந்து வரும் விஞ்ஞானப் புதுமையைக் கையேந்தி வரவேற்றார். சாதி மத இன வேறுபாடுகளையெல்லாம் தகர்த்தெறிந்து, “பாரதநாடு, பாருக்கெல்லாம் திலகம்; நீரதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர்” என்று பாடியதின் மூலம் தேசிய ஒருமைப் பாட்டுணர்வை வலியுறுத்தினார். பழம் நாகரிகத்தை - பண்பாட்டை அடித்தளமாக வைத்துக் கொண்டு, போற்றுதற்குரிய புதுமைகளைப் பாடினார் - எனவே புதுமைக் கவிஞர் பாரதி, புதுமையோடு புதுமையை இணைத்து - ஒட்டிப் பாடினார் என்று கூறுவதே சரியானது.

## பாரதி காட்டும் வழி

பாரதியார் ஒரு மகாகவி. தமது உணர்ச்சியை வெளிப்படுத்துவதில் பேராற்றல் படைத்தவர். அவர் உள்ளத்தில் உள்ள உண்மை ஒளியே கவிதையாக மலர்கின்றது. அவர் பாடல்கள் தமிழர்களுக்குப் புத்துணர்ச்சியைக் கொடுத்தன; கொடுத்துக் கொண்டிருக்கின்றன. தேசப்பற்றையும், தெய்வப் பற்றையும், கவிதை இன்பத்தையும் ஊட்டுகின்ற கவிஞர் அவர். பாரதியார் சிறந்த கவிதைத் தச்சர். ஒப்பற்ற சீர்திருத்தச் சிற்பி, அழுத்தமான தெய்வ பக்தர். வாய்மையும் நேர்மையும் பொருந்திய சமுதாயத்தின் வழிகாட்டி. சமுதாயத்தை வளப்படுத்த வந்த மாபெரும் தலைவராகிய பாரதியார் தலைவர்களாக உள்ளவர்களுக்கும் நல்ல வழிகாட்டுகிறார்.

பாரதத் தாயின் அடிமை நிலையினை அகற்ற முயன்ற முன்னையோரில் முதல்வர் தாதாபாய் நவுரோஜி. அறிவும், திறனும், அன்பும் உறுதியும் படைத்த வீரத் தலைவர் அவர். விற்போரில் வெற்றி கொள்ள நினைப்பது பயனற்றது எனக்

கருதிச் சொற்போரால் தொண்டாற்றியவர். எல்லாவற்றிக்கும் மேலாக சீர்மை பொருந்திய ஒரு பண்பை அணிகலனாகக் கொண்டவர். அது என்னவென்றால் தன்னலமின்றி என்றும் பிறர் நன்மைக்கென்றே அரும்பாடு பட்ட பற்றற்ற துறவியாய் வாழ்ந்தமையே. அவற்றையெல்லாம் கண்ட பாரதியார் மனமார வாய் நிறைய வாழ்த்துகிறார். அந்தக் கவிதையைப் பார்ப்போம்:-

"கல்வியைப்போல் அறிவும், அறிவினைப்போலக்
கருணையும் அக்கருணையைப் போலப்
பல்வித ஊக் கங்கள் செயும் திறனும்
ஒரு நிகரின்றிப் படைத்த வீரன்
வில்விறலாற் போற் செய்தல் பயனிலதாம்
என அதனை வெறுத்தே உண்மைச்
சொல்விறலாற் போர் செய்வோன்;
பிறர்க்கன்று தனக்குழையாத் துறவி யாவோன்"

இதன் மூலம் தலைவர்களுக்குக் கல்வியும், அறிவும், கருணையும், ஊக்கமும், தீர்க்காலோசனையும், தன்னலத் துறவும் எவ்வளவு அவசியம் என்பதைப் பாரதியார் உணர்த்துகிறார். தமிழ் இலக்கியங்களிலெல்லாம் மிகச் சிறந்த பண்பாடாகப் பேசப்படுகின்ற தன்னலத்துறவு அறிந்தின் புறத்தக்கது.

"தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே"

இவ்வுலகம் உண்டென்று கூறுகிறது புறநானூறு. **"தனக் கென்று ஒன்றானும் உள்ளான், பிறர்க்கே உறுதிக்கு உழந்தான்"** என்பது குண்டலகேசி. **"தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்"** என்பது அகநானூறு. **"பிறர்க்கற முயலும் பெரியோய்"** என்பது மணிமேகலை. பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வழி காட்டும் தலைவனுக்கு இந்தத் தன்னலமறுக்கும் பண்பு

அமையாதிருக்குமானால் அவன் தலைமை நல்ல பயனை விளைவிக்காது; அவனது தலைமையும் மக்கள் சக்தியால் மாற்றப்பட்டு விடும். எத்தனையோ பேரரசுகள் மறைந் தொழிந்தமையே இந்த உண்மையை நன்கு எடுத்துக் காட்டும். மகாகவி பாரதியின் இந்தத் தன்னல மறுப்பு உபதேசம் அரசியல் தலைவர்களுக்கு மட்டுமல்ல, சமுதாயம், சமயம், அறநிலையங்கள் முதலியவற்றின் தலைவர்களுக்கும் சிறந்த வழிகாட்டியாக அமைகின்றது. துறவியினுடைய இலட்சணம் இவ்வுலகப் பொருள்களிடத்துப் பற்றின்றி வாழ்வதேயாம். ஆனால் தன்னைச் சார்ந்துள்ள – தன் நாட்டிலுள்ள மக்களை மறத்தல் அல்ல. அறிவும், ஒழுக்கமும், அன்பும், நம்பிக்கையும் கொண்டு மக்கள் நலம்பெற வாழ வழிகாட்டிப் பணி செய்வதையே கடமையெனக் கொண்டவர் துறவிகள் என்பது கதே என்ற தத்துவ ஞானியின் அறிவுரை. "ஞானிகள் முயல வேண்டுவது உலகத்தை வெறுக்கவன்று; உலகத்தை அறியவேயாகும்" என்பது அவர் மொழி. ஈண்டு உலகம் என்பது மக்களையே குறிக்கின்றது. உலக மக்களின் நிலையறிந்து, தேவையறிந்து அவர்கள் வளர வேண்டுவன செய்யக் கடமை பட்டிருக்கிறான் உண்மையான துறவி. அதையே பாரதி **"பிறர்க்கன்றி தனக்குழையாத் துறவியாவேன்"** என்று சொல்லி விளக்குகின்றார். இத்தகைய துறவிகள் இந்த நாட்டிலே பெருகுவார்களானால் இம்மண்ணுலகமே விண்ணுலகமாய் மாறிவிடும்.

சில இடங்களில் பாரதியார் ஆண்டவனை நோக்கிச் செய்யும் தமது பிரார்த்தனையின் மூலம் தலைவர்களுக்குச் சிறந்த வழியைப் புகட்டுகிறார். பாரதியார் தமது சுய சரிதையைப் பாடி முடித்தபின்பு இறுதியாகப் பரம் பொருளிடம் ஒருசில வேண்டுகிறார். அவற்றைப் பார்ப்போம்.

*"அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி, அகத்திலே*
*அன்பினோர் வெள்ளம்,*
*பொறிகளின் மீது தனியரசாணை, பொழுதெல்லாம்*
*நினது பேரருளின்*

*நெறியிலே நாட்டம், கருமயோகத்தில் நிலைத்திடல்,*
*என்றிவை அருளாய்;*
*குறி குணம் ஏதும் இல்லாதாய் அனைத்தாய்க் குலவிடு*
*தனிப்பரம் பொருளே"*

கலக்கமற்ற அறிவு, சபலமற்ற நெஞ்சு, அன்பு நிறைந்த உள்ளம், பொறிகளை அடக்கியாளும் ஆற்றல், இறைவன் திருவருள் நெறியினை மறவாத நோக்கம், இடையறாப் பணியில் ஈடுபாடு இவற்றையெல்லாம் ஆண்டவனே எனக்கு அருள்வாய் என்று வேண்டுகிறார் பாரதி. அதாவது இவையெல்லாம் ஒரு தலைவனுக்கு இன்றியமையாது வேண்டப்படுபவை என்று அறிவுறுத்துகிறார். நவயுலகத் தலைவர் பாரதி. இன்னும் ஒரு தலைவனுக்கு வேண்டிய ஒரு குணத்தையும் வெளிப்படுத்துகிறார். அது பகைமை உணர்ச்சி யாகும். ஒரு தலைவன் எதைப் பகைக்க வேண்டும் என்பதை மாஜினியின் மூலமாக உணர்த்துகிறார்.

*தீயன புரிதல், முறைதவிர் உடைமை,*
*செம்மைதீர் அரசியல், அநீதி*
*ஆயவற்றுள் என்னெஞ்சு இயற்கையின்*
*எய்தும் அரும்பகை"*

தீமையையும், அநியாய உடைமையையும், கொடுங் கோலையும் அநீதியையும் கண்டால் ஓர் உண்மைத் தலைவனை இயல்பாகவே அதன்மீது கோபங்கொண்டு அதை அழிக்கக் கொதித்து எழுவான் என்ற உண்மையையும் நன்கு வெளிப்படுத்துகிறார் பாரதி. மேலும் மனித

உள்ளத்திலே பெரும்பாலாகத் தோய்ந்து கிடக்கும் சில தீமைகள் ஒழிய வேண்டும் என்றும் வேண்டுகிறார்.

*மதிமூடும் பொய்மையிருளெல்லாம்–எனை*
*முற்றும் விட்டகல வேண்டும்;*
*ஐயம்தீர்ந்து விடல் வேண்டும்–புலை*
*அச்சம் போயொழிதல் வேண்டும்"*

என்று சொல்லி, **"உன்னைக் கோடி முறை தொழுதேன். இனி வையத்தலைமை எனக் கருள்வாய்"** என்று வேண்டுகிறார். **"அச்சம் கீழ் மக்களது ஆசாரம்"** என்று வள்ளுவர் பேசுகிறார். அச்சமும், சந்தேகமும் அதாவது நம்பிக்கையின்மையும் தலைவனைத் தலைமைப் பதவிக்குத் தகுதியற்றவனாக ஆக்கிவிடுகின்றன என்பதை வையத்தலைமையை வேண்டும் பாரதி நன்றாக விளக்குகிறார்.

எந்த ஒரு விஷயத்தையும் பரபரப்பின்றி வரவரக் கண்டு, ஆராய்ந்து பார்த்து முடிவு செய்ய வேண்டியது தலைவர்களுக்கு இன்றியமையாது வேண்டப்படுகின்ற பண்பு. இந்தப் பண்பாட்டைப் பாரதி பாஞ்சாலி சபதத்தில் அர்ஜுனன் மூலமாக உணர்த்துகிறார். சூதாட்டத்திலே தருமன் பாஞ்சாலியை வைத்துத் தோற்றுவிட்டான். பீமன் கொதித்தெழுகின்றான். மூத்தவன் என்ற மரபையும் மறந்து கடுஞ்சொற்களைக் கொட்டுகிறான். அச்சமயத்திலே அர்ஜுனன் பீமனைத் தடுத்து நிறுத்தி சினமான தீயறிவினால் அடாத வார்த்தைகளைச் சொல்லாதே என்று அமைதிப்படுத்தி பின்னர் அறம் பேசுகிறான். அறம் சொல்லுவதோடு அர்ஜுனன் நிற்கவில்லை. நியதி தத்துவத்தையும் உணர்த்துகிறான்.

***"தருமத்தின் வாழ்வதனைச் சூதுகவ்வும்;***
***தருமம் மறுபடி வெல்லும்"***

என்ற அழியாத உண்மையை அறிவுறுத்துகிறான். தருமத்திற்கு மாறானவை அப்போதைக்குத் தலைதூக்கி நின்றாலும் அது வெற்றியாக மாட்டாது என்பதைத் தலைவர்கள் நன்கு உணர்ந்து செயலாற்ற வேண்டும். சகிப்புத் தன்மையே சாசுவத வெற்றிக்கு அடிப்படை என்ற எண்ணம் அர்ஜுன னுக்கு. ஆயினும் அவனது வீரவுணர்வும் தன்னம்பிக்கையும் மாய்ந்து விடவில்லை. பாடலைப் பார்ப்போம்.

"தருமத்தின் வாழ்வதனைச் சூதுகவ்வும்; தருமம்
 மறுபடி வெல்லும்" எனுமியற்கை
மருமத்தை நம்மாலே உலகம் கற்கும் வழிதேடி விதி
 இந்தச் செய்கை செய்தான்
கருமத்தை மேன்மேலுங் காண்போம் இன்று
 கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம்மாறும்
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்,
 தனுவுண்டு காண்டீபம் அதன் பெயர்"

என்கின்றான். தரும நம்பிக்கையும், அத்தோடு தன்னம்பிக் கையும் தலைவர்களுக்கு எவ்வளவு அவசியம் என்பதை வையத் தலைவன் பாரதி நன்றாக எடுத்துக்காட்டுகிறான் இல்லையா? காந்திய உணர்விலே ஊறிய பாரதி தலைவர் களுக்குச் சொல்லும், செயலும் ஒன்றாக இருக்க வேண்டும்; கொள்கை வேறு வாழ்க்கை வேறு என்று இருக்கக் கூடாது; அப்படி மாறுபட்டிருப்பவர்கள் சமுதாயத் துரோகிகள் என்று வசனத்தில் எழுதுகிறார். நிலையான வெற்றி வேண்டில் அறமான செயல் வேண்டும் என்பது பாரதி காட்டும்வழி. "ஜெயம் நிலையாக செய்வதற்கு அறமே சிறந்ததோர் மார்க்கம்" என்று மாஜினியின் மூலம் நமக்கு எடுத்து விளக்குகிறார். மேலும் மாஜினியின் மூலம் பூரணத் தியாகத்திற்குத் தயாராக இருப்பவனே தலைவனாவான் என்பதை,

"என்னுடன் ஒத்த தருமத்தை யேற்றார்
இயைந்த இவ்வாலிபர் சபைக்கே
தன்னுடல் பொருளும், ஆவியுமெல்லாம்
தத்தமாய் வழங்கினேன்"

என்று நமக்கெல்லாம் அறிவுறுத்துகிறார். ஒரு தலைவன் சர்வாதிகார மனப்பான்மையின்றித் தன்னுடன் உழைப்போர் மனமறிந்து ஒற்றுமைப்பட்டு தான் என்றும் ஊழியனே என்ற பணியுணர்ச்சியோடு பணி செய்ய வேண்டும். அயர்ச்சி தளர்ச்சியுமற்றவனாய் அப்பணியின்றி, வேறெந்தத் தொழிலிலும் ஈடுபடா ஏகாக்கிரக சித்தமுடையவனாக நிற்க வேண்டும். அதில் எவ்வாறாலும் தவற மாட்டேன் என்ற சங்கல்பத்தைத் திரிகரண சுத்தியுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த இலட்சிய வெறியைப் பின்வரும் இரண்டு பாடல்கள் மூலம் பாரதி காட்டுகிறார்.

"இவருடன் யானுமிணங்கியே யென்றும்
இது அலாற் பிறதொழில் இலனாய்த்
தவற்று முயற்சி செய்திடக் கடவேன்
சந்ததமும் சொல்லினால் எழுத்தால்,
அவமற செய்கை யதனினால்
இயலும் அளவெலாம், எம்மவரிந்த
நலமுறு சபையினொரு பெருங்கருத்தை
நன்கிதன் அறிந்திடப் புரிவேன்"

"இன்றும், எந்நாளும் இவை செய்யத்
தவறேன் மெய்யிது, மெய்யிது, இவற்றை
என்றுமே தவறிழைப்பனேல் என்னை
ஈசனார் நாசமே புரிக,
அன்றியும் மக்கள் வெறுத்தெனை யிகழ்க
அசத்தியப் பாதகஞ் சூழ்க
நின்ற தீயெழுவாய் நரகத்தின் வீழ்ந்து
நித்தம் யான் உழலுக மன்னோ"

இவை ஏதோ மாஜினி எடுத்துக்கொண்ட பிரதிக்ஞை யையுமே அறிவிக்கும் சாதாரண ஒரு செய்தியல்ல; பாரதியும் வெறும் பத்திரிகை நிருபர் அல்ல. ஆனால் மக்களைத் தலைமை தாங்கி இட்டுச் செல்லும் தலைவர்களுக்கு இருக்க வேண்டிய குணங்களையும் அவர்கள் கொள்ள வேண்டிய பிரதிக்ஞையையுமே இதன் மூலம் செம்மையாக அறிவுறுத்து கிறார். கடமை தவறிய தலைவர்கள் ஆண்டவனுடைய கோபத்திற்கும் பொது மக்களின் இகழ்ச்சிக்கும் தவிர்க்க முடியாத பல தண்டனைகளுக்கும் ஆளாவர் என்பதைச் சுட்டிக்காட்டி கடமையாற்றும் நெறியிலே தலைவர்களுக்கு நல்ல வழி காட்டுகிறார் பாரதி.

மக்களை மக்களாகக் கருதவேண்டும்; அவர்களின் உணர்ச்சியையும், உரிமையையும் மதிக்க வேண்டும்.

*"நாட்டு மாந்தர் எல்லாம்—தம்போல்*
*நரர்களென்று கருதார்*
*ஆட்டு மந்தையாம் என்று—உலகை*
*அரசர் எண்ணிவிட்டார்"*

என்று சர்வ சுதந்திரப் போக்கைக் கண்டிக்கின்றார், பாரதி. அத்துடன் அமைதியில்லை பாரதிக்கு. ஆம், பார்க்குமிடம் எங்கணும் நீக்கமற அப் பரனையே தரிசிக்கும் பண்பாளன் பாரதி. அதனால் உயிர்கள் அனைத்தும் கடவுளின் உருவம். கடவுளின் பிள்ளைகள் என்று மதித்துப் பரிவுடன் ஏன் பக்தியுடனே பணிபுரிய வேண்டும் என்று கூறுகிறார். வெறும் அறவுரைக்காகக் கூறுவதைவிட அங்ஙனம் வாழ்ந்து சிறந்த தலைவர் ஒருவரை உதாரணமாகக் காட்டுவதே நலமெனத் தெளிந்து காந்தியடிகளை நம் மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார். பாட்டைப் பார்ப்போம்.

***"மன்னுயிர் எல்லாம் கடவுளின் வடிவம்***
***கடவுளின் மக்கள் என்று உணர்தல்***

*இன்னமெய்ஞ் ஞானத் துணிவினை, மற்றாங்கு*
*இழிபடு போர், கொலை, தண்டம்*
*பின்னியே கிடக்கும் அரசியல் அதனில்*
*பிணைத்திடத் துணிந்தனை பெருமான்."*

காந்தியடிகளின் பண்பாட்டையும் சீலத்தையும் பாடிப் பரவுவதன் மூலம் தலைவர்களுக்கு வேண்டிய குணங் களையும் ஒழுக்கத்தையும் நன்கு புலப்படுத்தி விட்டார்.

இறுதியாகத் தலைவர்களுக்கு இருக்க வேண்டிய மேலான ஒரு குணத்தைக் காட்டுகிறார் பாரதி. அதாவது தானே தலைவன் என்றெண்ணி இறுமாந்து நிலை தடுமாறிப் போகக்கூடாது. தலைவர் தலைவனாக ஆண்டவன் ஒருவன் என்றுமுள்ளான் என்பதை மறக்காமல் நடக்க வேண்டும் என்றெல்லாம் எச்சரிக்கிறார் - வழி காட்டுகிறார் பாரதி.

ஒரு தலைவன் என்றும் எப்பொழுதும் கடவுளை மறவா உள்ளத்தனாயிருக்க வேண்டும் என்பதை எத்தனையோ இடங்களில் சுட்டிக் கொண்டே போகிறார் பாரதி. மாஜினியின் உறுதிமொழியை "பேரருள் கடவுட் திருவடி ஆணை" என்றே பாரதி தொடங்குகிறார். "ஈசன் இங்கு எனக்கும் என்னுடன் பிறந்தோர் யாவர்க்கும் இயற்கையில் அளித்த தேசம்" என்று நினைவூட்டுகிறார். உறுதி தவறினால் "ஈசன் எனக்கு நாசமே புரிக" என்று முடிவு கட்டுகிறார்.

பரிபூரண சுதந்திரப் பிரியரான பாரதி அடிமை நிலையை எவ்வளவு வெறுத்தார் என்பதை நாம் நன்கறிவோம். அதனால்தான் "பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்" என்று வீறு கொண்டெழுகிறார். ஆனால் அப்படிச் சொன்ன வாயை மூடாமலே தொடர்ந்து "பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்" என்று பூரிப்புடன் முடிக்கிறார். அன்னியர்க்கடிமை செய்வது தாழ்வையளிக்கும் என்றால், ஆண்டவனுக்கு அடிமை

செய்வது, வாழ்வை அருளும் என்று எவ்வளவு அருமையாகக் குறிப்பிடுகின்றார் பார்த்தீர்களா? இங்ஙனம் தலைவனுக்கு வேண்டிய பிற குணங்களுக்கெல்லாம் மணிமுடியாகக் கடவுட்பற்றைக் கூறி நமக்கெல்லாம் நல்ல வழி காட்டுகிறார் வையத் தலைவர் மகா கவி பாரதி.

## அன்றாட வாழ்வில் அச்சமின்மை

அச்சமே கீழ்களது ஆசாரம். அன்றாட வாழ்வில் அஞ்சி அஞ்சிச் சாகின்றவர் பலர். அச்சம் உடையவர்கள், வாழ்க்கையில் முன்னேற மாட்டார்கள். பயனும் இல்லை. அச்சத்தின் காரணமாகவே வாழ்க்கையை, செல்வத்தை, நட்பை இழந்து அல்லற்படுகிறவர்கள் பலர்.

அச்சம் ஆட்கொள்ளும் வாயில்கள் என்னென்ன? சுறுசுறுப்பாக இல்லாமல் சோம்பிக் கிடத்தல், இடர்ப்பாடுகளைச் சந்திக்க அஞ்சுதல், விமர்சனத்திற்குக் கூச்சப்படுதல், மரணத்திற்குப் பயப்படுதல், நாளை என்ன நடக்குமோ என்று ஐயுறுதல், நண்பர்களின் நடத்தையில் ஐயுறுதல் ஆகியன குறிப்பிடத்தக்க வாயில்கள்!

யாதொரு பணியுமின்றி வறிதே சோம்பிக் கிடப்ப வர்களை அச்சம் ஆட்கொள்ளும். அச்சப்படுவோரின் வாழ்க்கை முரண்பட்ட நிலையினது. அவர்கள் செயல் செய்ய அச்சப்படுவர்; ஆனால், சுகமாக வாழவேண்டும் என்று ஆசைப்படுவர்.

இந்த முரண்பட்ட நிலையில் செல்வம் வருவதற்குரிய வாயிலாகிய உழைப்பாற்றல் வற்றிப்போகிறது. அதனால், அடுத்த வேளை சோறு கிடைக்குமா? பிழைப்பு நடக்குமா? என்ற அச்சம் ஆட்கொண்டு விடுகிறது. சோம்பலின் காரணமாகப் பிறக்கும் அச்சம், வாழ்க்கை முழுவதையும் கெடுக்கும். இதனை, அறவே தவிர்த்திட வேண்டும்.

ஒவ்வொரு வினாடியையும் கணக்கிட்டுக் காரியங்கள் செய்தல் வேண்டும்; பொருளை ஈட்ட வேண்டும்; வாழ் வாங்கு வாழ வேண்டும். உழைப்புக்கு அஞ்சக்கூடாது. கடின உழைப்புக்கும் அஞ்சக்கூடாது. உழைப்புக் களத்தில் தோன்றும் இடர்ப்பாடுகள் அனைத்தும் பயன் தருவனவே! படிப்பினைகளே! அஞ்சற்க!

வாழ்க்கையை விளக்கமுறச் செய்து வளர்ப்பதில் விமர்சனமும் ஒன்று. தற்பெருமை யுடையவர்கள் விமர்சனத்தைக் கண்டு அஞ்சுவார்கள். விமர்சனத்திற்கு அஞ்சுகிற அச்சம், அறியாமையை வளர்க்கும்; ஆற்றலைக் கெடுக்கும்; வளர்ச்சியைத் தடுக்கும்.

இன்று, பலர், விமர்சனத்திற்கு அஞ்சுகின்றனர். அதனால், காரியங்கள் பாழ்படுகின்றன. மிகப்பெரிய சமுதாய மையங்களில் இருப்போர், விமர்சனத்திற்கு அஞ்சுவதாலேயே சமுதாயத் தவறுகள் பல இன்று நிகழ்கின்றன. ஆதலால், விமர்சனங்கள் தவிர்க்க முடியாதன.

விமர்சனத்தில் ஏற்பன ஏற்றுச் செயற்படுத்துதல் நம்முடைய பொறுப்பு. இதில் அச்சத்திற்கு என்ன வேலை? செவி கைப்பச் சொன்னாலும் அச்சமின்றிக் கேட்டிடுக! திருத்தம் காண்க! ஏற்புழி ஏற்று இயங்குக!

பிறந்த அன்றே சாவும் உறுதி செய்யப்பெற்ற ஒன்று. ஆதலால், சாவு இயற்கை! ஏற்க வேண்டிய ஒன்றே! சாவிற்கு அஞ்சுவானேன்? அஞ்சுவதால் சாவைத் தவிர்த்திட முடியுமா? சாவைவிடக் கொடியது சாவைப்பற்றி அஞ்சுவது! சாவைப் பற்றி அஞ்சுவதால் வாழ்ந்து கொண்டிருக்கிற பொழுதுகளும்கூட, வாழ்வாக இல்லாமல் - பயன்பாடு இல்லாமல் போய்விடுகிறது! சாவு வரட்டும்! அஞ்சற்க! இன்றைய பொழுதில் நன்றாக வாழ்ந்திடுக!

சிலருக்கு, இன்றைய வாழ்க்கையில் கவலையில்லை! நாளைய வாழ்க்கையைப் பற்றியே கவலை! "நாளை" என்பது

இன்றைய நாளின் தொடர்ச்சி! இன்றைய நிகழ்காலம் எப்படிக் கழிக்கப்படுகிறதோ அதைப்போலத்தான் நாளை அமையும்! நாளை நிகழக் கூடிய ஒன்றை, இன்றே நினைந்து கவலைப்படுவதால் - அந்தத் துன்பத்தைத் தவிர்த்துக் கொள்ள முடியுமென்றால், அச்சப்படுவது - கவலைப்படுவது தவறில்லை.

அச்சமும் கவலையும் காரியக்கேடு செய்வன! அச்சத்தால் இன்றைய கவலையே நாளைக்கும் தொடரும்; வேறொன்றும் நிகழ்ந்து விடாது. ஆதலால் நாளை வரப் போவதை எண்ணி இன்றே அஞ்சி அழுவானேன்? நடப்பது நடக்கட்டும் என்று இன்றைய வாழ்க்கையைத் துணிவுடன் நடத்துங்கள்.

இந்தத் துணிவு நாளைய வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களைச் சந்திக்கவும் துணை செய்யும்! நாளை எதிர்பார்த்த கேடும் வராமலேயே போய் விடும்.

வாழ்க்கை, இன்பமாக அமையத் துணை செய்யும் உறுப்புகளில் நட்பும் ஒன்று. நண்பராதல் எளிதன்று. நட்பைத் தேர்ந்து தெளிந்து கொண்ட பின்பு, அவர்கள் மாட்டு ஐயம் கொள்ளக் கூடாது! அவர்களால் ஒரோ வழித் தீமைகள் வந்தாலும் பரவாயில்லை!

நாம் நேர் வழியிலேயே அத்துன்பங்களைச் சந்தித்துச் சரிக்கட்டிக்கொள்ள முடியும். ஆதலால், எந்தக் காரணத்தை முன்னிட்டும் நண்பர்களிடம் ஐயம் கொள்ளற்க! அச்சம் கொள்ளற்க! நண்பர்களிடம் ஆழ்ந்த அன்பைக் காட்டுக!

இங்ஙனம் அச்சம் தோன்றுவதற்குரிய வாயில்களை அடைத்திடுக! அஞ்சாமல் வாழ்வதற்குரிய வாயில்களைத் திறந்திடுக! நன்னெறியில் நின்றிடுக!

அஞ்சாது வாழ்தலே உயிர் வாழ்தல். மனத்தில் அச்சமில்லாத வாழ்க்கையை மேற்கொள்ள, சாந்த குணத்தை

ஏற்றுக் கொள்க! எப்போதும் அமைதியைப் பேணுக! காண்க!

உள்ளத்தில் அச்சம் மெள்ள உருவாகிறதைக் கூர்ந்து கவனித்திடுக! உடன் அதனை இயற்கையின் எச்சரிக்கை யாகவே ஏற்றுக்கொள்க! உடனடியாக எழுச்சியுடன் - சுறுசுறுப்புடன் பணியில் ஈடுபடுக!

அச்சம் எந்தக் காரியத்தைச் செய்யா தொழிவதால் வரும் என்று தோன்றுகிறதோ அந்தக் காரியத்தை உடனடியாகச் செய்யத் தொடங்கி முடித்து விடுக! அச்சம் தலைக்காட்டாது. அச்சத்தை வென்று வாழ்கிறவர்களே மனிதர்கள்! தொடக்கத்தில் அச்சமில்லாத நிலையைப் பாவித்துக் கொள்க. காலப்போக்கில் அந்தப் பாவனையே அச்சமின்மையைத் தந்து மகிழ்வூட்டும்!

"அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை" என்ற வரிகளை அன்றாடம் வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகி அச்சமின்றி வாழ்வோமாக!

## உயிர்களிடம் அன்பு

அன்பு - ஆற்றல் நிறைந்த ஒரு சொல்! அன்பு - மண்ணையும் விண்ணையும் இணைக்கும் ஆற்றல் மிக்க உணர்வு! அன்பு எல்லைகளைக் கடந்தது! அன்பு, ஆக்கத்தினை நல்கும்! இன்பத்தினை வழங்கும்!

மனிதர்கள் தனித்தனியே பிறந்திருக்கின்றனர். காலமும் தூரமும் அவர்களைப் பிரித்து வைத்துள்ளது. இப்பிரி வினைகள் அன்பை வளர்ப்பதற்காகப் படைக்கப் பெற்ற பிரிவினைகளே தவிர வேறில்லை.

அன்றாட வாழ்வில் உயிரியக்கம் இருப்பதற்கே அடையாளம், அன்புதான்! "அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு" என்று வள்ளுவம் கூறும்! ஆம்! உயிர் வாழ்க்கை இயங்க எத்தனை

தேவைகள்! இந்தத் தேவைகளையெல்லாம் வழங்கி நிறைவு செய்யும் உலகம், அன்புலகமாகத்தானே இருக்க முடியும்!

ஒரு நாளில் - பொழுதுகள் தோறும் தேவைகளை நிறைவு செய்யும் உலகம்! ஒருவர் வாழ்க்கையில் பருவங்கள் தோறும் ஏற்படும் தேவைகளை நிறைவு செய்யும் உலகம்! அம்மம்ம! எங்குப் பார்த்தாலும் அன்பின் ஆற்றல்! அன்றாட வாழ்க்கையில் அன்பு செய்யப் பழகிக் கொள்வோம்! பயன் பெறுவோம்!

மற்றவர் காட்டும் அன்பை அனுபவிப்போம்! அன்பைச் சுவைத்து மகிழ்வதே வாழ்க்கை! மற்றவர் இதயம் மகிழ அன்பினைப் பொழிவதே தியாகம்! அன்புக்கு விலை ஏது? அன்புக்குத் தடையேது? ஆனால், தாழ்ப்பாள் போடப்பட்ட வீடுகளும், கரவெனும் கதவால் மூடப்பட்ட இதயங்களும், தன்னலத்தால் தோன்றிப் பூட்டுக்கள் தொங்கும் வீடுகளும் அன்பிற்குப் பகையாகக் கச்சைக் கட்டிக் கொண்டு நிற்கின்றன! கதவிற்குத் தாழ் போடலாம். கள்ளமற்ற அன்புக்குத் தாள் போட முடியாது.

கரவாடும் வஞ்ச நெஞ்சையும் தூய அன்பு தாக்கி நெகிழச் செய்யும்! கனிந்த அன்புக்கு முன்னே காவல் ஏது? புண்ணியமிக்க அன்பின் முன்னே பூட்டுக்கள் இரா. ஆதலால், எப்போதும் அன்புத் தவம் செய்வோமாக! அன்பு தான் தவம்! தவம் தான் அன்பு! அன்பே சிவம்! அன்பே கடவுள்!

அன்றாட வாழ்க்கையில் நமது உயிர்ப்புக்குத் துணை செய்யும் மரம், செடி, கொடிகளிடம் அன்பாக இருப்போமாக! அவை உயிர்க்காற்றை நமக்கு வழங்கி நம்மை உயிர்ப்புடன் உலாவரச் செய்கின்றன! நாம் விடும் கெட்ட மூச்சுக் காற்றை அவை குடித்து நம்முடைய காற்று மண்டலத்தைத் தூய்மை செய்கின்றன. உடலியக்கத்திற்குத்

தேவையான - சுவையான காய்களை, கனிகளை நமக்குக் கணக்கில்லாமல் வழங்கி வாழ்வளிக்கின்றன!

அடுத்து, பாலினைப் பொழிந்து நம்மை வளர்க்கும் பசுவினிடத்து அன்பைக் காட்டுங்கள்! நம் குடும்பத்தில் வாழும் அனைவரோடும் அன்பாகப் பழகுங்கள். யார் மாட்டும் ஐயங்கொள்ளாதீர்கள்! அதட்டாதீர்கள்! சண்டை போட்டுக் கொள்ளாதீர்கள்!

நம்மைச் சுற்றியிருப்பவர்களின் தேவைகளை அறிந்து நிறைவேற்றும் சேவகர்களாக வாழ்வோமாக! வையம் உண்ண உண்போமாக! வையம் உடுத்த உடுப்போமாக!

அன்பு, மேம்போக்காக இருத்தல் கூடாது. ஆழ்ந்த அன்பாக இருத்தல் வேண்டும். யார் மாட்டும் அன்பினாலாய பணிவு வேண்டும். அன்பு, பூரணத்துவம் அடைய வேண்டுமானால் முற்றாகத் தற்சார்பு நீங்க வேண்டும்! அத்தகைய அன்பே கண்ணப்பர் பொழிந்த அன்பு! இயேசு பொழிந்த அன்பு! புத்தர் பொழிந்த அன்பு! இத்தகைய அன்புக்கு மாற்றே இல்லை!

அன்றாட வாழ்க்கையில் நூற்றுக்கணக்கானவர்களைச் சந்திக்கின்றோம். நாம் சந்திக்கின்ற மனிதர்களில் நல்லவர் களும் இருப்பார்கள்; அல்லாதவர்களும் இருப்பார்கள்! ஆயினும் நம்முடைய அன்பு குறையக்கூடாது! அல்லது மாறக் கூடாது!

நாம் நன்மைக்கு ஈடாக அன்பைக் காட்டுவதில் என்ன பெருமை இருக்கிறது? தீமைக்கு மாற்றாக அன்பைக் காட்டுவதுதான் உண்மையான அன்பு!

அன்பு காட்டுதல் அல்லது அன்பு செய்தல் என்பது பயிற்சியால் வருவது. இந்தப் பயிற்சி ஓயாது காட்டப் பெறுவதால் வளரும். அன்பு தோன்றுவதற்கு முதற்களன் எல்லோரும் ஒரே கடவுளின் அன்புக்குரிய ஒரே

குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற அடிப்படை அறிவு வேண்டும்.

நாம் விரும்பி மகிழ்ந்து அனுபவிப்பன எல்லாம் மற்றவர்களுக்கும் உரியனவாகச் செய்வதே, நீதியைச் சார்ந்த வாழ்க்கை முறையென்ற ஒழுக்க உணர்வு தேவை. அன்பினால் மட்டுமே அக நிலையிலும் புறநிலையிலும் தோன்றும் சிக்கல்களுக்கு எளிதில் - நெடிய பயன்தரத் தக்க வகையில் தீர்வு காண முடியும்; தீர்வு காண வேண்டும் என்ற நம்பிக்கை தேவை.

நமது வாழ்க்கைக்குக் குறிக்கோள் என்று ஏதாவது இருக்குமானால் - பயன் என்று ஒன்று இருக்குமானால் - அது அன்பே! அன்பே! என்றறிதல் வேண்டும்.

காண்போரை யெல்லாம் இனிய முக மலர்வோடு காண்க! இனிய வார்த்தைகளைப் பேசுக! உள்ளத்தாலும் உரையாலும் உடலாலும் வணக்கத்துடன் வரவேற்றுப் பழகுக! இனிய முகமன் கூறுக! புகழ்ந்து பாராட்டுக! உண்பித்திடுக! மகிழச் செய்க!

இவ்வாறு அன்பு செய்யக் கற்றுக் கொண்டால் இந்த மண்ணிற்கு விண்ணகம் வாராது போகுமா?

கு.VI.15.

# 4

# பாரதி தடத்தில் பாரதம்

தமிழ் மொழி காலந்தொறும் வளர்ந்து வந்திருக்கிறது. நாம் குறிப்பிடுவது மொழியின் வளர்ச்சியை மட்டுமல்ல: கருத்து வளர்ச்சியையும் கூட. தமிழிலக்கியங்கள் தோன்றி வளர்ந்த வரலாற்றை நோக்கின் இந்த உண்மை புலனாகும்.

தமிழ், இலக்கிய வளம் நிறைந்த மொழி: அறநூல்களும் நீதி நூல்களும் நிறைந்த மொழி: தத்துவ ஞான நூல்களும் தமிழில் நிறைய உண்டு. ஆதலால், தமிழர்கள் வளர்ந்து வந்துள்ளனர். தமிழ் மொழியும் வளர்ந்து வந்துள்ளது.

ஆயினும் இடைக்காலத்தில் ஒரு தேக்கம்! தமிழர்கள் பீடு இழந்தனர்: அரசுகளை இழந்தனர்: அடிமைகளாயினர்.

இருள் நிறைந்த நிலையில் ஓர் எழுஞாயிறு தோன்றுகிறது: பலர் புகழ் ஞாயிறு தோன்றுகின்றது. அதுதான் பாரதி! பாரதி, வரலாற்றில் இடம்பெற்ற கவிஞன் அல்ல-வரலாற்றை எழுதிய கவிஞன்!

பாரதி, உப்புக்கும் கூழுக்கும் பாடியவன் அல்ல! செத்த பிறகு கிடைக்கும் சொர்க்கத்துக்கும் பாடியவன் அல்ல. பாரதி, வாழும் மாந்தருக்குப் பாடினான்.

பாரதியின் பேச்சும் மூச்சும் பாரத நாடு, பாரத நாட்டின் சுதந்திரம், பாரத சமுதாயத்தின் வாழ்க்கை!

பாரதி பேசினான்: எழுதினான்: கவிதைகள் இயற்றினான்: சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் பங்குபெற்றான். பாரதி, வாழ்வாங்குவாழ்ந்த மனிதன்! இந்த மண்ணை, விண்ணகமாக்க வந்த கவிஞன்!

பாரதி, காலம் தந்த கவிஞன், இல்லை, இல்லை! காலத்தை உருவாக்கிய கவிஞன்! ஆம்! பாரதி, அடிமையாகவே பிறந்தான்: அடிமையாகவே செத்தான்! அவன் சடலத்தின் மீது பாரதத் தாயின் மணிக்கொடியை போர்த்த முடியாமலே செத்துப் போனான்.

ஆயினும் பாரதி, நாடு சுதந்திரம் பெறும் என்று நம்பினான்! சுதந்திரப் பள்ளு பாடினான்! பாரதி, சுதந்திரக் காற்றைச் சுவாசித்தான்! பாரதியின் ஆன்மா விடுதலை பெற்றுவிட்டது! பாரதியின் கவிதைகளில் எழுச்சி இருக்கும்: ஏற்றம் பிறக்கும்! பாரதியின் கவிதை பற்றி கவிமணி,

*"சொல்லுக்குச் சொல்லழகு ஏறுமே அடா—கவி*
*துள்ளும் மறிவைப் போல துள்ளுமே, அடா!*
*கல்லும் கனிந்துகனி யாகுமே, அடா!—பசுங்*
*கன்றும்பால் உண்டிடாது கேட்குமே, அடா!"*

என்று பாடினார்! பாரதியின் கவிதைகளில் சொல்புதிது! பொருள் புதிது!

*"தமிழால் பாரதி தகுதி பெற்றதும்*
*தமிழ், பாரதியால் தகுதி பெற்றதும்"*

என்று பாரதியால் தமிழ் ஏற்றம் பெற்றது என்று பாரதிதாசன் பாராட்டினான்!

பாரதியின் கவிதைகளில் கவித்துவம் உண்டு. உணர்ச்சி உண்டு. பாரதி, உரைநடையில் கதைகள், கட்டுரைகள் நிறைய எழுதியுள்ளான்.

பாரதியின் உரைநடை இலக்கியங்களில் தெளிவான சிந்தனை, கொள்கை, கோட்பாடுகள் இடம்பெற்றுள்ளன. பாரதியின் நெடிய கதைகள் சுவைத்துப் படிக்கத்தக்கன. அவற்றுள் சில பகுதிகள் கிடைக்காதது ஒரு பெரிய குறை!

பாரதியின் கவிதைகளிலும் சரி, உரைநடைகளிலும் சரி ஷெல்லி, விவேகானந்தர், தாயுமானார் போன்றவர்களின் தாக்கங்கள் நிறைய உள்ளன. அவர்களை ஆதரித்தும் எதிர்த்தும் பாரதி எழுதுகின்றான்.

ஆனாலும் பாரதிக்கு அவர்கள்பால் உள்ள ஈடுபாடு மிகுதி. அளப்பரிய மதிப்புணர்வும் உடையவனாகவே வளர்ந்திருக்கிறான். தாயுமானார் போன்றவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பாடத் திட்டத்தில் சேர்க்க வேண்டும் என்று வற்புறுத்துகிறான்.

பாரதி, இந்தியா, பாரத தேசம் என்றெல்லாம் கூறி மகிழ்கிறான். 'இந்தியா'-என்றே ஒரு பத்திரிகையும் நடத்தினான். பாரதி நடத்திய பத்திரிகைகள் பல. ஆனால், போதிய ஆதரவு இல்லாமல் அல்லற்பட்டான்!

ஆயினும் கடைசி வரையில் ஊனில் உயிரும், உயிரில் உணர்வும் சுதந்திர வேட்கையுடையவனாகவே இருந்தான்! "எல்லோரும் இந்தியர்" என்று பெருமையோடு எண்ணு வதில், எழுதுவதில் பாரதி அனுபவித்த இன்பம் சொல்லிக் காட்ட ஒண்ணாதது.

இந்தியா, இந்தியர் - என்ற உணர்வுகளினூடே பாரதிக்கு, "பாரத ஜாதி"யை உருவாக்குவதில் இருந்த ஆர்வம் போற்றத்தக்கது. ஆம்! பாரத நாட்டில் வாழ்வோர் பாரத ஜாதி!

பாரதி காலத்தில் இந்தியா ஒரு பெரிய நாடு! பிரிவினைக்கு ஆளாகாத அகண்ட பாரதம் இருந்தது! பாரதத்தில் இந்துக்கள் வாழ்ந்தனர். பாரத ஜாதி, ஒரு மொழிக்கும் ஒரு மதத்திற்கும் உரியதல்ல! இது கலப்பு ஜாதி!

குருநானக் இந்து–இஸ்லாமிய இணைப்பில் ஒரு புதிய மதமே உருவாக்கினார். அதுதான் சீக்கிய மதம்!

இந்துக்கள், முகம்மதியர்கள் ஜாதியில் நம்மவர்களே என்பது பாரதியின் கருத்து. அதுமட்டுமல்ல, இந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும் குருதிக் கலப்பு உண்டு என்றும் எழுதுகிறான்.

"பாரத ஜாதி ஒன்று"–என்ற கொள்கை பாரதியின் கொள்கை: உறுதியான நம்பிக்கை. பாரத ஜாதி ஒன்றுபட்டு நிற்கவேண்டும். பாரத ஜாதியினர் தமக்குள் இருக்கும் வேற்றுமைகளை முரசுபோல் பிரசங்கம் செய்து கொண்டிருக்கக் கூடாது என்று பாரதி அறிவுறுத்துகிறான்.

பாரத தேசத்தில் விடுதலை உணர்ச்சி வளர்ந்து வருவதை, பாரதி விளக்கி, "பாரத நாட்டின் நவீன உணர்ச்சி" என்ற கட்டுரையில் எழுதுகிறான். இந்தக் கட்டுரை "இந்தியா" இதழில் வெளியான உப தலையங்கம்.

பாரதத்தில் ஒரு நவசக்தி தோன்றியிருக்கிறது என்பது பாரதியின் கருத்து. அந்நிய ஆட்சியை, கொடுங்கோலர்களை எதிர்த்துப் போராடும் போராட்டத்தை கம்சன், காளிங்கள் ஆகியோருடன் கண்ணன் நடத்திய போராட்டத்துடன் ஒப்புமைப் படுத்துகிறான்.

"கண்ணன் சுயநலம் கருதி ஒரு காரியமும் செய்ய வில்லை. கொடுங்கோலர்களுடைய கொட்டத்தை அடக்க வேண்டும் என்பதே குறிக்கோள்! அதுவும் கம்சன், காளிங்கள் திருந்துவதற்குப் போதிய காலம் கொடுத்தும் திருந்தாத நிலையிலேயே கொடுங்கோலர்களை அழிக்க வேண்டிய தாயிற்று" என்று பாரதி விளக்கி எழுதுவது அறிவறிந்த விவாதம்!

இந்தியாவில் மக்களாட்சி வேண்டும். இது பாரதியின் குறிக்கோள்! ஆனால், ஆதிக்க அரசோ, மக்களின் விருப்பார் வங்களைப் புரிந்து கொண்டு ஆட்சியை ஒப்படைப்பதற்குப்

பதில் பல துன்பங்களையே செய்து வருகிறது என்று பாரதி வருந்துகிறான்.

பல புதிய அவசரச் சட்டங்களைப் பிறப்பித்து, பாரத சுதந்திரப் போர் வீரர்களைச் சிறையில் பிடித்து வைக்கின்றனர். ஆயினும், பாரதப் புதல்வர்கள் பயப்படாமல் தைரியமாகத் துன்பத்தை ஏற்று அனுபவித்து வருகிறார்கள்.

சுதந்திரப் போராட்டத்தை ஒடுக்குவதும், சுதந்திரப் போராட்டத் தியாகிகளைத் துன்புறுத்துவதும் காலப் போக்கில் கதிரவனை நோக்கி வீசிய கல், வீசியவர் தலையில் வீழ்வது போல் ஆள்வோருக்கே துன்பமாக முடியும் என்று பாரதி எச்சரிக்கை செய்கிறான்.

பாரத நாட்டின் சுதந்திர மீட்சி பாரத நாட்டின் சராசரி மனிதக் கூட்டத்தினாலேயே நடைபெறும் என்பதும் பாரதியின் கருத்து; நம்பிக்கை! பாரத நாட்டின் விடுதலைப் போருக்கு, பரம்பொருளின் ஆதரவுண்டு என்றும் நம்பிக்கை ஊட்டுகிறான் பாரதி!

ஆனால், பரம்பொருளின் ஆதரவு பெற ஒரு நிபந்தனையையும் பாரதி விதிக்கத் தவறவில்லை. அது என்ன நிபந்தனை? “பாரதப் புத்திரர்கள் அனைவரும் தங்களுக்குள் இருக்கும் வித்தியாசங்களைக் கட்டிச் சுருட்டி வீட்டிற்குள் வைத்துவிட்டு, தேச மாதாவின் சேவையில் தொண்டு பூண்டு வந்தால் கட்டாயமாக பகவான் அருள் தருவான்” என்பதே அந்த நிபந்தனை; நம்பிக்கை!

பாரத நாட்டு மக்களிடம் வேற்றுமைகள் பெருகி வளர்ந்தமையை, திரும்பத் திரும்ப சுட்டிக்காட்டுவதை நமது நாட்டு மக்கள் சென்ற காலத்தில் உணர்ந்ததாகத் தெரியவில்லை. ஏன்? இன்று வரையிலும் உணர்ந்து ஒழுக முன்வரவில்லை என்பது உண்மை.

ஆயினும் வேற்றுமைகள் மறக்கப்படுதல் வேண்டும்: ன்றுபடுதல் வேண்டும், அனைவரும் நாட்டுக்கு உழைக்க

வேண்டும் என்று வளர்ந்து வந்த உணர்வை "நவீன உணர்ச்சி" என்று வியந்து பாராட்டி வரவேற்கிறான் பாரதி!

பாரதி வாழ்ந்த காலத்தில்-சுதந்திரப் போராட்டக் காலத்தில் தேசபக்தி வளர்ந்து வந்தது! பாரதி, கடவுள் பக்தியையே மடைமாற்றி, தேச பக்தியாக்க விரும்பினான்.

பிரகலாதன், துருவன் ஆகியோர் விஷ்ணுவினிடத்தில் காட்டிய பக்தியைப் போல் நாம் நமது தேசத்தினிடத்தில் பக்தியைக் காட்டவேண்டும் என்று பாரதி அறிவுரை கூறுகிறான்.

தேச பக்தி வளர, "சுதேசியம்" என்ற தர்மத்தை அனுசரிக்க வேண்டும் என்றும் பாரதி வலியுறுத்துகிறான். பாரதி, தனது அறிவுரைக்கு அரணாக விவேகானந்தரின் உபதேசத்தைக் காட்டுகிறான்!

"எனது பாரத புத்திரர்களே! இன்னும் ஒரு நூற்றாண்டுக்கு நீங்கள் வணங்க வேண்டிய தெய்வங்கள் யாதெனில், பாரத தேசத்தின் முப்பது கோடி ஜனங்களே!

மக்கள் எல்லாம் மகாசக்தியின் ஆவிர்ப் பாவங்கள்! இவர்களை நீங்கள் ஆராதனை செய்ய வேண்டும்! இவர்களுக்கே தொண்டு செய்ய வேண்டும்! இதைக் காட்டிலும் சிறந்த மதம் வேறு கிடையாது" என்பது விவேகானந்தரின் அருள்வாக்கு!

பாரதி, தேச பக்தர்களைத் தேவர்கள் என்றும், தேச பக்தியில்லாத தேசத் துரோகிகளை அசுரர்கள் என்றும் கூறுகிறான்.

தாய் நாட்டின் நன்மைக்காக அறவழியில் அமைதியாக நாடெங்கும் நல்வழிகளைக் கண்டும் அமைத்தும் தொண்டு செய்வதைத் தேசத் துரோகிகள்–அசுரர்கள் தடுக்க முயல்கிறார்கள்.

தேச பக்தர்கள் தக்க தலைமையின் கீழ்க் கட்டுப்பட்டு நாட்டுக்கு உழைத்தலையே தவமெனக் கொண்டு பணி செய்து வருகின்றனர். சில சமயங்களில் அசுரர்கள்-தேச பக்தர்களாக நடிக்கலாம். ஆனால், நீண்ட காலத்திற்கு நடவாது.

அசுரர்களைப் பற்றி, கவலைப்படாமல்-சிந்திக்காமல் தேச பக்தர்களின் தொண்டு நடைபெற வேண்டும். தேச பக்தர்கள் இடர்களையும் துன்பங்களையும் கடந்து தேச பக்தியில் நிலைப்பட்டு நிற்கிறார்கள். தேச பக்தர்களுக்கு வெற்றி உறுதி. இது பாரதியின் முடிபு.

நாம் சுதந்திரம் கேட்பது எந்தச் சாதியினருக்கும் மதத்தினருக்கும் அல்ல! பாரத தேவிக்காகவே சுதந்திரம் கேட்கப்படுகிறது.

பாரத தேவியின் பாரதம் பிரிவினைப்படாத பாரதம்! அகண்ட பாரதம்! நாட்டு மக்களின் எதிர்கால மகத்தான இலட்சியம். பாரத நாட்டை மக்கள்தான் ஆள வேண்டும். இதுவே, பாரதியின் சிந்தனை; செயல்!

பாரதி, பழைமையில் காலூன்றி நின்றவன். அதே போழ்து, பின்னே வரும் புதுமையை வரவேற்றவன். பழைய மரத்தில்தானே புதிய புதிய தளிர்கள் துளிர்க்க வேண்டும்!

மரத்தில் துளிர்க்கும் ஒவ்வொரு துளிருக்கும் ஒரு மரம் இயல்பா? அல்லது சாத்தியமா? இல்லை, இல்லை! அது போலப் பழைமை வாய்ந்த புகழ்மிக்க இந்து சம்பிர தாயத்தைப் பாரதி நம்புகிறான். அதே போழ்து பின்னைப் புதுமைகளையும் வரவேற்கிறான்.

இந்து நாகரிகம் என்று பாரதி போற்றுவது பண்பு நலம் சார்ந்த பழைய மரபினையே! அதே போழ்து நடைமுறைக்கு இசைந்து வாராதவற்றையும் சமுதாய விரோதமான வற்றையும் வெறுக்கிறான். புதிய மதம் உருவாக்க முயலுகிறான்; புது விதிகள் செய்கிறான்.

பாரதி, தன் காலத்தில் நிலவிய இந்து நாகரிகம் கெட்டுவிட்டது என்று எழுதுகிறான்: உண்மையை ஒப்புக்கொள்கிறான். பாரதி ஒப்புக்கொண்ட உண்மையை ஹிந்து மடாதிபதிகள் ஒத்துக்கொண்டிருந்தால் வரலாறு மாறியிருக்கும்.

கெட்டுவிட்ட இந்து நாகரிகத்தைச் சீர் செய்ய ஹிந்து மடாதிபதிகள் என்றுமே முன்வர மாட்டார்கள் போலத் தெரிகிறது. உண்மையில் கூறப்போனால் ஹிந்து மடாதி பதிகள் பலராகப் போனதாலும் அவர்களுக்குள்ளேயே செல்வாக்குப் போட்டிகள் நிலவுவதாலும் யார் ஹிந்து மதக் காவலர் என்பதே புலனாகவில்லை.

இதனைப் பாரதி, 'ஹிந்து சம்பிரதாயமாகிற குளத்துக்குத் தர்மகர்த்தா இன்னாரென்பதே வெளிப்படை யாகத் தெரியவில்லை. அடியார்கள் கூடித் தர்மகர்த்தா இன்னாரென்பதை முதலாவது நிச்சயப் படுத்த வேண்டும். பிறகு, தெய்வ சந்நிதியில் அவர்களுடைய குணம் திருந்தி நடக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும் என்று எழுதுகிறான். பாரதி காலத்திலும் இது நடக்கவில்லை. இதுவரையிலும் நடக்கவில்லை. இனிமேலும் நடக்குமா? வரலாறுதான் கூறவேண்டும்!

பாரதி, ஹிந்து தர்மத்தைச் சுத்தப்படுத்தி ஆதரிக்கத் தக்கது எது என்றும் இந்த விஷயத்தில் மக்கள் அஜாக்கிரதை காட்டக் கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறான்.

ஹிந்து மக்களிடத்தில் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. ஆனால், தேவையான அளவு இல்லை. இதனை, பாரதி "விழித்தால் நன்றாக விழித்துவிட வேண்டும். நடந்துகொண்டு தூங்குவோர் உண்மை அறிய மாட்டார்கள்" என்று எழுதியுள்ளபடி ஹிந்து சமுதாயம் விழித்தெழ வேண்டும். இது நமது பிரார்த்தனை; வேண்டுகோள்!

ஹிந்து சம்பிரதாயத்தில் நிலவிய தீண்டாமையை; பாரதி கடுமையாகச் சாடுகிறான். "பஞ்ச கோணக்

கோட்டை" என்ற தத்துவார்த்தக் கதை மூலம் தெளிவாக விளக்குகிறான். அந்த கதையைக் கேளுங்கள்!

பாரத தேசத்தவராகிய நாம் பஞ்சகோணக்கோட்டை. கற் சுவர்கள் நாலும் மேலான சாதிகள்! மண்சுவரே பஞ்சமர் என்ற ஐந்தாம் சாதி. கோட்டையைச் சுற்றியுள்ள அகழி சுதேசி அபிமானம்! பஞ்சமர்களை அநாதரவும் கொடுமையும் நிறைந்த முறையில் நாம் நடத்தி வரவில்லையா? இது நியாயமா? இந்த ஒடுக்குமுறை சுதந்திரப் போராட்டத்துக்கு அனுசரணையாக அமையுமா? என்றெல்லாம் வேதனைப் பட்டு எழுதுகிறான்.

"கடவுள் எல்லோரையும் சமமாகவே படைத்தான். கடவுள் முன்னிலையில் சாதி வித்தியாசம் நிற்குமா? பஞ்சமர்களை நாம் நடத்திய கொடுமைகளுக்கு ஈடாக நம்மை ஆங்கிலேயர்கள் துன்புறுத்துகின்றனர்.

நாம் பஞ்சமரை ஆதரித்து அவர்களுக்குக் கல்வி புகட்டி, சுசீலமான வழக்கங்களை அனுசரிக்கும்படி செய்து அவர்களையும் நமக்குச் சமமாகச் செய்ய வேண்டும். அப்படிச் செய்து நாம் எல்லோரும் ஒற்றுமைப்பட்டால் நம்மை வெல்ல வல்லவர்கள் இவ்வுலகத்தில் யாரேனும் இருப்பார்களா?" என்று பாரதி கேட்கிறான்!

பாரதியின் இந்த வினாவுக்குரிய விடையைச் சுதந்திர அரசு தந்தது. ஆனால், இந்து சமூகம் தரவில்லை. இந்து சமூகம் பஞ்சமர்களை அணைப்பதன் மூலமே வளரும்; வாழும்!

பாரதி, சாதிகளை வெறுப்பவன். ஒன்றுபட்ட பாரத சமுதாயம் பாரதியின் இலட்சியம். இந்தக் கொள்கையினை "ஆவணி அவிட்டம்" என்ற கட்டுரையில் விளக்குகிறான்! நெஞ்சினைத் திறந்து வீரப்ப முதலியார் மூலம் பேசுகிறான். "பூணுலை எடுத்துப் போடுங்கள்! இந்தியா முழுவதும் ஒரே ஜாதி! ஒரே ஆசாரம்!" என்று செய்துவிட வேண்டும் என்கிறான்.

*பிராமண சபை, ரெட்டி சபை, வன்னியர் சபை என்று இருக்கும்வரை இந்த இழிவெல்லாம் தீராது. ஒரே கூட்டம் என்று பேசு! பூணூல் என்ன? கீணூல் என்ன? வீண் கதை" என்று பேசுகிறான்!*

*இன்றைய பாரதம் - தமிழ்நாடு எங்கு போய்க் கொண்டிருக்கிறது? பாரதியின் தடத்திலா? இல்லை. இல்லை! எங்குப் பார்த்தாலும் சாதிச் சங்கங்கள்! எனதருமை நாடே! என்று விழித்தெழுவாய்?*

*மேலும் பாரதி எழுதுவதைக் கேளுங்கள்!" எல்லோரையும் சமமாக்கு! ஐரோப்பியர்களைப் போல, ஜப்பானியர்களைப் போல நடப்போம்! இது பாரதியின் ஆசை!*

*பாரதி சாதிகளின் சங்கமத்தை மட்டும் விரும்ப வில்லை! மதங்களின் சங்கமத்தையும் விரும்புகிறான்! 1906-லேயே நாடு முழுதும் சிவாஜி திருவிழாவும் அக்பர் திருவிழாவும் கொண்டாட வேண்டும் என்று எழுதி யுள்ளான்.*

*பாரதி பாரத சமுதாயத்தில் சமத்துவம் நிலவ உழைத்தவன். சமைத்துவமே பாரதியின் கொள்கை. கோட்பாடு! இந்திய நாட்டில் சாதி, வகுப்பு வேறுபாடு களின்றிப் பணிகளில் அமர்த்த, 'சுக்கிர நீதி' வழி வகுத்திருக்கிறது என்ற ஆதாரத்தை எடுத்துக் காட்டுகிறான்.*

*"எல்லா மனிதரும் சமம் என்ற கொள்கையை, சமூக வாழ்க்கையில் ஸ்தாபனம் செய்யும் வரை மானிடருக் குள்ளே பொறாமை, பகைமை, இகல், வஞ்சனை, போர் முதலியவை நீங்கா"-என்று பாரதி அறிவுறுத்துகிறான்.*

*பாரதி அறிவுறுத்துவதை நாம் ஏற்போமா? நடை முறைப்படுத்துவோமா? சமத்துவ கொள்கைக்கு, கோட்பாட்டுக்குப் பாரத மாதாவே லோக குருவாக இருக்க வேண்டும் என்பது பாரதியின் ஆசை!*

*மனிதனை மனிதனாக மதிக்காமல் சமத்துவமாக நடத்தாமல் கொடுமைகள் பல இயற்றுவதைப் பல*

கோணங்களில் பாரதி, கண்டிக்கிறான். சங்கரன் பிள்ளை உரையாடல் உயர்சாதி மனப்பான்மையைச் சாடும். சாடலுக்கு ஓர் எடுத்துக்காட்டு! சங்கரன் பிள்ளை.

*தோப்புப் பெருத்த விளைநிலம்*
*பாழ்த்தது: தொண்டர்இறு*
*மாப்பு பெருத்து மனநலம்*
*பாழ்த்தது; மாதர்களின்*
*மூப்புப் பெருத்து மலையாளம்*
*பாழ்த்தது; முப்புரிநூல்*
*பாப்புப் பெருத்து மதுரைத்*
*துரைத்தனம் பாழ்த்ததுவே!*

என்ற பாடலைக் கூறுகிறார். இந்தப் பாடலைக் கூறுவதன் மூலம் பார்ப்பன வீட்டுப் பிள்ளைகள் நாடார் பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கு வர மறுப்பதை விளக்குகிறார்.

இந்தக் கட்டுரையை முடிக்கும்பொழுது, கிரீஸ் என்ற யவன தேசத்தைப் பற்றி, பைரன் என்னும் ஆங்கிலக் கவிஞன், "ஆகா! இந்த நாட்டின் இயற்கை காட்சிகள் எல்லாம் எவ்வளவு அற்புதமாகவும் அழகாகவும் இருக்கின்றன" என்று கூறியதை எடுத்துக் காட்டுகிறான்.

"கிரீஸ் தேசம் போல, ஆகமபுரத்திலும் இயற்கை காட்சிகள்-மலையும், தோப்பும், நதியும், வானும் பார்க்கப் பார்க்கத் தெவிட்டாதபடி அவ்வளவு சுதந்திரமாகவும் இனிமையாகவும் இருக்கின்றன. மனிதர் மாத்திரம் பரஸ்பரம் நாய்களைப் போலச் சண்டை போட்டுக் கொண்டிருக் கிறார்கள். இந்தியா முழுவதிலும் இப்படித்தான் இருக்கிறது! தெய்வமே! இதற்கெல்லாம் விமோசனம் எப்போது வரும்?" என்று கேட்கிறான்!

நமது நாடு இன்று போய்க் கொண்டிருக்கிற நிலையைப் பார்த்தால் விமோசனம் வருவதற்கே வாய்ப்பில்லை என்பது போலத் தெரிகிறது! கடவுளே! எனதருமை நாட்டை

விழித்தெழச் செய்யக் கூடாதா? பாரதியின் தடத்தில் உய்த்துச் செலுத்தக் கூடாதா?

பாரதி, மானுடம் வளர, இந்த வையகம் பயனுற அன்பே ஆதாரம் என்று வலியுறுத்துகிறான். மனித குலம் இன்பத்தை அடைய வேண்டுமானால் அதற்குத் "தான்" ஆகிற கதவைத் திறந்து அன்பு வடிவமாக நிற்பதே உபாயம்! அன்பு, காதல் என்னும் பெயர் பெறும்!

"ஓங்காரமாவது காதல்! ஆணும் பெண்ணும் காதலித்து வாழ்வது கடவுட் கொடை! இயற்கை! இந்த உலகை காதல் படைக்கிறது. இந்த காதலைச் சராசரி மனிதன் வணிகமாக்குகிறான்! மிருக இச்சையுடன் கூடிக் கலைவோர் மிருகங்கள்!

காதலால் ஆனமத் தொடர்பு கொண்டு உயிரும் உயிரும் கலப்பவர் மனிதரில் சிறந்தோர், மாமனிதர்! இந்த அறிவே ஞானம்! அன்பைத் தவிர வேறு ஞானம் கிடையாது! ஏசுவின் பிறப்பு, அன்பின் பிறப்பு. விடுதலைக்கு அன்பு என்ற கதவு திறந்தாக வேண்டும்" -என்று பாரதி எழுதி அன்பின் அருமையை விளக்கியுள்ளான்.

பாரதி, அன்பினாலேயே பெரிய சமுதாய மாற்றங்களைச் செய்ய எண்ணுகிறான். அன்பு என்பது பேசிப் பழகுவதுடன் அமையாது. அமையக் கூடாது. விருந்துக்குப் பின் அன்புக்கு விடை கொடுப்பதை பாரதி விரும்பவில்லை.

பாரதி, சமுதாய மாற்றங்களுக்கெல்லாம் அன்பு உந்து சக்தியாக விளங்க வேண்டும் என்று கருதுகிறான். அன்பு, ஆற்றல்மிக்க கருவி என்பது பாரதியின் கருத்து. பாரதி, சாவைப்பற்றி எண்ணுகிறான். பயத்தோடு அல்ல!

"இந்த உலகில் வாழும் சில நாட்கள் அன்போடு வாழ்ந்துவிட்டுப் போகக் கூடாதா? பலகோடி இன்பங்கள் அமைந்த இந்த உலகில் வாழ்கிறோமே! இதற்கு, குடிக் கூலியாக-வாடகையாக அன்பைத் தரக்கூடாதா? பிறருக்

கென முயலும் நோன்பு செய்யக் கூடாதா? என்றெல்லாம் கேட்கிறான்!

பாரதி, தனது கேள்விகளுக்கு விடையில்லாமல் போகவே, இந்த உலகத்தைக் கூர்ந்து நோக்குகிறான்! அடடா! மனித உயிருக்கு எத்தனை எத்தனை கஷ்டம்? கொலை, துரோகம்! ஐயகோ, எத்தனை அநியாயம்? ஐயோ, பாவம்!" என்று சொல்லிவிட்டு, மனிதர்களுக்கு வாழும் நெறிகள் சிலவற்றை அறிமுகப்படுத்துகிறான்.

"மனிதர்களே! நமக்குள் ஒரு கட்டுப்பாடு செய்து கொள்வோமே! அந்தக் கட்டுப்பாடு யாதெனில், ஒருவனுக்கு ஒருவன் மனத்தாலும் தீங்கு நினைப்பதில்லை, பயப்படுத்துவதும் இல்லை; பய்ப்படுவதும் இல்லை.

மனிதர்களே! இந்த விரதத்தை எடுத்துக் கொள்ளுங்கள்! இதுவே, பிழைக்கும் வழி! வாழும் நாட்கள் சிலவே! இந்த நாட்கள் சிலவற்றுக்குள்ளும் கலகம் செய்து வாழ்வானேன்? இதனால் யாருக்கு என்ன பயன்?

மனம் விட்டுப் பேசுங்கள்! கலந்து பழகுங்கள்! பரஸ்பரம் நல்லெண்ணத்தை – நம்பிக்கையை பரிவர்த்தனை செய்து கொள்ளுங்கள்! அன்பு செய்யுங்கள்! அன்பைப் பெறுங்கள்! குற்றங்களைப் பார்க்காதீர்! குணங்களையே கண்டு பாராட்டுங்கள்! குற்றங்கள் தாமே மறையும்!

மனிதனுக்கு மனிதன் பகை என்பது மூடத்தனமானது. இயற்கை நியதிகளுக்கு முரணானது. மனித நாகரிகத்தின் மூலம், அன்பே! இன்பத்தின் வைப்பு. அன்பேயாம் என்கிறான்.

அன்பு! – மனித உலகத்தில் அன்பு எளிதாகத் தோன்றி விடாது. நிலத்தில் பயிர் எளிதில் வளருமா? அதுபோலத் தான்! அன்புக்குப் பகை அழுக்காறு–பொறாமை! பொறாமைக்கு களம் வளமை–வறுமை. இருவேறு நிலைக்களன்கள்!

வெறும் சோற்றுக்கே கூடப் பஞ்சம் நிலவுமாயின் அன்பு தோன்றுமா? ஒரு சிலர் உண்டு மகிழ்ந்திடலாம்! பலர்,

பசியால் வாடித் துன்புறுவதாக அமைந்துள்ள சமுதாயத்தில் அன்பு பயிலுதல்-அன்பு வளருதல் இயலாது. சோற்றுப் பஞ்சத்தை நீக்கி, இங்கு வாழும் மாந்தருக்கெல்லாம் வயிற்றுக்குச் சோறிடுவதை முதல் இலட்சியமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இன்று மானிடம், சுவர்-வேலி இவற்றுக்கிடையே சொத்துக்களை முடக்கி சிறை வைத்துள்ளது. செல்வர்கள், அன்பு கருதியும், அறம் கருதியும் ஏழைகளுக்கு வாழ்வளிக்க முன்வர வேண்டும். அப்படி அவர்கள் வரவில்லையெனில், "நிலத்தைச் சகலருக்கும் பொது என்று அறிவிக்கவேண்டும்" என்று பாரதி முடிவு செய்கிறான்! அது மட்டுமா? உடையவர்களுக்கு ஓர் அறிவுரையும் கூறுகிறான்.

"ஏழைகள் வருந்தினால் தனக்கென்ன என்று நினைப்பவர் மூடர். பலர் அசௌகரியப்படும் வகையில் சிலர் சௌகரியம் அடைதல் இந்த உலகத்தில் சாத்திய மில்லை" என்று பாரதி தெளிவு படுத்துகிறான்!

ஏழை - பணக்காரர்களுக்கிடையில் பரஸ்பரம் அருவருப்பும் அவமரியாதையும் வளர்ந்து பகை முற்றி வருகிறது. இதன் விளைவே காவல் முறை வளர்தல், பூட்டுக்களின் பெருக்கம்! சட்டங்கள் இயற்றப்படுதல், சிறைச் சாலைகள் அமைத்தல் முதலியன. இவையெல்லாம் துன்பத்தை மிகுதிப் படுத்துமே தவிர, தீர்வு சொல்லாது; தீர்வு செய்யாது.

ஆங்கிலக் கவிஞன் பைரன், மனிதர்களை "நாய்களே!" என்று அழைத்தான். பிறகு பைரன், தான் செய்த தவற்றைத் திருத்திக் கொள்கிறான். அதாவது, மனிதர்களை நோக்க நாய்கள் பரவாயில்லை. ஆதலால் மீண்டும் "மனிதர்களே!" என்று கூறுகிறான்.

மனித குலத்தைப் பற்றியுள்ள துன்பங்களுக்கெல்லாம் ஒரே ஒரு தீர்வுதான் உண்டு. அதுதான் அன்பு! அன்பே தீர்ப்பு! சகோதர உணர்ச்சியே தீர்ப்பு! ஆனால் சகோதர

உணர்ச்சியைப்பற்றி எழுதுகிறார்கள்; பேசுகிறார்கள்; முழங்குகிறார்கள்! பயன் என்ன?

அன்பு செய்தல் நடைமுறைக்கு வந்தாக வேண்டும். அன்பு செய்தல் ஒழுகலாறாக அமைதல் வேண்டும். இன்பம் வேண்டுமா? அன்பு வேண்டும். அன்பில்லா விடில் இன்பமில்லை.

அன்பை மறந்துவிட்டு, துறந்துவிட்டு சொத்து பணம், பதவி, அகந்தை, மரியாதை-இவைகளில் ஆசைப்பட்டு மூழ்கி அல்லற்பட்டு ஆற்றாது அழும் மாந்தர்களே! கேளுங்கள்! இவையெல்லாம் உங்களுக்கு வேண்டுமா? அடையலாம். அடைய முடியும்!

அதற்கு ஒரே ஒரு வழி! இவையெல்லாம் மற்றவர் களுக்கும் வேண்டும் என்று ஆசைப்படுங்கள். மற்றவர்கள் அடையத் துணை செய்யுங்கள்! வாழ்வித்து வாழ ஆசைப்படுங்கள்! மகிழ்வித்து மகிழ ஆசைப்படுங்கள்! நீங்கள் விரும்பியது எல்லாம் கிடைக்கும். ஐயமில்லை! இது சத்தியம்!

அன்புண்டானால் இன்பம் உண்டென்று புத்த பகவான் கூறினார். அன்பு, தத்துவம் அல்ல! கொள்கை யல்ல! கோட்பாடல்ல! அன்பு, செயல்! அன்பு செயல் வழிப்பட்டது!

அன்பெனனும் தவம் வளர, உயிர்க் குலம் ஆண் - பெண் என்று இருபாலாகப் படைக்கப் பெற்று இயங்குகிறது. ஒன்றின்பால் பிறிதொன்றினுக்கு ஈர்ப்பு, கவர்ச்சி தேவை. எல்லாம் அமைவாகப் பொருந்திக் கிடக்கின்றன. ஆனால், மனிதன் இந்த இயற்கையோடு இசைந்த அன்பு வாழ்க்கை யையும் கெடுத்துவிட்டான்! கெடுத்துக் கொண்டிருக்கிறான்.

மனிதன் வாழ்க்கையில் பங்கேற்றுத் தியாகங்கள் செய்யும் மகளிரை வாழ விடுகிறானா, என்ன? பாரதி, மகளிரின் உரிமை நலன்களுக்காக எழுதினான்; பேசினான்; போராடினான்!

ஏன்? ஒருபடி மேலே போய் விவேகானந்தர் சந்நியாசி யாகப் போகாமல் இல்லற வாழ்க்கையை ஏற்றிருப்

பாரானால் மனித குலத்தைப் பற்றியிருந்த கலி வேரோடும், வேரடி மண்ணோடும், கல்லி எரியப்பட்டிருக்கும் என்பது பாரதியின் நம்பிக்கை.

"தவத்தாலும், பரிபூர்ணத் துறவாலும் ஏற்படும் அசையாத மனோ தைரியத்தையும் எல்லையற்ற அன்பையும் எல்லா உயிர்களிடத்தும் ஆன்ம புத்தியையும் வைத்துக் கொண்டு இல்வாழ்க்கை வாழ வேண்டும் என்பதே இந்து மதத்தின் முடிவான தீர்மானம்"–என்று பாரதி எழுது வதுடன், தனது வாதத்துக்கு அரணாக சந்நியாசிகளின் பரமநாதனாகிய சிவன், பார்வதியை இடப் பாகத்தில் கொண்டருளியதையும் தவமுனிவர் வசிஷ்டர் அருந்ததி யுடன் கூடி வாழ்ந்த வாழ்க்கையையும் எடுத்துக் காட்டு கிறான்.

துறவை, "விலங்கு" என்று பாரதி வர்ணிக்கிறான். "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்து வோம்" என்று கவிதையில் அறைகூவல் விடுத்த பாரதி, உரைநடையில், மகளிருக்கு எதிரான சமூகத்தை நையப் புடைக்கிறான்.

நமது மகளிருக்கு கல்வி போதிக்க வேண்டும், என்று வலியுறுத்துகிறான். அதுமட்டுமா? வருங்கால மேதைகளை உருவாக்கும் தகுதி மகளிருக்கே உண்டு என்பது பாரதியின் கருத்து; நம்பிக்கை!

நாட்டில் நல்லன நடக்க வேண்டுமா? பெரிய காரியங்கள் நடக்க வேண்டுமா? எடுக்கும் காரியங்கள் யாவும் கை கூடிவர வேண்டுமா? மகளிரின் மனோ நிலை வளர்ந்து அவர்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல் ஒன்றும் நடவாது; வெற்றியும் கிடைக்காது.

பாரதி, நிவேதிதா தேவி கூறியதாக எடுத்துக் காட்டி எழுதுவது, "ஐயோ, மாதர்களை இருட்டிலே தள்ளிவிட்டு அவர்கள் அறியாமல் நீங்கள் மேலான நிலைமைக்கு வந்துவிட முயல்வது வீண் முயற்சி! அது ஒருபோதும் நடக்க மாட்டாது" என்று நிவேதிதா தேவி கூறியபடி தேசாபி

மானிகள் ஒழுகினால் நாட்டுக்கு நல்லது ஏற்படும்" என்று எழுதுகிறான்.

இந்தியா ஆழ்ந்த உறக்கத்தில் கிடப்பதற்கு மிகுதியும் காரணம் விதி வாதமே! பாரதி, விதி கொள்கைக்கு உடன் பட்டான்; ஆயினும்; நடைமுறை வாழ்க்கையில் மாறு படுகிறான்.

விதி, விதி என்று சும்மா கை கட்டி கீழ்நிலையில் வாழ்வாரைக் கடுமையாய் கண்டிக்கிறான்.

"விதி என்பது உண்டு. ஆனால், கடவுளால் எனக்கு அருளப்பெற்ற சுய இச்சை விதி வாதத்தை மறுக்கவில்லை" என்பது பாரதியின் கொள்கை.

தனது இச்சை, சுயேச்சையானது. அதற்கும் கடவுளுக்கும் சம்பந்தமில்லை என்பது பாரதியின் கோட்பாடு, பாரதி, விதியை விவேகத்தால் மாற்றலாம் என்றே நம்புகிறான்; நம்மையும் நம்பச் சொல்லி முயற்சி மேற்கொள்கிறான்.

மானிடம் சிறப்புடன் வாழ, விவேகத்துடன் வாழ்ந்து வெற்றிகளைப் பெற்று குவித்திட கல்வி தேவை. பாரதி, இன்றையக் கல்விமுறை இளைஞர்களைக் கிழவர்களாக்கும் கல்வி முறை என்று சாடுகிறான்! அதுமட்டுமா? இன்றையக் கல்வியை எண்ணி அவமானப்படுகிறான்.

பாரதி, வாழ்ந்த காலத்தில் இருந்த கல்விமுறை, நாடு சுதந்திரம் பெற்ற பிறகும் ஒன்றும் மாறிவிட வில்லை.

இன்றைய கல்விமுறையில் இளைஞர்கள் ஆளுமை யையும் படைப்பாற்றலையும் பெறுதற்குரிய கூறுகள் இல்லை! ஏன்? இன்றைய இளைஞர்கள் ஆபத்துக்களையும் பொறுப்புக்களையும் ஏற்க அஞ்சுகின்றனர். எல்லாம் நல்லவிதமாக, சுகம் தரக்கூடியதாக அமைய வேண்டும் என்று விரும்புகின்றனர்.

இன்றைய இளைஞர்கள் கடின உழைப்பைப் பற்றி கனவிலும்கூட எண்ணுவதில்லை. ஏன் தாய் மொழியாகிய தமிழில் கூட இன்றைய இளைஞர்களுக்கு விருப்பம் இல்லை.

வீட்டு மொழியை கற்பதை விட்டுவிட்டு வேறு வேறு மொழிகளையெல்லாம் கற்கும் இழிநிலையை எண்ணி எண்ணிப் பொருமுகிறான் பாரதி.

தலைமுறை தலைமுறையாக வளர்ந்து வந்த வரலாற்றின் சிறப்புக்களையும் அந்த சிறப்புக்கு காரணமாக இருந்த பெரியோர்களின் வரலாறுகளையும் ஞானிகள், மகான்களைப் பற்றியும் கல்வி நிலையங்களில் போதிக்க வேண்டும்.

இன்றைய கல்வியில், பகுத்தறிவு என்ற பெயரில் தாயுமானார் அருளிச் செய்த கவிதைகளை நமது கல்லூரி மாணவர்கள் கற்கும் வாய்ப்புப் பெறவில்லையே என்று கவலைப்படுகிறான் பாரதி!

அதுமட்டுமல்ல, ஒரு தவறான–பைத்தியக்காரத் தரமான கருத்தும் இளைஞர்களிடம் பரப்பப்படுகிறது. அதாவது, யாக்ஞவல்யர், சங்கரர் முதலிய அவதார புருஷர்களைப் பற்றியும் அர்ஜுனன், கர்ணன், விக்ரமன், சிவாஜி முதலிய மகாவீரர்களைப் பற்றியும் இன்றைய இளைஞர்கள் கேள்விப்பட்டது கூட இல்லை!

ஒரோ வழி கேள்விப்பட்டாலும் அவர்கள் நவீன காலத்து, புதுமைகளைப் பற்றி அறியாதவர்கள் என்று கருதி அலட்சியப்படுத்துகிறார்கள். பழங்காலத்துப் பெரியவர்கள் அந்தக் காலத்தில் கண்ட கடுமையான செய்திகளின் அடிப்படையில்தான் பின்னைப் புதுமைகள் தோன்றி வளர்ந்து வருகின்றன என்பதை மறுத்தல் இயலாது.

பாரதி, பாரத ஜாதியினர் ஆண்மையுடன் விளங்க வேண்டும் என வற்புறுத்துகிறான். புதிய ஆத்திசூடியில் "அச்சம் தவிர்" என்றும் "ஆண்மை தவறேல்" என்றும்

அருளியுள்ள உபதேசங்கள் என்றைக்கும் ஒவ்வொருவருக்கும் பொருந்துவன.

அச்சம் நீங்கினாலே ஆண்மை விளங்கும். பயம், மிகப் பெரிய தீமை. உலக மாந்தரைப் பயத்திலிருந்து மீட்பதே முதற்கடமை. நமது நாடு புகழ்பூத்து விளங்கிய காலம் ஒன்று இருந்தது. இந்திய நாடு அடிக்கடி ஏறபட்ட அந்நியர்களின் படையெடுப்புகளோடு போராடி, போராடிக் களைப் படைந்து விட்டது.

அதுமட்டுமா? கல்வி, கலை முதலிய சாஸ்திரங்களை இழந்து நாளுக்கு நாள் பின்னடைவு பெற்று வருகிறது. மேலும், நமது மக்களிடத்தில் வீரியமும் தைரியமும் தர்ம குணமும் பிரம்ம ஞானமும் போய், அவர்கள் பொறாமை, வயிற்றெரிச்சல் முதலிய அற்ப குணங்களுக்கு இரையாகி இழிநிலையை அடைந்து விட்டனர்.

எழுமின்! எழுமின்! ஆட்டு மந்தையில் பழகிய சிம்மமாகி விடாதீர்கள்!" இது பாரத மக்களுக்கு பாரதியின் வேண்டுகோள்!

நமது நாட்டுக்குப் பயமற்றவர்கள் தேவை, அறிவாளிகள் தேவை; பலசாலிகள் தேவை என்று பாரதி உணர்கிறான்; உணர்த்துகிறான்! இளைஞர்கள் வலிமை பெற சிலம்பு, கஸ்ரத், கர்லா முதலியன- பாடசாலை அமைத்து, கற்றுக் கொடுக்கும்படி கிராம சபையினரை வேண்டி கேட்டுக் கொள்கிறான்.

அதற்கு கைமாறாக ஓர் ஆண்டுக்குப் பத்திரிகை இலவசமாக அனுப்புவதாகவும் எழுதுகிறான். கேடுகளுக் கெல்லாம் காரணமான பயத்திலிருந்து விடுதலை பெற்று வலிவும் பொலிவும் பெற்று விளங்கும்படி இளைஞர்களுக்கு அறிவுரை கூறுகிறான்.

சரீர வாதனை, இழப்பு, பசி, துன்பம் முதலியன பற்றி, கவலைப்படாமல் துணிவுடன் வாழ்க்கை நடத்தும்

பயிற்சியும் முயற்சியும் இளைஞர்களுக்குத் தேவை என்பது பாரதியின் கருத்து. இந்தக் கருத்தினைப் பல நடைமுறை உதாரணங்களுடன் விளங்குகிறான்.

"மனத் துணிவற்ற சாதியினர் மண் சுமக்கக் கூட, தகுதியாக மாட்டார்கள்" என்பது பாரதியின் வாக்கு. சோதனைகளும் துன்பங்களும் துயரங்களும் மனிதனை வளர்ப்பனவேயாம்! நிலத்தில் அடிக்கப்படும் பந்து எழுவதைப் போல மனிதன் எழுந்து அயர்வில்லாமல் உழைத்தால் உயரலாம். இது உறுதி: இதுவே பாரதியின் தடம்!

பாரத தேச மக்கள் வீரியத்துடன் வளர வேண்டும்; வாழ வேண்டும். இது பாரதியின் ஆசை. பாரதி, பழைய வீரர்களின் பட்டியலைத் தருகிறான். அஃது ஒரு நீண்ட பட்டியல். அர்ஜுனன், இராமன், இராவணன், காந்திஜி பெயர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

பாரதி, வீரத்துக்குத் தரும் விளக்கம் என்ன? எடுத்த காரியத்தை இடையீடுகளையும் இடர்ப்பாடுகளையும் கடந்து முடிப்பது வீரத்தின் இலக்கணம். இது பாரதியின் கருத்து.

பாரதி காலத்தில் இந்த இலக்கணத்திற்கு பொருந்தி யவர்கள் பலர் வாழ்ந்தனர். அதனாலேயே நாடு விடுதலை பெற முடிந்தது. இன்று நாட்டில் இத்தகைய வீரர்கள் வாழ்கிறார்களா?

இடரே இல்லை; உயிரைத் தரவேண்டியது இல்லை. முறையாக வேலை செய்தாலே போதும். அதையே செய்யாமல் சோம்பலில் திளைத்துச் சிறு சிறு சுகங்களில் நாட்டங்கொண்டு அற்பத்தனமான ஆதாயங்களை எண்ணி கடமையைச் செய்யாமல் புறக்கணித்துப் பொழுது போக்குகிறவர்கள் ஏராளம்! ஏராளம்!

வீரர்களை ஞான வீரர், கர்ம வீரர் என்று பிரிக்கிறான் பாரதி. வசிஷ்டர், புத்தர், கிறிஸ்து ஞான வீரர்கள், சிவாஜி, நெப்போலியன், காந்திஜி கர்ம வீரர்கள்.

சிவாஜிக்குப் பிறகு, நமது நாட்டில் வீரர்கள் தோன்றவில்லை என்று பாரதி வருந்துகிறான். ஆனந்தரங்கம் பிள்ளை போன்ற நிர்வாகிகள், துணைவர்கள் கூட கிடைப்பதில்லை என்று வருந்துகிறான். ஆனந்தரங்கம் பிள்ளை, பிரான்சு நாட்டுத் தலைவன் டுப்ளேக்கு, விளக்கு போலவும் ஊன்றுகோல் போலவும் விளங்கினார்.

பாரதி, துறவைப் பல இடங்களில் கண்டிக்கிறான். துறவு வாழ்க்கையை மறுதலிக்கிறான். ஏன்? வாழ்க்கையை மாயை என்று கூறுவதையும் பாரதி மறுக்கிறான். ஆன்மாவின் வாழ்க்கை நிலையானது; சாசுவதமானது என்று பாரதி போதிக்கிறான்.

நமது பாரத நாட்டில் சில நூற்றாண்டு காலமாகவே துறவைப்பற்றி அதிகமாகப் பேசுகிறார்கள். கண்டவன் எல்லாம் ஞானம் பற்றிப் பேசுகிறான். வயிற்றுப் பிழைப்புக்காக-சில காசுகளுக்காக உடலையும் ஆவியையும் விற்கத் துணிபவன் கூட ஞானம் பேசுகிறான்.

வாழ்க்கை மாயை என்கிறான். "எல்லாம் மாயை, இவ்வுலகமே பொய், க்ஷணத்தில் அழிவது இல்வாழ்க்கை" என்று தனக்குத் தெரியாதவைகளைக் கூட கிளிப்பிள்ளை போல் திரும்பத் திரும்பக் கூறுகிறான்.

இந்த பொய்யைப் பாரதி நம்ப மறுக்கிறான்; ஏற்க மறுக்கிறான். வாழ்தலைப் பற்றிய வேட்கையைத் தூண்டி வளர்க்க முயற்சி செய்கிறான். இந்த உலகம் நிலையானது என்று நம்பி வாழ்ந்து இந்த மண்ணையே சொர்க்கமாக்க, பாரதி நம்மை அழைக்கிறான்.

இந்த உலகம் நிலையானது. இங்கு பாங்குற வாழ்தலே சிறப்பு. செத்த பிறகு சிவலோகம் யாருக்கு வேண்டும்? இங்கு அமரர் சுகம் வேண்டும்! இது பாரதியின் ஆசை.

பாரதி, திருவள்ளுவரைப் பின்பற்றிச் "செய்க பொருளை" என்று நெறிப்படுத்துகிறான். நாடு நலம் பெற நல்ல கல்விச் சாலைகள் தேவை; தொழிற் சாலைகள் தேவை.

நிதி முட்டுப்பாடு இருப்பின் இடத்துக்கு இடம் தட்டுப்பாடுண்டாகும். கண்ட கண்ட இடங்களில் எல்லாம் முட்டுப்பாடுண்டாகும். செல்வம் உணவைப் போன்றது என்று கூறி ஒரு புதிய கொள்கையை உருவாக்கினான்.

அதாவது உண்ட உணவு செரிமானம் ஆவதைப் போல் ஈட்டிய செல்வமும் செலவழிக்கப் பெறுதல் வேண்டும். பணம் காத்த பூதமாகிவிடக் கூடாது.

நமது நாட்டில் செல்வர்கள் அதிகமில்லை. ஊருக்கு ஒருவர் இருந்தால் பெரிய காரியம். ஆயினும், அதைரியப்படக் கூடாது. பொருள் செய்யும் முயற்சியைத் தொடங்கிவிட்டால் வளரும். பெருகி வளரும். இது பாரதியின் நம்பிக்கை.

இந்த முயற்சியில் பாரதி, மாடாதிபதிகளையும் சம்பந்தப்படுத்துகிறான். மடாதிபதிகள் தங்களுடைய சிஷ்யர்களுக்கு ஆத்ம விசாரத்தில் பக்தி ஏற்படும்படி செய்ய வேண்டும்.

ஆத்ம விசாரத்திற்கு இரண்டு சத்ருக்கள் உண்டு. ஒன்று செல்வப் பெருக்கினால் உண்டாவது. அதாவது இந்திரிய போகம்; சுகம். மற்றொன்று வறுமை. இவ்விரண்டுமே இல்லாமல் சமரச நிலைக்கு மக்கள் வந்தால் ஆத்ம ஞானத்தை ஏற்பார்கள்.

இந்நிலைக்கு ஜனங்களைக் கொண்டு வருவது மடாதி பதிகளின் கடமை. ஒவ்வொரு மடாதிபதியும் இக்கடமையை ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

நமது நாட்டில் கொடிய தரித்திரத்தால் வருந்து கிறவர்கள் ஏராளம்! ஏழைகளுக்கு எவ்வாறு உதவி செய்வது? வறுமையிலிருந்தும் பயத்திலிருந்தும் எப்படி மீட்பது?

மடாதிபதிகள் அன்னதானம் செய்வதனால் வறுமை நீங்கிவிடாது. தரித்திரம் நிலையான ஏற்பாடுகளாலேயே அகலும். நிலையான ஏற்பாடு என்ன? ஒரே ஒரு வழிதான்

உண்டு. ஜனங்களிடம் தொழில் முயற்சியை ஊக்குவிக்க வேண்டும்.

குருடனுக்குக் கோல் பிடித்து விடுவது என்றால் ஆயுட் காலம் முழுவதும் செய்ய வேண்டும். அதற்குப் பதிலாகக் கண்ணைத் திறந்துவிடுதல் மேலான உதவி. இதையே வேறு மொழியில் "நாள்தோறும் மீன் தருதலைவிட மீனைப் பிடிக்கக் கற்றுத் தருவதே மேல்" என்று கூறுவர்.

"மடாதிபதிகள் மடத்தின் மூலதனத்தில் ஒரு பகுதியைக் கொண்டும், பாதகாணிக்கையைக் கொண்டும் முதல் சேர்த்துத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தலாம். இதனால் மக்கள் பயனுறுவர். மடங்களின் நிதியும் அபிவிருத்தி அடையும். தூத்துக்குடியில் ஏற்பட்டுள்ள கப்பற் சங்கத்திற்கு மடாதிபதிகள் பொருளுதவி செய்யலாகாதா? என்று கேட்கிறான் பாரதி.

மேலும் "அன்னதானம் சுவர்ணதானத்தில் செலவே யல்லாது வரவு இல்லை. தொழில்களில், வர்த்தகத்தில் முதலீடு செய்தால் வரவும் உண்டு. தரித்திரமும் ஜனங்களை விட்டு நீங்கும்.

கொடிய வறுமை நீங்கின பொழுதே ஜனங்கள் ஆத்ம ஞானத்தில் நாட்டம் கொள்வார்கள். இந்தப் புண்ணியத்தை அந்த மடாதிபதியான ஞான சிரேஷ்டர் கட்டிக் கொள்வாரோ?" என்று பாரதி அன்று கேட்டான்.ய இது நடைபெற வேண்டும்.

பாரதி, தமிழ் ஆர்வலன், பாரதி, ஆங்கிலக் கல்வியை எதிர்த்தவன். தமிழ் வழிக் கல்வியை ஆதரித்தவன், பாரதி, "சக்திதாசன்" என்ற புனைப் பெயரில் சுதேசமித்திரன் ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயர் சொன்னதாகச் சில செய்திகளைத் தொகுத்துத் தந்துள்ளான்.

அவற்றுள் முதன்மையானது. "தமிழ் நாட்டார் எப்போதும் தமிழே பேசவும், எழுதவும் வேண்டும். கற்கும்

கலைகள் எல்லாம் தமிழ் வழியிலேயே கற்க வேண்டும்" என்பதாகும்.

பாரதி, தாம் எழுதிய 'பாஞ்சாலி சபத'த்தைத் தமது எழுத்துக்கள் மூலமே அறிமுகப்படுத்துகிறான்.

பாரதி, "பொன் வால் நரி" என்றொரு கட்டுக் கதையை ஆங்கிலத்தில் எழுதினான். இதற்கு நிறையப் பாராட்டுக்கள் கிடைத்தன. ஆனால், இந்தப் பாராட்டில் பாரதி மகிழவில்லை. ஏன்?

"தமிழில் – சொந்த மொழியில், சொந்த மூளையைக் கசக்கிப் பிழிந்து 'பாஞ்சாலி சபதம்' என்ற புத்தகம் எழுதி இருக்கிறேன். அது நன்றாக இருக்கிறது என்று ஒருவனும் ஒரு கடிதமும் எனக்கு எழுதவில்லை" என்கிறான்.

தாய் மொழி தமிழில் எழுதிய நூல்களைத் தமிழ் நாட்டார் படித்துப் போற்றவில்லை என்று பாரதி மனம் நொந்தான்; வருந்தினான். இன்று வரையிலும் கூட இது நீடிக்கிறது.

பாரதி, கடவுள் நம்பிக்கை உடையவன். மதங்களில் நம்பிக்கை உடையவன். ஆயினும், பாரதி, இத்துறையில் தீவிரமாகச் சிந்தித்தான்; மாற்றங்களைக் காண விரும்பி னான்.

பாரதி, கடவுள் வழிபாட்டுக் கொள்கையில் விவேகானந்தரை அப்படியே ஆதரிக்கிறான். விவேகானந்தர் "விடுதலையே என் மதம்" என்று கூறியவர். அவர் எழுதிய கடிதம் ஒன்றை எடுத்துத் தருகிறான்.

"முத்தி அல்லது விடுதலையே என் மதம்! இதை கட்டுப்படுத்த முயல்வது யாதாயினும் அதனை நான் போர் செய்தேனும், புறங்கொடுத்து ஓடியேனும் அகற்றி விடுவேன்.

என் வேலை முடிந்து போய்விட்டது என்ற உணர்ச்சி உண்டாகிறது. மிஞ்சிவந்தால் நான் இன்னும் மூன்று அல்லது

நான்கு வருஷந்தான் உயிரோடிருப்பேன். அதற்கப்பால் என்ன நேரும் என்பதை நான் பொருட்டாக்கவில்லை.

எனினும் நான் மீட்டும் மீட்டும் ஜன்மமெடுத்து ஆயிரக்கணக்கான துன்பங்களில் உழன்றேனும் என் ஒரே கடவுள், ஒரே உண்மைக் கடவுள், நான் நம்புகிற தனித்தெய்வம்-அதாவது எல்லா ஜீவர்களின் தொகுதி, என் கடவுளாகிய தீயோர், என் கடவுளாகிய எல்லாச் சாதி களிலும், எல்லா இனங்களிலும் என் கடவுளாகிய ஏழைகள்-இக் கடவுளை நான் தொழுதற்குரிய பேறு பெறுவேனாக!”

“இவர்களே என் இஷ்ட தெய்வம்! ஆ! மூடர்களே! உயிருடைய கடவுளையும் உலகம் எங்கும் நிரப்பிக் கிடக்கும் அவனுடைய பிரதி பிம்பங்களையும் புறக்கணித்து விட்டு கற்பனையாகிய நிழல்களைத் தேடி, ஓடி ஒருவருக்கொருவர் சண்டையும் சச்சரவும் நடத்துவதென்ன! கண்ணுக்குப் புலப்படும் கடவுளைத் தொழுங்கள்! மற்ற சிலைகளை யெல்லாம் உடைத்தெறிந்து விடுங்கள்!”-இது விவேகானந் தரின் கடித வாசகம்.

இந்த கருத்தை அப்படியே பாரதி ஏற்று கொண்டான்! விவேகானந்தர் கண்டு, பாரதி வழி மொழிந்த இந்த உயிர்க்குல வழிபாட்டில் நமது நாட்டின் வளர்ச்சி என்று வந்து பொருந்தும்?

பாரதி – பிரகலாதன் வரலாற்றைக் கருவியாகக் கொண்டு நம்மனோரிடம் நம்பிக்கையை வளர்க்க முற்படுகிறான். ஒருவர் ஒரு பணியில் வெற்றி பெற வேண்டுமாயின் அதற்கேற்ற அளவுக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். பாரதி, பக்தியையும் நம்பிக்கையையும் “நோன்பு” என்ற பொருளிலேயே காண்கிறான்.

பாரதி, ஞானிகளைப் போற்றுகிறான். நாட்டின் நலங் காக்க ஞானிகள் தேவை என்பதையும் உணர்கிறான்.,

சுதந்திரப் போராட்டத்தில் கணக்கற்ற சந்நியாசிகள், ஞானிகள் ஈடுபட்டிருந்தனர்.

பாரதி, சுப்பிரமணிய சிவாவின் தியாகத்தைப் போற்றுகிறான். "சந்நியாசிகள், ஞானிகள் லௌகீக முயற்சியில் பிரவேசித்து விபத்துக்குள்ளாவதன் முகாந்திரம் என்ன என்று பலர் ஆச்சரியமடைகின்றனர். அப்படி வியப்படைபவர்கள் கிருஷ்ணபகவான், வேதவியாசர், இராமதாஸ் முதலியவர்களின் சேவைகளைக் கவனிக்க வேண்டும்.

ஞானி, தனது சொந்த நலனைக் கருதி உழைக்கக் கூடாதே ஒழிய, உலக தர்மங்களை முற்றிலும் விட்டு விட வேண்டும் என்பது சாத்திரக் கருத்தன்று.

தன்மட்டில் யாதொரு பயனையும் கருதாமல் ஈசனுக்கும், ஈசுவர வடிவமாகிய மனித சமூகத்திற்கும் தனது செயல்களின் பலன்களை ஸமர்ப்பணம் செய்து விட்டு, தான் எப்போதும் உழைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதே சித்தாந்தம்"-என்று எழுதுகிறான் பாரதி.

இத்தகைய சந்நியாசிகள், ஞானிகள் போற்றத் தக்கவர்கள். இவர்களால் நாட்டின் வரலாறு நனி சிறக்கும்.

பாரதி ஆண்மை, வீர்யம், போராட்டம், யுகப்புரட்சி என்றெல்லாம் எழுதினாலும் மௌனத்தையும் வரவேற்கிறான். ஆனால் பாரதி வரவேற்கும் மௌனம், வலிமை சார்ந்தது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

ஊக்கம் இல்லாதவர்களே சப்தம் போடுவார்கள்; இரைச்சல் செய்வார்கள். ஆழமில்லாத கடற் பகுதியே அலைகளால் ஆர்ப்பரிக்கும். ஆழ்கடல் மோனத் தவம் செய்து முத்தைக் கொழிக்கும்.

நல்ல முன்னேற்றம் நிறைந்த வாழ்க்கைக்குத் தங்களைத் தாங்களே ஆராய்ந்து நிறை - குறை கண்டு, திருத்தங்கள் காண்பது அவசியம். ஆனால், ஒருவழிப்படாத அசுத்தமான

மனமுடையவர்கள் தமக்குத் தாமே விமர்சனம் செய்து கொள்ள ஒருப்படுவதில்லை.

மற்றவர்களுடைய விமர்சனத்தையும் ஏற்க மாட்டார்கள். மாறாக எரிச்சல் கொள்வார்கள். இத்தகையோர் சுகபோகங்களையே விரும்பி அலைபவர்கள்.

நல்ல நியதிகளுக்கு கட்டுப்பட்ட தூய மனமுடைய வர்கள் தாங்கள் தங்களுடைய மனத்தை எதிரெதிராய் பார்த்துப் பக்குவப்படுத்தி அந்த மனத்தை ஞானத்திற்கு அடிப்படையாக்கி நல்ல காரியங்களில் ஈடுபடுத்துகிறார்கள்.

விவேகியானவன் தன் சத்துருக்கள் தன்னை வைது திட்டினாலும் மௌனமாகவே இருப்பான். வாயினால் மட்டும் அல்ல. மனத்தினாலும் மௌனமே சாதிப்பான். ஏன்? அவரவர்களுடைய உணர்ச்சிகளுக்கு ஏற்ப, குணங்களும் செயற்பாடுகளும் அமையும், வருந்தி என்ன பயன்?

இதற்கு எடுத்துக்காட்டாக வால்ட் விட்மன் தனது கவிதைகளை இகழ்ந்தவர்களைப் பற்றி, “அவர்களுடைய சுபாவத்திற்கு அதுதான் சரி” என்று சொன்னதை மேற்கோள் காட்டுகிறான் பாரதி.

ஞானியானவன் தன் கருத்தை, சரி என்றும், அதை உலகத்தவர் ஒப்புக் கொள்ள வேண்டும் என்றும் சண்டை போட மாட்டான். வாக்குவாதம், சண்டை, மனஸ்தாபம் இவைகளை உண்டுபண்ணும் சுபாவம் தன் சத்துருக்களோடு மட்டுமல்ல, சிநேகிதர்களையும் சத்துருக்களாகச் செய்து வருகிறது.

விவேகியோ தான் அன்போடு காட்டிய மௌனத்தால், சிநேகிதர்களின் வாத்சல்யத்தைப் பலப்படுத்துகிறதோடு விரோதிகளையும் சிநேகிதர்களாக்கிக் கொள்கிறான்.

இத்துறையில் வெற்றி பெற்று விளங்கியவர் சீன நாட்டுத் தத்துவ ஞானி கன்பூஷியஸ். நமது நாட்டில் புத்த

பகவான். ஏன்? ஏசுவின் வரலாறு சிறந்த எடுத்துக்காட்டு. அன்பும் ஞானமும் கூடிப் பிறந்த மௌனம் இம்மையிலும் வெற்றிகளைத் தரும். இன்ப அன்பு கலந்த அமைதியையும் தரும்.

பாரதி, பக்தி நெறியில் நம்பிக்கை உடையவன். ஒருவனுக்கு மெய் பக்தி உதயமானதும் அவன் எவருக்கும் எளியவனாய் எவற்றையும் நேசிக்கிறான்.

ஆகவே, அவன் எவருக்கும் அன்பு, தியாகம் அடிப்படையில் அடிமையாகிறான். அவன் எந்த உயிருக்கும் தொண்டு செய்தலை ஆர்வ விருப்புடன் செய்வான். தனக்கெனச் சிறிதும் பெருமை தேடாது எவருக்கும் பெருமை உண்டுபண்ணுகிறவன் எவனோ, அவனே, எல்லோரும் ஏத்திப் புகழும் ஈசுவரன், பெயருக்குத் தகுதியானவன்.

விருக்ஷம் தனது சுபாவத்தைக் காட்டியே வளருகிறது. நாம் எப்படி நடத்திய போதிலும் அது கவனிக்கிறதும் இல்லை; கவலைப்படுவதும் இல்லை. கிளைகளை வெட்டினாலும் கிளைத்து வளர்ந்து நமக்கு நிழல் கொடுக்கும் சுபாவத்தை விடுகிறதில்லை. இதுவே, பக்தியின் இலக்கணம்.

இந்த மாதிரிப் பக்தியின் வளர்ச்சி நாட்டுக்கு நல்லது. இன்று பக்தி, யாத்திரைகளாகவும் திருவிழாக்களாகவும் தண்ணீர் தெளிக்கும் விழக்களாகவுமே (கும்பாபிஷேகம்) அமைந்து வருகின்றன. பாரதியின் தடத்தில் பக்தி நெறி வளர்ந்தால் பாரதம் சிறக்கும்.

நம்முடைய தேசமானது இன்று பல அல்லல்களுக்கு ஆளாகியுள்ளது. இந்த நிலையில் நாம் வாளா இருக்கலாமா? "கிராமத்திற்குக் கஷ்டம் வந்தால் குலத்தையும் விட்டுவிடு" என்று சொல்லியிருக்க வில்லையா?

நமது பாரத ஜாதிக்குள் தாழ்த்தப்பட்டவர்கள் என்ற ஒரு பிரிவு! இது நீதியா? இந்தத் தாழ்த்தப்பட்டவர்களை நாமே நல்ல நிலைக்கு உயர்த்த வேண்டாமா?

தாழ்ந்த எரு, குப்பைகளைத் தள்ளிவிட்டால் நல்ல புஷ்பங்களும் பயிர்களும் விளையுமா? கரியைத் தள்ளி விட்டால் நெருப்பு உண்டாகுமா?

ஆதலால், பெற்றோர்களே, பாரதியின் தடத்தில் உங்கள் பிள்ளைகள் யாவரையும் தேசத்திற்கு நன்மை செய்ய அனுப்புங்கள்!

பாரதி, காலத்தை உருவாக்கிய கவிஞன்! பாரதி ஒரு சகாப்தம்! பாரதியின் சிந்தனைகள் உரைநடையில் சிறந்து விளங்குகின்றன. பாரதி, ஒன்றுபட்ட இந்தியாவை - பிரிக்கப் படாத இந்தியாவை தரிசனம் செய்கிறான்! நம்மையும் தரிசனம் செய்யுமாறு செய்கிறான்.

பாரதத்தில் வாழும் மக்கள் அனைவரும் ஒரு ஜாதி! அதுதான் பாரத ஜாதி என்று கூறுகிறான். பாரதம் ஒரு பழைய நாடு! பாரத நாட்டில் ஒரு நவீன உணர்ச்சி வளர்ந்து வருவதை பாரதி உணர்ந்து வரவேற்கிறான். தேச பக்தியின் அவசியத்தை உணர்த்துகிறான். பாரதி, இந்து சம்பிர தாயத்தை நம்பி வரவேற்கிறான். ஆனால் சமத்துவத்திற்கும் - சமரசத்திற்கும் உடன்படாதவையை மறுக்கிறான்.

பாரதியின் பேச்சும் மூச்சும் சமத்துவம், சமரசம் ஆகிய கொள்கைகளாகும். சமத்துவம், சமரசம் பாரதியின் தடம்! பாரதி தடத்தில் நாம் அனைவரும் செல்ல வேண்டும்!

பாரதியின் தடம் அன்பு, அறம், ஆண்மை, வீர்யம், சமத்துவம்! இந்தத் தடத்தில் அடிமாறாது நாம் சென்றால் நாடு வளரும்!

# 5

## தீ வைக்கட்டுமே

கவிஞன் பாரதி, காலவெள்ளத்தில் கரைந்து போனான். ஆனாலும், அவனது கவிதை முழக்கம் செந்தமிழ் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் கேட்கிறது. அக்கவிதை முழக்கத்தைக் காது கொடுத்துக் கேளுங்கள்; கவிதை முழக்கமா கேட்கிறது? இல்லை. கவிதைக்குப் பின்னணியில் கருத்தினையொட்டிய எழுச்சிமிக்க செயற்பாடன்றோ தெரிகிறது.

கவிஞன் பாரதி ஏழை நாட்டில் பிறந்தான், அடிமை யாகப் பிறந்தான். அடிமையாகவே வாழ்ந்து மறைந்தும் போனான். ஆனால், அவன் அடிமையாக வாழ்ந்தாலும் அவன் உள்ளம் என்றும் சுதந்திரமாகவே விளங்கியது. அவனது கவிதைகள் சுதந்திரமாகவே பிறந்தன. அவனுடைய கவிதா சக்தி, அந்நிய ஆட்சியை வெற்றிகொண்டு நின்று விளங்கியது. அவனுடைய புதுமை வேட்கை, வறட்சி நிறைந்த பழமையைப் புறங்காணச் செய்தது. கவிஞன் பாரதி உணர்ச்சிப் பெருக்கால் உந்தப்பட்டு, மட்டும் கவிதை இயற்றியவனல்லன் - அவனுடைய தேசபக்தி உணர்ச்சிக்குத் தூண்டுகோலாக இருந்தது. இந்த நாடு சுதந்திரம் பெற்றுவிடும் என்ற நம்பிக்கை அவனுக்கு இருந்தது அதனாலன்றோ. **'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே' - 'ஆனந்த....சுதந்திரம்...'** என்று

முரசு கொட்டினான். சுதந்திரம் பெற்றால் மட்டும் போதுமா? சுதந்திர நாட்டைச் சுபிட்சமடைந்த நாடாக ஆக்கும் திட்டங்களைப்பற்றியும் எண்ணுகிறான். நம்முடைய அரசினருக்குத் திட்டங்களைப் பற்றிய கருத்தை தந்தவனே பாரதிதானோ என்று எண்ணுகிற அளவிற்குத் தொழில், பாரததேசம் என்ற கதைகளில் நாட்டு நலனுக்குரிய திட்டங்களின் நிறலையே தருகின்றான். எந்த ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் சமுதாயத்தை முதலில் தயார் செய்தாக வேண்டும்' சமுதாயத்தை எப்படித் தயார் செய்வது? அடிமை வாழ்வில் இந்நாட்டு மக்கள் ஆட்சியுரிமையை மட்டுமா இழந்தார்கள்? அறிவையும் இழந்தார்கள். கம்பன் என்றும் காளிதாசன் என்றும் மாகவிஞர்கள் பிறந்து வளர்ந்த நாட்டிலே, எங்கும் அறியாமை. ஏடெடுத்தால் படிக்கத் தெரியாது. எழுத்தாணி எடுத்தால் எழுதத் தெரியாது. ஆனாலும், ஏடடுக்கிப் பூசை செய்யத் தவறில்லை. அதே நேரத்தில் அறிவின் தெளிவாலே பூத்துக் குலுங்க வேண்டிய சமய நெறிபற்றி நிறைய நம்பிக்கை. நம்பிக்கை நல்லதுதான். ஆனால், அங்கே தெளிவில்லை. தெளிவின்மையால் உறுதியில்லை, தெளிவும் உறுதியும் இன்மையால் தேர்ந்த அனுபவமில்லை. ஆயிரம் ஆலயங்கள் எடுப்பர். ஆனாலும் அங்கே ஆத்ம ஞானம் இருக்காது. அன்னசத்திரம் ஆயிரம் கட்டுவர். ஆனால் அங்கே ஆண்மை இருக்காது. வயிற்றுக்குச் சோறிடுவார். ஆனால் வாழ்வுக்கு ஞானம் தர மறந்தார்கள். இந்நிலை கண்டு பாரதி கொதித்தெழுந்தான்.

> "அன்ன சத்திரம் மாயிரம் வைத்தல்
> ஆலயம்பதி னாயிரம் கட்டல்
> அன்னயாவிலும் புண்ணியம் கோடி
> ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்."

என்று கொள்கை முழக்கம் செய்தான். அத்தோடு நின்றானா? சாத்திரத்திலும், ஞானத்திலும் பிறந்து வளர்ந்த சமுதாயம் அறியாமையில் சிக்கி உழல்வது கண்டு, ஆத்திரம்

கொண்டு அந்த ஆத்திரத்தில் **'தேடு கல்வி இலாததொரூரைத் தீயினுக்கிரையாக மடுத்தல் கேடு தீர்க்கும் அமுதம்'** என்றே முழங்குகிறான். பாரதி அன்று பாடினான். இன்றையத் தமிழகம் அதைச் செயல்படுத்துகிறது. தமிழகக் கல்வியுலகில் ஒரு புதுப்புரட்சி, அரசியலிலும், ஆட்சியிலும் சிறப்புற்று விளங்கும் காமராசர் ஆட்சி தமிழகத்தின் கல்வித் துறை வரலாற்றில் ஒரு பொற்காலத்தைத் தோற்றுவித்திருக்கிறது.

உயர்சாதியும், பணமும் இருந்தாலே கல்வி பெற முடியும் என்ற நிலை மாறிவிட்டது. காமராசர் ஆட்சி கல்வியைப் பொதுச் சொத்தாக்கி விட்டது. முன்பு, கல்வி பயில்கிறவர்கள், 'உற்றுழியுதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது' கற்க வேண்டியிருந்தது. இன்றோ, கற்பிப்பவர்கள், கற்பவர்களுக்கு உற்றுழியுதவியும், உறு பொருள்கொடுத்தும் கற்பிக்கிறார்கள். பள்ளிகள் தோறும் மதியஉணவு, பிள்ளைகள் மேனி முழுதும் சீருடை - ஓடாத கடிகாரத்தை ஓடச் செய்ய - நின்று படிக்கும் பிள்ளைகள் இருந்து படிக்க ஏற்ற சாதனங்கள் - கண்ணுக்கு விருந்தும் கல்விக்கு வளமும் தரும் கல்விக்குரிய துணைப்பொருள்கள், கல்விச்சாலைகள் - கண்கவர் கோலம் பெற, பள்ளிச் சீரமைப்பு மாநாடு, கல்வி வளர்ச்சிக்குக் கோடிக்கணக்கில் திட்டம்-அரசு மட்டுமா? இல்லை. இந்நாட்டு மக்களும் கல்வியின் தேவையைக் கருத்திற்கொண்டு அள்ளி அள்ளி வழங்குகிறார்கள்.

கல்வி மட்டுமா வளர்கிறது. கல்வியின் தரமும் உயர்ந் திருக்கிறது. நாளையத் தமிழகத்தின் அறிஞர் உலகை உருவாக்கும் திருப்பணி, மேற்பார்வைப் படிப்பில் சீரோடும் சிறப்போடும் நடைபெறுகிறது. கல்விப் புரட்சி கண்ட தலைமுறையில் வாழ்வதே நமக்குத் தனிப்பெருமை. வாழ்ந்தால் மட்டும் போதுமா? பள்ளிச் சீரமைப்பில் நமது பங்கென்ன? எண்ணத்தால், உழைப்பால், பொருளால், ஊறு

செய்யாமையால், பள்ளிச் சீரமைப்பில் பங்கு பெறு வோமாக. பள்ளிச் சீரமைப்பு வேலைகள் பாங்குற நடை பெற்றுக் கொண்டிருக்கும் இன்றையத் தமிழகத்தில் பட்டி தொட்டிகளிலெல்லாம் பள்ளிகள்-ஆடு மாடு மேய்த்த சிறுவர்கள் அறிவகத்தில் அறிவு பெறுகிறார்கள்-இந்தச் சூழ்நிலையில் நாம் பாரதிக்கு-அறைகூவல் விடுக்கலாம். அது என்ன அறை கூவல்?

'தேடு கல்வி இலாத ஊரைத்தீக் கொளுத்துவோம்' என்றாயே, இதோ எரிகின்ற இந்தத் தீப்பந்தத்தை வாங்கிக் கொள். தமிழகம் முழுவதையும் சுற்றி வா-தேடு-கல்வியிலாத ஊரைத் தீக்கொளுத்து என்றே சொல்லுவோம்!' கவிஞன் பாரதி தீ வைக்கட்டுமே பார்க்கலாம். அவன் தீ வைக்கத் தமிழகத்தில் ஊர் ஏது? இல்லை! இல்லை! எங்கும் கல்வி! எல்லோர்க்கும் கல்வி. இலவசக் கல்வி!

# 6

# பாரதியின் சக்தி வழிபாடு

பாரதி, அடிமையாகப் பிறந்தவன்; அடிமையாக வாழ்ந்தவன்; அடிமையாகவே மறைந்தவன். ஆனால் பாரதிக்கும் மற்றைப் பெரும்பான்மையோருக்கும் ஒரு வேற்றுமை இருந்தது. பாரதி, அடிமையாக இருப்பதற்கு வருந்தினான்; அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற வேட்கை கொண்டான். இல்லை. பாரதியின் ஆன்மா அடிமைத்தளத்திலிருந்து விடுதலை பெற்றுவிட்டது! பாரதி, அடிமைத் தளத்தில் முடங்கி கிடக்கும் நாட்டு மக்களை எழுச்சியுறச் செய்ய வேண்டுமென எண்ணினான். எழுச்சிக்கும் ஏற்றத்திற்கும் அடிப்படை ஆற்றல் அதாவது சக்தி. எனவே, ஆற்றலை வழங்கும் சக்தி வழிபாட்டைப் பாரதி விரும்பினான்; செய்தான் சக்தியைப் பெற்றான். அவன் மூலம் இந்த நாடும் சக்தியைப் பெற்றது; நாடும் விடுதலை பெற்றது.

வழிபாடு என்பது சடங்குகள் மட்டுமல்ல. அஃது ஓர் உயிரியல் முயற்சி. தாழ்ந்து கிடக்கும் உயிர் உயர்ந்து விளங்க வேண்டுமென்ற வேட்கையில் எல்லையற்ற பரம்பொருளைத் துணையாக நாடிப்பெறும் முயற்சியே வழிபாடு. கடவுளை முன்னிட்டுச் செய்யப் பெற்றாலும் வழிபாட்டின் பயன்,

உயிர்களுக்கேயாம். எல்லையற்ற பரம்பொருளின் ஆற்றலை சக்தி என்று கூறுவது தமிழர் மரபு. எல்லையற்ற பரம்பொருளுக்குச் சிவம் என்ற பெயரைத் தமிழர்கள் சூட்டினர். சிவத்தின் சக்தி அம்மை, நெருப்புக்குச் சூடுபோல் சிவத்திற்குச் சக்தி, இன்றைய அறிவியல் உலகத்தில் பொருளையும் (Matter) பொருளின் ஆற்றலையும் (Energy) தனியே பகுத்துக் காணும் மரபு வளர்ந்திருக்கிறது. இம் முறையில்தான் பண்டைத் தமிழர்கள் சிவத்தைப் பொருளாகவும் அம்மையைப் பொருளின் ஆற்றலாகவும் கண்டு போற்றினர்; வழிபட்டனர். அம்மை வழிபாடு ஆற்றலை வழங்கும். ஆற்றல் நிறைந்த மனித சமுதாயம் நல்லனவற்றைப் படைக்கும் ஆற்றலுடையதாகவும், தீயன வற்றை அழிக்கும் ஆற்றலுடையதாகவும் விளங்கும்.

வாழ்க்கையென்பது நொய்மையுடையதன்று. ஆற்றல் மிக்குடையதாக அமைய வேண்டும். செத்து மடிவது வாழ்க்கையின் நோக்கமன்று. வாழ்க்கை, ஆக்கத்தின் பாற்பட்டதாக அமைய வேண்டும். வாழ்க்கை பொய்யன்று; புழுக்கூடுமன்று: துன்பச்சுமையுமன்று. வாழ்க்கை அருமை யுடையது; ஆற்றலுடையது. இசை போன்ற இன்ப அமைப்பு உடையது. வாழ்க்கை அறிவுத் தன்மையுடையது. உயிர்க்கு இயற்கை, அறிவுடைமை, ஐயோ, பாவம்! சுற்றுச் சூழ்நிலைகளால் உயிர், தான் பெற்றிருக்கும் இயற்கையறிவை இழக்கிறது. உயிர் வாழ்க்கை ஆற்றல் மிக்குடையது. ஆனாலும் அவலத்தால் அழிகிறது. மானுடப் படைப்பு சோற்றுக்கும் தண்ணீருக்குமாக ஏற்பட்டதன்று. அஃதொரு புகழ்பூத்த படைப்பு. ஆம்! இறைவனின் ஐந்தொழிலுக்குத் துணையாக அமைந்த படைப்பு. படைப்பாற்றலுடையதாக அமைந்த பிறப்பு. மானுடப் பிறப்பு. ஆனால் எத்துணைபேர் இப்படி வாழ்கிறார்கள்? அவரவர் வயிற்றுக்குச் சோறு தேடுவ திலேயே இன்னும் வெற்றி பெறவில்லையே! எப்படி வெற்றி பெறமுடியும்? ஒவ்வொரு மனிதனும் அவனைப் பற்றியே

கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறான். மற்றவனைப் பற்றி எண்ணிப்பார்க்க மறுக்கிறான். மனிதர்களை மையமாகக் கொண்டு கட்சிகள் தோன்றி இயக்கும் கொடுமை இந்த நாட்டில்தானே நடக்கிறது! நாடு, மக்கட் சமுதாயம்-என்ற கவலையா வந்திருக்கிறது? விலங்குகளும் கூடத் தம் வயிற்றுக்கு உணவு தேடித் தின்று வாழ்ந்து விடுகின்றன. மானிட சாதியைப் போல விலங்குகளில் பட்டினிச் சாவைக் காணோம். ஆனால், நாட்டைவிட, சமுதாயத்தைவிடத் தான் பெரிது என்ற உணர்வு மானிட உலகில் வளர்ந்துவருகிறது. இதன்விளைவுதான் ஒழுக்கக் கேடுகள்! நீர்வாயுக் குண்டுகளை ஒத்த கொலைக் கருவிகள்! ஆற்றல் மிக்க வாழ்க்கை உலகத்தையே வாழ்விக்கும், மாநிலம் பயனுற வாழ வகைசெய்யும். ஆற்றலோடு வாழ்பவர்கள் நிலத்திற்குச் சுமையென ஒரு பொழுதும் வாழார். நிலத்திற்குப் பொருள் சேர்ப்பர்; புகழ் சேர்ப்பர்; நிலத்தின் பயனைக் கூட்டுவர்; இங்ஙனம் பயனுற வாழ்வதற்காகச் செய்யும் வழிபாடே ஆற்றல் வழிபாடு-சக்தி வழிபாடு!

*நல்லதோர் வீணை செய்தே—அதை*
*நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?*
*சொல்லடி சிவசக்தி!—எனைச்*
*சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்!*
*வல்லமை தாராயோ!—இந்த*
*மாநிலம் பயனுற வாழ்வதற்கே!*
*சொல்லடி சிவசக்தி!—நிலச்*
*சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ!*

என்பார் பாரதி.

உயிர் வாழ்க்கைக்குத் துணை உடல். உயிரின் உள்ளம் விரும்புகிறபடி உடல் செயற்படவேண்டும். உயிர்-உள்ளத்தின் விரைவுக்கு இசைந்தவாறு உடல் இயங்க வேண்டும். இது பாரதியின் பிரார்த்தனை! ஆம்! உடலுக்கு அடிமைப்

பட்டவர்கள் ஊனைப் பெருக்கிக் கொழு கொழுவென்று வளர்த்து ஊதுடலை உயிர்க்குச் சுமையாக்கி எய்த்துக் களைத்திடச் செய்வர். ஐயகோ! அவர்களின் உயிர் சிறுத்துப் போய் உடலுக்கு அடங்கி நடப்பர்; உடற்பொறிகளின் மீது உயிரறிவு ஆணை செலுத்தாது; பொறிகள் உயிரை ஆட்டிப் படைக்கும். முடிவு, நோய்க்கு விருந்து! இகழ்வின் சின்னம்! நிலத்திற்குச் சுமை! ஆதலால் பாரதி, அடிக்கப்படும் பந்து விரைந்து எழுதல் போல, உள்ளத்திற்கு இசைந்தவாறு இயங்கும் உடல் வேண்டுகிறார்.

மனம்! - அது ஒரு புதிர். அதை தன்முறையில் பழக்கினால் அதற்கு இணையான துணை வெறொன்றில்லை. ஆனால், இயல்பில் மனம் ஆசைப்படும். ஆசையென்பது நோக்கம் இல்லாதது; நிர்வாணமான துய்த்தல் வழிப்பட்டது. தன்னைப் பற்றியே வட்டமிடும் உணர்வுக்கு ஆசையென்று பெயர். இத்தகு மனம் உயிரை அலைக்கழிக்கும். ஆதலால், பாரதி ஆசையற்ற மனம் கேட்கிறார். உயிர், நாள்தோறும் புதிய புதிய உணர்வுகளால் ஒளிபெற்றுத் திகழவேண்டும். பழைய பஞ்சாங்கத்தையே சுற்றிக் கொண்டிருக்கக் கூடாது.

*"............................நித்தம்*
*நலமெனச் சுடர்தரும் உயிர்கேட்டேன்"*

என்பார் பாரதி.

துன்பங்கள் இயற்கை. அவை மிகுதியும் உடலைச் சார்ந்தவை. உடல் சுடப்படுவதால் உயிர்க்குத் தீங்கு வரப் போவதில்லை. அதுவும் ஆற்றல் மிக்க அன்னையைப் பாடிக் களித்துப் பரவிடும் உயிர்க்கு எம்மட்டு? என்ன செய்யும்? அறிவு வேண்டும்; அந்த அறிவும் உறுதியானதாக இருக்க வேண்டும்; மானிட வரலாற்றில் உறுதியானதாக இருக்க வேண்டும். மானிட வரலாற்றில் அறிவில்லாமல் கெட்டவர்கள் மிகக்குறைவு. ஆனால் அறிவு பெற்றிருந்தும் அதில் உறுதியும் கடைப்பிடிப்பு இல்லாமல் கெட்டவர்களே மிகுதி.

நல்லது என்று தெரிந்து தெளிந்த ஒன்றை உறுதியாகக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும். இவையெல்லாம் ஆற்றலை வழிபடுவோரின் அடையாளங்கள்; குணங்கள்; ஒழுக்கங்கள் இதனை,

*விசையுறு பந்தினைப் போல் – உள்ளம்*
*வேண்டிய படிசெலும் உடல்கேட்டேன்;*
*நசையறு மனங்கேட்டேன்; – நித்தம்*
*நவமெனச் சுடர்தரும் உயிர்கேட்டேன்;*
*தசையினைத் தீசுடினும்–சிவ*
*சக்தியைப் பாடுதல் அகங்கேட்டேன்!*
*அசைவறு மதிகேட்டேன்; – இவை*
*அருள்வதில் உனக்கெதுந் தடையுளதோ?*

என்று பாரதி பாடுகின்றார்.

இன்றைய தமிழகத்தின் நிலை இரங்கத்தக்கது. இன்றைய தமிழகத்தில் வாழ்வோர் சிலரே; பிழைப்பு நடத்து வோர் பலர். இந்தச் சூழ்நிலையில் பாரதியின் அடிச் சுவட்டில் ஆற்றலை – அன்னை பராசக்தியை வழிபட்டுப் பாரதி பெற்ற திறன்களைப் பெற்று மாநிலம் பயனுற வாழ்தல்; இன்று காலம் விதித்துள்ள கட்டளை.

**7**

# மகாகவி பாரதியாரின் சிந்தனைகள் – I

பாரதி, காலம் தந்த கவிஞன். இல்லை, இல்லை! ஒரு காலத்தை உருவாக்கிய கவிஞன் ! அந்தக் காலத்திற்கு அவன் கவியரசனாக விளங்கினான்! அடிமைப்பட்டுக் கிடந்த நாட்டில் பாரதி, சுதந்திரக் கவிஞனாக விளங்கினான்! பாரதி காலம் சமுதாயத்தில் அரசியல் அடிமைத் தனம், பொருளாதார அடிமைத் தனம், சாதி மதங்களின் விலங்குகள், மூட நம்பிக்கைகளின் ஆட்சி, எங்கும் சிறுபிள்ளைத் தனம்-விளையாட்டுத்தனம் நிறைந்திருந்த வேடிக்கை மனிதர்கள் பெருகி வாழ்ந்திருந்த காலம்! இந்த யுகத்தில் பாரதி பிறக்கிறான்; தனக்கென ஒரு காலத்தை உருவாக்கிக் கொள்கிறான். பாரதி, அடிமையாகப் பிறந்து அடிமையாகவே செத்துப் போனான்! ஆனால், பாரதியின் ஆன்மா, சுதந்திர தேவியை தரிசனம் செய்தது. அதனால், ஆனந்த சுதந்திரப் பள்ளு பாடினான்!

பாரதி, பாரத சமுதாயத்தை முதன் முதலாகப் படைக்கிறான். பாரதிக்கு முன்பு பாரத நாட்டில் பாரத சமுதாயம் இருந்ததில்லை; எண்ணற்ற சாதிகள் இருந்தன;

கணக்கற்ற மதங்கள் இருந்தன. முதன் முதலாக பாரதி சாதி, மத வர்க்கங்களைக் கடந்த-ஒன்றுபட்டு நின்ற பாரத சமுதாயத்தைக் காண்கிறான்! படைக்கிறான்! பாரதி காலத்தில் பாரதியால் பாரத சமுதாயம் படைக்கப் பெற்றது. ஆயினும் பாரதி கண்ட சமுதாய அமைப்பு உருவாயிற்றா? நிலைபெற்று விளங்குகிறதா? இன்றும் பாரதி கண்ட சமுதாய அமைப்பு உருக்கொள்ள மறுக்கிறது. எங்கும் மொழி, இனம், சாதி, மத அமைப்புகள்! அவ்வழிக் கலகங்கள்! பொது நலன்கள் புறக்கணிக்கப் படுகின்றன. “நமக்குத் தொழில் கவிதை நாட்டுக்குழைத்தல்” என்று பாரதி கூறிய வழியில் பாரதம் செல்லவில்லை! இன்று போகிற போக்கைப் பார்த்தால் நாட்டையே தேடவேண்டிய அவசியம் வந்து விடும்போல் தெரிகிறது.

பாரதி காலத்தில் நமது நாட்டின் மக்கள் தொகை முப்பது கோடி! இன்று மக்கள் தொகை பல கோடியாகப் பெருகி வளர்ந்துள்ளது. பாரதி, பாரத நாட்டின் மக்கள் அனைவரும் ஒரே சமுதாயம் என்று கூறுகிறான். பாரதி விரும்பிய சமுதாயம் உருக் கொண்டதா? பாரதியின் எண்ணம் நிறைவேறியதா? சமுதாயம் என்ற அமைப்பு எளிதில் உருவாவதில்லை. தன்னயப்புள்ள மனிதர்கள் தன் முனைப்புள்ள மனிதர்கள் சமுதாயம் உருவாகத் தடையாக இருக்கின்றனர். கூட்டம் வேறு; கூடி வாழ்தல் வேறு. சமுதாய அமைப்பில் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் பொறுப்பும் கடமையும் உரிமையும் உறவும் உடையவர்களாக விளங்குபவர். ஒருவர் எல்லோருக்காகவும் எல்லோரும் ஒருவருக்காகவும் என்கிற வாழும் முறைமை சமுதாய அமைப்பில் நிலைபெற்று விளங்கும்.

பாரத சமுதாயத்திற்கு ஏற்றது தனியுடைமைச் சமுதாயமல்ல. பொதுவுடைமைச் சமுதாயமே என்று பாரதி எண்ணிப் பாடியுள்ளான்.

*முப்பது கோடி ஜனங்களின் சங்கம்*
*முழுமைக்கும் பொதுவுடைமை*
*ஒப்பிலாத சமுதாயம்*
*உலகத்துக் கொரு புதுமை!*

என்பது பாரதியின் பாடல்!

இன்று வரை பாரதி விரும்பிய சமுதாயம் உருக் கொள்ளவில்லை! பாரத சமுதாயம் பொதுவுடைமைச் சமுதாயமாகவும் வளரவில்லை! சுதந்திரத்திற்கு முன்பிருந்த பின்னடைவுகள் சுதந்திரப் போராட்டத்தின் போது அமுங்கிக் கிடந்தன. நாடு சுதந்திரம் பெற்ற பிறகு மீண்டும் பிற்போக்குத் தனங்களும் பின்னடைவுகளும் தலைதூக்க லாயின. இது வருந்தத்தக்க நிகழ்ச்சி; வரலாறு.

வரலாறு மாற வேண்டாமா? பாரத சமுதாயம் வளர வேண்டாமா? ஆம்! கவிஞன் பாரதி, பாரத சமுதாய மாற்றத்துக்குரிய உந்து சக்தியைத் தந்தான்! ஆயினும், மாற்றம் ஏற்படவில்லை. பொதுவுடைமைச் சமுதாய அமைப்பே இன்று உலக அரங்கில் கேள்விக்குறி! ஆயினும் மனிதன் உலகாயதத்திலும் பொருளாதாரத்திலும் ஆன்மிகத்திலும் வளர்ந்து முழு மனிதன் ஆக வேண்டின் பொதுவுடைமைச் சமுதாய அமைப்பே துணை செய்யும். உடைமைகள் கருவிகளே தவிர இலக்குகள் அல்ல. மானுடத்தின் இலக்கு இங்கு அமரர் இன்பம் காண்பது. மானிடர் பிறரைக் கொல்ல நினையாமல் வாழும் மனச் சான்று மிக்க வாழ்க்கையை நடத்தும் முறை காண்பது. இந்த உலகை இன்பக் கேணியாக்கல்! இதுவே பாரதியின் சிந்தனை!

# 8

# மகாகவி பாரதியாரின் சிந்தனைகள் - II

இந்தியா ஒரு வளமான நாடு. இயற்கை வளங்களும் தாதுப் பொருள்களும் நிறைந்த நாடு. நாடு சுதந்திரம் பெற்ற பிறகு நூறாயிரம் பிரச்சினைகள், பின்னடைவுகள் இருப்பினும் இவற்றையெல்லாம் கடந்து நாடு திட்டமிட்ட திசையில்-வளர்ச்சி பொருந்திய வழியில் நடந்து வந்திருக்கிறது. நாட்டில் பசுமைப் புரட்சி நடந்தது. ஆலைகளும், தொழிற்சாலைகளும் தோன்றின. நாடு, உணவில் தன்னிறைவு அடைந்தது. ஆயினும், நாட்டின் வருவாய் உயர்ந்த அளவுக்குத் தனி நபர் வருவாய் கூடவில்லை. ஏழை-பணக்கார ஏற்பாடு இருந்து கொண்டே இருக்கிறது. செல்வர்கள் மேலும் செல்வர்கள் ஆயினர்; ஆகிக் கொண்டுள்ளனர். ஏழைகள் மேலும் ஏழைகள் ஆயினர்; ஆகிக் கொண்டுள்ளனர். மனிதர் உணவை மனிதர் பறிக்கும் அவல நிலையே வளர்ந்து வருகிறது.

"மனிதர் உணவை மனிதர் பறித்தல்" என்ற பாரதியின் வாக்கு ஆழ்ந்து கவனிக்கத் தக்கது. மனிதன் கூடி வாழப் பிறந்தவன்; கூடி உண்ணப் பிறந்தவன். இந்த உலகில்

ஏராளமான உணவுப் பண்டங்கள் உள்ளன. எல்லாரும் உண்டு வாழப் போதும். ஆனால், மனிதனின் ஆசை விட்ட பாடில்லை. தனக்கென்று வாரிக் குவித்துக் கொள்வதால் இலர் பலர் ஆயினர். அவன் ஏன் இப்படிக் கெட்டுப் போனான்?

மேலும் பாரதி "மனிதர் நோக மனிதர் பார்க்கும்" வாழ்க்கையை வெறுக்கிறான்; மறுக்கிறான். இதுவரையில் இப்படி வாழ்ந்தது போதும்! இனிமேலும் இந்த அசுர வாழ்க்கை வேண்டாம் என்கிறான். மனிதர் உணவை மனிதர் பறித்து வாழ்தலும், மனிதர் நோக மனிதர் பார்த்து வாழ்தலும் அறிவற்ற வாழ்க்கை என்று திட்டுகிறான். புலனில் வாழ்க்கை என்று ஏசுகிறான்.

மனிதர் நோக மனிதர் பார்த்து வாழும் பாழ்பட்ட வாழ்க்கை ஏன் தோன்றியது? பாரதி அதன் காரணத்தைக் கண்டு பிடித்து மாற்ற விரும்புகிறான். விதி நம்பிக்கைக் கொள்கை வந்த பிறகுதான் இந்த அவலம் கால் கொண்டது. ஒருவர் துன்புறுவதற்கு விதியே காரணம்! அந்த விதியை மாற்ற யாராலும் இயலாது என்ற மூடக் கொள்கை வளர்ந்ததால்தான் இந்திய மக்கள் எழுச்சியை இழந்தனர்; தன்னம்பிக்கையை இழந்தனர். அறிவியல் சார்ந்த விழிப் புணர்வை இழந்தனர். வாழ்க்கை மாறாது. அதனை மாற்றவும் இயலாது என்ற நம்பிக்கைக்கு வந்து விட்டனர். பாரதி இந்த விதிக் கொள்கையைப் புதுப்பிக்க விரும்பினானன். எனவே," இனி ஒரு விதி செய்வோம்! அதை எந்த நாளும் காப்போம்!" என்றான்! பாரதி விரும்பிய விதி என்ன?

*"இனி ஒரு விதி செய்வோம்! அதை*
*எந்த நாளும் காப்போம்'*
*தனி ஒருவனுக் குணவிலை எனில்*
*ஜகத்தினை அழித்திடுவோம்!"*

தனி ஒருவன் யார்? ஒரு மனிதன்–எண்ணிக்கையால் அல்ல! யாராலும் எவராலும் பேணப்படாத மனிதன்! – அநாதை என்பது பொருள்! அவனுக்கும் சோறு இருக்க வேண்டும்! அவனுக்கும் சோறு இருக்கும் படியாகச் செய்வது சமூகத்தின் பொறுப்பு! உலகத்தின் பொறுப்பு! தனி ஒருவன் பட்டினி கிடப்பதற்கும் நொந்து வாழ்வதற்கும் சமூகமே காரணம்! சமூகமே பொறுப்பு! ஆதலால், தனி ஒருவனுடைய விதி எதுவோ, எப்படியோ? கவலை இல்லை! அந்தத் தனி ஒருவனுக்குச் சோறு தேவை! அதை இருக்கும் படியாகச் செய்ய வேண்டியது சமூகத்தின் பொறுப்பு! சமூகம் அந்தப் பொறுப்பை உணர்ந்து செய்யாவிடில் இந்த உலகம் அழிக்கப்பெறும் என்று பாரதி ஆவேசமாகப் பேசுகிறான்.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

என்ற திருக்குறளிலிருந்து பாரதி வெகுவாக வளர்ந்திருக்கிறான். வள்ளுவர், "உலகியற்றியானைப்" பொறுப்பாளன் ஆக்குகிறார். பாரதி, உலகத்தையே பொறுப்பாக்கினான்.

ஆம்! மனிதன் ஒரு சமூகப் பிராணி! ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்தல் தவிர்க்க இயலாத. இங்ஙனம் மனிதர்கள் சமூகமாகக் கூடி வாழ்தலே ஒப்புரவு வாழ்க்கை. ஒப்புரவினால் கூடி வாழும் வாழ்க்கைக்கு ஈடான வாழ்க்கை இந்த உலகத்திலும் இல்லை. புத்தேள் உலகத்திலும் இல்லை என்பது திருவள்ளுவர் கண்ட முடிவு. பாவேந்தன் பாரதிதாசனும் "உலகம் உண்ண உண்" என்றான். தனக்கென முயலாது பிறருக்கென முயலும் அறநெறி வாழ்க்கை மலர்ந்தால்தான் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும். பாரதியின் சிந்தனையில் கருக்கொண்ட பொதுமைச் சமுதாயம் காண்போம்.

**9**

# மகாகவி பாரதியாரின் சிந்தனைகள் - III

மகாகவி பாரதி, கீதையின் சாரத்தைப் பிழிந்து தருகின்றான். கடவுள் ஒருவர். அந்தக் கடவுள் ஒருவரும் ஊர், பெயர் இல்லாதவர், ஆனால், மக்கள் அவரவர் விருப்பம் போல வடிவங்கள், பெயர்களைக் கற்பிக்கின்றனர். அத்தகு பெயர்களில் கண்ணன் என்பதும் ஒரு பெயர். கண்ணனுக்கு உயிர்க்குல வேறு பாடு இல்லை. கண்ணன் எல்லா உயிர்களிடத்திலும் உயிர்க்கு உயிரதாக இருந்தருள் செய்கிறான்.

*"எல்லா உயிர்களிலும் நானே இருக்கிறேன்*
*என்றுரைத் தான் கண்ணபெருமான்!*
*எல்லாரும் அமரநிலை எய்தும் நன்முறையை*
*இந்தியா உலகிற்கு அளிக்கும்-ஆம்!*
*இந்தியா உலகிற்கு அளிக்கும்!"*

என்பது பாரதி வாக்கு! ஆம்! அமரர் உலகத்திற்கு எதற்காகச் சாதிமுறை? அமரர் உலகத்திலும் வேறுபாடா? வேறுபாடற்ற உலகமே அமரர் உலகம்! இஃது இந்தியாவின் செய்தி! ஆனால், மேலை நாடுகளிலும் வெள்ளையர்-கருப்பர்,

யூதர்-கிறித்துவர் என்ற சண்டைகள், கலகங்கள் இருப்பதைப் பார்த்து வருந்துகிறான்! உலகத்தில் நடைபெறும் இனவழிச் சண்டைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க மருந்தாக, "எல்லா உயிர்களிலும் நானே இருக்கிறேன்" என்ற செய்தியைத் தருகிறான்! ஆனால், இன்று இந்தியாவின் நிலை என்ன? சாதிச் சண்டைகள்! மதச் சண்டைகள்! இந்து-முஸ்லீம் பேதா பேதங்கள்! இவை பாரதியின் சிந்தனைக்கு-ஏன்? உப நிடதக் கொள்கைக்கே முரணானவை! எல்லா உயிர்களிலும் கண்ணன் இருக்கின்றான் என்ற நம்பிக்கை! இது பாரதப் பண்பாட்டின் இதயம்! இந்தியாவின் சமயம்! இந்தியா அமரர் உலகத்தைக் கூவி அழைத்து வழங்கிய அப்பரடிகள் பிறந்த நாடு! ஞானாசிரியரின் விதிமுறைகளை மீறி, நரகத்தையும் விரும்பி ஏற்றுக் கொண்டு அமரர் உலகத்தை அடையச் செய்யும் மந்திரத்தை எல்லோருக்கும் உபதேசித்த எம்பெருமானார் இராமாநுஜர் அவதரித்த புண்ணிய நாடு! இங்கு மதத்தின் பெயரால் கெட்ட போர் வேண்டாம்!

இந்தியா ஒரு நாடு! இமயம் முதல் குமரிவரை ஒரு நாடு! இந்தியாவில் வாழும் அனைவரும் குருதிக் கலப்புடைய ஒரே குலம்! ஒரே சிந்தனையுடைய ஒரே இனம்! இந்தியாவில் வாழும் அனைவரும் இந்திய மக்கள்! இந்தியாவில் வாழும் அனைவரும் சமம்! அவருள் உயர் பார்ப்பனரேனும் சரி, ஈனப் புலையரேனும் சரி வேறுபாடு இல்லை' எல்லாரும் ஓர் நிறையே! இந்திய மக்கள் சமமாகப் பாவிக்கப் படுவார்கள்! சமூக வாழ்க்கையில் பணம் பாதிப்புக்களை ஏற்படுத்தி விடுவதில்லை! இது பாரதி வாழ்ந்த காலத்தில்! ஆனால், இன்றோ எங்கும் பண மதிப்பீட்டுச் சமுதாயம்! பணம் கடுமையான பாதிப்புக்களை ஏற்படுத்தி "ஏழைகளை" உருவாக்கியுள்ளது. ஆனால், பாரதி "எல்லாரும் ஓர் விலை" என்கிறான்! என்று எல்லாரும் ஓர் விலையாகும் நாள் வரும்! இத்துடன் பாரதி நின்று விட்டானா? பாரதி, அவன் காலத்தில் மன்னர்களைப்

பார்த்திருக்கிறான்! அதனால், மன்னர்களின் மகுடங்களில் பாரதிக்கு இருந்த ஆசை அகல வில்லை! இந்தியர்க்ள எல்லோரையுமே இந்தியாவின் மன்னர்கள் ஆக்குகிறான்! இந்தியர்களுக்கு பாரதி அளிக்கும் மன்னர் பதவி அதிகாரப் பதவியல்ல. மன்னர் பதவி நிலை நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. மேலை நாடுகளில் மன்னர் பதவி அதிகார பீடம்! சுகபோகமுள்ள பதவி, இந்தியாவிலோ அப்படியல்ல.

*"மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்*
*துன்ப மல்லது தொழுதக வில்"*

என்று செங்குட்டுவன் வாயிலாக இளங்கோவடிகள் கூறுவதை எண்ணுக. இந்தியாவில் மன்னர்கள் மக்களின் நலம் காக்கும் சேவகர்கள். இந்தியாவை வளர்க்கும் கடமையும் பொறுப்பும் உள்ள மன்னர் பதவி! மன்னர் என்றவுடன் முடியைத் தேடாதீர்! மூளையைத் தடவுங்கள்! அறிவுக் கிளர்ச்சியுடன் அறிவறிந்த ஆள்வினையுடன் இந்தியாவை வளர்க்க, காக்கப் பணி செய்வீர்! இந்தியாவின் இயற்கை வளங்களைப் பாதுகாப்போம்! மேலும் வளர்ப்போம்! எல்லாருக்கும் எல்லாம் என்ற இடம் நோக்கி இந்த பாரதத்தை நடத்துவோம்! "இந்தியாவில் பட்டினிச் சாவு இல்லை என்ற புகழ்ப் பரணி பாடுவோம்! இந்தியாவில் எவரும் அமர நிலை எய்த முடியும்! இந்தியர்கள் அனைவரும் ஒரு குலம்! இந்தியாவில் அனைவரும் ஒரு விலை! அனைவரும் இந்நாட்டு மன்னர்! வாழ்க இந்தியா.

# 10

# பாரதிக்குப்பின் கவிதை வளர்ந்திருக்கிறதா?

இந்த நாட்டின் வரலாற்றில் பாரதியார் ஒரு மையப் புள்ளிபோல. அவர் அடிமையாகப் பிறந்தார்; அடிமை யாகவே வாழ்ந்தார்; அடிமையாகவே இறந்தும் போனார். எனினும் தமது கவிதையால் இந்த நாட்டு மக்களிடையே சுதந்திர உணர்வைத் தட்டி எழுப்பினார்.

திருவள்ளுவரையும், கம்பரையும்விட பாரதி வளர்ந் திருக்கிறார் என்று கூறலாம். கருத்தோட்டமும் நடை முறையில் இருக்கும் பாரதியின் கவிதைகளும் பாரதியின் வளர்ச்சியைக் காட்டுகின்றன.

> 'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
> கெடுக உலகியற்றி யான்'

என்றார் வள்ளுவப் பெருந்தகை. வள்ளுவர் வாழ்ந்த காலம் முடியாட்சிக்காலம்; அவர் முடியாட்சி மரபு முதலியவற்றை ஏற்றுக் கொண்டே பாடினார். எனவே தான் **'இயற்றியான்'** என்றார். பாரதியார் மக்களாட்சி யுணர்வு மிக்கோங்கியிருந்த காலத்தில் வாழ்ந்தவர். எனவே,

*'தனியொருவனுக்கு உணவிலை எனில்,*
*சகத்தினை யழித்திடுவோம்'*

என்றார். **தனியொருவனுக்கு** என்று பாரதியார் கூறுகிறாரே, அந்தத் தனியொருவன் யார்? அமைச்சரா? அதிகாரியா? பெரிய மனிதரா? அத்தகையவர்களுக்கு உணவு இல்லை என்ற நிலை வராது; சமுதாயத்தில் வாயும், கையும் உள்ள வர்கள் என்றும் எப்படியும் வாழ்ந்து விடுவார்கள். வாயும், கையும் இல்லாமல் சக்தியற்று மூலையிலே ஒதுங்கிக் கிடக் கின்ற ஒருவனைத்தான் பாரதி தனியொருவன் என்றார். உதைத்துக் கேட்பவனுக்கும்—தட்டிக் கேட்பவனுக்கும் கொடுக்காதவர்களும் கொடுத்துவிடுவார்கள். இதைத்தான் திருவள்ளுவர்,

*'ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்*
*கூன்கைய ரல்லா தவர்க்கு'*

என்றார்.

உள்ளத்தில் எழும் உணர்ச்சியை ஒழுங்குபடுத்தி—கேட்பவர் மனத்தில் நன்றாகப் பதியும்படி—அதைக் கேட்ப வர்களும் அந்த உணர்விலே தோயும்படி இருந்தால் அது கவிதைதான்—இலக்கியம்தான். இசைத் தமிழ் வேறு. இலக் கியம் வேறு என்றால், தேம்பாவணி, இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரம், நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தரின் திருப் பதிகங்கள் ஆகியவற்றை எதிலே சேர்ப்பது?

பாரதிக்குப்பின் கவிதை வளர்ந்திருக்கிறதா என்றால், பாரதியின் மரபு வளர்ந்திருக்கிறதா? பாரதி சொன்னதை விமரிசனம் செய்து சொல்லும் திறமை வளர்ந்திருக்கிறதா? என்றுதான் பார்க்கவேண்டும். பாரதியிடத்திலே நற்சான்று பெற்ற கவிஞர் புரட்சிக்கவி பாரதிதாசன். 'யாமறிந்த புலவரிலே'—என்ற பாரதியின் கருத்தை வைத்து—அதன் விளக்கமாக—பாராட்டாக பாரதிதாசன் பாடியிருக்கிறார். நாவின் சுவையும், வயிற்றுச் சுவையும் மிகுதியும் உடைய மக்கள் வாழ்கின்றார்கள் என்பதையுணர்ந்த பாரதிதாசன்,

'தமிழ் எங்கள் இளமைக்குப் பால்'

என்றும்,

'உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே'

என்றும் பாடுகிறார்.

'தனியொருவனுக்கு உணவில்லையெனில்
சகத்தினை அழித்திடுவோம்'

என்ற பாரதியைவிட,

'உலகம் உண்ண நீ உண்;
உடுத்த உடுப்பாய்'

என்ற பாரதிதாசன் வளர்ந்துதான் இருக்கிறார், கவிதை வளர்ந்துதான் இருக்கிறது. 'சகத்தினை அழித்திடுவோம்' என்று உணர்ச்சி வேகத்தில் பாரதி பாடிவிடுகிறார்; ஆத்திரத்தின் உச்சியில் நின்று பாடுகிறார், பாரதிதாசனுக்குத் தன்னம்பிக்கை இருக்கிறது. எனவே,

'நடத்து உலகத்தை; நான்கு புறமு
முள்ள சுவரை இடித்துவிடு'

என்று பாடுகிறார். வேற்றுமைகளை யெலலாம் விட்டு நாட்டோடு நாடு இணைத்து மேலேறு என்று பாடுகிறார். 'உடைமை' அனைத்தும் மக்கட்குப் பொதுமை என்று பாடுகிறார்.

குளத்தில் விழுந்தவனை எட்டிப் பிடித்துக் காப்பாற் றத்தான் கை என்பதுபோல சமுதாயத்தில் வீழ்ச்சியுற்ற வர்களை எழுச்சியுறச்செய்து வாழ்விக்கத்தான் கவிதை.

பாரதிக்குப்பின் கவிதை இலக்கியம் வளரவில்லை என்று கூறமுடியுமா? மனித சமுதாயம் வளர்ந்திருக் கிறது—வளர்ந்து கொண்டிருக்கிறது—வளர வேண்டும். அது வளரவில்லை என்பது பிற்போக்குத்தனமானது. உணர்ச்சி படைத்த கவிஞனை—சிந்தனை உணர்வுடைய கவிஞனை வளரவில்லை என்று எப்படிக் கூறமுடியும்? 'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்' என்று பாடிய திருவள்ளுவருக்குப்

பிறகு, 'தனியொருவனுக்கு உணவிலை யெனில்' என்று பாடிய பாரதிக்குப் பிறகு, 'உலகம் உண்ண உண், உடுத்த உடுப்பாய்' என்று பாடிய பாரதிதாசன் பாரம்பரியத்திற்கு மேலாகத் தமிழ்த் தந்தை திரு.வி.க. பாடியிருக்கிறார்.

*'அண்டையன் பசியால்வாட*
*அணங்கொடு மாடிவாழ்தல்*
*மண்டையன் குற்றமன்று*
*மன்னிடும் ஆட்சிக்குற்றம்'*

என்று பாடுகிறார் தமிழ்த்தந்தை திரு.வி.க.

துரியோதனாதியரின் கொடுமைகளைப் பாஞ்சாலி சபதத்தில் பாரதியார் மிக அழகாகப் பேசுகிறார். மன்னனின் கொடுமையைப் பாரதிதாசன் பேசுகையில்,

*'சிரமறுத்தல் வேந்தனுக்குப்*
*பொழுதுபோக்கும் சிறியகதை;*
*நமக்கெல்லாம் உயிரின் வாதை'*

என்கிறார். இரண்டே வரிகளில், ஆதிக்கத்தின் பாற்பட்ட மன்னனை—ஆட்சிக்கேட்டை வன்மையாகச் சாடுகிறார்.

*சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச்*
*செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்'*

என்றார் பாரதியார். இதன் பொருள் பல்கலைச் செல்வங்களையும் பிற மொழிகளில் படியுங்கள் என்பதன்று. பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை நமது தமிழ்மொழியிலே ஆக்கித் தருதல் வேண்டும் என்றுதான் பாரதி கூறினார்.

**'.......துறைதோறும் நூல்கள் ஒருத்தர்தயை இல்லாமல் ஊறிடும் தமிழில்'** சலசலவென நீரோடைபோல வெளி வரவேண்டும் என்கிறார் பாரதிதாசன். அதாவது பாரதியின் கருத்தை மேலும் தெளிவாகக் கூறுவதுபோல, படித்தவர்—வெள்ளை வேட்டிக்காரர்—மேல் மட்டத்தில் வாழ்பவர்கள் ஆகியோர் எவருடைய தயவும் இல்லாமல் சாதாரணமான தமிழில்—பல்துறை நூல்களும் வெளி வரவேண்டும் என்கிறார்.

'பிறிதோரிடத்தில் 'தமிழ்மொழியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்' என்றார். பாரதிதாசன் சாடுவதெல்லாம் பிற்போக்கான மதத்தையும், மதச் சடங்குகளையுமேயாகும். மதத்தின் அடித்தளமான கோட்பாடுகளை அவர் சாடவில்லை. உலகத்தில் வாழுகின்ற எல்லா உயிர்களும் இறைவனின் திருமேனி என்பதே மதத்தின் அடித்தளக் கொள்கை; பிறருக்குத் தீங்கிழைத்து விட்டுத் தனக்கு நலன் தேடுவதான பேராசைக் கொள்கையை அன்று தொட்டே மதம் எதிர்த்து வந்திருக்கிறது.

*மடமையுற்ற வாழ்க்கையை*
*மடங்கள் தந்த தாதலால்*
*கடவுளில்லை கடவுளில்லை*
*கடவுளென்ப தில்லையே*

என்றார் நண்பர் ஜீவானந்தம். 'ஜீவா' மதத்தை எதிர்க்கிறார் என்றால், குப்பை கூளம் நிறைந்த பிற்காலச் சமயக் கருத்துகளைத்தான் எதிர்க்கிறார். மனித உலகத்தை அச்சத்திலிருந்து விடுதலை செய்து, அன்புணர்ச்சியிலேயே வளர்க்கவேண்டிய மதம் தனது கடமையிலிருந்து தவறிவிட்டது. எனவேதான் பிற்காலத்தில் மதம் பல தாக்குதல்களுக்கு இலக்காக வேண்டியதாயிற்று.

பொதுவாக பக்தியிலே மனம் வளர்ந்திருக்கிறதென்றால் சிந்தையில் செம்மை வளர்ந்திருக்கவேண்டும்—செழுமை மலர்ந்திருக்க வேண்டடம. இன்று சோஷலிசம் பற்றிப் பெரும்பாலும் எல்லோரும் பேச ஆரம்பித்து விட்டார்கள். இதனை மார்க்ஸிஸ்டுகள் ஒத்துக்கொள்வதில்லை.

*'இரைபோடும் மனிதருக்கே*
*இரையாகும் வெள்ளாடே—வீண்*
*அனுதாபம் கண்டு*
*மதிமோசம் போகாதே'*

என்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மிக அழகாகப் பாடுகிறார். சுரண்டும் வர்க்கத்தைச் சார்ந்தவன் பாட்டாளிக்கு என்றாவது ஒருநாள் வடைபாயசத்தோடு சோறு போடுவான் - வேட்டி எடுத்துக் கொடுப்பான். இதைப் பார்த்து அந்த ஆளையும் நம்பக்கூடாது. அவனுடைய செயல் சுயநலத்தின் பாற்பட்டது.

'உள்ளம் என்பது ஆமை—அதில்
உண்மை என்பது ஊமை
சொல்லில் வருவது பாதி—நெஞ்சில்
தூங்கிக் கிடப்பது மீதி"

என்பது போன்ற அருமையான பல தத்துவப் பாடல்களைக் கவிஞர் கண்ணதாசன் பாடியிருக்கிறார். இத்தகைய கவிஞர்கள் எண்ணற்றோர் இருக்கின்றனர். அத்தகைய கவிஞர்கள் நம்மோடு வாழ்வதாலேயே அவர்களையெல்லாம் குறைத்து மதிப்பிடக்கூடாது. பாரதிக்குப் பின் கவிதை இலக்கியம் வளர்ந்திருக்கிறது—வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது - வளர வேண்டும். பாரதிக்குப் பிறகு, இந்த நாட்டின் வளர்ச்சித் திட்டங்களையும் பிற முன்னேற்றங்களையும் பாடும் சுதந்திரக் கவிஞர்களும், சோஷலிஸக் கவிஞர்களும் தோன்றித்தான் இருக்கின்றனர்.

'தம்மின் தம்மக்கள் அறிவுடைமை ஞாலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது'

என்றார் திருவள்ளுவர். அப்பாவைவிட மகன் அறிவு வளர்ந்தவனாகத்தானிருப்பான்; அவன் தனது தந்தை என்பதற்காக எழுந்து மரியாதை கொடுப்பான். அது போல பாரதி, கவிதையுலகத்தின் தந்தையாக விளங்குகிறார். அதற்குரிய மரியாதையை நாம் கொடுத்துத்தானாக வேண்டும். எனினும் மரியாதை கொடுப்பதை வைத்துக்கொண்டு பாரதிக்குப் பிறகு கவிதை இலக்கியம் வளரவில்லை என்று முடிவு செய்யக் கூடாது; முடிவு செய்யாதீர்கள். பாரதிக்குப்பின் கவிதை வளர்ந்திருக்கிறது-வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இனிமேலும் வளரும்.

# 11

## பாரதியின் இலட்சியம்

பாரதி தமிழன்-தமிழனாகப் பிறந்து-வாழ்ந்து வளர்ந்து புகழ்க்கொடி நாட்டியவன். அவனுக்குத் தமிழ்மொழி யிடத்தில் அன்பு உண்டு-ஏன் பாரதி ஒரு தமிழ்ப் பித்தன் என்றுகூடக் கூறலாம்.

*'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்*
*இனிதாவ தெங்கும் காணோம்"*

என்று பாடுமளவுக்கு

*"தெள்ளற்ற தமிழ் அமுதின் சுவை கண்டார்*
*இங்கு அமரர் சிறப்புக் கண்டார்"*

என்று செம்மாந்து பேசுமளவுக்கு அவன் தமிழ் மொழியில் ஊறித் திளைத்தவன். "புத்தம் புதிய கலைகள் மேற்கே மெத்த வளர்வதால் இன்று அக்கலைகளைப் பெறாத தமிழ்ச் சாதியைப் பார்த்து, "தமிழ்ச் சாதியே காலவெள்ளத்தில் கரைந்து அழிந்து போக எண்ணமா?" இல்லை, இணையற்ற வாழ்வில் செம்மாந்திருக்க எண்ணமா?" என்று சீற்றத்துடன் மான உணர்வைத் தூண்டும் முறையில் கேட்கிறான். இந்த இடங்களையெல்லாம் நோக்கும்போது பாரதி தமிழ்

மொழியினிடம் பற்றும் பக்தியும் பைத்தியமும் பிடித்தவனாக வாழ்ந்திருக்கிறான் எனலாம். ஆயினும் இவற்றை வைத்துக் கொண்டு மட்டும் பாரதியை எடை போட்டுவிட முடியாது.

வாழ்க்கையின் இயல்பும், அதில் தோன்றும் வெவ்வேறு ஆசைகளும் வளர்ச்சி நோக்குடையன. ஒரு குடும்பத்தில் தலைவனும் தலைவியுமாக இருவர் இருப்பினும் இருவரும் இருவேறு பண்புகளைப் பெற்றிருப்பினும், குடும்பம் என்றா கும்போது ஒருவர் மற்றவருடன்-இணைந்து வாழ்கின்றனர். பின் அவர்களே அண்டை அயல் வீட்டாருடன், அந்த ஊரிலுள்ள எல்லா குடும்பங்களுடன் ஒத்து இணைந்து வாழ்கின்றனர்— அதுதான் தலைசிறந்தது என்றும் எண்ணுகின்றனர். ஊரிலுள்ள குடும்பங்கள் அனைத்தும் நாட்டுக் குடும்பத்தில் இணைந்து ஒத்துக் கரைந்து போகின்றன. அது போல பாரதி தமிழ்க் கவிஞனாக வாழ்ந்தான். ஆனால் நாட்டைவிட்டு விலகி வேறாகி வாழவில்லை. நாட்டுடன் ஒட்டி வாழக் கற்றுக் கொண்டான். நான் தமிழனாகவும் வாழமுடியும். அந்த நிலையில் இந்த பாரத நாட்டுடன் ஒட்டி ஒரு பாரதக் குடிமகனாகவும் வாழமுடியும் என்பதை அவன் நடைமுறையில் காட்டினான்.

தனிமனிதன் தனித்துத் தன்னூருடன் மட்டும் வாழாது. நாட்டுடன் உலகுடன் ஒட்டிவாழ எண்ணும் போதுதான் பரிபூரண மனிதனாக-முழு வளர்ச்சியடைந்த மனிதனாகத் திகழ்கிறான். அவன் ஊருடன் நாட்டுடன் உலகுடன் ஒத்துவராதபோது அதனால் பயனில்லை. வளர்ச்சியும் இல்லை. ஆகவே பாரதி தமிழனாகப் பிறந்து தமிழனாக வாழ்ந்தான். ஆனாலும் தேசியம், நாடு என்றபோது இந்த நாட்டின் ஒரு குடிமகன் என்று வாழ்ந்திருக்கிறான். தனிமனித வரலாறு நாட்டு வரலாற்றைத் திருப்பியதாக வரலாறு இல்லை. தேசத்தின் பொதுத்தன்மைகளே தேசத்தின் வரலாற்றை மாற்றும்; செம்மைப்படுத்தும். ஆகவே தமிழனாக வாழ்ந்து பாரத நாட்டுடன் இணைந்து கலந்தவன் பாரதி,

*"வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்*
*'வாழிய பாரத மணித்திரு நாடு"*

என்ற பாடலில் செந்தமிழையும் தமிழரையும் வாழ்த்திய பிறகுதான் பாரத நாட்டை வாழ்த்துகிறான். எனவே பாரதியார் மிகுதியும் வற்றுத்தியது தமிழ்த் தேசியமே என்றனர்.

பாரதி செந்தமிழை ஏற்றுக் கொண்டான். நற்றமிழை ஏற்றுக் கொண்டான். பாரத மணித்திரு நாட்டை ஏற்றுக் கொண்டான்-வாழ்த்துகிறான். அவன் தமிழ் பேசுபவனாக-தமிழ் இனத்தவனாக இருப்பதுடன் பாரத நாட்டுக் குடிமகனாக இருப்பதிலும் பெருமை கொள்கிறான்-நாடு என்று வரும்போது பாரத நாட்டைக் காண்கிறான்.

அறையின்றி வீடு இல்லை. வீடு இன்றி வீதியில்லை; வீதியின்றி ஊரில்லை; அனைத்தும் ஒன்றையொன்று பிரிக்க முடியாது சாய்ந்து தழுவி நிற்கின்றன. பாரதம் என்ற நாட்டில் இருக்கின்ற வீதி தமிழகம், வீடு தமிழினம். வீட்டிலுள்ள சிறு அறை நாம். அறையின்றி வீடோ, வீடின்றி வீதியோ, வீதியின்றி ஊரோ இல்லை. அதுபோலத் தனித்தமிழன் இன்றித் தமிழினமோ, தமிழினமற்ற பாரதமோ இல்லை. எனவேதான் மொழி, மொழி வழிப்பட்ட இனம், நாடு என்று சொல்லும்போது தமிழ், தமிழர், பாரத நாடு என்று பேசுகின்றான்.

பாரதி தமிழினத்தைத் தமிழ்ச்சாதி என்று பேசுவதில் பெருமை கொள்கிறான். எனவே பாரதி வற்புறுத்தியது தமிழ்ச்சாதியின் சிறப்பையே என்றனர்.

உண்மைதான், பாரதி தமிழ்ச்சாதியைப் போற்றுகிறான்-புகழ்கின்றான்-செம்மாந்து பாடுகிறான். ஆனால் பாரத சமுதாயத்தை மறக்கவில்லை.

சாதி வேறு, சமுதாயம் வேறு. மாம்பழம் என்று சொல்லும்போது கிளிமூக்கு, மல்கோவா, ருமேனியா முதலிய

பல சாதிகள் நினைவுக்கு வருகின்றன. மாம்பழச் சமுதாயத்தில் அமைந்த கிளிமூக்கு, மல்கோவா போன்றன வெல்லாம் பல்வேறு இனங்கள்-சாதிகள். அது போல பாரத சமுதாயத்தில் தமிழினம் ஒரு பிரிவு; சாதி, அதுபோலவே ஆந்திர இனம், கன்னட இனம், மலையாள இனம், வங்காள இனம் முதலிய பல உட்பிரிவுகளும் உள்ளன. இதனை நன்கு உணர்ந்துதான் பாரதி தமிழ் மக்களைக் குறிக்கும்போது தமிழ்ச்சாதி என்றும், தமிழர் உள்ளிட்ட பாரத மக்களைக் குறிக்கும்போது பாரத சமுதாயம் என்றும் பாடுகிறான்.

*"விதியே தமிழ்ச்சாதியை எவ்வகை விதித்தாய்"–*

என்று விதியை நோக்கி வினவும்போது விதித்தாய் என்று தமிழ்ச்சாதியைக் குறித்தவன், பாரத மக்களை வாழ்த்தும் போது "வாழ்க வாழ்க பாரத சமுதாயம் வாழ்கவே" என்று வாழ்த்திக் களிப்படைகின்றான். ஆகவே தமிழினத்தைத் தமிழ்ச்சாதி என்றும், பலவகை இனங்களையும் உள்ளடக்கிய பாரத மக்களைப் பாரத சமுதாயம் என்றும் வேறு வேறு பிரித்துக் காட்டுவதன் மூலம் சிறப்பாகப் பாரத தேசியத்தைச் சார்ந்து நிற்கின்றான்.

அடுத்து பாரத நாட்டைப் பாடும்போது பெற்ற உணர்ச்சி உணர்வைக் காட்டிலும் தமிழகத்தைப் பாடும் போது வெளியிடும் கவிதை உணர்ச்சி மிகச் சிறந்ததாக உள்ளது என்பது குறித்து, அதன் மூலம் தமிழ்த் தேசியம் என்று குறுகிய இடத்துள் பாரதியை அடைத்தார்கள்.

தன்மொழி, தன்னாடு இவற்றைப் பாடும்போதும் பேசும்போதும், எண்ணும்போதும் உணர்ச்சி மிகப் பாடுவதும், பேசுவதும் இயற்கையாயினும் பாரத நாட்டிற்குத் தந்துள்ள அளவுக்கு, சிறப்பைத் தமிழ்நாடு என்று பிரித்து எண்ணும்போது தமிழகத்திற்குப் பாரதி தரவில்லை.

பெயர், நாடு, நகர், ஆறு, மலை, ஊர்தி, படை, முரசு, தார், கொடி என்ற பத்தினையும் வைத்துச் சிறப்பித்துப்

பாடுவது தன்னேரில்லாத் தலைவனுக்கே ஆகும். இப்பத்தும் சேர்ந்தது தசாங்கம் என்பதும், அது தன்னேரில்லாத் தலைவனுக்கே உரியதாக வேண்டும் என்பதும் தசாங்கத்தின் இலக்கணம் ஆகும். அந்தத் தசாங்கத்தின் இலக்கணத்தை மனத்தில் இருத்திப் பார்க்கும் போது பாரதி பாரத நாட்டுக்குத்தான் தசாங்கம் பாடியுள்ளானே தவிர தமிழ் நாட்டிற்குப் பாடவில்லை. வீட்டிலே சிற்றன்னைகள் பலர் இருப்பினும் பெரிய அன்னைக்கு உரிய மதிப்பை, அப்பெரிய அன்னைக்கும் ஏனைய சிற்றன்னைக்குரிய மதிப்பிற் குறைவுபடாது சிற்றனையருக்கும் கொடுப்பது போல, பாரதக் குடும்பத்தில் பெரிய அன்னையாகிய பாரதத் தாய்க்குத் தரும் மதிப்பை, மற்ற தமிழ், தெலுங்கு, குஜராத்தி, வங்காள அன்னையருக்குத் தருவதனைக் காட்டிலும் சற்று அதிக மாகத் தர எண்ணியே தமிழ்த் தாய்க்குப் பாடாத தசாங்கத்தைப் பாரதத் தாய்க்குப் பாடியுள்ளான். அதில் அவன் நாடாக,

*"பேரிமய வெற்புமுதல்*
*பெண்குமரி ஈறாகும்*
*ஆரியநா டென்றேஅறி"*

என்று தன்னாட்டின் எல்லைக்குள்ளாக இமயத்தையும், குமரி முனையையும் காட்டுகின்றான்.

பாப்பாவுக்குக் கூறும்போது பாரதி தமிழ்நாட்டை மிகவும் வற்புறுத்துகிறான்.

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா என்று கூறுகிறார். அப்பாட்டின் இறுதியில் ஆன்றோர்கள் "தேசமடி" பாப்பா என்று முடிக்கின்றார். பாரதியைப் பொறுத்தவரையில் தேசம் என்ற சொல்லைப் பாரத நாட்டைக் குறிப்பதாகவே பல இடங்களில் பயன்படுத்தியுள்ளார். மேலும் அப்பகுதியிற் பாடும் பாரதி பாரத நாட்டிற்கு ஒன்றும் தமிழ்நாட்டிற்கு ஒன்றும்; பின்

பாரத நாட்டிற்கு இரண்டுமாக நான்கு கண்ணிகளை எழுதியுள்ளான். ஒற்றுமைப்பட்டு இணைந்து நிற்கும் பாரதத்தைப் பாப்பாவுக்கு வற்புறுத்தவே பாரதத் திற்கு மூன்று பாடல்களைப் பாடியுள்ளான். அப்படி யானால்,

"தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா"

என்ற பகுதிக்குப் பொருள் கொள்வது எப்படி? "பாரதத் தாயைத் தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற எங்கள் தாய் என்று கும்பிடு" என்று பொருள் கொள்ள வேண்டும். தமிழ்த்திரு நாடு ஒரு மகள்; அவளை ஈன்றெடுத்தவள் பாரதத்தாய் என்று பொருள் கொள்ள வேண்டும். ஏனென்றால், தமிழகம் உள்ளிட்ட பாரத நாட்டை—அன்று முப்பத்து முக்கோடி மக்கள் வாழ்ந்த பாரத நாட்டை ஒரு வட்டமைப்பாகக் காண்கிறான்.

"முப்பத்து முக்கோடி மக்களுக்கும் ஒரு சங்கம்—அது பொதுவுடைமை" என்று பாடுகின்றான். அவன் தமிழனாகப் பிறந்து—தமிழனாகச் செத்தபோதிலும், பாரதநாடு என்று நோக்கும் போது தன்னைப் பாரத நாட்டுக் குடிமகனாக ஆக்கிக் கொள்ளும் வழியில் வளர்த்து வைத்திருந்தான். ஏன்? அதனிலும் மேலாக உலகக் குடிமகனாக வளர்கின்ற வரையில் தன்னை வளர்த்துக் கொண்டிருந்தான். அதனால் தான் பெல்சியப் புரட்சியை—சோவியத் புரட்சியை அவன் வாழ்த்த முடிந்தது—வாழ்த்தினான். இத்தாலியைக் கண்டு மாஜினியின் வீரமொழிகளை மொழிபெயர்த்துத் தந்தான். ஆகவே அவன் தமிழனாகவும், பாரதக் குடிமகனாகவும், ஏன் உலக மகனாகவும் கைகொடுத்து நின்றான். எனவே சிறு எல்லைகட்கு உட்பட்ட மொழிவழித் தனித்து வாழும் தேசியங்களை ஏற்றுக் கொண்டவனல்லன் பாரதி.

மொழிவழித் தனித்தும் பிரிந்தும் வாழும் தேசியத்தை ஏற்றுக் கொண்டவனல்லன் என்றால் தன் மொழியையும்,

தன் இனத்தையும் பேணாதவன் என்று பொருளல்ல, எடுத்துக் காட்டாகப் பல்வேறு சிற்றாறுகள் இன்றிப் பேராறு இல்லை; பேராற்றுடன் கலவாத சிற்றாறுகளால் பெரும் பயன் இல்லை. பேராறுதான் சிறப்புடையது; சிற்றாறுகள் சிறப்புடையனவல்ல என்று ஒதுக்கித்தள்ளவும் முடியாது. பேராற்றின் மூலம் வாழ்வுக்குத் தேவையான சிறப்பு. சக்தி, மின்சாரம், போன்ற பெருஞ் சக்திகளைப் பெறமுடியும். ஆகவே பேராறுபோல பாரத தேசியம்; சிற்றாறுகள் போல பிறமொழி வழித் தேசியங்கள். பாரதி தமிழ் நாட்டையும் பார்த்தான். பாரத நாட்டையும் பார்த்தான். ஆனால் பாரத நாட்டினின்று பிரிந்த தமிழ் நாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை ஏன்? அகில உலக தேசியத்தை விட்டுப் பிரிந்து நிற்கும் பாரத தேசியத்தையும் ஏற்றுக் கொள்ளாத அளவுக்கு அவன் உயர்ந்திருந்தான்—தன்னை வளர்த்துக் கொண்டிருந்தான்.

இங்ஙனம் பாரத தேசியத்தைக் காணும் அளவுக்கு அவன் வளர்ந்திருந்ததாலேயே காவிரியாறுபோல் பிறி தில்லை. வேங்கடம்போல பிறிதில்லை என்று பாடாது,

> *"இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே"*
> *"மன்னும் இமயமலை எங்கள் மலையே"*

என்று பாடுகின்றான். இங்ஙனம் பரந்துபட்ட பாரத தேசியத்தைக் கண்டதால்தான் தமிழ்நாட்டு மணமகனுக்குச் சேரநாட்டுப்பெண் வேண்டும் என்கிறான். தமிழன் தமிழ்ப் பெண்ணை மாத்திரம் மணந்து கொண்டு தமிழ் நாட்டுக்குள்ளேயே "குண்டுசட்டிக்குள் குதிரை ஓட்டக் கூடாது" என்கிறான். மணமகளும் மணமகனும் நீர்விளை யாடச் சிந்து நாட்டுக் கரைக்குச் செல்ல வேண்டும் என்கிறான். இசைக்கும் பாடல் தெலுங்காக மிளிர வேண்டும் என்கிறான். எனவே தமிழ் மணமகன் தமிழ்த் தேசியத்தைத் தாண்டிக் கேரளத்தில் பெண்ணெடுத்து, இசையில் தெலுங்கை ஏற்று, பொருளாதாரத்திலே சிந்து நதித்

தேசியத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்; கேரள, ஆந்திர, பஞ்சாப் தேசியத்தையும் தமிழன் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறுவதன் மூலம் அனைத்துப் பிரிவுகளும் இணைந்த பார்த தேசியத்தை வற்புறத்துகிறான்.

பழங்காலத்தில் இந்தப் பாரத நாட்டில் 400-க்கும் அதிகமான பேரரசர்கள், 4000-க்கும் அதிகமான அரசர்கள், அவர்களுக்குக் கீழே கணக்கில் அடங்காத ஜமீன்தார்கள் இருந்தனர். நாடு, சிறுசிறு பகுதிகளாகப் பிரிந்து நின்று ஒருவருக்கொருவர் சண்டை சச்சரவுகள் வைத்துக் கொண்டதால்தான் அந்நியரிடம் அடிமைப்பட நேர்ந்தது. மொழி, உணர்வு என்பனவெல்லாம் தேசியத்தை ஒட்டியன அல்ல. மொழி ஒற்றுமை, சிந்தனை ஒற்றுமை, பொருளாதார ஒற்றமை, இயற்கைப் பாதுகாப்பு அரண், என்று இந்த நாட்டை வெவ்வேறாகக் கூறுபோட்டுவிட்டால் நாட்டின் நிலை என்ன ஆகும்? எனவேதான்,

> *"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே-நம்மில்*
> *ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வே"*

ஒன்றுபட்ட பாரதத்தின்—அதன் மேம்பாட்டினைக் கூறினான் பாரதி,

இத்தனையும் எண்ணும்போது தமிழ்த் தேசியம் வேண்டும். தமிழ் நாகரிகம் வேண்டும். ஆனால் அதே காலத்தில் குடிமக்கள், 'நான் ஒரு பாரத நாட்டுக் குடிமகன்' என்பதையும் உணரவேண்டும். ஆகவே பாரத தேசியத்தை ஒட்டிய-தழுவிய தமிழ்த் தேசியத்தை வற்புறுத்தினான் பாரதி எனலாம். இரண்டையும் ஒன்றுக்கொன்று முரண்படுத்துவ தாகப் பாரதி காணவில்லை. இரண்டும் வேண்டும், இரண்டும் இன்றியமையாதது. இரண்டும் இரண்டு கண்போல எனலாம். ஒரு கண்ணை இழந்துவிட்டு, ஒரு கண்ணுடன் விளங்குவதால் பலனில்லை. ஒன்றை ஒன்று விழுங்காது ஒற்றுமைப்பட்ட பாரத தேசீயமும் தமிழ்த்

தேசீயமும் தேவை.' அவை இரண்டும் உயிரும் உடலும், கிணறும் நீரும்போல, எது உயர்ந்தது எது தாழ்ந்தது என்று மிகுதி குறைவு கூற முடியாத அளவுக்கு இரண்டும் ஒத்த நிலையில் இருக்க வேண்டும். பாரத தேசியத்தில் உள்ளிட்ட தமிழ்த் தேசியம் வேண்டும் என்கிறான் பாரதி.

இராமேசுவரத்தில் இருப்பவர்கள் காசிக்கும், காசியில் இருப்பவர்கள் இராமேசுவரத்திற்கும், போவது பழக்கமாகி விட்டது. ஆகவே தமிழ்த் தேசியத்தைக் கடந்த பாரத தேசியம் தன்னியல்பாக மொழி, கலை, சமயம் முதலிய நாகரிகங்களில் வளர்ந்து கொண்டிருக்கிறது. நம்முடைய குழந்தைகள் நல்ல தமிழர்களாகத் தமிழ் நெஞ்சத்தோடு வாழவேண்டும். அதே நேரத்தில் பாரத நாடு நம் நாடு. நாம் அனைவரும் பாரத நாட்டு மக்கள். 40 கோடி பேரும் குடும்பத்து மக்கள்–ஒரு கும்பத்தைச் சேர்ந்தவர்கள்–ஒரு சமுதாயம் என்ற தேசிய எழுச்சி மிக்க உணர்ச்சியோடு வாழவேண்டும். இந்த நாட்டு இனத் தலைமுறையினருக்கு இந்த இரு எண்ணங்களும் வரவேண்டும்—அவர்கள் உள்ளத்தில் வளர வேண்டும் என்ற எண்ணத்தில்தான்.

"பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள் பாரத நாடு"

என்று பாடினான் பாரதி.

பாரத தேசியத்தைத் தழுவிய தமிழ்த் தேசியம் தமிழ்த் தேசியத்தை அணைந்த பாரத தேசியம் இவைகள்தான் பாரதி கண்டார். அவர் கண்ட பாரத தேசியம் தமிழ்த் தேசியங்களுள் முரண்பாடு இல்லை. அவற்றுள் முரண் பாட்டை அவர் பார்க்கவும் இல்லை—முரண்பாடு இருக்கவும் முடியாது.

**12**

# பாரதியின் தேசியப் பாடல்கள்

எட்டையபுர மண்ணிலே பிறந்து வளர்ந்து பாரத நாட்டிற்காக இந்த உலகச் சமுதாயத்துக்காக வாழ்ந்தவன் பாரதி. தாழ்வுற்று வறுமை மிஞ்சிப் பாழ்பட்டுக் கிடந்ததாம் ஓர் பாரத தேசந்தனைத் தன் பாட்டுத் திறத்தாலே பாலித்தவன் பாரதி. சுதந்திரப் போராட்ட இயக்கம் வளர—சமுதாயத்தின் விடுதலை உணர்ச்சி பீறிட்டு எழ—சமுதாயம் விடுதலை வேட்கை கொள்ள அவன் பாடிய பாடல்கள்—தேசியப் பாடல்கள் இன்றைய நிலையில் காலங்கடந்தவையா? என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எனது இம்முன்னுரையை வெறும் செய்திகளை மட்டும் தரும் செய்திப் பத்திரிகை அளவில் அமைத்துச் சொல்கிறேன். அதுதான் தலைமைக்கு ஏற்றது. இரு கட்சிகளின் சார்பிலும் ஒத்த தகுதியுடையவர்கள்-திறமுடன் வாதிடக்கூடியவர்கள் அமைந்துள்ளனர்.

கட்சியாளர்களது கருத்துகளை ஏற்றும் விளக்கியும், விடையிறுக்கப் பெறாத வினாக்களுக்கு ஏற்ற விடை தந்தும் பாரதியின் தேசியப் பாடல்கள் காலங் கடந்தவை எனச் சிலர் விவாதிக்கிறார்கள்.

"சிந்துநதியின் மிசை நிலவினிலே
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துத்
தோணிகள் ஓட்டிவிளை யாடிவருவோம்"

என்ற பாடலில் குறிப்பிட்ட சிந்துநதி பாகிஸ்தானுக்குப் போய்விட்ட பிறகு இந்தப் பாடலுக்கு வேலை ஏது? இது காலங்கடந்த பாடல் அல்லவா என்கின்றனர்.

"இப்பாடல் நடைமுறைக்கு ஒவ்வாதது" என்ற அவர்கள் கருத்து, சரியானதுதானா? அன்றை நிலையில் ஒன்றுபட்டு நில்லாது பிரிந்துபோன பாகிஸ்தான் இப்போது சீனாவுடன் உறவாடுவதால் தனக்குத் தீங்கு நேர்வதை—நேர இருப்பதை நினைத்து ஏன் இந்தியாவுடன் இணைந்து நிற்க நினைக்கக் கூடாது? நாடுகள் ஒன்றுடன் ஒன்று முரண்பட்டு விலகுவதும் பின் ஒன்றுபட்ட கொள்கையால்—பிறர் நெருக் கடியால் இணைவதும் இயற்கைதானே? அம்முறையில் நேற்றுப் பிரிந்த பாகிஸ்தான் நாளை—எதிர்காலத்தில் இந்தியாவுடன் சேராது—சேரக் கூடாது என்று எப்படிக் கூற முடியும்? அன்று சிந்துவையும் கங்கையையும் இணைக்க முடியாதா? இருநாடுகளும் ஒன்று சேர்ந்து கைகோத்து நிற்கும் நிலை ஏற்பட்டால் அத்தகைய சிறப்பு வேறு எந்த நாட்டுக்கு வரும்? சிந்து நதியில் படகோட்டும் இந்த நோக்கம் அன்று நிறைவேறத்தானே செய்யும்? சிந்து நதிக் காலத்தின் கோளாறால்–ஆட்சியால் பிரிந்தது. காலம் மாறும்போது–இந்தியா பாகிஸ்தான் இணையும்போது நனவாகும். இன்றைய எண்ணமல்லவா அது? இரு நாடுகளும் இணையும் அத்தகைய நிலை எதிர்காலத்தில் வரும்–வரத்தான் போகிறது.

"என்று தணியும் எங்கள் சுதந்திரதாகம்
என்று மடியும் இந்த அடிமையில் மோகம்"

என்ற பாடலைக் காட்டி சுதந்திரதாகம் தீர்ந்த பிறகு அடிமைத்தளை நீங்கிய பிறகு இந்தப் பாட்டுக்குச் சிறப் புண்டா? இது காலங்கடந்த பாடல்தானே என்கின்றனர்.

அடிமையில் மோகம் தணிவது மட்டும் சுதந்திர மாகுமா? அந்நியர் ஆட்சியிலிருந்து விடுபடுவது மட்டும் சுதந்திரமாகுமா? பொருளியல் விடுதலை—இறப்பினின்று விடுதலை—பிறப்பிலிருந்து விடுதலை பெற வேண்டாவா? சுதந்திரம் என்பது அடிமைத்தளை நீக்கம் மட்டுமன்று. பொருளாதார விடுதலை இறப்பும் பிறப்பும் விடுதலை ஆகிய இவை அனைத்தையும் குறிப்பது; உள்ளடக்கியது. சுதந்திரம் ஒரு பெரிய வட்டம். அந்த வட்டத்திலுள்ள ஒரு பள்ளிதான் அடிமைத்தளை நீக்கம். அந்த ஒரு புள்ளி மட்டும் வட்ட மாகுமா? ஏனைப் புள்ளிகள் வேண்டாமா? செல்வமற்ற ஏழைக்கு-உழைத்தும் பயன் பெற முடியாது தவிக்கின்ற உழைப்பாளிகளுக்குப் பொருளாதார விடுதலை வேண் டாவா? இத்தகைய எல்லாவித சிக்கல்களிலிருந்தும் துன்பங் களிலிருந்தும் விடுதலை பெறுவதுதான் சுதந்திரம் என்ற கருத்தைப் புலப்படுத்துவதற்காகத்தான்-எல்லாவகை விடு தலையும் பெறுவதுதான் 'நான் வேண்டும். சுதந்திரம்' என்பதைக் குறிக்கத்தான் பாரதி அழகுற "ஆனந்த சுதந்திரம்" என்று பிறதோரிடத்தில் குறிப்பிடுகின்றான்.

ஆகவே இந்த நாட்டில் தூய அறிவும் ஆண்மையும் வளரும் வரையில் வலிமையுடையோர் வலிமையற்றோரைச் சுரண்டுவதை விடும் வரையில் சரண்டப் படுபவர் இல்லையென்று முழங்கும் வரையில் பாரதி குறிப்பிடும் ஆனந்த சுதந்திரம்—முழுச் சுதந்திரம் பெற்றதாகக் கூற முடியுமா? அன்று நாம் பெற்றது சுதந்திரத்தில் வீசம் ப்ங்கே ஆகும். எஞ்சிய முக்காலே மூன்று வீசம் பங்குச் சுதந்திரமும் பெறும் வகையில் இந்தப் பாடல் உயிர்ப்புடன் ஒலித்துக் கொண்டிருக்கும்.

இன்றைய உலகம் விரிந்து பரந்து உள்ளது. நிலத்திலும் வானத்திலும் புதிய புதிய கண்டங்கள் கண்டுபிடிக்கப் படுகின்றன. இந்தியாவில் இல்லாவிட்டாலும்-அமெரிக் காவில் இல்லாவிட்டாலும் - தென்னாப்பிரிக்காவில் இத்த கைய சுதந்திரம் கிட்டாத போது, இந்தப் பாடல் அவர்களது உள்ளத்தில் எழுச்சியைத் தூண்ட வேண்டாவா? எட்டயபுர மண்ணில் பிறந்தவரானாலும் அவர் தமிழகத்திற்கு—பாரதத்திற்கு மட்டுமின்றி உலகச் சமுதாயத்துக்கும் சிறந்த கருத்துகளைத் தரும் அளவுக்குத் தன்னை வளர்த்துக் கொண்டவன். அவன் இந்த நாட்டுக்கு மட்டுமன்றி உலக முழுமைக்கும் சொந்தமானவன். உலகச் சமுதாயத்தில் எங்கு எங்கு சண்டை சச்சரவுகள் உள்ளனவோ அங்கெல்லாம் அவன் பாடல் பயன்படும். இனவெறி நிறவெறி பிடித்த நாடுகள் சுதந்திரம் பெறாத நாடுகள் இந்த உலகில் இன்னும் எத்தனையோ உள்ளன.

தென்னாப்பிரிக்காவில் நிறவெறி பிடித்தாட்டக் காண கிறோம். அடிமைத்தளையில் சிக்குண்டு தவிக்கும் நாடுகள் பலவற்றைப் பார்க்கிறோம் இன்றைய உலகத்தில். ஆகவே அங்கெல்லாம் பாரதி போக வேண்டும், அவன் பாடல் ஒலிக்க வேண்டும். உலகப் பிரச்சனைகள் தீரும் வரை—அவை வளர்ந்து கொண்டிருக்கும் வரை இந்தப் பாடல் வேண்டியது தானே? காலங் கடந்ததாக முடியுமா?

*ஆதிசிவன் பெற்று விட்டான் என்னை*
*ஆரியமைந்தன் அகத்தியன் என்றோர்?*

*வேதியன் கண்டு மகிழ்ந்தே நிறை*
*மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்*

என்ற பாடலைச் சுட்டிக் காட்டி இது. காலங்கடந்த பாடல், சிவபெருமான் தமிழ் மொழியைத் தோற்றுவித்திருக்க முடி யுமா? மொழியைத் தனி ஒருவன் தோற்றுவிக்க முடியுமா?

இது கருத்துப் பிழையல்லவா? எனவே காலங்கடந்ததல்லவா என்கின்றனர்.

ஆதிசிவன் என்பதை அப்படியே வைத்துக் கொண்டு பார்த்ததால் வந்த பிழை. அதன் உண்மைப் பொருள் என்ன? சீவன் என்ற சொல் சிவன் என்று திரிந்து வந்துள்ளது. பாடலில் சொற்களை எற்ற இடங்களில்—இன்றியமையாத இடங்களில் நீட்டியும் குறைத்தும், திரித்தும் வழங்குவது என்பது இலக்கணமும் ஏற்றுக் கொண்ட நெறி—மரபு ஆகும். வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல் விரித்தல் தொகுத்தலும் வரும் செய்யுளுள் வேண்டும் என்பது இலக் கணம். எனவே சீவன் என்பது பாடலின் சந்த ஒட்டம் தடைப்படா திருப்பதற்காகச் சிவன் என்று வந்துள்ளது. சீவன்-மனிதன் பெற்றெடுத்ததுதானே மொழி? இந்தக் கருத்தில் எங்ஙனம் வேறுபாடு கொள்ள முடியும்?

“தோன்றக் கூடியன வெல்லாம் மாறக்கூடியன” என்பது மார்க்ஸ்சின் சித்தாந்தம். காரல்மார்க்ஸ்சின் கொள்கைப்படி, தோன்றியது மாறுமானால்-அழியுமானால் சுதந்திர வேட்கையின் காரணமாக-சுதந்திரம் பெறுவதற்காக எழுதப்பெற்ற தேசியப் பாடல்கள் அழியக்கூடியன-காலங் கடந்ததுதானே என்று விவாதிக்கின்றனர். உலகில் தோன்றிய எந்தப் பொருளும் நிலைப்பதில்லை என்பது உண்மை.

நிலைத்தல் வேறு. மாறுதல் வேறு. தோன்றிய பொருள்களிடையே மாறுதல்-வளர்ச்சி உண்டு. பிறந்தது போன்று நிலைத்து நிற்றல்தான் இல்லை. பிறந்தது அப்படியே இல்லாது வளரும், மாறும். மாற்றம் அழிவல்ல, வளர்ச்சியே ஆகும்.

உலகில் தோன்றிய எல்லாம் அழிவன' என்ற கொள்கை இடைக்காலச் சமயத்தில் சில சுயநலவாதிகளால் புகுத்தப்பெற்ற கொள்கை. அது தவறு. மாற்றம் உண்டே தவிர அழிவில்லை.

பாரதியின் கவிதை காலத்திற்கேற்ற புதுப்புதுக் கருத்துக் களை மாறி மாறித் தந்து கொண்டிருக்குமே தவிர அழியாது. அன்று சிந்து நதியின்மிசை படகு விடுமாறு பாடிய பாரதி வாழ்வானானால் பாரத நாடனைத்தையும் ஒன்றாக அன்று கண்டதுபோல் உலக நாடுகள் அனைத்தையும் ஒன்றாகக் கண்டு "அமேசான் நதியின் மிசை நிலவினிலே" படகு விடுவோம்" என்று பாடுவான். அன்று தன்னாட்டின் எல்லைப்போக்கில் அவனுக்கு சிந்துதான் கிடைத்தது. இன்று சிந்துவில் இல்லாவிட்டாலும் கங்கையிலாவது படகோட்ட எந்தத் தமிழனாவது முன்வந்துள்ளானா? இவையெல்லாம் செய்ய முன்வராத தமிழன், பாரதி கூறியபடி ஒன்றே ஒன்றினை மட்டும் முயல்கிறான்-முன் வருகிறான். சேரநாட்டுப் பெண்களை மணக்க மட்டும் முன்வருவான். தன் ஊர் விட்டு-தன் மாமனார் ஊர்விட்டு வேற்று ஊர்களுக்குச் சென்று வேலை செய்யப் பயப்படும் தமிழன் படகோட்டுவது எங்கே?

ஆகவே காரல்மார்க்ஸ, 'தோன்றியன அப்படியே நிலைத்திருக்க மாட்டா வளர்ச்சிக்குரியன வளரும்' என்ப தைத்தான் குறிப்பிடுகின்றார்.

தேசியம் என்பது நாட்டை நேசிப்பது மட்டும்தான் என்று சொல்கிறார்கள்.

தன்னாட்டை நேசிப்பது மட்டும் அன்று. மனித னுடைய உணர்வு—சிந்தனை—செயல்வாழ்க்கை—வீடு—அரசு — ஆட்சி அனைத்துமே தேசியம் என்று சிலர் விளக்கம் தருகின்றனர்.

அழகான விளக்கம் அது. ஆங்கிலேயனை—அந்நியனை எதிர்ப்பது-தன்னாட்டை நேசிப்பது மட்டும் தேசியமல்ல, நாட்டினுள் அமைந்த வீடும் வாழ்க்கையும், மனிதனும் அவன் கருத்தும், சிந்தனையும் அவனையாளும் அரசும் ஆட்சியும் செம்மையுடன் சிறக்க வேண்டும் என்று உழைப்பதுதான்.

தேசப்பற்று தேசிய உணர்ச்சிட, இந்த நாட்டு மக்கள் மற்றவருடன் கலந்து உரையாடும் உரையாடல் உறவு இவை எல்லாமே தேசியம் ஆகும்.

'குழந்தை தாயிடம் அன்பு செலுத்துவது இயற்கை. அது வளர்ந்த ஒருத்தியை மணந்து கொண்டபின் தாயன்புக்கு இடமில்லை. தாரத்திடமே அன்பு செலுத்துகிறான்; அது போல தேசபக்தியை ஊட்டுவதற்காக—சுதந்திரம் பெறுவதற் காகப் பாடப்பெற்ற பாடல்கள். அது பெற்ற பிறகு பயனற்றுப் போவது இயற்கைதானே?' என்கின்றனர்.

தாயன்பு அவன் வளர்ந்த பிறகு தாரத்திடம் செல்கிறது. தாயன்பு மறக்கப்படுகிறது என்கின்றனர்.

அது பொருந்தாது. உலகம் தாயன்பால் இன்று நேற்று வளரவில்லை. உழைப்பின் பயனை அனுபவிக்கும் போது பயன் நல்கிய முன்னோர் உழைப்பை மறுக்கக் கூடாது. பின்பரம்பரை முன்னோடியாக இருந்து பயன் தந்த முன்னோரை மறக்கக் கூடாது என்பதற்காகவே—நன்றியறிதல். மாம்பழத்தைத் தின்றவன் அதைத் தரும் வகையில் உழைத்த தன் முன்னோரை மறக்காது போற்ற வேண்டும் என்பதற்காக நீ உன் பின் பரம்பரைக்காக அதன் கொட்டையை நட வேண்டும் என்று கூறப் பெற்ற கருத்து சிறப்புடையது.

பாராட்டும் பண்பு—முன்னோரைப் போற்றும் பண்பு—நன்றியறிதல் சமுதாயத்திற்கு மிகமிக இன்றியமை யாததாகும். எனவேதான் எத்தகைய தீய செயல் செய்த போதிலும் இழிசெயலில் ஈடுபட்டபோதும் நன்றியறிதல் வேண்டும். "ஆன்முலையறுத்த அறனிலோர்க்கும் குரவர் தப்பிய கொடுமையோர்க்கும் கழுவாய் உண்டு" என்ற புறநானூறு,

> "ஒருவன் செய்தி கொன்றார்க்கு
> உய்தி இல்லென அறம்பாடிற்று"

என்று கூறுகிறது. எனவே சுதந்திரத்தை அனுபவிக்கும் நாம் அதைத் தருவதில் முக்கிய பங்கு வகித்த தேசியப் பாடல்களை மறக்காது போற்ற வேண்டும்.

கோகலே, வ.உ.சி., காந்தி, குருகோவிந்தர் போன்ற தேசிய இயக்கத் தலைவர்களைப் பற்றிய பாடல்கள் காலங் கடந்தவை அல்லவா? அவர்களது வரலாற்றை அறிய இன்று தெளிவான வரலாறு இல்லையா? பள்ளிக்கூட வரலாற்று ஆசிரியர் போதுமே. எனவே அவர்களைப் பற்றிய அப்பாடல்கள் காலங் கடந்தவைதான் என்கின்றனர்.

சிறை வென்று அடி உதை பட்டு இன்று நாம் அனுபவிக்கும் சுதந்திரம் தந்த தலைவர்களைப் போற்றுவது-வணங்குவது-நினைப்பது நன்றியுணர்வின் பாற்பட்டதாகும். அவர்களை நினைக்க சமூக அறிவு நூல் போதும் என்கின்றனர். அது தவறு. பள்ளியில் சமூக நூல் பாடத்தில் அவர்களது வரலாற்றைத்தான் படிக்கலாம். வினாவுக்கு விடை எழுதலாம்; மதிப்பெண்கள் பெறலாம். உள்ளத்தில் எழுச்சியை- உணர்வைப் பெற முடியுமா? நவீன ஆசிரியனும் சிறு கதை ஆசிரியனும்கூட அத்தகைய எழுச்சியைத் தரமுடியாது. ஒரு நல்ல கவிஞன்-மக்கள் கவிஞன்தான் அந்த எழுச்சியை ஊட்ட முடியும். எத்தனையோ பேர் சுதந்திரப் போராட்டக் காலத்தில் பக்கம் பக்கமாகச் சுதந்திரம் பற்றியும் தேச பக்தி பற்றியும் எழுதினர். இருந்தாலும் வங்கக் கவிஞனும் தமிழகம் தந்த சிங்கக் கவிஞனும் தந்த எழுச்சியை-ஊட்டிய உணர்வை ஊட்ட முடியவில்லை. இன்று படித்தாலும் உடல் புல்லரிக்கிறது-உள்ளம் துள்ளி எழுகிறது. இத்தகைய உணர்வை வெறும் வரலாற்று நூலோ வரலாற்று ஆசிரியனோ ஊட்ட முடியாது. அத்தகைய சிறந்த உணர்வைப் பெற அப்பாடல்கள்தான் வேண்டும்.

"ஆயிரம் உண்டிங்கு சாதி எனில்
அந்நியர் வந்து புகல் என்ன நீதி—"

என்று கேட்டான் பாரதி. அவன் ஆங்கிலேயரை மட்டும் பார்த்துக் கேட்கவில்லை. இன்று நம் எல்லைப் புறத்தில் ஓயாது தொல்லைக் கொடுத்துக் கொண்டு இருக்கும் பகைவரைப் பார்த்தும் அவன் இதே வினாவை எழுப்புவான். உயிரோடு இருந்தால், அவன் அன்று எழுப்பிய வினா இன்று தென்னகத் தலைவர்கள் உள்ளத்தில் பீறிட்டு எழுந்து நின்றதைக் கண்டோம். நாட்டுப் பிரிவு பற்றிய எண்ணம் தூக்கி எறியப்பெற்றது அந்த நேரத்தில். அனைவர் பார்வையும் இந்தப் பாரதத்தைக் காக்கத் திரும்பியது. இங்ஙனம் பல கட்சித் தலைவர்களையும் மக்களையும் ஒன்றுபடுமாறு ஊக்குவித்த அந்தப் பாரதியின் பாடல் காலங்கடந்ததா? அது நமக்கு வேண்டாவா?

"செப்புமொழி பதினெட்டுடையாள்—எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்"

என்று பாடினான் பாரதி.

இன்று பல்வேறு மொழிகளைப் பெற்றிருக்கும் பாரத நாடு சிந்தனையால் ஒன்றாய்விட்டதா? இல்லை. ஒன்றாக்க—சிந்தனையால் ஒன்றாக்க முயற்சித்து வருகிறோம். ஆற்றில் பிள்ளையார் கட்ட முயற்சிப்பது போல முயல்கிறோம். காலம் சற்று நீடித்தாலும் இறுதியில் வெற்றியடைவோம். ஒத்து ஊதுபவனுடைய ஒத்து ஒலி, நாதசுரத்திலிருந்து வேறாக வேறுபட்டு ஒலித்தாலும் அவன் ஊதும் சுதி நாதசுரத்துடன் ஒத்திருப்பது போல மொழிகள் பலவாக—பதினெட்டாக வேறுபட்டிருப்பினும் அம்மொழி கள் பேசும் மக்களது சிந்தனை ஒத்திருக்க வேண்டும். ஒன்றாய் இருக்க வேண்டும் என்கிறான். சாதியைத் தொலைப் பதில்-பொருளாதார ஏற்றத் தாழ்வைப் போக்குவதில்—அனைவரும் இந்தப் பாரத நாட்டின் குடிமக்கள்—நாம் அனைவரும் ஒரே குடும்பம் என்பதில் சிந்தனை ஒன்றாய் இருக்க வேண்டும் என்கிறான். ஆகவே மொழி வேறு பட்டாலும் சிந்தனை ஒன்றுபடாத இந்தக் காலத்தில்

அச்சிந்தனையை ஊட்டும்-வற்புறுத்தும் பாரதியின் பாடல் வேண்டாவா?

புவிமிசை தருமமே அரசியலதனினும்
    பிறஇய லதனினும் வெற்றிதரும் என
வேதம் சொன்னதை முற்றும்பேண
    முற்பட்டு நின்றார் பாரத மக்கள்

என்று பாடுகின்றான்.

சுதந்திர காலத்தில் மக்களுடைய நோக்கத்தை எல்லாம் சுதந்திரம் பெறுவதில் செலுத்தச் செய்த நாம் சுதந்திரமே குறிக்கோளாக-இலட்சியமாக வைத்த நாம் சுதந்திரம் பெற்ற பிறகு அத்தகையதொரு சிறந்த இலட்சி யத்தை மக்கள் மன்றத்தின் முன் வைக்கவில்லை. மறந்து விட்டோம். இன்று நாட்டு நலத் திட்டங்கள் பல தீட்டிச் செயல்படுத்தும் நோக்குடன் முன்னேறும் நாம் அவற்றை விடச் சிறந்த-சாதி வேறுபாடு இல்லை-எல்லாரும் ஓர் குலம்-எல்லாரும் ஓர் நிலை-எல்லோரும் இந்தியப் பெரு நாட்டின் குடிமக்கள் என்ற பெரியதொரு இலட்சியத்தை மக்கள் மன்றத்தில் நிறுத்தி மக்களை எழுச்சியுறச் செய்ய மறந்துவிட்டோம். சமதர்ம சமுதாய அமைப்பை வலியுறுத்தி இலட்சியமாக்க மறந்தோம். மக்களது இலட்சியமாக ஆக்கவில்லை.

அரசியல் ஆட்சி, போகும் வரும், ஆனால் நீதி அறம் என்றும் நிலையாக நிற்பது-மாறாதது-அழியாதது. ஆயினும் இன்று மக்களிடம் அரசியலுக்கு இருக்கும் மோகம் எல்லா மனிதருக்கும் சோறு போட வேண்டும் என்பதில் இல்லை. எல்லார் வயிற்றையும் நிரப்ப வேண்டும் என்பது போன்ற நீதியை-அறத்தை வற்புறுத்தும் பாரதியின் பாடல் வேண்டாவா?

"கோத்திரம் ஒன்றாய் இருந்தாலும்—ஒரு
    கொள்கையிற் பிரிந்தவனைக் குலைத்திகழ்வார்"

பிறந்த பிறப்பால்-பாரத நாட்டுக் குடிமகன் என்ற ஒத்த நிலையால் ஒன்றாய் இருக்கும் நம்முன் பொதுவாகக் கருத்து வேறுபாடிருக்கக் கூடாதாயினும் ஆங்காங்கு கருத்து வேறுபாடு உண்டாவது இயற்கை. அப்படிக் கருத்து வேறுபாடு கொண்டவனை நோக்கித் தாழ்த்தி- இழித்துப் பழித்துப் பேசுவது தவறு. தாம் கொண்ட வேறுபட்ட கொள்கைகளுள்ளும் ஒற்றுமை காண்பதுதான் அறிவுடைமை. வேறுபட்ட புளிப்பும் கார்ப்பும் உவர்ப்பும் துவர்ப்பும் கசப்பும் இனிப்பும் சேர்ந்து அறுசுவை உணவு அமைதல் போல வேறுபட்ட , கொள்கைகளின் அடிப்படையிலும் ஒற்றுமை காணாது- காண முயற்சிக்காது. அக்கொள்கை உடையவரைக் குறைத்துப் பேசுவது தவறு என்று கண்டிக்கும் பாரதியின் தேசியப் பாடல் வேண்டாவா?

"இனி ஒரு விதி செய்வோம்—அதை
எந்தநாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்
சகத்தினை அழித்திடுவோம்"

பசிப் பிரச்சனை இன்றைய நிலையில் ஒரு நாட்டுப் பிரச்சனையாக மட்டுமல்லாது உலகப் பிரச்சனையாகவும் ஆகிவிட்டது "ஒரு நாளைக்குப் பத்தாயிரம் பேர் சோறின்றி உலகில் இறந்துவிடுகிறார்கள்" என்று அமெரிக்காவில் கூடிய அகில உலக உணவு மாநாட்டு அறிக்கை கூறுகிறது. ஒன்று அனைவர்க்கும் சோறுபோட வேண்டும்; இன்றேல் பாரதிக் கருத்துப்படி உலகத்தை அழிக்க வேண்டும்—செய்தோமா? உள்ளத் துண்ர்வைத் தூண்டி, உண்பதை மறைக்காதே, உதவி வாழ் என்பதை மாற்றிப் புது விதி வகுக்கச் சொன்ன அப்பாடல் வேண்டாவா? வீர மன்னன் சிவாஜியின் மொழியில் வைத்துப் பாரதி கூறும் சொற்கள், எல்லையில் சீனர் தரும் தொல்லைகளை ஓட்டப் பாடுபட்டுக் கொண்டு வரும் நமக்கு, நல்லுணர்வு ஊட்டுவனவாய் உள்ளன. சிவாஜியின் சொற்களை அப்படியே இன்று பயன்படத்தின

சீனர்களது படையெடுப்புக்காகப் பாரதியே வந்து பாடியதைப் போல மிளிர்கின்றன அவை.

"வானகம் அடக்க வந்திடும் அரக்கர்போல்
இந்நாள் படைகொணர்ந்து இன்னல்
செய்கின்றார்"
"தாய்த்திரு நாட்டைத் தகர்த்திடும் மிலேச்சரை
மாய்த்திட விரும்பான் வாழ்வும்ஓர் வாழ்வுகொல்?"
"தாய் திறன் கைபடச் சகிப்பவனாகி
நாயென வாழ்பவன் நமரில் இங்குளனோ?"

—என்பனவும்

"ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர்
வாராது போலவந்த மாமணியைத் தோற்போமோ'
"கண்ணினும் இனிய சுதந்திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ?"
"இன்பச் சுதந்திரம் நின் இன்னருளால் பெற்றதன்றோ
அன்பற்ற மாக்கள் அதைப் பறித்தால் காவாயோ?

என்பன போன்ற பாடல்கள் சீனர்களுக்காவே பாடப் பெற்றன போலப் புத்துருவம் பெற்று மிளிர்ந்து பாரத மக்களிடையே விழிப்பூட்டி எழுச்சியுறச் செய்வனவாகும். சீனர் படையெடுத்துள்ள இந்நேரத்தில் மக்களிடையே ஏற்றமிக்க எழுச்சியூட்டும் பாரதியின் பாடல் வேண்டாவா? வேண்டும் வேண்டும் வேண்டும். முக்காலும் (மூன்று முறை) வேண்டும் என்றுதான் உள்ளம் முரசறைகின்றது.

எனவே நாட்டு ஒற்றுமையைப் பேணுகின்ற—அறத்தின் சிறப்பை வற்புறுத்துகின்ற—கொள்கையிற் பிரிந்தவனை இகழாதே என்று ஆணை இடுகின்ற—உணவு கொடுத்துக் காத்துப் புதுவிதி படைக்கக் குரல் எழுப்புகின்ற—கண்ணீர் விட்டுக் காத்த சுதந்திரத்தைச் சீனரிடம் பறிகொடுக்காது காத்து நிற்குமாறு ஆணையிடுகின்ற பாரதியின் தேசியப் பாடல்கள் காலங்கடந்தவை அல்ல—அல்ல—அல்ல.

## 13

# பாரதி வலியுறுத்துவது எது?

ஒரு நாட்டு மக்கள் எத்தகைய நூல்களைப் போற்று கிறார்களோ அதைக் கொண்டே அந்த நாட்டின் எதிர் காலம் அமையும். ஒரு நாட்டின் நிலை மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் கருத்துப் புரட்சி இன்றியமையாதது. கருத்துப் புரட்சி மட்டும் இல்லையானால், அந்த நாட்டில் ஓடுகின்ற ஆற்றாலும், உயர்ந்தெழுந்து நிற்கின்ற மலைகளாலும், அங்குள்ள இயற்கை வனங்களாலும், அணைக்கட்டுகளாலும், பிறவற்றாலும் உரிய பயன் கிடைக்காது.

நமது தமிழ்மொழி இலக்கிய வளமும், நாகரிகமும் செறிந்து விளங்கும் மொழி. கருத்தாலும் காலத்தாலும் மிகமிக மூத்த மொழி. 2 ஆயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே திருவள்ளுவர் பெரும் புரட்சி செய்ய நினைத்தார். அதற்காகவே திருக்குறளை எழுதினார்.

இந்த நாடு அந்நியர்க்கு அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில் பாரதி தோன்றினார். பாரதி அடிமையாகப் பிறந்தார். அடிமையாக வாழ்ந்தார். அடிமையாகத்தான் இறந்தார். ஆனால் அவர் விடுதலையைச் சிந்தித்தார்—விடுதலைக்காகப் பாடினார்—விடுதலையைப் பாடினார்.

உணவுக்காக நாம் உணவு சமைப்பதில்லை. உண்பதற்காக—உண்டு உயிர் வாழ்வதற்காகவே உணவு சமைக்கிறோம். அதுபோல பாரதியார், கவிதைக்காக-வெறும் கவிதையுணர்வுக்காகக் கவிதை பாடவில்லை. இந்த நாட்டு மக்கள் விடுதலை பெற வேண்டும் என்று விரும்பினார். அதற்காகவே-அந்த இலட்சியத்துடனேயே கவிதை பாடினார்.

கேள்வி கேட்டால் பாவம்—கேள்வி கேட்பது குற்றம் என்ற குறுகிய எல்லைக்குள் நாம் வாழ்ந்து விட்டோம்—வளர்ந்து விட்டோம். எனவே இந்த நாடு கருத்து வழிபாழ்பட்டது. இதைத்தான் பாரதி, 'பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசம்தன்னை' என்று பேசுகின்றார்.

பாரதி ஒரு முழு நிறைவான கவிஞர். அவர் சமுதாயத்தினை பல்வேறு கோணங்களிலும் பார்த்தார். சமுதாயத்தினை முழுமையாகப் பார்த்தார். பார்த்து விமரிசனம் செய்தார். அவரிடத்து எஞ்சியதோ மிஞ்சியதோ இல்லை. அவர் சமுதாயத்தைப் பற்றி எப்படிப் பேசினார் என்று பாராமல், அவர் சொன்னது நாட்டுக்கு ஏற்றதா என்பதைப் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டும். கவனம் செலுத்த வேண்டும்.

வீடு என்கிறோம். வெறும் சுவரோ, சன்னலோ, அடித்தளமோ மட்டும் வீடாகிவிடாதே. அடித்தளம், சுவர், சன்னல் அத்தனையும் சேர்ந்துதானே வீடு. அது போல, மனித சமுதாயத்தின் கோடானுகோடி உணர்ச்சி வடிவங்களைக் கவிஞன் கவிதைப் பார்க்க வேண்டும். அப்படிப் பாடுபவன்தான் உண்மையான கவிஞன்.

பாரதியார் கைகளை—கால்களை இயந்திர சாதனங்களை நம்பினார். எனினும் இவற்றிற்கெல்லாம் மேலாக விளங்கும் ஓர் ஈடிணையற்ற சக்தியையும் உண்டு என்கிறார். இறைமைதான் மனிதனின் பரிபூரணத்துவ அமைப்பு. நேராக

மானிடர் பிறரைக் கொல்ல நினையாமல் வாழ வேண்டும்' என்றும் பேசுகிறார். இங்கு சற்று நுட்பமாகக் கவனிக்க வேண்டும். பிறரைக் கொல்லாமல்கூட அல்ல; கொல்ல நினையாமல் என்று கூறுகின்றார். 'உள்ளத்தால் உள்ளலும் தீது' என்ற வள்ளுவர் வாக்கை பாரதியார் இங்கு நமக்கு நினைவுறுத்தி உள்ளத்தாலும் ஒழுக்கமுடையவனாக வாழ என்று வலியுறுத்துகிறார். இதுதான் இறைமை.

இன்றைய சமுதாயம் நைந்து மடிந்தாலும் இனிவரும் தலைமுறையாவது நைந்து மடியாமல் இன்ப வாழ்வு பெறுதல் வேண்டும்; மலர்ச்சி பெற வேண்டும் என்று பாரதி விரும்பினார். இதுதான் மறுமலர்ச்சி.

'தேசியம்' என்ற சொல்லே ஆழமான—அகலமான பொருள் பொதிந்த ஒரு சொல் ஓரூர்—ஒரு நாடு என்ற நிலையின்றி தானுண்டு, தன் வீடுண்டு என்றிருந்த நிலையை மாற்றி, நீ பெரிதன்று—உமது வீடும் பெரிதன்று; இந்த ஊரும் நாடுந்தான் உயர்ந்தன-பெரியன என்று உணர்த்தினார். அதுதான் தேசியம்.

பாரதியாருக்கு முன்னே நமக்கு ஜில்லா உணர்ச்சி, சாதி உணர்ச்சி இப்படித்தானிருந்தது. பாரதி இந்நிலையை மாற்றி, இந்தியத் தேசியம் கூட அல்ல—உலக தேசியத்தையே பாடியிருக்கிறார். மனிதன் வாழும் உரிமை பெற்றவன்; ஒருவரைச் சரண்டாமல்—அட்டை போல உறிஞ்சாமல் அவன் மனிதனாகவே வாழ வேண்டும் என்றார் அவர். தேசியம் என்பதிலே, மறுமலர்ச்சியும், இறைமைத் தன்மையும் விரவிக்கலந்து கிடக்கின்றன.

நமது நாட்டில் இன்று இறைமைத் தன்மையின் பேரால் ஆடுகின்ற பேயாட்டம் மிகமிகக் கொடியதாக இருக்கின்றது. இங்கு இறைமைத் தோற்றமும் காட்சியும் இருக்கிறதே யொழிய இறையின் செயல் வாழ்வில் ஊடாடி வளரவில்லை.

பழனிமலையிலே இறைவனைக் கோவணாண்டியாகத் துறவுக் கோலத்தில் காண்கின்றோம். இங்கு வருகிறோம். வாழ்த்துகிறோமே, வணங்குகிறோமே, அந்தந்த துறவுக் கோலத்திலிருந்து நாம் பெற வேண்டிய எளிய வாழ்க்கையும், தன்னலமின்மையும் நமது வாழ்க்கையில் கலந்திருக்கின்றனவா? இறையின் செயல் தோற்றம் நமது வாழ்வில் கலந்திருக்கிறது என்றால், அந்த எளிய தோற்றமும், தன்னலமில்லாப் பண்பும் அல்லவா நமது வாழ்வில் கலந்திருக்க வேண்டும்?

இறைவன் கூலியாளாக வந்து பிட்டுக்கு மண் சுமந்தான் என்றால் அதைப் பிட்டுத் திருநாளாக்கி நெய்ப்பிட்டாக்கியல்லவா மகிழ்ச்சியடைகின்றோம். மண் சுமந்ததை மறந்து விடுகிறோமே. இறைவனின் செயல் தோற்றம் நம் வாழ்க்கையில் கலந்திருக்கிற தென்றால், இறைவனே வந்து மண் சுமக்கிறான் கொஞ்சம் பிட்டைக் கூலியாகப் பெற்றுக் கொண்டு-என்ற வரலாற்றை வைத்துக்கொண்டு, உழைப்பில் இழிவில்லை-எல்லோரும் உழைக்க வேண்டும். பதிலாகத் தேவையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற பண்பியல் பல்லவா வளர்ந்திருக்கவேண்டும். வளர்ந்திருக்கிறதா?

பாரதியார் தேசிய கீதம் பாடினார். மறுமலர்ச்சி பாடினார்-இறைமையைப் பாடினார். நம்மைப் பொறுத்த வரை இம்மூன்றுக்கும் அப்படியொன்றும் அதிகப்படியான வேறுபாடு இருப்பதாக நமக்குத் தெரியவில்லை. தேசியம்—நிலம்—மறுமலர்ச்சி—செயற்பாடு—பயன்—இறைமைத்தன்மை. எனவே எல்லாம் ஒரே வட்டம்தான். இதை முறையாகச் சொன்னவர் பாரதியார்.

# 14

# பாரதி அமைத்த பாலம்

பழமையிலுள்ள உயிர்ச் சத்தான கருத்துகளை—வாழ்க்கைக்கு உறுதி பயக்கும் கருத்துகளை-நலன் விளைவிக்கும் கருத்துகளை பாரதி மறுக்கவில்லை-ஏற்றுக் கொள்ளத் தயங்கவில்லை. தந்தை தோண்டிய கிணறு நல்ல கிணறாக இருந்தால் புதிய கிணறு தேவையில்லை என்பது பாரதியாரின் கருத்து.

மனிதன் நாளுக்குநாள் பண்பாட்டால்-நாகரிகத்தால் வளர்கிறான்-வளரவேண்டும். அதுதான் நியதி முறை. வளரவேண்டிய மனிதன் உழைக்கவில்லையானால், சிந்திக்கவில்லையானால், அவனுடைய உடலும் வளராது-உள்ளமும் வளராது. நீண்ட நெடுநாள்களுக்குப் புகழோடு வாழவும் முடியாது. மனிதன் வளர்கிறான் என்றால் அவன் சிந்திக்கிறான் என்று பொருள்.

தாயைவிடப் பிள்ளை சிறந்ததாக இருப்பது தாய்க்குப் பெருமை-தந்தையின் சிந்தனையைவிட மகனின் சிந்தனை சிறந்ததாக இருப்பது தந்தைக்குப் பெருமை. இந்த வளர்ச்சியில் தவறேதுமில்லை. இதைத்தான்,

*"தம்மின்தம் மக்கள் அறிவுடைமை—மாநிலத்து*
*மன்னுயிர்க் கெல்லாம் இனிது"*

என்றார் வள்ளுவப் பெருந்தகை. வள்ளுவரும், கம்பரும் இளங்கோவும் இலக்கிய உலகில் பாரதிக்குத் தந்தையராக விளங்குகின்றனர். எனினும் அவர்களைக் காட்டிலும் சில இடங்களில் பாரதி மேலோங்கி நின்றார் என்பதை நாம் ஏற்கத் தயங்கக்கூடாது. ஆங்கில இலக்கியமேதை ஜார்ஜ் பெர்னாட்ஷா உலக நாடகப் பேராசிரியரான ஷேக்ஸ்பியரையும்விடத் தாம் வளர்ந்திருப்பதாக ஒரு சமயம் தம்மைப் புகழ்ந்து எழுதியிருந்தார். இதையொட்டி அவருக்கு எதிர்ப்புத் தோன்றியது. அதற்குப் பெர்னாட்ஷா, 'ஷேக்ஸ்பியர் தரை மட்டத்தில் நின்று கொண்டார்-நான் அவர் தோள்மீது ஏறி நின்று கொண்டு தொடுகிறேன்' என்று அழகாக- சுருக்கமாக ஆனால் தெளிவாகப் பதில் கூறினார். முதல் சால் உழும் போது ஏற்படுகின்ற புழுதியைவிட இரண்டாவது சால்உழும்போதுதானே அதிகப் புழுதி ஏற்படுகிறது?

பாரதி, பண்டை கருத்துவழி நின்றே புதுமையைக் கண்டார். பழமைக் காலத்திற்கேற்ப-கருத்து வளர்ச்சிக் கேற்பமாறி வளர்ந்துதான் புதுமையாகிறது. ஒன்று பண்டைக் காலத்தில் தோன்றியது என்பதாலேயே அது பழமை யாகிவிடாது. இன்று முளைத்தது என்பதாலேயே ஒன்று புதுமையாகிவிடாது. பழமைக்கும் புதுமைக்கும் காலம் அளவுகோல் அன்று. ஒரு கருத்து காலத்தால் மிக மூத்ததாக, பழமையானதாக இருந்தாலும் இன்றைய வாழ்க்கைக்கு உதவுவதாக-ஏற்புடையதாக இருக்குமானால் அதைப் புதுமையானதாகவே எண்ணிப் போற்ற வேண்டும்; ஒரு கருத்து நேற்று முளைத்ததாக இருந்தாலும், இன்றே தோன்றியதாக இருந்தாலும் வாழ்வியலுக்கு ஒத்ததாக-உறுதி பயப்பதாக-நலன் விளைவிப்பதாக இல்லையானால் அதைப் பழையது என்று கருதி ஒதுக்கித் தள்ளத்தான் வேண்டும்.

**6-VI.20.**

மேலை நாட்டினர் நம்மைக் காட்டிலும் பல் துறையிலும் முன்னேறியிருக்கிறார்கள்—வளர்ந்திருக்கிறார்கள் —போற்றும் புதுமை பல கண்டிருக்கிறார்கள். ஆம். அவர்கள் புதுமையைப் போற்றுகிறார்கள். எனினும் பழமையைத் தூற்றிக் கொண்டே காலங்கழிக்கவில்லை. புதுமை கண்டு பிடிக்க முயல்கிறார்கள்...புதுமை வளர ஆக்கங் கொடுக் கிறார்கள்-புதுமை புதுமையெனப் புதுமை வேட்கை கொண்டு முன்னேறுகிறார்கள். இங்கோ, புதுமையை ஏற்பவர்கள், புதுமை வேட்கைக் கொண்டவர்கள் புதுமையைப் படைப்பதில் ஆர்வமும் அக்கறையும் காட்டுவதில்லை. பழமையை இழித்தும் பழித்தும் பேசிக் கொண்டே காலங் கடத்துகிறார்கள். பாரதியார் பழமையைப் போற்றினார். பழமையில் நின்று கொண்டு புதுமையைப் படைத்தார். இன்னும் சொல்லப் போனால், பாரதி பழமைக்கும் புதுமைக்கும் ஓர் இணைப்புப் பாலத்தை உருவாக்கினார் என்றே கூறலாம். சாளரத்தின் வழியாகப் புதிய காற்று வந்தால் அதனால் தீமை விளைவதில்லை. சமுதாயத்தில் சுயநலத்தின் காரணமாக-தங்கள் சுகபோக வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படும் என்ற அச்சத்தால் சிலருக்கு இந்தப் புதிய காற்று பிடிப்பதில்லை. அது அவர்கள் குற்றமேயொழிய காற்றின் குற்றமன்று. தேவையற்ற பழையன கழிதலும், பயன் விளைவிக்கும் புதியன புகுதலும் இயல்புதான். இதனையே,

> 'பழையன கழிதலும் புதியன புகுதலும்
> வழுவல கால வகையி னானே'

என்று நன்னூல் நூற்பா ஒன்று பேசகிறது.

பொதுவாகப் பழைமையை விட்டுவிட்ட புதுமையும் வாழாது. புதுமையைத் தன்னுள் ஏற்றுக் கொள்ளாத பழமையும் வாழாது. அன்னச் சத்திரம் ஆயிரம் கட்டல்; ஆலயம் பதினாயிரம் நாட்டல்; முதலியவற்றைவிட 'ஏழை ஒருவனுக்கு எழுத்தறிவித்தல் சிறந்தது; என்றார் பாரதி.

இதனால் 'பாரதி கோயில் வேண்டா என்று சொல்லி விட்டார் என்று கூறிவிட முடியுமா? கோயில் இருந்தது. காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் பக்தர்கள் இல்லை யானால் கோயிலால் என்ன பயன்? கோயில் வேண்டும். தொழுது தூமலர் தூவி அழுது அரறும் அடியவர்களும் வேண்டும்.

இங்கு உழைக்காமல்-பரம்பரைச் சொத்தைக் கொண்டு உல்லாசமாக வாழ்பவனுக்குத்தான் சமுதாயத்தில் பாராட்டும் மதிப்பும் இருந்தது. இந்த இழி நிலையை ஒழிக்க வேண்டும் என்று பாரதி விரும்பினார். எனவே,

***'உழவுக்கும் தொழிலுக்கும்***
***வந்தனை செய்வோம்—வீணில்***
***உண்டுகளித் திருப்போரை***
***நிந்தனை செய்வோம்'***

என்று பாடினார். உழைத்துச் சொத்து சேர்ப்பவனையே பாரதி பாராட்டுகிறார். உழைக்காமல் உண்டு, உறங்கி உல்லாச வாழ்வு வாழ்கிறவர்களை நிந்தனை செய்வோம் என்று பேசினார்.

கங்கையையும் காவிரியையும் இணைத்துப் பாடினார் பாரதியார். இதன் மூலம் வணிகத் தொடர்பு பற்றிப் பேசுகிறார். காசி நகர்ப் புலவர் பேசும் உரையைக் காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவி செய்வோம் என்பதன் மூலம் வளர்ந்து வரும் விஞ்ஞானப் புதுமையைக் கையேந்தி வரவேற்றார். சாதி மத இன வேறுபாடுகளை யெல்லாம் தகர்த்தெறிந்து, "பாரதநாடு, பாருக்கெல்லாம் திலகம்; நீரதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர்" என்று பாடியதின் மூலம் தேசிய ஒருமைப்பாட்டுணர்வை வலியுறுத்தினார். பழம் நாகரி கத்தை-பண்பாட்டை அடித்தளமாக வைத்துக் கொண்டு, போற்றுதற்கரிய புதுமைகளைப் பாடினார்-எனவே புதுமைக் கவிஞர் பாரதி, பழமையோடு புதுமையை இணைத்து-ஒட்டிப் பாடினார் என்று கூறுவதே சரியானது.

# 15

# பாரதி காட்டும் வழி

பாரதியார் ஒரு மகாகவி. தமது உணர்ச்சியை வெளிப் படுத்துவதில் பேராற்றல் படைத்தவர். அவர் உள்ளத்து உள்ள உண்மை ஒளியே கவிதையாக மலர்கின்றது; அவர் பாடல்கள் தமிழர்களுக்குப் புத்துணர்ச்சியைக் கொடுத்தன. கொடுத்துக் கொண்டிருக்கின்றன. தேசப் பற்றையும், தெய்வப் பற்றையும், கவிதை இன்பத்தையும் ஊட்டுகின்ற கவிஞர் அவர். பாரதியார் சிறந்த கவிதைத் தச்சர். ஒப்பற்ற சீர்திருத்தச் சிற்பி. அழுத்தமான தெய்வ பக்தர். வாய்மையும் நேர்மையும் பொருந்திய சமுதாயத்தின் வழிகாட்டி. சமுதாயத்தை வளப்படுத்த வந்த மாபெரும் தலைவராகிய பாரதியார் தலைவர்களாக உள்ளவர்களுக்கும் நல்ல வழிகாட்டுகிறார்.

பாரதத் தாயின் அடிமை நிலையினை அகற்ற முயன்ற முன்னையோரில் முதல்வர் தாதாபாய் நவுரோஜி அறிவும், திறனும், அன்பும், உறுதியும் படைத்த வீரத் தலைவர் அவர். விற்போரில் வெற்றி கொள்ள நினைப்பது பயனற்றது எனக் கருதிச் சொற் போரால் தொண்டாற்றியவர். எல்லாவற் றிற்கும் மேலாக சீர்மை பொருந்திய ஒரு பண்பை அணி கலனாக கொண்டவர். அது என்னவென்றால் தன்னலமின்றி பிறர் நன்மைக்கென்றே அரும்பாடுபட்ட பற்றற்ற துறவியாய்

வாழ்ந்தமையே.. அவற்றையெல்லாம் கண்ட பாரதியார் மனமார வாய் நிறைய வாழ்த்துகிறார். அந்தக் கவிதையைப் பார்ப்போம்:-

"கல்வியைப்போல் அறிவும், அறிவினைப்போலக்
கருணையும் அக்கருணை போலப்
பல்விதஊக் கங்கள் செயும் திறனும்
ஒரு நிகரின்றிப் படைத்த வீரன்
வில்விறலாற் போர் செய்தல் பயனிலதாம்
என அதனை வெறுத்தே உண்மைச்
சொல்விறலாற் போர் செய்வோன்;
பிறர்க்கன்று தனக்குழையாத் துறவி யானோன்"

இதன் மூலம் தலைவர்களுக்குக் கல்வியும், அறிவும், கருணையும், ஊக்கமும், தீர்க்காலோசனையும், தன்னலத் துறவும் எவ்வளவு அவசியம் என்பதைப் பாரதியார் உணர்த்துகிறார். தமிழ் இலக்கியங்களிலெல்லாம் மிகச் சிறந்த பண்பாடாகப் பேசப்படுகின்ற தன்னலத் துறவு அறிந்தின்புறத்தக்கது.

"தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மையானே"

இவ்வுலகம் உண்டென்று கூறுகிறது புறநானூறு. "தனக்கென்று ஒன்றானும் உள்ளான். பிறர்க்கே உறுதிக்கு உழந்தான்" என்பது குண்டலகேசி. "தனக்கென வாழாப் பிறர்க்குயிராளன்" என்பது அகநானூறு "பிறர்க்கற முயலும் பெரியோய்" என்பது மணிமேகலை. பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வழிகாட்டும் தலைவனுக்கு இந்தத் தன்னல மறுக்கும் பண்பு அமையாதிருக்குமானால் அவன் தலைமை நல்ல பயனை விளைவிக்காது; அவனது தலைமையும் மக்கள் சக்தியால் மாற்றப்பட்டு விடும். எத்தனையோ பேரரசுகள் மறைந்தொழிந்தமையே இந்த உண்மையை நன்கு எடுத்துக் காட்டும். மகாகவிபாரதியின் இந்தத் தன்னல மறுப்பு

உபதேசம் அரசியல் தலைவர்களுக்கு மட்டுமல்ல. சமுதாயம், சமயம், அறநிலையங்கள், மடாலயங்கள் முதலியவற்றின் தலைவர்களுக்கும் சிறந்த வழிகாட்டியாக அமைகின்றது. துறவியினுடைய இலட்சணம் இவ்வுலகப் பொருள் களிடத்துப் பற்றின்றி வாழ்வதேயாம். ஆனால் தன்னைச் சார்ந்துள்ள-தன் நாட்டிலுள்ள மக்களை மறத்தல் அன்று. அறிவும், ஒழுக்கமும், அன்பும், நம்பிக்கையும் கொண்டு மக்கள் நலம்பெற வாழ வழிகாட்டிப் பணி செய்வதையே கடமையெனக் கொண்டவர் துறவிகள் என்பது கதே என்ற தத்துவ ஞானியின் அறிவுரை. "ஞானிகள் முயல வேண்டுவது உலகத்தை வெறுக்கவன்று; உலகத்தை அறியவேயாகும்" என்பது அவர் மொழி. ஈண்டு உலகம் என்பது மக்களையே குறிக்கின்றது. உலக மக்களின் நிலையறிந்து, தேவையறிந்து அவர்கள் வளர வேண்டுவன செய்யக் கடமைபட்டிருக் கிறான் உண்மையான துறவி. அதையே பாரதி "பிறர்க்கன்றி தனக் குழையாத் துறவியாவேன்" என்று சொல்லி விளக்குகிறார். இத்தகைய துறவிகள் இந்த நாட்டிலே பெருகுவார்களானால் இம்மண்ணுலகமே விண்ணுலகமாய் மாறிவிடும்.

சில இடங்களில் பாரதியார் ஆண்டவனை நோக்கிச் செய்யும் தமது பிரார்த்தனையின் மூலம் தலைவர்களுக்குச் சிறந்தவழியைப் புகட்டுகிறார். பாரதியார் தமது சுயசரிதை யைப் பாடி முடித்தபின்பு இறுதியாகப் பரம்பொருளிடம் ஒரு சில வேண்டுகிறார். அவற்றைப் பார்ப்போம்.

"அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி, அகத்திலே
அன்பினோர் வெள்ளம்
பொறிகளின் மீது தனியரசாணை, பொழுதெல்லாம்
நினது பேரருளின்
நெறியிலே நாட்டம், கருமயோகத்தில் நிலைத்திடல்,
என்றிவை அருளாய்;

'குறிகுணம் ஏதும் இல்லதாய் அனைத்தாய்க் குலவிடு
தனிப்பரம் பொருளே"

கலக்கமற்ற அறிவு, சபலமற்ற நெஞ்சு, அன்பு நிறைந்த உள்ளம், பொறிகளை அடக்கியாளும் ஆற்றல், இறைவன் திருவருள் நெறியினை மறவாத நோக்கம். இடையறாப் பணியில் ஈடுபாடு இவற்றையெல்லாம் ஆண்டவனே எனக்கு அருள் வாய் என்று வேண்டுகிறார் பாரதி. அதாவது இவையெல்லாம் ஒரு தலைவனுக்கு இன்றியமையாது வேண்டப்படுபவை என்று அறிறுறுத்துகிறார் நவயுலகத் தலைவர் பாரதி. இன்னும் ஒரு தலைவனுக்கு வேண்டிய குணத்தையும் வெளிப்படுத்துகிறார். அது பகைமை உணர்ச்சியாகும். ஒரு தலைவன் எதைப் பகைக்க வேண்டும் என்பதை மாஜினியின் மூலமாக உணர்த்துகிறார்.

தீயன புரிதல், முறைதவிர் உடைமை,
செம்மைதீர் அரசியல், அநீதி
ஆயவற்று என்னெஞ்சு இயற்கையின்
எய்தும் அரும்பகை"

தீமையையும், அநியாய உடைமையையும், கொடுங்கோலை யும் அநீதியையும் கண்டால் ஓர் உண்மைத் தலைவன் இயல்பாகவே அதன்மீது கோபங்கொண்டு அதை அழிக்கக் கொதித்து எழுவான் என்ற உண்மையையும் நன்கு வெளிப்படுத்துகிறார் பாரதி. மேலும் மனித உள்ளத்திலே பெரும்பாலாகத் தோய்ந்து கிடக்கும் சில தீமைகள் ஒழிய வேண்டும் என்றும் வேண்டுகிறார்.

'மதிமூடும் பொய்மையிருளெல்லாம்—எனை
முற்றும் விட்டகல வேண்டும்;
ஐயம்தீர்ந்து விடல் வேண்டும். புலை
அச்சம் போயொழிதல் வேண்டும்"

என்று சொல்லி, உன்னைக் கோடி முறை தொழுதேன். இனி வையத்தலைமை எனக் கருள்வாய்" என்று வேண்டுகிறார். "அச்சமே கீழ்மக்களது ஆசாரம்" என்று வள்ளுவர் பேசு கிறார். அச்சமும், சந்தேகமும் அதாவது நம்பிக்கையின்மை யும் தலைவனைத் தலைமைப் பதவிக்குத் தகுதியற்றவனாக ஆக்கிவிடுகின்றன என்பதை வையத் தலைமையை வேண்டும் பாரதி நன்றாக விளக்குகிறார்.

எந்த ஒரு விஷயத்தையும் பரபரப்பின்றி வரவரக் கண்டு, ஆராய்ந்து பார்த்து முடிவு செய்ய வேண்டியது தலைவர்களுக்கு இன்றியமையாது வேண்டப்படுகின்ற பண்பு. இந்தப் பண்பாட்டைப் பாரதி பாஞ்சாலி சபதத்தில் அர்ஜுனன் மூலமாக உணர்த்துகிறார். சூதாட்டத்திலே தருமன் பாஞ்சாலியை வைத்துத் தோற்றுவிட்டான். பீமன் கொதித்தெழுகின்றான். மூத்தவன் என்ற மரபையும் மறந்து கடுஞ்சொற்களைக் கொட்டுகிறான். அச்சமயத்திலே அர்ஜுனன் பீமனைத் தடுத்து நிறுத்தி சினமான தீயறிவினால் அடாத வார்த்தைகளைச் சொல்லாதே என்று அமைதிப்படுத்திப் பின்னர் அறம் பேசுகிறான். அறம் சொல்லுவதோடு அர்ஜுனன் நிற்கவில்லை. நியதி தத்துவத்தையும் உணர்த்துகிறான்.

"தருமத்தின் வாழ்வதனைச் சூதுகவ்வும்;
தருமம் மறுபடி வெல்லும்"

என்ற அழியாத உண்மையை அறிவுறுத்துகிறான். தருமத்திற்கு மாறானவை அப்போதைக்குத் தலைதூக்கி நின்றாலும் அது வெற்றியாக மாட்டாது என்பதைத் தலைவர்கள் நன்கு உணர்ந்து செயலாற்ற வேண்டும். சகிப்புத் தன்மையே சாசுவத வெற்றிக்கு அடிப்படை என்ற எண்ணம் அர்ஜுன னுக்கு. ஆயினும் அவனது வீரவுணர்வும் தன்னம்பிக்கையும் மாய்ந்து விடவில்லை. பாடலைப் பார்ப்போம்.

"தருமத்தின் வாழ்வதனைச் சூதுகவ்வும்; தருமம்
மறுபடி வெல்லும்" எனுமியற்கை
மருமத்தை நம்மாலே உலகம் கற்கும் வழிதேடி விதி
இந்தச் செய்கை செய்தான்
கருமத்தை மேன்மேலுங் காண்போம் இன்று
கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம்மாறும்
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்
தனுவுண்டு காண்டீபம் அதன் பெயர்"

என்கின்றான். தரும நம்பிக்கையும், அத்தோடு தன்னம்பிக்கையும் தலைவர்களுக்கு எவ்வளவு அவசியம் என்பதை வையத் தலைவன் பாரதி நன்றாக எடுத்துக் காட்டுகிறார். இல்லையா? காந்திய உணர்விலே ஊறிய பாரதி தலைவர்களுக்குச்சொல்லும், செயலும் ஒன்றாக இருக்க வேண்டும்; கொள்கை வேறு வாழ்க்கை வேறு என்று இருக்கக்கூடாது; அப்படி மாறுபட்டிருப்பவர்கள் சமுதாயத் துரோகிகள் என்று வசனத்தில் எழுதுகிறார். நிலையான வெற்றி வேண்டில் அறமான செயல் வேண்டும் என்பது பாரதி காட்டும் வழி. "ஜெயம் நிலையாக செய்வதற்கு அறமே சிறந்ததோர் மார்க்கம்" என்று மாஜினியின் மூலம் நமக்கு எடுத்து விளக்குகிறார். மேலும் மாஜினியின் மூலம் பூரணத்தியாகத்திற்குத் தயாராக இருப்பவனே தலைவனாவான் என்பதை.

"என்னுடன் ஒத்த தருமத்தை யேற்றார்
இயைந்த இவ்வாலிபர் சபைக்கே
தன்னுடல் பொருளும், ஆவியுமெல்லாம்
தத்தமாய் வழங்கினேன்"

என்று நமக்கெல்லாம் அறிவுறத்துகிறார். ஒரு தலைவன் சர்வாதிகார மனப்பான்மையின்றித் தன்னுடன் உழைப்போர் மனமறிந்து ஒற்றுமைப்பட்டு தான் என்றும் ஊழியனே' என்ற பணியுணர்ச்சியோடு பணிசெய்ய வேண்டும். அயர்ச்சி

தளர்ச்சியுமற்றவனாய் அப்பணியின்றி, வேறெந்தத் தொழிலி லும் ஈடுபடா ஏகாக்கிரக சித்தமுடையவனாக நிற்க வேண்டும். அதில் எவ்வாற்றாலும் தவறமாட்டேன் என்ற சங்கல்பத்தை திரிகரண சுத்தியுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த இலட்சிய வெறியைப் பின்வரும் இரண்டு பாடல்கள் மூலம் பாரதி காட்டுகின்றார்.

*"இவருடன் யானுமிணங்கியே யென்றும்*
*இது அலாற் பிறதொழில் இவனாய்த்*
*தவற்று முயற்சி செய்திடக் கடவேன்*
*சந்ததமும் சொல்லினால் எழுத்தால்,*
*அவமற செய்கை யதனினால்*
*இயலும் அளவெலாம், எம்மவரிந்த*
*நலமுறு சபையினொரு பெருங்கருத்தை*
*நன்கிதின் அறிந்திடப் புரிவேன்"*

*"இன்றும், எந்நாளும் இவை செயத்*
*தவறேன் மெய்யிது, மெய்யிது, இவற்றை*
*என்றுமே தவறிழைப்பனேல் என்னை*
*ஈசனார் நாசமே புரிக,*
*அன்றியும் மக்கள் வெறுத்தெனை யிகழ்க*
*அசத்தியப் பாதகஞ் சூழ்க*
*நின்ற தீயெழுவாய் நரகத்தின் வீழ்ந்து*
*நித்தம் யான் உழலுக மன்னோ"*

இவை ஏதோ மாஜினி எடுத்துக் கொண்ட பிரதிக்ஞை யையுமே அறிவிக்கும் சாதாரண ஒரு செய்தியன்று. பாரதியும் வெறும் பத்திரிகை நிருபர் அல்லர். ஆனால் மக்களைத் தலைமை தாங்கி இட்டுச் செல்லும் தலைவர்களுக்கு இருக்க வேண்டிய குணங்களையும் அவர்கள் கொள்ள வேண்டிய பிரதிக்ஞையையுமே இதன் மூலம் செம்மையாக அறிவுறுத்து

கிறார். கடமை தவறிய தலைவர்கள் ஆண்டவனுடைய கோபத்திற்கும் பொது மக்களின் இகழ்ச்சிக்கும் தவிர்க்க முடியாத பல தண்டனைகளுக்கும் ஆளாவர் என்பதைச் சுட்டிக்காட்டி கடமையாற்றும் நெறியிலே தலைவர்களுக்கு நல்லவழி காட்டுகிறார் பாரதி.

மக்களை மக்களாகக் கருதவேண்டும்; அவர்களின் உணர்ச்சியையும், உரிமையையும் மதிக்க வேண்டும்.

*"நாட்டு மாந்தர் எல்லாம்—தம்போல்*
*நரர்களென்று கருதார்*
*ஆட்டு மந்தையாம் என்று, உலகை*
*அரசர் எண்ணிவிட்டார்"*

என்று சர்வசுதந்திரப் போக்கைக் கண்டிக்கின்றார் பாரதி. அத்துடன் அமைதியில்லை பாரதிக்கு. ஆம். பார்க்குமிட மெங்கணும் நீக்கமற அப்பரனையே தரிசிக்கும் பண்பாளன் பாரதி. அதனால் உயிர்கள் அனைத்தும் கடவுளின் உருவம். கடவுளின் பிள்ளைகள் என்று மதித்துப் பரிவுடன் ஏன் பக்தியுடனே பணிபுரிய வேண்டும் என்று கூறுகிறார். வெறும் அறவுரைக்காகக் கூறுவதைவிட அங்ஙனம் வாழ்ந்து சிறந்த தலைவர் ஒருவரை உதாரணமாகக் காட்டுவதே நலமெனத் தெளிந்து காந்தியடிகளை நம் மனக்கண்முன் கொண்டுவந்து, நிறுத்துகிறார். பாட்டைப் பார்ப்போம்.

*"மன்னுயிர் எல்லாம் கடவுளின் வடிவம்*
*கடவுளின் மக்கள்என் றுணர்தல்*
*இன்னமெய்ஞ் ஞானத் துணிவினை, மற்றாங்கு*
*இழிபடு போர், கொலை, தண்டம்*
*பின்னியே கிடக்கும் அரசியல் அதனில்*
*பிணைத்திடத் துணித்தனை பெருமான்"*

காந்தியடிகளின் பண்பாட்டையும் சீலத்தையும் பாடிப் பரப்புவதன் மூலம் தலைவர்களுக்கு வேண்டிய குணங்களையும் ஒழுக்கத்தையும் நன்கு புலப்படுத்திவிட்டார்.

இறுதியாகத் தலைவர்களுக்கு இருக்க வேண்டிய மேலான ஒரு குணத்தைக் காட்டுகிறார் பாரதி. அதாவது தானே தலைவன் என்றெண்ணி இறுமாந்து தலை தடுமாறிப் போகப்படாது. தலைவர் தலைவனாக ஆண்டவன் ஒருவன் என்றுமுள்ளான் என்பதை மறக்காமல் நடக்க வேண்டும் என்றெல்லாம் எச்சரிக்கிறார்—வதி காட்டுகிறார் பாரதி.

ஒரு தலைவன் என்றும் எப்பொழுதும் கடவுளை மறவா உள்ளத்தவனாயிருக்க வேண்டும் என்பதை எத்தனையோ இடங்களில் சுட்டிக் கொண்டே போகிறார் பாரதி. மாஜினியின் உறுதிமொழியை "பேரருள் கடவுள் திருவடி ஆணை" என்றே பாரதி தொடங்குகிறார். "ஈசன் இங்கு எனக்கும் என்னுடன் பிறந்தோர் யாவர்க்கும் இயற்கையின் அளித்த தேசம்" என்று நினைவூட்டுகிறார். உறுதி தவறினால் "ஈசன் என்னை நாசமே புரிக" என்று முடிவு கட்டுகிறார்.

பரிபூரண சுதந்திரப் பிரியரான பாரதி அடிமை நிலையை எவ்வளவு வெறுத்தார் என்பதை நாம் நன்கறிவோம். அதனால்தான் "பூமிதனில் எவர்க்கும் அடிமை செய்யோம்" என்று வீறுகொண்டெழுகிறார்.' ஆனால் அப்படிச் சொன்ன வாயை மூடாமலே தொடர்ந்து "பரிபூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்" என்று பூரிப்புடன் முடிக்கிறார். அந்நியர்க்கடிமை செய்வது தாழ்வையளிக்கும் என்றால் ஆண்டவனுக்கு அடிமை செய்வது வாழ்வை அருளும் என்று எவ்வளவு அருமையாகக் குறிப்பிடுகிறார் பார்த்தீர்களா? இங்ஙனம் தலைவனுக்கு வேண்டிய பிற குணங்களுக்கெல்லாம் மணிமுடியாகக் கடவுட்பற்றைக் கூறி நமக்கெல்லாம் நல்ல வழி காட்டுகிறார் வையத் தலைவர் பாரதி.

**16**

# பாரதிதாசனின் உலகம்

## 1. பாரதிதாசன் கண்ட சமுதாயம்

*அன்பிற்கும் பாராட்டுதலுக்குமுரிய துணைவேந்தர் அவர்களே! அறிஞர் பெருமக்களே! மாணவ நண்பர்களே! பாவேந்தன் பாரதிதாசன் நூற்றாண்டு விழா நிகழும் காலத்தில் பாவேந்தன் பாரதிதாசன் பிறந்த மண்ணில் பாவேந்தனைப் பற்றி எண்ணவும் பேசவும் தங்களுடன் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளவும் வாய்ப்பளித்த புதுவைப் பல்கலைக் கழகத்திற்கும் துணையாயமைந்த திரு. ஆனந்தரங்கம் பிள்ளை குடும்பத்தினர் அறக் கட்டளை யினருக்கும் நன்றி! கடப்பாடு!*

### முன்னுரை

தமிழர் வளர்ந்த தலைமுறையினர்: ஆம்,! தமிழ் மொழி வளர்ந்த மொழி. மானுடத்தின் வளர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் வாழ்தலுக்கும் வழிகாட்டும் சான்றோர் பலர் தமிழகத்தில் வாழ்ந்தனர்! இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்ச் சிந்தனை உயர்ந்திருந்தது; முதிர்ச்சி அடைந்து இருந்தது; உலகத்தை இயக்கும் உயிர்ப்புப் பெற்று இருந்தது. தமிழர்

சமுதாயத்தின் வாழ்க்கையைக் களமாகக் கொண்டு சில இலக்கியங்கள் தோன்றின. தமிழர் சமுதாயத்தை நெடுந்தூரப் பார்வையில் இயக்கிய சமுதாய விஞ்ஞானிகளாகப் பல தமிழ்க் கவிஞர்கள் விளங்கியுள்ளனர்; முன்னேறிச் செல்லும் சமுதாயத்திற்குக் கருத்துக்களைத் தந்துள்ளனர். ஆனால் அக்கருத்துககள் வாழ்வாக மலராமை காரணமாகப் பல சமயங்கள் பல்லவி, அனுபல்லவியாக அமைந்துவிட்டது என்பது உண்மை. அனுபல்லவியானாலும் ஆலாபனத்தில் வேற்றுமையிருக்கும். அதாவது விசைமிக்குடைய சொற்கள் வந்து வீழும்.

## பாவேந்தன் பாரதிதாசன்

நம்முடைய தலைமுறையில் தோன்றியவர் பாவேந்தன் பாரதிதாசன். அவன் புரட்சிக் கவிஞன். ஆற்றல் மிக்குடைய படைப்பாளன், தமிழையே உயிரெனக் கொண்டுலாவிய ஏந்தல்; ஆயினும் விரிந்த உலக பார்வை கொண்டவன்; பொதுவுடைமைச் சமுாயத்திற்குப் பாடிய கவிஞன்; உழைப் பாளர் உலகத்திற்குப் புகழ்ப்பரணி பாடியவன். பாவேந்தன் கவிதைகள் எளிய நடையில் இன்பத் தமிழாக அமைந்தன! பாவேந்தன் கவிதைகள் எழுச்சியைத் தருவன. ஆற்றல்மிக்க தூண்டுதல்களாகப் பாவேந்தன் கவிதைகள் விளங்கின. விளங்கிக் கொண்டிருக்கின்றன. கவிஞனின் கவிதைகள் தூணியிலிருந்து புறப்படும் அம்புபோல் சென்று தைக்கும் தகைமையின. கவிதைகளின் பொருள்கள் வெளிப்படை யானவை. நமது நூற்றாண்டில் நாம் கண்ட மாபெரும் கவிஞன் பாவேந்தன் பாரதிதாசன். பாவேந்தனுக்கும் நூற்றாண்டு விழா வந்துவிட்டது. ஆனால், பாவேந்தன் பாரதிதாசன் கொள்கைகளில் யாதொன்றும் தமிழினத்தை வென்றெடுக்கவில்லை. கொள்கைகள் உயர்ந்து விளங்கி என்ன பயன். தத்துவங்களுக்குரிய பெருமையே அவை செயற்பாட்டுக்கு உரியனவாக அமைவதுதான்!

வாழ்வியலுடன் பொருந்தாத எந்தத் தத்துவமும் உலகத்தின் முன் நிற்காது. பாவேந்தன் கொள்கைகள்-கோட்பாடுகள் வாழ்விற்கென்றே பாடம் பெற்றன. ஆம், மரத்துப் போன தமிழினம் வழக்கம் போல் பாரதிதாசனையும் ஏமாற்றவே நினைக்கிறது. பாரதிதாசன் நம் தலைமுறையில் வாழ்ந்த கவிஞன்! அவன் ஒரு குயில். இந்தக் குயிலின் ஓசை கேளாத காதுகள் இல்லை; புதுவையின் குயில்தான்! ஆனாலும் ஆவேசமும் இருந்ததை மறந்துவிட இயலாது. ஆனால் பாவேந்தன் பாரதிதாசனுக்கு அவன் நூற்றாண்டு விழாக் காலத்தில் விழாக்கள் எடுக்காதீர்கள். செயல்திட்டம் தீட்டுங்கள்; போராட்டக் களங்கள் அமையுங்கள்; போராடுங்கள். பாவேந்தன் பாரதிதாசனின் கவிதைகள், தமிழர் வாழ்வாக உருக்கொள்ள வேண்டும். பாவேந்தன் வலியுறுத்திய சமுதாய அமைப்பைக் காண்பதே பாரதி தாசனுக்கு உண்மையான பாராட்டு!

## இன்றைய சமுதாயம்

பாவேந்தன் பாரதிதாசன் நூற்றாண்டு விழாவின் போது தங்களுடன் கலந்து சிந்திக்க எடுத்துக் கொண்ட தலைப்பு, "பாரதிதாசன் கண்ட சமுதாயம்" என்பதாகும். பாவேந்தன் மன்னர்களைப் பாடவில்லை; கடவுளைப் பாடவில்லை; மானுடத்தையே எண்ணி மானுடத்தின் உயர்வுக்கே பாடியவன். ஆதலால், அவன் கண்ட சமுதாயத்தைப் பற்றிச் சிந்திப்பது பயனுடையதாக அமையும். மானுடம் தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆயினும் ஏன் இன்னமும் மானுடம் ஒரு சமுதாயமாகத் தம்மை அறிவார்ந்த நிலையில் உருவாக்கிக் கொள்ள வில்லை? இன்றைய மனிதக் கூட்டம் காடுகளைப் போன்று விளங்குகிறது. காடுகள் தன்னிச்சைப் போக்காகவே வளரும். காடுகளில் ஒழுங்கு இராது; நெறிமுறை இராது. அருவருக்கத் தக்க போட்டிகள் இருக்கும். வல்லாண்மையுடைய மரங்கள்

வல்லாண்மை இல்லாத தாவரங்களை அழித்துவிடும். இன்றைய மனிதக் கூட்டமும் அப்படித்தானே இருக்கிறது! எங்கும் மனிதன் தன்னிச்சைப் போக்கையே விரும்பு கின்றான். ஒழுங்குகள்-ஒழுக்கங்கள் ஆகியவற்றிடம் மக்களுக்கு நாட்டமில்லை. கையூட்டு தேசிய மயமாகி விட்டது; பழக்கமாகி வழக்கமாகிவிட்டது; வல்லாண்மை யுடையோரே வாழ்கின்றனர்; நாட்டின் செல்வத்தை, கையடியும் வாயடியும் செய்து அள்ளிக்கொண்டு போகின்றனர். ஏழைகள் மேலும் ஏழைகள் ஆகிறார்கள். நமது நாடு வளர்ந்து வரும் நாடுகளில் ஒன்று. திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி உண்டு. இந்தியா ஏழை நாடல்ல; இந்தியர்களே ஏழைகளாக இருக்கிறார்கள். நாட்டின் செல்வத்தை மக்கள் தொகையில் 20 விழுக்காட்டினரே எடுத்துக் கொள்கின்றனர். 80 விழுக்காடு மக்களுக்கு 20 விழுக்காடு செல்வம்தான் கிடைக்கிறது.

``Two little for too many" என்றாகிறது. மதங்கள் ஏழைகளுக்கே கீதோபதேசம் செய்கின்றன. இன்றைய மனிதக் கூட்டம் பழத் தோட்டங்களை போல மாறி வளர்ந்து உருப்பெற்றால்தான் மானுடம் வளரும். பழத் தோட்டத்தில் ஒழுங்கு இருக்கும். நெறிமுறை இருக்கும். ஒன்றையொன்று சார்ந்து உடன்பாட்டு நிலையில் உத்தரவாதத்துடன் பழமரங்கள் வளரும்; வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் உண்டு; போட்டி இல்லை. ஆக்கிரமிப்பு இல்லை. அழிக்கப்பட வேண்டுவன மட்டுமே அழிக்கப்படும். இப்படி மனித சமூகம் அமைதல் வேண்டும். இத்தகு சமுதாயம் உருவாக பாரதிதாசன் காட்டும் வழி என்ன? நாம் செய்ய வேண்டுவது என்ன? என்பதே இந்தப் பேச்சின் குறிக்கோள்.

மானுடம் வரலாற்றுக் காலத்திற்கு முன் சிறப்பாக வாழ்ந்துள்ளது. பாரதிதாசன் வார்த்தைகளில் கூறுவதானால் "அரசு கடந்து" வாழ்ந்துள்ளது. காலப்போக்கில் மானுடம்

தனி உடைமை நாடும் ஆசைக்கு அடிமைப்பட்டுப் போனது. இந்த சூழ்நிலையில்தான் மனிதன் சாதி, மதம், அதிகாரம் ஆகிய தீயூழ்களில் சிக்கித் தவிக்கத் தொடங்கினான். இந்தச் சூழ்நிலையை மாற்றியமைக்கப் பலர் எண்ணினர். பாரதி நமது தலைமுறையில் நம்முடைய காலத்தில் நெம்புகோலாக அமைந்த கவிஞன். சீரழிந்து போன மானுடத்தின் இயல்பைப் பாரதி.

*"மாகாளி பராசக்தி உருசியநாட்*
*டினிற்கடைக்கண் வைத்தா ளாங்கே*
*ஆகாவென்று எழுந்ததுபார் யுகப்புரட்சி!*
*கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்*
*வாகான தோள்புடைத்தார் வானமரர்*
*பேய்களெலாம் வருந்திக் கண்ணீர்*
*போகாமற் கண்புகைந்து மடிந்தனவாம்;*
*வையகத்தீர், புதுமை காணீர்!*

*உழுதுவிதைத் தறுப்பாருக் குணவில்லை*
*பிணிகள்பல வுண்டு; பொய்யைத்*
*தொழுதடிமை செய்வார்க்குச் செல்வங்க*
*ளுன்டு; உண்மை சொல்வோர்க் கெல்லாம்*
*எழுதரிய பெருங்கொடுமைச் சிறையுண்டு.*
*தூக்குண்டே இறப்பு முண்டு;*
*முழுதுமொரு பேய்வனமாம் சிவேரியிலோ*
*ஆவிகெட முடிவ துண்டு"*

(பாரதியார் கவிதைகள்–புதிய ருஷ்யா 1 & 3)

என்ற கவிதைகளில் விளக்குகின்றான். உழுது அறுவடை செய்யும் உழவனுக்கு உணவு கிடைக்கவில்லை. வாய் திறந்து கேட்டாலோ சிறைக் கொடுமை–சுரண்டும் கும்பலின் கும்மாளம்! அரசியல் சதுரங்கமாயிற்று! எங்கும் கொடுமை!

பரந்த-விரிந்த நிலவுலகில் எல்லைகள் தோன்றின! வேலிகள் அமைக்கப் பெற்றன! மானுடத்தின் பொதுமை சுருங்கிற்று!

இதனை பாவேந்தன் பாரதிதாசன்.

"வீட்டிற்கும் வீட்டிற்கும் இடையே வைத்த சுவர்"

என்பான். ஆம்! பிறப்பில் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்! ஒன்றுபட்டு வாழ வேண்டியவர்கள். உடைமைப் பற்று - தனியுடைமை நஞ்சு உறவைக் கெடுத்துவிட்டது! தாயிற் சிறந்த அன்பையும் கெடுத்துவிட்டது! எங்கும் பிறர் பங்கைத் திருடி வாழும் ஏமாற்றுக் கூட்டம்! ஏமாற்றும் சூதாடிகளுக்கு அரண் செய்யும் மதப்புரோகிதர்கள்! ஆளுநர்கள்! ஐயகோ! இந்த இருட்டறையிலிருந்து வெளிச்சத்திற்கு மக்கள் என்று வருவர்?

## தனியுடைமை

மக்கட் சமுதாயத்தில் தனியுடைமைச் சமுதாய அமைப்பு கால்கொண்டவுடன் அந்தத் தனியுடைமைச் சமுதாய அமைப்பினைக் கட்டிக் காப்பாற்றச் சாதிகள் உருவாக்கப் பெற்றன; மதங்கள் உருவாகின; பின் அரசுகள் தோன்றின. சுரண்டும் தன்மை வாய்ந்த, பிறர் பங்கைத் திருடும் சமுதாய அமைப்புத் தோன்றியதிலிருந்து நீதி நூல்கள், அரசியல் சட்டங்கள் முதலிய அனைத்தும் சுரண்டும் வர்க்கத்திற்குச் சாதகமாகவே அமைந்துள்ளன. சான்றாக ஒன்று. ஒரு பெட்டிக் கடையில் சில ரூபாய் விலை மதிப்புள்ள பொருள்கள் திருடு போனால், அதுபற்றி வழக்குத் தொடுக்க குற்றவியல் சட்டத்தில் இடமுண்டு. அதேபோழ்து ஒரு சாதாரண இரும்புத் துண்டைத் தன்னுடைய உழைப்பால் விலைமதிப்புடைய பொருளாக்குகின்றான் ஒருவன். மனிதனின் உழைப்போடு தொடர்பு கொள்ளாத பொருளின் மதிப்புக்கும் உழைப்போடு தொடர்பு கொள்ளாத பொருளின் மதிப்புக்கும், உழைப்பால்

உருமாற்றம் பெற்று விலைமதிப்புக் கூடியதே. அந்த மதிப்புக்கும் இடையேயுள்ள உழைப்பாளியின் பங்கைப் பலர் திருடுகின்றனர். இது குற்றமல்ல. உரிமையாகிவிடுகிறது. பிறர் பங்கைத் திருடும் இந்த உரிமை இன்று பாதுகாக்கப்படுகிறது.

## சாதிக் கொடுமை

சாதிகளைச் சாடுவதில் பாவேந்தன் பாரதிதாசன் மிகவும் முன்னேறிவிட்டான்; சாதிகளை எதிர்த்துப் பல நூற்றாண்டுகளாகப் பாடியோர் உண்டு. ஆதி நாளில் திருநாளைப்போவார், கருவறைக் கதவைத் தட்டித் திறக்க முயன்றார்! பூசாரியின் வரம் கிடைக்கவில்லை. கடவுளானாலும் கதவைத் திறக்க முடியவில்லை. பூசாரியின் ஆதிக்கம்! கடவுளின் கருணையால் கடவுட் காட்சிக்கு இருந்த தடை நீங்கியது. அன்று கடவுட் காட்சிக்கே தடையிருந்தது போலும்! திருநாளைப்போவார் விட்டபாடில்லை! தொடர்ந்து போராடினார்! தீயில் வீழ்ந்து போராடினார்! புதிய ஐயராகத் திருநாளைப்போவார் தோன்றினார்! ஆயினும் அந்த வரலாறு தொடரவில்லை. ஐயர். ஐயரே! புலையர் புலையரே! என்ற நிலையே நீடித்தது – நீடித்துக் கொண்டிருக்கிறது! இன்னமும் திருக்கோயில் கதவு திறக்கப்படவில்லை. அடைத்திருப்பவர், சிறுகூட்டம்! திறக்க விரும்புபவர் பெருந்திரளான கூட்டம். ஆயினும் திறக்க இயலவில்லை. கொள்கை சிறந்திருந்தால் போதுமா? தெளிவும் உறுதியும் வேண்டாமா? இவையிரண்டும் இன்றையத் தமிழருக்கு இல்லை. ஆயினும் பாவேந்தன் சாதிகளை, பச்சையாகக் கருணையின்றித் தாக்கித் தகர்க்கும் சொற்களால் பாடினான்.

தீண்டாமையை எதிர்த்து உரத்த குரலில், விவாத அடிப்படையில் வினாக்களைத் தொடுக்கிறான்.

*சுத்தமில்லாப் பஞ்சமர் கோயிற்*
*சுவாமியைப் பூசிப்பரே—எனில்*
*நித்தமுயர்ந்தவர் நீரில் குளிப்பது*
*யாதுக்கு யோசிப்பீரே!*

(பாரதிதாசன் கவிதைகள்—மூன்றாம் தொகுதி)

என்பது பாவேந்தனின் வினா! அதோடு கவிஞன் விட வில்லை. திருக்கோயிற் கருவறைக்குள் பூனை, பெருச்சாளி, வெளவால் ஆகியன எல்லாம் சுற்றுகின்றன. ஆயினும் மானிடன் மட்டும் ஏன் அனுமதிக்கப் படுவதில்லை.

*"நித்தமும் சாக்கடை நீந்தும் பெருச்சாளி*
*நேரில் அக்கோயிலிலே—கண்டும்*
*ஒத்தபிறப் பினரை மறுத்தீர் உங்கள்*
*கோயிலின் வாயிலிலே"*

(பாரதிதாசன் கவிதைகள் 3—ஆம் தொகுதி. பக்கம் 201)

என்று பாடுகின்றான் பாவேந்தன்.

ஏன்? ஏன்? திருக்கோயில் கருவறை நுழைவுப் போராட்டம், தமிழ் வழிபாடு ஆகிய இயக்கங்கள் நடந்த பொழுது முன்னாள் முதல்வர் பக்தவத்சலனார் அவர்கள், மரபுரிமை கருதிக் கடுமையாக எதிர்த்தார்., அவர், காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்தவர். அவரைக் கேட்பது போலப் பாவேந்தன் கேட்கிறான்.

*"முப்பது கோடியர் பாரதத்தார்—இவர்*
*முற்றும் ஒரே சமூகம் என*
*ஒப்பும் தலைவர்கள் கோயிலில் மட்டும்*
*ஒப்பா விடில் என்ன சுகம்"*

(பாரதிதாசன் கவிதைகள் 3—ஆம் தொகுதி, பக்கம் 200)

என்பது பாவேந்தனின் வினா.

ஒரு கொள்கை என்றால் முன்னுக்குப் பின் முரண்பாடு இருக்கக் கூடாது. இன்றைய கடவுட் கொள்கையில் முரண்பாடுகள் அதிகம். "ஒன்று பரம்பொருள்" "அம்மையப்பரே. உலகுக்கு அம்மையப்பர்" என்பர். ஆயினும் மக்கள் குலத்தில் ஒரு பாதியைத் தீண்டத் தகாதவர் என்று ஒதுக்குதல் நியாயமா, இந்த முரண்பாட்டில் என்ன சிறப்பிருக்கிறது? என்பது பாவேந்தன் வினா.

*ஏக பரம்பொருள் என்பதை நோக்க*
*எல்லாரும் உடன்பிறப்பே–ஒரு*
*பாகத்தார் தீண்டப்படாதவர் என்பதி*
*லே, உள்ள தோசிறப்பு?*

(பாரதிதாசன் கவிதைகள்)

என்பதும் அவன் வினா.

தனக்குவமையில்லாதவன் இறைவன். அதாவது அறிவில், ஆற்றலில், நிறைவில் இறைவனுக்கு நிகர் இறைவனேயாம். இத்தகு ஆற்றல் வாய்ந்த இறைவனைத் தாழ்த்தப்பட்ட குடிமகன் தீண்டினால் என்ன? இறைவனின் ஆற்றல் குறையுமா? அப்படி ஆற்றல் குறையுமானால் தாழ்த்தப்பட்டோனின் ஆற்றலன்றோ மிகுதியாகத் தெரிகிறது. ஆம்! தாழ்த்தப்பட்டோர் ஒருவர் இறைவனைத் தீண்டினாலும் புண்ணியாவசனம்–தூய்மை செய்கிறார்கள்–பிராயச்சித்தமும் செய்கிறார்கள் புரோகிதர்கள். ஆதலால், யாருடைய ஆற்றல் பெரிதென நையாண்டிக் குரலில் பாவேந்தன் கேட்கின்றான்.

*"தாழ்ந்தவர் வந்திடில் தன்னுயிர் போமெனில்*
*சாமிக்குச் சத்தில்லையோ?–எனில்*
*வீழ்ந்த குலத்தினை மேற்குல மாக்கிட*
*மேலும் சமர்த்தில்லையோ?"*

(பாரதிதாசன் கவிதைகள் தொகுதி 3 சமத்துவப்பாட்டு 14)

இதுவரையில் பதில் இல்லை. இனிமேலும் கிடைக்காது ஏன்? இன்றும் செயல்முறையில் இறைமை இல்லை பிழைப்புத்தானே இருக்கிறது! இந்த நூற்றாண்டிலும் மானுடத்திற்குக் கருவறைக் கதவு திறக்கப்படாது போனால் வரலாறு பாடம் கற்பிக்கும். திருக்கோயில் கதவுகைளத் திறமின்! எல்லோரும் அர்ச்சகராவது அடுத்த கட்டம். முதலில் சாதிப் புன்மையினை ஒழிமின்! எல்லோரும் கருவறைக்குள் எழுந்தருளியுள்ள பெருமானுக்குப் பூவும் புனலும் இட்டுத் தொழ உரிமை வேண்டும். இதற்கு விடை கிடைக்குமா? கிடைக்காது?

*"சாதி உயர்வென்றும் தனத்தால் உயர்வென்றும்*
*போதாக் குறைக்குப் பொதுத்தொழிலா ளர்சமூகம்*
*மெத்த இழிவென்றும் மிகுபெரும்பா லோரைஎல்லாம்*
*கத்தி முனைகாட்டிக் காலமெல்லாம் ஏய்த்துவரும்*
*பாவிகளைத் திருத்தப் பாவலனே நம்மிருவர்*
*ஆவிகளை யேனும் அர்ப்பணம் செய்வோம்"*

(புரட்சிக்கவி–பக் 25 பாரதிதாசன் கவிதைகள் தொகுதி–1)

என்று பாரதிதாசன் பாடுவதை ஓர்க. பாவேந்தன் தனது ஆவியைக் கொடுத்தேனும் சாதிக்க வேண்டும் என்று ஆசைப் பட்டான். கவிஞனுடைய ஆவிதான் போயிற்று. காரியம் நடந்தபாடில்லை.

## மதங்களை ஏன் எதிர்த்தான்?

சாதிகளைச் சாடிய பாரதிதாசன், சமயங்களை மறுத்திருக்கிறான்; தொட்ட தொட்ட இடமெல்லாம் மூடப் பழக்கங்களை முழுமூச்சாகப் பாரதிதாசன் வெறுத்து ஒதுக்கியிருக்கிறான்; வெறுத்து ஒதுக்க, மக்களை அறைகூவி அழைக்கிறான். மக்களைச் சாதிகள் பெயரால், தலைவிதியின் பெயரால் ஒதுக்கிய சமய நெறிகளைப் பாவேந்தன் பாரதிதாசன் ஓரங்கட்டியதில் தவறில்லையென்றே தோன்று

கிறது. சமயநெறி "அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்" என்று ஓதுகிறது. ஆயினும், சமயநெறியில் துறைதோறும் சாதிகளே ஆதிக்கம் செலுத்துகின்றன. ஏன்? சாதிப்புன்மை களை அறவே அகற்றாத வரையில் சமய நெறிகள் மனிதகுலத்திற்குத் தீமையே செய்யும் என்பதை எண்ணுக.

மனிதன் சிந்திக்கத் தொடங்கிய நாளில் கடவுட் கொள்கை தோன்றியது. தமிழ் மரபுவழி கடவுட் கொள்கை தோன்றுவதற்குக் காரணமாய் அமைந்தவை பேரறிவு வேட்கையும், பேராற்றல் வேட்கையுமேயாகும். தம்முடைய அறிவையும் ஆற்றலையும்விட ஏதோ ஒன்று அறிவும் ஆற்றலும் மிக்கு விளங்குகிறது என்று இந்த வியத்தகு உலகின் அமைவையும் ஒழுங்குகளையும் முறை பிறழா நிகழ்வு களையும் கண்டபோது உய்த்துணர்ந்தனர். அதனால் அந்த அறிவு ஆற்றல் எது என்று விவரிக்க முடியாமற் போய்க் கடவுள் என்று அதனை அழைத்தனர். காலப்போக்கில் மனிதன் திறமைசாலியாகவும் சாமர்த்தியமாகவும் வாழத் தொடங்கியபோது மதங்களைக் கண்டான். கடவுள் உய்த்துணரப் பெற்ற ஒன்று.

"ஓர் கடவுள் உண்டு–தம்பி
உண்மை கண்ட நாட்டில்!"

(பாரதிதாசன் கவிதைகள் தொகு–3 ஏற்றப்பாட்டு–55)

என்ற பாரதிதாசன் பாடல் இக்கருத்தினை அரண் செய்வ தாகும். அந்த ஒன்றை அறிவு புலனால் தேடும் நெறியே, மெய்ப்பொருள் நெறியாயிற்று. மதங்கள் செய்யப்பட்டவை. மதங்களும் காலப்போக்கில் பெருநெறிகள்–சாராமல், சிறுநெறிகள் சார்ந்து விட்டன; மனிதர்களையும் கெடுக்கத் தொடங்கின. அதனால் மனிதகுல மேம்பாடு மனித நேயம் முதலியவற்றிற்கு முரணாக மதங்கள் இயங்கத் தலைப் பட்டன. அதன்பிறகுதான் மதங்களுக்கு எதிர்ப்புகளும்

மறுப்புகளும் தோன்றலாயின. இதுவே மதங்களைப் பற்றிய வரலாறு.

பாவேந்தன் பாரதிதாசன் மதங்களை எதிர்த்தான் அதுவும்கூடத் தொடக்க காலத்தில் இல்லை என்பதை "எதிர்பாராத முத்தம்" என்ற காப்பியம் குமரகுருபரைப் பற்றி விவரிக்கும் நூல் குறிக்கும் பாவேந்தன்.

*"கடவுள் வெறி சமயநெறி*
*கன்னல் நிகர் தமிழுக்கு*
*நோயே! நோயே!"*

என்று கூறுவதால் கடவுள் வெறியை, சமயநெறியை மறுக்கிறான் என்பதே உண்மை.

மதம் கடவுட் கொள்கையை மையமாகக் கொண்டு மனிதகுல மேம்பாட்டுக்காகத் தோன்றியது. மதம் காலப் போக்கில் தடம் புரண்டுவிட்டது. கடவுளை மறந்த மதங்கள் கூடத் தோன்றிவிட்டன. ஒரே கடவுள் என்று மதங்கள் கூறுவது உண்மையானால் மதச் சண்டைகள் வருவானேன்? வழிகளைப் பற்றிச் சண்டை போட்டுக் கொண்டு அடைய வேண்டுவதை இழப்பது பைத்தியக்காரத் தனமல்லவா? பாவேந்தன் பாரதிதாசன் மதங்களுக்கிடையில் வேற்றுமை பாராட்டுவதை விரும்பவில்லை. கடவுள் பெயரால் எழுதப் பட்ட பொய்ம்மைக் கதைகளை ஒப்பாமல் மறுக்கிறான். நம்மையும் மறுக்கும்படி தூண்டுகிறான். தமிழ்நாட்டில் வாழும் ஏசுமதத்தினர், முஸ்லீம்கள், இந்துக்கள் அனைவரும் தமிழர். பிறப்பால் திராவிடர் என்பதைத் தமிழக மக்கள் உணர வேண்டும். இந்த மதத்தினரைக் கூட்டி, ஆரியத்தைப் பாதுகாத்துத் திராவிடர்களை - தமிழர்களைத் தாழ்த்தும் சூழ்ச்சியில் முன்னணிகள் ஈடுபடும் முயற்சி இன்று நடைபெறுகிறது. விழிப்பாக இருங்கள். எல்லோரும் தொழுவது ஒரு கடவுளையே.

## பெண்ணின் பெருமை

பெண்கள் முன்னேற்றத்திற்கும் பாவேந்தன் பாரதி தாசன் உரத்த குரலில் பாடுகின்றான்; போராடுகின்றான். பெண் குழந்தை தாலாட்டு அற்புதமான படைப்பு. நயம்பட அமைந்த கவிதைகள் பலவே. ஆயினும் இது தனிச் சிறப்புடைய கவிதை. இக்கவிதையில் கவிஞனின் ஆத்திரம் இல்லாத ஆவேசத்தையும் காண்கிறோம்.

*வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்*
*பெண்மையினால் உண்டென்று பேச வந்த*
*பெண்ணழகே!”*

(பெண் குழந்தை தாலாட்டு 5–6 பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி)

என்று பாடுகின்றான். மானுடத்திற்கு வாய்க்கும் சிறப் பெல்லாம் பெண்மையின் பெருஞ்சிறப்பினாலேயே என்று கவிஞன் பாடுகின்றான். மடப் பழக்கங்கள் பெரும்பாலும் பெண்களைப் பிடித்தாட்டுவது இயற்கை. ஆனால், பாவேந்தனின் பெண், மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற காடு மணக்கவந்த கற்பூரப் பெட்டகமாக விளங்குகின்றாள்! இந்தக் கவிதை முழுதும் பெண்ணைப் புதுமைப் பெண்ணாக, புரட்சிப் பெண்ணாகப் படைத்துப் பாராட்டுகின்றான்! இத்தகு சிறப்புக்களெல்லாம் உடைய பெண்கள் இன்னமும் விடுதலை பெற்றார்களில்லை! உரிமை பெற்றார்களில்லை! பெண் பிறவி இழிவு என்ற கருத்துக்கூட மாறவில்லை!

இன்று இங்கும் அங்குமாகச் சில பெண்கள் கல்வி கற்பது உண்மை. உயர்கல்வி கற்பதும் உண்மை. அரசுப் பணிகளில் அமர்வதும் உண்மை. ஆயினும் அவர்கள் சமநிலை உரிமை கலந்த ஒருநிலை உரிமை பெற்றார்களா? அதுதான் இல்லை. பெண்மை தொடர்ந்து துன்பத்திற்கு ஆளாகிறது. “அன்புடைய மாமனும் மாமியும் நீ!” என்று தேவாரம் பேசும். இத்தகு அன்புடைய மாமனும் மாமியும்

ஆண்களுக்குத்தான் வாய்க்கின்றனர். பெரும்பாலும் பெண்களுக்கு வாய்ப்பதில்லை. அண்மையில் நடந்த சென்னை இராசேசுவரியை, இ.ஆ.ப. தேர்வில் வெற்றி பெற்ற அவர் கணவன் கொன்ற செய்தியும் பூலான்தேவி வரலாறும் உணர்த்துவது என்ன? பெண்மையை இழிவுபடுத்தித் துன்புறுத்தும் இழிதகைமைக்கு இன்றே, இப்பொழுதே பாவேந்தன் நூற்றாண்டு விழாவின் போதே முடிவு கட்டுமின்! பெண், வேலைக்குப் போவது உண்மை. ஆனால் அவள் ஈட்டும் ஊதியம் கணவனுக்கே உரிமை உடையது. மறவாதீர்! இதுவா உரிமை? அவளாகக் கனிந்த காதல் ஒப்படைப்பில் தருதல் நன்றே! நிகழ்வு அப்படியல்ல! தட்டிப் பறிக்கின்றான் கணவன்! மகளிர் பணிகளுக்கு செல்வதால் அவர்கள் கூடுதல் நேரம் உழைக்கிறார்கள் என்பதையும் நினைவிற் கொள்க! வீட்டு வேலைகளையும் அவர்கள் மட்டுமே செய்கின்றனர். துணை நிற்கும் கணவன்மார் உண்டோ? உங்களுக்குத் தெரிந்திருந்தால் சான்று காட்டுங்கள்! இம்மாட்டோ? இன்று பெண் குழந்தைகள் கருவிலேயே அழிக்கப்படுகின்ற கொடுமையையும் பார்க்கின்றோம்! பாரதிதாசன் நூற்றாண்டு விழாவின் நினைவாகப் பெண்கள் விடுதலை மலரட்டும்.

பெண்கள் படத்தை விளம்பரப் பொருளாகப் பயன்படுத்தும் கீழ்மையை அரசுகள் தடை செய்ய வேண்டும்! “மலரினும் மெல்லிது காமம்” என்று வள்ளுவம் கூறும். பாவேந்தன் பாராட்டிய காதலுக்கு எதிரிடையாகப் பாலுணர்ச்சியைத் தூண்டிக் காமவெறியூட்டும் திரைப் படங்கள். ஆகா! ஆகா! எங்கும் எந்த நிலையிலும் ஆடவரும் மகளிரும் கூடிக் கல்வி கற்க வேண்டும். இளமை தொட்டே பாலுணர்வைக் கடந்த நிலையில் பெண்மையை மதிக்கும் மதிப்புணர்வு ஒழுக்கத்தை நமது இளைஞர்களிடம் வளர்க்கவேண்டும். முதலில் ஆடவர் மகளிரிடையே தோழமை உருவாதல் வேண்டும். பின் அது வாய்ப்புழி விருப்பம் கடைகூட்டும்போது காதலாக மலரட்டும்.

## கற்பது முதற்கடமை

பாவேந்தன், அறியாமைக்கு எதிரி! கல்விக்குக் காவலன்! பலருக்கும் கல்வி நல்காதாரைக் கழுவேற்ற வேண்டும் என்று பாவேந்தன் பாரதிதாசன் பாடுகின்றான்!

> *"ஏழ்மையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால்*
> *இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்"*

என்பது பாவேந்தன் உள்ளக்கிடக்கை. குழந்தைப் பள்ளிக் கூடங்கள் தேவையென்று கவிஞன் உணர்த்துகின்றான். ஆரம்பப் பாடசாலைக்குமுன் கற்கும் முதல்நிலை ஆரம்பப் பள்ளி நமது நாட்டில் இல்லை. வசதியுள்ளோரின் குழந்தைகளுக்கு "மாண்டிசோரி" கல்வித் திட்டத்தில் இடம் உண்டு. ஏழைத் தமிழ்க் குழந்தைகளுக்கு கிராமப்புறத் தமிழ்க் குழந்தைகளுக்கு அஃதில்லை. நமது நாட்டில் உள்ள சத்துணவு மையங்களை அப்படியே குழந்தைகள் பள்ளிக் கூடங்களாக உருவம் கொடுக்க வேண்டும். சின்னஞ்சிறு வயதில் குழந்தைகள் மூளையைப் பயன்தரத்தக்கவகையில் வளர்க்க வேண்டும். மூளையின் வளர்ச்சி சற்றேறக்குறைய 8 வயதில் நிறைவு பெறுகிறது என்று சில அறிஞர்கள் கூறுகின்றனர். இந்த வயதிற்குள் குழந்தைகளுக்கு மூளைப்புலனை இயக்கும் பயிற்சி, நினைவாற்றல், தேடும் முயற்சி ஆகியவற்றைக் கற்றுத் தந்துவிட்டால் அவர்கள் வாழ்வார்கள், வெற்றி பெறுவார்கள். நிகழ்காலத்திற்கே அழுது தொலைப்பதில் இன்று என்ன பயன் இருக்கிறது. நெடிய நோக்கோடு அடுத்த தலைமுறைக்கு வாழ்வளிக்கும் முயற்சியில் நாம் கவனம் செலுத்த வேண்டும். நமது அரசுகள் கவனம் செலுத்த வேண்டும். குழந்தைகளிடத்தில் தாழ்வுணர்ச்சி வாராமல் பாதுகாக்க வேண்டும். குழந்தமை வயதில் கற்கும் பயிற்சி நல்லது. பயன்தரும். "இசையமு"தில் பாவேந்தன்.

*"கற்பதுவே உன்முதற் கடமை"*

என்று ஆற்றுப்படுத்துகின்றான். பாவேந்தன் தமிழ்வழிக் கல்வியை வற்புறுத்திப் பாடுகின்றான். கல்வி நலம் எல்லாருக்கும் என்று முரசறைந்தவன் பாவேந்தன்! இந்த முரசு ஓயாது ஒலிக்கட்டும்!

## சுதந்திரத்தின் அருமை

பாவேந்தன், சுதந்திரமான சிந்தனையாளன்; கவிஞன். மனிதன் சுதந்திரமாகப் பிறக்கின்றான்; பின் அவனே அடிமை விலங்குகளை மாட்டிக் கொள்கின்றான் என்பதே வரலாறு. நமது பாவேந்தன் பாரதிதாசன் சுதந்திரத்தின் அருமையை உணர்ந்து பாடுகின்றான். சுதந்திரம் என்பது ஒருவன் கொடுத்து, ஒருவன் பெறுவதன்று. அவனவனே பெற்றுக் கொள்வதுதான் சுதந்திரம். சுதந்திரத்தினை வேண்டி நிற்பாரைப் பார்த்து, பாரதிதாசன் "சுக்கா, மிளகா சுதந்திரம் கிளியே!" என்று கேட்கின்றான். கடையில் சுக்கு, மிளகு வாங்குவது போல், சுதந்திரத்தை வாங்கமுடியாது. சுதந்திரம் கடைச் சரக்கன்று. சுதந்திரம் ஆற்றலுக்கும் ஆளுமைக்கும் உரிய பரிசு.

## இளந்தமிழன் ஏற்றம் பெறுக

இளந்தமிழர்க்குப் பாவேந்தனின் அறிவுரை மிகவும் பயன்படக்கூடியது. "வாளினை எடடா!" என்ற கவிதை சிறப்பானது. கவிதைத் தலைப்புத்தான் இப்படி அமைந்து விட்டது! கவிதைக்குள் ஆக்கப் பணிகள் பலவற்றைப் பாவேந்தன் பட்டியல் போட்டுக் காட்டுகின்ற அருமையே, அருமை!

கலைகள் தழுவாத வாழ்க்கை வறட்சித் தன்மை யுடையது. கலைமலிந்த சீர் வாழ்வு தேவை. கலையை வளர்க்க வேண்டும். கலையின்பத்தில் ஆழ்ந்து அமிழ்ந்து போய்விடாமல் தொழில் பல செய்தல் வேண்டும். நல்ல

கவிதைகளை இயற்றுதல் வேண்டும். படை நடத்தும் படை மறவனும் வாழ்தலுக்குரிய பயிற்சி பெறுதல் வேண்டும். கருவிகள் பல செய்து குவித்தல் வேண்டும். நிலத்தை உழுது உணவுப் பொருள்கள் விளைவித்துக் குவித்தல் வேண்டும். நிதியியல் ஆட்சிமுறை நூல்கள் பல காணுதல் வேண்டும். நுட்பம் சார்ந்த இயற்பியல் நூல்கள் பல படைத்திடுதல் வேண்டும். உண்மையைத் தேடும் நூல்கள் பலப்பல படைத்திடல் வேண்டும். இங்ஙனம் படைத்தவற்றைப் பேண அதிகாரம் பெறுதல் வேண்டும்! இன்றைய இளந்தமிழர்கள் இந்தப் பட்டியலில் உள்ள பணிகளை மேற்கொண்டால் அவர்கள் நலமுற்று வாழ்வர்; தமிழகமும் வளரும்.

## உழைப்பவன் உயர்ந்தவன்

பாவேந்தன் உழைப்பை - உழைப்பாளர்களைப் பாராட்டி மகிழ்ந்தவன். பாவேந்தனின் படைப்பில் “வியர்வைக் கடல்” படிக்க வேண்டிய கவிதைகளுள் ஒன்று. உழைப்பவர்களின் வியர்வை கடலாகும் மாட்சியே கவிஞனின் காட்சி. இந்த உலகத்தின் படைப்புக்கள் அனைத்தும் உழைப்பாளர்களின் படைப்பு என்பது பாவேந்தனின் கருத்து! இல்லை! இல்லை! அந்தப் படைப்புக்களையே பாவேந்தன் வினாக்களைத் தொடுத்து விடை சொல்ல வைக்கின்றான். “நீங்களே, சொல்லுங் களேன்!” என்ற கவிதை அது. நன்செய்; நல்ல நிலம்; நெல் விளையும் நிலம்! இந்த நன்செய் நிலம் உழைப்பாளர்களின் உழைப்பால், நாள்தோறும் திருத்திய திருத்தத்தால் நன்செய் ஆயிற்று! எத்தனை உழைப்பாளிகள்? எத்தனை தலை முறைகள் வியர்வையை சிந்தி நிலமாக்கினர்.

> *“சித்திரச் சோலைகளே! உமைநன்கு*
> *திருத்த இப்பாரினிலே—முன்னர்*
> *எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தன*
> *ரோ! உங்கள் வேரினிலே!”*

*"நித்தம் திருத்திய நேர்மையினால்மிகு*
*நெல்விளை நன்நிலமே!—உனக்*
*கெத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை*
*இறைத்தனர் காண்கிலமே!"*

(பாரதிதாசன் கவிதைகள் 1 பக் 156–1 & 2)

என்பதை அறிவோம்.

அடுத்து, ஆர்ப்பரவத்துடன் இயங்கும் இயந்திரங்கள்! இந்த இயந்திரங்களின் வரலாறு என்ன? இந்த இயந்திரங்கள் இரும்புத் துண்டுகள் - அவ்வளவுதான்! ஊர்த் தொழி லாளர்கள் ஒன்று சேர்ந்து உழைத்து இயந்திரமாக்கினார்கள். இதுவே இயந்திரங்களின் வரலாறு! இயந்திர உலகுக்கும் தொழிலுக்கும் தந்தை நிலையிலுள்ளவர்கள் உழைப்பாளி களே!

*"ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே!—உங்கள்*
*ஆதி அந்தம் சொல்லவோ?—நீங்கள்*
*ஊர்த் தொழி லாளர் உழைத்த உழைப்பினில்*
*உதித்தது மெய் அல்லவோ!*

(பாரதிதாசன் கவிதைகள் 1 பக் 156–5)

என்று பாடுகின்றான்.

இங்ஙனம் உழவுக்கும் தொழிலுக்கும் உயிர்ப்பாக விளங்கும் உழைப்பாளிகளின் நிலை என்ன? அவர்களிடம் நிலம் இருக்கிறதா? இயந்திரசாலைகள் உள்ளனவா? உழைக்கும் கருவிகளாகிய கையும் காலும்தான் மிச்சம்! மண்ணைப் போர்த்து விளங்கும் பசுமையும் இயந்திரங்களும் உண்மையான சாட்சி, உழைபபாளிகளின் படைப்பு என்று கூற! ஆனால், இந்த உழைப்பாளிகள் அடைந்தது என்ன? கூலி உயர்வுக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றனர்! நிலமே பாயாகவும் கையே தலையணையாகவும், வானே

கூரையாகவும் கொண்டு வாழ்கின்றனர். அவர்கள் அறிந்த தெல்லாம் வயிற்றுப் பசியேயாம்!

> 'தாரணியே! தொழிலாளர் உழைப்புக்குச்
> சாட்சியும் நீயன்றோ?–பசி
> தீரும் என்றால் உயிர்போகும் எனச்சொல்லும்
> செல்வர்கள் நீதி நன்றோ?"

(பாரதிதாசன் கவிதைகள் பக்.157)

என்று பாவேந்தன் கேட்கும் வினாவை இன்னும் எத்தனை யுகங்களுக்கு வினாவாகக் கேட்டுக் கொண்டிருப்பது? இந்தச் சிக்கலுக்குப் பாவேந்தன் ஒரு தீர்வும் கூறுகின்றான். என்ன அந்தத் தீர்வு! "இவ்வுலகு உழைப்பவர்க்குரியது?" என்பது தான் அந்தத் தீர்வு! இந்த உலக உடைமைகளை உழைப்ப வர்க்கு உரியதாக்கி விடுவதுதான்! இது எப்போது நடக்கும்! நடக்காது! நடக்காது! எதுவும் தானாக நடக்காது! நடக்கும்படி செய்ய வேண்டும். உழைப்பாளர்கள் கெஞ்சு தலை விட்டொழிக்க வேண்டும். கிலியை விட்டொழிக்க வேண்டும். "வல்லாண்மையே வாழும் உரிமையுடையது" என்ற நியதிக்கேற்ப வலிவுடையராக விளங்கி இன்ப வாழ்வினைப் படைக்க வேண்டும். இந்த வார்த்தையே உண்மையான வார்த்தை!

"தனி உடைமை", இனிப்புத் தடவிய நஞ்சு, தனி உடைமை பற்றால் பொதுமையிலிருந்தே மனிதன் விலகத் தொடங்கினான்; மனித குலத்தை அந்நியமாக்கினான். உயர் சுவர்களும் அடைக்கும் தாழ்களும், பூட்டுகளும் கண்டு, தன்னைத்தானே சிறைப்படுத்திக் கொண்டான். இதனால் துன்பங்கள் பலமடங்காக வளர்ந்தன. ஆதலால், பொது வுடைமைக் கொள்கைக்கு மீண்டும் ஓர் உயிர்ப்புக் கிடைத்து வருகிறது. பாவேந்தன் பொதுவுடைமைக் கவிஞன். மனித இதயங்களை அன்பினில் நனைத்தல், "இது எனது" என்னும்

கொடுமையைத் தவிர்த்தல் ஆகியன பொதுமை நெறியின் வாழ்க்கை முறைகள் என்பதனைப் பாவேந்தன்.

> "இதயமெல்லாம் அன்பு நதியினில் நனைப்போம்
> 'இது என'தென் னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்"

(பாரதிதாசன் கவிதைகள்–1
"புதியதோர் உலகு செய்வோம்"–3 பக்.158)

என்று புதியதோர் உலகைப் படைக்கச் சொல்லி ஆணை யிட்டான்! இந்த ஆணை நமது இதயக் கதவுகளைத் திறக்குமா? புதிய உலகு படைப்போமா?

## உடைமையைப் பொதுமைசெய்

பாவேந்தன். பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும் எதிர்த்தான். ஏன், பொதுவுடைமைச் சமுதாயத்தை வரவேற்றுப் பாடினான். மனித குலத்தில் தனியுடைமைச் சமுதாய அமைப்புத் தோன்றியதிலிருந்தே சுரண்டல் அமைப் புடைய பொருளாதார அமைப்புத் தோன்றிவிட்டது. உலகையே இயக்கி வளமும் வரலாறும் படைத்த மனித உழைப்பு இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பெற்று, அற்பக் கூலிக்கு விற்கப்படும் பொருளாகிவிட்டது. உழைப்பாளி தன்னுடைய உழைப்புக்கு ஏற்ற கூலியைக் கேட்கும் உரிமையைப் பெற்றானில்லை. இத்தகு சுரண்டல் முறைப் பொருளாதாரத்தால் உழைப்பாளிகள் ஏழைகள் ஆனார்கள், உழைப்பாளிகளைச் சுரண்டிச் சேர்த்த உடைமைக்காரர்கள் தண்ணீர் நிறைந்த தொட்டியைப் போல ஆனார்கள். வறுமையும் சுரண்டப்படும் பொருளாயிற்று. ஏழ்மையை அறவே ஒழிக்க முடியும் என்ற கருத்தில் பாவேந்தனுக்கு முற்றிலும் உடன்பாடில்லை. 2–5–60-ல் எழுதிய கட்டுரையில் இதை விவரித்து எழுதியுள்ளான். இந்தக் கட்டுரை நமது கருத்தை மறுத்து எழுதப்பட்டது என்பதையும் நினைவுகூர்ந்து மகிழ்கின்றோம். நமது கருத்து கவிஞருக்குக் கிடைத்தது செய்தித்தாள் வழியேயாம். செய்தித்தாள் வழியாக செய்தி

வாயிலாகக் கிடைக்கும் கருத்து முழுமையாக இருக்க முடியாதல்லவா? வறுமையையும் ஏழ்மையையும் பழங்காலத்தில் பிரித்துப் பார்த்ததில்லை. இரண்டும் ஒன்றேயாகத்தான் பேசப்பெற்றுள்ளன. ஆனால், மனித நுகர்வுகள் வளர்ந்து வந்துள்ளன. நுகர்வுப் பொருள்களின் சந்தை வளர்ந்து கொண்டே வருகின்றன. உண்மையைச் சொல்லப் போனால் வையகத்தின் வரலாற்றை நீட்சி பெறச் செய்யும் படைப்புக்களைவிட இன்று நுகர்வுப் பொருள்களே அதிகமாகப் படைக்கப்படுகின்றன. இன்றைய நாகரிகத்தை "நுகர்வு நாகரிகம்" (Consuming Culture) என்று சொன்னால் கூடத் தகும். ஆதலால், வறுமையும் பலவகையான பிரிவுகளுக்கு உரியதாகின்றது. நமது நாட்டு அரசு, வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளோர் என்று ஒரு கணக்கு எடுத்து அறிவித்துள்ளது. நமது மக்கள் தொகையில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்பவர்கள் 58.9 விழுக்காட்டினர். வறுமைக் கோட்டுக்கும் கீழ் வாழ்கின்ற இந்த மக்களும் நான்கு வகையினராக வகைப்படுத்தப்பட்டுள்ளனர். ஆண்டு வருவாய் ரூ.3,500/–, ரூ.4,500/–, ரூ.5,000/–, ரூ.6,400/–, என்ற அளவு காட்டி வகைப்படுத்தப் பட்டுள்ளனர். முதற்பிரிவினர் ஆண்டு ஒன்றுக்கு, ரூ. 3,500/–க்கும் குறைவாக ஈட்டுபவர்கள். அதாவது நாள் ஒன்றுக்கு ரூ. 10/– கூலி பெறுபவர்கள். ஒரு குடும்பத்தில் ஆணும் பெண்ணும் சேர்ந்து உழைத்தாலும் பெறுவது ரூ. 20/–தான். இன்றைய விலை நிலவரத்தில் 5 பேர் உள்ள குடும்பம் வயிறார உண்ணமுடியுமா? ஒரு வேளைகூடப் பசியார உண்ண இயலாத குடும்பம் இது. இப்படிப்பட்ட குடும்பங்களை நாம் ஏழைக் குடும்பங்கள் என்று கூறுகின்றோம். கடையாகக் குடும்ப வருவாய் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6,400/– இந்த வருவாயும் இன்றைக்குப் பற்றாக் குறைதானே! மற்ற வகையினர் ரூ. 4,500/–, ரூ. 5,000/– ஆண்டு ஒன்றுக்கு வருவாய் வரும் குடும்பங்கள். இன்றைய நிலையில் சந்தை நிலவரத்தில் இந்த வருவாயில் ஒரு குடும்பத்தை

நடத்துவது அரிது! அரிது! ஆதலால், அன்றாட வாழ்வுக்கே அல்லற்படுகின்ற நிலையை ஏழ்மை என்றும், வாழ்க்கையில் வசதிகளைத் தேடிக் கொள்ள முடியாத நிலையை வறுமை என்றும் நாம் பிரித்துப் பார்ப்பதில் தவறில்லை என்றே கருதுகின்றோம். வறுமை வேறு! ஏழ்மை வேறு. ஏழ்மையென்பது அன்றாட வாழ்வில் தேவைக்காகவே போராடுவது; அல்லற்படுவது. வறுமை என்பது இந்த உலகில் காணப்பெறும்-படைக்கப்பெறும் நுகர்பொருள்களையெல்லாம் அடைந்து அனுபவிக்க இயலாமை. அடிப்படை வாழ்விற்கு உத்தரவாதம் தேவை. இதுவே நமது கருத்து. பாவேந்தன் கருத்து நம்முடன் முற்றிலும் முரண்பட்டதன்று.

இந்த நிலைமையை விவரித்துப் பலர் எழுதி எழுதியே கை ஓய்ந்து ஓய்வெடுத்துக்கொண்டு விட்டார்கள். மாமேதை கார்ல்மார்க்சு மட்டுமே இப்படித்தான் உலகம் இருக்க வேண்டும் என்று துணிவுடன் கூறினார்; எழுதினார்; இயக்கம் நடத்தினார்; போராடினார்; வெற்றி பெற்றார். மார்க்சு திறமைசாலி மட்டுமல்ல. திறமைசாலிகள் பலர் கிடைக்கக்கூடும். ஆனால் மேதைகள் எளிதில் கிடைக்க மாட்டார்கள். மார்க்சு மாமேதை. அதனால்தான் மார்க்சு இறந்தபொழுது “மார்க்சு சிந்திப்பதை நிறுத்திக் கொண்டு விட்டார்” என்று கூறினார் ஏங்கெல்ஸ்.

பொருளாதார வேற்றுமை தோன்றிய பிறகு, தானங்களால், தருமங்களால், இலவசங்களால் ஏழ்மைக்குத் தீர்வு காண நமது முன்னோர்கள் முயன்றார்கள். கைகூடிய பலன் யாதொன்றும் இல்லை. இருள் சூழ்ந்தது. இந்தச் சூழ்நிலையில் ஒரு விடிவெள்ளி தோன்றியது. அவர்தான் மாபெரும் சிந்தனையாளராக விளங்கிய கார்ல்மார்க்சு. மனிதகுல வரலாற்றைக் கூர்ந்து நோக்கி உழைப்பு, கூலி, உபரி, லாபம் என்ற தத்துவத்தைக் கண்டுபிடித்தார். மாமேதை மார்க்ஸ், உழைப்பாளிகளின் செல்வம் சுரண்டப்படாதிருக்க வேண்டுமென்றால் உற்பத்திக் களங்களும் உற்பத்திக்

கருவிகளும் பொதுவாக்கப் படவேண்டும் என்று கூறு கின்றார். நமது பாவேந்தன் பாரதிதாசனும் “உடைமையைப் பொதுமைசெய்” என்று ஆத்திசூடியில் கூறுகின்றான்.

பாவேந்தன் பாரதிதாசன் தமிழன்; தமிழ்க் கவிஞன்! தமிழ் எழுச்சிக்குப் பாடிய கவிஞன்! ஆயினும் அவனுடைய விசாலப் பார்வை பெரிது! பெரிது! “விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை” என்று பாடிய வரிகள் நூற்றுக்கு நூறு பாரதிதாசன் சாரம்! பாரதி, கலியுக வீழ்ச்சியின் சின்னமாகிய ருஷ்யப் புரட்சியை அறிந்தவன்; அறிந்து வரவேற்றவன். “யுகப் புரட்சி” என்று பாரதி அதை வரவேற்கிறான்! ‘புரட்சி’ என்ற சொல் தமிழிலக்கியத்தில் முதன் முதலாக ஆக்கப் பெறுகிறது! பாரதியை அடியொட்டி பாரதிதாசன் பொதுவுடைமைக் கவிஞனாகவே பாடு கின்றான்!

பொதுவுடைமைச் சமுதாயம் என்றால் என்ன? மானுடம், அரசியல், சமூகவியல், பொருளியல் அனைத் திலும் சுதந்திரம் பெற்று விளங்குவதே. பொதுவுடைமை. செய்யும் மனிதனுக்கு, உழைப்பு உண்டு. உழைப்புக்கு ஏற்ற ஊதியம் உண்டு. உழைப்புக்கும் உழைப்பினால் படைக்கப் படும் பொருளுக்கும், பொருள் மதிப்பீட்டுக்கும் மதிப் பீட்டின் பயனுக்கும் உரிமை உடையவன் உழைப்பாளன், உழைப்பாளனிலிருந்து உழைப்பாளன் பொருள் அந்நியப் படுத்தப்படும் அநியாயம் பொதுவுடைமைச் சமுதாயத்தில் கிடையாது. பொதுவுடைமைச் சமுதாயத்தில் மனிதன்தான் மதிப்பிற்குரியவன். மனிதனுக்காகவே எல்லாம்!

பொதுவுடைமைச் சமுதாயத்தில் மனிதனின் உழைப்பை அற்பக் கூலிக்கு வாங்கும் முதலாளி இருக்க மாட்டான். உழைப்பாளியே படைக்கப்படும் பொருள் அனைத்துக்கும் உரியவன். பொதுவுடைமைச் சமுதாயத்தில் உழைப்பாளர்களே அனைத்துரிமைகளும் உடையவர்கள்.

இலாப வேட்டை இல்லை. எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கும். வரலாற்றுக் காலம் தொட்டு, உழைத்து அலுத்து எய்த்துக் களைத்துப்போனவர்கள்! பொதுவுடைமைச் சமு தாயத்தில் உரிமை பெறுகிறார்கள்! வாழ்வு பெறுகிறார்கள்!

## எல்லைகளை எடு!

பாவேந்தன் பாரதிதாசன் உலக வரலாற்றைக் கூர்ந்து பார்க்கிறான். நூறாயிரம் வேற்றுமைகள் மனித குலத்திற்குள் – மதங்களின் பெயரால்! சாதிகளின் பெயரால்! ஏன் போரிடுவதே மண்ணாள்பவருக்கு வழக்கமாகி விட்ட வாழ்க்கை. பாவேந்தன் பாரதிதாசன் எண்ணற்ற வேற்றுமைகளைக் களைந்து உலக ஒருமையை உயர்த்திப் பாடுகின்றான்.

> "உன்வீடு–உனது பக்கத்து வீட்டின்
> இடையில் வைத்த சுவரை இடித்து
> வீதிகள் இடையில் திரையை விலக்கி
> நாட்டொடு நாட்டை இணைத்து மேலே
> ஏறு"

(பாரதிதாசன் கவிதைகள் தொகுதி 1
'உலகம் உன்னுடையது' 21–25)

வீட்டிற்கும் வீட்டிற்கும் இடையே சுவர் எப்படி வந்தது! சுவர் வரவில்லை; சுவர் வைக்கப்பெற்றது. வீதிகளுக் கிடையே திரைகள்! நாடுகளுக்கிடையே எல்லைகள்! ஏன் எல்லைகள்? சுவர்கள்? என்று பாவேந்தன் பாரதிதாசன் கேட்ட வினாவிற்கு இன்று கிழக்கு ஜெர்மனி விடை தந்திருக்கிறது. ஆம்! கிழக்கு ஜெர்மனி மேற்கு ஜெர்மனி இவற்றைப் பிரித்து நின்ற சுவர் இடிக்கப் பெற்றுவிட்டது. ஏகாதிபத்தியம் வைத்த சுவரைச் சடசடவென மக்கள் எழுச்சி இடித்துவிட்டது! நமது நாட்டின் எல்லை – ஆம்! இந்தியா–பாகிஸ்தான் எல்லை எப்போது எடுபடும்? பாகிஸ்தான்–பாரத மக்கள் எல்லைகளைக் கடந்து

இதயங்களை இணைக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை! கவிஞன் "உலகம் உண்ண உண்! உலகம் உடுத்து உடுத்து!" என்று ஆணை இடுகின்றான்.

எங்கும் போர்! ஏன் போர்! சிலர் போராடுவதையும் மக்களுக்குத் தொல்லைகள் தருவதையும் பொழுது போக்காகக் கொண்டுள்ளனர். இதனைப் பாரதிதாசன் "கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்" என்று பாடுகின்றான். மனிதன் வாழ்வுக்குப் போராடிக் கொண்டிருக்கின்றான். எந்த மனிதன் போராடிக் கொண்டி ருக்கின்றான்? உழைத்து உலகத்தை உருவாக்கி இயக்கும் மனிதன் வாழ்க்கைக்குப் போராடிக் கொண்டிருக்கிறான்! அவனுடைய உழைப்பு கொள்ளை போகிறது! 'எல்லாம் அவனுடைய செயலே' என்ற மதத்தின் மந்திர மொழியுடன் உழைப்பவன் செல்வம் பறிபோகிறது. பாவேந்தன் பாரதி தாசன் தொழிலாளர்களை உசுப்பி விடுகின்றான். தொழி லாளிகளின் உரிமைக்குரல் இதோ!

"செப்புதல் கேட்பீர் – இந்தச்
செகத் தொழிலாளர்கள் மிகப்பலர் ஆதலின்,
கப்பல்க ளாக – இனித்
தொழும்பர்களாக மதித்திட வேண்டாம்
இப்பொழுதே நீர் – பொது
இன்பம் விளைந்திட உங்களின் சொத்தை
ஒப்படைப்பீரே – எங்கள்
உடலில் இரத்தம் கொதிப்பேறு முன்பே"

(பாரதிதாசன் கவிதைகள் தொகுதி 1 தொழிலாளர் விண்ணப்பம்–7)

என்பது பாரதிதாசன் பாடல். உழைத்துண்பவர் நாலாம் சாதியாய், ஐந்தாம் சாதியாய் ஒதுக்கப்பட்ட அநியாயம் கண்டு பாவேந்தன் எரிமலையாய்ச் சீறுகின்றான். மாந்தர் குலத்தை "நின்றது போதும்! முன்னேறுக" என்று ஆவேசமிக்க

கவிதைகளால் முன்னே தள்ளுகிறான்! நாம் தான் நகர்ந்தபாடில்லை! "புதியதோர் உலகம் செய்வோம்!" என்று அழைக்கின்றான். கவிஞனுடைய அழைப்பு அழைப்பாகவே இருக்கிறது! தமிழர் காதில் வீழ்ந்ததாகத் தெரியவில்லை. சிலர் காதில் வீழ்ந்ததாகக் காட்டிக் கொண்டார்கள்! ஆயினும் செயல் இல்லை. பாவேந்தனுடைய உலகப்பன் பாட்டைப் படியுங்கள்! இந்த உலகப்பன் பாடிய பாடல் ஆண்டு 1936-க்கு முன்பாகும். இடையில் இவ்வளவு ஆண்டுகள் ஓடியுள்ளன. என்ன நடந்தது?

"பொத்தல் இலைக் கலமானார் ஏழை மக்கள்
புனல்நிறைந்த தொட்டிபோல் ஆனார் செல்வர்

என்ற நிலை. இன்று நாமே ஆள்கின்ற குடியாட்சியில்கூட மாறவில்லையே? மாறாதது மட்டுமல்ல. மேலும் கெட்டிருக் கிறது. பணக்காரன் மேலும் பணக்காரன் ஆகியுள்ளான். ஏழைகள் மேலும் மேலும் ஏழைகளாகின்றனர். இலவச உணவு, இலவச அரிசி, இலவச உடை, இலவசத் திருமணம் இவையெல்லாம் நமக்கு என்ன போதிக்கின்றன? ஏழ்மை போகவில்லை! ஏழ்மையின் கொடிய வெப்பம் இலவசத்தால் தணிக்கப் பெறுகிறது! அவ்வளவுதான்!

## பொதுவில் நடத்து

பாவேந்தன் உணர்ச்சிக் கவிஞன் மட்டுமல்ல. திட்டமிட்டு மக்களை ஆற்றுப்படுத்தும் கவிஞன்! 'உலகம் உன்னுடையது' அற்புதமான படைப்பு! காலத்தை வென்று விளங்கும் படைப்பு! கவிதையின் முற்பகுதியில் மனிதன் தாழ்ந்து வீழ்ந்த நிலையை விளக்கி இடித்து எடுத்துக்கூறி மனிதனை எழுப்பி, நிற்கச் செய்கின்றான்! பாவேந்தன்! புதிய மனிதனாக்குகின்றான்! உலகத்தை நடத்துக என்று ஆணை தந்து இயக்குகின்றான்.

"ஏறு! விடாமல் ஏறு! ஏறு மேன்மேல் ஏறு!
ஏறி நின்று பாரடா எங்கும்!
எங்கும் பாரடா இப்புவி மக்களைப்
பாரடா உனது மானிடப் பரப்பைப்
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்
என்குலம் என்றுனைத் தன்னிடம் ஒட்டிய
மக்கள் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்!
அறிவை விரிவுசெய் அகண்ட மாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!
அணைந்து கொள்! உன்னைச் சங்கம மாக்கு!
மானிட சமுத்திரம் நானென்று கூவு!
பிரிவிலை எங்கும் பேத மில்லை
உலகம் உண்ண உண்! உடுத்த உடுப்பாய்
புகல்வேன்! உடைமை மக்களுக் குப்பொது!
புவியை நடத்து! பொதுவில் நடத்து."

(பாரதிதாசன் கவிதைகள் தொகுதி 1
"உலகம் உன்னுடையது" வரி 26–40)

என்ற கவிதை வரிகள், கவிதை வரிகள் மட்டுமல்ல. மானுடத்தின் நல்வாழ்வுக்குரிய வரிச்சட்டம்! மறை–சாசனம்! இந்த வரிகளை நாம் உணர்வுடன் ஏற்று நடைமுறைப் படுத்தினால் நாடு வளரும். பாவேந்தனின் நூற்றாண்டிலிருந்து செய்ய எண்ணுவோமாக!

வீடு, வீதி, நாடு ஆகிய எல்லைகளைக் கடந்த மனிதனை மாமனிதனை பாவேந்தன் படைத்துக் காட்டு கிறான். ஆம்! இது அணுயுகம்! இன்று நாடுகளையும் கடந்த மனிதன் தேவை! மாமனிதன் தேவை! அப்போதுதான் போரைத் தவிர்க்க இயலும்' மக்கள் குலம் "என்குலம்", "என் கோத்திரம்" என்ற சிறு சிறு சுழிகளுக்குப் பதிலாக "மக்கள் குலமே என் குலம்" என்பது அற்புதமானது.

"அறிவை விரிவு செய்! என்றான் பாவேந்தன். ஆம்! பாவேந்தன் காலத்திற்கு முன்பும் அவன் காலத்திலும்கூட மனிதக் குலத்தை வருணங்களால், சாதிகளால் பிரிந்தவர்களே - குறுகிய புத்தியுடையவர்களே அறிஞர்கள் என்று அழைக்கப்பெற்றனர். "ஒரு குலத்திற்கு ஒரு நீதி" சொன்னவன் மனு! அவன் பாராட்டப் பெற்றான்! அதனால்தான், பாவேந்தன் பாரதிதாசன் குறுகாதே! குறுகியதெல்லாம் சின்னப்புத்தி! "அறிவை விரிவு செய்" அகண்டமாக்கு!" என்று ஆற்றுப் படுத்துகின்றான்! ஆம்! மக்களுடன் பழகு! வேற்றுமையின்றிப் பழகு! விசாலப் பார்வை வேண்டும். விசாலப் பார்வையிருந்தால் போதுமா? அனைத்தையும் போற்றி வளர்த்தல் வேண்டும்., வாழ்விக்க வேண்டும். கடைசியாக மணிமுடியாக.

**"உலகம் உண்ண உண்! உடுத்த உடுத்து"**

என்று அறம் வகுத்து உணர்த்துகின்றான்! இதுவே, இன்றைய மனித அறம்! இந்த அறநெறி கால்கொள்ள உடைமை பொதுவாக வேண்டும். இதுவே, பாரதிதாசனின் இலக்கு! நாம் என்ன செய்யப் போகிறோம்?

## 2. பாரதிதாசனின் குடும்ப விளக்கு

இனிய அன்பர்களே,

பெருமைக்குரிய துணைவேந்தர் டாக்டர் வேங்கட சுப்பிரமணியம் அவர்களே!

புரட்சிக் கவிஞன் பாவேந்தன் பாரதிதாசன் பிறந்த மண்ணில் அவனுடைய நூற்றாண்டு விழாச் சொற்பொழிவு நிகழ்த்த வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி; கடப்பாடு!

### முன்னுரை

நமது தலைமுறையில் தோன்றி நம்மிடையில் வாழ்ந்த தலைசிறந்த கவிஞன் பாவேந்தன்! பாவேந்தன் எண்ணற்ற

கவிதைகள் மூலம் நம்மை உசுப்பிவிட்டான். ஆனால், நாம் எழுந்தோமா! விடை காண்பது பல்கலைக் கழகத்தின் பொறுப்பு. பாவேந்தன் எழுச்சிமிக்க கவிதைகளைத் தந்தான்! விசையூட்டினான்! நன்றும் தீதும் இனம் பிரித்துக் காட்டினான்! இதுவே செய்யத் தக்கது என்று ஐயத்திற்கிடமின்றி உணர்த்தினான். பாரதிதாசன் இனிய, எளிய தமிழில் தெளிந்த நடையில் கவிதை தந்தவன். தமிழக வரலாற்றில் பாவேந்ததன் பாரதிதாசன் ஒரு சகாப்தமாகத் திகழ்ந்தவன்.

## குடும்ப விளக்கும் குறளும்

பாரதிததாசன் இயற்றிய காப்பியங்களில் ஒன்று குடும்பவிளக்கு. இந்தக் காப்பியம் அழகுத் தமிழில் உள்ள அரிய படைப்பு. புதிய புனைவுகள் பல பொதுளும் படைப்பு. குடும்ப விளக்கு ஒரு சாகா இலக்கியம். தமிழர் தலைமுறை என்றென்றும் போற்றிப் படிக்க வேண்டிய படைப்பு. உலக மொழிகளில் குடும்ப விளக்கைத் தந்தால், குடும்ப விளக்கு உலகக் காப்பியமாக விளங்கும். திருவள்ளுவர் காமத்துப் பாலில் அமைதி தழுவிய-ஆற்றல்மிக்க காதலை விளக்குகின்றார். காமத்துப்பாலில் திருவள்ளுவர் பேசவில்லை. திருவள்ளுவர் பாத்திரங்களையே பேச வைக்கின்றார். காமத்துப்பாலில் ஓர் இடத்தில்கூடக் கடுஞ்சொல் காணப்பெறவில்லை. தொட்ட தொட்ட இடமெல்லாம் கனிந்த அன்பு; செயல் நிலைக்குரிய உந்துதல்; மகிழ்ச்சி; இன்பம்; இதுவே காமத்துப்பால். பாவேந்தனின் குடும்ப விளக்கும் திருக்குறளின் காமத்துப்பால் போலவே அமைந்துள்ளது. பொதுவாகப் பாவேந்தன் படைப்புக்களில் ஆவேசம் அதிகம். ஆனால், குடும்ப விளக்கில் எங்கும் ஆற்றல் மிக்க அன்பையும், அமைதி தழுவிய அன்பையும் காணலாம். இக்காப்பியம் இலக்கிய நலன்கள் நிறைந்த படைப்பு. மனிதராய்ப் பிறந்தோர், குடும்பங்களில் வாழ்வோர், குடும்பங்கள் நலமுற வேண்டுமென விழைவோர் அனைவரும் படிக்க வேண்டிய காப்பியம் இது.

## எல்லார்க்கும் கல்வி

மக்களின் நல்வாழ்வுக்கு முதல் தேவை கல்வி. எல்லாரும் கற்க வேண்டும். கற்றவர்கள் முகத்தில் இருப்பனவே கண்கள். கல்லாதவர்கள் முகத்தில் இருப்பன புண்கள் என்றது வள்ளுவம். எல்லாருக்கும் கல்வி நல்க வேண்டும். கல்வி பயிலும் வாய்ப்பில்லார்க்குக் கல்வியை வழங்காத ஊரவரைக் கழுவேற்றிட வேண்டும் என்பது பாவேந்தன் கருத்து.

*"கல்வி நல்காக் கசடர்க்குத் தூக்குமரம்*
*அங்கே உண்டாம்"* (பாண்டியன் பரிசு)

கல்வியைப் பொதுவாக்க வேண்டும் என்பது பாவேந்தனின் ஆற்றல் நிறைந்த குறிக்கோள்.

*"கல்வியைக் கட்டாயத்*
*தால் நல்கி யாவர்க்கும்*
*நல்லுடலை ஓம்ப*
*நனியுழைத்தால் அல்லலுண்டோ?"*

(குடும்ப விளக்கு–பக். 63)

என்பது பாவேந்தனின் பாட்டு. எல்லாருக்கும் கல்வி தேவை. உடல்நலம் தேவை! உடல்நலத்திற்கு உழைப்புத் தேவை. இன்று, கல்வி பொதுவாக்கப்பட்டுவிட்டது! ஆனால், கல்வியில், குறிப்பாக ஆரம்பக் கல்வியில் போதிய அக்கறை காட்டப்பெற வில்லை. நாட்டின் எதிர்காலம் இன்றைய ஆரம்பப் பாடசாலைகளிலேயே உருவாகிறது. பாரதிதாசன் நூற்றாண்டு விழாவின்போது ஆரம்பக் கலவியின் தரத்தை உயர்த்த வேண்டும்; அறிவாக்கத்திற்குச் செயற்பட வேண்டும்.

"கல்வியைக் கட்டாயத்தால் நல்கி" என்பது கவிஞனின் வாக்கு. நாட்டுத் தொண்டில் முதல் நிலையில் இடம் பெறுவது கல்வியேயாம்! நம்நாடு விடுதலை பெற்ற பிறகு எல்லாருக்கும் கல்வியளிப்பது என்ற வழியில் நீண்டதூரம்

நடந்திருப்பது உண்மை. ஆயினும் போதாது. மேலும் கற்கும் வாயில்கள் பலவாகச் செய்தல் வேண்டும். கல்வியின் தரம் உயர்தல் வேண்டும் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.

## கேள்விச் செல்வம்

அறிவியக்கத்திற்குப் பயன்படுவது கேள்விச் செல்வம். “கற்றலில் கேட்டலே நன்று” என்பது வள்ளுவம். “செவிநுகர் கனி” என்பான் கம்பன். நமது பாவேந்தன். “மடமைத்தனம் கேள்வியால் அகலும்” என்கின்றான்! “இருள் நீங்கி ஒளி பரவுதல் போல” என்று உவமித்துக் காட்டுகின்றான். ஆம்! கல்வி கரையில; கற்பவர் நாள் சில, ஆயினும் கற்ற அறிஞர்களின் வாய்ச்சொல் கேட்பதால் குறைந்த காலத்தில் நிறைந்த அறிவைப் பெறமுடியும். எத்துறையிலும் மடமை இருக்காது. இது கவிஞனின் எண்ணம்.

> “...கேள்வியால் அகலும் மடமை போல்
> நள்ளிரவு மெதுவாய் நடந்து கொண் டிருந்தது”
>
> (குடும்ப விளக்கு – பக். 5)

என்பது கவிஞனின் வாக்கு.

## தீங்கிலாத் தமிழ்

பாவேந்தன், தமிழே தன்னுயிரெனக் கொண்டு வாழ்ந்தவன். பாவேந்தன் தமிழைச் சிறப்பித்துப் பாடியதைப் போல் வேறு யாரும் பாடவில்லை. தமிழுக்கு ஒரு இயக்க வடிவமே தந்தவன் பாவேந்தன் பாரதிதாசன்! தமிழை அவன் போற்றும் பாங்குகள் அற்புதமானவை. தமிழ் யாருக்கும் தீங்கு செய்யாது. தமிழ் தண்ணளியுடையது. “தண்ணார் தமிழ்” என்பது திருவாசகம், பாவேந்தன் “தீங்கிலாத் தமிழ்” என்று பரவுகின்றான்.

## தலைவியின் தொண்டுணர்வு

பாரதிதாசன் காட்டும் குடும்பத்தில் காலை நேரத்தில் தமிழ்ப்பாடம் கற்பிக்கப் பெறுகிறது. குடும்பத் தலைவி தமிழ்

வாத்திச்சியாக இருந்து பாடம் கற்பிக்கிறாள்; சங்கத் தமிழ்ப் பாடல்களைக் கற்பிக்கின்றாள் அவள், இதனை,

*"தவழ்ந்தது சங்கத் தமிழ்ச் சுவை"*

(குடும்ப விளக்கு—பக். 8)

என்று விளக்குகிறான் பாவேந்தன்.

வீட்டின் படுக்கை அறை. குடும்பத் தலைவனும் தலைவியும் கலந்துரையாடல் செய்து மகிழ்ந்து கொண்டிருக் கிறனர். அந்த நேரத்திலும் அந்தச் குடும்பத் தலைவிக்கு நாட்டுத் தொண்டு, தமிழ்த் தொண்டு பற்றிய எண்ணம் அலைமோதுகிறது. கணவனை நோக்கித் தலைவி கேட்கிறாள்:

*"தமிழரென்று சொல்லிக்கொள் கின்றோம் நாமும்,*
*தமிழ்நாட்டின் முன்னேற்றம் விரும்பு கின்றோம்;*
*எமதென்று சொல்கின்றோம் நாடோ றுந்தான்!*
*எப்போது தமிழனுக்குக் கையா லான*
*நமதுழைப்பை ஒருகாசைச் செலவு செய்தோம்?*
*நாமிதனை என்றேனும் வாழ்நாள் தன்னில்*
*அமைவாகக் குந்திநினைத் தோமா? இல்லை.*
*அனைவருமிவ் வாறிருந்தால் எதுந டக்கும்?*

(குடும்ப விளக்கு - பக். 31)

என்று கேட்கிறாள். ஆம். நல்ல கேள்வி! இன்றும் நாம் ஒவ்வொருவரும் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி!

அரசியல் சட்டப்படி எங்கும் எதிலும் இடம் பெற வேண்டிய தமிழ். இன்று எங்கு இடம் பெற்றிருக்கிறது? மேடைகளில் தமிழ் நன்றாக வளர்கிறது, இது போதுமா? ஆலயங்களில் தமிழ். தான் பெற்ற இடத்தைக்கூடக் காத்துக் கொள்ள முடியவில்லையே! பயிற்சிமொழி தமிழ் என்று அறிமுகப்படுத்தப் பெற்று, அரை நூற்றாண்டாயிற்று. என்ன முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது? 1971–இல் கலைஞர், தமிழ் நா்ட்டின் முதலமைச்சராக இருந்த பொழுது தமிழ்வழியாகக்

கற்கும் மாணவர்களுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை கொடுத்து அரசாணை பிறப்பித்தார். அதைத் தமிழ் நாட்டு மக்கள் எதிர்த்தனர்; தமிழிளைஞர்கள் எதிர்த்தனர்; ஏன், இன்று தமிழகத்து ஏடுகள் பலவற்றில் கலப்புத் தமிழே காட்சியளிக்கிறது. கொச்சைத் தமிழே கோமாளி நடனம் ஆடுகிறது! தட்டிக் கேட்பாரில்லை! பாவேந்தன் "தமிழ் என் உயிர்" என்றான். "தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன்" என்றான். ஆனால், இன்று நடப்பது என்ன? "மறைமலையடிகள் தமிழும் தமிழ்தானா?" என்று வினா எழுப்புகின்ற பிறவிகள் நம்மிடையில் வாழ்கின்றனர் என்பதுதான்.

இன்று 'தமிழ் வாழ்க!' என்பது மேடை முழக்கம் மட்டுமே! தமிழ்த் தொண்டு செய்வாரைக் காணோம்! ஏன், தமிழால் பிழைப்பு நடத்துபவர்கூட, அவர்தம் வீட்டுப் பிள்ளையை ஆங்கிலம் கற்கவே அனுப்புகின்றனர். இன்று தமிழுணர்வு பட்டுக் கொண்டிருக்கிறது. பாவேந்தன் நூற்றாண்டு விழாவை யொட்டியவாது நமது தமிழுணர்வை, தமிழின உணர்வைப் புதுப்பித்துக் கொள்வோமாக! நாமமது தமிழரெனக் கொண்டு வாழாது, தமிழராகவே வாழ்தல் வேண்டும். தமிழ்த் தாய்க்குத் தமிழ் நாட்டின் அரியணையை மீட்டுத் தந்து அமர்த்துதல் வேண்டும். கி.பி. 2000க்குரிய புதுமை நலன்கள் அனைத்தும் பெற்று வளரும் மொழியாகத் தமிழை வளர்க்க வேண்டும். இப்பணிகளைச் செய்து முடிக்கத் தமிழன் வளரவேண்டும். தமிழர்களின் வளர்ச்சியே தமிழின் வளர்ச்சி! தமிழின் வளர்ச்சியே தமிழ்ச் சமூக வளர்ச்சி! இப்பாடம் நமது வாழ்வுப் பாடமாதல் வேண்டும்.

இனி, குடும்ப விளக்கின் தலைவி கேட்ட வினாவுக்குத் தலைவன், விடை சொல்வதைப் பார்ப்போம்! என்ன விடை சொல்கிறான்? வருவாய்க்குத் தக்கபடி ஒரு தொகையைத் "தமிழர் கழக"த்திற்கு வழக்கமாக வழங்கி வருவதாக விடை கூறுகின்றான். தலைவி மகிழ்ச்சியுறுகிறாள். இன்னும் தமிழ்

வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய பணிகள் எண்ணற்றவை உள்ளன.

தமிழ், அறிவியல் தொழில் நுட்பம் சார்ந்த மொழியாக வளர்க்கப் பெறுதல் வேண்டும். புத்தம் புதிய கலைகள் தமிழில் வெளிவருதல் வேண்டும். தமிழில் அரிய கருத்துக்கள் உலக மொழிகளில் தரப்பெறுதல் வேண்டும். உலகத்தில் தமிழர் எங்கு வாழ்ந்தாலும் தமிழ்க் கல்வி பெற வாய்ப்பளிக்க வேண்டும். இத்திட்டங்கள் நிறைவேறப் பலகோடி ரூபாய்கள் தேவை. நாம் அனைவரும் பங்கேற்க வேண்டும். இன்று நாட்டுத் தொண்டில், தமிழ் வளர்ச்சிப் பணியில் யாரும் பங்கேற்க வருவதில்லை. இன்று பொதுத் தொண்டு, தமிழ்த் தொண்டு ஆகியன அரசுக்குப் பரிந்துரை செய்யும் பணி யளவில் சிறுத்துவிட்டது. "தமிழைப் பயிற்று மொழியாக்க வேண்டும்" என்று அரசைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானத்தை ஓர் அறையில் கூடி நிறைவேற்றி அனுப்புகிற அளவில் தமிழ்த்தொண்டு அமைந்துவிட்டது. தமிழ் வளர்ச்சித் துறையில் போராட்ட உணர்வு இல்லை! இந்நிலை மாறியாக, வேண்டும். தமிழ் வளர்ச்சி இயக்கம், மக்கள் இயக்கமாதல் வேண்டும். மக்கள் காசுகளைத் தமிழ் வளர்ச்சிக்கு-கழகத்திற்கு எண்ணித் தரவேண்டும். குடும்ப விளக்கின் தலைமகன் செய்து காட்டியது நமக்காகத்தானே! கெழுதகை நட்புக்குரிய கலைஞர் இந்த முயற்சியைத் தொடங்கி-தமிழர் இயக்கமாக ஆக்குதல் வேண்டும். இது நமது விருப்பம். பாரதிதாசன் நூற்றாண்டு விழாவின் சின்னமாகத் தமிழ்வளர்ச்சிக்கு நிறுவனம் காணவேண்டும். பலகோடி நிதியமைப்புடன் காணவேண்டும் தமிழர்களே, இந்த அமைப்பினைக் காணின் தமிழ் வளரும்! வாழும்!

## ஆட்சிமொழிக் குழப்பம்

இன்று சட்டப்படி தமிழ்நாட்டில் 'ஆட்சிமொழி தமிழேயாம். ஆனால், நடைமுறையில் தமிழின் வளர்ச்சி நிலை ஆமைவேகம்தான். நடுவணரசின் ஆட்சி மொழியாக ஆங்கிலம் இருப்பதும் தமிழ் வளர்ச்சிக்குத் தடையாக

உள்ளது. அதாவது ஆங்கிலத்தின் வாயிலாகக் கற்றால்தான் நடுவணரசின் வேலைவாய்ப்புகளைப் பெற முடியும் என்பது உண்மையன்று! நடுவணரசு, "இந்திய நாட்டு மொழிகள் 14-ல் எந்த மொழியிலும் நடுவணரசுப் பணித் தேர்வுகளை எழுதலாம்" என்று அறிவித்து நடைமுறைப்படுத்தியும் வருகிறது! ஆதலால் ஆங்கில மொழியே தமிழ்நாட்டின் இணையாட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பது பொருந்தாது. அது மட்டுமல்ல. ஆங்கிலம் கற்பது வேறு. ஆங்கிலத்தின் வாயிலாகக் கற்பது வேறு, நாம் ஆங்கிலம் கற்க வேண்டாம் என்று கூறவில்லை. ஆங்கிலத்தைக் கற்போம். மிகமிக நன்றாகவே கற்போம்! அறிவியல், தொழிலியல் துறைப்பாடங்களைத் தமிழ் வாயிலாகக் கற்க வேண்டும் என்பதே பாவேந்தன் எண்ணம். ஆனால், இன்று எங்கும் ஆங்கிலப் பற்று! பச்சிளம் மழலைகள் ஆங்கிலம் கற்கிறார்கள். தமிழ் பயிலவில்லை! இது வெட்கப்பட வேண்டிய செய்தியல்லவா! பாவேந்தன் குடும்ப விளக்குக் காப்பியத் தலைவி மூலம்.

> ....எப்படிக்கும்
> முதற்படியாய்த் தமிழ்படிக்க வேண்டும்"

(குடும்ப விளக்கு–பக்.31)

என்று கூறுகின்றான். ஆம்! தமிழ்நாட்டுக் குழந்தைகள் தமிழ் படிக்க வேண்டும். நாம் சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்ய வேண்டும்.

## பெண்ணின் பெருமை

பாவேந்தன் பாரதிதாசன் மகளிர்குல விடுதலைக்குத் தன்னுடைய ஆசிரியன் பாரதியைப் போலவே, இல்லை – பாரதியைவிட வேகமாகப் பாடியவன். பெண்களுக்குக் கல்வி தேவை. தாய்மை நிலையடையும் பெண்களுக்குக் கல்வி அவசியம். பெண்கள் கற்றாலே நல்ல தலைமுறை தோன்றும்.

*"கல்வியில் லாத பெண்கள்*
*களர்நிலம் அந்நி லத்தில்*
*புல்விளைந் திடலாம் நல்ல*
*புதல்வர்கள் விளைதல் இல்லை"*

(குடும்ப விளக்கு)

என்கிறான் கவிஞன்.

கவிஞனின் இந்த வாக்கு வெற்றி முரசம் ஆர்ப்பது எப்போது? இன்றும் நமது நாட்டில் உள்ள பெண்களின் கல்விநிலையை எண்ணுங்கள்! விழிமின்! மகளிர் குலத்திற்குக் கல்வி வழங்குமின்!

பெண், தனக்கு வாய்ப்புக் கிடைத்தால் அனைத்தையும் திறமையாகச் செய்வாள் என்பது பாவேந்தனின் கருத்து! குடும்ப விளக்குக் காப்பியத் தலைவியின் வாணிகத் திறனை நோக்குங்கள்.

*"களிப்பாக்குக் கோட்போர்க் கீந்து*
*களிப்பாக்கிக் கடனாய்த் தந்த*
*புளிப்பாக்கி தீர்ந்த பின்பு*
*கடனாகப் புதுச்ச ரக்கை*
*அளிப்பார்க்குப் பணம் அளித்தாள்*
*........................"*

*"இளகிய நெஞ்சத் தாளை*
*இளகாத வெல்லம் கேட்பார்*
*அளவாக இலாபம் ஏற்றி*
*அடக்கத்தை எடுத்து ரைப்பாள்*
*மிளகுக்கு விலையும் கூறி*
*மேன்மையும் கூறிச் சற்றும்*
*புளுகாமல் புகன்ற வண்ணம்*
*புடைத்துத் தூற்றிக் கொடுப்பாள்"*

(குடும்ப விளக்கு–பக். 23)

"வாங்குவோர் களிப்படையும் வண்ணம் களிப்பாக்குத் தருதல், முன்கடன் வசூலித்துச் சரக்குக் கொள்முதல் செய்தல், முன்பாக்கி தருதல் ஆகியன வாணிகத்தின் நுட்பங்கள்.

வாணிக உலகம் தூய்மையாக இருக்க வேண்டும். சுத்தமான சரக்கினைத் தருதல் வேண்டும். அடக்கவிலை கூறி விற்றல் முதலியன வாணிகச் செயற்பாடுகள்! இந்தக் குடும்பத் தலைவி, இவற்றைப் பெற்று விளங்கும் பெற்றிமையை என்னென்பது! கடைசியாகக் குடும்பத் தலைவன் வருகின்றான். குடும்பத் தலைவி, அவனிடம் கணக்கு ஒப்படைக்கும் பாங்கைப் பாவேந்தன் விளக்கும் வரிகள் நிதிநிர்வாகத் தொழில் நுட்பம் சார்ந்த செய்திகள் அடங்கியவை: கடன் கொடுத்த இனங்களுக்குரிய தண்டல், ரொக்கத்திற்கு விற்ற முதல் தனியே வைத்தல்.... என்ற நிர்வாக ஒழுங்கியல்களைத் தாங்கியவை.

*'கொண்டவன் வந்தான், கண்கள்*
*குளிர்ந்திடக் கண்டாள்!" அத்தான்*
*கண்டுள்ள கணக்கின் வண்ணம்*
*சரக்குகள் கடன்தந் தார்க்குத்*
*தண்டலும் கொடுத்தேன்! விற்று*
*முதலினைத் தனியே வைத்தேன்!*

என்பது எண்ணி மகிழத்தக்கது.

## தாய்மையின் மாண்பு

இந்த உலகில் அமைதி தழுவிய வாழ்க்கையை விரும்பாதவர் யார்தான் உண்டு? அமைதியான வாழ்க்கையை அடைய என்ன செய்ய வேண்டும்? அந்த வழியும் அருமையானதாக இல்லாமல் எளிமையானதாக இருக்கவேண்டும். ஆம்! பாவேந்தனை - புரட்சிக் கவிஞனை அணுகி இதற்கு வழி கேட்போமே! பாவேந்தனும் அமைதி

நிலைத்திட இலேசான ஒரு வழியைக் காட்டுகின்றான். இதோ பாவேந்தன் அமைதிக்குக் காட்டும் இலேசான வழி!

*“இவ்வுலகில் அமைதியினை நிலைநாட்ட வேண்டின்*
*இயேசுவழி ஒன்றுண்டு: பெண்களை ஆடவர்கள்*
*எவ்வகையும் தாழ்த்துவதை விட்டொழிக்க வேண்டும்”*

(குடும்ப விளக்கு - பக். 199)

அன்பு ஆழமானது. அன்பு தூய்மையானது. அன்பு ஆற்றல் மிக்கது. அதுவும் தாயன்புக்கு ஈடு இணை இந்த உலகில் இல்லை. கடவுள், மானுடத்திற்கு உதவ எடுத்த வடிவம் ‘தாய்’ என்று சொன்னால் பொருந்தும். தாய், குழந்தையின் நோய்க்குத் தானே மருந்துண்பாள்: பத்தியம் இருப்பாள். தாய், தன்னைப்பற்றிக் கவலைப்படாள். தன் சேயைப் பற்றியே அவளுக்குக் கவலை. குடும்ப விளக்கில் ஒரு காட்சி! குடும்ப விளக்கின் தலைவி, தன் குழந்தையை அணைத்தவாறு தூங்குகிறாள்! அயர்ந்து தூங்குகிறாள்! தலைவனுக்குத் தலைவியை எழுப்ப எண்ணம். அதனால் தலைவி, சூடிக் களைந்தெறிந்த மலர்ச் சரத்தைத் தலைவன் எடுத்து அவள் முகத்தில் எறிகிறான். அவள் விழிக்கவில்லை. பின் மலர்ச்சரத்திலிருந்து உதிர்ந்த மலரிதழ் ஒன்றைக் குழந்தை மீது போடுகின்றான். தூங்கிக் கொண்டிருந்த தாயின் கை உடனே மதலையின் மீது விழுந்த மலரிதழைத் துடைத்து எறிந்து மீண்டும் அதன் இடம் போயிற்று! என்ன அருமையான காட்சி!

*“மங்கையை எழுப்பு தற்கு*
*வழியொன்று கண்ட றிந்தான்!*
*அங்கவள் களைந்தெ றிந்த*
*மலர்க்கண்ணி யைஅன் னாளின்*
*திங்களின் முகத்தில் போட்டான்!*
*சேயிழை விழித்தா ளில்லை!*
*மலர்கண்ணி தனில்அ விழ்ந்த*

*மலரிதழ் ஒன்றைத் தூக்கம்*
*கலைத்திடக் குழந்தைமீது*
*போட்டனன்! தாயின் கைதான்*
*மலரிதழ் தனைத் துடைத்து*
*மற்றும்தன் இடம் போயிற்று"*

(குடும்ப விளக்கு - பக். 166-167)

*என்ற கவிதை வரிகள் தாயன்பினை விளக்கும் ஒப்பற்ற வரிகள்.*

## மணந்தோன் அருள் விரும்பும் மங்கை

*பாவேந்தன் காதல் கவிதைகள் இயற்றுவதில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனாக விளங்கினான்: விளங்குகின்றான். இன்று எங்கும் பொருள் மதிப்பீட்டுச் சமுதாயம்! இல்லை, பண மதிப்பீட்டுச் சமுதாயம்! இன்று எங்கும் நுகர்வு நாகரிகமே வளர்ந்து வருகிறது. இன்று பெண்களில் பலர், கணவனை, கண்டதையெல்லாம் வாங்கித் தருமாறு தொந்தரவு கொடுத்துக் கடனாளியாக்கித் தற்கொலை எல்லைக்குக் கொண்டு போய்த் தள்ளிவிடுகிறார்கள். இதுவா காதற் சிறப்புடைய பெண்ணின், அழகு? இல்லை, இல்லை! சிறந்த காதலி பொருளைப் பெரிதென்று கருதமாட்டாள்! அணிகலன்களை வேண்டி நிற்கமாட்டாள்! தன் மணாளனுடைய அருளையே தன் உயிரெனக் கொண்டு வாழ்வாள்! இதுவே பெண்டிர் பெருஞ்சிறப்பு! இதனை,*

*"பொருளையும் பெரிதென் றெண்ணாள்*
*பூண்வேண்டாள் தனைம ணந்தோன்*
*அருளையே உயிரென் றெண்ணும்*
*அன்பினாள்"*

*என்று பாடுகிறான்.*

இங்குக் கணவன் காட்டும் அன்பை, 'அருள்' என்று பாவேந்தன் கூறுவது ஏன்? 'அருள்' என்பது தொடர்பிலார் மாட்டுச் செல்வது என்ற பழைய உரை வழக்கு என்னாவது? என்று கேட்கலாம். இல்லை, இல்லை! அன்பின் முதிர்ச்சியே அருள்! கைம்மாறும், கடப்பாடும் எதிர்பாராதது அருள்! அதுபோல் தனது கணவனின் காதலொழுக்கம் இருத்தல் வேண்டும் என்று மனைவி எண்ணுவதில் தவறில்லை யல்லவா?

## முதியோர் காதல்

ஆகா! பாவேந்தனின் குடும்ப விளக்குக் காப்பியத்தில் முதியவர்கள் காதல் பகுதி மிகவும் சிறந்த பகுதி. படிக்குந் தோறும் இன்பமூட்டுவது. கிழவன் கூறுகிறான், தன் காதலி "கிழவி இருக்கின்றாள் என்பதொன்றே தனக்கு இன்பம்" தருகிறது என்று! எவ்வளவு அன்பின் முதிர்ச்சி!

## அறைவீடு – கழகம்

தமிழர் வீடுகள் எப்படி இருக்கவேண்டும் என்று பாவேந்தன் வழிகாட்டுகிறான். வீட்டின் அறைகள் தமிழ்க் கழகம் போல் விளங்க வேண்டும். மேலும் வீடுதோறும் நூலகம் அமையவேண்டும். அந்த நூலகத்தில் பழைய நூல்களும் புதிய நூல்களும் கலந்திருக்கவேண்டும். நூல்கள் மட்டும் போதுமா? இந்த யுகம், செய்தித்தாள் யுகமல்லவா? செய்தித்தாள்களும் இருக்கவேண்டும். கவிஞனின் பொன்னுரைப்படி எப்பொழுது தமிழர் இல்லங்கள் இயங்கும்?

> "பாடம் சொல்லப் பாவை தொடங்கினாள்
> அவள் வாத்திச்சி. அறைவீடு கழகம்
> தவழ்ந்தது சங்கத் தமிழ்ச் சுவை"

(குடும்ப விளக்கு - பக். 8)

என்றும்,

*"நின்றகண் ணாடி நெடும்பேழை தான்திறந்து*
*இன்று மலர்ந்த இலக்கியங்கள் - தொன்றுவந்த*
*நன்னூற்கள் செய்தித்தாள் நல்கி"*

என்றும் பேசும் கவிதை வரிகளை உன்னுக.

## தட்டாமல் ஈக — தனியில்லம்

குடும்ப விளக்குக் காப்பியம் மனையறத்தின் மாண்பினைச் சிறப்புற விளக்குகிறது. பாவேந்தன் காட்டும் மனையறம் தமிழர் மரபு வழி வந்த மனையறம், ஆரியக் கலப்பு வந்த பிறகு, வந்த கூட்டுக் குடும்பம் அன்று. கூட்டுக் குடும்பமுறை ஒரே நரகம்! அங்குக் காதலும் சிறப்பதில்லை: மனையறமும் மாட்சி யுறுவதில்லை: பொறுப்புணர்வும் வருவதில்லை: தற்சார்பான வாழ்க்கையும் கால்கொள்வ தில்லை. கூட்டுக்குடும்பத்தில் எதிர் விளைவுகளே மிகுதி. "மாமியார் மருமகள் சண்டை" உலகமறிந்த செய்தி! அதோடு நாத்தியார் பிடுங்கல் வேறு! அதனால், திருவள்ளுவர்,

*'தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்*
*அம்மா அரிவை முயக்கு"*

என்று கூறினார். இந்தத் திருக்குறள் வழி தமிழர் மனையறம் கூட்டுக் குடும்பமன்று என்பதை உணர்கின்றோம். "தம்மில்" "தமது" என்பவற்றால் தனிக்குடித்தன முறை இருந்தது என்பது உய்த்துணரத் தக்கது.

நமது குடும்ப விளக்கின் தலைவியின் திருமணம் நிறைவேறிய நிலையிலேயே,

*"தட்டாமல் ஈக: தனியில்லம்"* (குடும்ப விளக்கு - பக். 117)

என்கிறாள்!

கவிஞனின் இந்த வரி ஊன்றிப் படிக்கத்தக்கது. தமிழர் வாழ்வில் கூட்டுக் குடும்ப முறை தகாது: பயன் தராது:

தனியில்ல முறையில்தான் பெற்றோரிடத்தில் கூட அன்பு பெருகி வளரும்! பிரிவே அன்புக்குச் சாதனம்.

## பொருள் தேடல் மாந்தன் சீர்

முந்தையோர் தேடிவைத்த செல்வத்தினை வைத்தே வாழ்தல் நன்றோ? இல்லை! மாந்தன் சீர்பெற வேண்டு மானால் அவரவரும் அவரவர்தம் வாழ்க்கைக்குச் செல்வம் தேடவேண்டும். இதுவே தமிழ் மரபு. இங்குத் தொல்காப்பி யத்தின் பொருள்வயிற் பிரிவு நினைவு கூரத்தக்கது.

*"பெற்றவர் தேடி வைத்த*
*பெருஞ்செல்வம் உண்டென் றாலும்*
*மற்றுந்தான் தேட வேண்டும்*
*மாந்தன்சீர் அதுவே யன்றோ?*

(குடும்ப விளக்கு - பக். 136)

என்னும் வரிகள் இதனை உணர்த்தும்.

## மருத்துவத்தில் சிறந்த மங்கை

அடுத்து, வீடே மருத்துவ மனையாத் திகழும் தகுதியும் பெற்றிருப்பதைக் காண்கிறோம். குடும்பத் தலைவி தமிழ் வாத்திச்சியாக விளங்கினாள்: வாணிகச் சிறப்புப் பெற்று விளங்கினாள். அதே குடும்பத் தலைவி மருத்துவத் தாயாகவும் விளங்கும் அருமைப்பாட்டினைப் பாவேந்தர் விளக்கும் மாண்பினை உன்னுக! உன்னுக!

*"நாடியில் காய்ச்சல் என்றே*
*நன்மருந் துள்ளுக கீந்தாள்"*

என்றும்,

*"அன்றியும் உன்பெண் டாட்டி*
*அறிவுக்கோர் திருவி ளக்காம்*

*இன்றுநான் அடைந்த நோய்க்கு*
*நன்மருந் திட்டுக் காத்தாள்"*

*என்றும் மாமியார் மெச்சும் மருமகளைக் குடும்பவிளக்கில் காண்பீர். இன்று கண்டபடி மாத்திரைகள் தின்பதால் பலருக்கும் நோய் வளர்கிறது! நமது பெண்கள் அவர்களுடைய தமிழ் மரபு மருத்துவத்தினை என்று அறிவர்? என்று உணர்வர்? அன்றே தமிழர்க்குப் பொற் காலம்!*

## வாழ்வின் வீடு

*வாழ்நிலை அரும்பாகி மலராகி, காயாகி, கனியாகி முதிர்வதைப் போல, வாழ்க்கையும் முதுமையடைகிறது. இந்த வாழ்க்கைப் படிகளில் முறையாக வளர்ந்து செழுங் கிளைகளுடன் தழைத்து வளர்வதே வாழ்வியற் சிறப்பு. இங்ஙனம் நிறைவுறும் வாழ்வே 'வீடு' என்று பாவேந்தன் கூறுவதைக் கேளுங்கள்!*

*"அதிர்ந்திடும் இளமைப் போதில்*
*ஆவன அறங்கள் செய்து*
*முதிர்ந்திடும் பருவந் தன்னில்*
*மக்கட்கு முடியைச் சூட்டி*
*எதிர்ந்திடும் துன்ப மேதும்*
*இல்லாமல் மக்கள் பேரர்*
*வதிந்திடல் கண்டு நெஞ்சு*
*மகிழ்வதே வாழ்வின் வீடு!"* (குடும்ப விளக்கு - பக். 20)

## வேலைவாய்ப்புப் பெருக வேண்டும்

*மானுடம் தோன்றிய நாள் தொட்டு உழைத்து வேலை செய்து பொருள்களைப் படைத்து நுகர்ந்து வாழ்தல் என்பது பரிணாம வளர்ச்சி. எல்லாருக்கும் தொழில் வேண்டும். தொழிலின்மையே வறுமையாகும். இன்று நமது நாட்டை*

வருத்தும் கொடிய துன்பம் வேலையில்லாத் திண்டாட்டம் என்பதைப் பாவேந்தனும்

*"தொழில் வேண்டு வார்க்குத் தொழிலில்லை"*

(குடும்ப விளக்கு - பக். 61)

என்று வருந்திப் பாடுகின்றான். நாடு நலமுற, வளர, வாழத் தொழில்களை வளர்க்கவும், வேலை வாய்ப்புக்களை வழங்கவும் முதலீடு செய்ய வேண்டும் என்பது பாவேந்தனின் அறிவுரை. இன்று இளந்தலைமுறையினர் வேலை செய்து வளர வாய்ப்புக்கள் இல்லை! ஊர்தோறும் பல நூற்றுக் கணக்கான இளைஞர்கள் வேலை வாய்ப்புப் பெறவில்லை. உலக நாடுகளிலேயே வேலைவாய்ப்புக் குறைவான நாடு நமது நாடுதான்! ஆதலால், இந்த நூற்றாண்டில் செய்யக் கூடிய தலைச்சிறந்த அறம், தொழிற் சாலைகள் அமைத்து வேலைவாய்ப்பு வழங்குவதேயாம். பின்னை உள்ள அறங்கள் இரண்டாம் நிலையினவே என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

## எம்மட்டில் உண்டோ அம்மட்டில் உண்டு

தமிழினத்தின் பிறவிக்குணம், ஒற்றுமையைப் பேணா திருத்தல். நமது பாவேந்தன் தமிழர் தம்முள் ஒற்றுமை பேணவேண்டும் என்று வலியுறுத்துகின்றான். ஏன் நம்முள் ஒற்றுமை இடம் பெறவில்லை? நாம் அனைவரும் ஒன்றென்று எண்ணும் உணர்வு தோன்றி வளராமல், அயல் வழக்கின் வழி வந்த சாதிகள் பிரிவினைப்படுத்தி ஒற்றுமையைக் குலைத்த கொடிய செய்தியை நினைத்தாலும் குருதி கொதிக்கிறது. பாவேந்தன்,

*"....................எல்லாரும்*
***ஒன்றென்னும் எண்ணம் உயரவில்லை: ஒற்றுமைதான்***
***நன்றென்னும் எண்ணம் நடப்பதுவோ?***

(குடும்ப விளக்கு - பக். 61)

என்ற கவிதைகளைப் பலகாலும் படிக்கவேண்டும்: ஒழுக்க மாக்குதல் வேண்டும். ஏன்? சாதியில் உயர்வு - தாழ்வு நீங்கின அளவிற்குக்கூட நன்மை உண்டு, உயர்வு உண்டு என்பது பாவேந்தனின் எண்ணம்.

"இம்மக்கள் தமக்கு மேலோர்
இழிந்தவர் என்னும் தீமை
எம்மட்டில் போமோ, நன்மை
அம்மட்டில் இங்குண் டாகும்"

(குடும்ப விளக்கு - பக். 61)

என்பதை அறிக.

## ஏற்றத்தாழ்வு

சாதிகுல இழிவு மட்டும்தானா? செல்வம் உடையார் - இல்லாதார் ஏற்றத்தாழ்வால் ஏற்படும் இழிவையும் காட்டுகின்றான் பாரதிதாசன். ஏற்றத்தாழ்வின் கொடு முடியாக ஓர் ஆளை வண்டியில் வைத்து, ஆள் இழுக்கும் கேவலம் தோன்றியமையை நினைந்து வெதும்பிக் கவிதை களில் தெரிவிக்கிறான் பாவேந்தன்.

"கல்வி தன்னினும் செல்வம் தன்னினும்
தொல்லுல கோர்பால் தொலையா திருந்திடும்
ஏற்றத் தாழ்வே இதற்குக் காரணம்
இழுப்பவன் வறியவன்! ஏறினோன் செல்வன்!
இருவரும் ஒருநிலை எய்தும் நாளில்
ஆளைஆள் இழுத்தல் அகலும்"

(குடும்ப விளக்கு - பக் 61)

பாவேந்தனின் இந்தப் பாடலுக்குச் செயலுருவம் கொடுத்த பெருமை அறிஞர் அண்ணா அவர்களுக்கு உண்டு. அறிஞர் அண்ணா தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்றவுடன்

ஆள் இழுக்கும் வண்டிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் என்பது இங்கே நினைவுகூரத்தக்கது.

## சுற்றுப்புறத் தூய்மை

வாழ்வு இனிதாக அமையச் சுற்றுப்புறச் சூழ்நிலை சுத்தமாக அமையவேண்டும். ஈக்கள் நோய் பரப்பிகளாகும். ஈக்களை ஒழிப்பது தலையாய கடமை.

> "ஈமுன்கால் சோற்றிலையில்
> இட்டாலும் - தீமையம்மா!" (குடும்ப விளக்கு - பக். 45)

இஃதோர் இனிய பாடல்! அருமையான அறிவுரை!

## பனை-நட்புக்கோர் உவமை

வாழ்க்கையை இயக்கும் உணர்வுகள் இரண்டு. ஒன்று காதல்! மற்றொன்று நட்பு! காதல் உணர்வு ஆண் - பெண்பாலார்க்கிடையே நிகழும் மென்மையான உணர்வு; ஆழமானது; ஆற்றலுடையது. நட்பு, பால் வேறுபாடின்றி நிகழ்வது. ஒருவன் காதலிக்காமல் கூட வாழ முடியும். நட்பு இல்லாமல் வாழ முடியாது. நட்பு - ஆம்! அஃதோர் அற்புதமான உந்துசக்தி! உணர்வு! மருந்து! பாவேந்தன், நட்பை - உவமையால் விளக்கும் முறை அற்புதமானது. பனை மரத்தை நட்புக்குச் சான்றாக விளக்குகின்றான்! ஆம்! ஒருவன் தன் இளமைக்காலத்தில் பனம்பழம் தின்று ஏரிக் கரையில் போட்ட பனங்கொட்டை, பனைமரமாக வளர்ந்தது. தண்ணீர் கேட்காமல் தானே வளர்ந்தது பனைமரம்! ஏன் காப்புக்கூட எதிர்பார்க்கவில்லை! தானே வளர்ந்த பனைமரம் உரிமையோடு நுங்கும் சாறும் தந்து உரமூட்டுகிறது: வளர்கிறது: வாழ்விக்கிறது! வெப்பம் தாக்காமல் விசிறியாக நின்று பாதுகாக்கிறது. ஆம்! நல்ல நண்பர்கள், எதிர்பார்த்து நண்பர்களாவதில்லை. தாமே வளர்வர்; வாழ்வர். நமக்கு வேண்டிய உதவிகளை நாம்

எதிர்பார்க்காமலே செய்வர். கைம்மாறும் எதிர்பார்க்க மாட்டார்கள். இதுவே நட்பு.

"ஊர்ஏரிக் கரைதனிலே என்னிளமைப்
பருவத்தில் இட்ட கொட்டை
நீரேதும் காப்பேதும் கேளாமல்
நீண்டுயர்ந்து பல்லாண் டின்பின்
வாராய்என் றெனைஓலை விசிறியினால்
வரவேற்று நுங்கும் சாறும்
சீராகத் தந்ததெனில், பனைபோலும்
நட்புமுறை தெரிந்தா ருண்டோ!

(குடும்ப விளக்கு - பக். 80-81)

இத்தகு நட்புக் கிடைப்பின் வேறு என்ன வேண்டும்?

## தீமை கண்டு ஒதுங்குதல் தீமை

சமூகம் ஒரு அமைப்பு; இயக்க நிலையில் உள்ள அமைப்பு. இந்தச் சமூக இயக்கத்துடன் ஒருங்கிணைந்து ஓடாத வாழ்வு பயனற்றது. ஊர்திகள் தடங்களிலும் சமூகம் நியதிகளின் வழியும் செல்ல வேண்டும். சமூக நியதி புறக்கணிக்கப்படும்பொழுது சமூகத்தின் வளர்ச்சி பாதிக்கும். சமூக நியதிகளை வழுவாமல் பின்பற்ற வேண்டும். சமூக நியதிகளிலிருந்து மறந்தும் வழுவுதல் கூடாது.

இன்றைய சமூகத்தில் பலர், பயந்தாங்கொள்ளி களாயிருக்கின்றனர். அது அவர்களின் பிறவிக்குணம் போலும். பயம் மிகமிகத் தீயகுணம். பயம் மனிதனைக் கோழையாக்கி விடுகிறது: மனித உலகத்திலிருந்து ஒதுக்கி விடுகிறது. பயம் அறிவைக் கொன்றுவிடுகிறது. ஆளுமையை அழித்து விடுகிறது! தீமைகளிலெல்லாம் தீமை பயம். இந்தப் பயத்திலிருந்து மனித உலகத்தை மீட்பதே பெருந்தொண்டு! பயத்திலிருந்து மனிதனை மீட்க எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை! வாழ்க்கைக்கு ஒப்புறுதி உத்தரவாதம்

இன்மையும் அதன் விளைவாகிய தற்சார்புமே பயத்திற்குக் காரணம். பாஞ்சாலிக்கு அநீதி இழைத்த பொழுதும் சமூகம் விழித்து எழவில்லை என்பதுதானே உண்மை! அன்று மட்டுமன்று. இன்று மட்டும் என்ன வாழ்கிறது? பாவேந்தன் பாரதிதாசன்,

"ஒரு தீமை கண்டால்
ஒதுங்கி நிற்றல் தீமை" (குடும்ப விளக்கு - பக். 66)

என்று கூறும் அறிவுரை தமிழர் வாழ்வாக மலர்தல் வேண்டும்.

"இழுக்கொன்று
காணில் நமக்கென்ன
என்னாமல் கண்டஅதன்
ஆணிவேர் கல்லி
அழகுலகைப் - பேணுவதில்
நேருற்ற துன்பமெலாம்
இன்பம்" (குடும்ப விளக்கு - பக். 66)

என்பான் பாரதிதாசன். சமூக நியதிக்காகத் துன்பமுறுதலும் இன்பமே என்பது பாவேந்தனின் பண்பான அறிவுரை.

## நல்லறம் நாடுக

இன்றைய சமுதாயத்தில் தன்னலம் - பொதுநலம் என்று அடிக்கடி பேசப்படுகிறது. இவ்விரண்டில் பொது நலமே உயர்ந்தது. பொதுநலத்தில் தன்னலம் அடங்கும்; ஆனால் தன்னலத்தில் பொதுநலம் அடங்காது. ஆதலால், பொதுநலம் போற்றுதலுக்குரியது. வழி வழி வந்த தமிழ் மரபு பொதுநலம் சார்ந்தேயாம். தமிழ்த் தலைமகன் பொருளீட்ட விரும்புவதுகூடப் பொதுநலத் தூண்டுதலிலேயே என்று அகநானூறு கூறும்.

*"இல்லென்று இரப்போர்க்கு இயைவது கரத்தல்*
*வல்லா நெஞ்சம் வலிப்ப நம்மினும்*
*பொருளே காதலர் காதல்"*

என்பது அகநானூறு. புறநானூறு,

*"தமக்கென முயலா நோன்றாள்*
*பிறர்க்கென முயலுநர்...." என்று கூறும்*

நமது கவிஞன் பாவேந்தன் பொதுநலம் பற்றி நிறையப் பேசுகிறான்.

*"அதிகாலை தொடங்கிநா இரவு மட்டும்*
*அடுக்கடுக்காய் நமது நலம் சேர்ப்ப தல்லால்*
*இதுவரைக்கும் பொதுநலத்துக்கு என்ன செய்தோம்?*

(குடும்ப விளக்கு - பக். 30)

என இடித்துரைக்கும் வகையில் பாடுவான். நல்லறமே நாட்டிற்கு இசைந்தது. எந்நாளும் பிறர்க்குத் தீமை செய்யாமை நல்லறம் ஆகும்.

*"தீயவை தீய பயத்தலால் தீயவை*
*தீயினும் அஞ்சப் படும்"*

என்பது திருக்குறள். தீமை, செய்வானுக்கும் செய்யப் படுபவனுக்கும் தீமை பயக்கும்.

*"நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்*
*அல்லது செய்தல் ஓம்புமின்*

என்பது புறநானூறு.

தீமை செய்யாமையும் நன்றி மறவாமையுமே நல்லற மாகும்.

*"இந்நாட்டின் நலனுக் காக*
*நல்லறம் இயற்றி வந்தோம்*
*எந்நாளும் பிறர்க்குத் தீமை*

எங்களால் நடந்த தில்லை
சின்னதோர் நன்றி செய்தார்
திறம்மறந் தறியோம்" (குடும்ப விளக்கு - பக். 185)

என்னும் அடிகளை ஓர்க.

## துன்பத்தின் காரணங்களை மாற்றுக

பாவேந்தன் வெளிப்படைக் கவிதைகளையே அதிகமாகப் பாடியவன். ஆயினும், கற்பனை வளத்தில் பாவேந்தனுக்கு நிறைய ஆற்றல் உண்டு.

மாட்டின் மீது ஈக்கள் மொய்க்கின்றன. மாடு தனது வாலைச் சுழற்றி ஈக்களை விரட்டுகிறது. அதனால் ஈக்களால் விளையும் துன்பம் ஒய்ந்துவிடுமா என்ன? ஈக்கள் புழுக்கும் இடத்தைத் தூய்மை செய்தால்தானே துன்பம் தொலையும். இஃது ஓர் எளிய கற்பனை! இந்தக் கற்பனை மூலம் கவிஞன் நமக்கு உணர்த்துவது, "துன்பங்களுக்கு மாற்றுத் தேடாதீர்! துன்பத்தின் காரணங்களையே மாற்ற முனைவீர்! அதுவே வாழும் முறைமை" என்பதாகும்.

## நகைச்சுவை

பாவேந்தனின் 'குடும்ப விளக்கு' காப்பியம், காப்பியச் சுவைகள் நிறைந்து விளங்குவது. காப்பியத்திற்கு இன்றியமையாதது நகைச்சுவை. நாத்தியார் வீட்டுக்கு வண்டிப் பயணம் போய்வந்த மாமன் மாமிக்கு, வண்டிப் பயணம் அமைந்த நலம் பற்றி மருமகள் மாமியை கேட்கிறாள்.

"இவையெல்லாம் வண்டிக் குள்ளே
இருந்தன என்றால், அந்த
அவைக்களம் தனிலே நீவிர்
எங்குத்தான் அமர்ந்திருந்தீர்?
சுவைப்புளி அடைத்து வைத்த
தோண்டியின் உட்புறத்தில்

*கவர்ந்துண்ணும் பூச்சி கட்கும்*
*கால்வைக்க இடமி ராதே!* (குடும்ப விளக்கு - பக். 14)

என்பது மருமகள் கேள்வி:

இனி மாமியாரின் விடையைப் பார்ப்போம். அந்த விடை உயர்ந்த நகைச்சுவையை வழங்குகின்றது. மாமி,

*"இவைகளின் உச்சி மீதில்*
*குன்றுமேல் குரங்கு போல*
*என்றனைக் குந்த வைத்தார்*
*என்தலை நிமிர, வண்டி*
*முடிமேல் பொத்த விட்டார்!*
*உன்மாமன் நடந்து வந்தார்*
*ஊரெல்லாம் சிரித்த" தென்றாள்!*

(குடும்ப விளக்கு - பக். 14)

சாமான் மூட்டைகளின் மேல் மாமியை உட்கார வைத்து வண்டியின் கூரை மாமியின் தலையில் முட்டியதால் வண்டியின் கூரையைத் தலையளவுக்குப் பொத்தலிட்டார், மாமனார்! அந்தப் பொத்தலுக்குள் மாமியார் தலை நிமிர்ந்தது. மாமனாருக்கோ வண்டியில் இடமில்லை. அதனால்அவர் நடந்தே வந்தார். ஊரெல்லாம் சிரித்தது என்று பாவேந்தனின் பாத்திரம் கூறுகிறது! ஏன் இன்றும் நமக்குச் சிரிப்பு வருகிறதே.

## உவமை நயம்

கவிதை நலன்களுள் சிறந்த உவமை நலம், பாவேந்தன் கவிதைகளில் தொட்ட தொட்ட இடமெல்லாம் இடம் பெற்றிருப்பதை யாவரும் அறிவர். ஆயினும் ஒரு செழிப்பான உவமை. தென்னையைப் பற்றிய உவமை. நாம் அன்றாடம் பார்க்கும் தென்னை மரந்தான்! ஆனால் பாவேந்தன் பார்வை வேறு! தென்னை தலைவிரித்து நிற்கிறது! விரித்த உரோமத் தலையையும் தெங்குக் குலைகளையும் தாங்க

முடியாமல் உடல் இளைத்து நிற்கிறது! ஒற்றைக் காலில் நின்று பெருஞ்சுமையைத் தாங்குகிறது. தமிழர்க்குத் தேங்காய், குளிர்நீர், கூரை மறைக்கும் ஓலையெல்லாம் தந்து புகழ் பெற்று நிற்கிறது. இதுபோல நல்லோர்கள் தாம் பசித்திருந் தாலும் பிறர் பசி தீர்க்கவே இலை விரித்துச் சோறிடுவர். இது தமிழ் மரபு! தம்மை மீறியும் அறம் செய்யும் தமிழ் மக்களின் மனநிலையில் அயல் வழக்கு ஊடுருவி "தனக்கு மிஞ்சியது தான தர்மம்" என்ற இழிநிலைக்குத் தள்ளியது. மீண்டும் நல்லோராக வாழ்வோம். தென்னை மரம் போல் பயன்பட வாழ்வோம்.

*தலைவிரித்தாய் உடல்இளைத்தாய்*
*ஒற்றைக்கா லால்நின்றாய்*
*தமிழ்நாட் டார்க்குக்*
*குலைவிரித்துத் தேங்காயும்*
*குளிரிளநீ ரும்கூரைப்*
*பொருளும் தந்தாய்*
*கலைவிரித்த நல்லார்கள்*
*தாம்பசித்தும் பிறர்பசியைத்*
*தவிர்ப்ப தற்கே*
*இலைவிரித்துச் சோறிடுவார்*
*என்பதற்கோர் எடுத்துக்காட்*
*டானாய் தெங்கே!*

இந்தக் கவிதையின் அருமையையும் அழகையும் சிந்தித்துப் பாருங்கள்.

## முடிவுரை

பாரதிதாசனின் குடும்ப விளக்கு ஒரு சிறந்த காப்பியம். இந்தக் காப்பியத்தைத் திறனாய்வு செய்வது இந்தச் சொற்பொழிவின் நோக்கமன்று. குடும்ப விளக்குக் காப்பியத்தைத் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்துவதே நோக்கம்! ஏன்? தமிழகத்தில் தமிழ்க் குடும்பங்கள் பாவேந்தனின் குடும்ப விளக்கின் அமைவில் அமைய

வேண்டும். அதுவே, பாவேந்தனுக்கு - புரட்சிக் கவிஞனுக்குச் செய்யும் நன்றி! கடப்பாடு!

*பாவேந்தன் புகழ் வாழ்க!*
*குடும்ப விளக்கின் ஒளி பரவுக!*

## 5. பாரதிதாசனின் உலகம்

பேரன்புக்கும் பெருமைக்குமுரிய பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ச. முத்துக்குமரன் அவர்களே! தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் மா. இராமலிங்கம் அவர்களே! இனிய அன்பிற்குரிய பேராசிரியப் பெருமக்களே! நண்பர்களே! சகோதரர்களே!

பாவேந்தன் பாரதிதாசன் பெயரால் அமைந்துள்ள பல்கலைக் கழகத்தில் பாவேந்தன் புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் நூற்றாண்டு விழா அறக்கட்டளைச் சொற் பொழிவு நிகழ்த்தும் பேறு கிடைத்தமையை எண்ணி மகிழ்கின்றோம். வாய்ப்புக்கு முதலாக இருந்த அறக்கட்டளை யினருக்கும் துணையாக அமைந்த பல்கலைக் கழகத் தாருக்கும் நன்றி! பாராட்டு!

### முன்னுரை

பாவேந்தன் பாடல்கள் இன்றையத் தமிழகத்தை வென்றெடுக்க வேண்டும் என்பது நமது விழைவு; விருப்பம். என்ன நடக்கப் போகிறது! பாவேந்தன் பாடல்கள் தமிழகத்தை வென்றெடுக்கும் என்ற நம்பிக்கையோடு பேசுகின்றோம். செயல், நாட்டு மக்களினுடையது; இன்றைய இளந் தலைமுறையினருடையது. வரலாற்றின் மேல் விழிவைத்துப் பார்ப்போம்!

பாரதிதாசன், கவிதைகளை - மரபுவழிக் கவிதைகளை இயல்பாகவே எழுதிக் குவிக்கும் தனித்திறன் பெற்ற கவிஞன். 'பாவேந்தன்' என்ற பெயர் நூற்றுக்கு நூறு பாரதிதாசனுக்குப்

கு.VI.௨௪.

பொருந்தும். பாவேந்தன் காலந்தோறும் வளர்ந்து வந்த ஒரு கவிஞன் என்பதைக் காலந்தோறும் அவன் பாடிய கவிதைகளைப் படித்தால் உணரலாம். அவன் பாடல்கள் தனித் தமிழ் நடையில் அமைந்தவை; எளிய நடையுடையவை; பொருட்செறிவு உடையவை! அவை பண்ணொடு பொருந்தும் பாடல்கள்; மனித குலத்தை முன்னோக்கிச் செலுத்தும் பாடல்கள்! எண்ணற்ற மக்களின் இதயங்களைத் தூண்டிச் செயற்பாட்டுக்கு ஊக்குவிக்கும் உந்து சக்தியுடைய பாடல்கள்! நீண்ட உறக்கம் தெளிவிக்க வந்த பாடல்கள். உரிமையும் உணர்ச்சியும் எழுச்சியும் தந்து எழுந்து நிற்கச் செய்த பாடல்கள். அப்பாடல்கள் மூடத்தனத்திற்கு வைத்த முழு நெருப்பு. வாழ்வியல் துறைதோறும் கவிதைகள் இயற்றி மறுமலர்ச்சிக்கு வித்திட்டவன் பாரதிதாசன். பழைமையை எதிர்த்துப் புரட்சிப்பண் பாடியவன், பாவேந்தன். சிறு சிறு எல்லைகளைக் கடந்து, மிக மிக விரிந்த எல்லைகளைத் தொட்டு உயர்ந்து விளங்கிய கவிஞன் பாவேந்தன்!

## காலம் தந்த கவிஞன்

பாவேந்தனின் ஒட்டம் உலகம் தழீஇயது. பொது நலம் கொழித்துப் புதிய உலகம் படைக்கத் துடித்த பாவேந்தனின் இதயப் பொழிவுகள் அவனுடைய படைப்புகள். பாவேந்தன் வாழ்ந்த காலத்தில் ஒரு பகுதியில் நாடு அடிமைப் பட்டிருந்தது. மற்றொரு பகுதியில் நாடு விடுதலை பெற்றிருந்தது. அவன் காலம் இந்திய மக்கள் விடுதலை இழந்து, உணர்விழந்து பாழ்பட்டுக் கிடந்த காலம்! தமிழ் மக்கள் தமிழை மறந்து அயல் மொழிக்கு வரவேற்புக் கூறி, வாழ்த்துக் கூறி வாழ்ந்து கொண்டிருந்த காலம். கல்வியில், ஆட்சியில் ஆங்கிலம்; ஆண்டவன் சந்நிதியில் ஆரியம் இருந்த காலம். தமிழ் மக்கள் ஓரின உணர்வை இழந்து, சாதி, குலங்களில் சிக்கிச் சீரழிந்து கொண்டிருந்த காலத்தில் தமிழகத்திற்குப் புதுமையும் பொதுமையும் வழங்கிடப் புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் தோன்றினான். காலம் தந்த

கவிஞன் பாவேந்தன் பாரதிதாசன். காலத்திற்குப் புதிய வடிவம் தரப் போராடியவன் புரட்சிக் கவிஞன் பாரதிதாசன்!

திராவிடன், தமிழன், ஆரியன் என்ற வேற்றுமைகள் எழுத்தாலும் பேச்சாலும் பூதாகாரமாக வளர்க்கப்பெற்ற நிலையில் தோன்றிய பாவேந்தனை, இந்த இன, மொழி உணர்வுகள் தொடக்கத்தில் கவர்ந்தது வியப்பன்று.

தமிழர் அனைவரும் சூத்திரர், இழிமக்கள் என்று இழித்துரைக்கப்பட்ட நிலையில் யாரைத்தான் இனவுணர்வு தொடாது? இனமானம் இழந்து சூத்திரனாக மதிப்பிழந்து உரிமை இழந்து வாழ யார்தான் ஒருப்படுவர்? இன்றும் உயர்குடி ஆதிக்கம் - ஆணவப் பேய் கொட்டமடிப்பதைப் பார்த்தால் ஏன் திரும்பவும் பெரியார் பிறக்கவில்லை, பாவேந்தன் பிறக்கவில்லை என்று கேட்கத் தோன்றுகிறது. அவர்கள் தொடங்கி வைத்த இழிவு நீக்கும் வரலாறு இன்னும் முடியவில்லையே!

## பாவேந்தனின் இலட்சியம்

பாவேந்தன் பாரதிதாசன் இந்த இழிநிலையை நீக்கச் சூளுரைக்கின்றான். "சமூகமே, யாம்!!" என்று சமூக மனப்பான்மைக்கு உரமூட்டுகின்றான். அறிவுப் புயற்காற்றில், சாதி மதங்களின் பெயரால் வளர்ந்துள்ள மூட நம்பிக்கைகள் அலைக்கழிக்கப்படுதல் வேண்டும், ஒழிக்கப்படுதல் வேண்டும். பின், அறவோருக்குப் புதியதோர் உலகம் செய்ய வேண்டும். இது பாவேந்தனின் இலட்சியம் - விருப்பம்.

> "சாதிமத பேதங்கள் மூட வழக்கங்கள்
> தாங்கிநடை பெற்றுவரும் சண்டையுல கிதனை
> ஊதையினில் துரும்புபோல் அலக்கழிப்போம்; பின்னர்
> ஒழித்திடுவோம்; புதியதோர் உலகம் செய்வோம்."

(பாரதிதாசன் கவிதைகள் - முதல் தொகுதி; பக். 146)

பாவேந்தன் காண விரும்பிய சமூகத்தை அமைக்கும் முயற்சியில் முன்னேறுவோம்!

## உலகப் பார்வை

திருக்கோயிலில் இருக்கும் திருமேனியைத் தொழ, அத்திருக்கோயிலை எடுத்த தமிழன் நுழையக் கூடாது. ஆனால் "பேர் கொண்ட பார்ப்பனர்" மட்டும் நுழையலாம். இது என்ன சமூக நியதி! நீதி! இத்தகைய இழிவுகளைக் கண்டு குமுறிய பாவேந்தன் தொடக்கத்தில் இனவழிக் கவிதைகள் பாடியதுண்டு. ஆனால், பாவேந்தன் பாரதிதாசன் வளர்ந்து - உலகந்தழீஇய கவிஞனாக வளர்ந்து - நின்று பாடிய கவிதைகள் அற்புதமானவை. மானுடநேயமும் உலகந்தழீஇய ஒருமைப்பாட்டுணர்வும் பாவேந்தனின் கவிதைத் தொகுதி களில் நிறைந்துள்ளன. ஆதலால், பாவேந்தன் - புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் உலகக் கவிஞனாக உயர்ந்து விளங்கும் மாட்சிமையை எண்ணி மகிழ்வோம்!

## மக்களா? மரங்களா?

மனிதகுல வரலாற்றுப் போக்கில் கடவுள், அரசு, உடைமை ஆகியன மதிப்பீட்டுப் பொருள்களாக வளர்ந்து இடம்பெற்று வந்துள்ளன. ஒரோவழி, அருமையாகச் சான்றாண்மையும் மதிக்கப் பெற்றுள்ளது. இத்தகைய உயர் மதிப்பீடுகள் வரலாற்றில் நிலைபெற்று நிற்கவில்லை. கடைசியாக அரசு அதிகாரங்கூட நிலைத்த மதிப்பீட்டுக் குரியதாக இல்லை என்பதை முடியாட்சிகள் சரிந்து வீழ்ந்த வரலாறுகள் நினைவூட்டுகின்றன. எஞ்சியது பண மதிப்பீட்டுச் சமுதாயமேயாகும். இன்று நம்முடைய நாட்டை வருத்தும் தீமை, பணமதிப்பீட்டுச் சமுதாயமேயாம். இன்று மனிதன் மதிக்கப்படுவதில்லை! இந்திய சமூகத்தில் நீண்ட காலமாகவே ஒரு பகுதியினர், மானுடமாக மதிக்கப் பெறாமல், ஒதுக்கப் பெற்ற அரிசனங்கள் – உயிரொடுங்கி,

உணர்விழந்து நடைப்பிணங்களாக வாழ்ந்து வந்தனர். இந்தியாவிற்குள் நுழைந்தவர்கள் இந்த மண்ணின் மைந்தர்களை வென்றதன் விளைவாக இந்த மண்ணின் மைந்தர்கள் தாழ்த்தப்பட்டவர்களாயினர்; தீண்டத் தகாதவர் களாயினர். இந்தத் தீண்டாமையைச் சாத்திரம், சட்டம் இரண்டாலும் உறுதிப்படுத்தினர். இந்தக் கொடுமையை, பாவேந்தன் பாரதிதாசன் மறுக்கிறான். மக்களை மரங்களாக மதித்து நடத்தும் இழிநிலையைச் சாடுகிறான். மரங்களாகக் கூட எங்கே மதிக்கிறார்கள்? மக்களை மக்களாக மதிக்க வேண்டும். மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும். இதுவே பாவேந்தனின் உணர்வு.

"மக்களை மரங்களாக
மதித்தநாள் மலைஏ றிற்று!
மக்கட்குத் தொண்டு செய்தே
தனிமகன் வாழ வேண்டும்" (குறிஞ்சித் திட்டு—பக்.85)

இங்கே "மக்கள்" என்ற பொதுமைச் சுட்டினை ஓர்க.

மக்களை மக்களாக மதிக்காது அவர்களின் உழைப்பைச் சுரண்டிப் பொருள் சுருட்டும் புன்மையினரைக் "குட்டைப் புத்திக்காரர்" என்று கவிஞன் ஏசுகிறான்.

"குட்டைப் புத்திக் காரர் – மக்கள்
கூட்டத்தையும் நினையார்
கிட்டியது போதும்!" – எனக்
கேளிரையும் மறப்பார்!" (ஒருதாயின் உள்ளம்—பக்.118)

என்பதறிக.

## அனைவரும் உறவினரே!

பாவேந்தன், புதிய 'ஆத்திசூடி' இயற்றியுள்ளான். இந்த ஆத்திசூடியை, பாவேந்தன் அறிமுகப்படுத்தும் வரிகள் கவனமாகப் படிக்கத் தக்கவை.

*"உலகில் பொதுவாட்சி ஒன்றே ஒன்று*
*நிலவுதல் கருதி நிகழ்த்திய திந்நூல்"*

*என்பன அந்த வரிகள். இந்த ஆத்திசூடியில் ஓர் உயர்கொள்கையைக் காட்டுகின்றான். மாந்தர் - ஆம் மனிதர் எவராக இருந்தால் என்ன? எந்த மொழி பேசினால் என்ன? எந்தக் கடவுளைக் கும்பிட்டால் என்ன? கும்பிடாமல் போனால்தான் என்ன? ஆணாக இருந்தால் என்ன? பெண்ணாக இருந்தால் என்ன? அதைப் பற்றியெல்லாம் எண்ணாதே! ஆராய்ச்சி செய்யாதே! "அனைவரும் உறவினர்" என்கின்றான். ஆம்! அனைவரையும் உறவினராக ஏற்பதற்குரிய இதயவிரிவு வேண்டும். அணுயுகத்தின் அழிவிலிருந்து தப்பித்துக் கொள்ளவாவது அனைவரையும் உறவினராக எண்ணக்கூடாதா? ஏற்கக்கூடாதா?*

## பொது நாட்டம்!

*நாட்டை ஆள்பவர்களுக்குப் பொது நாட்டம் வேண்டும் என்பது பாவேந்தனின் கொள்கை. நமது நாட்டில் நிலவிய ஆட்சிகள்கூட சாதி, மதங்களைச் சார்ந்து நின்று ஒருகுலத்துக்கு ஒரு நீதி கற்பித்து ஆட்சி செய்தன. இன்று மட்டும் என்ன வாழ்கிறது? சமயச்சார்பற்ற அரசு என்பது கொள்கை. ஆனால், இந்தக் கொள்கையை நடைமுறைப் படுத்துவதில் அரசு வெற்றிபெற வில்லை. பேதம் - பிரிவுகள் எண்ணும் மக்கள் போக்கும் மாறவில்லை. அப்படி மாறியிருந்தால் ஏன் ஒரே அரசியல் சட்டத்தால் நாம் ஆளப்படவில்லை? இந்துச் சட்டம் ஏன்? இசுலாம் சட்டம் ஏன்? கிறித்தவச் சட்டம் ஏன்? "இராம ஜன்மபூமி - பாபர் மசூதி" விவாதம் ஏன்? விவாதத்தை முடித்து வைக்க அரசு தயங்குவதேன்? நாட்டில் சமயச் சார்பற்ற சமுதாயத்தைப் பற்றிய கவலையைவிட, வாக்குப் பெட்டி பெரிதாகத் தெரிகிறது போலும்! இன்று ஆள்வோர்கள் குறுகிய எண்ணங்களுக்கே ஆட்பட்டுள்ளார்கள். ஆட்சி நடத்தவே அரசியற் கட்சி! அதனால், இன்றோ அரசியற் கட்சியை,*

ஆட்சியே நடத்துகிறது! இவையெல்லாம் தவிர்ந்த நல்லாட்சி காண,

> "கதிர்நாட்டை நரிக்கண்ணன் ஆளும் ஆட்சி
> கடுகளவும் தீங்கின்றி இருப்ப தற்கும்
> பொதுநாட்டம் உடையதோர் அறிஞன் தன்னைப்
> போயிங்கு நீர்அனுப்ப வேண்டும்"

(பாண்டியன் பரிசு–பக்.54)

என்ற வரிகள் துணை செய்யும். ஆம்! நாட்டு மக்களை நடுநிலை, சமநிலைகளில் பார்த்து நடத்திடும் நல்லாட்சி அமைய வேண்டும் என்பது பாரதிதாசன் குறிக்கோள்!

நல்லாட்சியின் இலக்கணத்தைப் பாவேந்தன் விவரித்தும் கவிதை செய்துள்ளான். இன்று "மக்கள் நலம் பேணும் அரசு" (Welfare State) என்பதற்குள்ள இலக்கணம் அனைத்தும் பாரதிதாசனின் நல்லாட்சித் திட்டத்தில் அடங்கியுள்ள அருமைப்பாட்டை எண்ணுக. நாடு விடுதலை பெற்று 43 ஆண்டுகள் ஆகியும் இன்னமும் பாவேந்தனின் எண்ணங்கள் ஈடேறவில்லை. இன்று நமது நாட்டில் "எல்லார்க்கும் தேசம்", என்பது அரசியல் சட்டத்தில்தான்! ஆனால் தேசம், விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் உள்ள முதலாளிகளிடம் கையடை செய்யப்பெற்றுள்ளது. எல்லார்க்கும் கல்வி கிடைக்கவில்லை. நமது நாட்டில் எழுத்தறிவு பெற்றோர் 33% தான். ஆனால் ஊர்தோறும் பள்ளிகள் அமைத்ததில் குறையில்லை. எங்கு குறை, அரசுக்குத் தட்டிக் கேட்கும் துணிவில்லை; ஆரம்பக் கல்வியை நெறிமுறைப் படுத்த விருப்பம் இல்லை! நமது நாட்டில் ஏழைக்கு, "சுகாதாரம்" என்பது அகராதி அளவில் உள்ள ஒரு சொல்லேயாம். பாவேந்தன் கவிதையைப் படியுங்கள்!

> **"எல்லார்க்கும் தேசம் எல்லார்க்கும் உடைமைஎலாம்**
> **எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே!**

*எல்லார்க்கும் கல்வி சுகாதாரம் வாய்ந்திடுக!*
*எல்லார்க்கும் நல்ல இதயம் பொருந்திடுக!*
*எல்லார்க்கும் நல்ல நுதல்மாதர் எல்லார்க்கும்*
*விடுதலையாம்".*

(பாரதிதாசன் கவிதைகள்–முதல் தொகுதி; பக்.50)

## பழம்பஞ்சாங்கம் கிழியட்டும்!

பழைய பஞ்சாங்கம்! ஆம்! மானிடத்தில் பல்வேறு சாதி, குலப் பிரிவுகளை ஏற்படுத்தி, வெவ்வேறு நியாயங்கூறிய பழைய பஞ்சாங்கம்! மாந்தரில் ஒரு பிரிவினருக்குக் கல்வியை மறுத்த பழைய பஞ்சாங்கம்! ஏழ்மை – வறுமை ஆகியவற்றிற்குத் தலைவிதியைக் காரணம் காட்டிய பழைய பஞ்சாங்கம். இந்தப் பழைய பஞ்சாங்கம் கிழிக்கப் பெறுதல் வேண்டும். எல்லார்க்கும் கல்வி வழங்கப் பெறுதல் வேண்டும். தான் கற்று, கல்லாத மற்றவர்க்குக் கல்வி நல்க முன்வராதார் எவரானாலும் அவரைக் கழுவேற்றுக என்பது பாவேந்தனின் ஆணை! ஆம்! எல்லார்க்கும் கல்வி நல்குவது சமூகத்தின் பொறுப்பு! கடமை! இதுவே, பாவேந்தனின் குறிக்கோள்! எல்லாரும் எல்லாவற்றையும் அடையவேண்டும். இது பாவேந்தனின் தணியாத ஆசை!

*"எல்லார்க்கும் எல்லாம்என் றிருப்ப தான*
*இடம்நோக்கி நடக்கின்ற திந்த வையம்!*
*கல்லாரைக் காணுங்கால் கல்வி நல்காக்*
*கசடர்க்குத் தூக்குமரம் அங்கே உண்டாம்!*
*இல்லாரும் அங்கில்லை! பிறன் நலத்தை*
*எனதென்று தனியொருவன் சொல்லான் அங்கே!*
*நல்லாரே எல்லாரும் அவ்வை யத்தில்!*
*நமக்கென்ன கிழியட்டும் பழம்பஞ் சாங்கம்!*

(பாண்டியன் பரிசு–பக்.99)

## சுவர் சுயம்புவா?

பாவேந்தன் ஒரு முற்போக்குச் சிந்தனையாளன். பொதுவுடைமைச் சிந்தனையை விரிவாக, விளக்கமாகத் தமிழில் தந்த பெருமை பாவேந்தனுக்கே யுண்டு. "உலகத்தை நடத்துக!" என்கின்றான். இன்று நாமா உலகத்தை நடத்துகின்றோம்? உலகத்தை நாம் நடத்த வேண்டும். "வீட்டுக்கும் வீட்டுக்கும் இடையே வைத்த சுவரினை இடித்து அப்புறப்படுத்துக!" என்கின்றான் பாவேந்தன். இனிய அன்புடையீர், "வைத்த சுவர்" என்ற சொற்றொடரை நினைமின்! சுவர் சுயம்பு அல்ல! "பாட்டனுக்குப் பாட்டன் காலத்திலிருந்து இருக்கிறது" என்று சிலர் கூறினாலும் கூறுவர் என்பதால் "வைத்த சுவர்" என்கின்றான். இணைந்து வாழத் தெரியாதவர்கள் வைத்த சுவர்! மனித குலத்தை உடைத்த உடைமை வர்க்கத்தினர் வைத்த சுவர்! இந்தச் சுவரினை இடி! வீதிகளிடையில் திரை! ஆம்! உயர்சாதி, கீழ்சாதி இவற்றை நிலையாக்கும் திரைகள்! இன்று இறைவன் சந்நிதியில்கூட திரைகள்! ஏன் திரைகள்! இரகசியங்கள் குற்றங்களின் குட்டையிலேயே பிறப்பன. திரைகள் நீக்கப் பட்ட திறந்த வாழ்வு இன்று மானுடத்திற்குத் தேவை. நாட்டுக்கும் நாட்டுக்கும் இடையே வேறுபாடுகள், எல்லைகள், எல்லைச் சண்டைகள் ஏன்? நாட்டின் எல்லைகளை அகற்றுக! இந்த எல்லைகளை அகற்றிக்கொண்டு பொதுமையில் ஏறுக! ஏறுக! இது கவிஞனின் ஆணை! நாம் எப்போது ஏறுவோம்? எப்போதாவது ஏறும் வாய்ப்புக் கிடைக்குமா? வரலாறுதான் கூறவேண்டும். வரலாற்றை உருவாக்கக்கூடிய இளைஞர்கள்தாம் கூறவேண்டும். நாட்டொடு நாட்டை இணைக்க வேண்டும். பாகிஸ்தானில் வாழும் இளைஞர்களே! இந்தியாவில் வாழும் இளைஞர்களே! எண்ணிப் பாருங்கள்! பிரிவினையால் விளைந்த துன்பத்தினை - விளைந்துவரும் துன்பத்தினை! ஜெர்மனியின் சுவர் இடிந்தது போல நமது எல்லைகள்

இடியட்டும்! மீண்டும் வலிமை பொருந்திய வளமான இந்தியாவை உருவாக்க உறுதி கொள்ளுங்கள்! முன்னேற்றத் திசையில் முன்னேறுங்கள்! வானை இடிக்கும் இமயத்தின் உச்சியில் ஏறி நின்று பாருங்கள்! உலக மானுடத்தைப் பார்த்துப் பரவசமடையுங்கள்! உலக மானுடம் உன்னுடன் பிறந்த பட்டாளம் என்று உறவு முறையை வளர்த்துக் கொள்ளுங்கள்!

*"........நடத்து லோகத்தை!*
*உன் வீடு – உனது பக்கத்து வீட்டின்*
*இடையில் வைத்த சுவரை இடித்து*
*வீதிக ளிடையில் திரையை விலக்கி*
*நாட்டொடு நாட்டை இணைத்து மேலே*
*ஏறு! வானை இடிக்கும் மலை மேல்*
*ஏறு! விடாமல் ஏறு! மேன் மேல்*
*ஏறி நின்று பாரடா எங்கும்!*
*எங்கும் பாரடா இப்புவி மக்களை!*
*பாரடா உன்னுடன் பிறந்தபட் டாளம்!*
*'என்குலம்' என்றுனைத் தன்னிடம் ஒட்டிய*
*மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்!"*

(பாரதிதாசன் கவிதைகள்–முதல் தொகுதி; பக்.149–150)

இவ்வாறு பரந்து விரிந்த வாழ்க்கையையும், இதற்கு மாறான சின்னப் புத்திகொண்ட வாழ்க்கையையும் உருவகப்படுத்திப் பாருங்கள்! பாவேந்தன் விளக்கியுள்ள அருமைப்பாடு ஆயிரம் தடவை படித்தாலும் சுவை தரும்.

## கடுகு? துவரை? தொன்னை?

உணவிற்கு கடுகு சேர்ப்பது, மணம் சேர்ப்பதற்காக! ஆனால், உணவில் கடுகின் அளவு கூடினால் சுவை கெடும்! உணவின் தன்மை கெடும்! உணவு நஞ்சாகும்! அதுபோல, மனிதர் களிப்புடன் வாழ மனைவி, மக்கள், பொருள்

தேவைதான்! இவர்கள் மாட்டுள்ள பற்று கடுகுபோல அளவாக அமையவேண்டும். வீடு நாட்டுக்குப் போயாக வேண்டும். ஆனால், நாடு வீட்டுக்கு வரக்கூடாது. இன்று, நமது நாட்டில் நாடு வீட்டுக்குள் வருவதைப் பார்க்கின்றோம். இது நெறியுமன்று; முறையுமன்று: கடுகு போன்ற உள்ளம் வேண்டாம்! அறவே வேண்டாம்!

அடுத்து, துவரம் பருப்பு! இது கடுகு அளவுக்குத் தீமையில்லை! ஒரோவழி நன்மையும் தரும்! ஆனால், துவரம் பருப்பும் அளவு மிகுதல் கூடாது! "துவரை உள்ளம்" – ஊர்ப்பற்றுக்கு உவமையாகக் கூறப்படுகிறது. இரண்டு ஊர்களுக்கிடையில் ஏன் சண்டை? பிரிவினையில் குளிர் காயும் ஊர்ப் பெரிய மனிதர், ஊர்ச் சண்டையை மூட்டி விடுவார். ஊர்ப்பற்று இருக்கலாம்; இருக்க வேண்டும். ஆனால் அது அடுத்த ஊருக்குப் பகையாக இருக்கக்கூடாது.

அடுத்தது, தொன்னை உள்ளம்! ஆம்! சின்னஞ் சிறிய தொன்னை. தொன்னை உள்ளம் போன்றது நாட்டுப்பற்று. நாட்டுப் பற்றின் காரணமாக உலகில் விளைந்த சண்டைகள் எண்ணிச் சொல்ல இயலாதவை. அதிகார வர்க்கம், ஆதி பத்தியப் போட்டிகள் சண்டைகளை வரவேற்கும். அப்போதுதான் ஆட்சியின் சிறுமைபற்றி மக்கள் எண்ண மாட்டார்கள் என்பது ஆள்வோரின் எண்ணம். நாட்டுப் பற்று தேவை! இன்றியமையாததுங் கூட! ஆனால் நாட்டுப் பற்றும் உலகப் பார்வைக்கு – உலக ஒற்றுமைக்குத் தடையாக இருக்கக்கூடாது! தாய் நாட்டின் மேல் உள்ள பற்றினால் மற்ற நாடுகளுக்குத் தீங்கு செய்யக்கூடாது. பாவேந்தன் ஒருலகப் பார்வையில் பாடிய பாடல் இதோ:

*"தன்பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு*
*சம்பாத்யம் இவைஉண்டு தானுண் டென்போன்*
*சின்னதொரு கடுகுபோல் உள்ளம் கொண்டோன்*
*தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்!*

*கன்னலடா என்சிற்றூர் என்போ னுள்ளம்*
*கடுகுக்கு நேர்மூத்த துவரை யுள்ளம்!*
*தொன்னையுள்ளம் ஒன்றுண்டு தனது நாட்டுச்*
*சுதந்திரத்தால் பிறநாட்டைத் துன்பு றுத்தல்!*

(பாரதிதாசன் கவிதைகள்—முதல் தொகுதி: பக்.131)

இந்தப் பாடல் கூறும் மூன்று மனநிலைகளையும் வென்றெடுக்கும் நாளே புது உலகம் தோன்றும் நாள்!

## பொதுவில் நடத்து!

பாவேந்தன் பாரதிதாசன் சண்டையில்லாத உலகத்தை விரும்புகின்றான். தன்னலம் தீர்ந்தால்தால் சண்டை ஒடுங்கும். தன்னலம் தீர்தல் எப்போது? எப்படி? நுகர்வுவழி தன்னலம் தீருமா! நுகர்தலே தன்னலம் பெருதற்குரிய வழி! நுகர்தலை மறுத்தல் எப்போது நிகழும்? மற்றவர்களுக்கு உதவவேண்டும் என்ற வேணவாத் தோன்றும் போதே நுகர்வு மறுத்தல் நிகழும். அப்படியானால் "ஓர்குலம்" என்ற உணர்வு தேவை. இந்தக் கொள்கையை - கோட்பாட்டைப் பாவேந்தன் காரணகாரியங்களுடன் விளக்குவதைக் காணுங்கள்!

பாவேந்தன் பாரதிதாசன் ஆற்றல் மிக்க கவிஞன். ஆவேசம் மிக்க கவிஞன், "புவியை நடத்து; பொதுவில் நடத்து" என்று ஆணையிடுகின்றான். ஆம்! புவிஈர்ப்பில் சிக்கித் தவிக்காமல், புவிஈர்ப்பு இழுக்கும் திசையில் செல்லாமல் - கீழே விழாமல் உயிர்ப்பாற்றலுடன் புவிஈர்ப்பை அடக்கி யாண்டு புவியை நடத்து! ஆம்! புவியை நடத்து! எல்லாருக்குமாகப் புவியைப் பொதுவில் நடத்து! வலியவர்களுக்காகவும் புவியை நடத்து! வலிமையில்லாதவர்களுக்காகவும் புவியை நடத்து!

ஆம்! நிலம் பொது! வான் பொது! வளி பொது! வான்மழை பொது! அப்புறம் ஏன் வரப்புகள்? சுவர்கள்?

எல்லைகள்? பொய்ச்சாத்திரப் பிரிவுகள்? மதப்பிரிவுகள்? பேதம் ஏன்? பேதா பேதம் ஏன்? இவற்றால் பிரிவு ஏன்? ஒருமையுளத்தராக, ஒரு குலத்தவராக வையகத்தில் வாழ்ந்திடப் புவியை நடத்து! பொதுவில் நடத்து! இது பாவேந்தனின் ஆணை!

தன்னலம் உள்ளத்தைச் சுருக்கும், பொதுநலம் விரிவைத் தரும். ஆன்மாவை அடக்கி வளரும், தன்னலத்தையே வளர்க்கும். ஆன்மா பொதுநலமே நாடும். ஆன்மாவின் இயல்பான பொதுநல உணர்வு, மலர் மணம் நிகர்த்தது; கனியின் சுவையனையது. அறிவை விரிவு செய்ய வேண்டும். ஆம்! இன்று படிக்கக் கிடைக்கும் நூல்கள் பல, மத நூல்கள் உள்படப் பிரிவினையைக் கற்பிக்கின்றன; வெறுப்பையே வளர்க்கின்றன. வரலாற்று நூல்களைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்! வெறுப்புக்காட்டக் கற்றுக் கொள்ளக்கூடாது! அறிவை விரிவு செய்யும் நூல்களைத் தேடிப் படிக்க வேண்டும். அதாவது வாழ்வியற் பாங்கில் அறிவை விரிவு செய்து கொள்க! அறிவை அகண்டமாக்குக! விசாலப் பார்வையால் பார், இந்த மக்கள் உலகத்தை! மக்களை அணைந்து கொள்க! ஆறுகள் எல்லாம் கடலில் சங்கமம் ஆகின்றன. அதுபோல் மனிதனே, நீ மனித சமுத்திரத்தில் சங்கமமாகு!

கவிதையின் மணி மகுடமாக ஊனை, உயிரை, உணர்வைத் தொடும்வகையில் பாவேந்தனின் ஆணை பிறக்கிறது! “உலகம் உண்ண உண்; உடுத்த உடுப்பாய்!” என்பதே அந்த ஆணை! நாமறிந்த வரையில் உலகில் எந்த ஒரு கவிஞனும் ஏன்? அருள்நெறியாளரும்கூட “உலகம் உண்ண உண்” என்றும் “உலகம் உடுத்த உடுப்பாய்!” என்றும் கூறினாரிலர். உலகத்தில் எல்லாரும் உண்டு, உடுத்து மகிழும் பொற்காலம் தோன்றுமா? பொதுவுடைமை, உலகத்தை வென்றெடுக்குமா? காலந்தான் விடை சொல்ல வேண்டும். இதோ கவிதையைப் படித்து அனுபவியுங்கள்.

*"அறிவை விரிவுசெய்! அகண்ட மாக்கு!*
*விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!*
*அணைந்து கொள்! உனைச் சங்கம மாக்கு!*
*மானிட சமுத்திரம் நானென்று கூவு!*
*பிரிவிலை! எங்கும் பேத மில்லை!*
*உலகம் உண்ணஉண்! உடுத்த உடுப்பாய்!*
*புகல்வேன், உடைமை மக்களுக் குப்பொது!*
*புவியை நடத்து பொதுவில் நடத்து!*

(பாரதிதாசன் கவிதைகள்–முதல் தொகுதி; பக்.150)

இந்தக் கவிதை வரிகள் சாகா வரம் பெற்றவை.

## யாரால் திருட்டு?

தனியுடைமைச் சமுதாயம் தோன்றிய பிறகு மானுடம் அடைந்த தீமைகள் பலப்பல. முதலில் மனிதன், மனிதன் என்ற மதிப்பை இழந்தான். எங்கும் சொத்து அளவின் அடிப்படையில் மனித மதிப்பீடு தொடங்கிவிட்டது. சொத்துக்களின் அடிப்படையே வாழ்க்கை என்ற நியதியால் மனிதன் சூது வாதுகளால் – மோசடிகள் வாயிலாகக்கூட, சொத்துச் சேர்க்கலானான். இதனால் மனித நேயம் கெட்டது; ஒழுக்கம் தவறிப் பாழ்பட்டுப் போயிற்று. களவு, காவல், இரத்தல், ஈதல் ஆகியவை தோன்றலாயின. களவு என்ற தீமையைச் சொத்துடையோன்தான் உருவாக்கு கின்றான் என்பது பாவேந்தனின் கொள்கை.

*"பொருளாளி திருடர்களை விளைவிக் கின்றான்*
*பொதுவுடைமை யோன்திருட்டைக் களைவிக் கின்றான்!"*

(பாண்டியன் பரிசு–பக்.31)

என்பது பாவேந்தனின் பாடல், சொத்துடையோர் களிடையில் ஏற்பட்ட போட்டிகள், பூசல்கள் இவற்றின் காரணமாக அரசுகள் தோன்றின. இன்றுவரை அரசுகள் சொத்துடைமையுடைய மேட்டுக் குடியினருக்கும்,

அவர்களுடைய சொத்துக்களுக்கும்தான் பாதுகாப்புத் தந்து வந்துள்ளன. ஏழைகளுக்குக் கிடைத்ததெல்லாம் அரைகுறை வயிற்றுச் சோறுதான்! அதுவும்கூட மனித நேயத்தினாலன்று; உரிமையினாலன்று; உழைப்புத் தேவைக்காகவே! அதுவும் நிரந்தரமன்று. இந்த உலகத்தைப் பழைய விதி - தலைவிதி இயக்குவதாக, பழைய புராணங்கள் கதை விட்டன.

## உயிரென்று காப்போம்

இவற்றை எண்ணியே பாரதி, "இனி ஒரு விதி செய்வோம்!" என்றான். பாவேந்தன், பொதுவுடைமை முரசு கொட்டினான்! "புதியதோர் உலகம் செய்வோம்" என்று உடன்பாட்டுணர்வோடு, படைக்கும் உணர்வோடு பாடினான். மனித வரலாறு எழுதத் தொடங்கிய நாளிலிருந்து இதுவரை நடந்துள்ள போர்களினால் ஏற்பட்டுள்ள மக்கள் இழப்பு, பொருள் இழப்பு பற்றி மாமேதை லெனின் கூறியுள்ளார். "இரண்டாவது உலகப் பெரும் போரில் இழந்த பொருளைக் கொண்டு உலகில் ஐயாயிரம் பேர் வாழும் ஒவ்வொரு சிற்றூருக்கும் தேவையான கல்வி, மருத்துவ வசதி செய்துதர முடியும்" என்று கூறியுள்ளார் லெனின்.

பொதுவுடைமைச் சித்தாந்தம் வன்முறை தழுவியது என்ற ஒரு தவறான கருத்து உலக முழுதும் பரப்பப்படுகிறது. இது பொய்! "பொதுவுடைமைச் சமுதாயம் இயல்பாக அறிவார்ந்த நிலையில் மலர வேண்டும். தேவைப்படின் அறுவை மகப்பேறு மருத்துவம்போல வன்முறையும் அவசியப்படலாம்" என்றுதான் கார்ல்மார்க்ஸ் கூறினார். தனியுடைமைச் சமுதாயந்தான் போருக்கு வித்து. பொதுவுடைமைச் சமுதாயம்தான் போரைத் தவிர்க்கும். இது, பாவேந்தனின் தெளிவான முடிவு.

> "பொதுவுடைமைக் கொள்கை
> திசையெட்டும் சேர்ப்போம்!"

என்பது பாரதிதாசன் வாக்கு! அந்தப் பொதுவுடைமைச் சமுதாயத்தைப் புனிதமோடு உயிரைப்போல காப்போம் என்று சூளுரைக்கின்றான். ஆம்! பொதுவுடைமைச் சமுதாயம் அடைந்துவிட்டால் போதுமா? அந்தப் பொது வுடைமைச் சமுதாயம், மீண்டும் கெட்டுவிடாமல் புனிதமாகக் காக்கப்பட வேண்டுமாம்.

இன்று கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் பொது வுடைமை நாடுகளில் நடப்பது என்ன? சோவியத்து நாட்டில் 'ஸ்டாலினிசம்" தோன்றவில்லையா? இன்று சோவியத்து நாட்டில் புனிதம் 'கெட்டுப்போன பொதுவுடைமைக் கொள்கைக்கு கோர்பசேவ், "பெரிஸ்த்ரோய்க்கா" என்ற பெயரில் புத்துயிர்ப்பு இயக்கம் நடத்துகிறார் அல்லவா? ஆனால் அன்றே பாவேந்தன்,

"புதியதோர் உலகம் செய்வோம்! – கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்!
பொதுவுடை மைக்கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோ டதையெங்கள் உயிரென்று காப்போம்!"

(பாரதிதாசன் கவிதைகள்–முதல் தொகுதி; பக்.158)

என்றான். இது காலத்தால் உணர்த்திய அறம்!

## பொதுவுடைமை வாழ்க்கை

பாவேந்தன் இங்ஙனம் பொதுவுடைமையை வரவேற்றுப் பாடியதுடன் நிற்கவில்லை. பொதுவுடைமைச் சமுதாயத்தை அமைக்கும் நெறிமுறைகளைப் பற்றியும் எடுத்துரைக்கின்றான். "உடைமைகளைப் பொதுவாக்கு" என்பது பாரதிதாசன் ஆத்தி சூடி. உடைமை என்பது சொத்து. சொத்துக்கள் சிறிது சிறிதாகச் சேர்ந்து மூலதனம் ஆகின்றன. மூலதனமாகக் குவிந்த சொத்துடைமையைப் புனல் நிறைந்த தொட்டியென்று பாவேந்தன் விளக்குகின்றான். கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீர் நிறைந்த தொட்டி, 'புனல் நிறைந்த தொட்டி'. அதுபோலத்

தான் நூற்றுக்கணக்கான உழைப்பாளிகளின் உழைப்பு, கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்ந்து சொத்து வடிவம் பெற்று மூலதனமாக வடிவம் பெற்றுக் குவிகிறது என்பதைப் 'புனல் நிறைந்த தொட்டி' என்று எளிமையாக, அறிவில், உணர்வில் படும்படி கூறுகின்றான். உடைமைச் சமுதாயம், புனல் நிறைந்த தொட்டியான அதே நேரத்தில், "பொத்தல் இலைக் கலமானார் ஏழைமக்கள்" என்று கூறி மூலதனத்தால் தோன்றும் ஏழ்மையை உரைக்கும் அருமை உணரற்பாலது. "உடைமையைப் பொதுவாக்கு" என்றால் மக்களைப் பிச்சைக்காரர்களாக்குவது என்று சிலர் திரித்துக் கூறு கின்றனர். இங்கு உடைமை என்று கூறுவது செல்வ உற்பத்திக் களங்களையும் கருவிகளையுமே குறிக்கும். உற்பத்தி பொதுவில் நடக்கவேண்டும். எல்லாரும் அவரவர் சக்திக் கேற்ற உழைப்பினை மேற்கொள்ளவேண்டும். உளமார உழைப்பை மேற்கொள்ள வேண்டும். உழைப்பது உயர்வு என்ற எண்ணத்தில், உழைப்பது என்பது உயிர்க் குணமாக மாறவேண்டும். பண்டங்கள் - நுகர் பொருள்கள் செய்து குவிக்கப் பெறுதல் வேண்டும். எல்லாரும் அவரவர் தேவைக்கேற்ப எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். இதுவே பொதுவுடைமைச் சமுதயாம்.

இத்தகைய பொதுவுடைமைச் சமுதாயம் இன்னமும் உலகில் எங்கணும் தோன்றவில்லை. பொதுவுடைமைச் சமுதாயப் பயணத்தின் இடையில் உள்ள சோஷலிச சமுதாய அமைப்பிலேயே சில நாடுகள் தங்கியுள்ளன. சோவியத்து, சீனா ஆகிய நாடுகள்கூட சோஷலிச நிலையிலேயே உள்ளன. வரலாற்றுலகம் ஈன்று தந்த நச்சுப் பழக்கங்கள் சோஷலிச சமுதாயத்தில் ஊடுருவி உள்ளீடழித்தன. அதாவது, உழைப்பை உயிர்க்குணமாக்கிக் கொள்ளாமை; உழைப்பைப் பயனிலாக் கொள்கைக்கு ஈடாக்கியமை; உழைப்பைச் சமுதாய உழைப்பாகக் கருதாமை; மாற்றாமை. உழைப்பு வேள்வியைவிட நிர்வாகம் பெரிதாவது போன்ற தீய

கு. VI. உ5.

பழக்கங்கள் தலைகாட்டத் தொடங்கின. இந்நிலையை மாற்றி – சோஷலிச சமுதாயத்தைக் காப்பாற்றி – புத்துயிர்ப்புச் செய்துவரும் "பெரிஸ்த்ரோய்க்கா" இயக்கம் வளர்க! வெற்றி பெறுக!

சொத்துடைமை வர்க்கம் தோன்றிய பிறகுதான் சொத்துடைமைக்கும் ஆதிபத்தியத்திற்கும் உரிமை கொண்டாடும் நிறுவன ரீதியான மத நிறுவனங்கள் தோன்றி ஆதிபத்தியச் சண்டைகளை, மதச் சண்டைகளை நடத்தி மனித உலகத்திற்கு தீங்கிழைத்து வந்தன. அதனால்தான் நிறுவன அமைப்பிலான சொத்துடைமையும் ஆதிபத்திய குணாம்சங்களும் உடைய மத நிறுவனங்களே பொதுவுடைமைக் கொள்கையை எதிர்க்கின்றன. இதனை, பாவேந்தனின் ஒரு மத நிறுவனத் தலைவரின் 'கடவுள் பக்தி' விளக்குகிறது. "சொத்துக்கள் எல்லாம் பொதுவுடைமை என்று ஆணை பிறந்துவிட்டது என்ற செய்தி கிடைத்தவுடன் கடவுளையே மறந்துவிட்டார் மத நிறுவனத்தலைவர்" என்று விளக்கும் பாவேந்தனின் கவிதை நகைச்சுவை மிக்கது; போர்க்குணம் ஊட்டவல்லது.

பொதுவுடைமை உலகத்திற்கு ஆணி – அச்சு உழைப்பேயாம். உழைப்பு, உலகை இயக்கும் ஓர் அற்புத ஆற்றல், உழைப்பு. சாதாரண உழைப்பா? இல்லை, இல்லை! மெய் வருந்தி வியர்வை சொட்டச் சொட்ட உழைக்கும் உழைப்பு! உழைப்பாளர் சிந்தும் வியர்வைத் துளிகளில் உலகைக் காண்பது, இந்த உலகை உழைப்பாளர்களுக்கு உரியதாக்குவது அறிஞர் கடன்! சான்றோர் கடன்!

*"களைபோக்கு சிறுபயன் விளைக்க இவர்கள்*
*உடலைக் கசக்கி உதிர்த்த வியர்வையின்*
*ஒவ்வொரு துளியிலும் கண்டேன்*
*இவ்வுலகு உழைப்பவர்க்கு உரியதென் பதையே!*

(பாரதிதாசன் கவிதைகள்–முதல் தொகுதி; பக்.155)

ஆற்றல் - சக்தி, உழைப்பு, உணரப்படுவனவும், அறியப் படுவனவும்கூட! ஒரு பொருளை அதன் இயல்பான, மதிப்பிலிருந்து கூடுதல் மதிப்புடையதாக மாற்றும் ஆற்றலுள்ள செயற்பாட்டுக்கே உழைப்பு என்று பெயர். இந்த உழைப்பை வழங்கும் உழைப்பாளிகளே உலகத்தின் படைப்பாளிகள். இதனை, பாவேந்தன் பாரதிதாசன்,

*சித்திரச் சோலைகளே - உமைநன்கு*
*திருத்தஇப் பாரினிலே - முன்னர்*
*எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தன*
*ரோ! உங்கள் வேரினிலே!*

*"நித்தம் திருத்திய நேர்மையினால்மிகு*
*நெல்விளை நன்னில மே! - உனக்கு*
*எத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை*
*இறைத்தனர் காண்கிலமே!"*

*"ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே - உங்கள்*
*ஆதி அந்தம் சொல்லவோ? - நீங்கள்*
*ஊர்த்தொழி லாளர் உழைத்த உழைப்பில்*
*உதித்தது மெய்அல்ல வோ?"*

(பாரதிதாசன் கவிதைகள்-முதல் தொகுதி; பக்.156)

என்று வியந்து பாராட்டி மகிழ்ந்திருக்கின்றான்.

## முடிவுரை

பாவேந்தனின் இலட்சியம் உழைப்போரை வாழ்த்துவது; உழைப்போரையே உறுப்பினர்களாகக் கொண்ட ஒருலகம் காண்பது. அந்த உலகத்தில் அனைவரும் உறவினர். அவர்கள் உலகத்தை உண்பித்த பின்னே உண்பர். இந்த உலகம் எப்போது தோன்றும்? தமிழ் இளைஞர்களே! இந்திய இளைஞர்களே! உங்கள் வாழ்க்கை இதற்கு வழி கூறட்டும்!

# 4. பாவேந்தனும் பைந்தமிழும்

பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களே! பேராசிரியர் பெருமக்களே! இளைய பாரதமே! அனைவருக்கும் நன்றி; கடப்பாடு.

பாவேந்தன் பாரதிதாசன் நூற்றாண்டு விழாவை வழக்கம்போல் தமிழகம் இந்த ஆண்டில் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் இந்தச் சொற்பொழிவும் அமைந்துள்ளது எண்ணத்தக்கது.

## முன்னுரை

தமிழ் மொழி கவிதை மொழி! பல்லாயிரம் ஆண்டு களாகக் கவிதையில் சிறந்து வளர்ந்துள்ள மொழி! பெரும் பான்மையான கவிஞர்கள் மறக்கப்பட்டு விட்டனர். அவர்களை மறந்தாலும் தவறில்லை. ஆயினும் மானுடத்தின் வாழ்வியலைக் குறிக்கோளாகக் கொண்டு மனித மேம் பாட்டுக்கு முற்போக்கு திசையில் இலக்கியம் படைத்த கணியன் பூங்குன்றன், திருவள்ளுவர், அப்பரடிகள், வள்ளலார், பாரதி, பாவேந்தன் ஆகியோரை மறத்தல் கூடாது; மறக்கவும் முடியாது. வாழையடி வாழையென வந்த கவிஞர் வரிசையில் தனக்கென ஓரிடத்தை அமைத்துக் கொண்டவன் பாவேந்தன்.

பாவேந்தன் தமிழக வரலாற்றில் ஒரு மைல்கல்; ஒரு யுகம். அவன் 'ஓருலகம்' படைக்க விரும்பினான். "புதியதோர் உலகம் செய்வோம்" என்று பாடினான். ஆவேசத்துடன் பாடினான்; நமக்கும் ஆவேசத்தை யூட்டினான்; அவன் பற்றவைக்கப் பயன்படும் நெருப்பு. பெருநெருப்பாக இருந்தாலும் பற்றப்படும்பொருளில் எரியும் இயல்பு வேண்டும். நமக்கு எரியும் ஆற்றல் உண்டா! பலநூறு ஆண்டுகளாக நாம் மூடத்தனத்தின் முடைநாற்றத்தில் முடங்கிக் கிடந்து வருகின்றோம். நாம் அவமானம், இழிவு, ஏழ்மை ஆகியவற்றைத் தாங்கிப் பழகிப் போனோம்.

பாவேந்தன் நூற்றாண்டு விழாப் பொழுதிலாவது எண்ணுங்கள்! செய்யவேண்டுவன பற்றி எண்ணுங்கள்! துணிச்சலோடு செயற்படுங்கள்! பாவேந்தன் எண்ணியவை நடைபெற வேண்டும். அப்போதுதான் பாவேந்தனுக்குரிய புகழ்சேரும். பாவேந்தன் அடிச்சுவட்டில் தமிழரின் கல்விநிலை உயர்தல் வேண்டும். தமிழர் எப்படிக்கும் முதற் படியாய்த் தமிழ் படிக்க வேண்டும். தமிழ்வழிப் படிக்க வேண்டும். தமிழ் வளர வேண்டும். இவையே பாரதிதாசனின் குறிக்கோள்! எனினும் பாவேந்தன் காட்டிய வழி மாறுகிறது! தடம் மாறுகிறது! அன்புகூர்ந்து எண்ணுங்கள்!

## முதன் மொழி தமிழ்

நமது தமிழ் மொழி, மொழிகள் அனைத்திற்கும் முன்னேதோன்றி மூத்த மொழி என்று பாவேந்தன் பெரு மிதத்துடன் பாடுகின்றான்! ஆம்! வையகம் கையசைத்துக் கொண்டிருந்த கலத்தில் நாவசைத்தவள் தமிழ்த்தாய்! உலக மொழிகளுக்கெல்லாம் தாய்மை நிலையில் விளங்கும் தகுதி, தமிழுக்கு உண்டு என்பது மொழிஞாயிறு பாவாணர் கருத்து. பாவேந்தன்,

*முன்னைத் தோன்றிய மக்கள்*
*முதன்முதல் பேசிய*
*மொழியே மொழியே மொழியே*
*எனவே வாழ்த்தும்*
*தன்னேரில் லாத தமிழ் அன்னையே*
*உனை வாழ்த்தினேன்!* ('தேனருவி' பக்.10)

என்று பாடுகின்றான்.

## பைந்தமிழ்

தமிழ் முன்னே தோன்றிய மொழி. மக்கள் முதன் முதலில் பேசிய மொழி தமிழ்! தமிழ் தனியே தோன்றித் தனித்தன்மையுடன் வளர்ந்து தனித்தன்மையுடன் இயங்கும்

மொழி. ஆதலால் "பைந்தமிழ்" என்று பாவேந்தன் பாராட்டு கின்றான். "பைந்தமிழ் பயிலுக!" என்பது பாவேந்தனின் வாக்கு. இந்த ஆத்திசூடிக்கு பாவேந்தனே உரையும் எழுதினான். அந்த உரையில் "ஆரியம் போன்று, தமிழ் சார்பு மொழியன்று" என்று உரையெழுதி விளக்குகின்றான். இன்று தமிழின் தனித்தன்மை பேணப்படுகிறதா? இல்லை, ஏன்? நமது மொழியின் தனித்தன்மையை இழப்பது வரவேற்கத் தக்கதா? இல்லை, இல்லை! எந்த விலை கொடுத்தும் தமிழின் தனித்தன்மை காப்பாற்றப்படுதல் வேண்டும்.

## இயற்கையில் தோன்றிய மொழி

தமிழ் தொன்மையான மொழி என்பதையும் இயற்கையில் தோன்றி வளர்ந்த மொழி என்பதையும் பாவேந்தன் சொல்லாய்வுகள் மூலம் விளக்குகின்ற பாங்கு அறிந்துணரக்கூடியது. காக்கையின் "கா" என்ற சொல்லும் கருமுகிலின் "கடாமடா" என்ற சொல்லும் கிள்ளையின் "அக்கா" என்ற சொல்லும் வஞ்சப் பூனையின் "ஞாம் ஞாம்" என்ற சொல்லும் கழுதையின் "ஏ" என்று கத்துதலும் இயற்கையில் தோன்றிய மொழி என்பதற்குச் சான்றாகி விளங்குவதைக் காட்டும் பாடலைப் படித்து அனுபவி யுங்கள்:

"காக்கை 'கா' என்றுதனைக் காப்பாற்றச்
சொல்லும்! ஒரு கருமு கில்தான்
நோக்கியே 'கடமடா' என்றே தன்
கடனுரைக்கும்! நுண்கண் கிள்ளை
வாய்க்கும் வகை 'அக்கா' என் றழைத்ததனால்
வஞ்சத்துப் பூனை 'ஞாம் ஞாம்!'
காக்கின்றோம் எனச் சொல்லக் கழுதை அதை
'ஏ' என்று கடிந்து கூவும்!"

('தமிழியக்கம்' பக்.54)

மேலும் குயில்கள் "கூ" என்று கூவும் ஒலியும், நாய்களின் "வாழ் வாழ்" என்று கத்தும் ஒலியும் கோழியின் "கோ" என்று கூவு ஒலியும் காற்று 'ஆம்' என்று ஒலித்து அசைதலும் எல்லாமே தமிழ், தமிழியக்கம் என்று பாவேந்தன் விளக்கி தமிழ் இயற்கை தரும் மொழி என்று உறுதிப்படுத்துகின்றான்.

## தமிழின் சிறப்பு

தமிழ் காலத்தால் மூத்த மொழி; கருத்தாலும் மூத்து முதிர்ந்து வளர்ந்த மொழி. காலத்தினாலாய இனிமையையும் எளிமையையும் பெற்று விளங்கும் மொழி. தமிழ், எழுத்து, சொல்லில் தெளிவான அமைப்புடையது. தமிழ் மொழியின் சொல் வளர்ச்சியிலும் தமிழ்ச் சொற்கள் பொருளுணர்த்தும் முறையிலும் தெளிவான அடிப்படை உண்டு. தமிழ்ச் சொற்களில் பல, பொருளை மட்டுமன்றி அப்பொருளின் பருவம், முதன்மை, அமைவு முதலியனவற்றையும் இயல்பில் உணர்த்தும் சொற்களாக அமைந்துள்ளமை தமிழுக்கே உரிய தனிச் சிறப்பாகும். தமிழ் எழுத்து, பேச்சு, இயல், இசை, கூத்து என்றெல்லாம் வளர்ந்து விளங்கும் மொழியாகும். மேலும் தமிழ், இலக்கண வரம்புகள் பெற்று விளங்கும் மொழியாகும். எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டும் இலக்கணம் இயற்றாமல் தமிழ் மொழியைப் பேசும் மக்களின் வாழ்க்கைக்கும் அகத்திணை என்றும் புறத்திணை என்றும் இலக்கணம் கண்ட ஒரே மொழி தமிழ். அதனால் தமிழை "ஒழுக்க வாழ்வின் உயிரே!" என்று போற்றுகின்றான், பாரதிதாசன். தமிழ் கூத்து, இசை, இயல் என்று முறையாக வளர்ந்த மொழி. தத்துவ இயலைச் சார்ந்த நூல்கள் பலவும் பெற்றுச் சிறப்புற விளங்கும் மொழி தமிழ்.

## கொச்சைத் தமிழ் கூடாது!

பாவேந்தன் பாரதிதாசன் தமிழ் பற்றி அற்புதமான கனவு ஒன்று காண்கின்றான். அந்தக் கனவில் காதலி ஒருத்தி,

*தன் காதலனைக் கொச்சைத் தமிழால் திட்டிப் பரிகசிக்கின்றாள். தலைவன், காதலியின் கொச்சைத் தமிழைக் கேட்டுப் பொறுக்க முடியாமல் சோர்ந்து விடுவதாகக் கனவு! இன்று தமிழ் கொச்சைப்படுத்தப் படுவதற்கு ஓர் எல்லையே இல்லை! நாளிதழ்கள், வார இதழ்கள், திங்களிதழ்கள் முதலிய இதழ்களில் கொச்சைத் தமிழைத் தவிர வேறு என்ன இருக்கிறது! இத்தகு இதழ்கள் விற்பனையாகும் வரை தமிழின் தரம் எப்படிக் காப்பாற்றப்பெறும்?*

## தமிழே நீ என்றன் ஆவி!

*தமிழ் முறையாக வளர்ந்த ஒரு மொழி. பல நூறு ஆண்டுகள் கவிதையிலே வளர்ந்த மொழி தமிழ். நல்ல நூல்கள் மனிதரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் கருவிகளாகும். தமிழ் நூல்கள் தம்மைப் படித்தாரை வானில் உயர்த்தும் தகையன. இவைமட்டுமா? தொழில் நூல்கள், இசைத்தமிழ் நூல்கள் எல்லாம் பெற்று வளர்ந்த மொழி! தமிழ் நாளும் வளர்ந்து வந்த மொழி! தமிழை வளர்பிறை போல் தமிழர் வளர்த்தனர். சிந்தையில் தெளியுடைய புலனழுக்கற்ற அந்தண்மை பூண்ட அறிஞர்கள் தங்கள் உள்ளத்து உணர்வுகளை எழுத்தில் வடித்துத் தருவது இலக்கியம். இந்தப் பரந்த உலகின் அமைவுகளைத் தருவனவும் இலக்கியங்களேயாம். இலக்கியங்களைத் தமிழர் இயற்றமிழ் என்று போற்றுகின்றனர். ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் தமது உள்ளத்தில் எழுந்த உணர்வுகளையும் இந்த உலகின் வளங்களையும் விளக்கும் இயற்றமிழ் நூல்கள் பற்பல எழுந்தன. இசையில் தமிழ் வீறுகொண்ட நிலையில் வளர்ந்திருந்தது. தமிழ் ஆடற் கலைக்குத் தாய்!*

*இந்த நூற்றாண்டில் அல்லது 19-20-ஆம் நூற்றாண்டில் தமிழர்களாகிய நாம் தமிழ்ப் பாதுகாப்புப் பணிமட்டுமே செய்து வந்துள்ளோம். அதுவும்கூட முற்றாகச் செய்யப்*

பெறவில்லை. தமிழ் வளர்ச்சி வேறு; தமிழ்ப் பாதுகாப்பு வேறு. வளர்ச்சியில்லாமல் பாதுகாக்கப் பெற்றாலும்கூடக் காலப்போக்கில் மொழி அழியும். மொழியைப் பேசும் மக்கள் தம் வளர்ச்சியின் நலங்கருதித் தாய் மொழியை மறந்து விடுவர். தம் வளர்ச்சிக்குத் துணை செய்யக்கூடிய பிற மொழியைப் பயிலத் தொடங்கி விடுகின்றனர். இன்றையத் தமிழகத்தின் நிலை என்ன? ஆங்கிலம்தான் வாழ்க்கைக்குத் துணை செய்யும் என்ற நம்பிக்கையில் தமிழ் வழிக் கற்காமல் ஆங்கில மொழி வழிக் கற்கின்றனர். இந்த நிலை எங்குக் கொண்டுபோய் விடும்? அன்புகூர்ந்து சிந்தனை செய்யுங்கள்; தமிழ் வளர்ச்சிக்குரிய பணிகளில் ஈடுபடுங்கள்.

*வளர்பிறை போல்வ ளர்ந்த*
*தமிழரில் அறிஞர் தங்கள்*
*உளத்தையும் உலகில் ஆர்ந்த*
*வளத்தையும் எடுத்துச் சொல்லால்*
*விளக்கிடும் இயல்மு திர்ந்தும்*
*வீறுகொள் இசைய டைந்தும்*
*அளப்பிலா உவகை ஆடற்*
*றமிழேநீ என்றன் ஆவி!* ('அழகின் சிரிப்பு' பக்.62)

என்ற பாவேந்தன் பாடல் சிந்திக்கத்தக்கது. மக்கள் சோற்றினால் மட்டும் வாழ்தல் நன்றன்று. ஆகவும் ஆகாது. தமிழால் வாழும் வாழ்க்கை பெற்றாக வேண்டும்.

*பாவை தனக்கு இவ்வுலகில் தேவை*
*சோறன்று; மிளகின் சாறன்று; தமிழ்ஒன்றே!*

('குறிச்சித்திட்டு' பக்.92)

பாவேந்தன் தமிழின்பால் கொண்டிருந்த ஈடுபாட்டினை உயிர்ப்புள்ள சொற்களால் பாடி, நம்மனோரின் உணர்வையெல்லாம் தொடுகின்றான். தமிழ் உயிருக்குச் சமம். அதாவது தமிழே உயிர்! தமிழ்ச் சமூகம் வளர்வதற்கு

ஊற்றப்பெருந் தண்ணீர்! தமிழ், வாழ்வுக்குரிய மையம்! ஊர்! தமிழ், தமிழ் மக்களின் உரிமைக்கு வேர் போன்றது. வேரற்ற மரம் வளர இயலுமா? வாழுமா? தமிழ் மொழி பயிலாத தமிழினத்தின் உரிமைகள் பறிபோகும். தமிழ்ச் சமூகம் நாளும் புதிய விளைவுகளைப் படைத்திடத் தமிழே துணை! தமிழ் உயிர்! தமிழ் நலம் காப்பதே உயிருடைமைக்கு அடையாளம்!

*"தமிழுக்கும் அமுதென்று பேர்! - அந்தத்*
*தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!*
*தமிழுக்கு நிலவென்று பேர்! - இன்பத்*
*தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!*
*தமிழுக்கு மணமென்று பேர்! - இன்பத்*
*தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!*
*தமிழுக்கு மதுவென்று பேர்! - இன்பத்*
*தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு வேர்!*

('பாரதிதாசன் கவிதைகள்' முதல் தொகுதி; பக்.89)

என்பது உணர்க!

## தமிழின் சுகம்

தமிழ்ச் சுவைக்கு இணை எதுவும் இல்லை! காதல் சுகமா? ஆம்! அதுவும் ஈடில்லை என்கின்றான் பாவேந்தன்.

*"மங்கை யொருத்தி தரும் சுகமும் - எங்கள்*
*மாத்தமிழுக் கீடில்லை என்பேன்!"*

என்பான். அனைத்து நலன்களும் பெற்ற பாவையாயினும் தமிழறியாப் பாவை, தமிழருக்குப் பாவையல்ல, வெற்றுடலேயாம் என்றும் பேசுகின்றான்.

*"இருளில் இட்ட இன்ப ஓவியம்*
*அழகும் பண்பும் தழையக் கிடப்பினும்*

*பழகு தமிழறியாப் பாவை தமிழருக்கு*
*உயிரில்லா உடலே அன்றோ"*

('காதல் நினைவுகள்' பக்.39)

என்பதறிக.

## வந்த மொழிக்கு தந்த வரவேற்பு

தமிழ் செழித்து வளர்ந்த ஒரு மொழியாக விளங்கு கின்றது. இந்த வளர்ச்சி எளிதாக அமைந்த ஒன்றல்ல. தமிழ் காலந்தோறும் இடர்ப்பாடுகளைக் கண்டு கடந்து, நீரினை, நெருப்பினை வென்று வளர்ந்து வந்த மொழி என்பதையும் நினைவில் கொண்டால், தமிழின் அருமை வெளிப்படும் அல்லது தெரியும்.

தமிழ் மக்கள் தம் தாய்மொழி தமிழின் மீது பாவேந்தனைப் போல உயிர் மூச்சினை வைத்ததில்லை. வந்த மொழிகளையெல்லாம் வரவேற்று இடம் தந்து ஏற்றம் கொடுத்தனர்; வடமொழிக்கு இடம் தந்து தமிழைப் புறக்கணித்தனர்; புறக்கணித்துக் கொண்டிருக்கின்றனர்; கொன்றனர்; கொல்லுகின்றனர். தமிழில் வடசொல் கலப்பின் விளைவாகக் கன்னட மொழி பிறந்தது; மலையாள மொழி தோன்றியது; தெலுங்கு மொழி தோன்றியது. ஏன், வீட்டுச் சடங்குகளிலும் கோயிற் சடங்குகளிலும் தமிழ் புறக்கணிக்கப்பட்டது; வடமொழியே இடம் பெற்றது. கடவுள்கூடத் தமிழ் கேட்கமுடியாத அளவுக்குக் கருவறைக் கதவு சாத்தப்பட்டது. கடவுள் இந்த கட்டுக் காவலைக் கடந்து தமிழ் கேட்க விரும்பிக் காசு தந்து கேட்டுள்ளான்.

*"......திருமிழலை*
*இருந்து நீர் தமிழோ டிசைகேட்கும்*
*இச்சை யால்காசு நித்தல் நல்கினீர்"*

('ஏழாந்திருமுறை' பக். 899)

என்பது சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவாக்கு. ஆனால் இன்று ஏன் இந்த அவலம்? வழிகாட்டுவோராக யாரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டோம்! ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோராக விளங்கும் தமிழந்தணரை ஆசிரியனாக ஏற்றுக் கொண்டிருந்தால் இந்த விபத்து நடந்திருக்காது! ஏன் தமிழரசுகளைக்கூட இழந்திருக்க மாட்டோம்! அந்தோ! இரங்கத்தக்க நிலை!

*"......மக்கள்*
*இடருற வடமொ ழிக்கே*
*இடந்தந்து தமிழைக் கொல்வான்"*
('குறிஞ்சித்திட்டு' பக்.20)

என்ற பாவேந்தன் பாடல் வரிகளை உணர்க.

தமிழில் பிறமொழிச் சொற்களை நுழைத்துக் கலப் படம் செய்பவரைப் "பேடி" என்று திட்டுகின்றான் பாவேந்தன். தமிழுக்குக் கேடு வந்தது, தமிழர் மறையெனப் பிறமொழி மறைகளை ஏற்றுக் கொண்டமையாலே தான்! தமிழர்க்கு மறை வடமொழியில் எப்படி இருக்க முடியும்? வடமொழி எப்படி தமிழரை வழி நடத்த முடியும்? தமிழர் தமது வாழ்வுக்கு, சமய வாழ்வுக்கு வடமொழி வழிகாட்டும் என்று நம்பும் வரையில் தமிழர் முன்னேற்றம் முயற்கொம்பேயாம். தமிழர்க்கு மறை திருக்குறளேயாம். முற்காலத்துத் தமிழர்தம் நிலையை,

*"பிறமொழி தமிழிற் சேர்க்கும்*
*பேடிகள் நுழைந்த தில்லை!*
*அறமுதல் நான்கு கூறும்*
*தமிழ்மறை அலால்வே றில்லை"*
('குறிஞ்சித்திட்டு' பக்.3)

என்று பாரதிதாசன் விளக்குகின்றான்.

## தமிழுக்குப் பகை தமிழரே!

தமிழை, தமிழின் எழிலை, தமிழின் தரத்தைத் தடுத்து மறைத்து எவரும் அறியாவண்ணம் செய்யும் இழி முயற்சிகள் பாவேந்தனுக்கு நெஞ்சு பதைபதைக்கும் நிலையைத் தருகிறது. இன்று ஒவ்வொருவருமே தமிழுக்குப் பகையானோம்! இந்த நிலை என்று மாறும்?

பிறமொழிக் கலப்பால் தமிழ், தன் தகுதியை இழந்தது; தன்மையை இழந்தது! தமிழ்க் கலை, நாகரிகம், ஒழுக்கம் ஆகியவற்றில் அக்கறை நமக்கு இல்லை; முயற்சி இல்லை! தமிழ் அழிந்து வருகிறது! வெறும் உயிர்ப் பிண்டமாகத் தமிழர் வாழத் தலைப்பட்டனர்; வாழ்கின்றனர்! மீண்டும் தமிழர்கள் எழுந்திருப்பார்களா? எழுந்திருப்பர் என்ற நம்பிக்கை கால்கொள்ள மறுக்கிறது. ஏன்? தமிழரிடை ஒருமை இல்லை; ஒற்றுமை இல்லை! இதனால் தம்முள் முரணிப் போர் செய்து, அழியத்தான் நேரம் இருந்தது. இன்றையத் தமிழர்கள் பற்றிய பாவேந்தனின் ஒரு சித்திரம் இதோ:

"தமிழர்நாம் என்றால் நம்பால்
தமிழ் உண்டா? தமிழ் ஒழுக்கம்
அமைவுறச் சிறிது முண்டா?
அன்றைய மறத் தனந்தான்
கமழ்ந்திடல் உண்டா? கல்வி
கலைநலம் உண்டா? நெல்லின்
உமிமுனை அளவி லேனும்
ஒற்றுமை உண்டா?" ('குறிஞ்சித்திட்டு' பக்.185)

என்று பாடியிருப்பது கவிதையா? சாட்டையடியா?

பாவேந்தன் குறுகிய நோக்கம் உடையவன் அல்லன். பிற மொழிகளைப் பயில்வதைப் பாவேந்தன் தடைசெய்ய

வில்லை. தமிழை உயிராயக் கொள்ள வேண்டும் என்பதே பாவேந்தன் கொள்கை.

"ஆங்கிலத்தைக் கற்கையிலும்
அயல்மொழியைக் கற்கையிலும்
எந்தநாளும்
தீங்கனியைச் செந்தமிழைத்
தென்னாட்டின் பொன்னேட்டை
உயிராய்க் கொள்வீர் ('தமிழியக்கம்' பக்.77)

"எனக்குத் தமிழில் பேசத் தெரியாது" என்று பலர் முன்னிலையில் கூறிப் பெருமைபெறுவது, உயர் அரசு அலுவலர் முதலியோருக்கு இயல்பாக இருந்த பழக்கம். பாவேந்தன் இத்தகைய போக்கைக் கடுமையாக மறுக்கின்றான். தமிழ்நாட்டில் பிறந்தோம் என்ற எண்ணமே அவர்களுக்கு இல்லையோ? என்று வினவுவதுடன் அவர்கள் திருந்தவேண்டும் என்று எச்சரிக்கை செய்கின்றான்.

## சில மாறுதல்கள்

இன்றைய தமிழ்நாட்டு அரசு அலுவலர்களிடையில் பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது! இன்றைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள், துறைத் தலைவர்கள் நல்ல தமிழில் நிரந்தினிது பேசும் ஆற்றல் பெற்று விளங்குகின்றனர். நல்ல தமிழில் ஆட்சி ஆவணங்கள் தயாரிக்கின்றனர். ஏன் இன்று பொறியியல் துறையில், மருத்துவத்துறையில் நல்ல தொழில் நுட்ப நூல்களை எழுதும் அறிஞர்கள் பலர் உள்ளனர். இந்த வகையில் பாரதிதாசனின் கொள்கைக்கு மகத்தான வெற்றி கிடைத்திருக்கிறது என்று கூறலாம்.

யுகப்பிரளயமே வந்தாலும் தமிழர், தம் தமிழ்க் குருதியை இழக்க மாட்டார்கள். பலநூறு ஆண்டுகளாகத் தமிழை அழிப்பதற்குப் பலப்பல முயற்சிகளை மேற்கொண்ட

பிறகும் தமிழ் அழியவில்லை; தமிழ் வளர்கிறது; தமிழ் வாழ்கிறது.

## இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்போம்!

"புனற் கடலும் புகைக் கடலும் என்ன செய்யும்" என்று பாவேந்தன் கேட்கின்றான். ஏழாம் நூற்றாண்டில் வைகைப் புனல் வெள்ளத்தையும் மதுரையில் எரிந்த எரி நெருப்பையும் புறங்கண்டு தமிழ் வெற்றி பெற்ற வரலாற்றை இங்கு நினைவிற்கொள்க!

இன்று தமிழகத்தில் தமிழில் வழிபாடு இல்லை! ஏன்? தமிழ் மந்திர மொழி இல்லையாம். தமிழ், பயிற்று மொழி இல்லை! ஏன்? தமிழில் அறிவியல் இல்லையாம். இவை யெல்லாம் தமிழர் அயர்ந்துள்ள நிலையில் நடக்கும் அவலங்கள்! தமிழில் மந்திரங்கள் உண்டு! இல்லை, தமிழே மந்திரமொழி என்பதைத் தமிழகத்தின் ஏழாம் நூற்றாண்டு வரலாறு கூறுகிறது. திருவிளையாடற் புராண ஆசிரியர்,

"தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
உண்ட பாலனை அழைத்ததும் எலும்பு பெண்ணுருவாக்
கண்டதும் மறைக் கதவினைத் திறந்ததும் கன்னித்
தண்டமிழ்ச் சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்!"

('திருவிளையாடற்புராணம்', திருநாட்டுச்சிறப்பு பக்.58)

என்று தமிழின் மாண்பினை எடுத்துரைக்கிறார்.

பாவேந்தன் கேள்வி, தமிழுக்குத் தொடர்பில்லாத கடவுள் ஏன்? என்பது. தமிழில் இல்லாத ஒன்று தமிழருக்கு ஏன்? எவன் அன்று எழுப்பும் வினாவிற்கு விடை கூறுவார் யார்?

எல்லாரும் தமிழ்க் கல்வி - தமிழ் வழிக் கல்வி கற்கவேண்டும். தமிழ் வழிக் கல்வி பயின்றால்தான் அறிவு வளரும். அறிவு வளர்ந்தால்தான் துன்பங்கள் நீங்கும்; சுகம்

வரும்; நெஞ்சில் தூய்மை வரும்; வீரம் வரும். ஆதலால் நல்வாழ்க்கை அமைவிற்குத் தமிழ் வழிக் கல்வியே துணை செய்யும். ஆதலால், தமிழ்க் கல்வியை எல்லாரும் பயில் கின்றனர் - பயின்றனர் என்ற நிலையே தமிழ் நாட்டிற்கு ஆக்கம் தரும். இதனைப் பாவேந்தன்,

*"இன்பத் தமிழ்க்கல்வி யாவரும் கற்றவர்*
*என்றுரைக் கும்நிலை எய்திவிட் டால்*
*துன்பங்கள் நீங்கும்; சுகம்வரும்; நெஞ்சில்*
*தூய்மையுண் டாகிவிடும்; வீரம் வரும்"*

('பாரதிதாசன் கவிதைகள்' முதல் தொகுதி; பக்.93)

என்று பாடுகின்றான்.

## அயல்மொழி அண்டும் அளவுக்குத் தாழ்வே!

தமிழரும் தமிழும் தணலும் சூடும் போல வாழ வேண்டும். தமிழர் வாழ்வில் அயல்மொழி அண்டும் அளவுக்குத் தமிழ் தாழும்; தமிழர் வாழ்வும் தாழும். தமிழ், தமிழிலக்கியம், தமிழினம் இவை ஒன்றுக்கொன்று ஆதாரம் - அடிப்படை. இவற்றில் ஒன்று அழிந்தாலும் எஞ்சிய இரண்டும் வாழா. தமிழ்நாடு வீழ்ச்சியுறும். நாட்டின் உரிமை காக்கும் பணி, தமிழ்ப் பாதுகாப்பிலும் வளர்ச்சியிலுமே இருக்கிறது.

*"தமிழனும் தமிழும் தணலும் சூடும்!*
*அமிழ்தமே ஆயினும் அயல்மொழி அயல்மொழி!*
*அயல்மொழி தமிழை அண்டும் விழுக்காடு*
*தமிழ்மொழி தாழும்; தமிழன் தாழ்வான்!*
*தமிழை வடமொழி தாவும் நோக்கம்*
*தமிழை அழிப்பதும் தான்மேம் படுவதும்!*
*வடமொழி அதனின் வழிமொழி எதுவும்*
*தமிழ்மேல் சந்தனம் தடவவே வரினும்*

ஒழித்து மறுவேலை உன்னுதல் வேண்டும்
தமிழ், தமிழினம், தமிழிலக்கியம் இவற்றில்
ஒன்றுபோம் எனில் மற்றவும் ஒழியும்
நாட்டின் உரிமை காத்தல் வேண்டும்."

('குறிஞ்சித்திட்டு' பக்.311–312)

என்று பாரதிதாசன் இடித்துரைப்பதை எண்ணுக.

## தமிழ் பயிற்று மொழி

தமிழர் ஆக்கம், தமிழ் வழிக் கல்வியின் வாயிலாகத் தான் என்பதால் தமிழ்வழிக் கல்வியைக் கட்டாயமாக்க வேண்டும். தமிழ்வழிக் கல்வியை ஒவ்வொருவரும் தவறாமல் கற்க, சட்டம் செய்யவேண்டும் என்பது பாவேந்தனின் எண்ணம். தமிழர் நெறி தமிழருக்குத் தேவை என்பதறிந்து தமிழையும் தமிழனையும் காப்பாற்றமுடியும். எல்லாரும் தமிழ்வழிக் கல்வி கற்க, அரசு சட்டமியற்றினால் மட்டும் போதாது. சலுகைகளும் தந்து ஊக்குவிக்க வேண்டும். இன்றைய தமிழ்நாட்டில் இதுதான் இல்லை! ஏன் தமிழ் வழியாகக் கற்பவன் கிராமப்புற தமிழன். இவனுக்கு எந்த வசதியும் இல்லை; பணி வாய்ப்பும் இல்லை. இது பிழைபட்ட நிலை! தமிழ்வழிக் கல்வியைத் தமிழ் நாட்டரசு ஊக்குவிக்க வேண்டும். தமிழ் வழிக் கற்று வருவோருக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை தரவேண்டும் என்று கேட்கவும் துணிவில்லை. ஏன்? 1972–73–இல் அன்று தமிழக முதல்வராக இருந்த பாராட்டுதலுக்குரிய டாக்டர் கலைஞர் தமிழ் வழிப் பயின்றோர்க்குத் தமிழ்நாடு அரசில் முன்னுரிமை கொடுத்து அரசாணையும் பிறப்பித்தார்! ஆனால் தமிழக மக்கள் ஆங்கிலப் பற்றார்வத்தின் காரணமாக அந்த ஆணையை எதிர்த்தனர். கல்லூரிகள், பள்ளிகளுக்குச் செல்லாமல் மாணவர்கள் படிப்பு நிறுத்தம் செய்தனர். மக்களை, அவர்தம் வழியில் சென்று திருத்தலாம் என்ற நம்பிக்கையில் அப்போது

அம்முயற்சி கைவிடப்பட்டது. இன்றைய நிலை மேலும் மோசமாகி விட்டது! தமிழ்நாடு, தமிழர் நலம், தமிழின் நலம் ஆகியவற்றில் அக்கறையுடையவர்கள் ஆழமாகச் சிந்தித்துத் தீர்வுகாண வேண்டிய சிக்கல் இது.

## செய்ய வேண்டியவை

தமிழ் நூல்கள் நிறைய வெளிவருதல் வேண்டும். எளிய நடையில் ஏற்றம் தரும் கருத்துக்கள் அடங்கிய தமிழ் நூல்கள் பலப்பல படைத்திடுதல் வேண்டும். நாளும் இலக்கிய மரபுகள் மாறுகின்றன. புதிய கவிதைகள் தோன்றி வளர்ந்து வருகின்றன. இலக்கியங்கள் வாழ்க்கைப் போக்கில் வளர்ந்து வருகின்றன! இந்தப் புத்திலக்கியங்கள் யாப்பியலுக்கு ஒத்துவராதவை என்பது வெளிப்படை! அதனால் இவை அனைத்தையும் இலக்கியங்கள் அல்ல என்று ஒதுக்க முடியுமா? ஒதுக்குவது நல்லதா? ஒதுக்க இயலாது; ஒதுக்கவும் கூடாது. தோன்றும் இலக்கியங்களுக்குத்தான் இலக்கணங்கள்! ஆதலால் சமுதாய நிகழ்வுகளின் தாக்கத்தின் காரணமாக உணர்வுகளால் உந்தப்பட்டு எழுச்சியுடன் வரும் கவிதைகளை மரபுவழி ஒத்தவையல்ல என்று தள்ள இயலாது. இதோ சில உதாரணங்கள்:

"........
இனியும் சகிக்க முடியாது.
கண்ணீர்க் கடலடியில்
உறங்கிக் கிடக்கும்
வட முகாக் கினியை
உசுப்பி விடுவோம் வாருங்கள்"
ஒரு சங்காரத்தால்
இந்த பூமி பண்படுத்தப் பட்டபின்
நட்சத்திர விதைகளைத்
தூவுவோம் இங்கே!"

('பால்வீதி' பக்.91, அப்துல்ரகுமான்)

நீ தாமதிக்காதே
தேரோட்டம் முடிந்த பிறகு
திருவிழாக் காணவரும்
ஒரு பக்தனைப் போல்—
வண்டி போன பிறகு
நிலையம் வந்து சேரும்
ஒரு பயணியைப்போல்—
நோயாளி மடிந்த பிறகு
மருந்து வாங்கி வரும்
ஒரு சொந்தக்காரனைப்போல்—
நீ காலங்கழித்து வராதே!
பிறகு வருந்தாதே!

('கனவுகள்+கற்பனைகள்=காகிதங்கள்' பக்.70—மீரா)

இங்ஙனம் தோன்றும் புதுக் கவிதைகளுக்கும் இலக்கணம் செய்ய வேண்டும். இலக்கணம், இலக்கிய வளர்ச்சிக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் துணை செய்ய வேண்டும். பாவேந்தன் "இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்" என்று கூறுவதை நினைமின்! தமிழ்ப் பல்கலைக் கழகம் இந்த நூற்றாண்டு இலக்கியங் களுக்கு இலக்கணங்களை உருவாக்க முன்வரவேண்டும்.

பாவேந்தன் செந்தமிழைக் கற்றவன்; உணர்ந்தவன். ஆயினும் செந்தமிழ், செழுந்தமிழாக இல்லையே என்று கவலைப்பட்டுச் செந்தமிழைச் செழுந்தமிழாக வளர்க்கும் பணியில் ஈடுபட ஆணையிடுகிறான். வெளியுலகில் நாளும் வளர்ந்துவரும் புத்தம்புதிய அறிவியல் நுட்பங்களுக்குத் தமிழ்ச் சொல்லைத் தேர்ந்து தெளிந்து பயன்படுத்தியும், எளிதில் விளங்கும் வரைபடங்களுடனும் தமிழில் பலப்பல சுவடிகள் வரவேண்டும். இது பாவேந்தனின் ஆர்வம்! இன்று இத்தகைய முயற்சிகள் முகிழ்த்ததன் விளைவாக, "கலைக்கதிர்", "வளரும் வேளாண்மை", "துளிர்", "அறிக

அறிவியல்” என்று சிலபல இதழ்கள் வெளிவருகின்றன. இவை போதா! இந்த இதழ்களின் விற்பனையும் குறைவு; மக்களிடத்தில் அறிவியல், தொழில் நுட்பம் சார்ந்த செய்திகளைப் படிப்பதில் - கேட்பதில் ஆர்வம் இல்லை. ஆயினும், முயற்சிகள் தொடர்ந்து நடைபெறவேண்டும், நடைபெறும் என்று நம்புவோமாக!

தமிழன் கற்றுத் தெளிந்து வாழ்தல் வேண்டும். கல்வி பெறும் முயற்சியில் ஒருதமிழன் தாழ்ந்தானானால் தமிழர் அனைவரும் நாணித் தலைகுனிதல் வேண்டும் என்பது பாவேந்தனின் ஆணை. பாவேந்தனின் இந்த ஆர்வங்கள் நிறைவேறும் நாள் எந்நாள்? கவிதையைப் படியுங்கள்! திரும்பத் திரும்பப் படியுங்கள்! நாணம் இருக்கிறதா? இல்லையா? சோதனை செய்து கொள்ளுங்கள்!

*எளியநடையில் தமிழ்நூல் இயற்றிடவும் வேண்டும்*
*இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்*
*வெளியுலகில் சிந்தனையில் புதிதுபுதி தாக*
*விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாம் கண்டு*
*தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெல்லாம் செய்து*
*செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்*
*எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை யென்றால்*
*இங்குள்ள எல்லாரும் நாணிடவும் வேண்டும்!*

(‘பாரதிதாசன் கவிதைகள்’ முதல் தொகுதி; பக்.95)

என்பதறிக.

## தமிழைத் தாபிப்போம்!

அடுத்து, பாவேந்தன் தமிழருக்கு ஒருதலையாகச் செய்து முடிக்கவேண்டிய பணி ஒன்றை ஆணையிடுகின்றான்! இந்த உலகியல் விரிந்தது; பரந்தது. பூத, பௌதிக இயல்களை ஒட்டி எண்ணற்ற அறிவியல் துறைகள் தோன்றியுள்ளன; வளர்ந்துள்ளன. இத்துறைகள்

அனைத்திலும் தமிழர் அறிவு பெற்றால்தான் தமிழர் நிலை உயரும்! தமிழ் வளரும்! நல்ல எளிய தமிழ் நடையில் அறிவியல் செய்திகளை சாதாரண மக்களுக்கும் சென்று சேரும்படி செய்யவேண்டும். நாள்தோறும் நூற்கழகங்கள் தோன்ற வேண்டும். இது பாவேந்தனின் எண்ணம். பாவேந்தன் எண்ணத்தை நாம் நிறைவேற்ற வேண்டாமா? இன்று தமிழுக்கு உரியன செய்யாமல் தமிழின் சென்ற காலப் பெருமைகளைப் பறையறைவதில் என்ன பயன்? இதோ, நீங்களே பாவேந்தனின் கவிதைகளைப் படியுங்கள்!

*"உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூல்கள்*
*ஒருத்தர்தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்*
*சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்!*
*தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்!*
*இலவசநூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்!*
*எங்கள்தமிழ் உயர்வென்று நாம் சொல்லிச் சொல்லித்*
*தலைமுறைகள் பலகழித்தோம் குறைகளைந் தோமில்லை!*
*தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்!*

('பாரதிதாசன் கவிதைகள்' முதல் தொகுதி; பக்.95)

பாரதிதாசன் அடிச்சுவட்டில் தமிழைத் தாபிப்போம் வாரீர்!

## கணக்காயர் கடமை!

அடுத்து, தமிழர் வளர்ச்சியில், தமிழ் வளர்ச்சியில் பொறுப்பேற்க வேண்டியவர்கள் கணக்காயர்கள் – ஆசிரியர்கள்! நல்ல தமிழில் எழுதவும் பேசவும் ஆற்றலுள்ள ஆசிரியர்கள் பொறுப்புணர்வுடன் – முற்போக்கு எண்ணத் துடன் உரியவாறு உழைப்பாராயின், தமிழன்னை விழித்தெழுவாள்! தமிழ் மக்களின் அடிமை வாழ்வும் தீரும்! என்கின்றான் பாவேந்தன்!

*கழகத்தின் கணக்காயர், தனிமுறையில்*
*கல்விதரு கணக்கா யர்கள்,*

*எழுதவல்ல பேசவல்ல கல்லூரிக்*
*கணக்காயர் எவரும் நாட்டின்*
*முழுநலத்தில் பொறுப்புடனும் முன்னேற்றக்*
*கருத்துடனும் உழைப்பா ராயின்*
*அழுதிருக்கும் தமிழன்னை சிரித்தெழுவாள்;*
*அவள்மக்கள் அடிமை தீர்வார்!*

('தமிழியக்கம்' பக்.71)

*இந்த நிலை என்று உருவாகும்? நினைமின்! செய்ம்மின்!*

## தமிழ்த் தெருவில் தமிழ் வேண்டும்

*தமிழ் நாட்டின் தெருக்களில், கடை வீதிகளில் தமிழ்தான் இல்லை! கடைகளுக்குத் தமிழில் பெயர் வைத்தால் என்ன? என்று பாவேந்தன் தணிப்பரிய துன்பத்தில் உழன்று பாடிய கவிதை இதோ!*

*உணவுதரு விடுதிதனைக் "கிளப்" பெனவேண்*
*டும்போலும்! உயர்ந்த பட்டுத்*
*துணிக்கடைக்குச் "சில்குஷாப்" எனும் பலகை*
*தொங்குவதால் சிறப்புப் போலும்!*
*மணக்கவரும் தென்றலிலே குளிரா இல்லை?*
*தோப்பில் நிழலா இல்லை?*
*தணிப்பரிதாம் துன்பமிது! தமிழகத்தின்*
*தமிழ்த் தெருவில் தமிழ்தான் இல்லை!*

('தமிழியக்கம்' பக்.22)

*இந்த நிலை என்று மாறும்? தமிழையே கருவியாகக் கொண்டு அரசு, இதற்குச் சட்டங்கள் இயற்றக்கூடாதா? இனி மேலாவது செய்வார்களா? பொதுமக்களாகிய நமக்காவது சுரணை வருமா?*

## திருக்கோயிலில் தமிழ் வேண்டும்

*காற்செருப்பு, வெளிப்புறத்தில் கழற்றி வைக்க வேண்டியதே! அத்தகைய காற்செருப்பை ஒருவன் கழிவிடத்தில் தள்ளிவிட்டால் நம்மால் தாங்கிக்கொள்ள முடிகிறதா? எவ்வளவு ஆத்திரப்படுகின்றோம்! இதே ஆத்திரம் ஏன் நமது உயிரினும் மேலாய தாய்மொழிக்கு இழிவு செய்யும்பொழுது வருவதில்லை! தமிழை மட்டுமா தாழ்த்தினார்கள்! தமிழனையும் சூத்திரன் என்று இரண்டாந் தரமாக்கிக் கருவறைக்கு வெளியே நிறுத்தினார்கள்! யார் கருவறைக்கு வெளியே? கற்கோயில் கட்டிய தமிழன்! இந்த இழிவு ஏன்? இறைவனை அர்ச்சனை செய்யத் தமிழுக்குத் தகுதியில்லையா? "அர்ச்சனை பாட்டேயாகும்" என்பது பொய்யுரையா? மெய்யுரையா? செந்தமிழ் மொழியில் தேவாரங்கள் உள்ளன. திருவாசகம் உள்ளது! இவை மொழிக்கு மொழி தித்திப்பானவை! இறைவன் விரும்பிக் காசு கொடுத்துக் கேட்டவை! தமிழ் கேட்கும் விருப்பத்தால் தமிழின் பின்னால் கடவுள் சென்ற வரலாறு, மறக்க முடியுமா? திருக்கோயில்களில் திருமுறைகளையே வழிபடும் மறைகளாக நடைமுறைப்படுத்தும் நாளே, தமிழர்க்கு நல்ல நாள்! இதோ பாவேந்தனின் உணர்ச்சி நிறைந்த கவிதைகளைப் படியுங்கள்! மானமும் உணர்ச்சியும் இருந்தால் தமிழகத் திருக்கோயில்களில் திருமுறைத் தமிழை வழிபாட்டு மொழியென்ற நியதியை உருவாக்குங்கள்! வரலாறு படையுங்கள்!*

தமிழ் மக்களிடத்தில் தமிழ் என்ற உணர்வே இல்லை! கடவுள் பக்தி என்ற பெயரில் ஆசாரச் சடங்குகளுக்கே இரையாகிறார்கள்! ஞானத்தில் நாட்டமில்லை. நாம் தமிழகத் திருக்கோயில்களில் திருமுறைத் தமிழ் அர்ச்சனை வேண்டும் என்று பல்லாண்டுக்கு முன் போராடினோம். பல மேடைகளில் வற்புறுத்திப் பேசிவந்தோம். அப்போது தமிழக அறநிலையத்துறை அமைச்சராக இருந்த திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் இதற்கு உடன்படவில்லை.

அவரை இசைவிக்க வேண்டி நாம் முதல்நிலையில் திருமுறைத் தமிழ் அர்ச்சனை செய்ய வேண்டும் என்பதற்குரிய சான்றுகளடங்கிய நூல்கள் பலவற்றில் அடையாளமிட்டு அவர் பார்வைக்கு அனுப்பி வைத்தோம். அதன்பின் அறிஞர் பெருமக்கள் பலருடன் அவரைச் சந்திக்கச் சென்றோம். அதுபோது அவர் தாம் ஏற்கனவே அனுப்பிய நூல்களை முன்னதாகப் பார்வையிட்டிருந்ததால் எந்தவித மறுப்புமின்றித் திருக்கோயில்களில் திருமுறைத் தமிழருச்சனை செய்வதற்கு உடனே இசைவளித்தார்; பின், அரசு ஆணையும் பிறப்பித்தார். பின்னர் அவரே மதுரை அருள்மிகு மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயிலில் 1962ஆம் ஆண்டில் நாமும் உடனிருக்க, திருமுறைத் தமிழருச்சனையைத் தொடங்கியும் வைத்தார். இது வரலாறு. திருக்கோயில்கள் திருமுறைத் தமிழ் அருச்சனைக்குரியன என்ற அரசாணையை நீண்ட போராட்டத்திற்குப் பிறகு பெற்றுத் தந்தும் தமிழர்கள் தமிழ் அருச்சனை செய்ய முன்வரவில்லை. என்னே உறக்கம்! நிலைகெட்ட நிலை! இறைவா! எங்கள் தமிழர், என்று விழிப்புநிலை எய்துவர்? பாவேந்தன் கவிதையைப் படியுங்கள்!

> *"சொற்கோவின் நற்போற்றித் திருவகவல்*
> *செந்தமிழில் இருக்கும் போது*
> *கற்கோயில் உட்புறத்தில் கால்வைத்த*
> *தெவ்வாறு சகத்ர நாமம்?*
> *தெற்கோதும் தேவாரம் திருவாய்நன்*
> *மொழியான தேனி ருக்கச்*
> *செக்காடும் இரைச்சலென வேதபா*
> *ராயணமேன் திருக்கோ யில்பால்?"*

('தமிழியக்கம்' பக்.59)

## ஆட்சியியலில் தமிழ் வேண்டும்

ஆங்கிலம் மட்டுமே கற்றவர்கள் தமிழ் நாட்டரசின் அலுவல்களைப் பார்ப்பதைப் பாவேந்தன் விரும்பவில்லை. ஏன்? ஆள்கிறவர்கள், ஆளப்படுகிறவர்களுடைய மரபுகளை

அறிந்திருக்க வேண்டும். இது ஆட்சியியலின் நியதி. அதுவும் தமிழ், தீங்கறியாதது. தமிழ் மக்கள் யாருக்கும் தீவினை சூழாது நல்லனவே எண்ணி நல்லனவே செய்யும் மக்கள். ஆதலால், தமிழ் நாட்டை ஆளுவோர் தமிழறிந்தவர்களாய் இருத்தல் வேண்டும் என்பது பாவேந்தனின் எண்ணம். இந்த எண்ணம் இன்று ஓரளவு நிறைவேறி வருகிறது. இன்னும் முழுமை யடையும் என்று எதிர்பார்க்கத் தமிழ் மக்களுக்கு உரிமை உண்டு. தமிழுக்குத் தொண்டு செய்து, தமிழை உயர்த்து பவர்கள் உயர்வார்கள். தமிழுக்குச் தொண்டு செய்வது, தரித்திர நாராயணர்களுக்கு அமிழ்து அளித்ததுபோல என்று கவிஞன் எடுத்துக் கூறும் பாங்கு நுட்பமானது. அதாவது, தமிழ்க் கல்வியைக் கடைகோடி மனிதருக்கும் வழங்கி அறிவை உண்டாக்கி வளர்த்து மூடத்தனத்தின் சிக்கறுத்து அறிவறிந்த ஆள்வினையை அறிமுகப்படுத்தி விட்டால் அவர்கள் தாமே வளம் பல படைத்து வாழ்வர் என்பது பாவேந்தனின் கருத்து.

*"தமிழை உயர்த்தினார் தாமுயர் வுற்றார்"*
*என்றசொல் நாட்டினால் இறவா நற்புகழ்*
*என்று வாய்ந்திடும் என்ற நடுக்கமோ?*
*தமிழின் தொண்டு தரித்திர வயிற்றுக்கு*
*அமிழ்தம் அன்றோ அண்ணன் மாரே!"*

(இசையமுது 2–பக்:31)

என்பது காண்க.

தமிழ் வளர்ந்த மொழி. தமிழ் மக்கள் வளர்ந்த நாகரிக வாழ்வினர். தமிழர் தம் வாழ்வியல் அந்தண்மையும் சான்றாண்மையும் சார்ந்து விளங்குவது. தமிழ்நாடு தமிழ்ச் சான்றோர் காட்டிய நெறி வழியிலேயே ஆளப்படுதல் வேண்டும்.

தமிழ் மக்கள் யாரையும் எளியர் என்று எண்ணி எள்ளி நகைக்க மாட்டார்கள். யார் ஒருவரையும் பெரியர் என்று

வியந்து பாராட்டமாட்டார்கள். மனிதம் என்ற நிலையே தமிழர் முதன்மைப்படுத்தும் நெறி.

*"........மாட்சியில்*
*பெரியோரை வியத்தலும் இலமே*
*சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே!"* (புறம். 192)

எல்லாரும் இன்புற்று வாழ்தல் வேண்டும். இதுவே தமிழர் குறிக்கோள்.

*"ஓரில் நெய்தல் கறங்க ஓரில்*
*ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்*
*புணர்ந்தோர் பூவணி அணியப் பிரிந்தோர்*
*பைதல் உண்கண் பனிவார்பு உறைப்பப்*
*படைத்தோன் மன்றஅப் பண்பி லாளன்*
*இன்னா தம்ம இவ் வுலகம்*
*இனிய காண்க, இதன் இயல்புணர்ந் தோரே!* (புறம்.194)

என்ற நெறிமுறை தமிழர் முறை. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற திருக்குறள் நெறியே தமிழர் நெறி. இந்நெறிகள் வழி, தமிழ் நாட்டுக்குச் சட்டம் இயற்றுதல் வேண்டும் என்பது பாவேந்தனின் எண்ணம்.

*"நம்நாடு தமிழ்நாடு நாமெல்லாம்*
*தமிழ்மக்கள் இன்பம் கோரி*
*இந்நிலத்தில் வாழ்வதெனில் மூச்சாலே!*
*அம்மூச்சு தமிழே! 'அந்தப்*
*பொன்னான தமிழாலே தமிழ்ச்சான்றோர்*
*புகன்றதமிழ்ச் சட்டம் ஒன்றே*
*இந்நாட்டை ஆண்டிடுதல் வேண்டுமதை*
*இகழ்வானை ஒழிக்க வேண்டும்!"*

(குறிஞ்சித்திட்டு—பக்.198)

என்ற பாவேந்தன் எண்ணப்படி தமிழ்நாடு ஆளப்படும் நாளே தமிழ்நாட்டுக்குப் பொற்காலத் தொடக்கமாகும்!

## நல்லதோர் திட்டம் வேண்டும்

பாவேந்தன் தமிழ் நாட்டின் நலனுக்கென்று திட்டம் அமைத்துச் செயற்பட வேண்டும் என்று அறிவுறுத்துவதை அனைவரும் உணரவேண்டும். உணர்ந்தவழி செய்யவும் முற்படவேண்டும். நல்லன நடைபெறவேண்டும். அல்லன அகலுதல் வேண்டும். களை மண்டிய கழனியில் பயிர் வளருமா? நாட்டில் செல்வ வளம் செழிக்கச் செய்தல் வேண்டும்; செந்தமிழைக் காத்திடுதல் வேண்டும். சாதி, மத பேதங்களற்ற சமுதாயம் காணல் வேண்டும். ஏன்? மாமேதை மார்க்ஸ் வழியில் அரசுங் கடந்த பொதுமை நலம் செறிந்த சமுதாய அமைப்பைக் காண்பது தமிழர் கடன்! இந்தக் கடமையை நாம் விரைந்து செய்து முடிக்க வேண்டாமா?

*"நல்லதோர் திட்டம் அமைத்தல் நம்கடன்*
*அல்லன அனைத்தும் அழித்தல் நம்கடன்*
*செல்வம் நாட்டிற் சேர்ப்பது நம்கடன்*
*செந்தமிழ் காத்தல் சிறந்தகடன் நமக்கு!*
*மதம் அகன்ற சாதி மறைந்த*
*அரசு கடந்தஓர் வாழ்க்கை அமைப்பது*
*நம் கடன்!"* (குஞ்சித்திட்டு–பக்.319)

என்று பாவேந்தன் அளித்த திட்டத்தை நிறைவேற்ற உறுதி கொள்வோம்.

## தமிழ்த் தலைவர்களை உருவாக்குக!

தமிழரின் குறை தீர்தல் வேண்டும். இன்னே தீர்தல் வேண்டும். யாராவது ஒரு தமிழன், ஒரு தமிழ் மறவன், தமிழர் தலைவன் முன்வரமாட்டானா? என்று எதிர்பார்க்கின்றான் பாவேந்தன் பாரதிதாசன்! நமது தலைமுறையில் இரண்டு தலைவர்கள் கிடைத்தனர். ஆனால், அவர்கள் தமிழகத்தின் தரம் உயர்வதற்கு முன் மாண்டு போயினர்! இது தமிழகத்தின் தீயூழேயாம்! தமிழ்த் தலைவர் வரவை

எதிர்பார்த்திருக்க வேண்டாம். இப்பல்கலைக் கழகம் பாவேந்தன் கண்ட தமிழகத்தை உருவாக்கும் தலைவர்களை உருவாக்குக! தமிழர் குறை பாரதிதாசன் பல்கலைக் கழகத்தால் தீர்ந்ததாக வரலாறு புகழ்ப் பரணி பாடட்டுமே!

## வரலாறு தொடரட்டும்!

தமிழகம் படையெடுப்புக்களைக் கண்டதில்லை. தமிழ்நாடு இயற்கை வளம் நிறைந்த நாடு; நற்றமிழ் வளர்ந்த நாடு; கவிஞர்கள் பலர் தோன்றிக் கற்கண்டுத் தமிழை வளர்த்த புகழ்மிக்க நாடு; தொழில்கள் பல நடந்த நாடு - நடக்கும் நாடு; புதிய புதிய தொழில்கள் அமையப்பெற்று வளர்ந்த நாடு - வளரும் நாடு. இந்தப் புகழ்மிக்க மரபு, தொடர் வரலாறாக அமையும்படி செய்வது நமது கடமை.

"எவர்படை யெடுப்பும் இன்றி
இயற்கையால் வளர்ச்சி பெற்ற
நவையிலாக் குறிஞ்சித் திட்டு
நற்றமிழ் வளர்ச்சி பெற்றும்
கவிஞர்கள் பலரைப் பெற்றும்
கைத்தொழில் வளர்ச்சி பெற்றும்
குவிபுதுத் தொழில்க லைகள்
கொளப்பெற்றும் வந்த தாகும்"

(குறிஞ்சித்திட்டு—பக்.5)

இந்த வரிகளை நெஞ்சில் நிறுத்துங்கள்.

## நமது கடமை!

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த தமிழ்க்குடியின் வரலாறு எப்படிக் கெட்டது? ஏன் கெட்டது? தமிழர்கள் வெள்ளையுள்ளம் படைத்தவர்கள்; எளிதில் எதையும் நம்புவார்கள்! அதனால், செழுந்தமிழ் வழக்கு சீர்கெடும் வகையில் அயல் வழக்கு ஊடுருவியது. தமிழர் ஒரு கடவுட் கொள்கையுடையவர்கள். இதற்கு மாறாக

அயல்வழியால் பல கடவுள் வழிபாட்டு நெறி புகுந்தது! தமிழ் வழியினர் அனைவரும் உறவினர்; ஒரு குலத்தினர். அயல்வழக்கு எண்ணத் தொலையாத சாதிகளைப் புகுத்தித் தமிழினத்தை உருக்குலையச் செய்து ஊடழித்தது.

*"ஒன்றே அல்லால் குலமில்லை*
*ஒருவ னல்லால் தெய்வமில்லை*
*என்றதோர் தமிழரின் சொல்லை*
*மறந்ததால் அல்லவா வந்ததித் தொல்லை"*

(தேனருவி–பக்.24)

என்ற பாவேந்தனின் பாடல்கள் கவனத்துடன் படிக்கத் தக்கன. இன்றும் தமிழகத்தைப் பல தெய்வ வழிபாடும் மூடத்தனமான சடங்குகளும் அலைக்கழிவு செய்து கொண்டுதான் உள்ளன. அயல் வழக்கின் பிடியிலிருந்து தமிழ் வழக்கை மீட்க வேண்டும்! இதுவே நமது கடமை!

சிந்தனையில் தெளிவையும் சொல்லில் உறுதியையும் செயலில் செம்மையையும் அளிப்பதற்குத் தமிழ் உண்டு; தமிழ் மக்களுண்டு. நாளும் தமிழுக்குத் தொண்டு செய்வோம்! தமிழ் மக்களுக்குத் தொண்டு செய்வோம்! இதுவே இன்று பாவேந்தன் அடிச்சுவட்டில் செய்ய வேண்டிய கடமை!

இன்பத் தமிழுக்குத் தொண்டு செய்வோம் என்பதை இன்றையத் தமிழரின் குறிக்கோளாகவும் தமிழர் வாழ்வாகவும் அமைத்துக்கொள்வதே பாவேந்தருக்குச் செய்யும் நன்றி! கடப்பாடு!

பாவேந்தன் ஒரு இயற்கைக் கவிஞன்; பிறவிக் கவிஞன். தமிழும் தமிழரும் நாளும் வளரப் பாடிய கவிஞன்! பாவேந்தன் புகழ் வாழ்க! வளர்க! பாவேந்தன் அடிச்சுவட்டில் துறைதோறும் தமிழை வளர்ப்போம்! வாழ்வோம்!

**17**

# அண்ணாவும் இலக்கியப் படைப்பும்

இந்திய நாட்டு வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டு பொற்காலமாகும். இந்த நாடு விடுதலை பெற்றதும் இந்த நூற்றாண்டே! இணையற்ற மனித குலச் சிற்பிகளான அமரர் அண்ணல் காந்தியடிகளும் அமரர் நேருஜியும் வாழ்ந்தது இந்த நூற்றாண்டேயாம்.

தலைமுறை தலைமுறையாக வளர்ந்து வரும் நம்முடைய நாட்டுக்கு அண்ணல் காந்தியடிகளும், அமரர் நேருஜியும் ஒருருவம் கொண்டாற்போல திகழ்ந்த ஈடு இணையற்றவராக விளங்கும் அருமை அண்ணா தோன்றியதும் இந்த நூற்றாண்டேயாம்.

இந்த நாட்டு வரலாற்றில் அறிஞர் அண்ணா ஒரு மையம்; ஒரு திருப்பு முனை, அவர் ஒரு புதிய தலைமுறையைத் தோற்றுவித்து இருக்கிறார். அவர் கண்ட தலைமுறை - தம்பியருலகு - தமிழுலகு இணையற்ற உலகு; அன்பில் விளைந்த உலகு; ஆர்வம் நிறைந்த உலகு; நண்பென்னும் நாடாச் சிறப்பு நிறைந்து நிலவும் உலகு. இத் தலைமுறை தாழாது உயர்வதாக! தமிழுலகு சிறப்பதாக!

அறிஞர் அண்ணா இயல்பிலேயே சிந்தனையாளர்; நுண்மாண் நுழைபுலம் மிக்கவர். மணம் வீசும் மலர்; தமிழர்

தலைவர் தந்தை பெரியாரின் பாசறையில் புடம் போடப் பட்டவர். அதனால் அந்த மலர் பொன் மலராயிற்று.

பொன் மலரில் புதுமை மணமும் பொதுமை மணமும் கமழ்ந்து வீசுகிறது. உலகியல் முறைப்படி தந்தையினும் தனயன் சிறந்து விளங்குகிறார்; தந்தைக்குப் பெரு மகிழ்வு ஊட்டுகிறார்; பொது மக்களின் புகழ்மாலையை வாங்கிச் சூடுகிறார்.

அறிஞர் அண்ணா புதுமையில் வேணவா உடையவர். ஆயினும் பழைமையை வெறுப்பவரல்லர். இங்ஙனம் கூறுவது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறதா? அண்ணாதுரைக்கா பழைமையில் வெறுப்பில்லை! இது புனைந்துரை! பொய்! என்று கருதுகிறீர்களா? நீங்கள் அப்படிக் கருதுவதில் தவறில்லை. ஏன்? இந்த நாட்டிலேயே பலர் அப்படித்தான் கருதுகின்றனர்.

ஆனால் நாம் கூறுவது உண்மை! சத்தியம்! வெறும் புகழ்ச்சியில்லை! அவர் பழைமையின் வெறுப்பாளர் அல்லர். ஆனால், உதவாப் பழைமைகளை ஒதுக்குகிறார்; நம்மையும் ஒதுக்கத் தூண்டுகிறார். உடைந்த பானையை, கிழிந்த பாயை, உயிரற்ற பிணத்தை யார்தான் பேணுவர்? அவை பயன்படா. அவற்றை ஒதுக்குவதே வாழ்க்கைக்குச் சிறப்பு.

அதுபோலவே நமது வாழ்க்கையின் வளத்திற்கும் ஏற்றத்திற்கும் பயன்படாத பழைமையை ஒதுக்குகிறார். “இறந்தது விலக்கல்” ஆன்றோர் மரபுதானே!

புலவர்கள் போற்றும் புறநானூறு, கற்றவர்கள் போற்றும் கலித்தொகை, வையகம் போற்றும் வள்ளுவன் தந்த திருக்குறள் முதலியன இன்று தோன்றியனவா? நேற்று தோன்றியனவா? பல நூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய பழைமையான நூல்கள் அல்லவா? அந்த நூல்களை அறிஞர் அண்ணா பாராட்டவில்லையா? இந்த வகையில் தந்தைக்கும் தனயனுக்கும்கூட முரண்பாடில்லையா?

தமிழனத்தை, தமிழ் சமுதாயத்தை வளர்த்து வாழவைக்கும் எந்த ஒரு கருத்தையும் அது எப்பொழுது தோன்றியதாயினும், எங்கே பிறந்ததாயினும் எதன் பெயரில் பிறந்ததாயினும் அறிஞர் அண்ணா தாராளமாக ஏற்றுக் கொள்கிறார்.

நம்முடைய சமுதாயத்துக்குத் துணை செய்யாததும், துணை செய்யாததோடு மட்டுமன்றி, ஊரும் கறையான் மரத்தை அரிப்பது போலவும், என்புருக்கி போலவும் நம்முடைய சமுதாய முன்னேற்றத்துக்குத் தடையாக உள்ள எந்த ஒரு கருத்தையும் காலம், களம், இடம் பாராமல் உறுதியுடன் எதிர்க்கின்றார்.

சமூக அநீதிகளோடு அவர் சமரசம் செய்துகொள்ள விரும்பாதவர். ஆதலால் வாழ்க்கைக்கு உதவாத பழமைக்கு, அவர் பகைவரேயாம். வாழ்க்கையை அறிவாலும் ஆர்வத் தாலும் திறனறிந்த உழைப்பாலும் தூண்டி வளர்க்கும் எந்த ஒரு கருத்துக்கும் அறிஞர் அண்ணா ஒரு கொழு கொம்பாவார்.

அறிஞர் அண்ணா ஒரு சிந்தனையாளர்; சொற்பொழி வாளர்; எழுத்தாளர்; செயல் தொண்டர். அவருடைய இலக்கியப் படைப்பு மரத்துப்போன பழைமைக்குக் கல்லறையாகும்; பூத்து வரும் புதுமைக்குப் பூங்காவாகும்.

அவர் இலக்கியத் துறையிலும் சாதாரண மக்கள் பக்கத்திலேயே நின்றார். அவர் காப்பியங்கள் செய்யவில்லை; தோத்திரங்கள் செய்யவில்லை; துதி நூல்கள் செய்யவில்லை.

எளிய நடையில் அன்றாடப் பிரச்சனைகளை எழுதுகிறார்; கதையாக எழுதுகிறார்; கடிதமாக எழுதுகிறார்; கட்டுரையாக எழுதுகிறார்.

அண்ணாவின் படைப்பில் அன்றாடப் பிரச்சனை தானா? அன்றாடம் என்பது தனித்து நிற்பதில்லையே! அன்றாடத்திலேயே நேற்றும் உண்டு. நாளையும் உண்டு. அவர் தம் மனோ நிகழ்ச்சிகளை – அதாவது நேற்று, இன்று

பலாபலன்களை, மனப் போராட்டத்தைக் 'குமாஸ்தாவின் பெண்' என்ற கதையில் காந்தா என்னும் பாத்திரத்தில் காண முடிகிறது.

அறிஞர் அண்ணாவின் படைப்புக்கள் பக்கங்கள் நிறைந்த புத்தகங்களாக வரவில்லை. பக்கம் பக்கமாக எழுதி, படிப்பவர்களுக்கு அலுப்பை உண்டாக்காமல், சுருக்க மாகவும் நேரிடையாகவும் எடுத்துக்கொண்ட கருத்துக் களைச் சொல்லும் கதை நூல்கள் அருமையேயாகும். அதை அண்ணாவின் கதைகளில் காணலாம்.

அறிஞர் அண்ணா, உலகம் மிகச் சிறந்த பல்கலைக் கழகம் என்ற மூத்த கருத்தின் முதல்வராகத் திகழ்கின்றார். அவர் நிறைய உலகத்திலிருந்து படித்துக் கொள்கிறார். நம்மையும் படிக்கத் தூண்டுகிறார். 'குமாஸ்தாவின் பெண்'ணில் இராகவன் மூலம் 'உலகத்தைவிட உன்னதமான புத்தகம் இருக்கிறதா?' என்று நம்மைக் கேட்கிறார்.

அண்ணா அவர்கள் சமூகத்தின் மனப் போக்குகளை ஓரளவு தெளிவாகவே புரிந்து கொண்டிருக்கிறார் "சமூகத் தினர் கடலின் ஆழத்தைக் கண்டுபிடிக்க விரும்புவதில்லை; அலைகளையே எண்ணி அலமருகின்றனர்; நெஞ்சினோடு நெஞ்சு உற்று நோக்கும் உணர்வின்றி முலாம் பூசிய முகத்தோடு மோதுகின்றனர்.

மனித சமூகத்தை ஏமாற்றி விடுவதென்பது கெட்டிக் காரத்தனமான காரியமல்ல. ஏனெனில் அவர்கள் எளிதில் ஏமாறக்கூடியவர்களாக இருக்கிறார்கள். உயர்வுக்குப் பயன் படாத உதட்டில், உலாவும் இரக்க உணர்ச்சிகளே உள்ளன.

கண்டும் கேட்டும் போடும் பிச்சைகளில் மகிழும் மக்கள் மனப்போக்கு மாறாத வரையில் சமூகத்தில் நிலையான வளமான பொருளாதாரப் புரட்சியைத் தோற்று விக்க முடியுமா?" என்று பார்வதி பி.ஏ.யின் மூலம், நம்மைக் கேட்கிறார்.

கு.VI.27.

"ஆடம்பரத்திலும் வெளி வேஷத்திலும் இவ்வளவு சுலபத்திலே ஏமாந்து போகும் இந்த மக்களைக் கொண்டு எப்படி சமூகப் பொருளாதாரப் புரட்சியை உண்டாக்க முடியும்?" என்று பார்வதி ஏக்கம் கொண்டாள்.

சமூகத்தில் பல வேடிக்கை மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தொழில் இல்லை. அவர்களுடைய வயிறு வளர்வது பலருடைய அறியாமையிலேயே. ஆனாலும் ஆர்ப்பாட்டத்திற்கு பஞ்சமில்லை. அவர்கள் மரியாதைக்கு மரியாதை தரமாட்டார்கள். அவர்கள் மரியாதைக்கு மிரட்டையும், மிரட்டுக்கு மரியாதையும் தருவார்கள்.

ஐயோ, பாவம்! இப்படி நாம் அன்றாடம் பலரைச் சந்திக்கிறோம். இத்தகையவர்களைச் சந்தித்தவுடன், அண்ணாவின் படைப்பாகிய 'பெங்களூர் அம்பக் ஆறுமுகம்' இவர்தானோ என்று கருதும்படி இருக்கிறது. அவ்வளவு அற்புதமாகச் சித்தரிக்கிறார்.

சென்ற பல நூற்றாண்டுகளைவிட இந்த நூற்றாண்டு பெருமையும் புகழும் பெற வேண்டுமென்ற வேட்கை மலிந்து வளர்ந்துள்ள காலம். பலர் பஞ்சாங்கம் பார்ப்பதை மறந்து விட்டனர்.

ஆனால், பத்திரிகைகளில் பெயர் வருகிறதா? என்று பார்க்கத் தொடங்கி விட்டனர். வரவில்லையானால் ஏக்கம்! பெருமூச்சு! அத்தகையவர்களுக்கு 'பெங்களூர் அம்பக் ஆறுமுகம்' போன்றவர்களின் விளம்பர கமிஷன் ஏஜெண்டு களின் மாநாடுகள் கூடுகின்றன.

யார் பெயரால்? தொழிலாளர்களின் பெயரால்! கூடுவது யார்? மச்சு வீட்டுக்காரர்கள்! பேசுவது யார்? "எல்லோருக்கும் கஷ்டமிருக்கிறது; சகித்துக் கொள்ளுங்கள்" என்று புது கார் வாங்க முடியாததை பிலாக்கணமாகப் பாடும் செல்வர்கள்!

இவர்களுக்குத் தாராளமாக 'அம்பக் ஆறுமுகம்' ான்பவர் 'இரட்சகன்' என்ற பட்டத்தை வாரி வழங்குகிறார்.

ஆமாம், அவர் பிழைப்பு ஓடுகிறதல்லவா? அவர் வரையில் இரட்சகன்தானே!

இத்தகைய போலி விளம்பரப் போக்குகளைப் பார்வதி பி.ஏ.யில் அண்ணா சித்தரிப்பதைப் பார்த்தால் வயிறு குலுங்கச் சிரிக்க வேண்டியதிருக்கிறது. விரசமில்லாமல் இத்தகு வேடிக்கை மனப்போக்குகளைச் சித்தரிப்பதில் அண்ணா வல்லவராக விளங்குகிறார்.

இனம், இனத்தைச் சாரும். போலி மனிதர்கள் போலி மனிதர்களையே சார்வார்கள். இது ஆச்சரியப் படத் தக்கதல்ல. இருவருக்கும் வியாபாரம் 'புளுகு' தானே! ஒருவர் செல்வத்தோடு, 'புளுகு' வியாபாரம் செய்கிறார்; புகழ் வேட்டையாடுகிறார்.

இவர் அண்ணாவின் படைப்பாகிய ஆலாலசுந்தரர். பிறிதொருவர் ஆலால சுந்தரரின் வாரிசாகத் துடிக்கும் பார்த்திபன். ஆலால சுந்தரர், பழைய மாதிரி மோசடிக் காரர்; பார்த்திபன் நவீன மாதிரி மோசடிக்காரர். காரணம் இவர் ஒரு பத்திரிகை ஆசிரியரும் கூட. பத்திரிகை ஆசிரியர் மட்டுமா? சொற்பொழிவாளர்; கலா ரசிகர்; நவீன ஆயுதங்களைக் கையாளுபவர்.

இவர்களுக்கு பெங்களூர் அம்பக் ஆறுமுகத்தைப் போன்றவர்கள் தானே உறவாக முடியும்! அம்பக் ஆறுமுகமோ வெறும் வாயால், படி, படியாக அளப்பவர்; விளம்பரப் பிரியர்; ஆனால் கொஞ்சம் யோக்கியர்; பிறருக்கு விளம்பரம் செய்து தனக்கும் விளம்பரம் தேடுபவர். இவர்களின் கூட்டுறவை அண்ணா சிரிக்கச் சிரிக்கப் படைத்திருக்கிறார்.

அழகான உவமை ஒன்றும் எடுத்துக்காட்டுகிறார். "சேற்றிலே தானே தவளை இருக்கும்! தவளைக்கும் சேறுதானே கிடைக்கும்! அது போலத்தான் அம்பக் ஆறு முகத்துக்கு ஏற்ற ஆள்தான் பார்த்திபன், பார்த்திபனுக்கு ஏற்ற

ஆள்தான் ஆறுமுகம்" என்று எழுதிச் சிரிக்க வைக்கிறார்; சிந்தனை செய்யத் தூண்டுகிறார். இச்சையுணர்ச்சிகளுக்கு ஏற்ற சேர்க்கையைத் தேடாமல் உயர்வு பொருந்திய - வளர்ச்சிக்குரிய சேர்க்கையை நாடிச் செல்ல வழி நடத்துகிறார்.

சமூகத்தின் வளர்ச்சிக்காகப் பல உயர்ந்த கருத்துக் களைப் பலர் தந்திருந்தாலும் அவை முறையாக வளர வில்லை,. செயல்படுத்தப் பெறவில்லை என்று அண்ணா கருதுகிறார். புராணங்களே ஆனாலும் அவற்றிலுள்ள கருத்துக்கள் பல நாளாவட்டத்திலே பொது அறிவு பரவப் பரவ மறைந்து விடுவதாகவும், சில மறைக்கப்பட்டு விடுவதாகவும் கூறி, சில கருத்துக்கள் உரம் குறையாமல் உள்ளன, ஏன்? என்றும் கேட்கிறார்.

இவற்றிற்குச் சிலர் உரம் தருகிறார்கள் என்று கூறி ஏனென்றும் காரணம் காட்டுகிறார். அப்படி உரமிட்டு வளர்க்கப்படும் கருத்துக்கள் எவை என்றும் எடுத்துக் காட்டுகிறார்.

ஒரு சிறு கூட்டத்தின் சுகபோக வாழ்க்கைக்கு வழி செய்கின்றனவும், ஆடாமல் அசையாமல், ஓடாமல் உழைக் காமல் எக் கவலையுமின்றி வாழ வழி வகுக்கின்றனவும் ஆகிய கருத்துக்களை எந்தப் புதுமையும் தாக்காமல், வளரும் காலத்தினாலும் மாற்ற முடியாமல் அவை இம்மியும் கெடாதபடி ஓயாது உழைத்து கண்ணும் கருத்துமாக இருந்து பாதுகாத்துக் கொள்கின்றனர்.

நல்லூழ் இன்மையின் காரணமாக, பிரச்சார எந்திரமும் இந்தச் சிறு கூட்டத்தினரின் ஏகபோக இயக்கமாக இருக்கிறது என்று எடுத்துக்காட்டியுள்ளார்.

இந்தக் கூற்றுக்களின்படி புராணங்களின் மீது நேரிடையாக அண்ணாவுக்கு வெறுப்பில்லை யென்பதையும், அவை காலத்திற்குக் காலம் சமூக வளர்ச்சிக்குத் துணை

செய்யாமல், சமூக அநீதிகளுக்கு அரண் செய்து இருப்பதால், அவற்றை எதிர்க்க வேண்டிய அவசியத்தில் அண்ணா இருக்க வேண்டியதிருக்கிறது என்று உணர முடிகிறது,. இதை, “புராண மதங்கள்” என்ற புத்தகத்தை ஆழப் படித்தால் தெளிவாக உணர முடியும்.

இந்திய சமூகத்தில் குறிப்பாக இந்து சமய சமூகத்தில் மண்டிக் கிடக்கும் ஜாதீய மனப் போக்குகளுக்கு அறிஞர் அண்ணா ஒரு சவுக்கு; ஒரு வெடிகுண்டு. அவர் உண்மை யிலேயே ஜாதிக் கொடுமைகளை எண்ணும்பொழுது கொதிப்படைகிறார்; குமுறுகிறார் என்பதை அவருடைய கதா பாத்திரங்கள் மூலம் உணர முடிகிறது.

ஜாதியில் கீழ் ஜாதியாகவும், பணத்தில் ஏழையாகவும் மனிதன் இருந்துவிட்டால், அவனுடைய சிறு தவறு களுக்கும் கூட ஏச்சும் கண்டனமும் கிடைக்கின்றன. ஏன்? முடிந்தால் தண்டனைகளும் கூடக் கிடைக்கின்றன.

ஆனால் ஜாதியால் உயர்ந்தவனோ, பணத்தால் உயர்ந்தவனோ பழிபாவங்களும் படுகொலையும் செய்தாலும் கூட சமூகம் மூடி மறைக்கிறது; பாராட்டியும் பேசுகிறது. ஏழைகள் பால் - கீழ் ஜாதியினர் பால் இரக்கம் என்று ஒன்றுகூட காட்ட மாட்டார்களென்று ஜாதிக் கொடுமைக்கு ஆளான உத்தமியைப் பார்வதி தேற்றுமிடம் நினைந்து நினைந்து உருகத் தக்கதாக அமைந்திருக்கிறது.

உயர் ஜாதிக்காரர்கள், கீழ் ஜாதியை முற்றிலும் ஒதுக்கினாலும் பரவாயில்லை. தேவைப்படும்பொழுது இச்சிக்கிறார்கள். சுவைத்து அனுபவிக்கிறார்கள்! எச்சில் ஆக்குகிறார்கள். பலியான பிறகு உயர் ஜாதித் துடுக்கை காட்டி ஒதுங்கிக் கொள்ளும் கொடுமையை அண்ணா நாடி நரம்புகளும் இரத்தமும் கொதிக்கும்படி கண்டிக்கிறார்.

“பழி வருகிறதே என்று பதறித் துடித்துக் கேட்டால் சுவைத்து அனுபவித்த பிறகு மதம் காட்டுகிறான். மதம் மாற

உடன்பட்டால், மாறி வந்தால் முன்னுள்ள கீழ் ஜாதியிலேயே சேர வேண்டுமாம்! இது என்ன நியாயமோ? இந்த அநீதியை தில்லை நடராஜனும், சீரங்க நாதனும் தாங்கிக் கொண்டிருப்பது எதனாலோ நமக்குப் புரியவில்லை" என்று கனல் கக்கக் கண்டிக்கிறார்.

'பார்வதி, பி.ஏ.'யில் இடுக்கண் உற்ற நிலையிலும் கூட, தன்னைக் காப்பாற்றிக் கொள்ளக் கூட ஒரு தமிழ்க் குழந்தையை - ஜாதி, இனம், மொழி, எண்ணம் படியாத பச்சைக் குழந்தையை ஏற்று வளர்க்க பெங்களூர் பார்ப்பனச் சேரி ஆண்டாள் அம்மாளுக்கு மனம் துணியாத ஜாதி வெறியை அண்ணா சுவையாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

தமிழ்க் குழந்தையை வளர்ப்பது பாவமாகவும், பொய் சொல்லிக் கணவனை ஏமாற்றுவது புண்ணியமாகவும் தெரிகிறது. அந்தப் புண்ணியவதிக்கு, "சூத்திரர் வீட்டுக் குழந்தையை என் குழந்தேன்னு கூறி எங்க ஆத்திலே வளக்கிறது மகா பாவ காரியம்னு நேக்கு பயமாயிடுத்து, அதுக்காகத்தான் அவரிடம் சொப்பனம்னு கதை சொன்னேன்" என்று ஆண்டாளைப் பேச வைத்து ஜாதி அமைப்பின் இறுகிய நிலையைப் புலப்படுத்துகிறார்.

"உயர் ஜாதிக் குடியினரும் சிறப்பாக சமரச ஞானம் பேசுவார்கள். அதில் கைதேர்ந்தவர்கள் அவர்கள். ஆனால், எல்லாம் பேச்சளவில்தான். செயலில் இம்மியும் இல்லை. காரணம், இந்த பாகுபாட்டு முறைகள்தான் சிலரை வாழ்விக்கிறது அதை எப்படி இழப்பார்கள்?', என்று கேட்கிறார்.

அண்ணா சமுதாயத்தில் நிலவும் ஜாதி வேறுபாட்டு முறைகளை மாற்றியமைக்க விரும்புகிறார். ஆனால், பொருளியல் சமத்துவ சமநிலைச் சமுதாயம் அமையாத வரை ஜாதி வேறுபாடுகளை முற்றிலும் நீக்க முடியாது என்பதையும் உணர்கிறார்.

ஆதலால் அவர் தமது இணையற்ற இலட்சியமாக சமதர்ம சமுதாய அமைப்பை ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதை அவருடைய படைப்புகள் தெளிவாகப் பேசு கின்றன.

மனித சுபாவம் என்பது இயற்கையுமில்லை; தெய்வமு மல்ல. அது சூழ்நிலையால் உருவாகி வளர்வதேயாகும். இதனைத் திருவள்ளுவரும் 'இனத்துள்ளதாகும் அறிவு' என்றார்.

குமாரைப்பற்றி அவன் ஏழை – அவன் நிதியை எடுத்து ஏப்பம் விட்டுவிடுவான் என்றும், அது ஏழைகள் சுபாவம் என்றும் செல்வச் சீமான் பார்த்தீபன் சொல்லுகின்றான். அறிஞர் அண்ணா தமது அருமையான படைப்பாகிய பார்வதியின் மூலம் உயிரோட்டமுள்ள உணர்வுடன், குபேரபுரியின் வாதத்தை எதிர்த்து, வாதாடுகிறார்.

"அந்தச் சுபாவம, பணக்காரத் தன்மை ஒருபுறமும் வறுமை மற்றோர் புறமும் இருப்பதால்தான் உண்டாகும் பனியிலே குளிருண்டாகும். வெய்யில் உடல் எரிச்சலைத் தருகிறது. வறுமையும் அப்படித்தான். அதை அனுபவிப்பவர் களுக்கு வேதனையூட்டி அவர்களின் சுபாவத்தை மாற்றுகிறது.

தர்ம பிரபுக்கள் என்று சிலரும், தரித்திர பூச்சிகள் என்று பலரும் இருக்கும் வரையில் சுபாவமும் அந்தப் பொருளாதார நிலைக்கு ஏற்றபடிதான் அமையும். அது குமாரின் குற்றமல்ல. மேலும் குமாரின் சமதர்ம பற்று ஆழமானது" என்று வழக்காடுகிறாள் பார்வதி.

அண்ணாவின் படைப்பில் உத்தமி மிதவாதப் போக்குடையவள். அவள் விதியை நொந்து கொள்கிறாள். அவள் உலகத்தின் போக்குக் கண்டு சமாதானம் செய்து கொள்கிறாள். "மழை பெய்யும் போது ஊருக்கெல்லாம்

குடை பிடிக்க முடியுமா?" என்று அறியாமையின் வடிவமாக – ஆனால் வாதத் திறமை போலப் பேசுகிறாள்.

ஆனால், பார்வதியின் வாயிலாக அறிஞர் அண்ணா பேசுகிறார்; சமதர்மத்துக்காக வழக்காடுகிறார்; வாதாடு கிறார், "மானைத் தின்று புலி கொழுப்பது போல் ஏழையின் உழைப்பை உறிஞ்சி முதலாளி கொழுக்கிறது யாருக்குத் தெரியும்? ஈவு இரக்கம் தயவு தாட்சண்யம் என்பவைகளைப் படுபாதாளத்திலே போட்டு விடுபவர்கள்தான் நாலடுக்கு, ஐந்தடுக்கு மாளிகையிலே உலாவுகிறார்கள்.

நமக்கு என்ன என்றிருக்க இந்த உண்மையை உணர்ந்த பிறகு மனம் எப்படி இடம் கொடுக்கும். தொட்டிலிலே தூங்கும் பாலகனை, கொட்டிடத் தேள் போனால், தேளை அடிக்காதிருப்பது நியாயமா?" என்று பார்வதியின் மூலம் நியாயம் கோருகிறார், குபேர உலகத்தைச் சார்ந்த மனிதர் களைப் பார்த்து அறிஞர் அண்ணா!

அரசியல் வானில் காரல்மார்க்ஸின் சிந்தனையும், வள்ளுவத்தின் சிந்தனையும் பிரஞ்சு புரட்சியும், சமதர்மச் சிந்தனையைத் தூண்டி விட்டிருக்கின்றன. இன்று எங்கும் அந்தப் பேச்சு! செல்வச் சீமான்களும் சமரசம், சன்மார்க்கம், சமதர்மம் இவைபற்றி ஓயாது பேசுகின்றனர். இஃது உண்மையான ஆர்வமா? இல்லை என்றார் அறிஞர் அண்ணா.

சில சொற்களால் இதைக் கேலி செய்கிறார். "சீமானின் சமதர்மப் பிரச்சாரம் ஓய்வு நேர உல்லாசம்" என்கிறார். அதே நேரத்தில் ஏழைகளைப் பார்த்து எச்சரிக்கை செய்கிறார். அவர் எச்சரிக்கை சமதர்மம் ஒன்றே ஏழைகளின் வாழ்க்கைத் தோணி" என்பதாகும்.

புதுதில்லியில் 1947–ல் அண்ணல் காந்தியடிகள் ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தில் சமூகத்தைப் பிடித்திருக்கின்ற ரோகத்தைப் பற்றிப் பேசினார். அதே கருத்தை அறிஞர்

அண்ணா அவர்கள் லாவகமாகப் பிரதிபலிப்பதைப் பார்க்கிறோம். "செல்வம் சமூகத்தில் சிலரிடத்தே குவிவது காசநோய் போன்றது. காச நோய் பரவிய உடல் இளைக்கத்தானே செய்யும்?" என்று வினாவை எழுப்புகிறார்.

அமரர் நேருஜி "எல்லோருக்கும் ஒரு வாக்கு" என்பதினாலேயே பூரண மக்களாட்சியும் சமதர்ம சமுதாயமும், சமூக ஒருமைப்பாடுடைய சமுதாயமும் அமைந்துவிடாது" என்று தெளிவாகக் கூறியுள்ளார். அறிஞர் அண்ணாவும் இந்தக் கருத்தில் தெளிவாகவே இருக்கிறார்; உறுதியாகவும் இருக்கிறார்.

அதனால்தான் போலும் அவர் கட்சி, நிறைய நன்கொடைகள் வாங்கவில்லை. "குடியரசு முறையையும் வைத்துக்கொண்டு சமூகத்திலேயும், தொழில் உலகிலேயும் ஆதிக்கக்காரர்களுக்குப் பிடி இருக்கும்படியும் அனுமதித்து விட்டால் புத்தியுள்ள ஒரு மன்னனே கூட குடியரசுக் கோட்பாடு பேசும் அமைச்சர்களை ஆட்டிப் படைக்க முடியும்" என்று இரண்டுபட்ட கருத்துக்கு இடமின்றி "எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்ற நூலில் எழுதியுள்ளார்.

அறிஞர் அண்ணா கசப்பு மருந்தைக் கருப்பட்டியுடன் கலந்து கொடுப்பதைப் போல தனது சீர்திருத்தக் கருத்துக்களை நகைச்சுவையுடன் கலந்து படைத்துக் காட்டுகிறார். பெண்கள் முன்னேற்றத்தில் அறிஞர் அண்ணாவுக்குத் தனி ஈடுபாடு உண்டு.

'ரோமாபுரி ராணிகள்' என்ற அறிஞர் அண்ணாவின் படைப்பு விரச உணர்ச்சிகள் நிறைந்தது என்ற கருத்து உண்டு. அது உண்மையும் கூட. ஓர் எதார்த்த நிலைமையை எடுத்துக்காட்ட வேண்டிய அவசியம் ஏற்படும் பொழுது எழுத்தாளன் நிர்ப்பந்தத்துக்கு ஆளாகிறான்.

அறிஞர் அண்ணாவின் நிலைமையும் இதுவே என்று கருதுகிறோம். ஆயினும் தனது படைப்புத் திறனில் படிப்படியாக வளர்ந்து வந்துள்ளார். இந்த வித்தியாசத்தை "ரோமாபுரி ராணி" யைப் படிப்பவர்களும் "பார்வதி, பி.ஏ"யைப் படிப்பவர்களும் தெளிவாக உணர முடியும்.

முன்னையதைப் படைக்கும் காலத்தில் அவர், தீமையை மட்டும் கண்டு தீமையை மட்டும் விமர்சித்து அழிக்கும் முகாமில் இருந்தார். பின்னர் அவர் தீமையை அழிப்பதோடன்றி நன்மையை உருவாக்க வேண்டுமென்ற கருத்தில் ஈடுபட்டார்.

இந்த வளர்ச்சி மனப்போக்கை 'பார்வதி, பி.ஏ.' என்ற கதையில் நாம் தெளிவாகக் காண்கிறோம். 'பார்வதி, பி.ஏ'யில் விரச உணர்ச்சியே இல்லை. அறிவு உணர்வுகளே தலைதூக்கி நிற்கின்றன. சமூகப் போராட்டங்களே வேரூன்றி உள்ளன. இஃது அவருடைய தலையாய படைப்பு. தமிழர்கள் தவறாது படிக்க வேண்டிய படைப்பு.

"ரோமாபுரி ராணிகள்" படைப்பிலும் மிகச் சிறந்த இனிய தத்துவங்களை எடுத்துக்காட்டத் தவறிவிடவில்லை. நோயை மட்டும் எடுத்துக் காட்டவில்லை. மருந்தையும் எடுத்துக் காட்டியுள்ளார். ஆனால் வெறுப்பு என்ற நோய் பிடித்த விமர்சகர்கள் அவர் மருந்தைக் கண்டு காட்டியதை எடுத்துக்காட்டத் தவறி விட்டார்கள்.

"பெண்களுக்குச் சரியான சமத்துவமும், சுதந்திரமும் வாய்ப்பும், வசதியும் கிடைக்கும் வரை அவர்களுடைய அழகு ஆபத்தாகவே முடிகிறது. ஆனாலும் ஏழை அபலைகளாக இருக்கிற பெண்கள் இந்த ஆயுதத்தை உபயோகிப்பதைத் தவிர வேறு வழியில்லாமல் தவிக்கின் றார்கள்" என்று எழுதிக் காட்டியுள்ளார்.

'ரோமாபுரி ராணி'களில், பெண்களைச் சம உரிமை யுடன் கருதாமல் இன்பத்துக்குரிய எண்ணரிய பொருள்

களோடு கருவி போலக் கருதுகிற மனப்போக்கை அண்ணா, பார்வதி, பி.ஏ.யில் இடித்துரைக்கின்றார்.

அறிஞர் அண்ணா சமயத்துறையில் புரியாத புதிராக இருக்கிறார். இறைவனைப் போலவே அவரும் கேள்விக் குறியாகவே திகழ்கிறார். இறைவனை எப்படி "இப்படியன் இவ் வண்ணத்தன்" என்று எழுதிக்காட்ட முடியாது என்று சொன்னார்களோ, அது போலவே அறிஞர் அண்ணாவும் விளங்குகிறார்.

இஃது ஒரு பொதுவான உண்மையே. ஆனால் உண்மை அப்படியல்ல. அண்மைக் காலமாக அவர் அதனைத் தெளிவாக வெளிப்படுத்தி வருகிறார். "சமயம் வேண்டுமா, வேண்டாமா என்பது அல்ல எங்கள் கேள்வி. அது எப்படியிருக்க வேண்டும் என்பதே எங்கள் கேள்வி" என்று உரத்த குரலில் கூறி வருகிறார்.

அண்மைக் காலமாக என்பதால் வாக்குகளுக்காகவும் ஆட்சிக்காகவும் என்று சிலர் கருதக்கூடும். இது அல்ல. பல ஆண்டுகளுக்கு முன் அவர் எழுதிய 'புராண - மதங்கள்' என்ற புத்தகத்தை உய்த்துணர்ந்து படிப்பவர்கள் இதனை உணர முடியும். புத்தரைப் பற்றி பார்வதி, பி.ஏ.'யில் குறிப்பிடும் இடத்தில் அடியிற் கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"இன்பத்தை மதிக்க மறுத்ததுடன் போகப்படுகுழியின் இலாபச் சுழலும் தாம் செல்லும் வழியிலே காணப்பட்ட காலை அவைகளிலே இடறி விழாமல் இன்பம் - நிரந்தர இன்பம் - துன்பத்துடன் பிணைத்திருக்கும் இன்பமல்ல - இணையற்ற - எல்லையற்ற - இன்பம் எது? எங்கேயிருக் கிறது? எங்ஙனம் பெற முடியும்? என்று கண்டுபிடிப்பதிலே காலத்தைச் செலவிட்டார்." என்று எழுதியுள்ள பகுதிகள் தெளிந்த சமயத் தத்துவத்தை விளக்குவனவாகவில்லையா? "ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே என்னுடை அன்பே" என்ற மணிவாசகரின் வாக்கு இதனை நமக்கு நினைவுக்குக் கொண்டு வரவில்லையா?

நாத்திகம் என்ற தத்துவம் இயல்பிலேயே இல்லை. அதை ஆத்தீக உலகமே உருவாக்கியது என்பது அறிஞர் அண்ணாவின் கருத்து. இந்தக் கருத்தினை "குமாஸ்தாவின் பெண்" என்ற கதையில் சீமானாகிய சோமுவுக்கும் ஏழை யாகிய இராகவனுக்கும் நிகழும் உரையாடலில் சித்தரித்துக் காட்டுகிறார். அந்தப் பகுதியை அப்படியே தருகிறோம். படித்துப் பாருங்கள்.

*இராகவன்: உம்மை இலட்சாதிபதியாக வைத்திருப்பது அவன் செயல். என்னைப் பிட்சாதிகாரியாக வைத்திருப்பதும் அவன் செயல்; மிக நல்லவன்!*

*சோமு: இராகவா, நீ நாத்திகம் பேசுகிறாய், நாக்கு கூசவில்லையா?*

எங்கே நாத்திகம் காட்டுகிறது? மீண்டும் ஒருமுறை சிந்தித்துப் பாருங்கள்! இந்தப் பார்வையில் தான் காரல் மார்க்ஸும் நாத்திகரானார். தலைவர் பெரியாரும் நாத்திக ரானார். அறிஞர் அண்ணாவும் நாத்திகரானார். சமய நம்பிக்கை உடையவர்கள் அருள்கூர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கடவுளை நம்புகிற துணிவைவிட, கடவுள் தத்து வத்தைச் செயல்படுத்தி எல்லோரும் இன்புற்று வாழ வழிவகை செய்யவேண்டும். அதைச் செய்யத் தவறினால் மன்பதைக்கும், மன்பதையின் மன சாட்சியாகிய கடவுளுக்கும் போலி ஆத்திகர்கள் பகைவர்கள் ஆவார்கள்.

நாத்திக உலகம் நலவிருந்தாகிவிடும். உத்தரவாதம் ஏது? அண்ணாவின் கருத்து "மடாதிபதிகள் மடத்தை ஆள்வதைக் காண்கிறோம். மக்களிடை ஆள்வதில்லை; மக்களிடை வருவதுமில்லை" என்பது. இதனை மனச் சாட்சியுடையோர் மறுக்கமாட்டார்கள். காலத்தின் தேவையை அறிந்த அறிவுடைய பெருமக்கள் மறுக்க மாட்டார்கள்.

ஏன்? உண்மையான அருளாளர்களும் மறுக்க மாட்டார்கள். உறுதியான சிந்தனை, உலகத்தில் நடை முறைக்கு வந்தே தீரும்; மாறுதலை ஏற்படுத்தியே தீரும். இது

மக்கள் மன்றத்தின் சென்ற காலத் தீர்ப்பு. இந்த வரலாற்றுத் திருப்பம் நம்முடைய தமிழகத் திருமடங்களில் - தமிழர் திருமடங்களில் அண்மைக் காலமாக ஏற்பட்டுள்ளது.

அவர்கள் மக்களை நாடி வரத் தொடங்கிவிட்டனர்; பேரவை கண்டுள்ளனர்; மக்கள் நலங்கருதிப் பேரறங்களைச் செய்ய முன்வந்துள்ளனர். இது தமிழகச் சமய வரலாற்றில் புதிய அத்தியாயம்.

இந்த அத்தியாயத்தை இன்டையீடின்றி இன்பமே சூழ. எல்லோரும் வாழும் வகையில் எழுதி முடிக்க வேண்டும் இந்த காலக்கட்டத்தில் அறிஞர் அண்ணாவின் தலைமையில் தமிழக அரசு இருப்பது சமய சீர்த்திருத்த உலகத்துக்குப் 'பெய்யெனப் பெய்யும் மழை' என விளங்குகிறது.

மறைமலை அடிகள் அவர்களும் தமிழ்த் தந்தை திரு. வி. க. அவர்களும் இன்ன பிற சான்றோரும் பக்தி நெறியை, கண் மூடிப் பழக்கவழக்கங்களிலிருந்து விடுவிக்க முயன்று சூழலைச் சீராக்கியுள்ளதால் பகுத்தறிவு இயக்கத்தினரும் பகுத்தறிவு இயக்கத்தைச் சார்ந்த தந்தை பெரியாரும், அறிஞர் அண்ணாவும் வாழ்வுக்கு உதவாத வறண்ட பழைமையைத் தாக்கி வலுவிழக்கச் செய்துள்ளனர்.

இந்த இருமுனைத் தாக்குதலால் வறண்ட பழைமை. கல்லறையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. இதுபோது இருபாற் கருத்துக்களையும் ஒன்றாக்கி எழுதிச் செயல் படுத்தித் தமிழ்ச் சமயத்தையும், சமுதாயத்தையும் காப்பாற்ற முடியும்.

மாணிக்கவாசகப் பெருமான் எடுத்துக் கூறியதைப் போல "முன்னைப் பழைமைக்கும் பழைமையதாய், பின்னைப் புதுமைக்கும் போர்த்தும் அப்பெற்றியதாய்" என்ற நிலையில் நமது சமயத்தினை விளங்கச் செய்யவேண்டும்.

அறிஞர் அண்ணா "துன்பம் சுடச்சுட நோற்கிற்பவர்' என்ற திருவள்ளுவரின் வாக்கிற் கிணங்கத் துன்பத்தில்

வளர்ந்தவர்; நெறியில் நீங்கியோரின் ஏச்சில் வளர்ந்தவர்; பெருநெறி விலகிய பேதையர் பேச்சைக் கடந்து வந்தவர்.

பொது வாழ்க்கையை அறிஞர் அண்ணா மலராலாய மஞ்சம் எனக் கருதவில்லை. அது துன்பம் நிறைந்தது; இடையூறுகள் நிறைந்தது என்று எடுத்துக் காட்டிப் பொது வாழ்க்கையின் வெற்றிக்குரிய சக்தியைப் பெறத்தூண்டுகிறார்; ஓடாது நிற்கச் சொல்லுகிறார்; எதிர்த்துச் செல்ல தூண்டு கிறார்; போராடி வெற்றி பெற வற்புறுத்துகிறார்.

தேனீக்களைப் போல பிறருக்கென சுற்றித் திரிந்து உழைக்கச் சொல்லுகிறார். பொது வாழ்க்கைக்குத் தன்னலம் – தன்னலச் சபலம் கேடு என்று சொல்லுகிறார். சபலத்தைக் கடந்து, சஞ்சலத்தைக் கடந்து பொது வாழ்க்கையில் ஈடுபட கற்றுத் தருகிறார்.

அறிஞர் அண்ணா சிறந்த இலக்கியப் படைப்பாளர். மிகச் சிறந்த மனிதப் பண்புகளை இலக்கியத்தில் படைத்துக் காட்டுகிறார். ஆனால் அதே காலத்தில் அவர் தன்னுடைய இலட்சியங்களையே, இலக்கியங்களாகப் படைக்கிறார் என்பதையும் அவருடைய ஆர்வ உணர்வுகளே அன்னை மொழியாம் அமுதத் தமிழில் எழில் உருவம் பெற்று வெளிவருகின்றன என்பதையும் மறந்துவிடக் கூடாது.

அவர் தமது இலட்சியங்களை, தனது இலக்கியத்தில் மட்டுமல்லாமல், தனது தனிப்பட்ட வாழ்க்கையிலும், தனது தம்பிகளின் வாழ்க்கையிலும் தனது ஈடு இணையற்ற தமிழ்ப் பெருங்குடி மக்கள் வாழ்க்கையிலும் உருவாக்கத் துடிதுடிக் கிறார்; உருவாக்குகிறார். ஏன்? உருவாக்கியும் உள்ளார், என்பதை எண்ணிப் பார்க்கும்போது, திருவள்ளுவரின் படைப்புக்குத் தனது வாழ்க்கையின் மூலம் உரை காண வந்த தோன்றலோ அறிஞர் அண்ணா என்று கருத வேண்டி யுள்ளது.

அறிஞர் அண்ணா "எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்ற புத்தகத்தில் "ஜனநாயக முறையில் ஈடுபட்ட தலைவர்களாக - அமைச்சர்களாக உயர்ந்து விடுவதாலேயே மண்டைக்கனம் கொண்டுவிடாதீர்கள்" என்று கூறியுள்ளார்.

அறிஞர் அண்ணா 1967 பொதுத் தேர்தலில் ஆட்சிக்குரிய தகுதியுடையவராக வெற்றி பெற்ற போது, மிடுக்காகப் பேசாமல், அடங்கிப் பேசிய பண்பும், தமிழகத்தில் சிறந்த அரசியல் தலைவர்களை மதித்து அவர்கள் வீடு தேடிச் சென்று ஒத்துழைப்புத்தர வேண்டிக் கேட்டுக் கொண்டமையும் இந்திய நாட்டு வரலாற்றிலேயே இதற்கு முன் நிகழ்ந்ததில்லை.

இந்தப் பண்பு மூலம் அவரது படைப்புக்கு, அவருடைய இலக்கியத்துக்கு, அவரே இலக்கியமாக இருப்பது நெகிழ்ந்து பாராட்டக்கூடியது.

அண்ணல் காந்தியடிகளிடத்தில் அறிஞர் அண்ணாவுக்கு நிறைந்த ஈடுபாடு உண்டு. இந்த ஈடுபாடு காலத்திற்குக் காலம் மாறியும் வந்திருக்கிறது என்பதிலே உண்மையுண்டு. ஆனால், ஈடுபாட்டை யாரும் மறுக்க முடியாது.

'உலகப் பெரியார் காந்தி' என்ற நூலில் நமது தலைமுறையின் வேலை. "இந்த நாட்டை — காந்தி நாடாக்குவது" என்று தெளிவாகவும் உறுதியாகவும் கூறுகிறார். அண்ணாவின் வார்த்தைகள் இதோ! அப்படியே படித்துப் பாருங்கள்.

"ஏழை ஈடேற்றி ஏழை உரிமை பெற்று விளங்கும் நாடு மக்களில் உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி என்ற நிலையில்லாத நாடு எல்லோரும் தோழமையுடன் வாழும் நாடு — இந்த நாடு; காந்தி நாடு — காண்பது தான் நமது தலைமுறைக்கு உள்ள வேலை" என்பது அவர் வாக்கு. இதனை உணர்ந்து, ஓயாது உழைப்பது அண்ணாவின் — நாண்மங்கல விழாப் பரிசு!

# 18

# 'பட்டுக்கோட்டை'யின் பாடல்கள்

தமிழ், கவிதை மொழி - ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே கவிதை நலம் கண்டு போற்றிய நாடு தமிழ்நாடு. தமிழருக்கும், தமிழர் வாழ்வியலுக்கும் உணர்வும் உரமும் ஊட்டிய கவிஞர்கள் பலர் தோன்றிய நாடு இது. இன்றுவரை அந்தக் கவிஞர் பரம்பரை வளர்ந்து வாழ்ந்து வருவது தமிழகத்தின் சிறப்புக்களுள் ஒன்று. 20-ஆம் நூற்றாண்டுத் தமிழகத்திலும், நல்ல பல கவிஞர்கள் தோன்றி வாழ்ந்திருக் கிறார்கள். வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவ்வாறு வாழ்ந்து வரலாறு முடித்த ஒரு சிறந்த கவிஞர் பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம். இன்றையக் கவிதைகள் பெரும்பாலும் திரைப்படப் பாடல்களாகவே வெளிவரு கின்றன. இது காலத்தின் விளைவு. திரைப்படம் பார்க்க விருப்பம் இல்லாதபோனாலும், இந்தப் பாடல்களைக் கேட்டு அனுபவிக்கவாவது திரைப்படங்கட்குச் செல்ல வேண்டும் என்று விருப்பம் தோன்றுகிறது. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நஞ்சை கொழிக்கும் தஞ்சையைச் சார்ந்தவர். சமுதாயத்துறையில் முற்போக்குக் கருத்தினர். எளிய வாழ்வினர். முகமன் கூறாமல் உள்ளதைச் சொல்லுபவர். வளங்கள் பலவற்றைச் சுவைத்தறியாதவர்.

இந்த முன்னுரை கவிஞரை அறிமுகப்படுத்தும் என்று நம்புகிறோம்.

இவருடைய பாடல்கள் இசைப் பாடல்களாகவே வெளிவந்துள்ளன. அதிலும் பெரும்பாலும், கிராமீயப் பண்ணையும், பண்ணையும் தழுவி வெளிவந்துள்ளன. உருவகங்களைக் காட்டாமல் உணர்ச்சிகளைக் காட்டுகிறார். கிராமத்துச் சாதாரண மனிதனின் மொழியில் பேசுகிறார். பாடல்கள் எளிய நடையில் இருந்தாலும் கருத்தால் அவை ஆழமாக இருக்கின்றன. இருக்கும் குறைகளைச் சுட்டிக் காட்டுகிறார். வளரவேண்டிய நிறைவுகளையும் வரிசை படுத்திக் காட்டுகிறார். பொதுவாக, கவிதைகள் சிந்தைக் கினியனவாக — வாழ்வுக்கு வளமூட்டுவனவாக இருக் கின்றன.

உலகம் தொடங்கின நாள்தொட்டு, மனித குலத்தில் பல்கிப் பெருகி வருகின்ற வேற்றுமையுணர்வுகளும், வேறு பாடுகளும் வருத்தத்தைத் தரக்கூடியனவாக உள்ளன. பலர் கூடி வாழும் சமுதாயத்தை அமைப்பதே மனிதனின் தலையாய கடமை. சமுதாய அமைப்பைத் தோற்றுவித்து, அந்த அமைப்பைக் காப்பாற்றுவது தலையாய ஒழுக்கம். ஆனால், இன்றைய மனிதனோ அதைச் செய்யாமல், சமுதாய அமைப்பில் கலகங்களை எழுப்பிக் கலைக்கின்றான். சமுதாய அமைப்பின் தோற்றத்திற்கும் அவற்றின் — பாதுகாப்பிற்கும் துணை நிற்கவேண்டிய அரசியல், மொழி, சமயம் ஆகியவை களின் பேராலேயே வேற்றுமைகளை விளைவித்துப் பகை மையைத் தூண்டி விடுவதைப் பார்க்கிறோம். இப்போக்கு கவிஞரை மிகவும் வருத்தியிருக்கிறது. பல்வேறு கவிதைகளில், வேற்றுமைகளை விலக்கி, ஒற்றுமையை உருவாக்க வேண்டும் என்றும் வற்புறுத்துகிறார். விண்ணையிடிக்கும் மலையின் முகட்டிலே, அருவிகள் தோன்றுகின்றன. அந்த அருவிகள் பொழியும் இனிய நீர்ப்பெருக்கு கடலோடேயே

கு.VI.உஅ.

கலக்கின்றன. ஆனால், தனி மனிதனோ சமுதாயம் என்ற பெருங்கடலில் கலப்பதில்லை. உயர்வும் தாழ்வும் வளர்க்கின்றான் என்று பாடுகின்றார்.

"உச்சி மலையிலே ஊறும் அருவிகள்
ஒரே வழியிலே கலக்குது
ஒற்றுமையில்லா மனித குலம்
உயர்வும் தாழ்வும் வளர்க்குது"

என்று பாடுகிறார்.

மூங்கில் குத்திலே மூங்கில்கள் வளர்கின்றன. ஓங்கி வளர்கின்றன. ஒன்றையொன்று தழுவி வளர்கின்றன என்று எடுத்துக்காட்டி, மனித குலத்தோடு ஒட்டாமல் ஒதுங்கி யிருந்தால் உயர முடியுமா? என்று கேட்கிறார். மேலும் ஒருபடி மேலே சென்று, ஒற்றுமையில்லாது போனால் உயர முடியாதது மட்டுமின்றி, வளர்ச்சியும் கெடும் என்றும் உணர்த்துகிறார். கவிதையில் சிறந்த உவமை நயம் இருப்பது படித்து இன்புறத்தக்கது.

'ஓங்கி வளரும் மூங்கில் மரம்
ஒன்னையொன்னு புடிச்சிருக்கு
ஒழுங்காகக் குருத்துவிட்டு
கெளை கெளையா வெடிச்சிருக்கு
ஒட்டாமே ஒதுங்கிநின்னால் உயரமுடியுமா?—எதிலும்
ஒத்துமை கலைஞ்சுதுன்னா வளர முடியுமா?"

என்ற பாடற்பகுதி இனிமை வாய்ந்ததாகும்.

ஒரு சிறந்த கவிஞன் தனக்கு முன்னே வாழ்ந்த கவிஞர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு நயம்படத் தன் மொழியில் வழிமொழிந்து பேசுதல் இயல்பு. இவரிடம் இத்தகு ஆற்றல் அமைந்திருப்பதைப் பல்வேறிடங்களில் காண முடிகிறது.

திருவள்ளுவர்,

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்,
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

என்றும், தாயுமானவர், **"காகம்போல் உறவு கலந்துண்ணக் கண்டீர்"** என்றும் கூறிய அறிவுரையை மனத்தகத்தே கொண்டு "கானக் கருங்குயிலின் கச்சேரியாம்" என்ற பாடலில் பாடுவதும் படித்தின்புறத்தக்கது. இப்பாடல் முழுவதுமே படித்து இன்புறத்தக்கது.

பாடலில் காக்கைகளும், குருவிகளும் மனிதர்களின் கோணல்களை விமரிசனம் செய்யும் பகுதி நகைச்சுவை நிரம்பியதாக இருக்கிறது. ஆனால் சிரித்து மகிழத்தக்க நகைச்சுவையன்று. சிந்தித்து ஒரு சொட்டுக் கண்ணீர் வடித்தற்குரிய நகைச்சுவையாகவே இருக்கிறது.

நம்முடைய மக்கள் ஊழின் வலிவை எண்ணி, ஊழின்வலியை மிகுதிப்படுத்தி உழைப்பாற்றலைத் தரத்தில் தாழ்த்தி வாழ்விழந்து போயினர். இம் மனப்போக்கு வளரும் சமுதாயத்திற்கு நல்லதல்ல. கவிஞர் இயல்பாகவே, இத்தகு கருத்துக்களில் நம்பிக்கையில்லாதவர். அவருடைய கருத்துக்கள் கற்பனையில் தோன்றியவை அல்ல. யதார்த்த உலகத்தையும், அனுபவத்தையும் மையமாகக் கொண்டே தோன்றியிருக்கின்றன. கவிஞர் "ஏற்றமுன்னா ஏற்றம்" என்ற பாடலில், "விதியின் உணர்வால் வீழ்ந்து கிடக்கும் வீணரெல்லாம் வேலை செய்து வீறுபெறவேண்டும்" என்று குறிப்பிடுகிறார். இப்பாடல் முழுவதிலும் உழைப்பின் உயர்வு, சேர்ந்துழைப்பதன் அவசியம் ஆகிய சிறந்த சித்தாந்தங்களைத் தந்ததான பாடற் சந்தத்தில் விளக்கியிருக்கிறார்.

உழைத்தால் மட்டும் போதாது. உற்பத்தியைப் பெருக்கினால் மட்டும் போதாது. சமுதாயத்தில் நரியைப் போலத் தந்திரங்கள் செய்து ஏமாற்றி — எலியைப் போல் உழைக்காமல் பொருள் சேர்த்து வாழ்வது முறையல்ல. இக்கருத்தைக் கவிஞர் "நாங்கள் இதயமுள்ள கூட்டம்" என்ற

கவிதையில் அழகாக விளக்குகிறார். இக்கருத்தை விளக்குவதோடு மட்டுமின்றி, இவ்வுலகில், நன்மை செய்வோர் அல்லற்படுவதையும் அக்கிரமங்கள் செய்வோர் வாழ்க்கையை அனுபவிப்பதையும் இடித்துக் காட்டுகிறார். கவிஞர், "ஏமாறமாட்டோம்" என்ற தற்காப்புணர்ச்சியை மட்டும் ஊட்டவில்லை. இந்த உணர்வு பெரும்பான்மை யோரிடத்தில் இயல்பாகவே இருக்கிறது. தன் வாழ்க்கையில் ஏமாற விரும்பாதவர்கள் பலர் பிறரை ஏமாற்ற விரும்புகின்றனர். கவிஞர்,

> "ஏமாற்றவும் மாட்டோம் — நாம்
> ஏமாறவும் மாட்டோம்"

என்று பாடுவது புதிய மரபு. முதலில் சமுதாயத்தில் வளர வேண்டிய ஒழுக்கம் ஏமாற்றமாட்டோம் என்பதேயாகும். அதுவளர்ந்து விட்டாலேயே ஏமாறுதல் இவ்வையத்தில் இருக்காது. இக்கருத்தை வலியுறுத்தும் கவிஞரின் மனப் போக்கில், ஒழுக்கத்தை வற்புறுத்துவதோடு மட்டுமின்றி, அவ்வொழுக்கத்தைத் தூண்டி வளர்க்கக்கூடிய சமுதாயச் சூழ்நிலை இருக்கவேண்டும் என்று கருதுவதையும் வெளிப் படுத்துகின்றார்.

எரிகின்ற நெருப்பில் விறகுகள் அகப்பட்டு அழிவது போல, மனிதன் தன்னலத்தில் சிக்கி அழிந்து கொண்டிருக் கிறான். தன்னலத்தின் தேவைகளை நிறைவு செய்துகொள் வதற்காகச் சில பொழுது தோற்றத்தால் அறம் போலக் காட்டும் சில காரியங்களையும் செய்வான். ஆனால் உள்நோக்கம் வேறு. உள்நோக்கத்தை அறிகின்ற பொழுது விலாவறச் சிரிக்கத் தோன்றும். இவ்வாழ்க்கையே இப்படி யென்றால், இக்கவிஞருடைய கவிதையாற்றலால் வேதனை கலந்த வியப்புணர்ச்சி மிகுகிறது. "இரைபோடும் மனிதர்க்கே இரையாகும் வெள்ளாடே! இதுதான் உலகம்! வீண் அனுதாபம் கண்டு நீ ஒருநாளும் நம்பிடாதே" என்கிறார்.

எளிய சொற்கள்! ஆழமான பொருள்! நினைந்து இன்புறத்தக்க உவமை. இக்கவிதைதான் நம்மைப் பட்டுக்கோட்டையாரிடம் ஈடுபடுத்தி ஆற்றுப்படுத்தியது.

அடுத்து மனித வாழ்வு துன்பப் படுகுழிகளும், இன்ப மேடுகளும் விரவிக் காணப்படுவது. படுகுழிகளே அதிகம். மேடுகள் குறைவிலும் குறைவே. பலர், துன்பங்களைக் கண்டபோது துவண்டு விடுவர். அவர்கள் வாழ்க்கையில் முன்னேற்றமில்லை. இருக்கவும் முடியாது. அதனாலன்றோ திருவள்ளுவரும் கூட,

'இன்பம் விழையான்
இடும்பை இயல்பென்பான்'

என்றார். துன்பங்கள் அறிவைத் தூண்டி வளர்க்கும். ஆற்றலைப் பெருக்கும். இக்கருத்து, அறிவும் தெளிவும் பொருந்திய முற்போக்குக் கருத்துடைய மனிதனுக்கே விளங்கும். கவிஞர், மிக அழகாக, இக்கருத்தை வலியுறுத்து கின்றார், "துயரிதனைக் கண்டே பயந்து விடாதே, சோர்வை வென்றாலே துன்பமில்லை" என்கிறார். இக்கவிதையின் ஈற்றடிகள் நண்பர்களின் நிலைமைகளையும் விமரிசனம் செய்கின்றன.

கவிஞர் கடவுள் நம்பிக்கையை மறுக்கின்ற முற் போக்குப் பாரம்பரியத்தைச் சார்ந்தவர். எனினும், கண்மூடித் தனமாகக் கண்டபடி கடவுள் நம்பிக்கையை இழித்துப் பேசவில்லை. மாறாகக் கடவுள் நம்பிக்கை தோன்றி வளர்வதற்குதவும் நற்கருத்துக்களைக் கூறுகிறார். சமயத் துறையில், சமய நிலையங்களில் புகுந்துள்ள கேடுகளை விளக்குகிறார். நடுநிலை உணர்வோடு சிந்தித்தால் யாரும் கவிஞரின் கருத்தை மறுக்க முடியாது.

கவிஞர், தூயபக்தி மலரவேண்டும் என்று கூடப் பேசுகின்றார். ஆனால், பக்தி பக்திக்காகவே இருக்க வேண்டுமே யொழிய சுண்டலுக்காக இருக்கக்கூடாது

என்கிறார். இன்று நம்முடைய சமய நிலையங்களைச் சூழ்ந்திருக்கிற குறைகளுள் தலையாயது, மடைப்பள்ளி ஆட்சியேயாகும். ஐம்புலன்கள் ஆர அருளாரமுதத்தை அனுபவிக்க வேண்டிய திருக்கோயில்களில் பொறிகளுக்குத் தீனிபோடும் சூழ்நிலை! கவிஞர்,

"பக்த ஜனங்கள் கவனமெல்லாம் தினமும் கிடைக்கும்
சுண்டலிலே
பசியும் சுண்டல் ருசியும் போனால் பக்தியில்லே
பஜனையில்லே

என்று பாடுவது சிரிக்கவும் தூண்டுகிறது — சிந்திக்கவும் தூண்டுகிறது.

அன்பு மழை பெய்தால் இறையருள் வெள்ளம் பாயும் என்று கூறுகின்றார். இக் கருத்து, "வஞ்ச ஆறுகள் வற்றின, பக்தி வெள்ளம் பரவிற்று" என்ற அப்பரடிகள் கருத்தை நினைவூட்டுகிறது. கவிஞருடைய கவிதையில் உணர்ச்சி களுக்கு மாறாக அமைதி தவழ்வதைப் பார்க்கிறோம்.

"சோதியிறையருள் ஆறு பாயவே, அன்பு மழை
பெய்யவே, பேதம் மறைந்து உய்யவே"

என்று கவிஞர் பாடும்போது தூய அமைதியைக் காண்கிறோம்.

இறைவனுடைய பக்தியில் ஈடுபட்ட அடியார்கள் எல்லாவற்றையும் இறைவன் மயமாகப் பார்த்தனுபவிப் பார்கள்.

'இருநிலனாகித் தீயாகி' என்று அப்பரடிகள் பாடுவார். 'வானாகி மண்ணாகி' என்று மாணிக்கவாசகர் இறைவனை வாழ்த்துவார்.

நம்முடைய கவிஞரும்,

"விண்ணும் மண்ணும் நீயானாய்,
வெயிலும் மழையும் நீயானாய்,

விளங்கும் அகில உலக மீது.
நீயில்லாத இடம் ஏது"

என்று பாடுகிறார். பாடல் படிக்கப் படிக்க இன்பமாக இருக்கிறது. மிக உயர்ந்த சித்தாந்தத்தை, மிக எளிமையான சொற்களால் விளக்கும் ஆற்றல் உண்மையிலேயே பாராட்டுதற்குரியது.

கோயில்களில் பொருளாட்சி ஆதிக்கம் செலுத்தும் அவல நிலையையும் அவர் சாடுகிறார். காசு கொடுத்தால் வழிபாடு கிடைக்கும். இல்லையானால் இல்லை. கோயிற் கதவுகள் பூட்டப்பட்டு வழிபாட்டுரிமை மறுக்கப்படும் என்று அநீதியைக் கண்டிக்கிறார்.

"காசு தந்தால்தான் உன்னைக்
காணும் வழி காட்டுவதாய்
கதவு போட்டு பூட்டி வைத்துக்
கட்டாயம் பண்ணுவதைப் பார்த்தாயா?"

என்று கேட்கிறார். பாடலின் கருத்தை யார்தான் மறுக்க முடியும். இங்ஙனம் இருக்கும் குறையை எடுத்துக் காட்டுவது நாத்திகமா? ஆத்திகமா? கவிஞர் பதில் சொல்லிவிட்டார். காலம்தான் விடை காண வேண்டும்.

கவிஞர் இந்த உலகத்தின் விசித்திரமான போக்கு களைக் கண்டு சிரிக்கின்றார்-சிந்தனை செய்கிறார். வெற்றி தோல்விகளைக் கணக்கிடுகின்றார். பொதுப்பணி உலகத்தில் வேண்டிய எல்லாம் ஒருங்கமையாத—அமைத்துக் கொள்ள முடியாத பொருந்தாச் சூழ்நிலையை விளக்குகின்றார். சிலரிடத்தில் ஆற்றல் இருக்கிறது. ஆனால் உண்மையில்லை. உண்மை இருக்கிறது. அவர்களிடத்தில் ஆற்றல் இல்லை. இவ்விரண்டும் இருந்தால் சமுதாயம் ஏற்றுகொள்வதில்லை. இந்தப் பொருந்தா வேறுபாடுகளைக் கவிஞர் நினைந்து நினைந்து நமக்கு நினைவு படுத்துகின்றார்:

*"எல்லோரும் நம்பும்படி சொல்லும் திறனிருந்தால்*
*சொல்லிலே உண்மையில்லை*
*உள்ளதை உள்ளபடி சொல்லும் மனிதனிடம்*
*உணர்த்திடும் திறமையில்லை*
*உண்மையும் நம்பவைக்கும் திறனும் அமைந்தவனை*
*உலகம் ஏற்பதில்லை"*

என்று பாடுகிறார். பொருந்தா வேறுபாடு இவ்வளவு தானா? மேலும் தொடர்கிறார் கவிஞர்:

பொதுப்பணியில் ஈடுபட்டு நல்லன செய்ய விரும்புவோர்க்குக் கையில் காசில்லை. செல்வம் இருப்போர்க்குப் பொதுப்பணியில் நினைப்பில்லை. எல்லாவற்றுக்கும் மேல், பொதுப்பணியில் நினைப்பும் செய்து முடிக்கத் தேவையான செல்வமும் இருந்தாலும், காரியத்தை செய்து முடிக்க நல்ல கூட்டாளிகள் கிடைப்பதில்லை என்ற குறையை உணர்ந்து கூறுகிறார். இது, அனுபவ ரீதியான உண்மை.

*"பொதுப்பணியில் செலவழிக்க*
*நினைக்கும்போது பொருளில்லை,*
*பொருளும் புகழும் சேர்ந்த பின்னே*
*பொதுப்பணியில் நினைவில்லை,*

*போதுமான பொருளும் வந்து*
*பொதுப்பணியில் நினைவும் வந்தால்*
*போட்டதிட்டம் நிறைவேறக்*
*கூட்டாளிகள் சரியில்லே."*

என்கிறார்.

இத்தகு சிறந்த கவிதைகளைத் தந்த கவிஞர் நிறைநாள் வாழ முடியாமல் போனது தமிழகத்திற்குப் பேரிழப்பே யாகும். வாழ்ந்த நாள் கொஞ்சமேயாயினும், கால வெள்ளத்தைக் கடந்து நிற்கின்ற கருத்துக்கள் நிறைந்த கவிதைகள் பலவற்றைத் தந்திருக்கிறார். மனிதகுலம் வாழுநாள் இக்கவிதைகள் வாழும்! கவிஞன் புகழ் வாழும்!

19

# பொழுதை விடியச் செய்வோம்

பட்டுக்கோட்டைப் பாவலன் - கவிஞன் நமது தலைமுறையில் தோன்றிய சிறந்த கவிஞன். பட்டுக்கோட்டையின் தோற்றம் காலத்தின் கட்டாயம். காலம் தந்த கவிஞன் அவன். இல்லை, இல்லை அவன் காலத்தை உருவாக்கப் பிறந்தவன்; பாடியவன். ஆனால் வழக்கம்போல அவன் விரும்பிய காலம் உருவாகவில்லை! மக்கள் என்று பொழுது விடியும் என்று காத்துக்கிடக்கின்றனர். ஐயோ, பாவம்! அவர்களுக்கு இன்னமும் தெரியவில்லை. பொழுது தானே விடியாது என்று! மக்கள் சக்தி எழுந்து பொழுதை விடிய வைக்க வேண்டும். அந்த எழுச்சியை - விழிப்புணர்வைத் தரம் பாடியவன் கவிஞன் பட்டுக்கோட்டை.

மனித சக்தியைப் பாடிப் புகழ் பெற்றவன் பட்டுக்கோட்டை. கவிஞன் மனித சக்தியை,

*"சந்திரனைத் தொட்டதின்று மனித சக்தி*
*சரித்திரத்தை மீறியது மனித சக்தி*
*இந்திரன்தான் விண்ணாட்டின் அரச னென்ற*
*இலக்கணத்தைத் திருத்தியது மனித சக்தி"*

என்று வியந்து பாடுகின்றான். ஒரு புதுமையை அறிமுகப் படுத்தி இரண்டு பழமையை அகற்ற முயலுகின்றான். “சரித்திரத்தை மீறியது மனித சக்தி! ஆம்! சரித்திரம் சந்திரமண்டலத்தைப் பற்றிக் கூறிய கதைகளை இன்று பொய்யாக்கிவிட்டது! அப்புறம் இந்திரலோகம்! இந்திரன் தலைவன்! இன்னோரன்ன புராணங்களைப் பொய்யாக்கி விட்டது. மனித சக்தி என்று மனித சக்தியைப் புகழ்ந்து பாடுகின்றான்

இன்றைய மனித சமுதாயத்தை யதார்த்தமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது. அவரவர் அவரவருடைய பெண்டு, பிள்ளைகள் என்றே வாழ்கின்றனர். ஒரு நாளைக்கு ஒரு பொழுதேனும் பொதுப்பணியில் நாட்டம் செலுத்துவ தில்லை. இவர்களையாவது ஒருபுறம் வரவேற்கலாம். இன்னும் பலர் யாதொரு பயனுமின்றி முச்சந்திகளில் அரட்டையடிப்பது, இங்குமங்குமாக நடப்பது, ஓடுவது, குறடு கண்ட இடத்தில் உட்கார்ந்து ஊர் வம்பு பேசுவது, என மலிவான அருவருக்கத்தக்க அரசியல் நடத்தி ஊரைக் கெடுத்துக் கொண்டிருக்கின்றனர். இத்தகையோருடைய மனித சக்தி, படைப்பாற்றலாக மாறினால் ஊர் வளரும்; மக்கள் நலம் பெறுவர். இவர்கள் செய்யமாட்டார்கள்; செய்யவே மாட்டார்கள்! இவர்கள் தலையில்லாத் தலைவர்கள். இவர்கள் பொதுப் பணியில் நினைவில்லாத வர்கள். இவர்களுக்குப் பொதுப் பணியில் நாட்டம் இல்லை; விருப்பம் இல்லை.

“பொதுப் பணியில் செலவழிக்க நினைக்கும்போது
பொருளில்லை
பொருளும் புகழும் சேர்ந்தபின்னே பொதுப்பணியில்
நினைவில்லை

*போதுமான பொருளும் வந்து பொதுப்பணியில்*
*நினைவும் வந்தால்*
*போட்ட திட்டம் நிறைவேறக் கூட்டாளிகள்*
*சரியில்லை"*

பொதுப் பணியில் நினைவிருந்தபோது செலவழிக்க பணமில்லை! மெள்ள மெள்ளப் பணம் சேர்த்தார். சேர்த்துக் கொண்டே இருக்கிறார். ஆனால் இப்போது அவருக்குப் பொதுப்பணியில் நினைவில்லை. இவருக்குப் பணம் சேர்வதற்கு முன் பொதுப்பணியில் முன் வரிசையில் நின்றார். நல்ல வரவேற்பும் அங்கீகாரமும் கிடைத்தது. இப்போது பணம் சேர்ந்தபிறகு, பொதுப்பணியில் நாட்டம் இல்லை. ஒதுங்குகின்றார்; ஒதுக்குகின்றார். இத்தகையோர் சிலரைச் சந்தித்திருக்கின்றோம். இப்போது ஒரு முரண்பட்ட நிலை! போதுமான பொருள் இருக்கிறது. பொதுப்பணியில் ஆர்வமும் இருக்கிறது. திட்டம் தீட்டவும் தெரிகிறது. ஆனால் திட்டத்தை நிறைவேற்ற நல்ல பொதுப்பணியில் நாட்ட முள்ள, கடின உழைப்புள்ள கூட்டாளிகள் கிடைப்பதில்லை. அல்லது கூட்டாளிகள் சரியில்லை. இது இன்றைய நம்முடைய நாட்டின் யதார்த்த நிலைமை மட்டுமல்ல, படிப்பினையும்கூட! ஒரு ஊரில் சிலராவது பொதுப் பணிக்கென்று சிலமணி நேரங்களை ஒதுக்கினால் தான் திட்டங்கள் வெற்றிபெறும்; ஊர் வளரும்.

உலக வரலாறும் சரி, இந்திய வரலாறும் சரி மதச் சண்டைகளால் அவலங்களைக் கண்டிருக்கின்றன. அவலங் களைக் கண்டு கொண்டிருக்கின்றன. பட்டுக்கோட்டை கடவுள் பெயரால் மக்கள் சண்டை போட்டுக் கொள்வதை விரும்பவில்லை. விரும்பாதது மட்டுமல்ல, வெறுத்தான். அதனால் "ஊருக் கெல்லாம் ஒரு சாமி!" என்றொரு கவிதை இயற்றினான். ஊருக்கெல்லாம்-அவன் இந்துவானாலும், முஸ்லீம் ஆனாலும், கிறித்துவன் ஆனாலும் எல்லாருக்கும்

ஒரே சாமிதான்! இந்தப் புத்தி நமக்கு முதலில் வந்தாக வேண்டும். சாமியையும் மதங்களையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது.

*"ஊருக் கெல்லாம் ஒரே சாமி*
*ஒரே சாமி ஒரே நீதி*
*ஒரே நீதி ஒரே ஜாதி*
*கேளடி கண்ணாத்தா"*

ஊருக்கெல்லாம் சாமியும் ஒன்றுதான்! நீதியும் ஒன்றுதான்! ஆனால் சாமியைச் சாப்பிட்டு ஜீரணித்துவிட்ட மதங்கள், மதங்கள் வாரியாக நீதிகளை அமைத்துக் கொண்டுள்ளன. இன்று நீதி மதங்கள் தோறும் மாறுபடு கின்றது. இது நியதியுமல்ல; நீதியுமல்ல. ஊருக்கெல்லாம் ஒரே சாமி என்ற பாட்டிலேயே உலகம் முழுதும் ஒருமையில் நிற்கும் நிலையையும் உணர்த்திப் பாடுகின்றான். "ஒரே ஜாதி" என்று பேசுகின்றான். ஆம்: மனித ஜாதி ஒரே ஜாதி தான்! அதுமட்டுமல்ல.

*மூச்சுக் கெல்லாம் ஒரே காத்து*
*ஒரே காத்து ஒரே தண்ணி*
*ஒரே வானம் ஒரே பூமி*
*ஆமடி பொன்னாத்தா!"*

என்று பாடுகின்றான். உலகம் முழுதும் வாழும் மாந்தர் சுவாசிக்கும் காற்று ஒன்று. குடிக்கும் தண்ணீர் ஒன்று. வாழும் பூமி ஒன்று. இருளும் ஒளியும் எல்லாருக்கும் உண்டு. இவற்றில் வேறுபாடு இல்லை. எல்லாருடைய உடம்பிலும் ஓடும் இரத்தம் ஒன்றேதான்! ஏன், எல்லா மாந்தரும் பிறந்தது பத்து மாதம் தானே! இங்ஙனம் பரந்த உலகியலை, உலகியலின் ஒருமைப்பாட்டை பட்டுக்கோட்டைக்கு முன்பு இவ்வளவு எளிதாக யாரும் பாடியதாக நினைவில்லை. அற்புதமான பாட்டு, இந்தப் பாட்டும் பாட்டின் பொருளும் வாழ்வாக

மலருமானால் போர் ஒடுங்கும்; அமைதி நிலவும். மக்கள் குலம் மகிழ்ச்சியுடன் வாழலாம்.

பட்டுக்கோட்டை நல்வாழ்வு தோன்ற நாள் குறிக்கின்றான். பஞ்சாங்கத்தைப் பார்த்தல்ல. தமது சிந்தனையால் குறிக்கின்றான். அந்த நாள் எது?

*"ஜாதிகள் யாவும் ஒன்றாக மாறும்*
*தேதியில் தோன்றும் பெருமை"*

ஆம்! சாதிக் குட்டிச்சுவர்களால் இன்று கிராமம் சிதறுண்டு கிடக்கிறது. சாதிகள் வரவர இறுக்கமாகப் போய்க் கொண்டுள்ளன. என்று இந்த நாட்டின் ஜாதிகள் ஒன்று சேரும்? என்று இந்த நாட்டு மக்கள் இந்தியராவர்?

இன்று பொய்ம்மை ஒழுக்கம்! சொல் வேறு செயல் வேறு. பட்டார் யாண்டும் வளர்ந்து வருகின்றனர். கண்டால் அன்பொழுகப் பேசுகின்றனர்! ஆனால் அவர்களுடைய செயலில் அன்பு இருப்பதில்லை. நாம் நாள்தோறும் பேசிவரும் அன்பு செயலுக்கு வந்தால் இந்தப் புவியிலேயே, இங்கே, இப்பொழுதே பேரின்பத்தைக் காணலாம் என்று கவிஞன் உறுதியாகக் கூறுகின்றான். சென்ற கால வரலாற்றில் காணாத வளத்தைக் கண்டிடலாம்! ஆம்! இந்த உலகின் வளம் நிறைய உண்டு. மனிதன் அன்பு இன்மையால் வளத்தைப் பொதுவாக்க மறுப்பதால் வளம் சுருங்குகிறது. எல்லா நலத்திலும் சிறந்தது மன நலம்! அம்மனநலம் மாறா திருப்பின் இம்மண்ணில் விண்ணகத்தைக் கண்டிடலாம்.

"நான் வந்து சேர்ந்த இடம்" என்றொரு சிறந்த கவிதை உண்டு.

*"நான் வந்து சேர்ந்த இடந்தான் நல்ல இடந்தான் —*
*இதை*
*நம்பவைக்கும் பொறுப்பு அன்பினிடந்தான்"*

என்பது கவிதை. ஆம்! இன்று பலருக்கு நல்ல இடம் கிடைத்தாலும் அங்குச் சேரமாட்டார்கள்; ஒட்ட மாட்டார்கள். எங்காவது சுற்றிக் கொண்டிருப்பர். அல்லது முச்சந்திகளில் குற்றங்களின் களமாகிய கடைகளில் இருப்பர். ஏன்? அவர்கள் சேர்ந்த இடம் நல்ல இடம்தான். பல பெரியவர்களிடம் நட்பும் உறவும் சேர்க்கும் இடம்தான். நாலு பேருக்கு உதவி செய்யக்கூடிய இடம்தான். ஆனால், அதன் அருமையை அவர்கள் உணர்வதில்லை. ஐயோ பாவம்! வந்து சேர்ந்த இடம் நல்ல இடம்தான்; சிறந்த இடம்தான் என்பதை உணர்த்தும் அன்பில்லை.

பட்டுக்கோட்டை தனித்தன்மையுடைய கவிஞன். சமுதாயத்திற்காகவே பாடிய கவிஞன். இருளில் பிறந்து தட்டுத் தடுமாறி, பொழுது விடியப் பாடினான். நாமாவது பட்டுக்கோட்டையின் கனவை நனவாக்கிப் பொழுதை விடியச் செய்வோமாக.

## 20

# சமுதாய மறுமலர்ச்சி இலக்கியங்கள்

சமுதாய மறுமலர்ச்சி இலக்கியங்கள் பற்றி ஒரு சிந்தனை! நமது சமுதாய மறுமலர்ச்சி பற்றி எத்தனையோ தட்வை சிந்தனை செய்தாகி விட்டது. உலக மொழிகளில் உள்ள சமுதாய மறுமலர்ச்சி இலக்கியங்கள் பல. இவ்வளவு சமுதாய மறுமலர்ச்சி எண்ணப் போக்குகள் தோன்றிய பிறகும் ஏன் சமுதாய மறுமலர்ச்சி தோன்றவில்லை?

சமுதாயத்தல் மறுமலர்ச்சி ஏற்பட்டுவிடாத வண்ணம் பிற்போக்காளர்கள் தடை செய்து வருகின்றனர். ஆயினும், கதிரவனைக் கையது கொண்டு பொத்தி மறைக்க முடியுமா? அதுபோலச் சமுதாயத்தையும் அதனுடைய முற்போக்குத் திசையிலிருந்து திருப்ப இயலாது; முடியாது! சமுதாயம் மெள்ளத்தான் நகரும்! நகரும் என்பது உறுதி!

சமுதாய மறுமலர்ச்சி என்பது என்ன? இன்று சமுதாய அமைப்பு, கால்கொண்டிருக்கிறதா? காடுகளில் மரங்கள் வளர்ந்து அடர்த்தியாக இருக்கும். ஆனால், மரங்கள் ஒழுங்குபட அமைந்திருக்கா. தான்தோன்றித் தனமாக - தன்னிச்சையாக வளர்ந்திருக்கும் மரங்களுக்கிடையில் ஆரோக்கியமில்லாத போட்டி இருக்கும்!

வல்லாண்மை மிக்க தாவரங்கள், வல்லாண்மை யில்லாத தாவரங்களை அழித்து வாழும். "வல்லாண்மையே வாழும்' என்ற நியதி தாவரங்களுக்கும் உண்டு! இன்றைய சமுதாயம் காடு போலத்தான் விளங்குகின்றது! பழத் தோட்டம் போல் அல்ல!

வைத்த பழத்தோட்டத்தில் ஒழுங்கு இருக்கும்! எல்லாம் வாழும்! அழிப்பு இல்லை! பழத்தோட்டம் போன்ற சமுதாய அமைப்பே, மறுமலர்ச்சி இலக்கியப் படைப் பாளிகளின் நோக்கம்!

மானிட சமுதாயம் தோன்றி பல்லாயிரம் ஆண்டுகள் உருண்டோடிவிட்டன! மானிட சாதியின் வரலாறு, வற்றாத ஜீவநதியாக ஓடிக்கொண்டேயிருக்கிறது! இனிமேலும் ஓடும்!

இந்த வரலாற்று ஆற்றில் அருமையான தெள்ளிய நீரும், சில சமயங்களில் செங்குருதியும், சில சமயங்களில் சாக்கடையும் ஓடும்! ஏன்? சில சமயங்களில் ஓடும் சாக்கடையில் குப்பையும் கூளங்களும் சேரும்பொழுது ஓட முடியாமல் தேங்கி நிற்பதும் உண்டு! இந்த மாதிரியான சூழ்நிலைகளில் வரலாற்றை, அதன் தேக்கத் தன்மை அறிந்து மாற்றி இயக்குவதை "மறுமலர்ச்சி" என்று வரலாற் றாசிரியர்கள் புகழ்வர்.

மானிட சமுதாயம் பழக்கங்களுக்கும் வழக்கங் களுக்கும் கட்டுப்படும் இயல்பினது. அதன் காரணமாக ஒருகட்டத்தில் திரும்பத் திரும்பச் சுற்றுவது தேக்கம். இத்தேக்கத்தை உடைத்து மானிடம் சுற்றும் வட்டத்தை விரிவாக்குவது மறுமலர்ச்சி இலக்கியத்தின் தன்மை!

வளைவுகள், வட்டங்கள் அனைத்தையும் தயவு தாட்சண்யமின்றி உடைக்கத் தூண்டுவது புரட்சித் தன்மை வாய்ந்த இலக்கியம்! வெறும் அப்பட்டமான ரசனை, காம விகாரங்கள் உள்ள இலக்கியங்கள் படிக்கத்தக்கன அல்ல. அது போலவே, இருக்கும் நிலைமைகளை — அவலங்களை

நினைந்து அழுது புலம்பி ஓய்வனவும் படிக்கத்தக்க இலக்கியங்கள் அல்ல. மானுடத்தை உறக்கத்தினின்று எழுப்பி முன்னேற்றத் திசையில் உசுப்பிவிடுவனவே மறுமலர்ச்சி இலக்கியங்கள்!

பழைமையை வெறுத்துப் புதுமையை நாடும் உணர்வு மானிடத்திற்கு இயல்பாகவே உண்டு! இந்தப் புதுமையை நாடும் வேட்கையினால்தான் மானிடன் தனது உணவில், உடையில், வழிபாட்டில் புதியன பலவற்றைக் கண்டிருக் கின்றான்!

யுகந்தோறும் கடவுளைக்கூட மாற்றும் மனப் போக்குடையவன் மானிடன்! ஆனால், கடவுளை மாற்ற அவனால் முடியவில்லை! அதனால், பெயர்களையும் உருவங்களையும் மாற்றிக் கொண்டான்! ஆதலால், மறு மலர்ச்சி இலக்கியங்களுக்கு வயது இல்லை! சங்க காலத்திலேயே மறுமலர்ச்சி வேகம் வந்துவிட்டது!

"ஓரில் நெய்தல் கறங்க ஓரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி அணியப் பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார்பு உறைப்பப்
படைத்தோன் மன்றஅப் பண்பி லாளன்!
இன்னா தம்ம இவ் வுலகம்!
இனியகாண்க, இதன் இயல்புணர்ந்தோரே!"

(புறம் - 194)

என்ற சங்ககாலப் பாடலும்,

"..............................மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே! (புறம் - 192)

என்ற பாடலும் சங்ககாலத்தில் மறுமலர்ச்சிக்கு துணையாய் அமைந்த பாடல்கள்! முடியரசுகள் செல்வாக்காக இருந்த

நூற்றாண்டில், அரசனது ஆணை தெய்வீக ஆணை என்றிருந்த காலத்தில் அப்பரடிகள் அரசனின் ஆணையை எதிர்த்து முழங்கினார்.

*"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்!*
*நரகத்தில் இடர்ப்படோம் நடலை யல்லோம்*
*ஏமாப்போம் பிணியறிவோம் பணிவோ மல்லோம்*
*இன்பமே எந்நாளும் துன்ப மில்லை!*

*தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான*
*சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்*
*கோமாற்கே நாம்என்றும் மீளா ஆளாய்க்*
*கொய்ம்மலர்ச் சேவடிஇணையே குறுகினோமே!"*

(ஆறாம் திருமுறை 901)

என்ற பாடல், முடியாட்சியை எதிர்த்து குடியாட்சிக்கு வரவேற்புக் கூறிய பாடல் அன்றோ? திருக்குறள் முழுக்க முழுக்க மறுமலர்ச்சி இயக்க படைப்புக் கருவியாகும்!

இந்த நூற்றாண்டின் மறுமலர்ச்சி இயக்கத்திற்கு தமது படைப்புக்கள் மூலம் உயிரளித்து வருபவர்களில் முன்னோடியாக விளங்குபவர் கவிஞர், எழுத்தாளர் குலோத்துங்கன் ஆவார். அறிவியல் மேதை வா. செ. குழந்தைசாமியின் புனைபெயர்தான் குலோத்துங்கன் என்பது. நமது வாழ்க்கையில் மிகவும் அருமையாக — உயர்வானதாகக் காக்கப்பெற வேண்டியது, காலம்! இன்று, நம் மக்களிடத்தில் காலத்தின் அருமைப்பாடு உணரப் பெறவில்லை! இன்று நம்நாட்டில் மலிவாகச் செலவழிக்கப் படுவது — களவாடல் செய்யப்படுவது காலமேயாம்! கவிஞர் குலோத்துங்கனின், காலத்தின் அருமையை உணர்த்தும் கவிதை அருமையானது. இந்தக் காலத்தில் வாழும் நாள்கள் சில. இந்தச் சிறிய கால எல்லைக்குள் அறிந்துணர வேண்டிய உண்மைகள் பல உள்ளன. சலிப்பின்றி உழைக்கின்ற

வேளையில் வயிறு உணவு கேட்டுத் தொந்தரவு செய்கிறதாம்! வயிற்றுக்கு உணவு தேடுவதா என் தொழில்? குலோத்துங்கன் கவிதையைக் கேளுங்கள்!

*"கால மோவிரை கின்ற தோர்சிறு*
*கணமும் மீளுமோ? ஏழை இப்பெரும்*
*ஞாலம் மீதுறை நாட்க ளோ, சில!*
*நான் தெளிந்திட வேண்டும் உண்மைகள்*
*சால வுள்ளன! ஓய்வ றிந்திலன்*
*சலிப்பி றந்துழைக் கின்ற வேளையில்*
*ஓலம் இட்டெனை உணவு தேடென*
*உரற்று வாய்வயி றே!இஃ தென்தொழில்?"*

(குலோத்துங்கன் கவிதைகள் பக். 30)

*காலத்தைக் காத்துப் பயன்படுத்துவோம்! வாரீர்!*
*காலத்தை முறையாகப் பயன்படுத்துவோர் வாழும்*
*நாடு வளரும்!*

மறுமலர்ச்சி என்பது புதியன வேட்டல்! பழைய தலைமுறையைச் சேர்ந்தவன் குறிசொல்லும் கோணங்கி! பாரதி மறுமலர்ச்சிக் கவிதையில் முடிசூடா மன்னன்! ஏன் அவன் தன் வட்டங்களையும் கூடத் தாக்கியவன்! புரட்சிச் சிந்தனையாளன்! பாரதி, புதிய கோணங்கியாக நின்று, நமது நாட்டின் மறுமலர்ச்சிக்குக் கட்டியம் கூறி வரவேற்கின்றான்!

மறுமலர்ச்சிக்கு முதல் தேவை படிப்பு. அதனால், "படிப்பு வளருது! பாவம் தொலையுது!" என்று பாடினான் பாரதி. ஆனால், கடந்தகால வரலாற்றில் படித்தவர்களில் ஒரு சிலராலேயே மறுமலர்ச்சி இயக்கம் பயன்பெற்றது.

பலர் மானிடத்தின் வட்டத்தைச் சுருக்கிவிட்டனர்! தந்திரமாகச் சாதி, ஊழ் முதலியனவற்றைப் படைத்து, வளரும் சமுதாயத்திற்குத் தீங்கிழைத்து விட்டனர். இவர்கள் மெத்தப்படித்தவர்கள்; சாத்திரங்கள் செய்து சதி

செய்தவர்கள்! ஆதலால், கவிஞன் பாரதி, புதிய கோணங்கியில்,

"படிப்பு வளருது, பாவம் தொலையுது;
படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால்
போவான், போவான் ஐயோவென்று போவான்!"

என்கிறான். (பாரதியார் கவிதைகள் பக். 221 புதிய கோணங்கி)

படித்தவர்களை மக்கள் நம்புகின்றனர். ஆதலால், படித்தவர்கள் சூது பண்ணக்கூடாது. சென்ற காலத்திலும் சரி, இன்றும் சரி படித்தவர்களில் பலர் — சாதாரண மக்களுக்கு எதிராகச் சூது செய்து கொண்டு தான் வருகின்றனர்! என்று இந்தச் சூது ஒழியும்!

கல்வி என்பது ஆன்மாவில் ஏற்றப்படும் ஒரு ஒளி! அணையாது ஒளிவிடும் ஒளி! கல்வி, மனிதனின் பொறி, புலன்களுக்கு அர்த்தம் கற்பிப்பது; படைப்பாற்றலை வழங்குவது; அறிவியல் ஆளுமையை வ்ழங்கி, மனிதனை முழுமைப்படுத்துவது; மானிடம் வெற்றி பெறத் துணையாய் அமைவது.

இன்றைய கல்வி இப்படியா இருக்கிறது? மூளையில் செய்திகளைத் திணிக்கிறார்கள். வினை — விடைகளாக உருப்போட வைக்கிறார்கள்; நினைவாற்றலைச் சோதிக் கிறார்கள். மதிப்பெண் வழங்குவதிலும் "தர்மம்" புகுந்திருக் கிறது. தன்னம்பிக்கையும், திறமையும், ஆளுமையும் இம்மியும் இல்லை! ஆதலால், எங்கு பார்த்தாலும் இளைஞர்கள் சான் றிதழ்களைத் தூக்கிக் கொண்டு "வேலையோ வேலை" என்று அலைகின்றார்கள்.

இதற்காகவா பட்டம் என்று, கவிஞர் குலோத்துங்கன் கேட்கின்றார். "பட்டம் என்பது வருந்தப் பாடுபடாமல் உண்பதற்குரிய உரிமமா?" என்று கேட்கின்றார். ஏன்? எதனால்? என்று ஆழ்ந்துணரும் இயல்பாவது இருக்கிறதா? அதுவும் இல்லை.

"தினை தின்ற கோழி தினையாகக் கழியும்" என்ற பழமொழியைப் போலக் கற்றதை ஒப்புவித்தல்! அவ்வளவு தான் இன்றைய படிப்பு!

*"பட்டமெலாம் மெய்வருந்திப் பாடுபடா*
*வாழ்வுக்குப் பாதை காணும்*
*திட்டமென முடிந்ததுவே! தெளிவில்லேன்*
*ஆழ்ந்துணரும் திறமை காணேன்!"*

(குலோத்துங்கன் கவிதைகள் பக். 26)

என்பது கவிஞர் குலோத்துங்கனின் கவிதை.

கல்வி என்னென்ன தரவேண்டும்? கல்வி பெருமையைத் தரவேண்டும்! புகழைத் தரவேண்டும்! நாளைய வாழ்க்கையை நல்வாழ்க்கையாக அமைக்க வேண்டும். இத்தகைய கல்வி அறிவாண்மையைத் தரும். ஆய்வு படைவீடு அமைக்கப் பெறுதல் வேண்டும் என்பது கவிஞர் குலோத்துங்கனின் ஆசை.

இதோ பாடல்,

*"பெருமையும் புகழும் நாளைப்*
*பெற்றியும் உயர்ந்த கல்வி*
*தரும்எனத் தெளிவோம் ஆய்வுச்*
*சாலைநம் படைவீ டென்போம்"*

(குலோத்துங்கன் கவிதைகள் 80)

இந்தக் கவிதை என்று நடைமுறையாகும்? நமது மக்களும் அரசும் ஆசிரியப் பெருமக்களும் இந்தக் கவிதையை உணர்ந்து நல்ல ஆளுமைத் தன்மையுடைய கல்வியை வழங்க முன்வருதல் வேண்டும். இது தவிர்க்க இயலாத அவசர அவசியக் கடமையாகும்.

வாழ்க்கை வாழ்வதற்கே! வாழ்தல் வேறு! பிழைத்தல் வேறு. "வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே!" என்ற திருவாசகத்தின் நுண்பொருள் தெளிக! "சீச்சீ நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு" என்ற பாரதியின் திட்டுதலையும் நினைவிற் கொள்க!

ஆதலால் வாழ்க்கை வாழ்வதற்கே! வாழ்க்கை அக நிலையிலும் புறநிலையிலும் ஓயாது போராடும் தன்மை யுடையதாக நிகழின், வாழ்வு செம்மையாக அமையும்!

"எந்தப் பொருளுக்கும் அழிவு உண்டு. எவர் வாழ்க்கையிலும் பிரச்சனைகள் உண்டு. பிரச்சனைகளைக் கண்டு பயப்படக் கூடாது.

பிரச்சனைகளைக் கண்டு பயந்தால், அந்தப் பிரச்சனைகள் நம் தோளின்மீது ஏறி உட்கார்ந்து கொண்டு நம்மை ஏவல் கொள்ளும்! நாம் அந்தப் பிரச்சனைகளைப் பிடித்து அமுக்கி நமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் பிரச்சனைகள் தீரும்; வாழ்க்கையும் இயங்கும். இத்தகைய வாழ்க்கைப் பிரச்சனையைச் சந்திக்கத் தெரியாத ஒருவனின் அவலம் பற்றி, தொ. மு. சி. ரகுநாதனின் "பஞ்சும் பசியும்" நாவல் விவரிக்கிறது.

"வாழ்க்கைப் பிரச்சனைகள் தன்னை நாலாபுறத்திலும் சூழ்ந்துகொண்டு பயமுறுத்துவதுபோல், அவனுக்குத் தோன்றியது. அடிவானத்தில் மின்னிய மின்னலைப் பார்க்கக் கூசும் கண்களைப் போல் அந்த பிரச்சனைகளை ஏறிட்டுப் பார்க்கவே அவன் மனம் கூசியது. ஏறிட்டுப் பார்க்கா விட்டாலோ பாரம் தாங்க முடியாத இருள் மண்டலம் தன்மீது விழுந்து தன்னை அமுக்குவது போல் அவனுக்குத் தோன்றியது" என்று விவரிக்கிறது. (பஞ்சும் பசியும் பக். 195)

ஏன் இந்த அவலம்? பிரச்சனைகள் நம்மைவிட ஆற்றல் வாய்ந்தவை அல்ல! பிரச்சனைகளைச் சந்திக்கத் தயாரா குங்கள்!

பிரச்சனைகள் நிறைந்த வாழ்க்கையில் நின்று, நீந்திக் கரையேறி, வெற்றி வாகை சூடவேண்டும். இப்படிக் கரை யேறினால்தான் "மானிடப் பிறவி உயர்ந்தது என்ற சித்தாந்தத்திற்குப் பொருள் கிடைக்கும் என்று கன்னட இலக்கியங்கள் வழி நடத்துகின்றன.

ஆம்! நாளும் வாழ்க்கை தளிர்த்தல் வேண்டும்! வாழ்க்கை பட்ட மரம் போலானால் என்ன பயன்? நாளும் வாழ்க்கையில் வளர்ச்சி வேண்டும்! வளர்ச்சிக்குத் தேவையான மாற்றங்கள் வேண்டும்! நாளும் வளராத வாழ்வும் - ஒரு வாழ்வா? இது கவிஞர் குலோத்துங்கனின் வினா!

"வாழப் பிறந்தவர்கள் சாகக் கூடாது! செத்துக் கொண்டே நடைப்பிணங்களாக வாழ்வதில் பயனில்லை! வாழ்க்கை ஒரு போர்க்களம்! நன்றே நடக்கும் போர்க்களம்!" — இது, தொ. மு. சி. ரகுநாதன் தந்துள்ள பஞ்சும் பசியும் புதினத்தின் ஊக்க உரைகளாகும்.

இந்த நூற்றாண்டில் அறிவுப் புரட்சிபற்றி அதிகமாகப் பேசப்படுகிறது. ஆனால், நடைமுறையில் அறிவுப் புரட்சி ஏற்பட்டால் மட்டும் போதாதென்பது உண்மையாகி வருகிறது.

உயிர்க்குலம் அனைத்துக்குமே அறிவு உண்டு. விலங்குகள், தாவரங்கள் ஆகியவைகளுக்கும் அறிவு உண்டு. இவைகளுக்கும் மனித குலத்துக்குமிடையே அறிவில் இடைவெளி கூடுதல் குறைவாக இருக்கலாம். ஆனாலும் மானிடன் தான் பெற்ற கூடுதல் அறிவைக் கொண்டு அப்படியொன்றும் பிரமாதமாகச் சாதித்து விடவில்லை. மாறாகத் தீங்கைத்தான் செய்து வருகிறான்.

இந்த அறிவியல் அளவுக்குச் சான்றோர்களும் மாமேதைகளும் விதி விலக்காவர். மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இடையே உள்ள தகுதி வேறுபாட்டை அறிவினால் மட்டும் நிர்ணயித்தல் கூடாது.

மனிதன் கடைப்பிடிக்கும் நடைமுறைகளும், செயல் முறைகளும் மனிதனை விலங்குகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவனவாகும். இந்த அளவைக்கு ஈடுகொடுக்கும் மாந்தர் எங்குளர்? யார் அவர்? 'பஞ்சும் பசியும்' ஆசிரியர் தொ.மு.சி. ரகுநாதன், அறிவுப் புரட்சி பற்றி விவரிக்கிறார் கேளுங்கள்.

அறிவுப் புரட்சி, அறிவுப் புரட்சி என்று அடித்துக் கொள்கிறாயே, அறிவில் மட்டும் புரட்சி ஏற்பட்டால் போதுமா? இப்போது என்னை எடுத்துக் கொள், எனக்கு இந்த மூட நம்பிக்கைகளில் ஒன்றும் நம்பிக்கை இல்லை. மனிதனை மனிதனாகத்தான் நேசிக்கிறேன். இதனால், என் வாழ்க்கை மேம்பட்டு விட்டதா?

சொர்க்கத்தில் இருக்கிறோம் என்று நினைத்துக் கொள்வதால் மட்டும் ஒருவன் சொர்க்கத்துக்குப் போய் விட முடியுமா? அறிவு வேண்டும்; அந்த அறிவின் கொள்கை வெற்றி பெற நடைமுறைப் போராட்டம் வேண்டும். இல்லா விட்டால் ஒன்றும் நடக்காது என்று ஓர் உரையாடலில் கூறுகிறார். இது நமது கவனத்திற்குரியது.

அறிவு, உணர்வைத்தான் தரமுடியும். ஆனால், வாழ்வியல் நடைமுறைதான் வெற்றியைத் தரமுடியும். கொள்கையும் நடைமுறையும், சிந்தையும் செயலும் ஒன்றுபட்டால்தான் காரியங்கள் நிறைவேறும்! துன்பம் அகலும். இன்பம் வந்தடையும்! அறிவை, உணர்வை நடைமுறைக்குக்கொண்டு வரும்பொழுது மானிடத்திற்கு உழைப்பு அறிமுகமாகிறது.

ஆம்! உலகத்தை இயற்றும் உன்னதமான ஆற்றல் உழைப்பிற்கு உண்டு. உழைப்புக்கு ஈடாக உலகத்தில் பிறிதொன்றில்லை! உழைப்பே உலக வரலாற்றில் உயிர்ப்பு! "கைவருந்தி உழைப்பவர் தெய்வம்" என்றான் பாரதி! எங்கே உழைப்பிருக்கிறதோ, அங்கே மனத்திற்கு ஊசலாட்ட மில்லை!

உழைப்புள்ள இடத்தில் மனம் தூய்மையாக இருக்கும். உழைப்பாளர் மனம், இறைவனின் சந்நிதியாகும். உழைப் பாளிகள் வாழ்வர்; வாழ்வித்து வாழ்வர், உழைப்பாளிகள் யாரொருவருக்கும் தீங்கு செய்யார். இக்கருத்துக்களை அழகுற விளக்கும் பாடல் ஒன்று இதோ:

**"உழைக்கின்ற நோக்கம் உறுதியாயிட்டா**
**கெடுக்கிற நோக்கம் வளராது — மனம்**
**கீழும் மேலும் புரளாது"**

இது பட்டுக்கோட்டையின் பாடல், உழைப்பு ஆற்றல் வாய்ந்தது. நல்ல ஆற்றல் வாய்ந்த உழைப்பாளி வாய்ப்புக் களை எதிர்பார்த்துக் காத்திருக்க மாட்டான். அவனே வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்வான்.

உழைக்கும் உள்ளம் பெற்ற ஒருவன் தனக்கு வாய்த்திருக்கிற கருவிகள், களங்கள், வசதிகள் ஆகியவை பற்றிக் கூடக் கவலைப்பட மாட்டான்! "பொறியின்மை யார்க்கும் பழியன்று" என்ற வள்ளுவம், இவன் வாழ்க்கையின் விளக்கம். ஏன், உடலில் ஊனம் இருந்தால் கூட அவன் அஞ்சுவதில்லை. திடமான மனத்துடன் திறமை சான்ற உழைப்பைச் சாதனமாகக் கொண்டு உலகில் வெற்றி பெறுகின்றான்.

ஜெயகாந்தனின் "நான் இருக்கிறேன்" என்ற சிறு கதையில் சில வரிகள் இந்த உணர்வுகளை நமக்கு ஊட்டு கின்றன.

"காலு இல்லாட்டிப் போனா என்னாய்யா? கையாலே இந்த உலகத்தையே வளைக்கலாமே! வாழறதுக்குக் காலும் கையும் வேணாமய்யா. நல்ல மனசு வேணும்! அறிவு வேண்டும்! மனுசனோட அறிவு யானையைக் காட்டிலும், சிங்கத்தைக் காட்டிலும் வலுவானது. இல்லேங்கறதுக்காகச் செத்து இருந்தா மனுச சாதியே பூண்டத்துப் போயிருக்கும் காலு இல்லாட்டி அது இல்லாத கொறையை மாத்திக்கிட்டு எப்படி இருக்கிறதுன்னு யோசிக்க ஆரம்பிச்சேன்னா காலு இருக்கிறவங்களைக் காட்டிலும் நீ வேகமா ஓடிட மாட்டியா?" என்று வியாதிக்காரன் மூலம் நொண்டியை ஊக்கப்படுத்தும் ஜெயகாந்தனின் அறிவுரை கொள்ளத் தக்கது.

ஆம்! உடலில் ஊனம் என்பது வாழ்க்கையைக் கெடுக்கக் கூடியதன்று! ஆனால், உடலில் ஊனம் என்ற நினைப்பு இருக்கிறதே, அது ஆளை அரித்து கொன்று விடும்! உடல் ஊனங்கள் அலட்சியப்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் வாழ்க்கை இன்பமாக அமையும். மீண்டும்

ஜெயகாந்தனின் "நான் இருக்கிறேன்" என்ற சிறுகதையின் வரிகளைக் கேளுங்கள்.

"இந்தாய்யா, நீ சாகப்படாது..... சொல்லிட்டேன். ஒனக்குக் காலு இல்லேங்கிற நெனப்பினாலேதான் நீ கஷ்டப்படறே. மத்தவங்களையும் கஷ்டப்படுத்தறே!" என்பவை அந்த வரிகள்!

மனித உலகம் சிந்திக்கத் தொடங்கிய காலந்தொட்டு உழைப்பு, உழைப்பின் உயர்வு பற்றி ஆயிரம் பேசப் பட்டுள்ளது. "உழைத்தால் உயரலாம்" என்று பல்லவி, அனு பல்லவியாகத் தலைமுறை தலைமுறையாகச் சொல்லி வந்திருக்கிறார்கள்!

ஆனால், உழைத்தவர்கள் முன்னேறியிருக்கிறார்களா? கழனியில் உழும் உழவன், உழைப்பாளி! அவன் நியாய விலைக் கடைக்கு அரிசி வாங்கப் போகாமல் இருக்கிறானா? இலவச அரிசி வாங்காமல் இருக்கின்றானா?

மாடுகள் வளர்த்துப் பாலினைக் கறந்து உலகுக்கு வழங்கும் தொழிலாளியின் வீட்டுப் பிள்ளைகளுக்குப் பால் அறிமுகம் உண்டா? "கொக்குபோல் பால்" என்ற கதையை கேட்டிருப்பீர்கள்! அதுபோலத்தான் அவன் பிள்ளைகளின் நிலை!

நில உலகம் முழுதும் ஓங்கி உயர்ந்திருக்கும் மாளிகை களைக் கட்டித் தந்த கொத்தனார்களுக்கு வீடு உண்டா? ஏன் இந்த அவலம்!

அறிஞர் அண்ணா, இந்தத் துன்பம் நிறைந்த உழைப் பாளிகளின் வரலாற்றை "செவ்வாழை" என்ற கதையில் விளக்கும் பாங்கு, நினைக்கத்தக்கது! உணரத் தக்கது! இதயமிருந்தால் இத்தகைய கொடிய நிகழ்ச்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முனைவீர்!

இதோ, அண்ணாவின் படைப்பு! "செவ்வாழை"யின் ஒரு பகுதி:

"நம்ம கொல்லையிலே நாம் வளர்த்ததல்லவா!" — என்று அழுகுரலுடன் கேட்கும் குழந்தைகளும், குழந்தை

களைத் தவிக்கச் செய்கிறாயே, நியாயமா என்று கோபத்துடன் கேட்கும் மனைவியும் அவன் மனக் கண்களுக்குத் தெரிந்தனர்! எதிரே நின்றவரோ, பண்ணைக் கணக்கப்பிள்ளை! அரிவாள் இருக்குமிடம் சென்றான்.

'அப்பா, குலையை வெட்டப் போறாரு - செவ்வாழைக் குலை' — என்று ஆனந்தக் கூச்சலிட்டுக் கொண்டு, குழந்தைகள் கூத்தாடின. செங்கோடனின் கண்களிலே நீர்த்துளிகள் கிளம்பின! குலையை வெட்டினான்! உள்ளே கொண்டு வந்தான்! அரிவாளைக் கீழே போட்டான்!

"குலையைக் கீழே வை அப்பா, தொட்டுப் பார்க்கலாம்" என்று குதித்தன குழந்தைகள்! கரியனின் முதுகைத் தடவினான் செங்கோடன். "கண்ணு! இந்தக் குலை, நம்ம ஆண்டைக்கு வேணுமாம் கொண்டு போகிறேன் — அழாதீங்க — இன்னும் ஒரு மாசத்திலே பக்கத்துக் கண்ணு மரமாகி குலைத் தள்ளும், அதை உங்களுக்குக் கட்டாயமாகக் கொடுத்துவிடறேன்" என்று கூறிக்கொண்டே, வீட்டை விட்டுக் கிளம்பினான், குழந்தையின் அழுகுரல் மனதைப் பிளப்பதற்குள்."

இந்தப் பகுதி நம் உள்ளத்தை உருக்குகிறதல்லவா?

உழைப்பு — வேலை, அதாவது உழைக்கும் ஆற்றலைக் கருவியாகக் கொண்டு செய்யப்படுவது வேலை! உழைப்பின் ஆக்கமே வேலை!

இந்த நிலவுலகில் உழைத்து உண்ணவேண்டும் என்ற ஆர்வலர்களுக்கு எங்கும் வேலையுண்டு! அவர்களே தங்களுக்குரிய வேலையை உருவாக்கிக் கொள்வர். தாமே வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொள்பவர்கள், தகுதி மிகுதியும் உடையவர்கள்! உழைப்பால் மட்டுமே அவர்கள் வாழ விரும்புவார்கள்!

இத்தகைய ஆர்வம் இன்று பலரிடம் இல்லை! இன்று வேலை தேடுகிறார்கள்! வருகைப் பதிவேட்டோடும் ஊதியத்தோடும் தொடர்புடைய வேலையையே விரும்பு கிறார்கள்! இவர்களுக்குக் கடின உழைப்பில் நாட்டமில்லை;

இத்தகையோர் வேலை தேடு படலத்தில் ஈடுபடுகின்றனர்; உண்மையாக அல்ல — ஒப்புக்காகவே!

சிறுகதை ஆசிரியர் வல்லிக் கண்ணனின் "வாழ விரும்பியவன்" என்ற படைப்பில் ஒரு பகுதி.

"அவர்களுக்கு 'வேலை' என்று எதுவுமில்லை. தேடி வந்து சேராத — எங்கே எப்படிக் கிடைக்கும் என்றே தெரியாத — ஏதாவது ஒரு வேலையைத் தேடிக் கொண்டிருப்பதாகத்தான் பாஸ்கரனும் அவனைப் போன்ற நண்பர்களும் சொல்லித் திரிந்தார்கள்" என்று வேலை தேடுவோரின் நிலையை சித்திரித்துக் காட்டுகின்றார் வல்லிக்கண்ணன்.

இத்தகையோரால் நாடு வளருமா? நாட்டு அரசுகள் வேலை வாய்ப்பை உண்டாக்குவதற்கு தமது திட்டங்களில் முன்னுரிமை தந்து வழங்கவேண்டும். அதே நேரத்தில், இளைஞர்களும் காத்துக் கொண்டு இராமல் சுயவேலை வாய்ப்புக்களில் ஈடுபட வேண்டும். முன்னுக்கு வரவேண்டும் என்ற துடிப்பு இருந்தால் இன்று எதையும் செய்யலாம். அவ்வளவு வாயில்கள் இன்று அமைந்துள்ளன.

"வாழ்க்கை சிறப்புற அமைய, போர்க்குணம் தேவை" என்றான் மாமேதை லெனின், அறியாமை, வறுமை, ஏழ்மை இவற்றை எதிர்த்துப் போராடும் போர்க்குணம் வேண்டும். போர்க்குணம் இல்லாத வாழ்க்கை பிண வாழ்க்கை. தொ.மு.சி. ரகுநாதன் தமது 'பஞ்சும் பசியும்' நாவலில்,

> "போராடுவோம்! வெற்றி பெறுவோம்!
> போராடுவோம்! வெற்றி பெறுவோம்!"

என்று, முழங்குவதைக் கேளுங்கள்!

ஒரு சமுதாயத்தில் எவை எவை மதிக்கப்படுகின்றனவோ, அவற்றைப் பொறுத்தே அந்தச் சமுதாயத்தின் நடைமுறை அமையும்; வரலாறு நிகழும்!

பொதுவாக, மனித மதிப்பீடு — "நீதி சார்ந்த மதிப்பீடு!" "ஒழுக்கச் சார்பான மதிப்பீடு!", "பண மதிப்பீடு!" என்றெல்லாம் அமையும்.

இன்று, நமது நாட்டை வருத்துவதெல்லாம் பண மதிப்பீட்டுச் சமுதாயமேயாகும். எங்குப் பார்த்தாலும் பணத்திற்கே மதிப்பு! கல்விக் கோயிலா? அங்கும் பணம் தான்! கடவுள் சந்நிதியா? ஐயய்யோ, சொல்லவே வேண்டாம்! அங்கும் பணத்திற்கே கொள்ளை மதிப்பீடு!

கணவன் மனைவி உறவா? அங்கும் ஊடே பணமே விளையாடுகிறது! இந்தப் பண மதிப்பீட்டுச் சமுதாயம் அன்பைக் கெடுக்கிறது; உறவைக் கெடுக்கிறது; வாணிகப் புத்தியை வளர்க்கிறது; இலாப வேட்டையை நடத்துகிறது. இன்று நாட்டுடைமை யாக்கப்பட்டுள்ள கையூட்டு, பண மதிப்பீட்டுச் சமுதாயத்தின் விளைவேயாகும்.

“எப்பாடு பட்டேனும் பணத்தைச் சம்பாதித்துவிடு! அதற்கு அப்புறம் நீ, நீயேதான்” என்கிறது இந்தப் பண மதிப்பீட்டு சமுதாயம்! இப்படிப்பட்ட சமுதாய வளர்ச்சியில் மனித நேயம் மறக்கப்பட்டு வருகிறது.

பணம் இல்லையானால் இன்று சராசரி வாழ்க்கை கூட வாழ இயலாது. பணம் படைத்தவர்கள் வாழும் மகிழ்ச்சிகரமான வாழ்க்கையைப் பார்த்துப் பலர், அத்தகைய வாழ்க்கையை விரும்புகின்றனர். அவர்களைப் போலவே, தாமும் வாழ ஆசைப்படுகின்றனர்.

அதன் காரணமாக ஜோதிடரை நாடுகின்றனர்; குறி சொல்லுபவனை நாடுகின்றனர்; பரிசுச் சீட்டை நாடு கின்றனர். ஆயினும் முன்னேற்றமில்லை! நேரத்தைக் கழித்ததே மிச்சம்; இதனால், இனம் தெரியாத விலங்கியல் வாழ்க்கை கால்கொள்கிறது. இதோ, முற்போக்குச் சிந்தனை யாளர் வல்லிக்கண்ணனின் படைப்பில் ஒரு பகுதி:

“பணமே முக்கியம். பணத்துக்கே மதிப்பு அதிகம் என்ற நிலை ஏற்பட்டுவிட்ட சமுதாய அமைப்பில், ஆசையும் அரிப்பும் பெற்றுள்ள அனைவரும் பணம் தேடுவதிலும், மேலும் மேலும் தேடிக் குவிப்பதிலும் தீவிர வேகம் காட்டுவது இயல்பாகி விட்டது.

பணம் இருந்தால் எதையும் செய்ய முடியும். இஷ்டம் போல் அனுபவித்து வாழ முடியும் என்று வாழ்க்கை கண்முன்னே வெளிச்சமிட்டு மினுக்குகிற போது, துணிச்சல் பெற்றவர்களும், தேவை மிகுந்தவர்களும் எப்படியும் பணம் பண்ணுவது என்று வெறி உணர்வோடு மும்முரமாக முனைவது சகஜமாகியுள்ளது கால ஓட்டத்திலே.

"பணம் இல்லாமல் இருப்பதுதான் பாவம். இன்றைய சமுதாயத்தில் பணம் பண்ணத் தெரியாமல் இருப்பதுதான் குற்றம். நானும் வாழ வேண்டும். சுகமாக, வசதியாக, வெற்றிகரமாக வாழ்கிற பலரையும்போல் வாழ வகை செய்யவேண்டும் என்று பாஸ்கரனும் ஆசைப்பட்டான்" என்று வல்லிக்கண்ணன் தன் பாத்திரத்தின் மூலம் இன்றைய பண மதிப்பீட்டுச் சமுதாயத்தின் நிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறார்.

தனி மனிதன், சமூகம் இவர்களில் யார், யாருக்கு ஆதாரம்? சமூகத்தைத் துறந்து காட்டுக்கு ஓடிப்போவது தான் பெருமைக்குரிய விஷயமா? மனச்சாட்சி என்பது என்ன? அதற்குரிய மதிப்பு என்ன? என்றெல்லாம் ஆராய்ந்தறிவது அவசியம். தனிமனிதன் கணக்களவில் — எண்ணிக்கை அளவில். ஒரே ஒரு மனிதன்தான்! ஆயினும், அவன் பிறந்து வளர்ந்து வாழும் சமூகம் — சமூகத்தின் நிகழ்வு அவனிடத்தில் ஏராளமான தாக்கங்களை — பாதிப்புகளை ஏற்படுத்துகிறது என்பதை மறந்துவிடக்கூடாது.

"மனித உலகத்தைத் துறந்து ஓடுவது துறவறமன்று. மனித சமூகத்திற்குள்ளேயே வாழ்ந்து கொண்டு மனித சமூகத்தைப் புரிந்துகொண்டு, மனித சமூகத்தின் துன்ப நீக்கத்துக்காகப் பாடுபடுபவர்களே ஞானிகள்" என்றான் கதே என்ற தத்துவஞானி!

இந்த கருத்தை, ஜெயகாந்தனின் "கருங்காலி" என்ற சிறுகதையில் வரும் கோவிந்தன், ராகவனிடம் கூறும் பாங்கில் கேட்டுத்தான் பாருங்களேன்!

மகரிஷிகள், ஞானிகள் எல்லாம் காட்டுக்குப் போய், காட்டோடு அவர்கள் போயிருந்தால் அவர்களுக்கு என்ன பெருமை? உலகத்தைத் துறந்துபோன ஞானிகள் தங்கள் ஞானம் வாழணும்னா மனுஷ சமூகத்துக்குத் திரும்பி வந்து, அவர்கள் மத்தியில்தான் வாழணும். காட்டுக்குப் போனதாலே மட்டும் இல்லே; திரும்பி வந்ததனாலேதான் அவர்களுக்குப் பெருமை இருக்கு" என்ற ஜெயகாந்தனின் கோவிந்தன் கூறுவது நினைந்து போற்றத்தக்கது!

அடுத்து, மனசாட்சி! கவியரசு கண்ணதாசன்

*கண்ணில் வருவது காட்சி! அந்தக்*
*காட்சிக்கு சாட்சி மனம்!*
*காட்சியை மறந்தன கண்கள் — மனச்*
*சாட்சியை மறைத்தது உள்ளம்!*

என்று அழகுறப் பாடுவார்.

ஒரு பொருளை ஒருவன் பார்க்கிற பார்வையில், எந்த நோக்கத்தோடு அவன் பார்க்கிறான் என்பது யாருக்குத் தெரியும்? பார்ப்பவன் மனச்சாட்சியே இதற்குச் சாட்சி! அவனோ, அவனுடைய மனச்சாட்சியை மூடி மறைத்து விடுகின்றான். மனச்சாட்சி என்பதைப் பற்றி மாவீரன் மாஜினி சொல்லும் செய்திகள் கவனத்திற்கு உரியன.

இன்று நம்மில் பலர், எடுத்ததற்கெல்லாம் "மனச் சாட்சிப்படி நான் பொய் சொல்லவில்லை" என்று கூறுவர். அவருடைய மனம் நடுநிலையில் நின்றதா? நீதியைச் சார்ந்திருந்ததா? என்றெல்லாம் ஆய்வு செய்து அறிவது கடினம்.

ஆதலால், அவருடைய மனச்சாட்சி மட்டுமே ஆய்வு அளவையில் எடுத்துகொள்ளக் கூடியது. தனிமனித மனச்சாட்சி என்பது சமூகத்தின் மனச்சாட்சியோடு ஒத்திருக்க வேண்டும். அதாவது, "ஒருவர் கூறுவது, சமூகம் ஏற்றுக்கொள்ள தக்கதாக இருக்கவேண்டும்" என்பது மாவீரன் மாஜினியின் கருத்து.

ஜெயகாந்தனின் படைப்பாகிய 'கருங்காலி'யில் ஒருசில வரிகள்:

"தனிமனித மனச்சாட்சி, சமூக மனச்சாட்சிக்குக் கொஞ்ச காலமாவது கட்டுப்பட்டுத்தான் ஆகணும், அந்த தனிமனிதனின் நியாய வாதம் உண்மையிலேயே தர்மமா இருந்தா அதை நிச்சயம் சமூகம் கொஞ்சம் பொறுத்து ஏற்றுக் கொள்ளும். அப்படியும் சமூகம் ஏற்றுக் கொள்ளலேன்னா அது தர்மம் அல்ல; ஆமாம், தர்மத்துக்கு அதுதான் இலக்கணம்"

ஜெயகாந்தனின் இந்தக் கருத்திற்கேற்ப நாம் சமூகத்தின் மனச்சாட்சிக்கு மதிப்புக் கொடுப்போமா?

சமூகம் என்ற சொல், இன்று கிட்டத்தட்ட சமுதாயத்தின் ஒரு பகுதியை, ஒரு சிறு ஜாதி வழிப்பட்ட கூட்டத்தைக் குறிக்கும் சொல்லாகவே வழங்கப்படுகிறது. ஆனால் இலக்கியங்களில் சமூகம் என்பது மனிதகுலம் என்ற பொருளில்தான் வழங்கப்படுகிறது. பாவேந்தன் பாரதிதாசன்,

"ஒன்றே சமூகம் என்றெண்ணார்க்கே! இறுதி! உறுதி!
உறவினர் ஆவார் ஒருநாட்டார்—எனல் உறுதி!
பிறவியில் உயர்வும் தாழ்வும் செய்தல் மடமை! — இந்தப்
பிழை நீக்குவதே உயிருள்ளாரின் கடமை!"

என்று பாடுவான்!

பாவேந்தன் கருத்துப்படி சமூகம் என்பது நாடு, மொழி, சமயம் கடந்தது. சமூகம் என்பது மாந்தர் கூட்டமேயாம். ஆனால், நமது நாட்டின் சமூக வரலாறு கூறுவது என்ன? மாந்தரிடையே தீண்டாமை, உயர்வு, தாழ்வு என்ற வேற்றுமைகள்! இந்த அடிப்படையிலான பேதா ஓபேதங்கள்! பிரிவினைகள்! இன்று நம் கண்முன் காட்சி யளிக்கும் சமுதாயம் ஒருருவும், ஒருணர்வும் உடையதன்று. இதனை மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்,

*"உச்சி மலையிலே ஊறும் அருவிகள்*
*ஒரே வழியிலே கலக்குது!*
*ஒற்றுமை யில்லா மனிதகுலம்*
*உயர்வும் தாழ்வும் வளர்க்குது!"*

(பட்டுக்கோட்டை பாடல்கள் பக். 18)

என்று மிகவும் அழகாக உணர்த்துகின்றார். மானிட சமுதாயத்தில் ஒருவரை ஒருவர் அனுசரித்து, ஒட்டி உறவாடி வாழ்ந்தால்தான் வளரலாம். எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஒதுக்குதல் — ஒதுங்குதல் என்ற கொள்கை அறவே கூடாது. மானிடத்தோடு ஒட்டி வளர்ந்தாலே உயர லாம்; உயர முடியும். இந்த அழகிய கருத்தினை மூங்கில்கள் மூலம், மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை விளக்கிக் கூறும் பாடல் இதோ:

*"ஓங்கி வளரும் மூங்கில் மரம்*
*ஒன்னை ஒன்னு புடிச்சிருக்கு!*
*ஒழுங்காகக் குருத்து விட்டு*
*கொள்ளை கொள்ளையா வெடிச்சிருக்கு!*
*ஒட்டாமே ஒதுங்கி நின்னால்*
*உயர முடியுமா? — எதிலும்*
*ஒத்துமை கலைஞ்சுதுன்னா*
*வளர முடியுமா?"* (பட்டுக்கோட்டை பாடல்கள் பக். 19)

இனிய அன்பர்களே! பட்டுக்கோட்டையின் பாடல், அனுபல்லவி போன்ற பாடலாகும். ஏனெனில், இதற்கு முன்பு, இதுபற்றி நமக்கு எடுத்துக் கூறியவர்கள் நூற்றுக் கணக்கானவர்கள்! அவர்கள் கூறியவற்றை நாம் செவி மடுக்கவே இல்லை! இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குச் சாதியை, சாதிக் கலவரங்களைக் காப்பாற்றப் போகிறீர்கள்! இது என்ன நாம் செய்த ஊழா? அல்லது மற்றவர்கள் செய்த கர்ம வினைதான் இவ்விதம் வந்து மூண்டிருக்கிறதா?

கு. VI.30.

ஆறு! வெள்ளப் பெருக்கெடுத்து ஓடும் ஆறு! ஆற்றோட்டத்தின் ஒதுக்குப்புறத்தில் சிறு குழிகள்! அச்சிறிய குழிகளில் ஆற்று வெள்ளத்தோடு வரும் மாசுகள் அடையும்! இந்த உவமை, பாரதியின் உவமை. பாஞ்சாலி சபதத்தில் பாரதி எடுத்தாளும் உவமை.

ஆம்! பாண்டவர்களின் துன்பத்திற்கு அவர்களின் ஊழ் காரணமன்று. சகுனி, துரியோதனன் முதலியோருடைய கர்மப்பயன் பாண்டவர்களை வந்து வருத்துகிறது. காரணம், ஒரு நாடு, ஒரு சமூகம் ஆகிய அமைதியேயாம்! இன்றும் நம்மில் பலரை — ஏன்? கோடானுகோடி மக்களை ஏழ்மையிலும் அறியாமையிலும் கிடத்தித் துன்புறுத்துவது அவர்களுடைய ஊழ் அன்று.

இந்த நாட்டை ஆண்ட, ஆண்டு கொண்டிருக்கின்ற அரசுகள், முதலாளித்துவத்திற்குக் கட்டியம் கூறும் மதத் தலைவர்கள் முதலியோர் செய்த தீயூழே இன்றைய ஏழை மக்களை வருத்துகிறது. இதற்குப் பெயர் "சமூக ஊழ்"

அன்று சிலப்பதிகாரக் கண்ணகியை வருத்தியது பூம்புகார்ச் சமுதாயத்தின் சமூக ஊழ். பாரதியின் "பாஞ்சாலி சபத"த்தில் ஒரு பாடல். கேளுங்கள்!

"..................

வையம் மீதுள வாகும் அவற்றுள்
விதியினும் பெரிய தோர்பொரு ளுண்டோ?
மேலை நாம் செய்யும் கர்மம்அல் லாதே
நதியில் உள்ள சிறுகுழி தன்னில்
நான்கு திக்கி லிருந்தும் பல்மாசு
பதியு மாறு பிறர் செய்யும் கர்மப்
பயனும் நம்மை அடைவதுண் டன்றோ?"

(பாஞ்சாலி சபதம் பக். 407)

ஆதலால், தனித்து வாழ்ந்தால் உயர்ந்துவிடலாம் என்று எண்ணாதீர்கள்! நீங்கள் வாழும் சமுதாயத்தையும் —

உங்களை உருவாக்கும் சமுதாயத்தையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்!

சமூகத்தைப் பாதுகாப்பது என்றால் என்ன? கழனியில் பயிரைப் பாதுகாப்பது போன்றது அது. கழனியில் பயிரைப் பாதுகாப்பது என்றால் என்ன? பயன் தரும் பயிர்களை, பயன் தராத களைகள் அழித்து விடாமல் பாதுகாப்பது தானே, பயிர்ப் பாதுகாப்பு? அதுபோல, சமூகத்தின் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் தடையாக இருக்கிற சமூகத் தீய சக்திகளை எதிர்க்க வேண்டும். களையெடுக்காமல் பயிர் வளர்க்க முடியாது. சமூகத்தின் தீய சக்திகளை வெற்றி கொள்ளாமல் நல்ல மனித சமூகத்தைக் காண முடியாது.

பைந்தமிழ்த் தேர்ப்பாகன் பாரதியும்கூட நமக்கும் நம்முடைய பாப்பாக்களுக்கும்,

*"பாதகம் செய்பவரைக் கண்டால் — நீ*
*பயங்கொள்ள லாகாது பாப்பா!*
*மோதி மிதித்துவிடு பாப்பா — அவர்*
*முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!"*

என்று சொல்லிக் கொடுத்தது என்னவோ உண்மை! ஆயிரம் பாரதி வந்துதான் சொல்லட்டுமே! நமக்கு எங்கே அந்தத் துணிவு வரப்போகிறது? பாண்டவர்களுக்கே கண்ணன் வந்ததால்தானே துணிவு பிறந்தது! நமக்குக் கண்ணன் வருவானா? அந்த விஷயத்திலும் — கடவுள் விஷயத்திலும் நமக்குப் போதிய நம்பிக்கையில்லையே! நடப்பது நடக்கட்டும்!

நமக்கு எவ்வளவு தயக்கம்? இன்று நாம் அஞ்ச வேண்டியவைகளுக்கா அஞ்சுகிறோம்! அஞ்ச வேண்டாத வைகளுக்கே அஞ்சுகின்றோம்! இன்று மீண்டும் துரியோத னாதியர்கள்! சூரபதுமன்கள்! எங்குப் பார்த்தாலும் அவர்களே வெற்றி உலாப் போகின்றனர்!

இந்த அச்சம் நமக்கு என்று தொலையுமோ, அன்று தான் நாட்டில் நல்லவர்கள் வாழ்வார்கள்! நல்லன நடக்கும்!

இதனை, புகழ்பெற்ற இந்தி எழுத்தாளர் ஜைனேந்திர குமார் எழுதிய 'தியாக பாத்திரம்' என்ற கம்பீரமான குறுநாவல் உணர்த்துகிறது. 'காந்தீய தத்துவமாகிய சாத்வீக எதிர்ப்பை அவர் தத்துவார்த்த' ரீதியில் உருவாக்கியுள்ளார்.

தனி மனிதனை, சமூகம் வளர்க்க கடமைப் பட்டுள்ளது. தனிமனிதன் அறியாமல் அல்லற்படுவதற்குச் சமூகம் பொறுப்பேற்க வேண்டும் என்பது பாவேந்தனின் கருத்து.

*"கல்லாரைக் காணுங்கால் கல்வி நல்காக்*
*கசடர்க்குத் தூக்குமரம் அங்கே உண்டு"*

என்பன, பாவேந்தன் பாடல் வரிகள். அதுபோலவே, ஒரு தனிமனிதன் உணவில்லாமல் இறந்து படுவானாயின் அவன் வாழ்ந்த சமுதாயத்தை அழித்தொழிக்க வேண்டும் என்பது பாரதியின் சூளுரை!

*"தனியொருவனுக்கு உணவில்லை யெனில்*
*ஜகத்தினை அழித்திடுவோம்!"*

என்பது பாரதியின் கவிதை. தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள்.

*"அண்டையன் பசியில் வாட*
*அணங்கொடு மாடி வாழ்தல்*
*மண்டையன் குற்ற மன்று*
*மன்னிடும் ஆட்சிக் குற்றம்"*

என்றார். இங்ஙனம் வழிவழியாக அவலங்களுக்கும் துன்பங்களுக்கும் காரணம். சமூகமும் ஆட்சியும்தான் என்று நூறாயிரம் தடவை சொல்லியும் என்ன நடந்திருக்கிறது?

*இன்று நமது நாட்டில் 77 விழுக்காட்டு மக்கள் எழுத்தறிவில்லாதவர்கள். 58.9 விழுக்காட்டு மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கிறார்கள். இந்த இழிநிலை என்று மாறும்? இந்நிலையை "கனவோ நனவோ" என்ற கதையில் சக்திப் பெருமாள் விவரிப்பதைக் கேளுங்கள்.*

*"வாய் திறக்க வழியின்றி அலுவலகத்தை நோக்கி நகர்ந்தேன், 'தனியொருவனுக்கு உணவில்லையெனில் சகத்தினை அழித்திடுவோம்" என்று என்னையறியாமலேயே என் வாய் முணுமுணுத்தது. பாரதியின் உள்ளக் குமுறல் — குருதிக் கொதிப்பு இப்படி எத்தனை காட்சிகளைக் கண்டதோ? தனியொருவன்கூட உணவின்றி நலியாத சமுதாயம் என்றுதான் உருவாகுமோ? கனல்தெறிக்கப் பறந்த அவனது வார்த்தைகள் இவ்வுலகை புடமிட்டுப் பொன்னாக் காதோ? அவனது கனவு நனவாகும் நாள் எந்நாளோ? எழுந்த வினாக்கள் அலுவலகத்துக்குள் நுழைந்தவுடன் உள்ளத்தையே புதைத்துவிட்டன."* (வெள்ளையங்கி பக். 96)

*என்கிறார் சக்திப் பெருமாள்.*

*இத்தனை பேர் எச்சரித்த பிறகு, ஏன் சமூகத்தில் இந்த அவலம் தொடர்கதையாக இருக்கிறது? சமூக நீதி ஏன் உருவாகவில்லை? ஆசைதான் காரணம். அப்பட்டமான — நிர்வாணத் தன்மையுடைய — தன்னலம் சார்ந்த ஆசை, நீதியை, சமூக நீதியை பலி கொடுத்து செல்வத்தைக் குவிக்கத் துணை செய்கிறது. இந்தக் கொள்ளைக்கு அதிகாரமும் துணையாக நிற்கிறது. இந்த இழிநிலையைப் பட்டுக் கோட்டையின் வார்த்தைகளிலேயே கேளுங்கள்.*

> ***"ஆசைக்கு நீதி இரையாகுதடா! அன்பை***
> ***அதிகார வெள்ளம் கொண்டு போகுதடா"***

*இன்றைய சமூகப் போக்கு நியாயங்களை எடுத்துச் சொல்லுவது மாதிரியும் இல்லை! இன்று எங்கு பார்த்தாலும் காசும் உழைப்பும், காசும் கண்ணியமும் என்று காசுடன்*

இணைத்துத்தான் எதுவும் மதிப்பிடப்படுகிறது! இது பெரும் பிழை!

மந்திரங்களைக்கூட காசுக்கு ஏற்றவாறு குறைவாகக் கொடுத்தால் சுருக்கியும், நிறைய கொடுத்தால் நீட்டி முழக்கியும் சொல்லும் புரோகிதர்கள் இருக்கிறார்கள்! இது தவறு என்று விளக்க, சொல் விளங்கும் பெருமாள் "வெள்ளையங்கி"யில் முயற்சி செய்கிறார்.

'பெரிய வாத்தியார்' காசுக்கேற்றவாறு மந்திரத்தைக் கூட்டியும் குறைத்தும் சொல்ல இணங்கியதை இராமையர் நினைந்து சொல்லுவதாக, சொல்விளங்கும் பெருமாள் எழுதுகிறார்.

"நீங்கள் நியாயமாக நடங்கள் என்று சொன்னால், மற்றவர்களை நியாயமாக நடக்கவில்லை என்று கூறுவது அதற்குப் பதிலாகிவிடாது" என்பது இராமையர் பெரிய வாத்தியாரைப் பற்றி நினைந்து சொல்வதாகும். இன்று நாம் நம்முடைய சமூகத்தில் அடிக்கடி கேட்பது இத்தகைய வாதத்தைதான்.

ஒருவர் செய்த தவறுகளை எடுத்துக்காட்டினால் "நீங்கள் செய்யவில்லையா?" என்று மிக்குயர்ந்த இடத்தில் இருப்பவர்கள்கூட கேட்டுவிடுகிறார்கள். இதனைத் திறமை என்று வேறு பலர் மதிக்கின்றனர். இது ஒன்றும் திறமை இல்லை. வீண் பகடித்தனம். எடுத்துக்கூறும் நியாயங்களை எடுத்துக்கொள்ளும் மனப் பக்குவம் வேண்டும். அன்றுதான் நியாயத்தை நோக்கி, சமுதாயம் நடைபோடும்.

விவாதத்திலும் ஒரு சரியான நடைமுறை கையாளப் பெறவேண்டும். கிளர்ச்சி நோக்கத்தோடு விவாதித்தல் கூடாது. விவாதம் செய்தவரை மடக்கி, மண்டையில் அடித்து உட்கார வைக்கும் இழி மனப்பான்மையுடனும் விவாதிக்கக் கூடாது. விவாதத்தில் ஈடுபடுவோரிடையே நம்பிக்கையும் நல்லெண்ணமும் நிலவ வேண்டும்.

விவாதத்தின் நடைமுறை விதிகளைப் பின்பற்ற வேண்டும்; ஒவ்வொரு மனிதனுக்கும் மூளை — சிந்தனைப் புலன்கள் இருக்கின்றன. இவை நிச்சயமாக எல்லாருக்கும் ஒன்றுபோல இல்லை. விவாதங்களில் கலந்து கொள்ளு பவர்கள் இயற்கையில் உள்ள இந்த வேற்றுமைகளை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் உடையவர்களாக இருக்க வேண்டும்.

எவனொருவன், தான் பேசுவதுதான் நியாயம் என்று வரையறுத்துக்கொண்டு, முரட்டுத்தனமாகப் பேசுகின் றானோ, அவன் நியாயத்தை மீறுகிறவன். அவன் நியாயத்தை மீறுகிறவன் மட்டுமல்ல; அவன் உலகத்தில் பல அநியாயங் களை அரசியலிலும் சில்லறை கிளர்ச்சிகளிலும் தோற்று விப்பான் என்று வங்கத்துக் கவிஞர் இரவீந்தரநாத் தாகூர் கூறுகின்றார். இதைத் தமது 'நல்ல வரன்' என்னும் கதை வரிகளில் விளக்குவதைக் கேளுங்கள்.

"மனிதனுக்கு மனிதன் வேற்றுமை உண்டு. ஒருவன் யுக்தி மற்றவனுக்குச் சரிப்படாது. ஒருவன் தான் பேசுவது தான் நியாயம் என்றால், அவன் நியாயத்தை மீறினவனா கிறான். இதனால் அநியாயங்கள் உலகத்தில் தலைவிரித் தாடும். அரசியல் அல்லது சில்லறைக் கிளர்ச்சியில் பற்றுடையவர்கள் இதைக் கவனித்தல் நலம்."

(நல்லவரன் – தாகூர் பக். 381)

அடுத்து, மனித உலகத்தை அலைக்கழிக்கும் மிகப் பெரிய சிக்கல் வெற்றி — தோல்வி என்பவைகளாகும். நாம் ஒன்றை மறந்துவிடக்கூடாது. வெற்றி — தொடர் வெற்றிகளாக ஒருபோதும் இருப்பதில்லை. தோல்விகளும் அவ்வாறே.

ஆதலால், வெற்றி — தோல்விகளைப் பற்றி அதிகமாக அலட்டிக் கொள்ளாமல் எது நடக்க வேண்டுமோ அது நடக்கத் தக்க வகையில் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

அந்த இனிய நல்ல முயற்சி தோல்வியடையுமென்று அச்சப்பட்டுக் காரியத்தை விட்டுவிடக் கூடாது.

தோல்விகளும்கூட எதிர்பார்த்து நிகழ்ந்தால் வெற்றி களைப் போல கருதிக் கொள்ள முடியும். "தோல்விகள் வெற்றிகளின் படிகள்" என்ற பழமொழியை எண்ணிக் கொள்ள வேண்டும். இந்தக் கருத்தினை ஜெயகாந்தன் தமது 'யுகசந்தி'யில் விளக்குகிறார்.

"வெற்றி என்ற வார்த்தைக்குப் பொருளில்லை. நினைத்தது நடந்தால் வெற்றி என்று நினைத்துக் கொள்கிறோம். தோல்வி நிச்சயம் என்று எண்ணித் தோற்றால், அந்தத் தோல்வியே வெற்றிதான்."

(யுகசந்தி – 'தர்க்கத்திற்கு அப்பால்'
ஜெயகாந்தன் பக். 99)

ஆனாலும் ஒருசிலர் வெற்றிபெற்ற சூழ்நிலையில், போதைக்கும், மமதைக்கும் ஆளாகிவிடாமல், பெற்ற வெற்றியைப் பெரிதென எண்ணாமல் தொடர்ந்து முயற்சிப்பர்; துணிந்து புதிய முயற்சிகளில் அடி எடுத்து வைப்பர். இவர்கள் வெற்றி மேல் வெற்றியும் பெறுவர். இக்கருத்தை வல்லிக்கண்ணன் தமது கதை மூலம் கூறுவதைக் கேளுங்கள்.

"வாழ்க்கைப் பாதையில் துணிந்து அடி எடுத்து வைத்து வெற்றி கண்டவனே அடுத்து அடுத்து வெற்றிகளைச் சந்திக்க முடிகிறது. முதல் வெற்றி மேலும் பல வெற்றிகளைக் கொண்டு சேர்க்கிறது. அதனாலேயே "வெற்றிபோல் எதுவும் வெற்றி பெறுவதில்லை" என்ற ஆங்கில வசனம் ஏற்பட்டுள்ளது." – (வாழ விரும்பியவன் – வல்லிக்கண்ணன் பக். 38)

மனித சமூகத்தில், புராணங்களில், இதிகாசங்களில் மகளிர்க்குத் தனி இடம் — உயர்ந்த இடம் உண்டு. மதங்களிலும் அப்படித்தான். ஆனால் நடைமுறையில் நாம் நம்முடைய சமூகத்தில் பெண்களை நடத்தும் முறை

வெட்கித் தலை குனிய வேண்டிய அளவிற்குள்ளது. நமது சமூகத்தில், மகளிர் விடுதலைக்கென்று முதற்குரல் கொடுத்தவன் பாரதி, அவனைத் தொடர்ந்து பாவேந்தனும் மகளிர் விடுதலைக்காகப் பாடுகிறான். நமது சமூகத்தில் மகளிர் நிலை, நேற்றைக்கு இன்று பரவாயில்லை. சற்றே மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. ஆனாலும், மகளிர்க்கு இழைக்கும் கொடுமைகள் ஒய்ந்துவிட்டன என்று சொல்ல முடியாது. மகளிர் விடுதலை குறித்துப் புதுமைப்பித்தன் ஆழமாகச் சிந்தித்தார்; மகளிர் நலத்திற்கென எழுதினார்.

புதுமைப்பித்தனின் 'நினைவுப் பாதை' என்ற படைப்பில் வைரவன் பிள்ளை வருகிறார். அவருடைய மனைவி வள்ளியம்மை ஆச்சி, 50 ஆண்டுக்காலம் இல்லறத்தில் வாழ்ந்திருக்கின்றார். ஆயினும் வைரவன் பிள்ளை, வள்ளியம்மை ஆச்சியைப் பற்றிப் பிரமாதமாக நினைத்தது கிடைத்தது. இதனைப் புதுமைப்பித்தன் கேலி செய்வதைக் கேளுங்கள்!

"மனைவி என்பது நூதன வஸ்துவாக இருந்து, பழகிய பொருளாகி, உடலோடு ஒட்டின உறுப்பாகி விட்டது. ஒவ்வொருவரும் தமக்கு ஐந்துவிரல் இருப்பதை ஒவ்வொரு நிமிஷமும் நினைத்துக் கொண்டா இருக்கிறார்கள்?"

– (புதுமைப்பித்தன் சிறுகதைகள் பக். 408)

பகை என்பது ஒருவர் பிறிதொருவரிடத்தில் மனம் மாறாத நிலையில் காட்டுகின்ற வெறுப்புணர்ச்சியைக் குறிப்பது. இந்தப் பகையுணர்ச்சி ஒரு பொழுதும் தனி மனிதனுக்கும் நன்மை செய்யாது; சமூகத்திற்கும் நன்மை செய்யாது.

அதனாலேயே வள்ளுவம், 'பாழ் செய்யும் உட்பகை' என்கிறது. கம்பன் 'யாரோடும் பகை கொள்ளலன்' என்றான். ஆம்! நம்முடைய பகைவன், நம்மாட்டுப் பகை

கொண்டிருக்கலாம். ஆனால், நாம் அப்பகைவன் மீது பகை கொள்ளக்கூடாது. இது வாழ்க்கை நியதி.

' இந்தப் பொல்லாத பகை இன்று வீட்டிலும் புகுந்து விளையாடுகிறது; நட்புக் களங்களிலும் புகுந்து விளையாடு கிறது. அரசியலிலோ சொல்ல வேண்டாம். எழுத்தாளர் அய்க்கண் தமது 'வேர்' என்ற கதையில், கணவன் – மனைவி தகராறைத் தீர்த்து வைத்த கருப்பையா அம்பலகாரர், 'தாம் தகராறைத்தான் தீர்க்க முடிந்தது; பகைமையைத் தீர்க்க முடியவில்லை" என்று கூறுவது சிந்திக்க வேண்டியது.

"அந்தத் தகராறைத் தான் என்னாலே தீர்க்க முடிஞ்சுது. அவங்க பகைமையைத் தீர்க்க முடியலே!"

(வேர் - அய்க்கன் - பக். 18)

பகைமையை மாற்றிக் கொள்ளாதவர்களுக்குக் கணவன், மனைவி என்ற உறவு என்ன வேண்டியிருக்கிறது?

ஒரு சமுதாயம் சிறப்புற இயங்க, பொதுப்பணிகள் நடைபெற வேண்டும். பாரதிதாசன், 'பொது நாட்டம் உடையார் வேண்டும்' என்றான். இன்று, பொது நாட்டம் உடையார் நம்மிடையில் உளரோ? பொதுப்பணியில் நினைவுமிருக்கிறதோ? பொருளும் புகழும் சேர்ப்பதைப் பற்றியே கவலை.

யாராவது ஒருவருக்குப் பொதுப் பணியில் நாட்ட மிருந்து திட்டம் தீட்டினால் அதை நிறைவேற்ற முடியாத நிலை! ஏன்? கூட்டாளிகள் சரியில்லை.

ஆம். பல நூறாண்டுகளாகவே தீண்டாமையை ஒழிக்கத் திட்டம்; நடந்ததா? ஏழ்மையை ஒழிக்க ஐந்தாண்டுத் திட்டங்கள்! ஒன்றா, இரண்டா? ஏழு ஐந்தாண்டுத் திட்டங்கள்! ஏழ்மை அகன்றதா? ஏன்? கூட்டாளிகள் சரியில்லை! நாம் கூறவில்லை. மக்கள் கவிஞன் பட்டுக்கோட்டை பாடுகிறான்.

"போதுமான பொருளும் வந்து
பொதுப் பணியில் நினைவு வந்தால்
போட்ட திட்டம் நிறைவேறக்
கூட்டாளிகள் சரியில்லை."

(– பட்டுக்கோட்டை பாடல்கள் பக். 24)

இன்று இந்திய சமூகம் மக்களாட்சி முறையை ஏற்றுக் கொண்டிருக்கிறது. மக்களாட்சி என்றால் என்ன? மக்களின் அதிகாரம்; மக்களுக்கு நன்மை செய்வதற்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் அதிகாரம் — ஆட்சி ஒப்படைக்கப்படுகிறது. பிரிநிதிகளிடமும் அமைச்சர் களிடமும் உள்ள அதிகாரம் அவர்களுக்கு உரிமை உடையதல்ல; பொது மக்களுடையது.

மக்கள் தங்களுடைய செல்வத்தை - நிதியை - தங்களுக்கு நன்மை செய்து கொள்வதற்காக, தங்களால் தனித்தனியே நன்மை செய்து கொள்ள இயலாமையால் மக்கள், பொது நன்மையைச் செய்வதற்காக நிதியை அரசிடம் குவிக்கிறார்கள். அது மக்களுடைய நிதி. மக்கள் நலனுக்கு மட்டுமே செலவழிக்க வேண்டிய நிதி. இதுதான் மக்களாட்சி.?

இந்த மக்களாட்சியில் மனித நேயம் இருக்க வேண்டும்; மக்களை மதிக்க வேண்டும்; மக்களின் உரிமையை மதிக்க வேண்டும்.

மக்களை மூடர்களாக — குடிகாரர்களாக — கெட்ட வர்களாக ஆக்கும் வழியில் அரசு நேரடியாகவோ, மறை முகமாகவோ ஒருபொழுதும் துணை போகக்கூடாது. மக்களாட்சிக்கு சாமர்த்தியம் தேவைதான். ஆனால், சாமர்த்தியத்தைக் காட்டிலும் விவேகம் தேவை.

நெடிய பார்வையில் நெடிய நோக்கத்தோடு தமது மக்களுக்கு ஆக்கப் பணிகளைச் செய்யும் விவேகம்

வேண்டும். கன்னட எழுத்தாளர் பேந்தரே விவேகமில்லாத மக்களாட்சி பயனற்றது என்று கூறுகிறார்.

வரி கொடுப்போரது வளர்ச்சிக்கும் நலனுக்கும் உத்தர வாதம் தராது, அவர்களை நெறியல்லா நெறிகளில் திருப்திப்படுத்துவதும் தாஜா செய்வதும் மக்களாட்சியன்று, என்றும் பேந்தரே கூறுகிறார். கேளுங்கள்!

விவேகம் இல்லாத ஜனநாயகத்தைச் சாடுகிறார். முனிசிபல் கவுன்சிலர்களுக்காக அவர் தயாரித்துள்ள விதிகள் வருமாறு:

"தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு இரண்டு கவுன்சிலர்கள் ஒரே பேட்டையில் ஒரே தெருவில் இருக்கக் கூடாது. அப்போதுதான் எத்தனை கவுன்சிலர்கள் இருக்கிறார்களோ அத்தனை தெருக்களாவது நமது நகரில் சுத்தமாக இருக்கும் என்ற உத்தரவாதமாவது வரி கொடுப்போருக்கு இருக்கும்."

(– இன்றைய இந்திய இலக்கியம் பக். 126)

நம்முடைய நாட்டு மக்களுக்கு வறுமையும் ஏழ்மையும், இழிவும் அவமானமும் இயல்பாகப் போய்விட்டன. அவர்கள் இதைப் பற்றியெல்லாம் அலட்டிக் கொள்வ தில்லை. உண்மையாகச் சொன்னால் இப்போது நம்மிலே பலருக்குச் சூடும் இல்லை; சுரணையும் இல்லை.

நம்முடைய அவமானங்களையும் இழிவுகளையும் தாங்கியே ஆகவேண்டும் என்று மருட்டுகின்ற மதத்தலைவர் விதித்த தலைவிதித் தத்துவத்தினின்றும் இன்னும் நாம் விடுதலை பெற்ற பாடில்லை. இன்னமும் நம்முடைய மூளையை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பது பழைய பஞ்சாங்கம்தான்.

கொடுமைகளை எதிர்க்கும் துணிவு நமக்கு என்று வரும்? நாம் இந்தத் தலைமுறையில் புரட்சியாளர்களாக ஆகமுடியுமா? ஒருகாலும் முடியாது. ஏனென்றால் நாம் புரட்சி என்ற சொல்லையே பொருள் புரியாமல் கொச்சைப்

படுத்தி விட்டோம். "கொடுமையை எதிர்த்துப் போராடு" என்று மக்களுக்குப் பாடம் புகட்டி, இதனை உணர்த்த நாம் வணங்கும் தெய்வங்களின் கைகளில் கருவிகளைத் தந்தனர்.

ஆனால், இன்று நாம் செய்வதென்ன? அத்தெய்வங்களின் கைகளில் இருக்கும் கருவிகளிலும்கூட எலுமிச்சம் பழத்தைச் செருகி, முனையை மழுங்கச் செய்து கொண்டிருக்கிறோம். பாரதி நமது மூடத்தனத்தைப் பார்த்தான். ருஷ்ய நாட்டுப் புரட்சியை நமது கவனத்திற்குக் கொண்டு வருகிறான்.

சோவியத் ரஷ்யாவில் புரட்சி செய்து வெற்றி கண்டது போல்ஷ்விக் படைதான். ஆனாலும் பாரதி, "மகாகாளி பராசக்தி கடைக்கண் வைத்த"தால் நிகழ்ந்தது புரட்சி என்று பாடுகிறான். ஏன் இங்ஙனம் பாடுகிறான்? மாகாளியே புரட்சி செய்தாள் என்றால், இந்தியரும் எழுந்து நின்று புரட்சி செய்வார்கள் என்று நம்பினான்.

ஆனால் நம்நாட்டு மக்களோ மிகவும் கெட்டிக்காரர்கள்! கடவுளைக் கும்பிடுவார்கள்; காணிக்கை செலுத்துவார்கள்; அப்பமும் அவல் பொரியும் படைப்பார்கள். ஆனால், கடவுள் சொன்னதைச் சத்தியமாகச் செய்வதில்லை என்று விரதம் பூண்டிருக்கிறார்கள். பாரதி,

"மாகாளி பராசக்தி உருசிய நாட்
டினிற் கடைக்கண் வைத்தாள், அங்கே
ஆகாவென் றெழுந்தது பார் யுகப்புரட்சி"

(பாரதியார் கவிதைகள் பக். 90)

என்று பாடுகிறான்.

நம்முடைய நாட்டில் கலியுகம் எப்போது போகும்? கிருதயுகம் எப்போது வரும்? இனிய அன்புடையீர்! எதுவும் தானாக நடக்காது. கலியுகத்தைக் கொன்று கிருதயுகத்தைக் காண எழுமின்! எழுமின்!

சமுதாய வாழ்க்கையில் வளர்ச்சி இருக்கவேண்டும். வளர்ச்சிக்கு வாயில் மாற்றங்கள். எங்கு மாற்றமில்லையோ அங்கு வளர்ச்சியில்லை. அதுபோலவே எங்கு வளர்ச்சி யில்லையோ அங்கு மாற்றமில்லை.

நம்முடைய சமுதாயம் நீண்ட நெடு நாட்களாகவே மூடத்தனத்தில் முடங்கிக் கிடக்கிறது. எந்தவொரு மூடத்தனத்தினின்றும் நாம் விடுதலை பெற்றோமில்லை. விடுதலை பெற முடியாத நிலையில் பொய்மைச் சாத்திரங் களும் மதங்களும் தடை செய்கின்றன. காதலிலிருந்து கடவுள் சந்நிதி வரை சாதிகள் ஆட்சி செய்கின்றன. நாளும் தன்னம்பிக்கையைக் கொல்லும் மூட நம்பிக்கைகள் ஏராளம்! ஏராளம்! எனவேதான் பாவேந்தன் பாரதிதாசன்,

*"மூடத்தனத்தை முடுக்கும் மதத்தை நீர்*
*மூலப்படுத்தக் கை ஓங்குவீர்!"*

(பாரதிதாசன் பா. 50 பக். 160.)

என்று முழங்குகிறான்.

இன்று கோயில்களில் கூட காசுகளின் ஆதிக்கம்; மேலும் களவு நடைபெறும் இடங்களாகவும் கோயில்கள் ஆகிவிட்டன. அன்னை பராசக்தி, அருள்புரிய எழுந்தருளி யுள்ளாள். ஏழை எளியவர்கள் படும் பாட்டைக் காண முடியாமல் அவளுக்குச் சாத்தும் வெள்ளிக் கண் மலர்கள் அவள் கண்களை மறைக்கின்றன.

மக்கள் அழுது அரற்றும் மொழியை அவள் கேட்க முடியாமல் மணியோசை ஒலித்துத் தடுக்கிறது. இல்லங்கள் தோறும் அவள் எழுந்தருளி, தம்மைத் தொழும் மக்களுக்கு இன்ப நலம் வழங்கலாம் என்று எண்ணினால், அதுவும் இயலாத நிலையில் பூசாரி பூட்டைப் போட்டு பூட்டி விடுகிறான்.

மானுடத்தை வாழ்விக்கும் மிக உயர்ந்த கடவுட் கொள்கை தகாதார் வயப்பட்டுக் கெட்ட கேட்டினைப் பாருங்கள்! இதனைப் பட்டுக்கோட்டை,

"காசு தந்தால்தான் உன்னைக்
காணும் வழி காட்டுவதாய்
கதவு போட்டு பூட்டு வைத்துக்
கட்டாயம் பண்ணுவதைப் பார்த்தாயா?"

(பட்டுக்கோட்டை பாடல்கள் பக். 23)

என்று சாடுவதை எண்ணுங்கள்.

நமது சமுதாயத்தில் ஒரு காலத்தில் கடவுளும் கடவுளின் திருக்கோயில்களும் அதாவது, ஆலயங்களும் மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தன. சமுதாயத்தின் மையமாகவே ஆலயங்கள் விளங்கின. குடிகளுக்கு நலம் செய்யும் மையங்களாக ஆலயங்கள் விளங்கின.

ஆலயங்களைத் தழுவி மக்கள் வாழ்ந்தனர். இது நமது பழைய வரலாறு; பழைய நாகரிகம். 'கறையான் புற்றில் கருநாகம் புகுந்ததுபோல' நமது திருக்கோயில்களில் — நாமெடுத்த திருக்கோயில்களில், இடைக்காலத்தில் சாதி ஆதிக்கம் புகுந்தது; சன்மார்க்கம் வெளியேற்றப்பட்டது. உயர்சாதி மனப்பான்மை உடையோர் உள்ளே புகுந்தனர். சாமானியர்கள் வெளியே தள்ளப்பட்டனர்.

ஆலயங்களின் அகன்ற மண்டபங்களில் நடந்த பள்ளிகள், மருத்துவமனைகள் அகற்றப்பட்டன. அந்த மண்டபங்கள் தூங்குமூஞ்சிகளின் மண்டபங்களாக — வௌவால்களின் மாளிகைகளாக மாறின.

ஒரு சிறந்த பழந்தமிழ் நாகரிகத்தின் வீழ்ச்சியை எண்ணுங்கள்! இந்தச் சிந்தனையை அறிஞர் அண்ணா நம்மிடத்தில் தோற்றுவிக்கிறார். ஆலயங்களைப் பற்றிப் பேரறிஞர் அண்ணா சொன்னதைக் கேளுங்கள்.

"ஆலயங்கள் கட்ட வேண்டியதுதான் அப்பா! ஆனால், அதன் அமைப்பிலே சில மாறுதல்கள் செய்துவிட வேண்டும். ஆயிரம் கால் மண்டபத்துக்கு ஆரம்ப ஏற்பாடாகிவிட்டது. அது கட்டி முடிக்க இன்னும் கொஞ்சம் வேலைதான் பாக்கி. முடிந்த பிறகு, அதனை வௌவால்கள்

வாழுமிடமாக்கி விடாமல், சிறுவர்களுக்கு அதனைப் பள்ளிக்கூடமாக்கி விடலாம். ..............குளம் இங்கே வாழும் மக்கள் குளிக்குமிடமாகும்." (அண்ணாவின் சிறுகதைகள் பக். 94)

மீண்டும் நமது ஆலயங்கள் இழந்த பழம் பெருமையை அடைவது எந்நாளோ?

இனிய அன்புடையீர், சமுதாய மறுமலர்ச்சி இலக்கியங்கள் சிலவற்றைப்பற்றி சிந்தித்தோம். இந்த இலக்கியங்கள் ஆற்றல் வாய்ந்தன. சமுதாயத்தை உந்தி, முன்னோக்கிச் செலுத்தும் தன்மையுடையன.

ஆயினும் நம்மிடத்தில் இந்தச் சமுதாய மறுமலர்ச்சி இலக்கியங்கள் உருவாக்கும் கிளர்ச்சியை நடைமுறைப் படுத்தும் வாழ்வு அமையாமல் போனால் எங்ஙனம் மறுமலர்ச்சி தோன்றும்!

அன்புகூர்ந்து வளைந்து வளைந்து வராதீர்கள்! நேரிய நெடிய பார்வையொடு பயணத்தைத் தொடர்க! துணிந்து தொடர்க! எல்லாரும் கல்வி கற்றவர்களாக — எல்லாரும் எல்லாமும் உடையவர்களாக ஆகவேண்டும்.

இத்தகைய சிறந்ததொரு சமுதாயத்தை அமைக்க, கவிஞர் குலோத்துங்கன் சூளுரைத்து முன் செல்கின்றார். நாம் மட்டும் ஏன் தயங்கி நிற்கவேண்டும்? இளைஞர்களே, ஏன் தயக்கம்? எழுமின்! குலோத்துங்கனின் சூளுரையைக் கேண்மின்!

"மாணச் சிறந்ததொரு வாழ்க்கைச் சமுதாயம்
படைக்கத் துணிந்தேன் நான் பாதையிலே காணும்
தடைக்கற்கள் யாவும் தகர்க்கும் வலியுடையேன்".

(குலோத்துங்கன் கவிதைகள் பக். 11)

என்று புதிய சமுதாயம் படைப்போம்?

தமிழ்மாமுனிவர்
தவத்திரு

# குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை

திருக்குறள்
இலக்கியம்
சமயம்
சமுதாயம்
பொது